

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக் கல்வி

## எம்.ஏ. இரண்டாம் ஆண்டு

# உலக அரசியலும் மனித உரிமைகளும்

**அரசியல்**

தாள் - VII பிரிவு - II C




DEC அங்கீகாரம் பெற்றது

www.mkudde.org

**S 276**

# மதுரை காமராசர் பல்கலைக் கழகம்



(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

## தொலைநிலைக் கல்வி

# எம்.ஏ. இரண்டாம் ஆண்டு

# உலக அரசியலும் மனித உரிமைகளும்

## அரசியல்

**தாள் - VII**

**பிரிவு - II C**

DEC அங்கீகாரம் பெற்றது

www.mkudde.org

**S 276**

© பதிப்புரிமை : தொலைநிலைக்கல்வி

STAR SYSTEM 500 COPIES DEC 2013

முதுகலை (இரண்டாமாண்டு)

பாடம் — 1

உலக அரசியலும் மனித உரிமைகளும்

அன்புடைய மாணவரே,

"உலக அரசியலும்., மனித உரிமைகளும்" என்னும் இந்தப் பாடப்பகுதி அரசியல் துறை முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்கட்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது. முதுகைலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இந்தப் பாடத்திற்கான் தேர்வினை இந்தக் கல்வி ஆண்டின் இறுதியில் எழுத வேண்டும்.

இப்பாடத்திற்குரிய பாடத்திட்டமும் பாடப்பட்டியலும் முதற்பாடத்தில் தரப்பட்டுள்ளன. இவை இப்பாடத்தில், நீங்கள் கற்க வேண்டிய விஷயங்களை விளக்குகின்றன. இயக்கம் உங்களுக்கு என நடத்தும் தொடர் வகுப்புக்களுக்கு தவறாமல் வாருங்கள். அங்கு பாடம் சம்பந்தப்பட்ட உங்களுடைய ஐயப்பாடுகள் தீர்த்து வைக்கப்படும். கடினமான பாடப்பகுதிகள் விளக்கப்படும்.

எமது நல்வாழ்த்துக்கள்

அரசியல் அறிவியல் துறை

## Reading Material Disclaimer

**This reading material, developed by Dr.M.Nallakaman and reviewed by Dr. P.Periakaruppan is an aid for the students of Directorate of Distance Education, Madurai Kamaraj University, to understand the course content. It is only for the registered students of DDE, MKU and is not for private circulation.**

# உலக அரசியலும், மனித உரிமைகளும்

## பாடப்பட்டியல்

| பாட எண் | பாடம் |
|---|---|
| 1. | பன்னாட்டு அரசியலின் குறிக்கோளும் பிரச்சனையும் மார்கந்தோவின் உண்மைவாதக் கோட்பாடு – இலட்சியவாதம் — நடைமுறை வாதம் — மார்க்கீசிய வாதம் — பன்னாட்டு அரசியில் கல்விக்கான அணுகுமுறைகள் —முறையமைவுக் கோட்பாடு— தீர்மானக் கோட்பாடு. |
| 2. | *செய்தித்தொடர்புக் கோட்பாடு – ஆட்டக் கோட்பாடு – 1848 முதல் 1945 வரை பன்னாட்டு அரசியல்.* |
| 3. | தேசீய அதிகாரம் பற்றிய மதிப்பீடு – பன்னாட்டு அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் – ஆதிக்க ஆட்சியின் வழிமுறைகள் — அதிகாரச் சமநிலை. |
| 4. | கூட்டுப் பாதுகாப்பு – பன்னாட்டு கோட்பாடுகள் — தேசீய கட்டுப்பாடும் தேசீய அரசுகளின் எழுச்சி — இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கைகளும் ஒப்பந்தகங்களும் — பிராந்திய பற்று. |
| 5. | சர்வதேச சங்கம் — அதன் அமைப்பு மற்றும் பணிகள் — சர்வதேச சங்கம் தோல்விக்கான காரணங்கள் — ஐக்கிய நாடுகள் சபை – ஐக்கிய நாடு சபையும், சர்வதேச சங்கமும் – ஐ.நாவும் அமைதி மற்றும் பிரச்சனைகளும். |
| 6. | பன்னாட்டுச் சட்டம் : பன்னாட்டுச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் — அரசியல் விவேகம் — எண்ணெய் நாடுகளில் அரசியல் விவேகம். |
| 7. | கூட்டுச் சேராக் கொள்கை : தற்கால உலக அரசியலில் கூட்டு சேரா இயக்கத்தின் பங்கு – கெடுபிடிப்போர் — தோற்றம், தன்மை, பிரச்சனைகளும், விவரங்களும், படை குறைப்பு. |
| 8. | ஆயுத போட்டி – அணுசக்தி பற்றிய பிரச்சனைகள் — காலனி ஆதிக்க முறை – குடியேற்ற நாட்டின் இன்றைய நிலை |
| 9. | ஆப்பிரிக்காவின் எழுச்சி—ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள்—லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதயம். |
| 10. | மனித உரிமைகள் — தாராளமயமாக்கம் — உலகமயமாக்கம் — தனியார்மயமாக்கம் — சுற்றுச் சூழல் — பயங்கரவாதம். |

## Paper – VII

### World Politics and Human Rights

**Syllabus**

Unit : 1 Development of the Study of the World Politics

Unit : 2 Theories of International Relations: Relation, Idealism and World State Theory –Marxist Theory and Pluralist Theory.

Unit : 3 The Concept of Power : Its Constituents and I imitations.

Unit : 4 The Struggle for Power : As Status quo, as Imperialism and as Prestige.

Unit : 5 The Management of Power : Balance of Power, Collective Security and Co-operative Security – Changing Nature of National Power.

Unit : 6 The Concept of Non Alignment : Bases, Role and Relevance.

Unit : 7 Disarmament and Arms Control: CTBT, NPT and PNE

Unit : 8 Regional Organization : SAARC and ASEAN

Unit : 9 Liberalisation, Privatisation and Globalisation.

Unit : 10 Emerging Issues: Humanitarian intervention, sanctions, Human Rights, Environment

## Select References


1. D.G. Brennan (ed) Arms Control Disarmament and National Security, New York, George Braziller, 1961.
2. D. Brown, International Relations Theory, London, Harvesteer Wheatsheaf, 1973
3. I. Claude, Power and International Relations: The New, London, Harper Collins Academic 1991.
4. W.C.Olson and A.J R Groom, International Relations: The New, London, Harper Collins Academic 1991.
5. K.W.Deutsch, the Analysis of International Relations, New Delhi, Prentice Hall 1989.
6. S.H. Hoffman, Essays in Theory and Politics of International Relations, Boulder Colorado, Westview Press, 1989.
7. H.J. Morgenthau, Politics Among Nations 6th edn. revised by K.w. thompson, New York, Alfred Knopf, 1985.
8. N.D. Palmer and H. Perkins, of International Relations, Calcutta, Scientific Book Company,1971.
9. M.P. Sullivan, Theories of International Politics: Enduring Paradigm in a Changing World, Hampshire, Macmillan, 2001.
10. J.A. vasquez, the Power of Power Politics, London, Frances Printer , 1983.
11. H.D.Lasswell, World Politics and Personal Insecurity, New York, McGraw-Hill Book Company, 1953.
12. K.P.Mishra and R.S. Beal, International Relations Theory, New Delhi, Vikas 1980.

# அலகு —1

## பன்னாட்டு அரசியலின் குறிக்கோளும் பிரச்சனையும் மார்கந்தோவின் உண்மைவாதக் கோட்பாடு – இலட்சியவாதம் — நடைமுறை வாதம் — மார்க்கீசிய வாதம் — பன்னாட்டு அரசியல் கல்விக்கான அணுகுமுறைகள் —முறையமைவுக் கோட்பாடு— தீர்மானக் கோட்பாடு

**முன்னுரை:**

பன்னாட்டு அரசியல் கல்வி உயர்கல்வி அமைப்புகளின் பாடத்திட்டத்தில் ஒன்றாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்றது. 1916—ஆம் ஆண்டு வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் முதலாவதாக பன்னாட்டு அரசியல்துறை ஆரம்பிக்கப்பட்டது. பேராசிரியர் ஆல்பிரட்சிமர்ன் (Alfred Zimmern) பேராசிரியர் சி.கே. வெப்ஸ்டர் (C.K. Webster) ஆகிய இரு தகமைவாய்ந்த வரலாற்றறிஞர்கள் முதலாவதாக இத்துறைக்குத் தலைமையேற்று நடத்தினர். இவ்வாறு பன்னாட்டு அரசியல்துறை ஆரம்பிக்கப்பட்டு பன்னாட்டு அரசியல் தானியங்கும் ஒரு பாடத்துறையாக இயங்கிய போதிலும் இத்துறைக்கு வரலாற்றறிஞர்களை தலைமையேற்க வைத்த செயல் பன்னாட்டு உறவுகளை இராசதந்திர வரலாற்றுடனும் சர்வதேச சட்டத்துடனும் ஒருங்கிணைக்கும் ஒரு செயலாகத் தோன்றியது. இராசதந்திர வரலாறு பன்னாட்டு உறவுகளில் இருந்து பிரிக்க முடியாத ஒன்று என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் பன்னாட்டு உறவுகளைக் கற்கும் மாணவனின் அறிவு சார்ந்த ஆர்வம் கடந்த காலத்தை காட்டிலும் நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் அமைகின்றது. ஒருகடந்த கால நிகழ்ச்சி நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் நன்மை பயக்கும் ஒன்றாக அமைந்தால் அந்நிகழ்ச்சி பன்னாட்டு உறவுகளில் இடம்பெறுகின்றது.

முதல் உலகப்போருக்குப்பின் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்ட பிறகு பன்னாட்டு அரசியல் கல்வியில் ஒரு புது திருப்பம் ஏற்பட்டது. இப்பாடத்திட்டத்தை அறிஞர்கள் சர்வதேச சட்டம் மற்றும் அமைப்புகளின் மூலம் கற்க ஆரம்பித்தனர். இரண்டாம் உலகப்போருக்குப்பின் பன்னாட்டுக் கல்வியில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பழைய தலைப்புகள் ஒதுக்கப்பட்டு, எதிர்கால வாய்ப்புகளை எதிர்நோக்குகின்ற அளவில் தலைப்புகள் உருவாக்கப்பட்டன. இப்பாடத்திட்டத்தில் நடந்தேறிய ஆராய்ச்சிகள் பன்னாட்டு அரசியலுக்கு விஞ்ஞான ரீதியில் அமைந்த

(குறிப்புக்கான இடம்)

கோட்பாடுகளை உருவாக்கின. இப்பொழுது, சட்டம் மற்றும் அமைப்புகளின் வாயிலாக பன்னாட்டு அரசியலுக்கு நிறுவன அமைப்பு கொடுத்தலை நாம் முக்கியமாகக் கருதுவதில்லை. ஆனால் பன்னாட்டு அரசியலில் பல்வேறான கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்வதற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

நோக்கங்கள்:

- பன்னாட்டு அரசியலின் குறிக்கோள் மற்றும் பிரச்சனைகளை கற்று உணர்தல்.
- பன்னாட்டு அரசியல் பற்றிய தற்போதைய கருத்தினை புரிந்து கொள்ளுதல்.
- மார்கந்தோவின் அரசியல்பற்றிய நடைமுறைக் கோட்பாட்டினை பகுப்பாய்வு செய்தல்.
- பன்னாட்டு அரசியல் கல்விக்கான அணுகுமுறையினை கற்றறிதல்.

அலகு வடிவமைப்பு:

பன்னாட்டு அரசியலின் தன்மை, பரப்பு மற்றும் எல்லை.

பன்னாட்டு அரசியலின் தற்போதைய கருத்துக்கள்.

பன்னாட்டு அரசியலின் நோக்கம்.

மார்கந்தோவின் பன்னாட்டு அரசியல் பற்றிய நடைமுறைக் கோட்பாடு.

முறையமைவுக் கோட்பாடு.

முறையமைவுக் கோட்பாட்டின் அடிப்படை கருத்துக்கள்

பொதுமுறையமைவு கோட்பாட்டினை அரசியல் அறிவியலுக்கு பயன்படுத்துதல்.

பன்னாட்டு அரசியலில் முறையமைவுக் கோட்பாட்டின் பங்கு.

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key words)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for futher studying)

மாதிரி வினாக்கள் (Model Questions)

## 1.1. பன்னாட்டு அரசியலின் தன்மை மற்றும் எல்லை

பன்னாட்டு அரசியலுக்கு பல்வேறான பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. நாடுகளுக்கிடையேயான உறவுகளைக் கூறுவது தான் பன்னாட்டு அரசியல் என்று பேராசிரியர் சார்லஸ் லெய்ச்சர் கூறுகின்றார். வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் உலகின் முக்கிய நாடுகளுக்கிடையே நிலவிய உறவுகளை விளக்கும் இயல்தான் பன்னாட்டு உறவுகள் என்று கியுன்சிரைட் கூறுகின்றார். பேராசிரியர் ஹேரன்ஸ் மார்கந்தோவின் கூற்றுப்படி பன்னாட்டு அரசியல் என்பது மார்கரேட், ஸ்ப்ரௌட் ஆகியோர் பன்னாட்டு அரசியல் என்பதற்கு நடைமுறைக்குப் பொருந்தும் ஒரு பொருள் விளக்கம் அளித்துள்ளனர். தங்கள் நோக்கம் அல்லது ஆர்வத்தை நிறைவேற்ற, எதிர்ப்பு அல்லது மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுதந்திர அரசியல் சமுதாயங்களிடையே நிலவும் தொடர்புகளையும், உறவுகளையும் எடுத்தியம்புவதுதான் பன்னாட்டு அரசியல் என்று இவ்வறிஞர்கள் பொருள் விளக்கம் அளித்துள்ளனர்.

பன்னாட்டு அரசியலின் தன்மையை நன்முறையில் அறிய அரசியல் என்ற சொல் குறிக்கும் பண்பினை ஆய்தல் அவசியம். மக்கள் கொண்டுள்ள தேவைகள் மற்றும் விருப்பங்களின் அடிப்படையில்தான் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசியல் இயங்குகின்றது. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற எடுக்கும் முயற்சிகளினால் மக்களிடையே தொடர்பு தோன்றுகின்றன. இத்தொடர்புகள் மக்களிடையே குழுக்களை தோற்றுவிக்கின்றன. இக்குழுக்கள் சில கொள்கைகளை நிறைவேற்றுகின்றன. பல்வேறு குழுக்களிடையே நிலவும் தேவைகளும் விருப்பங்களும் ஒன்றுக்கொன்று ஒத்திருப்பதில்லை ஆனால் ஒரே குழுவில் வாழும் மக்களின் தேவைகளும், விருப்பங்களும் பொதுவாக ஒத்திருக்கின்றன. எனவே குழுக்களின் தோற்றம். குழுக்களிடையே நிலவும் கருத்துவேறுபாடு, மற்றும் குழுக்களில் வாழ்ந்த மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி அதிக அளவில் மக்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற சிலர் எடுத்த முயற்சிகள், ஆகிய இவை எல்லாம் அரசியல் உருவாக உதவிய முக்கிய காரணிகளாகும். எதிர்ப்புகளிடையே தங்களுடைய குறிக்கோளை அடைய முக்கிய குழுக்களை மாற்றி தங்களுடைய செல்வாக்கின் கீழ் கொணர்ந்து அவர்களைக் கட்டப்படுத்த கையாளும் சிலருடைய கலையைத்தான் அரசியல் என்று கியுன்சிரைட் கூறியுள்ளார். இவ்வாறு நோக்கும் போது அரசியலுக்கு மூன்று தேவைகள் இருப்பதை உணரலாம். அவை குழுக்கள், குழுக்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள், பிறருடைய செயலைக் கட்டுப்படுத்தும் சிலருடைய முயற்சி என்பவையாகும், அரசியல் குழுக்களையும் கருத்துவேறுபாடுகளையும், குழுக்களின் செயல்பாட்டையும்

(குறிப்புக்கான இடம்)

குறிப்பிடும் ஒன்றாகும். எவ்வாறெனினும், முற்றிலும், கருத்துவேறுபாடு நிறைந்த சூழ்நிலையில் அரசியல் செயல்பட இயலாது. எனவே குழுக்களிடையே சுமூகமான சூழ்நிலை உருவாக்குதல் மிகவும் தேவையாகும். ஒரு குழு பிற குழுக்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயலுகின்றது. பிற குழுக்களின் கொள்கைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தும் திறன், அதிகாரம் என்றழைக்கப்படுகிறது. எனவே அதிகாரம் அரசியலினுள் அடங்கியுள்ளது. எல்லாத் தேவைகளையும் விருப்பங்களையும், நிறைவேற்றும் வழிமுறையாக அதிகாரம் காணப்படுகிறது. அதிகாரமற்ற அரசியலை எண்ணிப் பார்க்க இயலாது. நமது இன்றைய தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் தேவையான அதிகாரத்தை அடைய நாம் முயலுகின்றோம். உண்மையில் அதிகாரத்தை அடைய பாதுகாக்க மற்றும் விரிவுபடுத்த உகந்த வழிமுறையாக அரசியலைக் கொள்ளலாம்.

நாடுகளிடையே நிலவும் அரசியல் பன்னாட்டு அரசியல் என்று அழைக்கப்படுகிறது. பன்னாட்டு அரசியலில் குழுக்கள் நாடுகள் என்றும் தேவைகளும் விருப்பங்களும் தன் நலப்பற்று என்றும், குழுக்களிடையே நிலவும் கருத்து வேறுபாடு முரண்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. அதிகாரத்தின் வாயிலாக நாடுகளிடையே நிலவும் உறவினை ஒரு நாட்டிற்கு அல்லது சில நாடுகளடங்கிய கூட்டமைவிற்கு சாதகமாக சீரமைக்கும் அரசியலாக பன்னாட்டு அரசியல் காணப்படுகிறது. இவ்வாறு பன்னாட்டு அரசியலை நோக்கும் போது பன்னாட்டு அரசியலில் காணப்படும் மூன்று முக்கிய காரியங்கள் புலனாகிறது. அவை தேசிய தன்நலப்பற்று, முரண்பாடு, அதிகாரம் என்பவையாகும். தேசிய தன்நலப்பற்று என்பது பன்னாட்டு அரசியலின் குறியிலக்காகும். முரண்பாடு பன்னாட்டு அரசியலின் நிலைமையாகும். அதிகாரம் பன்னாட்டு அரசியலின் வழிவகையாகும். மேற்கூறிய மூன்றிலும் முரண்பாடு பன்னாட்டு அரசியலில் மிக முக்கியமான ஒன்றாகும். முரண்பாடு இன்றேல் பன்னாட்டு அரசியலில் தன்நலப்பற்றும் அதிகாரமும், செயலிழந்துவிடும். இவ்வடிப்படையில் நோக்கும் போது, தன்நலப்பற்றின் அடிப்படையில் தோன்றிய முரண்பாடுகள் நிறைந்த சுதந்திர அரசியல் சமுதாயங்களிடையே நிலவும் உறவுகளை எடுத்தியம்புவதுதான் பன்னாட்டு அரசியல் என்பது புலனாகிறது எவ்வாறெனினும் நாடுகள் ஒன்றுக்கொன்று பகைவர்களாக பன்னாட்டு அரங்கில் இயங்கி வருகின்ற என்று நாம் நினைத்தல் கூடாது. ஒத்த தன்நலப்பற்று கொண்ட நாடுகள் ஒருங்கிணைந்து தங்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி கொள்கின்றன. இவ்வடிப்படையில் நோக்குங்கால் பன்னாட்டு அரசியல் ஒத்துழைப்பையும் முரண்பாட்டையும் தன்னகத்தே

கொண்டுள்ளது. ஆனால் பன்னாட்டு அரசியலில் முரண்பாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஒத்துழைப்பு முரண்பாட்டின் முடிவில்தான் ஏற்படுகிறது என்ற உண்மை தான் முரண்பாட்டிற்கு முக்கிய இடத்தை பன்னாட்டு அரசியலில் தேடித் தந்துள்ளது.

உலக அரசியல் (World Politics) பன்னாட்டு விவகாரங்கள் (International Affairs) உலக விவகாரங்கள் (World Affairs) பன்னாட்டு உறவுகள் (international Relations) போன்ற சொற்றொடர்களுடன் பன்னாட்டு அரசியலை விஞ்ஞான ரீதியில் கற்பதற்கு மேற்கூறிய சொற்றொடர்களின் துல்லியமான பொருள் விளக்கத்தை அறிதல் அவசியம்.

சில நேரங்களில் சிலர் பன்னாட்டு அரசியலை தெளிவற்ற நிலையில் உலக அரசியல் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் பன்னாட்டு அரசியல் உலக அரசியலில் இருந்து வேறுபடுகின்றது. உலக அரசு (World State) நம்மால் ஏற்படுத்த முடிந்தால் மட்டுமே உலக அரசியல் என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்க முடியும். 'உலக அரசு' ஏற்படுத்தப்பட்டால் தேசிய அரசியலில் காணப்படுவது போன்ற ஸ்தாபன அமைப்புக்களை உலக அரசியலிலும் உருவாக்கலாம். இவ்வடிப்படையில் நோக்கும் போது பன்னாட்டு அரசியல் நிகழ்காலத்தைக் குறிக்கும் ஒன்றாகவும் உலக அரசியல் வருங்காலம் சம்பந்தப்பட்ட ஒன்றாகவும், காட்சியளிக்கின்றது. இவ்வாறு பன்னாட்டு அரசியலில் இருந்து உலக அரசியலை வேறுபடுத்தலாம்.

இது போன்று, உலக அரசியலை உலக விவகாரத்தோடு குழப்புதல் கூடாது. உலக அரசியல் பொருளாதாரம் கலாச்சாரம் போன்ற அத்தனை விவகாரங்கள் அடங்கிய ஒரு பொதுவான சொற்றொடர்தான் உலக விவாகாரம், தற்கால பன்னாட்டு அரசியலையும், வருங்கால அரசியலையும், தெளிவாகக் கற்க உலக விவகாரங்களைப் பற்றிய அறிவு தேவை, ஆனால், உலக விவகாரம் என்பது அரசியல் வழிமுறையைக் கற்க தேவையான ஒரு ஆக்கக்கூறாக அமையாமல், உலக அரசியல் வழிமுறையைக் கற்க தேவையான புள்ளி விபரங்களை வழங்கும் ஒரு பகுதியாக அமைதல் வேண்டும். உலக விவகாரத்தைப் போன்ற நிலையில்தான் பன்னாட்டு விவகாரத்தினுடைய நிலையும் காணப்படுகிறது. பன்னாட்டு விவகாரம் பன்னாட்டு சமூக அமைப்பில் நிலவும் அத்தனை விருப்பங்களையும் எடுத்தியம்பும் ஒரு பொதுச் சொற்றொடராகும்.

(குறிப்புக்கான இடம்)

பன்னாட்டு அரசியல் பன்னாட்டு உறவு ஆகிய சொற்றொடர்கள் பெரும்பாலும் இணைப்பொருள் சொற்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரண்டு சொற்றொடர்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை கண்டறிவதில் குழப்பம் ஏற்படுகிறது. கற்றறிந்த அறிஞர்களும் இச்சொற்களை இணைப்பொருள் சொற்களாகவே பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக ஹேனஸ் மார்கென்தா கெனத் தாம்சன் ஆகியோர் பன்னாட்டு உறவின் உட்பிரிவாக பன்னாட்டு அரசியலை நம்பியதைக் கொள்ளலாம். எவ்வாறெனினும், பன்னாட்டு அரசியலைக் காட்டிலும், உறவு பரந்த நோக்கு எல்லையை உடையதாய்க் காணப்படுகிறது. பன்னாட்டு ஸ்தானபங்கள், பன்னாட்டு அரசியல், அதிகாரப் போட்டிகள், பன்னாட்டுப் போர்க்கலை மற்றும், செயலாக்கும் வழிமுறைகள் போன்றவற்றின் வாயிலாக பன்னாட்டு உறவைக் கற்கும் மரபு பன்னாட்டு உறவுக் கல்வியின் பொதுவான அணுகுமுறையாகும். மேற்கூறியவற்றைக் கற்பதை பன்னாட்டு உறவுக்கல்விக்கு மிகவும் அவசியம். ஆகையால், பன்னாட்டு உறவு என்பது பன்னாட்டு அரசியலை மட்டும் குறித்தல் ஆகாது பன்னாட்டு உறவு என்னும் சொற்றொடர் நாடுகளிடையேயும் மக்களிடையேயும் நிலவும் அரசியல் அல்லது அரசியல் பாராத சமாதானமான அல்லது போர் சம்பந்தப்பட்ட, சட்டப்பூர்வமான அல்லது கலாச்சார சம்பந்தப்பட்ட, பொருளாதார அல்லது பூகோள ரீதியான முறை சார்ந்த அல்லது முறை சாராத அத்தனை உறவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆனால், பன்னாட்டு அரசியல் குறுகிய நோக்கு எல்லையை உடையதாய்த் திகழ்கின்றது. முரணான குறிக்கோள்களையும் தன்நலப்பற்றையும் கொண்டுள்ள நாடுகளிடையே நிலவும் உறவைப் பற்றி மட்டும் பன்னாட்டு அரசியலில் கற்கின்றோம். எவ்வாறெனினும் பன்னாட்டு அரசியலும் பன்னாட்டு உறவும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பை உருவாக்கிக் கொண்டு வருகின்றன. சமாதனத்திற்கான ஆர்வம் பன்னாட்டு அரசியலுக்கும் பன்னாட்டு உறவுக்கும் இடையே காணப்படும் அடிப்படை பொது உடன்பாட்டுக் கூறு.

மேற்கூறிய பன்னாட்டு அரசியலின் தன்மை, பொருள் விளக்கம் போன்றவற்றை நோக்குமிடத்து, கொள்கை மற்றும் செயல்முறை போன்றவற்றின் வாயிலாக நாடுகள் தங்கள் தன் நலப்பற்றை அடைய முயற்சிக்கும் வழிமுறை தான் பன்னாட்டு அரசியல் என்பது புலனாகிறது. இச்செயல் முறையிலான பொருள் விளக்கம் பன்னாட்டு அரசியலுக்கு எக்காலத்திலும் பொருந்தும் ஒன்றாகும். 1945—ஆம் ஆண்டிற்குப் பிறகு

(குறிப்புக்கான இடம்)

பன்னாட்டு அரசியலில் குறிப்பிடத்தக்க சல மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலகட்டத்தில் அரசுகளின் இறைமையின் தன்மை, அரசுகளிடையே நிலைவிய முரண்பாடு, தேசிய நலப்பற்று, தேசிய நலப்பற்றை அடையும் வழிமுறை அல்லது அதிகாரம் போன்ற சில மாறுதல்கள் பன்னாட்டு அரங்கில் சில நிகழ்ச்சிகளினால் ஏற்பட்டன. மேற்கூறிய மாற்றங்களினால் ஏற்பட்டு அரசியலின் தன்மையிலும் குறிப்பிடக்கூடிய சில மாற்றங்கள் நிகழ்ந்தன.

அரசுகளின் நெருக்கம் சர்வதேச வாழ்வில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தி பன்னாட்டு அரசியலின் தன்மையை மாற்றியமைத்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை உலக வரலாறு என்பது ஐரோப்பிய வரலாற்றையே குறிப்பிடுவதாக அமைந்திருந்தது. ஆனால் குடியேற்ற நாடுகளின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்றமையால் பலஇறைமை வாய்ந்த சுதந்திர அரசுகள் இன்று காணப்படுகின்றன. இவ்வரசுகள் தங்களுடைய தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கும் நிலையில் இருப்பதால் உலக வரலாற்றில் ஒரு புதுசகாப்தம் தோன்றியுள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் சர்வதேச அரங்கில் மாற்றங்களை விளைவிக்கும் முக்கியப் பகுதியாக ஐரோப்பா மட்டும் கருதப்படாமல் ஆசிய, ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு நாடுகளும் எண்ணப்படுகின்றன. இவ்வாறு பன்னாட்டு அரசியலில் ஐரோப்பிய ஆதிக்கம் குறைந்து இன்று அது ஒரு பரந்த நோக்கு எல்லையை அடைந்துள்ளது. புது அரசுகள் உருவெடுத்தமையால் தேசிய நலன் கோட்பாடு, அந்நலனை அடையும் வழிமுறையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இன்று பன்னாட்டு அரசியல் கல்வி என்பது ஒன்று அல்லது சில அரசுகளின் தேசிய நலனைப் பற்றி கற்பதோடு நின்றுவிடாமல், எல்லா சுதந்திர நாடுகளின் தேசிய நலனைப் பற்றி கற்கின்ற அளவில் வளர்ந்துள்ளது. பல புதிய அரசுகள் பொருளாதார முன்னேற்றம், நிர்வாகத்தில் நிலையான தன்மையை உருவாக்கல், படைக்கலப் பெருக்கம் போன்ற பல உள்நாட்டு பிரச்சனைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. இப்பிரச்சனைகளுக்கு சிறிய அரசுகள் தங்கள் தேசிய நலனை நிர்ணயம் செய்தலைக் கட்டப்படுத்தும் ஆற்றல் உண்டு. இவ்வரசுகளின் தேசிய நலனின் நன்மை பல அரசுகளின் நலனைப் பாதிக்கும் இவ்வாறு பாதித்தல், நாடுகளிடையே தோன்றும் முரண்பாட்டின் தன்மையைப் பாதித்து முடிவில் பன்னாட்டு அரசியலின் தன்மையைப் பாதிக்கின்றது.

பன்னாட்டு அரசியலில் நிகழ்ந்த அடுத்த முன்னேற்றம் வெளிநாட்டுக் கொள்கைகள் உருவாகும் நபர்கள் சம்மந்தப்பட்டதாகும். பண்டைய

(குறிப்புக்கான இடம்)

நாடுகளில் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த சில நபர்களால் வெளிநாட்டுக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. நிர்வகிக்கக் கூடிய எண்ணிக்கை கொண்ட உயர்ந்தோர் குழாங்களிடையே தொடர்பு மற்றும் இசைவு ஏற்படுத்துவதாக பன்னாட்டு அரசியல் நிகழ்ந்தது. ஆனால் இன்று மேற்கூறியவற்றில் ஒரு பெரும் மாற்றத்தை காண முடிகின்றது. இம்மாற்றத்திற்கு முக்கிய காரணமாக தேசிய இயக்கங்களையும், புதிததாகத் தோன்றிய தேசிய அரசுகளையும் கூறலாம். ஒரு தேசிய அரசு புதிதாகத் தோன்றினால், பொருளாதார மற்றும் இராணுவ தன்னிறைவு பெறுதல் அதனுடைய அடுத்த முக்கிய முயற்சியாக எண்ணப்படுகிறது. இம்முயற்சியில் வெற்றிபெற, புதிய அரசுகள் புதிய அரசியல் இயக்கச் செயலமைத் திட்டம் புதிய அரசியல் நம்பிக்கைகள் மற்றும் புதிய சமூக மனப்பான்மை போன்றவற்றைப் பின்பற்றுகின்றன. புதிய அரசுகளால் பின்பற்றப்படும் இவையாவும் பன்னாட்டு அரசியலைப் பாதிக்கின்றன. இப்புதிய நம்பிக்கையும், மனப்பான்மையும் புதிதாக உருவாக்கப்பட்ட நாடுகளில் பொதுக்கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவுடன், இம்மாற்றம் உலகில் நேரடியாக நிகழவில்லை. உண்மையில் உயில்சனின் கருத்துக் கோட்பாடு, சமாதானம் பற்றிய ஆர்வம் கற்றறிந்த சிந்தனையாளரின் வளர்ச்சி ஆகியவைதான் இம்மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறெனினும் புதிய தேசிய அரசுகளின் தோற்றம் வெளிநாட்டு விவகாரங்களில் பொதுமக்களின் ஈடுபாட்டை ஓரளவு வளர்த்தது எனலாம். இன்று பன்னாட்டு அரசியல் ஜனநாயகப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் எந்தவொரு நாடும் சமாதான கோட்பாடு, சர்வதேச நீதி, படைக்குறைப்பு, சுதந்திரம் சர்வதேச அமைப்பு போன்றவற்றிற்கு எதிராக வெளிப்படையாக செயல்பட முடியாது. ஏனென்றால் மேற்கூறிய கோட்பாடுகள் உலக மக்கள் அத்தனைபேராலும் பாதுகாக்கப்படுகின்றன.

பன்னாட்டு அரசியல் மாற்றத்தைக் கொணர்ந்த அடுத்த முக்கிய காரணி தொழில் நுணுக்க முன்னேற்றம் ஆகும். அணு ஆயுதக் கண்டபிடிப்பின் மூலம் தொழில் நுணுக்க மாறுதல் நிகழ்ந்தது. இது மனிதன் இயற்கையின் மேல் பெற்ற வெற்றி எனக் கூறி பெருமிதம் கொள்ளலாம். ஆனால், அதே நேரத்தில் இவ்வாயுதங்களின் அழிக்கும் திறனை நாம் மறந்து ஒதுக்கி விடுதல் கூடாது. ஆகையால் பன்னாட்டு அரசியலின் தன்மையை புரிந்து கொள்ள முயற்சிக்கும் போது தற்கால ஆயுதங்களின் அழிக்கும் தன்மையை கணக்கிடல் வேண்டும் ஒரு நாட்டின் இராணுவ பலத்தைப் பெருக்க தொழில் நுணுக்கம் தேவைப்படுகிறது. தொழில் நுணுக்கம் போரின் தன்மையையே மாற்றியுள்ளது. இன்றைய பன்னாட்டு அரசியலின் முக்கிய குறிக்கோள்

(குறிப்புக்கான இடம்)

இராணுவ மேம்பாடு பொதுவுடைமையின் எழுச்சி, தேசீயத்தின் வளர்ச்சி, அனைத்து நாட்டு கருத்தியல் வளர்ச்சி போன்றவற்றால் முதல் உலகப் போருக்குப்பின் பல முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு சர்வதேச அரங்கத்தில் நடந்தேறின.

இவ்வாறான முன்னேற்றங்களின் அடிப்படையில் தோன்றிய மாற்றங்களினால் அதிகார அரசியல் இன்று ஒரு புது உருப்பெற்றுள்ளது. இப்புதிய அமைப்பில் உலக அதிகாரம் இரு பெரும் அதிகாரங்களின் இடையே உறைந்து உலக நாடுகள் இருமுனைக் கோடிகளாகப் பிரிந்து செயல்படுகின்றன. அரசுகளின் பெருக்கத்தினால் பல முனைகளாகப் பிரிந்து செயல்பட்ட அரசுகள் இன்று இருமுனைக் கோடிகளாகப் பிரிந்து செயல்படுவது பன்னாட்டு அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் சீனா மேற்கு ஜெர்மனி, ஜப்பான், இந்தியா மற்றும் ஒன்றிரண்டு ஆப்பிரிக்க நாடுகள் இறைமை வாய்ந்த நாடுகளாகத் தோன்றிய பின் இருதுணைக் கோடி அமைவுமுறை சிறிது சிறிதாய் மாறுதல் அடைந்து வருகிறது. இருமுனை அமைவுசிதைவு பெற்று ஒரு புதிய முறையிலான பல முனை அமைவு உருப்பெற்றுள்ளது, ஆனால் இந்த புதிய முறையிலான பலமுனை அமைவு பழைய பல முனை அமைவில் இருந்து வேறுபட்டுள்ளது. இப்புதிய பலமுனை அமைவு பழைய மரபுதழித்தோன்றி தொழில் திறன் என்ற ஆக்கக்கூறின் அடிப்படையில் உருவாகாமல், உலகில் விரிவாகப் பரவியுள்ள அணுசக்தி கழகத்தின் அடிப்படையில் உருவாகியுள்ளது.

இதுகாறும் நாம் பன்னாட்டு அரசியலின் தன்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை புதிய அரசுகளின் தோற்றம், குடியேற்ற நாடுகளின் அதிகாரத்தை நீக்குதல், பொதுக்கருத்துக்கு முக்கியத்துவம் அளித்தல், புதிய ஆயுதங்களின் பெருக்கம் போன்றவற்றின் அடிப்படையில் ஆராய்ந்தோம் இவ்வாய்வு முற்றுப்பெற இன்னும் இரண்டு ஆக்கக்கூறுகளை இங்குச் சுட்டிக் காட்டுதல்அவசியம். அவற்றுள் ஒன்று சமாதானத்தைப் பற்றிய அக்கறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றொன்று பன்னாட்டு ஸ்தாபனம் மற்றும் ப்ன்ாட்டு ஒருங்கிணைவு போன்றவற்றை நிறுவுவதில் உலக நாடுகள் கொண்டுள்ள ஆர்வம், சமாதானத்திற்கான ஆர்வம் பன்னாட்டு நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. பன்னாட்டு உறவினை சீரமைப்பவதற்கு சமாதானத்தை பாதுகாத்தல் அவசியம் என்ற உண்மையில் இருந்து சமாதானத்திற்கான அக்கறைக்கும் பன்னாட்டு நிறுவன அமைப்பிற்கும் இடையே நிலவும் நெருங்கிய தொடர்பு வெளிப்படுகிறது. இவ்வாறு, சமாதானம் பன்னாட்டு நிறுவனத்தையும்,

(குறிப்புக்கான இடம்)

பன்னாட்டு அரசியலையும் ஒன்றிணைக்கும் ஒன்றாகத் திகழ்கிறது. இன்றைய பன்னாட்டு அரசியலின் முக்கிய குறிக்கோள் சமாதானத்தை நிலைநிறுத்தல் ஆகும். சமாதானத்தை நிலை நிறுத்தத் தேவையான வழி முறையாக பன்னாட்டு நிறுவன அமைப்புகளை கொள்ளலாம். எனவே பன்னாட்டு அரசியலில் முக்கிய இடத்தைப் பெறுவது பன்னாட்டு நிறுவனம் ஆகும். பன்னாட்டு அரசியலுக்கும் பன்னாட்டு நிறுவனத்திற்கும் இடையே காணப்படும் உறவு அதிகார போராட்டத்திற்கும் ஒழுங்கை நிலை நாட்டும் போராட்டத்திற்குமிடையே ஒரு விசையுணர்ச்சியை ஏற்படுத்தி பன்னாட்டு அரசியலின் தன்மையில் ஒரு புதிய உருவளவை நிலைநாட்டியுள்ளது.

### 1.1.1. பன்னாட்டு அரசியலின் தற்போதைய கருத்துக்கள்:

1) அதிகாரம்: உலகில் உள்ள முன்னனி நாடுகளின் கொள்கைகளை நிர்ணயிப்பதில் அதிகாரம் முக்கியப் பங்கு வகிகின்றது. பல பாடத்திட்டங்களிலும் ஆராய்ச்சி நடத்தி அதிகாரக் கோட்பாட்டைப் பரந்த ஒரு கோட்பாடாக மாற்றியுள்ளனர். ஆனால் அதே நேரத்தில் அதிகாரத்தின் எல்லை வரையறை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் அதிகார சமநிலை, தேசிய அதிகார கூறுகள் மற்றும் அதிகார சரியீடு போன்றவை பன்னாட்டு அரசியலில் செயல்படுதல் பன்னாட்டு உறவு கல்வியில் அதிகார கோட்பாடு பெற்றிருக்கும் முக்கிய நிலையாகும்.

2) உலக சமுதாய அமைப்பு: (The World Community) பல நிலைகளில் நோக்குகையில் நாம் வாழும் இவ்வுலகை 'ஓர் உலகு' எனலாம். சமுதாய அமைப்புக் கருத்து உலகின் மக்களிடையேயும் நாடுகளிடையேயும் காணப்படும். ஒரே சீரான காரியங்களுக்கும், அவர்களை ஒன்றாக பிணைக்கும் ஆக்க கூறுகளுக்கும் முக்கியத்துவம் வழங்குகிறது.

3) போரும், சமாதானமும்: (War and Peace) பன்னாட்டு உறவுகளில் போருக்கும் சமாதான ஏற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இன்றைய அணுயுகத்தில் போர் என்பது பண்பாட்டையே அச்சுறுத்துவதாய்க் காணப்படுகிறது. ஆகையால் போர் மற்றும் சமாதானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு உடனடியாக பரிகாரம் காணுதல் அவசியம்.

4) கோட்பாடுகள்: (Ideologies) வலியத் தாக்கும் சர்வாதிகார அரசு முறைகளும், அரசியல் பொருளாதார சமூக அமைப்புகளிடையே வேரூன்றி முரண்பாடுகளும் நிறைந்த இந்த இருபதாம் நூற்றாண்டில் பன்னாட்டு வாழ்வில் கோட்பாடுகள் மெய்யாகவே கொழுந்து விட்டு எரியும் ஒரு பிரச்சனையாக காணப்படுகின்றன. ஆகையால் இன்று பன்னாட்டு

உறவுகளில் கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

5) தேசிய நலன்கள்: (The National Interests) உலக விவகாரங்களைக் கற்கும் இன்றைய மாணவர்கள், பன்னாட்டு, உறவு, தேசிய நலன் என்ற மைய கருத்தைச் சுற்றியே இயங்குகிறது என்று கூறுகின்றனர். ஒவ்வொரு தேசிய அரசின் தலைவர்களும் அவ்வரசின் தேசிய நலனைப் பேணி வளர்த்தல் அவசியம். ஆனால் தேசிய நலனுக்கு பொருள் வியாக்கியானம் அளித்தல் நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை செயல்படும் விதத்தை நிர்ணயிக்க தேசிய நலன் பற்றிய கருத்து தேவைப்படுகிறது.

6) தேசியம், ஆதிக்க ஆட்சி மற்றும் குடியேற்ற கோட்பாடுகள்: (Nationalism, Imperialism and Colonialism) இன்றயை உலகில் அதிகாரம் வாய்ந்த ஒரு சக்தியாக தேசியம் இயங்கி வருகின்றது. ஆதிக்க ஆட்சிமுறையும் குடியேற்ற ஆதிக்கமும் இன்று வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கினறன. பன்னாட்டு உறவில் இன்று காணப்படும் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ள இக்கோட்பாடுகள் பற்றிய அறிவு தேவை.

7) பொருளாதார ஆதிக்கக் கூறுகள் (Economic Factors) பன்னாட்டு உறவுகளை கற்கும் மார்க்ஷிய லெனினிச அணுகுமுறை பொருளாதார அடிப்படையில் உருவாகியதாகும். பொதுவுடைமைவாதிகளல்லாத பலரும் பன்னாட்டு வாழ்வில் பொருளாதார காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர்.

8) தேசிய குணநலன் (National Character) இக்கருத்து தற்கால பன்னாட்டு சமூகத்தில் ஒரு தேசிய அரசியல் வாழும் மக்கள் மற்றும் சமூக குழுக்களிடையே நிலவும் குறிப்பிடத்தக்க இயற்பண்புகளை விரிவாக ஆராயவும் சாத்தியக்கூறுகளை விளக்குகின்றது. தேவையான அளவு இக்கருத்து வளர்ச்சியுற்றால் கொள்கை உருவாக்குபவர்களுக்கும் பன்னாட்டு விவகாரங்களைக் கற்கும் மாணவர்களுக்கும் இது வழிகாட்டியாக அமையும்.

### 1.1.2. பன்னாட்டு அரசியலின் நோக்கம்

பன்னாட்டு அரசியலைக் கற்கும் மாணவன் இயற்பியல் விதிகளுக்கிணங்க செயல்படும் ஒரு விஞ்ஞானி அல்ல. அவன் உணர்ச்சிகள், முக்கியமான நபர்கள், மரபுகள், செயல் நோக்களித்தல் மற்றும் பல புரியமுடியாத மாறிவரும் ஆக்க கூறுகள் ஆகியவற்றின் மேல் முடிவற்ற அக்கறை கொண்டுள்ளான். மனிதர்களும், நாடுகளும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில்

றிப்புக்கான இடம்)

எவ்வாறு இயங்க வேண்டும் என்பதனை பன்னாட்டு உறவுகள் வெளிப்படுத்துகின்றன. பன்னாட்டு ஒத்துழைப்பை ஏற்படுத்தி பன்னாட்டு நலனை முன்னேற எந்நிலைகள் ஆதரிக்கப்படவேண்டும், எந்நிலைகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் பன்னாட்டு உறவுகள் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

பன்னாட்டு உறவு என்பது பன்னாட்டு வாழ்வில் காணப்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் ஒரு அறிவியல் அல்ல பன்னாட்டு பிரச்சனைகளுக்கு இது ஒரு சீரிய அணுகுமுறையாக செயல்படுகிறது. உலகில் நிலவும் பல பன்னாட்டு உறவு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் இன்றைய சூழ்நிலையில் தீர்த்து வைக்க முடியாதவை என்ற உண்மையை பன்னாட்டு உறவுகளைக் கற்கும் மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம். குழப்பம் நிறைந்த அபாயகரமான ஒரு உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம். இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க சில திருப்பதியளிக்கும் வழிமுறைகள் காணப்படுகின்றன. எல்லாப் பிரச்சனைகளும் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து விளைவிக்காது, தீர்த்து வைக்க முடியாத சில பிரச்சனைகள் காலப்போக்கில் புதுத் திருப்பம் அடைந்து அவற்றின் முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றன. பொதுவுடைமைவாதிகள் மற்றும் பொதுவுடைமை தத்துவத்தின் மேல் நம்பிக்கையில்லாதோர் ஆகியோரிடையே ஒரு அடிப்படை உடன்பாட்டை ஏற்படுத்துதல் என்பது முடியாத காரியம். எனவே போர் தவிர்க்க முடியாத ஒன்று எனக் கூறிவிட முடியாது. போர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நிரந்தரமாக தீர்த்து வைக்க முடியாது. ஆனால் அவற்றை கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்ளலாம். அணுயுகத்தின் முழு அளவிலான அபாயம் விளைவிக்கும் போரை நிகழா வண்ணம் தடைசெய்ய முயற்சிக்கலாம். பல பிரச்சனைகளுக்கு முழு அளவில் தீர்வு காண பன்னாட்டு அரங்கில் இயலும். ஆனால் பல பிரச்சனைகளை முழு அளவில் தீர்க்க முடியாவிட்டாலும். அப்பிரச்சினைகளை கூடுமான அளவு கட்டுப்பாட்டின்கீழ் வைக்க முயற்சிக்க வேண்டும்.

### 1.1.3. பேராசிரியர் மார்கந்தோவின் அரசியல் பற்றி நடைமுறைக் கோட்பாடு

(Prof. Morgenthau's Realistic Theory of International Politics")

பன்னாட்டு அரசியல் கல்வியில் சமீபகாலத்தில் குறிப்பிடத்தக்க நுட்பமான சில மாறுதல் ஏற்பட்டள்ளன. இப்பாடத்திட்டத்தில் நடந்தேறிய புதிய ஆராய்ச்சிகள் பன்னாட்டு அரசியலில் புதிய கோட்பாடுகளை

(குறிப்புக்கான இடம்

உருவாக்கியுள்ளன. இப்பொழுது பல அறிஞர்களும், வெளியீட்டாளர்களும், ஆய்வாளர்களும், தூதுவர்களும் பன்னாட்டு அரசியல் கல்வியில் கோட்பாடுகளின் பங்கினைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். இவ்வாறு பன்னாட்டு அரசியல் கல்வியில் கோட்பாட்டின் பங்கினை ஆதரித்து வரும் அறிஞர்களில் பேராசிரியர், மார்கந்தோ மிகவும் முக்கியமான ஒருவராகக் கருதப்படுகிறார். ஆனால் இவர் ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த கோட்பாட்டை ஆதரிக்கின்றார். இக்கோட்பாடு மெய்யியல் பார்ந்த உலக நிலையைச் சார்ந்து காணப்படுகின்றது. தெளிவற்ற தத்துவம் அல்லது மெய்யியலற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத எண்ணங்களின் அடிப்படையில் பன்னாட்டு அரசியல் கோட்பாடுகளைத் தீர்மானிக்கக்கூடாது என்று மார்கந்தோகூறுகின்றார். கோட்பாடுகள் செயல்துறைப் பயன்நாட்டமுடையவையாக அமைதல் வேண்டும். இவ்வாறு நடைமுறைக் கோட்பாடு குறிக்கோளை அடையும் தன்மை படைத்ததாய் காணப்படுகிறது. தத்துவங்களை அடைதல் மிகவும் அரிது என்ற எண்ணத்தை இக்கோட்பாடு கொண்டுள்ளன. மனிதத் தன்மையில் அமைந்திருக்கும் சில சக்திகள் ஏற்படுத்தும் விளைவுகளை பெரும்பாலும் உலகில் சீர்கேடுகளைத் தோற்றுவிக்கின்றன என்ற கருத்தை இக்கோட்பாடு கொண்டுள்ளது. முழு அளவிலான தன்மையை ஏற்படுத்தல் இக்கோட்பாட்டின் குறிக்கோளாக அமைகிறது. "பன்னாட்டு அரசியலின் குறிக்கோளாக எது அமைந்தாலும் அதிகாரத்தை எய்துவது தான் உடனடியாக அடையவேண்டிய குறிக்கோள்" என்ற கருத்தை இக்கோட்பாடு கொண்டுள்ளது. குறிப்பிட்ட அளவில் அரசியல் செயல்பாட்டிற்கு உருவமைப்பு வழங்குவதில் பண்டைய வரலாற்று நிகழ்ச்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன என்ற கருத்திற்கு அரசியல் நடைமுறைத் தத்துவம் முக்கியத்துவம் அளிக்கிறது. அரசியல் செயல்முறைத் தத்துவத்தை ஒழுங்கான ரீதியில் வெளிப்படுத்த முயற்சிப்பது மிகவும் அரிது அரசியல் செயல்முறையைத் தெளிவாக அறிய மார்கந்தோ ஆறு அடிப்படைத் தத்துவங்களைக் கூறியுள்ளார்.

a) மனித தன்மை மற்றும் உளவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நடைமுறைச் சட்டங்கள் அரசியலைக் கட்டப்படுத்துகிறது என்று மார்கந்தோவின் கோட்பாட்டில் அடங்கிய முதல் தத்துவம் கூறுகிறது. இச்சட்டங்களைச் சரிவர புரிந்து கொள்ளாமல் சமூகத்தை அல்லது அரசியல் முறைமையைச் சீரமைக்க முடியாது. மேலும் இச்சட்டங்களை மேம்பாடு படைத்த சட்டமாக நிலைநிறுத்தவும் கூடாது. அவ்வாறான நிலையை இச்சட்டங்களக்கு அளித்தால், இச்சட்டங்கள் நிலவும் சமூகம் அல்லது அரசியல் முறையமைவு வெற்றிகரமாகச் செயல்படும் ஆற்றலை

நறிப்புக்கான இடம்)

காலப்போக்கில் இழந்துவிடும் நிலையை அடையலாம். மனிதத் தன்மை மற்றும் உளவியல் அடிப்படையில் உருவான கோட்பாட்டால், உண்மையையும், கருத்தையும் வேறுபடுத்த நம்மால் முடிகிறது. அதாவது எது பகுத்தாய்வு மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. எது விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட எண்ணம் என்று வேறுபடுத்தி உணரமுடிகிறது. மனிதத் தன்மை மற்றும் உளவியல் அடிப்படையில் உருவான அரசியல் கோட்பாட்டால் நமக்குச் சரியான முறையில் அரசியல் நிகழ்ச்சிகளை உய்த்துணர்ந்து கேடு விளைவிக்கும் தப்பெண்ணங்களை அகற்ற முடிகிறது. இக்கோட்பாடு மனிதத் தன்மை பெருமளவில் நிலையான தன்மை படைத்தது என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளது. எனவே புதுமையைப் புகுத்துதல் தேவையான ஒன்று என்ற எண்ணத்தை இக்கோட்பாடு கொண்டிருக்கவில்லை. மேலும் பழமைக் கருத்துக்கள் குறைபாடு நிறைந்தவை என்ற நம்பிக்கையையும் இக்கோட்பாடு நிலைநிறுத்தவில்லை. பழைமை எண்ணங்கள் நன்மை பயக்கின்ற அளவில் நிறைவு பெற்று விளங்கியதாக இக்கோட்பாடு நம்பிக்கை தெரிவிக்கின்றது. எவ்வாறெனினும், இக்கோட்பாடு இரண்டு முக்கிய பரிசோதனைகளைக் கடந்து வருதல் அவசியம் என்று எடுத்தியம்புகிறது. அவை பகுப்பாய்வு மற்றும் அனுபவம் என்பவையாகும். உண்மைகளை நிலை நிறுத்துதலும், அவ்வுண்மைகளைப் பகுப்பாய்வு மூலம் விளக்குதலும் செயல்முறைக் கோட்பாட்டில் அடங்கியுள்ளது. எனவே, தலைவாகள் வழங்கியுள்ள வெளிநாட்டுக் கொள்கையைச் சீரிய முறையில் புரிந்துகொள்ள, நாம் சூழ்நிலையில் மட்டும் ஆராய்தல் கூடாது. ஆனால் ஒரு சூழ்நிலைகளை நிலவிய பல வழிமுறைகளில், ஏன் ஒரு குறிப்பிட்ட வழிமுறையை அச்சூழ்நிலைகளில் தனது வெளிநாட்டுக் கொள்கையின் செயல்பாட்டிற்கு அத்தலைவர் விரும்பித் தேர்ந்தெடுத்தார் என்பதை ஆராயவேண்டும்.

b) இரண்டாவதாக தேசிய விருப்பம் பற்றி கருத்துக்கள் பன்னாட்டு அரசியலை பிற சமூக இயல்புகளிலிருந்து வேறுபடுத்துகின்றது. தேசிய விருப்பத்திற்கு அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு பொருள் விளக்கத்தை பேராசிரியர், மார்கந்தோ வழங்கியுள்ளார். இவ்விளக்கம் அரசியல் அரங்கில் எல்லா நிகழ்ச்சிகளையும் சரியாகப் புரிந்துகொள்ள துணிபுரிகின்றது. எனவே எல்லா உலகத் தலைவர்களும், தங்கள் தேசிய விருப்பத்தை எய்த, அதிகாரத்தை முதலில் நிலைநிறுத்த முனைவதை நாம் இன்றைய உலக அரங்கில் கண்கூடாகக் காணலாம். இவ்வாறு வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய ஆக்கக்கூறாக தேசிய விருப்பத்தைப் பாதுகாத்தல் நிலவுகிறது என்ற கருத்தை பேராசிரியர் மார்கந்தோ கொண்டுள்ளார். செயல்முறைக் கோட்பாடு உள்நோக்கங்களுக்கு

(motive)முக்கியத்துவம் வழங்குவதில்லை. இக்கோட்பாடு எந்தவொரு தனிப்பட்ட கொள்கைக்கும் முற்றுரிமை அளிப்பதில்லை. இக்கருத்தை நிலைநாட்ட மார்கந்தோ பின்வரும் எடுத்துக்காட்டைக் கூறியுள்ளார். முதல் உலகப்போருக்கப்பின் சேம்பர்லின் திருப்திபடுத்தும் கொள்கையை (Policy of appeasement) நல்ல உள்நோக்கத்தோடு பின்பற்றினார் என்றாலும், அவரால் இரண்டாம் உலகப்போரைத் தவிர்க்க முடியவில்லை. அப்போர் உலகில் கோடிக்கணக்கான மக்களுக்கு சொல்லொண்ணாத் துயரை ஏற்படுத்தியது. வின்ஸ்டன் சர்ச்சில் தேசிய அதிகாரத்திற்கான சில கொள்கைகளை குறுகிய உள்நோக்கத்தோடு பின்பற்றினார். ஆனால் அன்னாரின் குறுகிய உள்நோக்கு படைத்த கொள்கைகளின் அடிப்படையில் தோன்றிய வெளிநாட்டுக் கொள்கை சேம்பர்லின் கொள்கையைக் காட்டிலும் சீரிய அளவிலான அரசியல் நெறிமுறை தழுவிய வெளிநாட்டுக் கொள்கையாகக் கருதப்பட்டது. இடர்பாடுகளைக் குறைத்து நன்மைகளை அதிகரிக்கும் வெளிநாட்டுக் கொள்கையை அரசியல் நடைமுறைக் கோட்பாடு எடுத்தியம்புகின்றது. தற்செயலாக நிகழக்கூடிய பல நிகழ்ச்சிகளால் அரசியல் செயல்முறை நிறைந்து காணப்படுகிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே தற்செயலாக நிகழும் நிகழ்ச்சிகளுக்குத் தகுந்தவாறு செயல்முறைகளை மாற்றியமைக்க நடைமுறை அரசியல் தயாராக இருத்தல் வேண்டும். தற்செயலாக நிகழும் நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு செயல்முறைகளை மாற்றியமைக்க நடைமுறை அரசியல் தயாராக இருத்தல் வேண்டும். தற்செயலாக நிகழும் காரியங்களுக்குத் தீர்வு காண தத்துவங்களையும் கோட்பாடுகளையும் முழு அளவில் சார்ந்திருத்தல் கூடாது.

c) மூன்றாது நடைமுறைக் கோட்பாடு நிலையான கொள்கைகளால் கவரப்படுவதில்லை. வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நடந்தேறும் அரசியல் செயற்பாட்டை நிர்ணயிக்கும் விருப்பத்தின் தன்மை, அக்கால வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கப் பயன்படுத்தி அரசியல் மற்றும் கலாச்சார சூழ்நிலைகளைச் சார்ந்து காணப்படுகிறது. சமூக மாற்றங்களைக் கொண்டு வர ஏற்கனவே நிலவும் பல்வேறான சக்திகளைத் திறன்பட பயன்படுத்தல் வேண்டும் எனச் செயல்முறைவாதிகள் கூறுகின்றனர்.

d) நான்காவதாக, அரசியல் நடைமுறை, அரசியல் செயல்பாட்டில் ஒழுக்கப்பண்பு கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற கருத்தை அறியாதது அன்று. அரசுகள் தனிநபர் பின்பற்றும் ஒழுக்கப்பண்பை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தை நடைமுறைத் தத்துவம் எடுத்தியம்புகிறது. 'உலகில் அழிவுற்றலாலும், நீதி நிலை

(குறிப்புக்கான இடம்)

நாட்டப்படல் வேண்டும் என்று ஒரு தனிநபர் கூறலாம். ஆனால் இக்கருத்தை எடுத்தியம்ப அரசிற்கு உரிமை கிடையாது. ஒழுக்க நெறித்தத்துவங்களைக் பாதுகாக்க ஒரு தனிநபர் தியாகம் புரிய முன்வரலாம். ஆனால் ஒழுக்க நெறித்தத்துவங்களுக்காகச் சுதந்திரத்தை தியாகம் செய்யும் உரிமை அரசிற்கு கிடையாது. நடைமுறைக் கோட்பாடு செயலறிவை அரசியலின் நற்பண்புக் கூறாக எடுத்துக் கூறுகிறது. செயலறிவு இல்லாமல் அரசியலில் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்க இயலாது.

e) ஐந்தாவதாக அரசியல் நடைமுறை ஒரு குறிப்பிட்ட நாடு பின்பற்றும் ஒழுக்க நெறி சார்ந்த விருப்பங்களை உலகை ஆளும் ஒழுக்க நெறிச் சட்டங்களோடு ஒருங்கிணைந்து நோக்குதல் கூடாது என்று கூறுகிறது. நாடுகள் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்துச் செயல்படுவதாக சபதம் எடுத்தாலும் நாடுகிளல் நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்தி இயக்கும் சக்தியாக அதிகாரம் அமைவதால், நாடுகளால் நடைமுறையில் ஒழுக்கப் பண்புகளைக் கடைப்பிடிக்க இயலாது.

f) கடைசியாக அரசியல் நடைமுறை அரசியல் நடவடிக்கைகளை அறிவு சார்ந்த நடவடிக்கைகளாக மாற்றுகிறது. அரசியல் நடவடிக்கைகளுக்கு நடைமுறைத் தத்துவம் முக்கியத்துவம் வழங்குகிறது. ஆனால், அதே நேரத்தில் பிறநிலைமைகளைச் சார்ந்த சிந்தனைகள் உலகில் நிலவி வருவதால் இத்தத்துவம் பிற சிந்தனைகளின் நிலையைக் காட்டிலும் ஓர் மேம்பட்ட நிலை அரசியல் சிந்தனைக்கு வழங்கியுள்ள பன்னாட்டு அரசியலை ஒழுக்க அடிப்படையில் அணுகுவதற்கு இம்முறை வழிவகுக்காது. மனிதத் தன்மை பல்வேறான எண்ணங்களுக்கு இடம் அளிக்கிறது என்று அரசியல் நடைமுறை கூறுகிறது. அரசியலை முற்றுப்பெற்ற ஒரு தனிச் செயல்பாட்டுத்துறையாக இக்கோட்பாடு கருதவில்லை. ஆனால் மனிதத் தன்மையின் பல்வேறு பண்புக்கூறுகளோடு தொடர்புகொண்டு அரசியல் செயல்படுவதாய் இக்கோட்பாடு கூறுகிறது.

**மார்கந்தோ நடைமுறைக் கோட்பாட்டின் விமர்சனம்**

மேற்கூறிய ஆறு தத்துவங்கிளன் வாயிலாகப் பேராசிரியர் மார்கந்தோ நடைமுறைக் கோட்பாட்டை விளக்கியுள்ளார். ஆனால் அன்னாரின் நடைமுறைக் கோட்பாடு பல எழுத்தாளர்களாலும் பல்வேறு அடிப்படையில் விமரிசிக்கப்பட்டள்ளது. எவ்வாறெனினும், நடைமுறைக் கோட்பாட்டின் விமர்சனங்களை பின்கூறப்பட்டள்ள அளவில் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

1. திடமான நடைமுறைக்குப் பொருந்தும் கோட்பாட்டின் மீது மார்கந்தோ கொண்டிருந்த ஈடுபாட்டினை, அறிவு சார்ந்த அறிஞர்கள் பலர் ஒத்துக்கொள்ளாமல் புறக்கணித்தனர். மார்கந்தோவின் ஒத்த கருத்தை எழுத்தாளர்கள் கொண்டிருக்கவில்லை. கோட்பாட்டின் திடமான ஒன்றாக மாற்ற இயலாது என்று எழுத்தாளர்கள் கூறுகின்றனர். புலனாகாத கருத்துக்களைக் கொண்டிருக்கும் தன்மை கோட்பாட்டின் குணநலனாகக் கருதப்படுகிறது.

2. மார்கந்தோவின் கோட்பாட்டை முற்றுப் பெறாத ஒரு கோட்பாடு என்ற பல எழுத்தாளர்கள் விமர்சிக்கின்றனர். மார்கந்தோவின் கோட்பாடு தேசீயக் கொள்கையின் குறிக்கோளைப் புறக்கணிக்கிறது என்று ஹெரால்டு ஸ்ப்ரௌட் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். தேசியக் கொள்கையின் உயர் பண்புகளை இக்கோட்பாடு கருத்தில் கொள்ளவில்லை என்று கியுன்சிரைட் விமர்சித்துள்ளார். கோட்பாடுகளுக்கும், அரசியலுக்கும் இடையில் நிலவும் உறவினை இக்கோட்பாடு விவாதிக்கவில்லை என்று ஸ்டேன்லி ஹாப்மேன் விமர்சித்துள்ளார்.

3. எல்லா மனிதர்களும் அரசுகளும் தங்கள் தேசிய நலனை அதிகாரத்தின் வாயிலாக அடைய முயலுகின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நடைமுறைக் கோட்பாடு அமைந்திருப்பதால் இக்கோட்பாடு விமர்சிக்கப்படுகிறது. பன்னாட்டு அரசியல் நலன்காக்க தினமும் மோதலைக் குறிக்கின்றது என்று இக்கோட்பாடு கருதுகிறது. இவ்வாறு பன்னாட்டு அரசியல் அமைந்தால் உலக சமாதானத்தின் கதி என்னவாகும் என்ற வினா எழும். எல்லா நாடுகளும் தங்கள் தேசிய நலனை அடைய முயற்சித்தால் நலன் காக்க நாடுகளிடையே எழும் மோதல்களைத் தவிர்க்க இயலாது. மோதல்களைத் தவிர்க்க முடியாத நிலையில் பன்னாட்டு அரசியல் முடிவுற்ற அதிகாரத்திற்கான போராட்டமாக அமைகிறது. மேலும், பன்னாட்டு அரசியல் உருவாகும் சமாதானம் மேற்கூறிய பொதுநிலையில் சில காலகட்டங்களில் ஏற்படும் மாறுதல்காளகக் கருதப்படும். இக்கருத்தை விமர்சகர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாடுகளிடையே நிலவும் ஒத்துடைப்பும் பன்னாட்டு அரசியலில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாக அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

4. நடைமுறைக்கு ஒத்த தேசிய நலன் என்ற கருத்தும் கேள்விக்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது. அரசியலில், பன்னாட்டு ஆபத்து அற்ற அளவில் நாடுகள் வரையறை செய்யப்பட்ட குறிக்கோள்களை, வரையறை செய்யப்பட்ட வழிமுறையால் அடைய முற்பட்ட பண்டைய காலத்தில் நடைமுறைக்க ஒத்த தேசீய நலன் என்பது பொருள் படைத்த ஒன்றாகக் காணப்பட்டது. ஆனால் இன்றைய உலகில் சமுதாய வாழ்வில் எப்பொழுதும் ஆபத்து நிலவி வருகின்றது.

(குறிப்புக்கான இடம்)

இந்நிலையில் நிலையற்ற காலகட்டத்தில் இயங்கி சமூக அமைப்பிற்குத் தேசிய நலன் என்ற கோட்பாட்டால் எந்தப் பயனும் கிட்டுவதில்லை. ஏனென்றால் வாழ்விற்காகப் பல்வேறான செயல்முறைகளை அவ்வப்பொழுது பின்பற்ற வேண்டியது இன்று அவசியம். இச்சூழ்நிலையில், தேசிய நலன் என்ற கோட்பாடு கற்பனை நிலை சார்ந்த கோட்பாடாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறு தேசீய கொள்கைகளை உருவாக்கும் பொழுது நடைமுறைக்கு ஒத்த காரியங்களைக் காட்டிலும் கற்பனைக்குந்த காரியகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் வழங்ககின்றனர். ஏனென்றால் நடைமுறைக்குகந்த ஆக்கக் கூறுகளைத் திறனாய்வு செய்வது முடியாத ஒரு செயலாகும்.

5. மேலும், தேசிய நலன் ஒழுக்கப் பண்பின் அடிப்படையில் காக்கப்படவேண்டும் என்று மார்கந்தோ கூறிய கருத்து நிலையன காலகட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும், ஏனென்றால், நடைமுறைக்கு ஏற்ப தேசிய நலநன ஏற்றுக்கொள்ளுதல் என்பது, நிலையான கால கட்டங்களில் தான் நடைபெற முடியும் என்பது உண்மை. நடைமுறைக்கு ஏற்ப தேசிய குறிக்கோள்களை ஏற்றுக்கொண்டால் மட்டுமே தேசிய நலனை ஒழுக்கப் பண்பின் அடிப்படையில் காக்க இயலும். ஆனால் நடைமுறைக்க ஏற்ப தேசிய குறிக்கோள்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை இன்று கிடையாது. இன்றைய உலகில் தன்னுடைய நலன் காக்க ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் நலனை அழிக்க முயற்சிக்கின்றது. இந்நிலையில் தேசிய நலன் ஒழுக்கப் பண்பின் அடிப்படையில் காக்கப்படுகின்றது என்ற தவறான கருத்தை மார்கந்தோவின் கோட்பாடு எழுத்தியம்புகின்றது.

6. அரசியலில் ஈடுபட்டள்ள ஒவ்வொரு நாடும் அதிகாரத்தைப் பெறுவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்று பேராசிரியர் மார்கந்தோ கூறியுள்ள கருத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாது. அதிகாரத்தைப் பெருக்கும் முயற்சி நாடுகள் மேற்கொண்டுள்ள குறிக்கோள்களின் ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆனால் அது நாடுகள் மேற்கொள்ளும் ஒரே குறிக்கோளாக அமைவதில்லை. மேலும் நாடுகளின் முக்கிய குறிக்கோளாகவும் அது காணப்படுவதில்லை. செல்வம் பெருக்குதல், கலாச்சார முன்னேற்றம், பாதுகாப்பு அமைதியை நிலைநாட்டல், வளம் பெருக்குதல், நீதி நிலைநாட்டல், கோட்பாடுகளைப் பாதுகாத்து பரப்புதல், செல்வாக்கைப் பெருக்குதல், சமாதானம் உருவாக்குதல் போன்ற பிரவல குறிக்கோள்களை நாடுகள் மேற்கொள்கின்றன. உண்மையில் ஒரு குறிக்கோளின் மூலம் இன்னொரு குறிக்கோள்களை எய்தலாம். செல்வம் அதிகாரத்தைப் பெருக்கும் அதிகாரத்தின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டலாம் சமாதானத்தை நிலை நாட்டுவதின் மூலம் நாட்டின் கலாச்சார முன்னேற்றத்தைப் பாதுகாக்கலாம்.

(குறிப்புக்கான இடம்)

7. அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதால் மார்கந்தோவின் கோட்பாடு போதாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. உண்மையில் சில குறிக்கோள்களை அடைய உகந்த வழிமுறையாக அதிகாரம் கருதப்படுகின்றது.

8. அதிகாரம் செலுத்தப்படாத எந்தவொரு உறவும் அல்லது நடவடிக்கையும் உலக அரங்கில் கிடையாது என்று மார்கந்தோவின் கோட்பாடு கூறுகின்றமையால், அக்கோட்பாட்டைப் பலரும் விமர்சிக்கின்றனா. ஆனால் அதிகாரம் செலுத்தப்படாத சில அரசியல் சார்பற்ற நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அவை பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள், நூல்களைப் பரிமாறுதால், தனியார் கடிதத் தொடர்பகள் போன்றவையாகும். எவ்வாறெனினும், அரசியல் நடவடிக்கைகளை வேறுபடுத்தி உகந்த அடிப்படைத் தத்துவம் ஒன்றையும் மார்கந்தே எடுத்தியம்பவில்லை.

9. எல்லாவற்றிற்கும் மேலாக, மார்கந்தோவின் கோட்பாடு குழப்பம் நிறைந்த ஒன்றாகக் காட்சியளிக்கின்றது. பொருளாதார நிபுணர்கள் அல்லது வழக்கறிஞர்கள் அல்லது நெறியாளர்கள் போன்றோரின் துறைகளைப் போன்று அரசியல் துறையும் தானாக இயங்கும் வலுப்பெற்ற ஒரு துறை என்று அவரின் ஆறு தத்துவங்களில் ஒன்று எடுத்தியம்புகிறது. ஆனால் அவர் கூறும் தனித்தியங்கும் தன்மையைப் பற்றிய தெளிவான கருத்தை அவர் தம் மனதில் கொண்டிருக்கவில்லை. அரசியல் செயற்பாட்டாளர் நலன் வளர்க்க செல்வத்தின் தேவையை எடுத்தியம்புகின்றனர். ஒரு வழக்கறிஞர் சட்ட விதிகளோடு ஒத்த நடவடிக்கையை எடுத்தியம்புகின்றனர். ஒழுக்க நெறியாளர் ஒழுக்கப் பண்பார்ந்த தத்துவங்களோடு ஒத்த செயற்பாட்டினை எடுத்தியம்புகின்றார் என்று மார்கந்தோ தனது "நாடுகளுக்கிடையிலான அரசியல்" (Politics Among Nations) என்ற நூலில் கூறியுள்ளார். இவ்வாறு ஒரு அரசியல் செயற்பாட்டாளர் நிகழ்ச்சிகளை இலகுவாக மாற்றியமைக்கக் கூறிய செயல்களை மேற்கொள்கின்றார். என்ற மார்கந்தோ 'நாடுகளுக்கடையிலான அரசியல்' என்ற நூலில் கூறுகின்றார். ஆனால் தனது பிற நூல்களில் குறிப்பாக "அரசியல் இருண்ட நிலை" (Dilemmas of Politics) என்ற நூலில் அரசியல் பொதுவாக ஒருங்கினைக்கும் தன்மை வாய்ந்த பணியை சீரிய முறையில் செயல்படுத்துகின்றது என்று கூறுகின்றார். இவ்வாறு ஒருங்கிணைக்கும் தன்மை மற்றும் மாற்றியமைக்கும் தன்மையை அரசியல் கொண்டுள்ளதாகக் கூறி ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளார்.

முன்னேற்றைத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்
அ)பன்னாட்டு அரசியலின் தன்மை மற்றும் எல்லை பற்றி விவரி.
ஆ)பன்னாட்டு அரசியலின் நோக்கம் பற்றி கூறு.
இ)பேராசிரியர் மார்கந்தோவின் அரசியல் பற்றிய கோட்பாடு பற்றி விளக்குக.

(குறிப்புக்கான இடம்)

10. உலகை நிலையான ஒரு களமாகவும் அக்களத்தில் ஒவ்வொரு நாடும் எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் அதிகாரத்தை அதிகரிப்பதைத் தங்களது நிலையான குறிக்கோளாக கொண்டிருப்பதையும் மார்கந்தோவின் கோட்பாடு எடுத்தியம்புகிளது. இது அவரது கோட்பாட்டில் காணப்படும் தெளிவற்ற தன்மையாகும். எவ்வாறெனினும் தற்காலத்தில் பன்னாட்டு உறவுகள் அடிக்கடி மாறி வருவதால் உலகை நிலையான தன்மை படைத்ததாய்க் கொள்ளுதல் குழப்பத்தை ஏற்படுத்தும், எனவே மார்கந்தோவின் கோட்பாடு எல்லா இடங்களிலும் எல்லா நேரத்திலும் ஒன்று போல் செயல்படுவதில்லை. ஆனால் உலகின் பல பகுதிகளிலும் வரலாற்றில் பல காலகட்டங்களிலும் செயல்படும் ஒன்றாகக் காணப்படுகிறது.

மார்கந்தோவின் கோட்பாட்டில் காணப்படும் தெளிவற்ற தன்மைகளையும் போதாமையையும் பட்டியல்படுத்தினால், அதற்கு முடிவு கிடையாது. ஆனால் இவ்வாறான குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் மார்கந்தோவின் கோட்பாடு பன்னாட்டுக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஒன்றாகக் கருதப்படுகின்றமையால் அதனைக் கற்பது சாலச் சிறந்தது. உண்மையில் பேராசியரியர் மார்கந்தோவின் கோட்பாடு பன்னாட்டு அரசியல் கல்விக்க ஒரு கோட்பாடுத் தொடர்பினைத் தோற்றுவித்துள்ளது. பல குறிப்பிடத்தக்க பன்னாட்டு அரசியல் கல்வியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என்று நாம் திட்டவட்டமாகக் கூறலாம்.

1.1.4. முறையமைவுக் கோட்பாடு:

தற்காலத்தில், பன்னாட்டு அரசியலைப் படிப்பதற்கு ஏராளமான அணுகுமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நடத்தை இயல் வளர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து அறிவியற் பூர்வமான அணுகுமுறைகள் பல செல்வாக்குப் பெறலாயின. ஒரு பிரச்சனை அல்லது நிகழ்ச்சி அல்லது செயலைப் பற்றி படிப்பதற்கு ஒரு ஆராய்ச்சியாளருக்கு உதவியாக இருப்பதை இந்த அணுகுமுகைள் அப்பிரச்சனைகள் அல்லது செயல்கள் பல தன்மையுடையதாய் இருக்கலாம். எத்தன்மையைச் சார்ந்து அது அணுகப்படுகிறதோ, அதற்கேற்ப அவ்வணுகுமுறையை அத்தன்மை சார்ந்த அணுகுமுறை எனக்கூறலாம் அமைப்பு சார்ந்த, பணி சார்ந்த சமூகம் சார்ந்த பல அணுகுமுறையில் நடைமுறையில் காணப்படுகின்றன.

இவ்விரு பாடங்களிலும் நாம் முறையமைவு தீர்மானம், செய்தித் தொடர் மற்றும் ஆட்டம் சார்ந்த அணுகுமுறைகளைனக் காணலாம்.

அரசியல் அறிவியலில் முறையமைவுக் கோட்பாடு ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது காணும் அரசியல் அறிவியல் நூற்கள் அரசியலமைப்புகள், அரசாங்கங்கள் போன்ற அரசியல் நிறுவனங்களை மட்டும் ஆய்வு செய்து வந்தது. ஆனால் முறையமைவுப் பகுப்பாய்வு முறையை அரசியல் அறிவியல் பாட ஆய்வில் கையாளத் துவங்கியதோடு, அரசியல் அறிவியல் நிறுவனங்களை ஆய்வு செய்வதை விடுத்து அரசியல் முறையமைவுகளை ஆய்வு செய்யத் துவங்கியது. இம்மாற்றத்திற்குள்ள முக்கிய காரணம் அரசியல் விஞ்ஞானிகள் அரசியல் முறையமைவுகளான அரசாங்கத்தைச் சாராத நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வ செய்யத் துவங்கினர். டேவிட் ஈஸ்டன் பு.யு. ஆல்மண்ட் கார்ல் டோஷ் மார்புடன் யு.கப்லான் போன்ற சமூகவியல் அறிஞர்கள், அரசியல் நிகழ்ச்சிகளை அறிய சட்டமன்றம் அமைச்சரவை, நீதிமன்றம் போன்ற அரசாங்க அமைப்புகள் போதிய வழிகாட்டிகள் அல்ல என்று திடமாக நம்பினர். மாறாக அரசியல் நிகழ்ச்சிகளை அறிய எல்லா நாடுகளிலும் காணக்கூடிய சில அமைப்புகளையும், அவற்றின் பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டுமென அவர்கள் வாதிட்டனர்.

முறையமைப்புப் பகுப்பாய்வை அரசியல் அறிவியல் புகுத்தியவர்கள் அண்மைக்கால அமெரிக்க அரசியல் விஞ்ஞானிகளாவர். அவர்களுடைய முயற்சியின் பயனாக அரசியல் அறிவியலின் குறிக்கோள் அது ஆய்வு செய்யும் பிரச்சனைகளை, வழிமுறைகள் ஆகியவற்றில் ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டுள்ளது. முறையமைவுக் கோட்பாடு அரசியல் அறிவியலில் மட்டுமின்றி எல்லாச் சமூக இயல்களிலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இயற்கை அறிவியல் (Natural Science) தூண்டுதலாக இருந்தது. அரசியல் அறிவியலில் முறையமைவுக் கோட்பாட்டைப் புகுத்தியவர்களில் முக்கியமானவர் டேவிட் ஈஸ்டன், பு.யு. ஆல்மண்ட், மார்ட்டன் யு. கப்லான் ஆகியோராவார். பழைய மரபார்ந்த அணுகுமுறைகள் சமூகவியல்களின் ஆய்வுக்குக் கடைபிடிக்கப்படுவதால், சமூக இயல் பாடத்துறைகளிடையே எவ்வித தொடர்புமின்றி, ஒவ்வொரு பாடத்துறையும் தனித்தனியாக விளங்குகின்றது. இதன் விளைவாக, ஒரு சமூக இயலில் ஏற்பட்டள்ள அறிவு வளர்ச்சி மற்ற சமூக இயல்களுக்கு கிடைக்க வாய்ப்பில்லாமற் போகிறது. மேலும் இந்த ஆய்வு முறை ஆய்வுப்பணிகளை விரயமாக்குவதோடு சமூக இயல்களின் அறிவு ஒருமுகப்படுத்தும் முயற்சிக்கும் தடையாக விளங்குகிறது என அவர்கள் வாதிட்டனர். ஒரு சமூக இயலைச் சார்ந்த ஒரு மாணவர் மற்ற சமூக இயல்களில் துணையோடு ஒரு பிரச்சனையை ஆய்வு செய்வாரெனில், விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கும் சமூக இயல் அறிவு வளர்ச்சிக்கும் அதிகமான

(குறிப்புக்கான இடம்)

வாய்ப்புகள் உண்டு என இந்த அறிஞர்கள் அரசியல் அறிவியல் பகுப்பாய்வுப் பல இயல் அணுகுமுறையின் முக்கியத்தவத்தை வலியுறுத்துகின்றனர்.

1930—ஆம் ஆண்டிற்குப் பிறகு லட்லிக்வான் பெர்ட்டலன்பி (Ludvig Von Bertallanfy) என்ற உயிரியல் மேதை, இயற்கை அறிவியல்களின் அறிவை ஒருமைப்படுத்த வேண்டுமென்ற இயக்கத்தை துவக்கினார். இதற்காக இயற்கை அறிவியல்களின் ஆய்வுக்கு முறையமைவுப் பகுப்பாய்வைப் புகுத்தினார். இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு இயற்கை அறிவியல்களில் கடைபிடிக்கப்பட்ட இந்த முறையமைவுப் பகுப்பாய்வு அரசியல் விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்தது. மனிதனின் நடவடிக்கையை பகுப்பாய்வு செய்ய ஒருமைப்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டை உருவாக்குவதற்குள்ள சாத்திய கூறுகளை ஆராய அமெரிக்காவின் முக்கிய பல்கலைக்கழகங்களில் பல மாநாடுகள் நடத்தப்பட்டன. இதன் விளைவாகப் பொது முறையமைவு பகுப்பாய்வு கோட்பாடு (General System Theory) அரசியல் அறிவியலில் தோன்றிது. இக்கோட்பாட்டின் மையக்கருத்து முறையமைவு (System) ஆகும்.

பல்வேறு இயல்களிலும் பொதுவான சில பொருள்கள் உண்டு என்றும், அவற்றை ஒரு அமைப்பாக ஒழுங்குபடுத்தினால், ஒரு பொதுக் கோட்பாட்டை உருவாக்க முடியுமென்றும், அந்த பொதுக் கோட்பாடு ஒவ்வொரு பாடத்துறையின் பிரச்சனைகளை நன்கு அறிந்து கொள்ள உதவும் கோட்பாட்டாளர்கள் திடமாக நம்புகின்றனர். இந்த அணுகுமுறை ஒவ்வொரு பாடத்துறையும் தனித்தனியாக மற்ற பாடத்தறைகளுடன் தொடர்பின்றிச் செயல்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பல்வேறு பாடத்துறைகளை ஒன்றொடொன்று தொடர்புடன் செயல்படுத்துவதனால் ஒரு பாடத்துறையில் தோன்றும் அறிவு வளர்ச்சி மற்ற பாடத்துறைகளுக்கும் பரவும். இதனால் எல்லா இயல்களும் பாட முறைகளும் பயனடையும் என்று அவர்கள் வற்புறுத்துகின்றனர். சுருங்கச் கூறின. முறையமைவுக் கோட்பாடானது பலவியல் அணுகுமுறையை மையமாகக் கொண்டதாகும்.

### 1.1.5. முறையமைவுக் கோட்பாட்டின் அடிப்படைக்கருத்துக்கள்:

முறையமைவுக் கோட்பாடினால் அடிப்படைக் கருத்துக்கள் (Concept) உண்டு. அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(குறிப்புக்கான

1) வகைப்படுத்துவதற்குதவும் மதிப்புக்கள் பற்றிய கருத்துக்கள்: (Concept of Classificatory Variablies)

இப்பிரிவிலுள்ள கருத்துக்கள் ஜனநாயக அரசியல் முறையமைவு (Domocratic Political System) ஜனநாயகமல்லாத அரசியல் முறையமைவு ஆகியவற்றைப் பிரித்துரைத்து அவற்றிற்கிடையேயுள்ள வேற்றுமைகளைச் சுட்டிக்காட்ட உதவுகிறது. எல்லை (Boundary) உள்ளீடு (Inputs) வெளிப்பாடு (Outpots) போன்ற வார்த்தைகள் இங்கு புகுத்தப்படுகின்றன.

2) ஒழுங்குபடுத்துதல், பேணுகை ஆகியவற்றிற்குதவும் மதிப்புருக்கள் பற்றிய கருத்துக்கள் (Concept of regulatory and preservative varilables)

இந்தப்பிரிவிலுள்ள கருத்துக்கள் பொதுமுறையமைவுக் கோட்பாட்டின் முக்கிய பாகங்களாகத் திகழ்கின்றன. ஒரு முறையமைவை ஒழுங்குபடுத்தி அதைப் பேணுவதில் இக்கருத்துக்கள் பங்கு வகிக்கின்றன. உறுதி (Stability), திரும்ப ஊட்டுதல் (Feed Back) நடுநிலையமைதி (Equilibrium) போன்ற வார்த்தைகள் இக்கருத்துக்களில் புகுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையமைவுக்கும் ஒரு நடுநிலையமை இருக்க வேண்டும். அந்த நடுநிலையமை நிலையுடையதாகவே (Stable Equilibrium) அல்லது நிலையில்லாதாகவோ (Unstable Equilibrium)இருக்கலாம்.

3) மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் பற்றிய கருத்துக்கள்: (Concept or forces casing dynamics)

மாற்றம் என்பது இயற்கையின் நியதியாகும். ஆனால் இம்மாற்றம் தொடர்பு கெடுக்கூடிய (Disruptive) முறையிலோ, அல்லது தொடர்பு கெடாத (Non Disruptive) முறையிலோ, இருக்கலாம். சூழ்நிலையின் மாறுபட்ட நிலைகளுக்கேற்ப மாற்றத்தை உருவாக்கும் பொழுது ஒரு தொடர்பு கெடாமாற்றம் ஏற்படுகிறது. தொடர்பு கெடா மாற்றம் முன்னை நிலைக்கு மீள்வு செய்யக்கூடிய தன்மையுடையதாகவோ (Reversible) மீள்வு செய்ய முடியாத தன்மையுடையதாகவோ (Irreversible) இருக்கலாம். முன்னை நிலைக்கு மீள்வு செய்யக்கூடிய தன்மையுடைய மாற்றங்களில் அனுசரனை (Adaptation) வளர்ச்சி (Growth) குறிக்கோள்கள் (Goals) போன்ற வார்த்தைகளும், முன்னை நிலைக்கு மீள்வு செய்யக்கூடிய தன்மையில்லா மாற்றங்களில் தொடர்பு கெடல் (Distruption) கலைப்பு (Dissolution) வீழ்ச்சி (Break-down) நெருக்கடி (Crisis) போன்ற வார்த்தைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ிப்புக்கான இடம்)

### 1.1.6. பொது முறையமைவு கோட்பாட்டினை அரசியல் அறிவியலுக்கு பயன்படுத்தலும் (General System Theory and its Application to Political Science)

முதன்முதலாக இயற்கை அறிவியல்களில் அய்வுக்குக்கடைபிடிக்கப்பட்டு வந்த பொது முறையமைவுக் கோட்பாட்டின் தத்துவங்கள் அரசியல் பெரிதும் வழிகோலியது. இதன் காரணமாகத்தான் முறையமைவுப் பகுப்பு அறிவியல் ஆய்வுக்கு எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி இயற்கையாக எழுகிறது. பொது முறையமைவுக் கோட்பாடு அரசியல் நிகழ்ச்சிகளை ஆய்வு செய்ய விரிவாக்கம் பரவலாகவும் பயன்படுத்தப்படுவது இல்லை என்பது ஓரளவு உண்மையே இதற்குள்ள காரணம் இக்கோட்பாட்டை பயன்படுத்தி ஒரு சமூக இயல் விஞ்ஞானி ஆய்வில் அதிக தூரம் செல்ல முடியாது என்பதாகும்.

பொது முறையமைவுக் கோட்பாட்டின் தத்துவங்கள் பரவலாக சிதறிக்கிடக்கின்றன. இதன் காரணமாக இக்கோட்பாட்டின் தத்துவங்களை அடிப்படையாக வைத்துச் சிறந்த ஒரு பகுப்பாய்வு முறையை உருவாக்க முடியாது. ஆயினும் அரசியல் அறிவியல் ஆய்வுக்கு முறையமைவு குறிப்புகளை வகைப்படுத்திப் பிரிக்க இந்த அணுகுமுறை சாலச்சிறந்ததாகும். செய்திக் குறிப்புகளை இவ்வாறு வகைப்படுத்திப்பிரிக்கும் பொழுது ஒரு முறையமைவிலுள்ள உள் உறுப்புக்களை இணைக்கும் அவைகளுடைய ஒருமுகத்தன்மைகள் நன்கு புலப்படும். இதன் காரணமாகத்தான் இந்த அணுகுமுறையிலுள்ள உள்ளீடு, வெளிப்பாடு, உறுதி, நடுநிலையமைதி, திரும்ப ஊட்டுதல் போன்ற கருத்துக்குப் பரவலாக பயன்படுத்துகின்றனர். இக்கருத்துக்களைப் பயன்படுத்தி ஜனநாயக நாடுகள், ஜனநாயகமல்லாத நாடுகள், வளர்ச்சியுற்ற நாடுகள் வளர்ந்து வரும் நாடுகள் ஆகியவற்றின் முறையமைவுகளைத் தீவிரமாக அரசியல் விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர். இந்த அணுகுமுறை அரசியல் வளர்ச்சி (Political Developmment) அரசியல் சிதைவு (Political Decay) ஆகியவை எத்திசை நோக்கிச் செல்கின்றன போன்ற செய்திகளை நுணுக்கமாக அறிய உதவுகிறது. இதனால் அரசியல் முறையமைவுக் கல்வி அதிக அறிவியல் தகவல்களைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது.

முறையமைவுப் பகுப்பாய்வில் மேற்கூறிய நன்மைகள் இருப்பதினால்தான், டேவிட் ஈஸ்டன் டேவிட் யு.ஆப்டர் பு.யு. ஆல்மண்ட் போன்ற அரசியல் விஞ்ஞானிகள் இவ்வாய்வு முறையை அரசியல் அறிவியல் ஆய்வுக்குத் தீவிரமாக பயன்படுத்துகின்றனர். இது அனுபவ அறிவைக் கொண்ட தற்கால கோட்பாட்டின் வளர்ச்சிக்குப் பகுப்பாய்வின்

(குறிப்புக்கான இடம்)

இரு பிரிவுகளாக உள்ளீடு - வெளிப்பாடு அணுகுமுறையும், அமைப்பு பணி அணுகுமுறையும் அரசியல் விஞ்ஞானிகளிடம் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

### 1.1.7. பன்னாட்டு அரசியலில் முறையமைவுக் கோட்பாட்டின் பங்கு:

பன்னாட்டு அரசியல் முறையமைவுக் கோட்பாட்டை வளர்த்த பெருமை மார்டன் கப்ளானையே சேரும், இதற்கென அவர் பல பெருமளவு மாதிரிப் படிவங்கள் (Macro-Models) பின்வரும் ஊகங்களின் அடிப்படையில் உருவாக்கியுள்ளார். அவையாவன.

i) பன்னாட்டு முறையமைவில் மீண்டும், மீண்டும் காணக்கூடிய நடத்தை முறை தோன்றுகிறது.
ii) இத்தகைய நிலை தோன்றுவதற்குக் காரணம் பன்னாட்டு முறையமைவின் கூறுகள் பன்னாட்டு மற்றும் தேசிய தேவைகளை ஒருங்கே பூர்த்தி செய்வதாகவும், மாறாத தன்மை உடையதாகவும் இருப்பதே ஆகும்.
iii) நிறுவனம் சார்ந்த நடத்தை முறைகள் ஒரு குறிப்பிட்ட வகைகளில் அதனை இயக்குபவர்களின் தன்மையைப் பொறுத்து அமைகின்றன.
iv) பன்னாட்டு நடத்தை முறைக்கு, இராணுவம், பொருளாதாரம் மற்றும் மக்கட் தொகை இயல் ஆகியவற்றுடன் தொடர்பு காணப்படுகிறது.

பன்னாட்டு முறையமைவு என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடைய நடவடிக்கையில் உருவொழுக்கமுள்ள காரணிகளின் இணையமே ஆகும் என்று கப்ளான் கூறுகிறார். பன்னாட்டு முறையமைவின் அடிப்படைக் கூறுகளில் ஐந்து காரணிகள் காணப்படுகின்றன. அவையாவன.

1. முறையமைவின் நடவடிக்கையை விவரிக்கக் கூடிய அடிப்படை விதிகள்.
2. முறையமைவின் தோன்றக்கூடிய மாற்றம் பற்றிய விதிகள்.
3. அரசியல் தலைவர்களை வகைப்படுத்தும் காரணிகள்.
4. இயல்பு சார்ந்த காரணிகள்.
5. செய்தி சார்ந்த காரணிகள்.

மேற்கூறப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில் காப்ளான், ஆறுவகையான பன்னாட்டு முறையமைவுகளை உருவாக்கியுள்ளார். இந்த ஆறும் பெருமளவு மாதிரிப் படிவங்களே ஆகும். எனினும் இவ்வாறும்

(குறிப்புக்கான இடம்)

தன்னுள்ளே அனைத்து வகைகளையும் உள்ளடக்கியிருப்பதாகக் கூற முடியாது. அவைகள் பின்வருமாறு:

1) அதிகாரச் சமநிலை மாதிரிப்படிவங்கள் (Balance of Power)

2) தளர்ச்சியுள்ள துருவ அமைப்பு (Loose Polar)

3) இறுக்கமான துருவ அமைப்பு (Tight Poar)

4) ஒற்றை மறுப்பானை அமைப்பு (Unit veto)

5) அடுக்கு நிலை அமைப்பு (Hieraċhial)

6) உலகலாவிய மாதிரிப்படிவம் (Universal model)

கப்ளானின் கருத்துப்படி பன்னாட்டு முறையமைவு ஒரு செல்லுப்படியாகாத அரசியல் முறையமைவு (Null Political System) ஆகும். பன்னாட்டு முறையமைவில் அரசியல் முறையமைவுகளில் உள்ளது போன்று அரசாங்கமோ அல்லது அது போன்ற வலிமையுடைய ஒரு நிறுவனமோ காணப்படாததோ இதற்குக் காரணம் என்று அவர் கருதுகிறார். பல அரசியல் முறையமைவுகளையே பன்னாட்டு முறையமைவுகளில் உள்ளடக்கியிருக்கிறதே இந்த அரசியல் முறையமைவுகளினுடையே காணப்படும் உறவுக்னெ பன்னாட்டு முறையமைவின் அடிப்படையாகும். இவ்வாறு துணை—முறையமைவுகளின் (Sub-Systems) மேலாதிக்கம் கொண்டுள்ள ஒரு முறையமைவு உண்மையிலேயே ஒரு முறையமைவு ஆகாது.

கப்ளானின் கருத்துக்கள் மிகவும் அதிகமான செல்வாக்குப் பெற்றுக் காணப்படினும், அதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அதைப் புரிந்து கொள்வதிலும், நேரடியாக அதனை ஆரய்ச்சிக்குப் பயன்படுத்துவதிலும் மிகுந்த சிரமங்கள் உள்ளன. பன்னாட்டு உறவுகளையும் நடவடிக்கைகளையும் விளக்குவதற்கு இவ்வணுகுமுறைவு பயன்படக்கூடும். ஆனால், இம்மாதிரி படிவத்தைப் பயன்படுத்தி பன்னாட்டு அரசியலை அணுகிக் கற்பது கடினமே எனினும் இம்முறையமைவு கோட்பாட்டின் சிறப்பு, பிற அறிவியற்பூர்வமான அணுகுமுறைகள் தோன்றுவதற்கு காரணமாக விளங்கி வருவதே என்றால் அது மிகையாகாது.

### தீர்மானம் இயற்றுதல்

மாறுபாடான செயல்களிலிருந்து, ஒரு குறிப்பிட்ட செயலைத் தோந்தெடுக்கும் முறை தீர்மானம் செய்தல் எனப்படும். தீர்மானம் செய்வதில் பல்வேறு செயல்கள் அடங்கியிருக்கின்றன. அவையாவன:

1) பிரச்சனைகளை வரையறுத்தல்.

2) பிரச்சனைகளைப் பற்றிய செய்திகளையும் குறிப்புகளையும் சேகரித்தல்:

3) இருக்கக்கூடிய பிரச்சனைகளில், எப்பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்தல்.

4) குறிக்கோளை அடைவதற்குச் சரியான செயலைத் தேர்ந்தெடுத்தல்.

தீர்மானம் செய்யும் பகுப்பாய்வாளர்கள் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை காண முயற்சிக்கிறார்கள். அவையாவன:

1) யார் தீர்மானம் செய்கிறார்கள்?

2) எப்படித் தீர்மானம் செய்யப்படுகிறது?

3) ஏன் தீர்மானம் செய்யப்பட்டது?

4) தீர்மானம் செய்வதில், சூழல்கள் எவ்விதப் பங்கை வகிக்கின்றன.

மேற்கூறிய வினாக்களுக்கான விடைகள் அரசியல் முறையமைப்பில் எவ்வாறு தீர்மானம் செய்யப்படுகிறது என்பதை விளக்குகின்றன.

தீர்மானம் செய்வதிலுள்ள நிலைகள்:

தீர்மானம் செய்வதில் பல்வேறு நிலைகள் உள்ளன. அவையாவன?

1) ஒரு பிரச்சனையின் விளக்கம் தீர்மானம் செய்யும் தொகுதியால் முக்கியமாகக் கருதப்படுகிற அளவுக்கு கவனத்தை ஈர்த்தல்.

2) பிரச்சனைகளைச் சூழந்துள்ள சூழ்நிலைகளைப் பற்றி செய்திகளைச் சேகரித்தல்.

3) அப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எவ்வகையான மாற்றுக் கொள்கைகளை ஏற்கவேண்டுமென்பதை அறிதல்.

4) கடைசியாகத் தீர்மானம் செய்யும் பொறுப்பு யாருக்கு இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்தல்.

5) மாற்றுச்செயல்களிலிருந்து ஏற்பதால் ஏற்படும் விளைவுகளை தீர்மானித்தல்.

6) மாற்றுச் செயல்களிலிருந்து கடைசியாகப் பின்பற்ற வேண்டிய செயலைத் தீர்மானித்தல்.

7) ஒரு செயலைத் தேர்ந்தெடுப்பதற்காக தீர்மானம் அல்லது அச்செயலைத் தொடர்ந்து செயலாக்குவதற்கான தீர்மானத்தை எடுத்தல்.

எல்லா தீர்மானங்களும் இம்மாதிரி பல்வேறு நிலைகளில் ஆய்ந்து எடுக்கப்படவில்லை. சில வேளைகளில் அரசியல் தீர்மானங்கள் கால நெருக்கடியின் காரணமாக எடுக்கப்படுகின்றன. ஆகையால் செய்திகளையும் சேகரித்துப் பல்வேறு நிலைகளில் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்மானம் செய்ய முடிவதில்லை. ஆனால் பொதுவாக தீர்மானங்கள் மேலே கூறிய நிலைகளில் ஆய்ந்து எடுக்க வேண்டும்.

குறிப்புக்கான இடம்)

அரசியல் தீர்மானங்கள் எடுப்பதிலுள்ள கோட்பாடு:

அரசியல் தீர்மானங்கள் எடுப்பதில் பல்வேறு கோட்பாடுகள் இருக்கின்றன. அவையாவன:

1) தன்னலக் கோட்பாடு:

ஒரு அமைப்பு தீர்மானம் செய்யும்பொழுது, நலன்களை அடைவதில் சச்சரவுகள் இருக்கும் பொழுது, மற்ற அமைப்புகளில் நலன்களைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறது. காலப்போக்கில் அவ்வமைப்புகளைச் சார்ந்திருந்தாலோழிய மற்ற அமைப்புகளில் நலன்களில் அவ்வாறு கவனம் செலுத்துவதில்லை.

2) பயன்களைக் கண்டறிகிற கோட்பாடு:

அரசியல் முறையமைவில் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள். அரசியல் முறையமைவிற்கு வெளியிலுள்ள மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பவற்றைத் தெளிவாக கண்டறியக் கூடியவையாக இருக்க வேண்டும்.

3) நிரந்தரக் குறிக்கோள் கோட்பாடு:

ஒரு அமைப்பின் குறிக்கோள் பொதுவாக மாறாது. ஆனால் குறிக்கோளை அடைவதற்கான முறைகள் வேண்டுமானால் மாறலாம்.

4) செயலாக்கப் பயன் கோட்பாடு:

அரசியல் முறையமைவுகள் கூடுதல் ஆதரவுகளைப் பெற முடியும் நிலையிலோ அல்லது கூடுதல் ஆதரவை இழக்க நேரிடும் என்ற நிலையிலோதான் பணத்தைச் செலவழிக்கும் தீர்மானத்திற்கு வருகின்றன. இல்லையேல் பணத்தைச் செலவழிக்கும் சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாம்.

5) பெரும்பான்மையினர் கோரிக்கைக் கோட்பாடு:

தீர்மானம் செய்பவர்கள், தெளிவாக உள்ள பிரச்சனைகளில் பெரும்பான்மை மக்களுடைய ஆதரவு பெற்றிருந்தால்தான் அப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகான தீர்மானம் எடுக்கிறார்கள். இல்லையெனில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது என்பத அரிது.

தீர்மானம் செய்யும் அணுகுமுறை அரசியல் அறிவியலுக்குப் புதிதன்று. அரசியல் அறிவியல் தோன்றி படிப்படியாக வளர்ச்சியடைந்த போது தீர்மானம் செய்யும் அணுகுமுறையும், சேர்ந்தே வளர்ச்சியடைந்து தீர்மானம் செய்யும் அணுமமுறைக்கும் ஹெர்பர்ட் ஏ சைமன் என்பவருக்கும் நெருங்கிய தொடர்ப உண்டு ஹெர்பர்ட் ஏ சைமன் தீர்மானம் செய்யும் அணுகுமுறையைப் பற்றி அலசி ஆராய்ந்திருக்கிறார் இருப்பினும் ரிச்சர்ட் சி சினைடர் தீர்மானம் செய்யும் அணுகுமுறையில் மிகச் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்.

**சினைடரும் தீர்மானம் செய்யும் அணுகுமுறையும்:**

எல்லா அரசியல் செயல்களும் மனிதர்களால் செயல்படுத்தப்படுகின்றன. இந்தச் செயல்களின் இயக்காற்றலை அறிய விரும்பினால் உலகை நமது கண்ணோட்டத்தில் பார்க்காமல், தீர்மானம் செய்வதற்குப் பொறுப்பானவர்களுடைய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தில் தீர்மானம் செய்யும் அணுமுறைச் சினைடர் ஆரம்பிக்கிறார். எல்லா அரசியல் செயல்களிலும், தீர்மானம் செய்யும் செயல் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. தீர்மானம் செய்யும் செயல் அரசியல் புரிவோர்களையும் (Politcal actors) சூழ்நிலைகளையும் வழிமுறைகளையும் பொதுவான கவனத்திற்குக் கொண்டு வருகிறது. ஆகையால் அரசியல் முறைமையைப் புரிந்து கொள்தவற்கு யார் தீர்மானம் செய்து ஒரு குறிப்பிட்ட செயல் எழுந்தது எந்த அறிவார்ந்த தொடர்புகளின் வாயிலாகத் தீர்மானம் செய்பவர்கள் தீர்மானத்தை எடுத்தார்கள் என்பதை மதிப்பிட வேண்டும்.

தீர்மானம் செய்யும் கூறுகளை மூன்று வகையான ஊக்கிகளாக சினைடர் பிரிக்கிறார். அவையாவன:

1) உள் சூழல்

2) வெளிச்சூழல்

3) தீர்மானம் செய்யும் முறை

உள்சூழல் என்பது சமூகத்திற்க அதிகாரிகள் தீர்மானம் செய்வதைக் குறிக்கும், உள்சூழலில் சமூகத்தில் எழும் பொதுக்கருத்துக்கள், பொதுவான தகவு ஆற்றுப்பயிற்சிகள், சமூக அமைப்பிலுள்ள கூறுகள், தொகுதி அமைப்புகளும் அதன்கூறுகளும் அடிப்படைச் சமூகமுறைகள், சமூகப் பாகுபாடுகள் தனித்துறைப் பயிற்சி முதலியவை அடங்கும்.

வெளிச்சூழல் என்பது தீர்மானம் செய்பவர்கள் எடுக்கும் முடிவுக்கு மற்ற சமூகங்களிலும், அரசுகளிலும் எழும் செயல்களையும் எதிர்ச்செயல்களையும் குறிக்கும்.

தீர்மானம் செய்யும் வழிமுறைகள் அரசாங்க அமைப்புகளில் எழுந்து, அரசாங்க அமைப்புகளின் ஒரு பகுதியாக அமைகின்றன. தீர்மானம் செய்யும் வழிமுறைளில் மூன்று முக்கிய சார்பு வகைகள் இருக்கின்றன.

1. தகுதி நிலை

2. செய்தியும், செய்தித் தொடர்பும்

3. உள்ளெண்ணம்.

இவைகள் பொதுவாக அரசாங்கத்தினுள் தீர்மானம் செய்பவர்களின் பங்குகளையும், நெறிகளையும், தீர்மானம் செய்யும் குறிப்பிட்ட அலகையும் குறிக்கும்.

(குறிப்புக்கான இடம்)

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று காரணிகளுள், "உள்நோக்கம்" அல்லது "உள்ளெண்ணம்" என்பதையே ஸ்டைனரும், பிரக்கும் மிக முக்கியமாக கருதுகின்றனர். தீர்மானங்களை விட ஏன் அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதனை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர். உதாரணமாக 1950ஆம் ஆண்டு கொரியாவில் படைகளைப் பயன்படுத்த அமெரிக்க அதிபர் ட்ருமன் தீர்மானித்தார். அதற்கு அடிப்படைக் காரணம் தென் கொரியா பொதுவுடைமையாளர்களிடம் சிக்கிவிடக் கூடாது என்பதே ஆகும். இக்காரணம் அவரது விருப்பத்தை வெளிப்படுத்திய போதிலும் அவரது உள்ளெண்ணம் பற்றி எதையும் சுட்டிக் காட்டுவதாக அமையவில்லை. தீர்மானக் கோட்பாட்டில் பொதுவாக, இந்த உள்ளெண்ணம் பற்றிய கருத்து தெளிவாகக் காணப்படவில்லை என்பதை மறுக்க முடியாது.

1. சினைடரின் தீர்மானம் அணுகுமுறையானது பல்வேறு வகைகளாகவும், சார்வு வகைகளாவும் வளர்ந்து அறிவாராய்ச்சி முறை சார்ந்ததாக இருக்கிறது. சினைடர் தீர்மானம் செய்பவர் மாற்றியமைக்க கூடிய எல்லா வகைகளையும் கருத்தில் கொண்டு தீர்மானம் செய்கிறார் என்று கூறவில்லை. தீர்மானம் செய்வதில், தீர்மானம் செய்பவர்களின் உள் நோக்கங்களையும் கவனிக்க வேண்டும்.
2. சினைடரின் தீர்மானம் செய்யும் அணுகுமுறை ஆய்வாளரையும் பொழுது போக்கு உளவியல் பகுப்பாய்வாளராகத் தீர்மானம் செய்பவர்களின் நடவடிக்கையிலுள்ள ஆளுமைக் கூறுகளையும், தனி வாழ்வத்தப்பெண்ணங்களையும், கட்டுப்படுத்த முடியாத தூண்டுதல்களையும் படிக்கச் செய்கிறது. ஆனால், ஆய்வாளர் தீர்மானம் செய்பவர்களின் தனிமனித உள்ளெண்ணங்களைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டியதில்லை. ஆய்வாளர் தீர்மானம் செய்பவர்களின் அரசியல் உள்நோக்கங்களை மட்டும் ஆய்வு செய்தால் போதும் என்கிறார்.
3. எல்லோரும் ஏற்றுக் கொள்கிற மாதிரி ஒரு கோட்பாட்டினை உருவாக்க சினைடர் தவறிவிட்டார் என்ற அளவில் சினைடரின் அணுகுமுறையைக் குறைகூறுகிறார்கள். சினைடர் பல்வேறு வகைகளையும், ஒருங்கிணைக்க முடியவில்லை. தீர்மானம் செய்வதற்கான வலுவலன மூலக்கூறுகளை சினைடர் பரிந்துரை செய்யவில்லை. ஏனெனில் தீர்மானம் செய்வதற்கான மூலக்கூறுகள் உள்சூழல் வெளிச்சூழல் மற்றும் அமைப்புச் சூழல்களுக்குத் தகுந்தவாறு மாறுபடும்.

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக்
அ)முறையமைவுக் கோட்பாடு என்றால் என்ன.
ஆ) முறையமைவுக் கோட்பாட்டின் அடிப்படைக்கருத்துக்கள் அறிதல்
இ) பொது முறையமைவுக் கோட்டினைவிளக்குக.
ஈ)பன்னாட்டு அரசியலில் முறையமைவுக் கோட்பாட்டின் பங்கை அறிக.

4. மனித வாழ்க்கையிலுள்ள எதார்த்தமான சூழ்நிலையில் சினைடர்ன தீர்மானம் செய்யும் அணுகுமுறை அமையவில்லை என்ற சிலர் கண்டனம் தெரிவிக்கின்றனர். தீர்மானம் செய்வதில் அரசியல் போட்டிகளின் விளைவுகளையும், அரசியலில் பங்கேற்பவர்களின் நிலைகளையும், தூண்டுதல்களையும் உள்ளெண்ணங்களையும் அல்லது மனித ஆளுமையின் பல்வேறு கூறுகளையும் கருத்தில் கொள்ளவில்லை.

மேற்கூறிய குறைபாடுகள் தீர்மானம் செய்யும் அணுகுமுறையிலிருந்தாலும், பன்னாட்டுத் தொடர்புகளைப் படித்து அறியவும், அரசியல் அறிவியலின் மற்ற கூறுகளைப் படித்தறிவிதலிலும் மிக அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

### 1.1.8 தொகுப்புரை.

இப்பகுதியில் பன்னாட்டு அரசியலின் தன்மை, பரப்பு மற்றும் நோக்கங்களைப்பற்றி தெளிவாக விளப்பட்டுள்ளன. மேலும் பன்னாட்டு அரசியலைப்பற்றி மார்கந்தோவின் நடைமுறைக் கோட்பாடு, பன்னாட்டு அரசியலின் முறையமைவுக் கோட்பாட்டின் பங்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம், கோட்பாடு விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

### 1.1.9.முக்கிய வார்த்தைகள்:

பன்னாட்டு அரசியல் — நாடுகளிடையே நிலவும் அரசியல்

உலக அரசு — பன்னாட்டு அரசியல்

தேசிய நலன்கள் — வெளிநாட்டு கொள்கையின் நிர்ணயம் செய்தல்

முறையமைவுக் கோட்பாட்டின் தந்தை – லாட்விக்வான் பெர்ட்டலன்பி.

### 1.1.10 இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள்.

Morgentau, M.J. Politics Amongnations (Scientific, 1979)

### 1.1.11 முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்களுக்கான பதில்கள்:

கேள்வி எண். 1 — பதில் எண். 1.1.1

கேள்வி எண். 2 — பதில் எண். 1.1.2

கேள்வி எண். 3 — பதில் எண். 1.1.3

கேள்வி எண். 4. — பதில் எண். 1.1.4

கேள்வி எண். 5. — பதில் எண். 1.1.5

கேள்வி எண். 6. — பதில் எண். 1.1.6

கேள்வி எண். 7. — பதில் எண். 1.1.7

(குறிப்புக்கான இடம்)

### 1.1.12 மாதிரி வினாக்கள்:

1. பன்னாட்டு அரசியலின் பொருள், தன்மை மற்றும் நோக்கம் பற்றி ஆராய்க.

2. மார்கந்தோவின் பன்னாட்டு அரசியல் பற்றிய செயற்பாட்டுக் கோட்பாட்டினை திறனாய்வு செய்க.

3. பொது முறையமைவுக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களையும் அதன் பயன்களையும் விளக்குக.

# அலகு – 2

## செய்தித்தொடர்புக் கோட்பாடு – ஆட்டக் கோட்பாடு – 1848 முதல் 1945 வரை பன்னாட்டு அரசியல்.

**முன்னுரை:**

இவ்வலகில் செய்தித்தொடர்பு கோட்பாடு பற்றிய கார்ல், டாஷ் என்பவரின் பகுப்பாய்வு மற்றும் சைபர் நெடிக்ஸ் மாதிரி படிவம் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் ஆட்டக் கோட்பாட்டின் (game theory) சச்சரவு மற்றும் பேரம் பேசல் ஆகியவைகளின் தனிவகை பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. வெஸ்ட்பேலியா முதல் வெர்சேல்ஸ் வரை ஐரோப்பிய அரசியல் (1871 முதல் 1919 வரை) முதல் உலகப் போர் – பாரீஸ் அமைதி மாநாடுகள் – வெர்சேல்ஸ் உடன்படிக்கை முதல் இரண்டாம் உலகப்போர் வரை மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

நோக்கங்கள்:

கார்ல், டாஷ் என்பவரின் செய்தித்தொடர்பு கோட்பாடு பற்றி கற்று உணர்தல். ஆட்டக்கோட்பாடு பற்றி புரிந்துகொள்ளுதல். 1848 முதல் 1945 வரை பன்னாட்டுஅரசியல் நிகழ்வுகளைக் கற்றறிதல்.

**அலகு வடிவமைப்பு:**

செய்தித்தொடர்பு கோட்பாடு

ஆட்டக்கோட்பாடு

ஆட்டக்கோட்பாட்டின் வகைகள்

காப்ளான் ஆட்டக் கோட்பாடு

ரிக்கர் ஆட்டக் கோட்பாடு

ஷெல்லிங் ஆட்டக் கோட்பாடு

வெஸ்ட்போலியோ சமாதான உடன்பாடு

வியன்னா உடன்பாடு

ஆங்கிலோ—ரஷ்யா ஒப்பந்தம்

ஐரோப்பிய அரசியல்

மும்முனை உடன்பாடு மற்றும் மும்முனை ஒப்பந்தம்

முதல் உலகப்போரின் விளைவுகள்

பாரீஸ் சமாதான மாநாடு

வெர்சேல்ஸ் உடன்படிக்கை

வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1919 – 1939)

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key words)

(குறிப்புக்கான இடம்)

இந்த அலகு தொடர்பான மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for futher studying )

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check yourprogress Questions)

மாதிரி வினாக்கள் (Model Questions)

## 2.1 செய்தித் தொடர்பு கோட்பாடு (Communication Theory )

அரசியல் செய்தித் தொடர்பு, அரசியல் முறையமைவிற்குத் தொடர்புடைய செய்திகள் எவ்வாறு பெறப்பட்டு, அனுப்பப்பட்டு, சேகரித்து வைக்கப்பட்டு நடைமுறைப்படுகின்றன என்ற குறையை விளக்குகிறது. செய்தித் தொடர்பு என்பது இவ்வாறு அரசியல், முறையமைவு கோரிக்கைகளையும், ஆதரவுகளையும் பெற்று, அதற்குத் தகுந்தபடி வெளிப்பாடுகளாகச் சட்டங்களை நிறைவேற்றுகிறது என்பதைப் பற்றியதாகும் முறையமைவு அதற்குத் தொடர்புடைய செய்திகளைப் பெற்று அலசி ஆராய்கிறது. மாறுபடும் சூழல்கள் தொடர்ந்து புதியகோரிக்கைகளை ஏற்படுத்தி முறைமைவிற்கு அனுப்புகின்றன. எவ்வளவு தூரம் கோரிக்கைகளின் சுமையைக் (Load) குறைக்க முடிகிறது என்பதைப் பொறுத்து முறையமைவின் வெற்றியயையும் செய்திகளை முறையமைவு பெற்று அதற்குத் தகுந்தபடி செயல்படுவதற்குள் காலம், இடைவெளி (lag) எனப்படும் பெறக்கூடிய செய்திகள் மாற்றப்பட்டோ, தவறாக அறியப்பட்டோ அரசியல் முறையமைவு செயல்படுவது மெய்மைத் திரிபு (Distortion) எனப்படுகின்றது. செய்திகளுக்குத் தகுந்தபடி அரசியல் முறையமைவு செயல்படுவது ஆதாயம் (Gain) எனப்படும். சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவானது, உள்ளீடுகளை வெளிப்பாடுகளாக மாற்றி அனுப்புவதைத் திரும்ப ஊட்டுதல் (Feed back) எனக் கூறுவர். திரும்ப ஊட்டும் செய்திகளுக்குத் தகுந்தபடி முறையமைவு செயல்புரிவதைப் பொறுத்துத் தான் அதன் வெற்றி தோல்வியிருக்கிறகு முறையமைவுக்கு அனுப்பப்படும் செய்திகள் சேகரித்து வைக்கப்பட்டு எதிர்காலத்தில் பயன்படுத்தப்படகின்றன.

கார்ல், டாசுஷ் அரசியல் செய்தித் தொடர்பு பகுப்பாய்வை, சைபர் நடிக்ஸ் (Cybernetics) மாதிரிப் படிவம் மூலமாக விளக்ககிறார். மனித, இயந்திர, மற்றும் சமூக முறையமைவுகளில் எவ்வாறு செய்தித் தொடர்பு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை சைபர் நெடிக்ஸ் ஆய்கிறது. கம்ப்யூட்டரின் செயல் முறைகள், அரசியல் தீர்மானம் செய்யும் முறையை ஒத்தவையாகும், ஆகையால் அரசியல் தீர்மானம் செய்யும் முறையை சைபர் நெடிக்ஸ் கூறும் பகுப்பாய்வின் மூலம் புரிந்தகொள்ளலாம், கார்ம்

டோஷ் எழுதியுள்ள (The Nerves of Government) என்ற புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள கருத்துப் படிவங்கள், செய்தித் தொடர்பு கோட்பாட்டியலின் மாதிர்ப் படிவமாக அமைந்த, அரசியல் தீர்மானம் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதை விளக்குகிறன.

அரசியல் என்பது சமூகக் குறிக்கோள்களை அடைவதற்காக மக்களின் சக்திகளை ஒன்று திரட்டுதல் ஆகும் என்று டோகஷ் கூறுகிறார். அவரைப் பொறுத்தவரை திறன் என்பது அரசியலில் சாரமோ அல்லது மையமோ ஆகாது. திறன் என்பது அரசியல் முறையமைவின் குறிக்கோளை அடைவதற்குள்ள ஒரு அரசியல் கூறாகும் மற்ற அரசியல் கூறுகளில் செல்வாக்கு சக்தி முதலியவை அடங்கும் எந்தவொரு அரசியல் கூறுபாடும் அரசியலுக்கு விளக்கம் தரமுடியாது. ஏனெனில் அரசியலைப் புரிந்து கொள்வதற்கு ஒரு அரசியல் கூறு மற்றொரு அரசியல் கூறுபாட்டின் மாற்றாகப் பயன்படுவதால் ஆகும் எல்லா அரசியல் கூறுகளும் அரசியல் முறையை விளக்குகின்ற. ஆனால் அரசியல் முறைகளுக்கு முழு விளக்கத்தை அளிக்கவில்லை எல்லா அரசியல் கூறுகளும் அரசியலைப் புரிந்து கொள்வதற்கு இரண்டாம் பட்சமாகத்தான் பயன்படுகின்றன.

டோகஷ் அரசியலை சைபர் நெடிக்ஸ் மாதிர்ப்படிவம் மூலம் விளக்குகிறார். ஒருவரை இதைச்செய் என்று கட்டாயப்படுத்துவதற்கு முன்பு எதைச்செய்ய வேண்டுமென்ற செய்திகளை முன்பே அனுப்பி, அவர் புரிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். ஒரு அதிகாரி கீழ்நிலைப் பணியாளரோடு எவ்வாறு தொர்புகொள்ள வேண்டுமென்று தெரியாவிட்டால், அவ்வதிகாரி கீழ்நிலைப் பணியாளர்கள், மேல் அதிகாரி எதைச் செய்யச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால், அவர்களால் செவ்வனே செயல்பட முடியாது. இதனால் தான் டோகஷ் அரசியல் கோட்பாட்டின் அறிஞர்கள் மனித சக்திகளை ஒன்று திரட்டிச் செயல் செய்வது எப்படி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்கிறார். கோட்பாட்டின் அறிஞர்கள் மனித சக்திகளை ஒன்று திரட்டிச் செயல் செய்வது எப்படி என்பதைப் புரிந்த கொள்ள வேண்டுமென்கிறார்.

டோகஷ் சைபர்நெடிக்ஸ் மாதிரிப் படிவத்தில் பயன்படுத்தும் கருத்துப் படிவங்களிலிருந்து கீழ்க்கண்டநான்கு வினாக்களை எழுப்புகிறார்.

1. ஒரு அரசியல் தீர்மான முறையைவின் சுமை (Load) எவ்வளவு? அரசாங்கம் எவ்வளவு? சீக்கிரமாக அரசியல் முயைமைவின் சுமையைக் குறைக்கவல்லது?
2. புதிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் கால இடைவெளி எவ்வளவு?
3. புதிய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதால் உள்ள ஆதாயம் என்ன?

4. எவ்வளவு தூரம் அரசாங்கம் புதிய பிரச்சனைகளை அனுமானித்துச் செயல்பட முடிகிறது?

மேற்கூறிய வினாக்களின் அடிப்படையில் டோசுஷ் அப்படைக் கருத்துப்படிவங்களை அமைத்திருக்கிறார். டோசுஷின் அடிப்படைக்குருக்துப் படிவம் கற்கும் வலை (Learning net) ஆகும். கற்கும் வலை என்பது ஒரு முறையமைவு, எவ்வாறு செய்திகளை அனுப்பீடு செய்து செயல்படுகிறது என்பததைக் குறிக்கும். சமூக அமைப்புகள் தனிமனிதர்களிடையே சொற்கள் அனுப்பீடு செய்து செயல்படுகின்றன. மின்சாரக் கருவிகளும் ஒரே மாதிரி செயல்படுகின்றன. சூழல்களுக்குத் தகுந்தபடி சமூக அமைப்புகளும் மின்சாரக் கருவிகளும் செய்திகளை அனுப்பீடு செய்து அனுசரித்துக் கொள்கின்றன. ஆக அரசியல் என்பது திரும்ப ஊட்டலுக்குத் தகுந்தபடி குறிக்கோளை அடையும் முறை என அறியப்படுகிறது. அரசியலில் குறிக்கோளை அடையும் முறையிலிருந்து இந்திர மூலமாகக் குறிக்கோளை அடையும் முறை கீழ்க்கண்ட நான்கு காரணங்களுக்காக மாறுபட்டதாகும்.

1. குறிக்கோளை அடையும் முறையும் முறையமைவின் புறத்திலிருந்து குறிக்கோள்கள் அனுப்பப்படுகின்றன.
2. அரசியல் முறையமைவு சிறந்த முறையில் குறிக்கோளை அடைய திரும்ப ஊட்டும் செய்திகளைப் பொறுத்திருக்கிறது. ஏனெனில் முறையமைவு, சூழலிருந்து தனித்தியங்குகிறது.
3. அரசியல் குறிக்கோள் மாறலாம்.
4. அரசியல் குறிக்கோள்களை பல்வேறு வழிகளில் அடையலாம். கற்கும் வலைகள் கீழ்க்கண்ட மூன்று அடிப்படைக் கூறுகளைப் பெற்றிருக்கின்றன.

   1. கருத்துக்களை ஏற்று கொள்பவர் (Receptors) சூழலிலிருந்து செய்திகளைச் சேகரிப்பவர்கள்.
   2. செயல் முடிப்பவர்கள் (Effectors) தீர்மானங்களை நிறைவேற்றுபவர்கள்.
   3. திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகள் (Feed back controls) குறிக்கோளை அடைவதில் தீர்மானங்களின் விளைவுகளை முறையமைவிற்கு அறிவிப்பார்கள்.

கருத்துக்களை ஏற்றுக் கொள்பவர்களை செயல் முடிப்பவர்கள் திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகள் கற்கும் வலையைத் தனித்துச் செயல்படச்செய்கின்றன. இதனால் கற்கும் வகைகள் சேகரித்து வைத்துள்ள செய்திகளுக்குத் தகுந்தபடி குறிக்கோள்களை மாற்றவோ,

திரும்ப ஊட்டுதல்களைத் திருத்தியமைக்கவோ முடிகின்றன. சுயேச்சை முறையமைவுகள் மூன்று வகையான செய்திகளைப் பெறுகின்றன. முதலாவதாக கற்கும் வலைகள் அவைகளுடைய சூழல்களைப் பற்றிய செய்திகளைப் பெறுகின்றன. இரண்டாவதாக கற்கும் வலைகள் அவைகளைப் பற்றிய செய்திகளைப் பெறுகின்றன. மூன்றாவதாக கற்கும் வலைகள் அவைகளைப் பற்றிய செய்திகளைப் பெறுகின்றன. இச்செய்திகளைப் பெறுவதின் மூலம் கற்கும் வவைகள் தங்களது குறிக்கோள்களை, சூழல்களுக்குத் தகுந்தபடி மாற்றிகொள்ள வேண்டும். ஐந்து வகைகளில் ஒரு முறையமைவு தோல்வியடையலாம்.

1. குறிக்கோளை அடைவதற்கான திறன், தீர்மான முறையமைவிற்கு இல்லாமமை.
2. முறையமைவின் குறிக்கோளை அடைவதற்குச் தகுந்த செய்திகளைச் அடிப்படையில் செயல்களையோ வகுக்க முடியாமை.
3. செய்திகளின் அடிப்படையில் கொள்கைகளையோ, கொள்கைகளின் அடிப்டையில் செயல்களையோ வகுக்க முடியாமை.
4. பழைய அனுபவத்திலிருந்து கிடைத்த படிப்பனைகளை நிலைவுபடுத்திக் கொள்ளாமை.
5. சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைத் பெறமுடியாமை.

முறையமைவின் தோல்விக்கான ஐந்து காரணங்களும் கற்கும் வலையின் மூன்று அடிப்படைக் கூறுகளான கருத்துக்களை ஏற்றுக்கொள்பவர்களையம் செயல் முடிப்பவர்களையும் திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகளையும் ஒத்தவை. கற்கும் வலையில் செயல் முடிப்பவர்கள் தேல்வியடைவதற்குக் காரணம், குறிக்கோளையடைவதற்கான திறன் இல்லாமையாலும், செயல்களையோ வகுக்க முயைாமையாலும் ஆகும் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர்கள் தோல்வியடைவதற்குக் காரணம் குறிக்கோளை அடைவதற்குத் தகுந்த செய்திகளைத் திரட்ட முடியாமையும் படைய அனுபவத்திலிருந்து படிப்பினைகளை நினைவு படுத்திக் கொள்ளாமையாலும் ஆகும். திரும்ப ஊட்டும் கட்பாடுகள் தோல்வியடைவதற்குதக் காரணம், சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைப் பெற முடியாமையாகும்.

கற்கம் வலையின் தேர்விக்கு முக்கிய காரணம் செய்திகளை முழுவதுமாக அறிந்து கொள்ள முடியாமையாகும். இப்பிரச்சனை முறையமைவின் தோல்விக்குக் காரணமாகும் ஒரு மறையமைவு தோல்வியடைவதற்குக் காரணம் முழுச் செய்திகளும் கிடைக்கப் பெறாமையாகும். முறையமைவு திறனற்றும் சூழல்களுக்குத் தகுந்த மாற்றிக்கொள்ள முடியாமையுமாக இருத்தல் செய்திகள் முழுவதமாக கிடைக்கப் பெறாததாலாகும்.

(குறிப்புக்கான இடம்)

முறையமைவு தோல்வி முறைக்கும் மரபுவழி கருத்துப் படிவாமன முறைக்கும் தொடர்பு உண்டு. குறிக்கோளை அடைவதற்கான திறன் இல்லாமை, எதிர்காலத்தை முன்னிட்டு தற்காலத்தை உயர்த்தி மதிப்பிடம் முறையினாலாகும். முறைமையவின் குறிக்கோளை அடைவதற்குத் தகுந்த செய்திகளைச் சேகரிக்க முடியாமை. தற்போதைய அனுபவத்திலிருந்து பழையவற்றை உயர்த்தி மதிப்பிடும் முறைக்கொப்பாகும். செய்திகளின் அடிப்படையில் கொள்கைகளையோ, கொள்கைகளின் அடிப்படையில் செயல்களையோ வகுக்க முடியாததற்கு பணியை ஒப்படும்போது அமைப்பை அதிகமாக மதிப்பீடு செய்த முறைக்கு ஒப்பிடலாம். பழைய அனுபவப் படிப்பினைகளை நினைவுபடத்திக் கொள்ளாமையை, பழைய குறிப்புகளைப் புதிய முறைகளைப் பயன்படுத்தி அப்புதிய குறிப்புகளுடன் இணைந்து மதிப்பீடு செய்யும் முறையை ஒப்பிடலாம். சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைப் பெறமுடியாமையை நீண்டகாலக் குறிக்கோளை அடைவதற்குக் குறிப்பிட்ட புதிய பணிகளை ஏற்றுக்கொள்வதை ஒப்பிடலாம்.

சுருங்கக்கூறின் 'ஒரு அமைப்பின் சூழல்கள்' பழைய முறைகள் புதிதாக ஏற்றுக்கொண்ட பணிகள், உள்ளமைப்பு முதலியவைகளை ஒப்படும்பொழுது அவ்வமைப்பு அதிகமாக மதிப்பீட செய்வதால் ஒரு முறையமைவு தோல்வியடைகிறது.

ஒவ்வொரு மனித அமைப்பிலும் இரண்டு வகையான ஆற்றுப் பயிற்சிகள் இருக்கின்றன என்று டோசுஷ் கருதுகிறார். 1) ஒரு அமைப்பு தொடர்ந்து இயங்க குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான ஆற்றுப் பயிற்சி 2) ஒரு அமைப்பு குறிக்கோள்களைள் அடைவதற்குத் தகுந்தபடி அவ்வமைப்பைப் பராமரிக்கும் ஆற்றுப் பயிற்சி ஒரு முமறையமைவு தோல்வியடைவதற்குக் காரணம். குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்குத் தகுந்தபடி ஒரு அமைப்பு பராமரிக்கப்படாததால் ஆகும். டோசுஷ் அரசியலை அருள் என்ற கருத்துப்படிவத்தின் வழிகாட்டியாக அணுக மனநிலை என்று டோசுஷ் அரசியலை அருள் என்ற கருத்துப்படித்தின் வழிகாட்டியாக அணுக வேண்டுமென்கிறார். உலகத்தை பொதுநலக் கண்ணோட்டத்தோடு அணுகுவதை அருள் (grace) மனநிலை என்று டோசுஷ் குறிப்பிடுகிறார். டோசுஷ் மூன்று வகையான அருள் மனநிலையைக் குறிப்பிடுகிறார். அவையாவன:

1) தனித்தன்மைய் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொரு தனி மனிதனும் அல்லது அதிகாரியும் அன்றாடப் பணிகளைச் செய்தால் மட்டும் போதாது என்பதை உணர வேண்டும்.
2) ஒவ்வொரு தனிமனிதனும் அல்லது. அதிகாரியும், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய மூலகாரணக் கூறுகள் (data) உலகில்

உள்ளன. ஆனால் அவைகள், இதுவரை முழுவதும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உணரவேண்டும்.

3) முறையமைவில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அனுபவம் கூறுகிறது. புதிய அனுபவத்திற்கேற்ப புதிதான அமைப்புகளை ஆளமையையும் பெறவேண்டுமென்பதை உணர வேண்டும்.

கடந்து இருபது ஆண்டுகளில் செய்தி தொடர்பு கோட்பாடு பன்னாட்டு அரசியலில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கோட்பாடு இத்தகைய ஒரு நிலைக்கு வந்ததற்கு முக்கியக் காரணம் கார்ல் டாசுஷ் ஆவார்.

இதுவரை நாம் மேலே கண்டது செய்தி தொடர்பு கோட்பாட்டின் அடிப்படைப் பண்புகளும் அதன் படிவமுமே ஆகும். இதைப் பன்னாட்டு அரசியலை அணுகிக் கற்பதற்கு பயன்படும் வகையில் அதில் சில புதிய கருத்துக்களும் இணைக்கபடப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறையை பயன்படுத்தி நாடுகளிடையே காணப்படும் உறவுமுறையின் தன்மை பன்னாட்டு அரங்கில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளின் தன்மைகள், மற்றும் உலகக் கட்டுப்பாட்டு அமைப்பு பற்றி எல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் கற்கமுடியும். உதாரணமாக அமெரிக்காவின் வியட்நாம் கொள்கை தோல்வியுறக் காரணமாக திரும்ப ஊட்டும் கருவிகளைக் (feed back mechanism)கூறலாம். கொள்கைகளை சரியான வழியில் இழுத்துச் செல்லக் கூடிய இக்கருவி சரியாகச் செயல்படாமல் போனதால் அமெரிக்கா தவறான முடிவுகளை எடுக்க நேரிட்டது எனக்கொள்ளலாம்.

நாடுகளிடையே காணப்படும் உறவின் நெருக்கத்தை அளப்பதற்கு இக்கோட்பாட்டாளர்கள் என்ற ஒரு அட்டவணையைத் தயார் செய்துள்ளார்கள் செய்தித் தொடர்பு கோட்பாடு, அந்நாடுகளிடையே நல்ல உறவு இருப்பதாகவும் நல்லுறவுகள் வளர்ந்து வருவதாகவும் கூறுகின்றது. அதேபோல், இத்தொடர்பகள் குறைந்து காணப்பட்டால் அவ்வளவு நல்லுறவு இருப்பதாகக் கருதமுடியாது எனக் கூறுகிறது.

இத்தகைய செய்தித் தொடர்புகள் என்பது வியாபாரம், இடம் பெயர்தல், சுற்றுலா, ஆட்பரிமாற்றங்கள், கடிதப்போக்குவரத்து, தொலைபேசித் தொடர்புகள் போன்றவற்றை குறிக்கும் இநிகழ்ச்சிகள் மூலமாக செய்திப பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பரிமாற்றங்களை அளப்பதற்கு உதவியாகத்தான் (Relative Acceptance Index) உருவாக்கப்ட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள அந்த அட்டவணையில் ஒவ்வொரு வகையன பரிமாற்றங்களுக்க ஏற்ற வகையில் மதிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(குறிப்புக்கான இடம்)

இதனைப் பயன்படுத்தி இருநாடுகளிடையே காணப்படும் உறவின் தன்மையை அறிந்து கொள்ளமுடியும். உதாரணமாக அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே இன்று மிக நெருங்கிய நல்லுறவு காணப்படகிறது. இதற்குக் காரணமாக அந்நாடுகளிடையே காணப்பட்ட, காணப்பட்டு வரும் அதிக அளவிலான செய்திப் பரிமாற்றங்கள் தான் என இக்கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே இரு நாடுகளிடையே நல்லுறவுகள் மலர்வதற்கு செய்திப்பரிமாற்றங்கள் இன்றியாமையாதத என்பது இக்கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும்.

எனினும், இக்கோட்பாடு ஒரு அடிப்படைப் பிரச்சனையைக் கொண்டுள்ளது. உறவுகள் மலர்வதற்கு செய்திப்பரிமாற்றங்கள் அடிப்படையா அல்லது, செய்திப்பரிமாற்றங்கள் அதிகரிப்பதற்கு நல்லுறவு அடிப்படையா என்ற வினாவிற்கு இன்னும் தக்க விடை கண்டறியப் படவில்லை. எனவே இதனடிப்படையில் இக்கோட்பாடு வெகுவாக விமர்ச்சிக்கப்பட்டு வருகிறது.

டோக்ஷின் செய்தித் தொடர்பு மாதிர்ப் படிவம் மேலும் பல காரணங்களுக்காக் குறை கூறப்படுகிறது. முதலாவதாக அது தீர்மனம் செய்வதின் முறைகளுக்கு கொடுத்து, தீர்மானங்களின் விளைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எப்படிச் செய்திகள் அனுப்பீடு செய்யப்படுகின்றன என்பதற்கும் அமைப்புகளின் தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கபட்டிருக்கிறதே தவிர செய்திகளின் சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக டோரிக்ஷின் செய்தித் தொடர்பு கோட்பாட்டியல் மூலமாக முறையமைவு பராமரிப்பைப் பற்றி நல்லமுறையிலும் முறையமைவில் படிப்படியாக மாற்றம் ஏற்படுவதை சிரமத்துடனும், முறையமைவில் ஏற்படும் புரட்சி பரிமானமாற்றத்தைப் பற்றி மிக அதிகக் கக்ஷ்டத்துடனும் தான் கற்றறிய முடியும் மூன்றாவதாக மாதிரிப் படிவத்தை நடைமுறைப்படுத்துவதின் முக்கிய நோக்கம் செயற்கரிய செயல்களைச் சுலபமாக விளக்குவதற்குக்தான் டோக்ஷின் மாதிப் படிவத்தைப் பொறுத்தவரை மாதிரிப்படிவத்தைப் புரிந்த கொள்வதே கக்ஷ்டடமாக இருக்கிறது. இறுதியாக டோக்ஷின் மாதிரிப் படிவம் அரசாங்க நடைமுறையைப் பற்றி சில முக்கிய வினாக்களை எழுப்பினாலும், அவைகளுக்கு விடை காணத் தகுந்த முறையாக அமையவில்லை.

கோட்பாட்டின் அறிஞர்கள் மனித சக்திகளை ஒன்று திரட்டிச் செயல் செய்வது எப்படி என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்கிறார். டோஷ் சைபர்நெடிக்ஸ் மாதிரிப் படிவத்தில் பயன்படுத்தும் கருத்துப் படிவங்களிலிருந்து கீழ்க்கண்ட நான்கு வினாக்களை எழுப்புகிறார்.

1. ஒரு அரசியல் தீர்மான முறையமைவின் சுமை (Load) எவ்வளவு? அரசாங்கம் எவ்வளவு சீக்கிரமாக அரசியல் முறையமைவின் சுமையைக் குறைக்கவல்லது?
2. புதிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் கால இடைவெளி எவ்வளவு?
3. புதிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதால் உள்ள ஆதாயம் என்ன?
4. எவ்வளவு தூரம் அரசாங்கம் புதிய பிரச்சனைகளை அனுமானித்துச் செல்பட முடிகிறது.

மேற்கூறிய வினாக்களின் அடிப்படையில் டோஷ் அடிப்படைக் கருத்துப் படிவங்களை அமைந்திருக்கிறார். டோஷின் அடிப்படைக் கருத்துக் படிவம் கற்கும் வலை (Learning net) ஆகும். கற்கும் வலை என்பது ஒரு முறையமைவு, எவ்வாறு செய்திகளை அனுப்பீடு செய்து செயல்படுகிறது என்பதைக் குறிக்கும். சமூக அமைப்புகள் தனிமனிதர்களிடையே சொற்கள் அனுப்பீடு செய்து செயல்படுகின்றன. மின்சாரக் கருவிகள் மூலம் செயல்படுகின்றன சமூக அமைப்புகளும், மின்சாரக் கருவிகளும் ஒரே மாதிரி செயல்படுகின்ற சூழல்களுக்குத் தகுந்தபடி சமூக அமைப்புகளும் மின்சாரக் கருவிகளும் செய்திகளை அனுப்பீடு செய்து அனுசரித்துக் கொள்கின்றன. ஆக அரசியல் என்பது திரும்ப ஊட்டலுக்குத் தகுந்தபடி குறிக்கோளை அடையும் முறை என அறியப்படுகிறது. அரசியலில் குறிக்கோளை அடையும் முறையிலிருந்து இயந்திர மூலமாகக் குறிக்கோளை அடையும் முறை கீழ்க்கண்ட நான்கு காரணங்களுக்காக மாறுபட்டதாகும்.

1. குறிக்கோளை அடையும் முறையமைவின் புறத்திலிருந்து குறிக்கோள்கள் அனுப்பப்படுகின்றன.
2. அரசியல் முறையமைவு சிறந்த முறையில் குறிக்கோளை அடைய திரும்ப ஊட்டும் செய்திகளைப் பொறுத்திருக்கிறது. ஏனெனில் முறையமைவு, சூழலிருந்து தனித்தியங்குகிறது.
3. அரசியல் குறிக்கோள் மாறலாம்.
4. அரசியல் குறிக்கோள்கைளை பல்வேறு வழிகளில் அடையலாம்.

கற்கும் வலைகள் கீழ்க்கண்ட மூன்று அடிப்படைக் கூறுகளைப் பெற்றிருக்கின்றன.

1. கருத்துக்களை ஏற்று கொள்பவர்கள் (Receptors) சூழலிலிருந்து செய்திகளைச் சேகரிப்பவர்கள்.

(குறிப்புக்கான இடம்)

2. செயல் முடிப்பவர்கள் (Effectors) தீர்மானங்களை நிறைவேற்றுபவர்கள்.
3. திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகள் (Feed back Controls) குறிக்கோளை அடைவதில் தீர்மானங்களின் விளைவுகளை முறையமைவிற்கு அறிவிப்பார்கள்.

கருத்துக்களை ஏற்றுக்கொள்பவர்கள் செயல்முடிப்பவர்கள் திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகள் கற்கும் வலையைத் தனித்துச் செயல்படச் செய்கின்றன. இதனால் கற்கும் வகைகள் சேகரித்து வைத்துள்ள செய்திகளுக்குத் தகுந்தபடி குறிக்கோள்களை மாற்றவோ, திரும்ப ஊட்டுதல்களைத் திருத்தியமைக்கவோ முடிகின்றன. சுயேச்சை முறையமைவுகள் மூன்று வகையான செய்திகளைப் பெறுகின்றன. முதலாவதாக கற்கும் வலைகள் அவைகளுடைய சூழல்களைப் பற்றிய செய்திகளைப் பெறுகின்றன. இரண்டாவதாக கற்கும் வலைகள் அவைகளைப் பற்றிய பல செய்திகளைப் பெறுகின்றன. மூன்றாவதாக கற்கும் வலைகள் அவைகளைப் பற்றிய செய்திகளைப் பெறுகின்றன. இச்செய்திகளைப் பெறுவதின் மூலம் கற்கும் வலைகள் புதிய மாற்றங்களுக்குத் தகுந்தபடி தங்களைப் பராமரித்துக்கொள்ள முடியும். கற்கும் வலைகள் புதிய மாற்றங்களுக்குத் தகுந்தபடி தங்களைப் பராமரித்துக்கொள்ளமுடியும். கற்கும் வலைகள் தங்களது குறிக்கோள்களை, சூழல்களுக்குத் தகுந்தபடி மாற்றிகொள்ள வேண்டும் ஐந்து வகைகளில் ஒரு முறையமைவு தோல்வியடையலாம்.

1. குறிக்கோளை அடைவதற்கான திறன், தீர்மான முறையமைவிற்கு இல்லாமை.
2. முறையமைவின் குறிக்கோளை அடைவதற்குத் தகுந்த செய்திகளைச் சேகரிக்க முடியாமை.
3. செய்திகளின் அடிப்படையில் கொள்கைகளையோ, கொள்கைகளின் அடிப்படையில் செயல்களையோ வகுக்க முடியாமை.
4. பழைய அனுபவத்திலிருந்து கிடைத்த படிப்பினைகளை நினைவுபடுத்திக் கொள்ளாமை.
5. சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைத் பெறமுடியாமை.

முறையமைவின் தோல்விக்கான ஐந்து காரணங்களுக்கும் கற்கும் வலையின் மூன்று அடிப்படைக் கூறுகளான கருத்துக்களை ஏற்றுக்கொள்பவர்களையும் செல் முடிப்பவர்களையும் திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகளையும் ஒத்தவை. கற்கும் வலையில் செயல்முடிப்பவர்கள் தோல்வியடைவதற்குக் காரணம், குறிக்கோளையடைவதற்கான திறன் இல்லாமையாலும், செய்திகளின் அடிப்படையில் கொள்கைகளையோ, கொள்கைகளின் அடிப்படையில் செயல்களையோ வகுக்க முடியாமையாலும் ஆகும் கருத்துக்களை ஏற்றுக், கொள்பவர்கள்

(குறிப்புக்கான இடம்)

தோல்வியடைவதற்குக் காரணம் குறிக்கோளை அடைவதற்குத் தகுந்த செய்திகளைத் திரட்ட முடியாமையும் பழைய அனுபவத்திலிருந்து படிப்பினைகளை நினைவுபடுத்திக் கொள்ளாமையாலும் ஆகும். திரும்ப ஊட்டும் கட்டுப்பாடுகள் தோல்வியடைவதற்குக் காரணம், சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைப் பெற முடியாமையாகும்.

கற்கும் வலையின் தோல்விக்கு முக்கிய காரணம் செய்திகளை முழுவதுமாக அறிந்துகொள்ள முடியாமையாகும். இப்பிரச்சினை முறையமைவின். தோல்விக்குக் காரணமாகும் ஒரு முறையமைவு தோல்வியடைவதற்குக் காரணம் முழுச் செய்திகளும் கிடைக்கப் பெறாமையாகும். முறையமைவு திறனற்றும் சூழல்களுக்குத் தகுந்த மாற்றிக்கொள்ள முடியாமையுமாக இருத்தல் செய்திகள் முழுவதுமாக கிடைக்கப் பெறாததாலாகும்.

முறையமைவு தோல்வி முறைக்கும் மரபுவழி கருத்துப் படிவமான முறைக்கும் தொடர்பு உண்டு. குறிக்கோளை அடைவதற்கான திறன் இல்லாமை, எதிர்காலத்தை முன்னிட்டு தற்காலத்தை உயர்த்தி மதிப்பிடும் முறையினாலாகும். முறையமைவின் குறிக்கோளை அடைவதற்குத் தகுந்த செய்திகளைச் சேகரிக்க முடியாமை. தற்போதைய அனுபவத்திலிருந்து பழையவற்றை உயர்த்தி மதிப்பிடும் முறைக்கொப்பாகும். செய்திகளின் அடிப்படையில் கொள்கைகளையோ, கொள்கைகளின் அடிப்படையில் செயல்களையோ வகுக்க முடியாததற்கு பணியை ஒப்பிடும் போது அமைப்பை அதிகமாக மதிப்பீடு செய்த முறைக்கு ஒப்பிடலாம். பழைய அனுபவப் படிப்பினைகளை நினைவுபடுத்திக் கொள்ளாமையை, பழைய குறிப்புக்களைப் புதிய முறைகளைப் பயன்படுத்தி அப்புதிய குறிப்புகளுடன் இணைந்து மதிப்பீடு செய்யும் முறையை ஒப்பிடலாம். சூழல்களுக்குத் தகுந்தபடி முறையமைவு மாற்றத்தைப் பெற முடியாமையை நீண்டகாலக் குறிக்கோளை அடைவதற்குக் குறிப்பிட்ட புதிய பணிகளை ஏற்றுக்கொள்வதை ஒப்பிடலாம். சுருங்கக்கூறின், “ஒரு அமைப்பின் சூழல்கள்” பழைய முறைகள் புதிதாக ஏற்றுக்கொண்ட பணிகள், உள்ளமைப்பு முதலியவைகளை ஒப்பிடும் பொழுது அவ்வமைப்பு அதிகமாக மதிப்பீடு செய்வதால் ஒரு முறையமைவு தோல்வியடைகிறது.

ஒவ்வொரு மனித அமைப்பிலும் இரண்டு வகையான ஆற்றுப் பயிற்சிகள் இருக்கின்றன என்று டோஷ் கருதுகிறார். 1) ஒரு அமைப்பு தொடர்ந்து இயங்க குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான

(குறிப்புக்கான இடம்)

ஆற்றுப்பயிற்சி 2) ஒரு அமைப்பு குறிக்கோள்களை அடைவதற்குத் தகுந்தபடி அவ்வமைப்பைப் பராமரிக்கும் ஆற்றுப்பயிற்சி இவை இரண்டும் ஒரு முறையமைவு தோல்வியடைவதற்குக் காரணம் ஆகும். குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்குத் தகுந்தபடி ஒரு அமைப்பு பராமரிக்கப்படாததால் ஆகும். டோஷ் அரசியலை அருள் என்ற கருத்துப்படிவத்தின் வழிகாட்டியாக அணுக வேண்டுமென்கிறார். உலகத்தைப் பொதுநலக் கண்ணோட்டத்தோடு அணுகுவதை அருள் (grace) மனநிலை என்று டோஷ் குறிப்பிடுகிறார். டோஷ் மூன்று வகையான அருள் மனநிலையைக் குறிப்பிடுகிறார் அவையாவன:

1. தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொரு தனி மனிதனும் அல்லது அதிகாரியும் அன்றாடப் பணிகளைச் செய்தால் மட்டும் போதாது என்பதை உணரவேண்டும்.
2. ஒவ்வொரு தனிமனிதனும் அல்லது அதிகாரியும், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய மூலகாரணக் கூறுகள் (data) உலகில் உள்ளன. ஆனால் அவைகள், இதுவரை முழுவதும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உணரவேண்டும்.

கடந்த இருபது ஆண்டுகளில் செய்தி தொடர்பு கோட்பாடு பன்னாட்டு அரசியலில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கோட்பாடு இத்தகைய ஒரு நிலைக்கு வந்ததற்கு முக்கியக் காரணம் கார்ல் டாஷ் ஆவர்.

இதுவரை நாம் மேலேகண்டது செய்தித் தொடர்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பண்புகளும் அதன் படிவமுமே ஆகும். இதைப் பன்னாட்டு அரசியலை அணுகிக் கற்பதற்கு பயன்படும் வகையில் அதில் சில புதிய கருத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறையை பயன்படுத்தி நாடுகளிடையே காணப்படும் உறவுமுறையின் தன்மை பன்னாட்டு அரங்கில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளின் தன்மைகள், மற்றும் உலகக் கட்டுப்பாட்டு அமைப்பு பற்றி எல்லாம் விரிவாகவும், தெளிவாகவும் கற்கமுடியும். உதாரணமாக அமெரிக்காவின் வியட்நாம் கொள்கை தோல்வியுறக் காரணமாக திரும்ப ஊட்டும் கருவிகளைக் (feed back mechanism) கூறலாம். கொள்கைகளை சரியான வழியில் இழுத்துச் செல்லக்கூடிய் இக்கருவி சரியாகச் செயல்படாமல் போனதால் அமெரிக்கா தவறான முடிவுகளை எடுக்க நேரிட்டது எனக்கொள்ளலாம்.

(குறிப்புக்கான இடம்)

நாடுகளிடையே காணப்படும் உறவின் நெருக்கத்தை அளப்பதற்கு இக்கோட்பாட்டாளர்கள் என்ற ஒரு அட்டவணையைத் தயார் செய்துள்ளார்கள். செய்தித் தொடர்பு கோட்பாடு, நாடுகளிடையே செய்தித் தொடர்புகள் அதிகமாகக் காணப்பட்டாலும், அது வளர்ந்து வந்ததாலும் அந்நாடுகளிடையே நல்ல உறவு இருப்பதாகவும் நல்லுறவுகள் வளர்ந்து வருவதாகவும் கூறுகின்றது. அதேபோல், இத்தொடர்புகள் குறைந்து காணப்பட்டால், அவ்வளவு நல்லுறவு இருப்பதாகக் கருதமுடியாது எனக்கூறுகிறது.

இத்தகைய செய்தித் தொடர்பு என்பது வியாபாரம். இடம் பெயர்தல், சுற்றுலா, ஆட்பரிமாற்றங்கள், கடிதப் போக்குவரத்து, தொலைபேசித்தொடர்புகள் போன்றவற்றைக் குறிக்கும்.

இந்நிகழ்ச்சிகள் மூலமாக செய்திப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பரிமாற்றங்களை அளப்பதற்கு உதவியாகத்தான் (Relative Acceptance Inder) உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள அந்த அட்டவணையில் ஒவ்வொரு வகையான பரிமாற்றங்களுக்கு ஏற்ற வகையில் மதிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி இருநாடுகளிடையே காணப்படும் உறவின் தன்மையை அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே இன்று மிக நெருங்கிய நல்லுறவு காணப்படுகிறது. இதற்குக் காரணமாக அந்நாடுகளிடையே காணப்பட்ட, காணப்பட்டு வரும் அதிக அளவிலான செய்திப் பரிமாற்றங்கள் தான் என இக்கோட்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, இரு நாடுகளிடையே நல்லுறவுகள் மலர்வதற்கு செய்திப் பரிமாற்றங்கள் இன்றியமையாதது என்பது இக்கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகும். எனினும், இக்கோட்பாடு ஒரு அடிப்படைப் பிரச்சனையைக் கொண்டுள்ளது. உறவுகள் மலர்வதற்கு செய்திப்பரிமாற்றங்கள் அடிப்படையா அல்லது செய்திப்பரிமாற்றங்கள் அதிகரிப்பதற்கு நல்லுறவு அடிப்படையா என்ற வினாவிற்கு இன்னும் தக்க விடை கண்டறியப்படவில்லை. எனவே இதனடிப்படையில் இக்கோட்பாடு வெகுவாக விமர்ச்சிகப்பட்டு வருகிறது.

டோஷின் செய்தித் தொடர்பு மாதிரிப் படிவம் மேலும் பல காரணங்களுக்காகக் குறை கூறப்படுகிறது. முதலாவது அது தீர்மானம் செய்வதின் முறைகளுக்கு கொடுத்து, தீர்மானங்களின் விளைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எப்படிச் செய்திகள் அனுப்பீடு செய்யப்படுகின்றன என்பதற்கும் அமைப்புகளின் தன்மைக்கும்

குறிப்புக்கான இடம்)

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, செய்திகளின் சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக டோரிஷின் செய்தித் தொடர்பு கோட்பாட்டியல் மூலமாக முறையமைவு பராமரிப்பைப் பற்றி நல்லமுறையிலும் முறையமைவில் படிப்படியாக மாற்றம் ஏற்படுவதை சிரமத்துடனும், முறையமைவில் ஏற்படும் புரட்சி பரிமானமாற்றத்தைப் பற்றி மிக அதிகக் கஷ்டத்துடனும் தான் கற்றறிய முடியும். மூன்றாவதாக மாதிரிப் படிவத்தை நடைமுறைப்படுத்துவதின் முக்கிய நோக்கம் . செயற்கரிய செயல்களைச் சுலபமாக விளக்குவதற்குத்தான் டோஷின் மாதிரிப் படிவத்தைப் பொறுத்தவரை மாதிரிப்படிவத்தைப் புரிந்து கொள்வதே கஷ்டமாக இருக்கிறது. இறுதியாக டோஷின் மாதிரிப் படிவம் அரசாங்க நடைமுறையைப் பற்றி சில முக்கிய வினாக்களை எழுப்பினாலும், அவைகளுக்கு விடை காணத் தகுந்த முறையாக அமையவில்லை.

## 2.1.1. ஆட்டக்கோட்பாடு

ஆட்டக் கோட்பாடு (game theory) சச்சரவு மற்றும் பேரம் பேசல் ஆகியவைகளின் தனிவகை பகுப்பாய்வாகும். ஆட்டக் கோட்பாட்டியலிற்கு இவ்வாறு இலக்கணம் கூறலம். சச்சரவு மற்றும் போட்டியுள்ள சூழ்நிலைகளில் ஒவ்வொரு பங்கேற்பாளரும் அல்லது ஆட்டக்காரரும் நன்மைகளைப் பெருக்கவும், இழப்புகளைக் குறைக்கவும் கான தந்திரமாகவும் பாடுபடும் பொழுது கடைபிடிக்கும் பகுத்தறிவான தீர்மானங்களுக்கான முறைகளைப் பற்றிய ஒரு சிந்தனைப் பகுதியே ஆட்டக் கோட்பாட்டியலாகும்" இந்த ஆட்டக் கோட்பாடு, அரசியலைப் படிப்பதற்கும் குறிப்பாக பன்னாட்டு அரசியலை அளப்பதற்கும் கணித மாதிரிகளையும் படிவங்களையும் பயன்படுத்துவதை வலியுறுத்திக் கூறுகிறது.

**தோற்றம்:**

ஆட்டக்கோட்பாடு 1920—ஆம் ஆண்டுகளில் எமில் போரல் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இக்கோட்பாடு 1944—ஆம் ஆண்டில் சாண்வான் நியூமேன் என்னும் ஒரு மனித வல்லுநர் பொருளாதார மனிதன் அல்லது பகுத்தறிவு சார்ந்த நடிகரின் நடத்தையை விளக்க எடுத்துக்கொண்ட முயற்சியால் மேலும் பிரபலமடையலாயிற்று இக்கோட்பட்டியலில் பயன்படுத்தப்பட்ட ஆட்ட மாதிரிப் படிவம் அரசியல் அறிவியல் டன்கன் லூசி, ஹோவர்டு ரேய்ஃபா மார்டி சுபிக் ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்டது. மோர்டான் எ. காப்ளான் வில்லியம் எச்.ரிக்கர், சி.செல்லிங் ஆகியோர் அரசியல் அறிவியலில் ஆட்டக் கோட்பாட்டியலை பிரபலபடுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் ஆட்ட

மாதிரிப் படிவத்தை கூட்டு நடக்கை, நீதி விசாரணை நடவடிக்கை பன்னாட்டு அரசியல் சச்சரவு நிறைந்த சூழ்நிலைகள் ஆகிய களங்களில் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

ஆட்டக் கோட்பாட்டியலைத் தோற்றுவித்தவர்கள் செள் சிக்கன் பாக்கர், பிரிட்ச் போன்ற பெருவசதி ஆட்டங்களிலிருந்து ஆட்டக் கோட்பாட்டியலை உருவாக்குவதற்குத் தேவையான அறிவைப் பெற்றன எனலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்டக்காரர்களிடையே தோன்றும் சச்சரவின் பிரதான அம்சங்களான 'தீர்மானம் செய்தல்' மற்றும் ஒத்துழைப்பு ஆகியவைகளை மேற்சொன்ன பெருவசதி ஆட்டங்கள் இயல்புகளாகப் பெற்றிருக்கின்றன. ஒரு ஆட்டக்காரருடைய தீர்மானங்கள் அடுத்த ஆட்டக்காரருடைய தீர்மானங்களைப் பொறுத்தே அமைகின்றன. வெவ்வேறு ஆட்டக்காரர்களின் தீர்மானங்களுக்கிடையேயுள்ள கூட்டுச் சார்பே இந்த ஆட்டங்களின் மத்தியக் கருத்தாகும். இத்தகைய சூழ்நிலையில் ஒவ்வொரு ஆட்டக்காரரும் ஆட்டத்தில் வெற்றி பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். மேலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் விளைவுகள் குறித்த முன் தேர்விற்குகந்த விருப்பத் தெரிதல்களைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அதாவது, ஒரு ஆட்டக்காரருடைய முன் தேர்விற்குகந்த விருப்பத் தெரிதல்களைப் பொறுத்தே அமைகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, ஆட்டக்காரர்கள் தங்களுடைய விருப்பத் தெரிதல்களின் விளைவுகளுடன் தொடர்புடைய விருப்பத் தெரிதல்களையும் அடுத்தவர்கள் அவைகளிலிருந்து எதிர்பார்ப்பவைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். அரசியலில் ஏற்படும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களுக்கு ஆட்டக்கோட்பாடியல் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு ஆட்டக் கோட்பாட்டியல், பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் ஏற்படுத்தும் விருப்பத் தெரிதல்களைப் பகுத்தறிவு முறையில் அறிவதைப் பற்றி விளக்குகிறது. ஆட்டக் கோட்டபாட்டில் மற்றவர்களை உட்படுத்தும் தீர்மானங்களை எடுக்க நேரும் சூழ்நிலைகளைப் பற்றி ஆய்வு நடத்தப் பயன்படுகிறது.

**கருத்து விளக்கம்**

ஆட்டக்கோட்பாட்டியல், ஆட்டக்காரர்கள் அல்லது தீர்மானம் செய்பவர்கள் சிலர் இருக்கின்றனர் என்னும் அடிப்படை உணர்விலிருந்து ஆரம்பமாகிறது. இந்த ஆட்டக்காரர்கள் தனிநபர்களாக்வும் இருக்கலாம் அல்லது நிறுவனங்களாகவும் இருக்கலாம். ஒவ்வொரு ஆட்டக்காரரும் செம்மையாக நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையுடைய பகுத்தறிவான உருவாண்மையாக விளங்குகின்றனர். ஒவ்வொருவரிடமும் குறிப்பிட்ட வளங்கள் இருக்கின்றன. இவ்வளங்களைக் கொண்டு இவர்கள்

(குறிப்புக்கான இடம்)

சச்சரவில் எதிர்த்து நிற்கும் சக்திகளுடன் போராடுகின்றனர். ஆட்டவிதிகள், இந்த வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை விளக்குகின்றன. ஆனால் ஆட்ட கோட்பாட்டியலின் விதிகள் அவைகளைச் செயல்படுத்துவதற்கு திறன் பெற்றவர்களால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். இதன் விளைவாக, விதிகளை நிர்ணயிப்பதைக் காட்டிலும் அவைகளின் வளமான அம்சங்களுக்கே அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வாறு, ஆட்ட விதிகள் வளங்களின் பங்கீட்டு முறைகள் மற்றும் ஒவ்வொரு ஆட்டக்காரரும் இந்த வளங்களைப் பங்கிடுவதில் பெற்றிருக்கும் தந்திரமுறைகள் ஆகியவைகளைக் குறிப்பதாய் அமைந்துள்ளன. இவ்விதிகள் ஆட்டக்காரர்கள் பயன்படுத்த முன்வரும் வளங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.

ஆட்டக்கோட்பாட்டியல், ஆட்டக்காரர்கள் மாற்ற வழிமுறைகளை தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும், இவர்கள் இவைகளை வருங்காலத்தில் பயன்படுத்தத் தயாராக வைத்துக்கொள்கின்றனர் என்பதாகவும் முன்மொழி வரைவு செய்கிறது. வருங்காலத்தில் பயன்படுத்தத் தயாராக வைத்திருத்தல் தான் ஆட்டத்தின் விளைவாக விளக்கப்படுகிறது. விளைவு (Outcome) என்பது ஆட்டக்காரர்களுக்கும், அவர்களுடை குறிக்கோளின் மதிப்பிற்கும் இடையேயுள்ள உறவைக் குறிக்கும். நிகழும் விளைவுகளின் தொகுப்பே "வாய்ப்புக்கள்" (Prospect) எனப்படுகின்றன. ஒவ்வொரு ஆட்டத்தின் வாய்ப்பும், ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் கிடைக்கும் "பரிசை" (reward) உணர்த்துகிறது. இது ஆட்டக்காரரின் "ஆதாயம்" (pay off) என விவரிக்கப்படுகிறது. மிகப் பெரிய ஆதாயம் வெற்றி பெறுவதாகும். (Winning). இரண்டாவது நல்ல ஆதாயம் "சமன் நிலை முடிவு" (draw) ஆகும். மூன்றாவது ஆதாயம் ஆட்டத்தை "நழுவவிடுதலாகும்" (losing) ஆட்டக்கோட்பாட்டியல், ஆட்டக்காரர்கள் தங்களுடைய ஆதாயங்களைப் பெருக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் தந்திர முறைகளைப் பகுப்பாய்வு செய்ய முயற்சிக்கிறது.

"தந்திர முறை" (Strategy) ஆட்டக் கோட்பாட்டியல்களின் அடிப்படைக் கருத்தாகும் தந்திரமுறை ஆட்டக்காரர்களின் நடவடிக்கையில் பகுத்தறிவு இருப்பதாக கருதுகிறது. தந்திரமுறையாவது ஒரு ஆட்டக்காரர் சச்சரவு நிறைந்த சந்தர்ப்பங்களில் விரும்பிய விளைவை அல்லது தொடர்ச்சியான விளைவுகளை அடைவதற்கு கையாளும் மொத்தத் திட்ட

நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கும் திட்டங்களை ஆட்டக்காரரின் தந்திரமுறை கொண்டிருக்கிறது. ஆட்டக்காரர் பகுத்தறிவாளர் என்ற அளவில் நேரவிருக்கும் எல்லா நெருக்கடி சந்தர்ப்பங்களுக்கும் உகந்த தந்திரமுறையை அவரால் உருவாக்க முடிகிறது. தந்திர முறைக்குக் கொடுக்கப்படும் இந்த பொதுவான விளக்கம் தவிர இதன் தொடர்பான வேறு பொருள்களும் உள்ளன. இவைகளை "குறைத்தல் பெருக்குதல் தந்திரமுறை" (mini Max Strategy) அல்லது 'சமநிலை தந்திரமுறை' (strategy of saddle point) என்று கூறலாம் குறைவான இடர்களைக் கொண்டு கூடுதலான ஆதாயத்தைப் பெற முயலும் ஆட்டக்காரரின் தந்திரமுறைக்கு குறைத்தல் –பெருக்குதல் தந்திரமுறை என்று பெயர் இங்கு ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் எண்ணிக்கைக்குட்பட்ட தந்திரமுறைகள் இருப்பதாகப் பாவிக்கப்படுகிறது. சமநிலை தந்திரமுறை என்று பெயர். இங்கு ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் எண்ணிக்கைக்குட்பட்ட தந்திரமுறைகள் இருப்பதாகப் பாவிக்கப்படுகிறது. சமநிலை தந்திரமுறை இரு கட்சிக்காரர்களும் சமமான ஆதாயங்களைப் பெறும் ஆட்டமுறையுடன் தொடர்புடையதாகும்.

### 2.1.2. ஆட்டக் கோட்பாட்டியலின் வகைகள்

மிகவும் எளிய ஆட்டத்திற்கு இருநபர் பூஜ்ய மொத்த ஆட்டம் (two person Zero sum game) என்று பெயர். இதில் இரண்டு ஆட்டக்காரர்கள் இருப்பதாகவும் கருதப்படுகிறது. ஆதாயமும் இழப்பும் ஒன்றையொன்று நீக்கிவிடுவது அல்லது பூஜ்யம் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. எனவே 'பூஜ்ய மொத்தம்' (Zero sum) எனும் பெயர் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மாதிரியான ஆட்டம் முழுப்படியான எதிர்புடைய ஒரு ஆட்டமாகும். இதை சீட்டாட்டங்கள், சதுரங்கம் அல்லது செஸ் சில போர் வகைகளில் காணலாம். இருநபர் பூஜ்ய மொத்த ஆட்டத்தில் கூடுதல் ஆட்டக்காரர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதனால் ஆட்டம் 'என் நபர் பூஜ்யம் மொத்தம்' ஆட்டமாக மாறிவிடுகிறது. இத்தகைய ஆட்டத்திற்கு எடுத்துக்காட்டாக பலர் கொண்ட போக்கர் என்னும் ஆட்டம் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட மல்யுத்தம் ஆகியவைகளாகக் கூறலாம். நடைமுறையில் இந்த ஆட்டமுறையில் ஆதாயத்தைக் கணக்கிடுவது சிக்கலாகி விடுகிறது. எனவே தான், பெரும்பாலான ஆட்ட கோட்பாட்டியல்களில் அளிக்கப்படும் எடுத்துக்காட்டுகளில் இரு நபர் ஆட்டங்களே கையாளப்படுகின்றன. அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற ஒரு ஆட்டமாக "பூஜ்யமற்ற மொத்தம்" அல்லது 'மாறுபடும் மொத்த ஆட்டம் விளங்குகிறது. இத்தகைய

(குறிப்புக்கான இடம்)

ஆட்டத்தில் ஆதாயத்தைக் கணக்கிடுங்கால் ஒரு ஆட்டக்காரரின் ஆதாயம் அடுத்த ஆட்டக்காரரின் இழப்பு அல்லது நஷ்டத்திற்கு சமமாயிருப்பதில்லை. மாறாக இருவரும் லாபமடையவோ அல்லது இருவரும் நஷ்டமடையவோ அல்லது இருவரும் வெவ்வேறு முறையில் லாபமடையயோ அல்லது நஷ்டமடையவோ வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. மாறுபடும் மொத்த ஆட்டத்தில் ஆட்டக்காரர்கள் தங்களுடைய ஆதாயத்தைப் பெருக்குவதில் ஒத்துழைக்கும் பொழுது அந்த ஆதாயத்தைப் பகிர்வதில் சச்சரவில் ஈடுபடுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சோவியத் யூனியனும் தத்தம் நன்மையைக் கருதி அணு ஆயுதப் போரைத் தவிர்ப்பது போன்று ஆட்டக்காரர்கள் விருப்புக்களைப் பகிர்ந்து கொள்வதுமுண்டு.

ஆட்டங்கள் இருநபர் அல்லது எண் நபர் பூஜ்ய மொத்தம் அல்லது மாறுகின்ற மொத்தம் என்றெல்லாம். இருப்பதினால் நான்கு வகையான ஆட்டங்கள் இருக்கின்றன. கீழ்க்காணும் வகைகளைப் பார்க்கவும்.

**நான்கு வகையான ஆட்டங்கள்**

**ஆதாய வகைகள்**

| | பூஜ்ய மொத்தம் | மாறுகின்ற மொத்தம் |
|---|---|---|
| 2 நபர் | 2 நபர் பூஜ்ய மொத்தம் (உ.ம்) செஸ் 2 கை போக்கர் சில வகை யுத்த முஸ்திப்பு | 2 நபர் மாறுகின்ற மொத்தம் (உ.ம்)அமெ.ஐக் நாடு, சோ.யூ ஆயுதப் பெருக்கம் போட்டி கோழி கைதிகளின் குழப்பம்) |
| நபர்களின் எண்ணிக்கை 'n' 3 நபர் | 'n' நபர் பூஜ்ய மொத்தம் (உம்) பல கை போக்கம், 3 நபர், மல்யுத்தம் | 'n' நபர் மாறுகின்ற மொத்தம் (உம்) அமெ.ஐ.நாடு. சோ.யூ சீனா ஆயுதப் பெருக்கப்போட்டி |

எண்— நம்பர் மாறுகின்ற மொத்தம் ஆட்டத்திற்கான கணிதப் படிவமைப்பே ஒப்பற்றதொரு படிவமைப்பாகும். ஆனால், இந்த படிவமைப்புச் சிக்கடையதாயிருப்பதினால் இவை அதிகமாகப் பயன்படுவத்தில்லை. 2 நபர் மாறுகின்ற மொத்தம் சிக்கலற்றதாயிருப்பதால் இதற்கான படிவமைப்பை நாம் ஆராய்வோம். "கோழி" (Chicken) கைதிகளின் குழப்பம் (Prisoner's Dilemma) ஆகிய படிவமைப்புகள் பன்னாட்டு உறவை கற்பதற்கு பெரிதும் உதவுகின்றன. இவை போர், அமைதி ஆகியவைகளை . ஆய்வதற்கு உகந்த படிவமைப்புகளாக விளங்குகின்றன. "கோழி"

"கோழி" (Chicken) ஆட்டத்தின் ஒரு விளக்கம், திருட்டுக் கார்களை மட்டும் இரு இளைஞர்களைப் பற்றியதாகும். இவர்கள் தங்களுடைய நண்பர்களின் முன்பாக ஒருதெருவின் இரு கோடிகளிலுமிருந்து எதிர் எதிராக முழு வேகத்தில் காரை ஓட்டுகின்றனர். ஒவ்வொரு ஓட்டுனரும் இரண்டு விருப்பத் தெரிதல்களைப் (Choices) பெற்றிருக்கின்றனர். ஓரம் போகுதல் அல்லது ஓரம் போகாதிருத்தல். ஆனால், யார் ஒருவர் ஓரம் போகிறாரோ அவர் "கோழி" ஆகிறார். இவ்வாறு இந்த ஆட்டத்தில் நான்குவிதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இந்த இரு ஓட்டுநர்களையும் A மற்றும் B என்று வைத்துக்கொள்ளலாம். Aயும் Bயும் ஒரே நேரத்தில் ஓரம் போனால் இருவருமே கோழியாகிவிடுகின்றனர். ஒருவரும் மதிப்பை இழப்பதில்லை. A ஓரம் போய் B ஓரம் போகாவிடில் A கோழியாகி விடுகிறான். B தனது நண்பர்களின் மத்தியில் புகழும் பெறுகின்றான். இருவருமே ஓரம் போகாமல் நேராக ஓட்டினால் ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கின்றனர். இதில் சாவுதான் விளைவாகும்.

இந்த ஆட்டத்தில் ஒவ்வொரு ஆட்டக்காரரும் ஒரு மேலான தந்திர முறையாக ஓரம் போகுதல் அமைகிறது. எனவே இருவரும் ஓரம் போவதுதான் இந்த ஆட்டத்தின் முடிவான விளைவாக இருக்கிறது. குறைத்தல், பெருக்கல் தந்திர முறையின் (mini-max-strategy) காரணமாகவே இந்த விளைவு இருவரும் ஓரம் போகுதல் ஏற்படுகிறது. நேரிடக் கூடிய தீய விளைவுகளில் நல்லதொரு விளைவை அடைவதற்கு கடைபிடிக்கும் தந்திர முறையையே அறிவுடைய ஒவ்வொரு ஆட்டக்காரரும் பின்பற்றுகின்றனர். கோழி ஆட்டத்தில் இதன் பொருள் யாதெனில் A ஓரம் போக விழைந்தால் தனக்கு ஏற்படக்கூடிய இழப்பு மதிப்பை இழக்க வேண்டியதிருக்கும் என்பது மட்டுமே. அதே நேரத்தில் ஓரம் போக விரும்பாவிடில் நேரடிக்கூடிய இழப்பு சாவாகும். எனவே A ஓரம் போகவே முடிவு செய்வான். Bயும் Aயைப் போலவே முடிவு செய்கிறான். எனவே, இதே ஆட்டத்தின் விளைவு இருவரும் ஓரம் போவார் என்பதால் சமநிலை தந்திர முறையே இந்த ஆட்டத்தின் பிரதான அம்சமாக விளங்குகிறது.

கோழி ஆட்டம் அமெரிக்காவிற்கும் ரஷியாவிற்கும் இடையேயுள்ள பன்னாட்டு முரண்பாட்டை விளக்கத் தகுந்ததொரு சாதனமாக விளங்குகிறது. அமெரிக்கா A என்னும் ஆட்டக்காரராகவும், சோவியத்

(குறிப்புக்கான இடம்)

ரஷ்யாவை B என்னும் ஆட்டக்காரராகவும் கொண்டால் ஓரம் போவதற்கான முடிவை அணு ஆயுதப் போரிலிருந்து விலகி நிற்பதற்குச் செய்யும் முடிவுடன் ஒப்பிடலாம். உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் இரு வல்லரசுகளுக்குமிடையே அணு ஆயுத அமைதி நிலை நிறுத்தப்பட்டிருப்பதற்கான காரணத்தை அறிவதற்கு கோழி ஆட்டம் பெரிதும் உதவுகிறது.

**கைதிகளின் குழப்பம்**

"கைதிகளின் குழப்பம்" (Prisoner's dilemma ) எனும் ஆட்டத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள ஒரு விளக்கத்தின்படி இரு சந்தேகப் பேர்வழிகள் கைது செய்யப்பட்டு பிரித்து வைக்கப்படுகின்றனர். வழக்கு நடத்துனருக்கு (Public Prosecutor) இவர்கள் குறிப்பிட்ட குற்றத்தைப் புரிந்திருப்பது உறுதியாகத் தெரியும். இருப்பினும் விசாரணையில் தண்டனை விதிக்கத் துணைபுரியும் சான்றுகள் எதுவுமில்லை. எனவே, வழக்கு நடத்துநர் அவர்களிடம் ஒவ்வொருவருக்கும் இரண்டு மாற்று வழி (Alternatives) இருப்பதாகக் கூறுகின்றார். காவலதிகாரிகள் உறுதியாக கூறும் குற்றத்தை ஒத்துக்கொள்ளுதல் அல்லது ஒத்துக்கொள்ளாதிருத்தல் இரண்டு சந்தேகப் பேர்வழிகளும் குற்றத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால் வழக்கு நடத்துநர் அவர்கள் மீது சட்டப்படியான அனுமதியின்றி ஆயுதம் வைத்திருத்தல் போன்ற ஏதோ ஒரு சிறிய வழக்கை ஏற்படுத்தி அவர்களுக்கு சிறிய தண்டனை (ஒரு ஆண்டு சிறைவாசம் வாங்கித் தருவார். இருவருமே குற்றத்தை ஒத்துக்கொண்டால் இருவர் மீதும் வழக்குத் தொடரப்படும். ஆனால் வழக்கு நடத்துநர் கடுந்தண்டனைக்கும் குறைவான தண்டனையை (ஐந்தாண்டு சிறைவாசம்) அளிக்க பரிந்துரை செய்வார். ஒருவர் குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறார் மற்றொருவர் குற்றத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்றால் குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறவர் குற்றம் உடைந்த சாட்சியாக மாறிவிடுவதால் குறைவான தண்டனையை (மூன்று மாத சிறைவாசம்) பெறுகிறார். அதேநேரத்தில் குற்றத்தை ஒத்துக்கொள்ளாதவருக்கு மிகப் பெரிய தண்டனை (பத்தாண்டு சிறைவாசம்) அளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் ஒவ்வொரு கைதியும் தனக்கு ஆதாயத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்புவதால் அவனுடைய அறிவார்ந்த தந்திரமுறை என்னவெனில் குற்றத்தை ஒத்துக்கொள்வதேயாகும். எனவே அறிவார்ந்த விளைவு யாதெனில் இரண்டு கைதிகளும் குற்றத்தை ஒத்துக்கொண்டு ஐந்தாண்டு சிறைத் தண்டனையைப் பெறுவர். அறிவார்ந்த விளைவுதான் நல்ல விளைவு என்று கூற முடியாது. இரண்டு கைதிகளும் அமைதியாக இருந்திருந்தால் ஐந்தாண்டிற்குப் பதில் ஒரே ஆண்டுதான்

(குறிப்புக்கான இட

இரண்டு குற்றவாளிகளும் சிறையில் கழிக்க வேண்டியதிருக்கும். ஆனால், A இவ்வாறு கணக்கிடுகிறான் தனக்கு B என்ன செய்வானென்று தெரியாது. A அமைதியாயிருக்க முடிவு செய்தால், நேரிடக்கூடிய மோசமான விளைவுகள் ஆகியவைகளில் குறைவான தீமையை ஏற்படுத்தும் விளைவை தெரிந்துகொள்ளுமாறுஉணர்த்துவதால் A குற்றத்தை ஒத்துக்கொள்ள முடிவு செய்கிறான். A இந்த பிரச்சனையை இன்னொரு முறையிலும் அணுகலாம். தான் அமைதியாக இருந்தால் நேரிடக்கூடிய விளைவு ஒரு வருட சிறைவாசம் ( B அமைதியாக இருந்தால் மட்டும்) அல்லது பத்தாண்டு சிறைவாசம் (B குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டார்) அவர் குற்றத்தை ஒத்துக்கொண்டால் நேரிடக்கூடிய விளைவு மூன்று மாத சிறைவாசம் (B அமைதியாக இருந்தால் மட்டும்) அல்லது ஐந்தாண்டு சிறைவாசம் ( B குற்றத்தை ஒத்துக்கொண்டால்), எனவே அவர் ஓராண்டு சிறைத்தண்டனையைவிட மூன்றுமாதச் சிறைத் தண்டனையையும், பத்தாண்டு சிறைத் தண்டனையை விட ஐந்தாண்டு சிறைத் தண்டனையையும், விரும்புகிறார் A—க்கும் B—க்கும் இடையே செய்தித் தொடர்போ அல்லது Aக்கு B மீது கட்டுப்பாடோ இல்லாததால் B என்ன செய்வான் என்பதை கருதாமலேயே A குற்றத்தை ஒத்துக்கொள்ள முடிவு செய்வான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக Bயும் Aயைக் போலவே கணக்கிட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ள முடிவு செய்கின்றான். இவ்வாறு குற்றத்தை ஒத்துக்கொள்ளும் தந்திர முறையே கையோங்கி நிற்கிறது. எனவே, ஆட்டத்தின் சமநிலை ஒவ்வொருவரும் குற்றத்தை ஒத்துக்கொண்டு ஐந்தாண்டு சிறைத் தண்டனையைப் பெறுவதாக அமைகிறது.

கைதிகளின் குழப்ப ஆட்டம் உணர்த்துவது யாதெனில் இருவரும் விரும்பத்தக்க மாற்று வழிகள் இருந்தபொழுதும் ஒவ்வொரு தரப்பினரும் தெரிந்து கொள்ளும் அறிவுடையவழி இருவரையும் பாதிக்கக்கூடியதாகவே அமைகின்றது. இது சர்வதேச சூழ்நிலைகளை விளக்கத் தகுந்ததொரு மாதிரிப்படிவமாக விளங்குகிறது. அமெரிக்கா, ரஷ்ய ஆயுதப்போரை விளக்க இந்த மாதிரிப்படிவம் உதவுகிறது. இதில் அமெரிக்க கைதிகளின் குழப்பத்தில் A—யைப் போன்று தீர்மானிக்கிறது. அமெரிக்கா ஆயுதங்கள் மீது குறைவாக பணம் செலவழித்தால், அதற்கு நேரிடும் மிகவும் மோசமான விளைவு ரஷ்ய ஆயுதங்கள் மீது கூடுதலாக அரசியல் திறனைப் பெருக்கிக் கொள்ளும் என்பதாகும். அமெரிக்கா, ஆயுதங்கள்

(குறிப்புக்கான இடம்)

மீது கூடுதலாக பணம் செலவு செய்ய தீர்மானித்தால் நேரடிக்கூடிய மோசமான விளைவு ஆயுதப்போராகும். இவ்வாறு தீர்மானிப்பதால் அமெரிக்க இரண்டு மோசமான விளைவுகளிலும் எது குறைவாக கெடுதல் விளைவிக்குமோ அதைத் தெரிந்துகொள்கிறது. எனவே ஆயுதங்கள் மீது கூடுதல் பணம் செலவு செய்வது என்பதே அமெரிக்கா எடுக்கும் முடிவாகும். இதை இன்னொரு கோணத்தில் நோக்கின், அமெரிக்க ஆயுதங்கள் மீது கூடுதல் பணம் செலவு செய்வது என்பதே அமெரிக்கா எடுக்கும் முடிவாகும். இதை இன்னொரு கோணத்தில் நோக்கின், அமெரிக்க ஆயுதங்கள் மீது சேவைக் குறைத்தால் நேரிடக்கூடிய விளைவுகள் ஆயுதக் குறைப்பு (ரஷ்யா ஒத்துழைத்தல்) அல்லது சீர்கேடு (ரஷ்ய ஆயுதங்கள் மீது கூடுதலாக பணம் செலவிட்டால்) ஆகும். அமெரிக்கா ஆயுதச் செலவைப் பெருக்கத் தீர்மானித்தால் அதனுடைய விளைவு சர்வதேச அளவில் அது கூடுதலான அரசியல் திறனைப் பெறுகிறது. ரஷ்யா ஆயுத செலவைக் குறைத்தால் அல்லது ஆயுதப்போர் (ரஷ்யா ஆயுதச் செலவினைப் பெருக்கினால்) ஏற்படுகிறது. அமெரிக்கா ஆயுதக் குறைப்பைக் காட்டிலும் அரசியல் திறனைப் பெருக்கவே விரும்புகிறது. எனவே ரஷ்யா என்ன செய்யப்போகிறது என்பதைக் கருதாமலேயே அமெரிக்கா தனது முடிவை எடுக்கிறது. அதாவது ஆயுதப் பெருக்கம் இந்த ஆட்டத்தின் கருத்துப்படி ரஷ்யாவும், அமெரிக்கா போலவே கணக்கிட்டு ஆயுதப் பெருக்கத்திற்கான முடிவையே எடுக்கிறது. எனவே விளைப் போவது ஆயுதப் போரேயாகும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் ஏராளமான பணத்தைச் செலவு செய்கிறார். ஆனால், எவருக்கும் குறிப்பிடத்தக்க நன்மை எதுவுமில்லை. இருவருமே ஆயுதப் பலத்தைப் பொறுத்தவரையில் ஒரே நிலையில்தான் இருப்பர். அதுமட்டுமின்றி ஆயுதத்தின் மீது செலவழிக்கும் பணத்தை இவர்கள் வேறு நன்மைகளுக்காகப் பயன்படுத்தி இருக்கலாம்.

### அரசியல் ஆட்டக் கோட்பாட்டியலைக் கையாளுதல்

ஆரம்பத்தில் ஆட்டக் கோட்பாட்டியல் பொருளியலில் கடைப்பிடிக்கப்பட்டது. பிறகு, அரசியல் பிரச்சனைகளை ஆய்வதற்குக் கையாளப்பட்டது. மோர்டன் காப்ளான், வில்லியம் ரிக்கர், தாமஸ் ஷெல்லிங் ஆகியவர் ஆட்டக் கோட்பாட்டியலை அரசியலில் கையாண்டவர்களுன் குறிப்பிடத்தக்கவர்களாவர். காப்ளான் என்பவர் பன்னாட்டு அரசியலில் முறையமைவுகள் மற்றும் போக்குமுறைகள் ஆகியவைகளைக் கற்பதற்கு ஆட்டக்கோட்பாட்டியலைப் பயன்படுத்தினார். ரிக்கர் கூட்டு நடக்கையை ஆய்வ்தற்கு ஆட்டக் கோட்பாட்டியலக்

(குறிப்புக்கான இடம்)

கையாண்டார். ஷெல்லிங் ஆட்டக் கோட்பாட்டியலை சச்சரவு நிறைந்த சூழ்நிலைகளை ஆய்வதற்கு பெரிதும் பயன்படுத்தினார்

### 2.1.3 காப்ளானும் ஆட்டக் கோட்பாட்டியலும்

காப்ளான் ஆட்டப் பகுப்பாய்வினை சாதுரியப் பிரச்சனைகளை ஆய்வதற்கு சிறந்ததொரு சாதனம் என்று விளக்குகிறார். இவர் இதனை முறையாகக் கையாடல் கொள்கையில் வெற்றியை பெருக்க வழி செய்யும் என்று கருதுகிறார். ஆனால் இவர் "பன்னாட்டு அரசியலில் முறையமைவு மற்றும் போக்குமுறைகள்" எனும் தனது நூலில் ஆட்ட மாதிரிப் படிவங்களை கையாளுவது பற்றிய பிரச்சனைகளுக்குப் பதில் தீர்மானம் இயற்றுதல் பற்றிய தெளிவற்றதொரு விளக்கத்தை மட்டுமே தருகிறார். காப்ளான் கொள்கையை உருவாக்குபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக தனது விளக்கத்தை தருகிறாரா அல்லது அவர்கள் தங்களுடைய அறிவை குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கு எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறாரா? என்று தெரியவில்லை. காப்ளான் தருகின்ற கருதுகோள்கள் செயல்துறை சார்ந்த ஆய்வின் முடிவுகள் அல்ல இருப்பினும் காப்ளான் முயற்சி செய்திருப்பது போன்று ஆட்டக் கோட்பாட்டியலை அரசியல் பிரச்சனைகளை ஆய்வதற்கு பயன்படுத்த முடியாது. ஆட்டக் கோட்பாட்டியல் இன்மையான பிரச்சனைகளுக்கு உண்மையான தீர்வை அளிக்க வல்லதாக இருத்தல் வேண்டும். ஆனால் உண்மையான பிரச்சனைகளை ஆட்ட முடிவிற்குள் ஆய்வது சுலபமன்று, ஆட்ட அணுகுமுறை அறிவார்ந்த கருத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆனால் அறிவார்ந்த கருத்து அரசியலில் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை. கலாச்சார நெறிகளை வளர்க்கும் சமூகப் போதனை முறைகள் அரசியல் ஆய்வில் விடுபட முடியாது. செயல்துறை சார்ந்த சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற அசைவுகள் கூடுதலாக இருப்பதால், அரசியல் ஆய்வுத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டுமாயின் ஆட்டக் கோட்பாட்டியல் மற்ற நோக்கங்களையடையப் பயன்படுத்தப்படவேண்டும்.

### 2.1.4 ரிக்கரும் ஆட்டக் கோட்பாட்டியலும்

ரிக்கரின் "அரசியல் கூட்டமைப்புக்கள் பற்றிய கோட்பாடு" எனும் நூலில் ஆட்டக் கோட்பாட்டியலை கடைப்பிடிப்பதற்கான இவருடைய கருத்துக்கள் இடம் பெறுகின்றன. ரிக்கர் பன்னாட்டு அரசியலை ஆய்வதற்குப் பயன்படுத்தும் மாதரிப் படிவம் எண் நபர் பூஜ்யமொத்தம் ஆகும். இது அறிவுடைய ஆட்டக்காரர்கள், நிறைவான செய்தி பக்க பலாபலன்கள்ஆகிய அம்சங்களைக் கொண்டது. ரிக்கர் ஆட்டக் கோட்பாட்டியலின் முக்கியத்துவத்தைக் பயன்படுத்துவதன் நோக்கம், கூட்டு

(குறிப்புக்கான இடம்)

அமைப்பாட்டியலைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம், கூட்டு அமைப்புக்கள் தோன்றுவதற்கான பொதுவான கோட்பாடுகள். இவற்றின் தீர்மானங்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதேயாகும். ஆட்டக்கோட்பாட்டியல் மாதிரிப் படிவத்திலிருந்து கீழ்க்கண்ட மூன்று கோட்பாடுகள் செயல்துறை சார்ந்த புள்ளி விவரங்களை விளக்கப்பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன 1) அளவுக் கோட்பாடு 2) சாதுரிய கோட்பாடு 3) சமநிலையற்ற கோட்பாடு.

கூட்டமைப்பின் அளவானது தீர்மானிப்பவர் வெற்றிக்கு எந்த அளவு சாதகமாயிருக்குமென கருதுகின்றனரோ அந்த அளவாயிருக்க வேண்டும். இதுகூட்டமைப்பு பற்றி கோட்பாடுகள் பற்றிய அறிவுச் செய்தியைப் பொறுத்தது.

ரிக்கரின் கருத்துப்படி கூட்டமைப்புகள் “மூல கூட்டு ஒப்பந்தங்களாக” ஆரம்பிக்கின்றன. பிறகு பக்கபலாபலன்கள் தந்து கூடுதல் உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஒரு மூல கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் பொழுது அதில் உறுப்பினர்களாய் இல்லால் விடுபட்டோரும் அதனுடைய ஆக்கிரமிப்பைக்கண்டு அஞ்சுவோம். வேறொரு மூல கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துகின்றனர். ஆனால் இதன் நோக்க மூல கூட்டு ஒப்பந்தத்தை வெற்றி பெரும் கூட்டு அமைப்பாக மாற்றுவதாகும். இந்த நோக்கத்தை எவ்வாறு அடைவது? இங்குதான் சாதுரிய கோட்பாடு இடம் பெறுகிறது. மூல துட்டு ஒப்பந்தத்தைப் பெற்று பெறும் கூட்டு அமைப்பாக மாற்றி வெற்றி வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கு சாதுரியம் தேவைப்படுகிறது. மூல கூட்டு ஒப்பந்தம் தனது உறுப்பினர்களுக்கு லாபகரமான பலாபலன்களை அளிக்கும் அளவிலான சாதுரிய நிலையில் இருக்குமானால் இது கூட்டு அமைப்பாக மாறும்பொழுது வெற்றி கிடைப்பது உறுதி.

கூட்டு அமைப்புக்கள் தோன்றும் பொழுது, ஓரளவு சமநிலைமையின்மையும் ஏற்படக்கூடும் என்று ரிக்கர் கருதுகிறார். எனவே, அவர் சமநிலைமையின்மை தோன்றுவதற்கான காரணங்கள், சமநிலைமையை பேணுவதற்கான முறைகள் மற்றும் நமநிலைமைப் பயக்கவல்ல அகம் சார்ந்த புறம் சார்ந்த காரணிகள் ஆகியவற்றை விளக்குகிறார். தலைவர்களும், தேசங்களும் வீழும் பொழுது தலைவர்களின் தவறான கணக்கீடுதல்களாலும் அளவுக்கு மீறிய அதிகாரப் பசியால் அதிகாரம் கைமாறுகின்ற பொழுதும் தீர்மான முறையமைவுகள் சமநிலையின்மையை அடைவதாக ரிக்கர் குறிப்பிடுகிறார். இவ்வாறு ரிக்கருக்கு அகம் சார்ந்த காரணிகள் கூடுதல் முக்கியத்துவம் வாய்ததாக விளங்குகின்றன.

## 2.1.5. ஷெல்லிங்கும் ஆட்டக்கோட்பாட்டியலும்

(குறிப்புக்கான இடம்)

ஆட்டக் கோட்பாட்டியலை அரசியலில் மிகவும் திறமையாக கையாண்ட பெருமை ஷெல்லிங்கையே சாரும் "சச்சரவு பற்றிய சாதுரியம், என்னும் தனது நூலில் ஷெல்லிங் ஆட்டக்கோட்பாட்டியல் பற்றிய தன்னுடைய கருத்துக்களைத் தந்துள்ளார். ஆட்டக்கோட்பாட்டியல் விதிகளை ஏனோதானோ என்று பின்பற்ற விரும்பவில்லை. கோட்பாட்டியலுக்கும் நடைமுறையில் அரசுகளுக்கிடையே ஆட்டம் நடைபெறுவதற்கும் இடையே வேறுபாடுகளிருப்பதாக இவர் நம்புகிறார். பன்னாட்டு உறவுகளில் ஓரளவு சச்சரவும், ஓரளவு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் உணர்வும் இருப்பதாக இவர் கருதுகிறார். இதன் காரணமாக, பேரம் பேசும் ஆட்டங்கள் அல்லது கலப்பு நோக்க ஆட்டங்கள் பற்றிய கருத்தை ஏற்படுத்தியுள்ளார், இந்த ஆட்டங்களை விளையாடுவதில் இடம்பெறும் அறிவு சார்ந்த போக்குமுறைகள் உண்மையான போக்குமுறைகளின்று வேறுபட்டவையாகும். இந்த ஆட்டத்தை இவர் சாதாரண ஆட்டம் அல்லது நலிவுற்ற ஆட்டம் என்று அழைக்கும் விதிக்குட்பட்ட மாதிரிப் படிவத்திலிருந்து வேறுபடுத்துவதற்காக ஆட்ட—மரம் வடி (game the form) மாதிரிப் படிவக் கருத்தை ஏற்படுத்தியுள்ளார் ஆட்டமரன் மாதிரிப் படிவத்தின் ஆய்வில் ஆட்டத்தின் ஒவ்வொரு தனிப்பட்ட தெரிவுகளையும் அவை சார்ந்த மனோதத்துவ காரணங்களையும் தனிப்பட்ட தெரிவுகள் சூழ்நிலைகள் பற்றிய புலனுணர்வுகளையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று ஷெல்லிங் கூறுகிறார். மனோதத்துவ காரணங்களை ஆராயும் முகமாக இவர் 'அச்சுறுத்தல்', 'வாக்குறுதியளித்தல்', 'துவக்க முயற்சியைக் கைவிடல்', 'நண்பர்களையும் விரோதிகளையும் தெரிந்து கொள்ளுதல்', அதிகாரத்தை ஒப்படைத்தல்', 'சமரசங்களை ஒத்துக்கொள்ளுதல்' போன்ற புதிய கருத்துக்களை ஷெல்லிங் புகுத்தியுள்ளார். இவருடைய கருத்துப்படி சாதுரிய வழிமுறை செயல்முறை சார்ந்த முறையில் விளக்கப்படுதல் அவசியமாகும்.

மதிப்பீடு

ஆட்டக்கோட்பாட்டியல் கருத்தியல் சார்ந்த ஒன்று என்பதால் செயல்துறை சார்ந்த ஆய்விற்கு பொருந்தாது என்று ஆட்டக் கோட்பாட்டியலின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும். தீர்மானம் செய்பவர்களை முற்றிலும் அறிவுடையவர்கள் என்றும், அவர்களிடம் முழுஅறிவிப்புச் செய்தி இருப்பதாகவும் இது பாவிக்கிறது. ஆனால் இது நடைமுறையில் இது உண்மையன்று. நல்ல ஆட்டக்காரர்கள் கூடுதல் அறிவுச் செய்தி பெற்றிராமலோ அல்லது

தவறான அறிவுச் செய்தியுடையவர்களாகவோ இருக்கலாம் அல்லது சில விஷயங்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அறிவுடையமுறையில் நடந்துகொள்ளத்தவறவும் செய்யலாம். மேலும் மனிதன் ஒரு அறநெறி சார்ந்தவன் என்றாலும் ஆட்டக்கோட்பாட்டியல் அறநெறி சார்ந்தவன் என்றாலும் ஆட்டக்கோட்பாட்டியல் அறநெறி சார்பற்றதாக விளங்குகிறது. ஆட்டக்கோட்பாட்டியல் சூழ்நிலை சார்ந்த அறநெறி, (Situational ethics)யை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆட்டக்காரரின் முழுக்கவனம் கூடுதல் பலாபலனைப் பெறுவதில் இருப்பதால் கொள்கைப் பிடிப்புக்கள் (Convictins) மற்றும் உள்நோக்கங்கள் (Motives) ஆகியவைகள் ஆட்டக்கோட்பாட்டியலின் விளைவிற்குள் வருவதில்லை.

ஆட்டக்கோட்பாட்டியல் கருத்தியல் சார்ந்த ஒன்று என்று குறை கூறப்பட்டவிட்டாலும் அரசியலில் அதன் பயனை மறுக்க இயலாது. போரில் ஈடுபட்ட இராணுவ தளபதிகள், பேரம் பேசல், பேச்சு வார்த்தைகள் ஆகியவைகளில் ஈடுபட்டுள்ள நாட்டுத்தூதுவர்கள், வாக்காளர்களைப் பணிய வைக்கும் அரசியல்வாதிகள், ஆதரவு திரட்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள், பற்றிய பிரச்சனைகளை ஆய்வதற்கு ஆட்டக் கோட்பாட்டியல் பெரிதும் உதவுகிறது. இருப்பினும், இப்பிரச்சனைகளை ஆய்வதற்கு ஆட்டக் கோட்பாட்டியலைப் பயன்படுத்தும் பொழுது அதிகக் கவனம் தேவை.

### 2.1.6. 1848 முதல் 1945 வரை பன்னாட்டு அரசியல்

பண்டைய உலகு பரம்பரை பரம்பரையாக தோன்றிய பல பேரரசுகளால் நிறைந்து காணப்பட்டது. அன்று பரந்த ரோமப் பேரரசு ஒன்று காணப்பட்டது. ஆனால் அன்றைய உலகில் தேசிய அரசு அல்லது சுதந்திர அரசுகளைக் காணமுடியவில்லை. அன்று நிலவிய அரசு முறையில் 1648—ஆம் ஆண்டில் வெஸ்ட்பேலியா உடன்பாடு ஏற்பட்ட பிறகு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் போன்ற தேசிய அரசுகள் தோன்றின. அதன்பிறகு, இன்னும் பல அரசுகள் தோன்றிக்கொண்டிருந்தன.

முப்பது வருடப்போர், வெஸட்பேலியா சமாதான உடன்பாடு போன்றவற்றிக்குப் பின் தேசிய அரசுமுறையில் கணிசமான மாறுதல்கள் ஏற்பட்டது. முப்பது வருடப் போருக்கு மதம் ஒரு காரணமாகத் திகழ்ந்தாலும், அரசர் குலங்களிடையே நிலவிய முரண்பாடும், ஒரு காரணமாக அமைந்தது. அப்போராட்டம் எம்மதக் குழுவையும் மேம்பாடு உடைத்ததாய் நிலை நிறுத்தவில்லை. ஆனால், அப்போர் உருவாக்கிய சகிக்கும் தன்மை உலகில் நிலவுகின்றது. அப்போரினால் பெருமளவில் அழிவு ஏற்பட்டு, உலகத் திருச்சபை சிதைவுற்று ஐரோப்பா பல தேசிய அரசுகளாகப் பிரிக்கப்பட்டபோதிலும், முடிவில், ஏற்பட்ட வெஸ்ட்போலியா

சமாதான உடன்பாடு ஐரோப்பிய உறுதிபாட்டிற்கான வழிவகுத்தது. பேரரசுகளின் பகுதிகள் பேரரசுகள் மேல்கொண்ட நம்பிக்கையை இழந்தன. போப்பிற்கு மதக் காரியங்களில் கூட தனது அதிகாரத்தை நிலைநிறுத்த முடியவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் வெஸ்ட்போலியா உடன்பாடு தேசிய அரசு முறையை நிறுவியது. வெஸ்ட்போலியா உடன்பாடு நிறுவிய அரசு முறையை அடிப்படை குணநலனில் இன்று எந்தவித மாறுதலும் இல்லை என்பதை மறுக்க முடியாத உண்மை. ஆனால் கால மாறுதல்கள் அரசு அமைப்புக்களில் சில மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளது. இம்மாறுதல்கள் அரசு முறையைப் பாதித்துள்ளது என்ற உண்மையையும் மறுக்கமுடியாது. பிரதிநித்துவ அரசாங்க எழுச்சி, தொழில் புரட்சி, மக்கள் தொகைப் பெருக்கம், சர்வதேச சட்ட வளர்ச்சி, இராஜதந்திர முறையின் பரிணாம வளர்ச்சி நாடுகளிடையே தோன்றிய பொருளாதார சார்புநிலை, சமாதானமாக தகராறுகளைத் தீர்த்து வைக்கும் வழிமுறைகள் போன்றவை அரசு அமைப்புகளில் சில மாறுதல்களைக் கொணர்ந்தது.

**வெஸ்ட்போலியா முதல் உட்ரக்ட் வரை**

1648ம் ஆண்டு ஏற்பட்ட வெஸ்ட்பேலியா, உடன்பாட்டிற்கும் 1713—ஆம் ஆண்டு ஏற்பட்ட உட்ரக்ட் உடன்பாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், பன்னாட்டு உறவில் ஐரோப்பா கண்டத்தில் தனது மேம்பட்ட செல்வாக்கை நிலைநிறுத்த பிரான்சைக் சார்ந்த பதினான்காவது லூயி மன்னர் கொண்டிருந்த பேரரசையும், மேற்கத்தியப் பகுதியில் குடியேற்ற ஆதிக்கம் மேம்பாட்டை நிலை நிறுத்த பிரிட்டன், பிரான்சு, ஹாலந்து, ஸ்பெயின், போன்ற நாடுகள் கொண்டிருந்த போட்டிகளும் ஆதிக்கம் செலுத்தின.

தனது அதிகாரத்தையும் பகுதிகளையும் விரிவுபடுத்துவதில் பதினான்காவது லூயி மன்னர் வெற்றிபெற்றார். ஆனால் அன்னாரது முயற்சிகள் (1701—1713) ஸ்பானியா மரபுரிமைப் போரினால் தடுத்து நிறுத்தப்பட்டது. 1713இல் ஏற்பட்ட உட்ரக்ட். உடன்படிக்கை பிரான்சுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியது. இவ்வுடன்படிக்கை பிரஷ்யா ஒருமைப்பாட்டை ஊக்குவித்து உட்ரக்ட் உடன்பாட்டிற்குப் பின் பிறரை கணக்கில் எடுக்காமல் எந்த ஐரோப்ப அரசாலும் எக்காரியத்தையும் செய்ய இயலவில்லை.

## 2.1.7. வியன்னா உடன்பாடு

1815—ஆம் ஆண்டு முதல் 1914—ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பன்னாட்டு அரசியலைப் பாதிக்கினற அளவில் இரு நிகழ்ச்சிகள் நடந்தேறின.1854—'56 ஆண்டுகளில் நடந்தேறிய கிரிமியன் போர் முதல் நிகழ்ச்சியாகும். கான்ஸ்டாண்டிநோபிள் மற்றும் நீரோட்ட கடல் பகுதிகளில் ரஷ்யா தனது செல்வாக்கை நிலை நாட்ட முயற்சித்தது.

(குறிப்புக்கான இடம்)

பிரிட்டன் மற்றும் பிரான்சின் கூட்டு முயற்சியால் ரஷ்ய முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. 1870–71 ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய பிராங்கோ – பிரஷ்யன் போர் இக்காலகட்டத்தில் நடந்தேறிய இரண்டாவது நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி ஐரோப்பாவில் நிலவிய அதிகார சமநிலையில் குறிப்பிடத்தக்க எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் பிரான்சு, ஐரோப்பா கண்டத்தில் தலைசிறந்த அதிகாரமாகத் திகழ்ந்ததை ஒன்றுபட்ட ஜெர்மனி தனது முயற்சியால் மாற்றியமைத்தது.

இக்கால கட்டத்தில் பால்கன் பகுதியில் துருக்கி செல்வாக்கிழந்ததால் அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நீண்டகாலக் கனவுகள் நிறைவேறும் அளவில் 19–ஆம் 20–ஆம் நூற்றாண்டுகளில் பல தேசிய அரசுகள் உருவெடுத்தன. கிரேக்க நாடு மான்டிநிக்ரோ, ருமேனியா, செர்பியா, பல்கேரியா, அல்போனியா போன்ற நாடுகள் இறைமை வாய்ந்த சுதந்திர நாடுகளாக உருவெடுத்தமையால் வல்லரசுகளின் முரண்பட்ட பல திட்டங்களை நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. பால்கன் பகுதியில் இவ்வரசுகள் உருவாகியது ஐரோப்பிய கண்டத்தின் சமாதானத்திற்கு அச்சுறுத்தலைத் தோற்றுவித்தது.

மேற்கத்திய பகுதியில் பல புதிய அரசுகள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் உறவுகொண்டன. 1898ம் ஆண்டு நடந்தேறிய ஸ்பெயின் அமெரிக்கப் போர் அமெரிக்காவை ஒரு வல்லரசாக உலகின் தூர கிழக்குப் பகுதியில் நிலை நிறுத்தியது. ஜப்பானில் 1867–68–இல் ஷோகன் பதவியில் இருந்து கீழிறக்கப்பட்டார். ஜப்பானில் நிலமானிய ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டது. 1894–95–இல் ஜப்பான் சீனாவை வென்றதாலும், 1902–ஆம் ஆண்டு பிரிட்டனுடன் ஜப்பான் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டமையாலும், 1904–1905ல் ரஷ்யாவை ஜப்பான் தோற்கடித்தமையாலும் ஜப்பான் உலக வல்லரசுகளின் இணையான ஒரு நிலையை எய்தியது.

1914–ஆம் ஆண்டு முதல் உலகப்போர் ஆரம்பித்த நேரத்தில் உலகில் எட்டு வல்லரசுகள் காணப்பட்டன. ஆனால் அவ்வல்லரசுகள் வெவ்வேறான தன் விருப்பத்தை கொண்டிருந்தன. 1882–ஆம் ஆண்டு ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து மும்முனை உடன்பாட்டை (Triple Alliance) ஏற்படுத்தின. பிரிட்டன், பிரான்சு மற்றும் ரஷ்யா ஒன்று சேர்ந்து முக்கூட்டை (Triple Entente) 1907–ஆம் ஆண்டு ஏற்படுத்தியது.

## 2.1.8. ஐரோப்பிய அரசியல் (1871 முதல் 1919 வரை)

1870ஆம் ஆண்டு உலக வரலாற்றில், குறிப்பாக ஐரோப்பிய வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்ச்சி ஜெர்மானிய ஒருமைப்பாடாகும். 1871ம் ஆண்டு முதல் 1890ஆம் ஆண்டு வரை பிஸ்மார்க் கேடுகளைச் சந்தித்த ஆஸ்திரியா ஹங்கேரியோடு ஒரு நிதானமான போக்கைக் கடைப்பிடித்ததன் மூலம் 1866—ஆம் ஆண்டு அதன் நாட்டைப் பெற்று தான் ஒரு பெரும் அரசியல் தலைவர் என்பதனை பிஸ்மார்க் நிரூபித்தார். 1870—ஆம் ஆண்டு ஃபிரான்சு தோல்வியுற்றபொழுது, அதனைப் பழிவாங்கும் எண்ணத்துடன் நடத்தியவிதத்தால் ஒரு தவறையும் செய்தார். 1871ஆம் ஆண்டு அல்சாசு, லோரேய்ன் என்ற இடங்களை ஃபிரான்சிடம் இருந்து பிஸ்மார்க் அபகரித்ததுடன் போரில் ஏற்பட்ட சேதங்களுக்காகப் பெருந்தொகையை நஷ்டஈடாகக் கொடுக்க பிரான்சைக் கட்டாயப்படுத்தினார். இச்செயல்களின் விளைவாக ஃபிரான்சு தன் நாட்டின் மீது எந்நேரமும் படை எடுக்கலாம் என்ற பயம் பிஸ்மார்க்கை ஆட்கொண்டது. பிரான்சு பழிவாங்கும் செயலில் ஈடுபடா வண்ணம் அந்நாட்டை உலக அரங்கில் தனிமையாக்குவதை தனது வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய நோக்கமாக பிஸ்மார்க் கொண்டார். இக்குறிக்கோளோடு 1873ஆம் ஆண்டு பிஸ்மார்க் மூன்று மன்னர்களின் சங்கம் அல்லது டிரெய்கேய்சர்பந்த் (Dreikailerbuild) என்ற அமைப்பை உருவாக்கினார். இவ்வமைப்பின் அடிப்படையில் சமாதானத்தைப் பாதுகாக்கவும், போர் அபாயம் ஏற்படின் பொதுவாக ஒரு செயல்முறையைப் பின்பற்றவும் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ருஷ்யா ஆகிய நாடுகளின் மன்னர்கள் சம்மதித்தனர். இச்சங்க அமைப்பு 1879—ஆம் ஆண்டு மீண்டும் மூன்று மன்னர்களின் கூட்டு அமைப்பிற்கு பிஸ்மார்க் புத்துயிர் ஊட்டினார். நான்காவது ஒரு நாட்டோடு இம்மூன்று நாடுகளில் ஏதாவதொன்று போரில் ஈடுபட்டால், நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாய் உறுதியளித்தனர். பல்கேரியா பிரச்சனையால் ருஷ்யாவிற்கும் ஆஸ்திரியா—ஹங்கேரிக்கும் இடையே எழுந்த பகையால் இச்சங்கம் 1887—ஆம் ஆண்டு உடைந்தது. ஜெர்மனி, ருஷ்யாவோடு கொண்ட உறவைத் துண்டிக்க விரும்பவில்லை. ஆகவே 1887—ஆம் ஆண்டு ஜெர்மனி ருஷ்யாவோடு மறு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. இப்புதிய உறவு ஆஸ்திரேலியா ருஷ்யப் போரைத் தவிர்த்ததோடு ஃபிராங்கோ ருஷ்ய உறவு ஏற்படா வண்ணம் தடுத்தது. எவ்வாறெனினும், பிஸ்மார்க் பதவி விலகிய பின் 1890—ஆம் ஆண்டு இவ்வொப்பந்தம் முடிவுற்றது.

மேற்கூறிய உடன்பாட்டோடு, ஆஸ்திரோ— ஜெர்மானிய உடன்பாடு என்கின்ற உடன்பாட்டையும் 1879—ஆம் ஆண்டு பிஸ்மார்க் ஏற்படுத்தினார். 1914ஆம் ஆண்டு முதல் உலகப்போர் ஆரம்பிக்கும்

குறிப்புக்கான இடம்)

வரை இவ்வுடன்பாடு நீடித்தது. இவ்வுடன்பாடு முறிந்தது. உலகப்போர் நிகழ ஒரு காரணமாகும் பெர்லின் காங்கிரஸில் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுக்குச் சாதகமான நிலையைக் கொண்டிருந்தது ருஷ்யாவை வருத்தியது.

ஆஸ்திரோ—ஜெர்மானிய உடன்பாடு — ஜெர்மானிய மன்னரிடம் ஆஸ்திரியா ஹங்கேரியோடு உடன்பாடு காணவேண்டும் என்று பிஸ்மார்க் கூறிய பொழுது, அவர் அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், பிஸ்மார்க் ஆஸ்திரியா — ஹங்கேரியோடு உடன்பாடு கொள்ளத் தீர்மானித்தார். பிஸ்மார்க் கட்டாயப்படுத்தியமையால் அரசர் 1879—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5—ஆம் தேதி உடன்பாட்டிற்குச் சம்மதித்தார். ஒப்பந்தம் வியன்னாவில் கையொப்பமிட்டு, இரு நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.

ஜெர்மனிக்கும், ஆஸ்திரியா ஹங்கேரிக்குமிடையே ஏற்பட்ட இரட்டை ஒப்பந்தத்தின் மூலம், ருஷ்யா ஏதாவதொரு நாட்டின் மீது படையெடுத்தால் மற்ற நாடு தாக்கப்பட்ட நாட்டிற்கு உதவி புரிந்தது, பொதுவான ஒரு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. இருநாடுகளிலொன்று ருஷ்யா ஆதரவு பெற்ற ஒரு நாட்டால் தாக்கப்பட்டால், மற்ற நாடு தாக்கப்பட்ட நாட்டிற்கு துணைபுரிதல் வேண்டும். ஆஸ்திரியா —ஹங்கேரி அல்லது ஜெர்மனியை இன்னொரு நாடு தாக்கும்பொழுது அச்சமயம் தாக்குகின்ற நாட்டிற்கு ருஷ்யா துணை புரியவில்லை என்றால் தாக்கப்படாத ஒப்பந்த நாடு நடுநிலை வகிக்கும். இவ்வொப்பந்தம் இரகசியமானது 5 ஆண்டுக்கென்று உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் மூன்றாண்டிற்கு நீடித்ததோடு, உண்மையில் 1914—ஆம் ஆண்டு போர் ஆரம்பமாகும் வரை நிலவியது.

மும்முறை உடன்பாடு (1882) (Triple alliance) : 1879—ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆஸ்திரோ – ஜெர்மானிய உடன்பாடு 1882—ஆம் ஆண்டு மும்முனை உடன்பாடாக உருவெடுத்தது. 1877 ஆம் ஆண்டு இத்தாலி ஆஸ்திரியா —ஹங்கேரி, ஜெர்மானி ஆகியவற்றுடன் உடன்பாடு காண முயற்சித்தது. ஆனால், அம்முயற்சிக்குப் போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. 1879—ஆம் ஆண்டு பிஸ்மார்க் ஆஸ்திரியா—ஜெர்மனிய உடன்பாட்டில் மூன்றாவது ஒரு அங்கமாக இத்தாலியை அழைத்தார். ஆனால், இத்தாலிய அரசாங்கம் அவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை 1881—ஆம் ஆண்டு டியூனிஸ் ஃபிரான்சின் காப்பரசு நாடாக (Protectorate) உருவாக்கப்பட்டது. இது இத்தாலிய நிலையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. டியூனிஸ் இத்தாலியின் அருகாமையில் இருந்தால் ஒரு இத்தாலியக் குடியேற்ற நாடாக அதை

மாற்றலாம் என்ற எண்ணத்தில் அதன்மேல் இத்தாலி விருப்பம் கொண்டிருந்தது. ஆனால், அது ஃபிரான்சின் காப்பரசு நாடாக மாற்றப்பட்டது. இத்தாலிய தேசபக்தர்களைப் புண்படுத்தியது. எனவே, ஃபிரான்சுக்கு எதிராக ஏதாவது செய்யவேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். மெடிட்டரேனியன் கடலில் வலிமைமிக்க கடற்படையை வைத்திருந்த இங்கிலாந்தோடு ஒரு உடன்பாடு கொள்ள இத்தாலி முயற்சித்தது. ஆனால், இங்கிலாந்து உடன்பாட்டிற்கு இசையவில்லை அந்நேரத்தில் இத்தாலிய மன்னர் தனது பிரதம அமைச்சரோடும் வெளிநாட்டு அமைச்சரோடும் வியன்னாவிற்குச் சென்றார். இத்தாலியர்கள் ஒரு உடன்பாட்டிற்காக ஆவலோடு, காத்திருந்தனர். கடைசியாக, இத்தாலிய இரட்டை உடன்பாட்டில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இவ்விதமாக, மும்முனை உடன்பாட்டு ஒப்பந்தம் 1882—ஆம் ஆண்டு மே மாதம் 20—ஆம் நாள் கையொப்பமிடப்பட்டது.

இவ்வுடன்பாடு ஐந்தாண்டுகளுக்காக ஏற்படுத்தப்பட்டது. உடன்பாட்டின் உள்ளடக்கம் இரகசியமாக வைக்கப்பட்டது. எவ்விதத் தூண்டுதலும் இல்லாமல் பிரான்சு இத்தாலியைத் தாக்குமேயானால் ஆஸ்திரியா— ஹங்கேரியும், ஜெர்மனியும் தங்களது முழு இராணுவ பலத்தோடு இத்தாலிக்கு உதவி செய்ய வேண்டும். இதேவிதமான சூழ்நிலையில் ஜெர்மனி இருந்தால், இத்தாலி ஜெர்மனிக்கு பரஸ்பர உதவி புரிதல் வேண்டும். எவ்விதத் தூண்டுதலும் இல்லாமல் ருஷ்யா ஜெர்மனியையோ அல்லது ஆஸ்திரிய—ஹங்கேரியையோ தாக்கினால், இத்தாலி நடுநிலை வகித்தல் வேண்டும். அத்தாக்குதல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வல்லரசுகளால் நிகழ்ந்தால் இத்தாலி முழுமூச்சாக செயலில் இறங்கவேண்டும். ருஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரியா—ஹங்கேரிக்கு உதவி செய்யவேண்டும். ருஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரியா—ஹங்கேரிக்கு உதவி செய்ய ஜெர்மனி உறுதி செய்திருக்கும். ஜெர்மனி – ஆஸ்திரியா ஹங்கேரி உடன்பாட்டைப் பற்றி விவரங்களை இத்தாலியிடம் கூறாமல் மறைத்தனர்.

பிராங்கோ – ருஷ்யா உடன்பாடு 1984—ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட பிராங்கோ – ருஷ்யா உடன்பாடு ஐரோப்பிய அரசியலில் நிகழந்த இன்னொரு முக்கிய நிகழ்ச்சியாகும். மும்முனை உடன்பாட்டு ருஷ்யாவுக்குக் கவலையை அளித்தது. ருஷ்யா தனியாக விடப்பட்டதாக எண்ணியது. இங்கிலாந்து கூட மும்முனை உடன்பாட்டை ஆதரிக்கும் சாதகமான கருத்தினைக் கொண்டிருந்தது. மும்முனை உடன்பாட்டைப் புதுப்பித்து, ஃபிரான்சின் கப்பற்படையை ருஷ்யாவிற்கு அழைக்கச் செய்தது. 1890—ஆம் ஆண்டு ருஷ்யாவிற்கு வந்த கப்பற்படைக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. 1891—ஆம் ஆண்



(குறிப்புக்கான இடம்)

(குறிப்புக்கான இடம்)

சமாதானத்தைக் குலைக்கும் விஷயங்களின் மேல் தங்களுக்குள் கருத்துப் பரிமாறிக்கொள்ள ஒரு அரசியல் ஒப்பந்தம் மூலம் இரு நாடுகளும் ஒத்துக்கொண்டன.

ருஷ்யாவுடன் ஒரு இராணுவ ஒப்பந்தம் வைத்துக்கொள்ள பிரான்சு தயாராக இருந்தது. அவ்வொப்பந்தம் 1893—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31—ஆம் நாள் கையொப்பமிடப்பட்டது. இவ்வொப்பந்தம் பாதுகாப்புத் தன்மை படைத்ததாய் அமைந்தது. பிரான்சு, ஜெர்மனியாலோ, அல்லது ஜெர்மானிய உதவியுடன் இத்தாலியாலோ தாக்கப்பட்டால், ஜெர்மனியை எதிர்த்துப் போரிட தனது முழுவலிமையையும் ருஷ்யா உபயோகிக்க வேண்டும் பகைவனுக்கு எதிராக பிரான்சும், ருஷ்யாவும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள படைவீரர்களைக் செயலில் ஈடுபத்த வேண்டும். ஒப்பந்த்ததின் உள்ளடக்கம் இரகசியமாக வைக்கப்படல் வேண்டும். மும்முனை உடன்பாடு எவ்வளவு காலம் நின்று நிலைபெறுகிறதோ, அவ்வளவு காலம் இவ்வொப்பந்தமும் நின்று நிலவும்.

நேச ஒப்பந்தம் (1904) (The Entine Cordiale) ஆங்லோ—ஃபிரான்சு உறவின் வரலாற்றில் 1898—ஆம் ஆண்டு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அவ்வாண்டில் இரு நாடுகளுக்குமிடையே நிலவிய பகைமை உச்சக்கட்டத்தை அடைந்ததோ, போர் உருவாகும் சூழ்நிலையும் காணப்பட்டது. இங்கிலாந்தும், ஃபிரான்சும் பல்லாண்டு காலமாக விரோதிகளாகவே செயல்பட்டுவந்தன. 19—ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்காவின் மேல் ஆதிக்கம் செலுத்த இரு நாடுகளும் கொண்ட ஆர்வத்தால் விரோதிகளாகவே செயல்பட்டனர். ஆப்பிரிக்கா சம்பந்தப்பட்ட 1890—ஆம் ஆண்டு ஆங்கிலோ—பிரெஞ்சு உடன்பாடு பல பிரச்சனைகளை ஓரளவு தீர்த்து வைத்தது. மடகாஸ்கர் தீவில் பிரான்சு ஒரு காப்பரசு நாட்டைத் தோற்றுவிக்க அனுமதிக்கப்பட்டது. சகாராவில் ஃபிரான்சின் மேலான ஆதிக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றாலும் இரு நாடுகளுக்குமிடையே பகைமை நீடித்து வந்தது.

மேற்கு ஆப்பிரிக்கக் கடலோரத்திலிருந்து கிழக்கு ஆப்பிரிக்கக்கடல் கடற்கரைக்கு ஊடுருவதோ, சூடானின் மேல் ஆதிக்கம் செலுத்த ஃபிரான்சு விரும்பியது. இங்கிலாந்தின் அரசாங்கம் தன் கைவசமிருக்கும் வடக்கு, தெற்கு ஆப்பிரிக்கப் பகுதிகளை ஒருங்கிணைக்க விரும்பியமையால் ஃபிரான்சின் மேற்கூறிய விருப்பத்தை முறியடிக்க முனைந்தது. 1892—ஆம் ஆண்டு ஃபிரான்சிடம் இருந்த காங்கோ பகுதியிலிருந்து ஃபிரான்சின் படை புறப்பட்டு நைல் நதியின் மேல் பள்ளத்தாக்குப் பகுதியில் ஃபாஷோதா (Fashoda) என்ற இடத்தில் பிரான்சு நாட்டின் கொடியை பறக்கவிட்டது. இங்கிலாந்து எகிப்து நாடுகளைச் சார்ந்த படைகள் விரைந்து ஃபாஷோதா

(Fashoda) என்ற இடத்தில் பிரான்சு நாட்டின் கொடியை பறக்கவிடட்டது. இங்கிலாந்து எகிப்து நாடுகளைச் சார்ந்த படைகள் விரைந்து ஃபாஷோதா சென்று பறக்கவிட்ட கொடியை இறக்கும்படி ஃபிரான்சைக் கேட்டது. பிரான்சு மறுத்ததால் போருக்கான சாத்தியக்கூறுகள் உருவாகியது. அந்நேரத்தில் ஒரு புதிய அமைச்சரவை ஃபிரான்சில் பதவியேற்றது. டெல்காசி (Delcace) என்பவர் ஃபிரான்சின் வெளிநாட்டுறவு அமைச்சரானார். அவர் இப்பிரச்சனையை புதிய வழிமுறையில் அணுகினார். இங்கிலாந்தை எதிர்க்க ஃபிரான்சால் முடியாது என அவர் கருதினார். அல்சாசு, லோ—ரெய்ன் பகுதிகளை ஜெர்மனியிடமிருந்து பிரான்சுக்கு மீட்க வேண்டுமாயின் இங்கிலாந்தின் உதவி தேவை. இவ்வாறான சூழ்நிலையில் இங்கிலாந்தோடு போரிடல் உகந்ததன்று என்பதால் பஷோதாவிலிருந்து பின்வாங்க உத்தரவுகளை டெல்காசி பிறப்பித்தால் 1889—ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆங்கிலோ—பிரெஞ்சு மாநாடு கூடி ஒரு எல்லைக் கோட்டை நிர்ணயித்து அதற்கு மேற்காணும் நிலப்பரப்பில் இங்கிலாந்தும், கிழக்கில் ஃபிரான்சும் ஊடுருவுதல் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இருநாடுகளுக்குமிடையே நிலவும் பற்பல பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இங்கிலாந்து அரசாங்கத்தை டெல்காசி கேட்ட போதிலும் அதற்கு இங்கிலாந்து இணங்கவில்லை. இங்கிலாந்து, ஃபிரான்சை விட ஜெர்மனியிடம் அதிக அளவில் சார்புடையதால் இருந்தமையால் ஃபிரான்சின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. மேலும், ஃபிரான்சின் அமைச்சரவைகளின் மேல் இங்கிலாந்தின் அரசாங்கத்திற்கு போதிய நம்பிக்கை இல்லை. எனவே 1889ம் ஆண்டு இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு ஃபிரான்சில் மக்களின் ஆதரவை போதிய அளவில் பெறவில்லை. அவர்கள் பிரான்சு இங்கிலாந்திடம் சரணடைந்ததாகக் கருதினர். "போயர் போர்" (Boer War) ஆரம்பித்தவுடன் மீண்டும் இங்கிலாந்திற்கு், ஃபிரான்சிற்கும் இடையே நிலவிய உறவுகளில் பிளவு ஏற்பட்டது. போயர்கள் இங்கிலாந்து அரசிற்கு எதிராக போரிட்ட போது ஃபிரான்சு போயர்களை ஆதரித்தது. ஆனால் அப்போரில் ஜெர்மனி இங்கிலாந்தை ஆதரித்தது. எப்படியெனினும் இரண்டாம் வில்லியம் பிரிட்டனுடன் உடன்பாடு ஏற்படுத்த மறுத்தபொழுது நாடுகளின் உறவுகளில் ஒரு புதுத்திருப்பம் நிகழ்ந்தது. ஆங்கிலோ—ஜெர்மனி கூட்டுறவு ஏற்படுத்த விரும்பிய சேம்பர்லின் போன்ற தலைவர்கள் வெறுப்படைந்தனர். எனவே, அவர்கள் வேறு நண்பர்களைத் தேட

(குறிப்புக்கான இடம்)

முனைந்தனர். இவ்வடிப்படையில் பிரிட்டன் ஃபிரான்சோடு உடன்பாடு கொண்டது.

1902—ஆம் ஆண்டு பிரான்சோடு பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தது. 1903—ஆம் ஆண்டு ஏழாவது எட்வர்ட் மன்னர் பிரான்சுக்குச் சென்றபொழுது அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அதே ஆண்டு பிரான்சின் அதிபரும், வெளியுறவு அமைச்சரும் லண்டனுக்குச் சென்ற போது, அங்கு சிறப்பான வரவேற்பு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக 1903—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆங்கிலோ ஃபிரெஞ்சு மத்தியஸ்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. எவ்வாறெனினும் 1904—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முக்கியமான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இவ்வொப்பந்தம் எகிப்து, மொராக்கோ, மேற்கு ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் சியாம் நியஹைப்ரட்ஸ் போன்ற இடங்களைப் பற்றிய பிரச்சனைகளை ஆய்கிறது. இவ்வொப்பந்தம் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய இரு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த உடன்படிக்க தான் 1904—ஆம் ஆண்டு ஏற்பட்ட நேச ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது. 1905—1906, 1908—1911 ஆகிய ஆண்டுகளில் இவ்வொப்பந்தம் மூன்று தடவை மொராக்கோ நெருக்கடியின் மூலம் சோதித்துப் பார்க்கப்பட்டது. இம்மூன்று முறையும் பிரான்சை பிரிட்டன் ஆதரித்தது. மொராக்கோ நெருக்கடியில் பிரிட்டன் பிரான்சிற்கு அரசியல் தந்திர அடிப்படையிலான ஆதரவு மாத்திரம் அளிக்க நேச ஒப்பந்தத்தின் மூலம் கடமைப்பட்டிருந்தது. ஃபிரான்சை கொடுமைப்படுத்தி நேச ஒப்பந்தத்தை முறிக்க ஜெர்மனி முயற்சிக்கின்றது என்ற பொது கருத்து இங்கிலாந்தில் பரவலாக நிலவியது. இங்கிலாந்தோடு நட்புறவு கொண்டிருப்பதால் ஃபிரான்சு அச்சுறுத்தப்படுகிறது என்றும் உணரப்பட்டது. அரசியல், வாணிப அடிப்படையிலும் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குமிடையே பகைமை நிலவியது. ஜெர்மனியின் கடற்படை வேகமாக வளர்ச்சியுற்று வந்தது. இங்கிலாந்தின் தலைவர்களை கவலையுறச் செய்தது. எனவே ஃபிரான்சிற்கு அரசியல் தந்திர அடிப்படை சம்மந்தப்பட்ட உதவியோடு, பிறபல உதவிகளும் செய்ய பிரிட்டன் தயாராக இருந்தது. இங்கிலாந்து ஆர்வத்தோடு ஃபிரான்சைச் சார்ந்து இயங்கியது. ஆனால் இங்கிலாந்து பிரான்சோடு முறையாக எந்த உடன்பாடும் ஏற்படுத்தத் தயாராக இல்லை. அவ்வாறு உடன்பாடு ஏற்படின் அவ்வுடன்பாடு இங்கிலாந்தை போரில் ஈடுபடுத்தலாம். மேலும் அவ்வாறான உடன்பாடு ஜெர்மனியோடு

இங்கிலாந்து கொண்டுள்ள பகைமையை வளரச் செய்யும் என்ற எண்ணம் இதற்குக் காரணமாகும்.

### 2.1.9. ஆங்கிலோ – ருஷ்யா ஒப்பந்தம் (1907) (Anglo – Russian Convention)

1894—ஆம் ஆண்டு ஏற்பட்ட ஃபிராங்கோ— ருஷ்யா உடன்படிக்கை ஃபிரான்சையும், ருஷ்யாவையும் ஒன்று சேர்ந்தது. ஆங்கிலோ – பிரான்சு ஒப்பந்தம் இங்கிலாந்தையும், ஃபிரான்சையும் ஒன்றிணைத்தது. எனவே இங்கிலாந்தையும், ருஷ்யாவையும் ஒன்றிணைத்தல் அவிசயம் என்பது உணரப்பட்டது. இவ்விணைப்பு ஆங்கிலோ –ருஷ்யா ஒப்பந்தத்தின் வாயிலாக நடந்தேறியது. திபெத்து ஆப்கானிஸ்தான், பெர்சியா போன்ற இடங்களை இவ்வொப்பந்தம் ஆய்ந்தது திபெத்தைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்தும், ருஷ்யாவும் சீனாவின் மேலனா இறைமையை ஏற்றுக்கொண்டு அந்நாட்டின் உள்நாட்டு விஷயங்களிலோ அல்லது அந்நாட்டிடம் சலுகைகள் பெறுகின்ற விசயங்களிலோ ஈடுபடுவதில்லை என சம்மதித்தது. ஆப்கானிஸ்தானத்தைப் பொறுத்தமட்டில் அதைத் தன்னோடு இணைப்பதில்லையென பிரிட்டனைச் சார்ந்த அதிகாரிகளின் துணயுடன் தான் அந்நாட்டு விசயங்களில் ஈடுபடுவோம் என்றும் உறுதியளித்தது. பெர்சியாவைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்தும், ருஷ்யாவும் அந்நாட்டின் ஒருமைப்பாட்டையும், சுதந்திரத்தையும் மதித்தது. எவ்வாறெனினும், அந்நாட்டை மூன்று பிராந்தியங்களாகப் பிரித்தனர். வட பிராந்தியத்தின் மேல் ருஷ்யாவும், தெற்குப் பிரர்ந்தியத்தின் மேல் பிரிட்டனும் ஆதிக்கம் செலுத்தலாம் இரு பிராந்தியங்களுக்கும் இடைப்படட் மத்தியப் பகுதியில் இரு நாடுகளும் எந்தவிதச் சலுகையும் கிடையாது. இவ்வாறு பெர்சியாவைப் பிரித்ததில் பெர்சிய மன்னரை கலந்தாலோசிக்கவில்லை.

1907—ஆம் ஆண்டு ஒப்பந்தம் மூலம் இங்கிலாந்திற்கும் ருஷ்யாவிற்கும் இடையில் கடைப்பிடிக்க வேண்டிய இராணுவக் கடமைகள் ஒன்றும் இல்லாத போதிலும், காலம் செல்லச் செல்ல இரு நாடுகளும் ஒன்றோடொன்று நெருங்கி வர முற்பட்டன. ஜெர்மனியால் ஆபத்து ஏற்படலாம் என்பதை முன்னிட்டு தங்களிடம் நிலவிய சிறிய வேறுபாடுகளை மறக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. 1970—ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1904—ஆம் ஆண்டு வருவான நேச ஒப்பந்தத்தைமும்முனை ஒப்பந்தமாக மாற்றியது. ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா ஹங்கேரிக்கு எதிராக இவ்வொப்பந்தத்தின் மூலம் 1914ஆம் ஆண்டு இங்கிலாந்து, ஃபிரான்சு, ருஷ்யா போன்ற நாடுகள் போரில் இறங்கின.

(குறிப்புக்கான இடம்)

மும்முனை ஒப்பந்தம் (Triple Entente) உருவாகிய பிறகு மும்முனை உடன்பாட்டைக் (Triple Alliance) காட்டிலும் மும்முனை ஒப்பந்தம் பொருளாதார, இராணுவ, கடற்படை வல்லமையில் மேம்பட்ட நிலையை அடைந்திருப்பதை ஜெர்மனியால் உணரமுடிந்தது. ஒப்பந்தத்தில் ஈடுபட்ட நாடுகளால் தனது முன்னேற்றம் எல்லா வழிகளிலும் தடைசெய்யப்படுகிறது என்று ஜெர்மனி எண்ணியது. அல்சாசு — லோரெய்ன், மொராக்கோ, கடற்படைக் போட்டி, பெர்லின் — பாக்தாத் ரெயில்பாதைபோன்றவற்றில் ஒப்பந்த நாடுகள் ஜெர்மனியை எதிர்த்தது. பால்கன் நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதிலும் ஆஸ்திரியாவிற்கும், ருஷ்யாவிற்குமிடையே தகராறு நிலவியது. ஒரு போரில் ஆஸ்திரியா ஈடபட்டால், ஜெர்மனியும் அப்போரில் பெரும்பாலும் ஈடுபடும் என்ற நிலை காணப்பட்ட 1907—ஆம் ஆண்டு ஆங்கிலோ — ருஷ்ய ஒப்பந்தம் ஜெர்மனிக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல என்று ருஷ்யாவும் இங்கிலாந்தும் கூறிய போதும் ஜெர்மனி திருப்தியடையவில்லை.

இவ்வெறுப்புணர்ச்சி பெர்லின் — பாக்தாத் ரெயில்பாதைப் பிரச்சனையில் முற்றியது அரசியல் பொருளாதாரக் காரணங்களுக்காக ருஷ்யா பெர்லின் — பாக்தாத் ரெயில்பாதைத் திட்டத்தை எதிர்த்தது. ஃபிரான்சிற்கும் ருஷ்யாவிற்கும் உடன்பாடு ஏற்பட்டமையால் டெல்காசி அத்திட்டத்தை எதிர்த்தார். மெசபட்டோமியா, பெர்சியா, பிரிட்டிஷ், இந்தியா போன்ற இடங்களில் பிரிட்டனின் செல்வாக்கு இத்திட்டதால் பாதிக்கப்படலாம் என்ற அச்சத்தோடு பிரிட்டன் இத்திட்டத்தை எதிர்த்தது. ரெயில்பாதைத் திட்டத்தின் ஒரு பகுதி 1904—ஆம் ஆண்டு ஜெர்மனியால் முடிவுற்ற போதிலும், ஒப்பந்த நாடுகளின் எதிர்ப்பால் அத்திட்டத்தை மேலும் தொடர முடியவில்லை.

மேலும், கடற்படையில் தான் உலகில் பெற்றிருக்கும் மேம்பட்ட நிலையை பாதுகாக்க பிரிட்டன் தீர்மானித்தது. இரண்டாவது வில்லியம் பிரிட்டனின் மேம்பட்ட நிலையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று நினைத்தார். ஜெர்மனியை உலகிலேயே வலிமைமிக்க நாடாக மாற்ற அவர் எண்ணினார். அவ்வெண்ணம் ஈடேற வேண்டுமெனில் அவர் இங்கிலாந்தையும், தன்னோடு உறவு கொண்ட நாடுகளையும் வெல்ல வேண்டும், அந்நோக்கத்தை அடைய எச்செயலையும் புரிய அவர் தயாரானார்.

## 2.1.8. மும்முனை உடன்பாட்டிற்கும் மும்முனை ஒப்பந்தத்திற்குமிடையே நிலவிய போட்டி.

1907—ஆம் ஆண்டு முதல் 1914ஆம் ஆண்டு வரை மும்முனை உடன்பாட்டிற்கும் மும்முனை ஒப்பந்தத்திற்குமிடையே பயங்கரமான போட்டி நிலவியது. 1907, 1912—ஆம் ஆண்டுகளில் மும்முனை உடன்பாடு புதுப்பிக்கப்பட்ட போதிலும், அவ்வுடன்பாடு பல காரணங்களால் நாளுக்கு நாள் தனது வளமையை இழந்தது. ஆஸ்திரியாவில் சில தகராறுகள் எழுந்தது. அது பால்கன் அரசியலில் தன்னை அதிக அளவில் ஈடுபடுத்திக்கொண்டது. இத்தாலியின் மீட்கப்படாத சில பகுதிகளைப் பற்றி ஆஸ்திரியாவிற்கும், இத்தாலிக்குமிடையே வெறுப்புணர்ச்சி உருவானது. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் இத்தாலி மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளை மீட்க இத்தாலி தீர்மானித்தது. ஆஸ்திரியா இத்தாலியின் வேண்டுகோளுக்கு இங்காததால், இரண்டு நாடுகளுக்குமிடையே உண்மையான ஒத்துழைப்பு நிலவவில்லை. மேலும் ஆஸ்திரியாவும், இத்தாலியும் பால்கன் பிரச்சனையில் எதிரிகளாக மாறினர். மேற்கூறிய காரியங்கள் மும்முனை உடன்பாட்டின் வலுவை இழக்கச் செய்தது. இத்தாலி 1902ஆம் ஆண்டு பிரான்சோடும் 1909—ஆம் ஆண்டு ருஷ்யாவோடும் உடன்பாடு செய்துகொண்டது. அல்ஜிசிரஸ் மாநாட்டில் (Algeciros Conference) இத்தாலி, ஜெர்மனிக்கு விரோதமாக ஃபிரான்சோடு இணைந்து வாக்களித்தது.

ஆனால் அதே நேரத்தில் மும்முனை ஒப்பந்தம் நாளுக்குநாள் வலுப்பெற்று வந்தது. ஒப்பந்த நாடுகளுக்கிடையே எழுந்த பிரச்சனைகள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்பட்டது. மேலும், பெரிய நோக்கங்களுக்காக சிறிய வேறுபாடுகளை புறக்கணிக்க ஒப்பந்த நாடுகள் தயாராயிருந்தன.

மும்முனை ஒப்பந்தம் மும்முனை உடன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஐரோப்பா இரு பெரும் ஆயுதப்படை பகுதியாகப் பிரிந்தது. இப்பகுதிகளுக்கிடையே நிலவும் பிரிவினைகளையும், சந்தேகங்களையும் குறைத்து ஒருமைப்பாட்டின் மூலம் சமாதானத்தை தளவாடங்கள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உடன்பாடு கண்ட நாடுகள் ஒன்றையொன்று சார்ந்து இயங்கின. இராணுவ கடற்படை ஏற்படுத்தும் பெருக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளால் சந்தேகங்களும் அச்சங்களும் உருவாகின. இவ்வம்சங்களும் சந்தேகங்களும் மேலும் தளவாடங்களைப் பெருக்க ஊக்குவித்தது. தொடர்ந்து முதலாம் உலகப்போரும் எழுந்தது.

(குறிப்புக்கான இடம்)

## 2.1.9. முதல் உலகப்போரின் விளைவுகள்

- உலக வரலாற்றிலேயே போரில் ஈடுபட்ட அத்தனை நாடுகளும் தங்கள் முழுச்செல்வத்தையும், திறமையையும் திரட்டிப் பங்கெடுத்த நிகழ்ச்சி முதல் உலகப்போரில் நிகழ்ந்தது. அப்போர் ஒரு முழு அளவிலான போராகும். போரின் இழப்புகளைப் பற்றி மாறுபாடான மதிப்பீடுகள் வெளியிடப்பட்டன என்றாலும், ஏறக்குறைய எட்டு லட்சம் போர் வீரர்களும், அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள சாதாரணக் குடிமக்களுக்கு அப்போரில் பங்கெடுத்த நாடுகள் செலவிடப்பட்ட தொகையை மதிப்பிட்டால் கிட்டத்தட்ட 186 மில்லியன் டாலர் என தெரிய வருகிறது. இவற்றோடு சொத்துக்கள் அழிவுற்றதால் ஏற்பட்ட நஷ்டம், கப்பல்கள் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட நஷ்டம், அழிவிற்காக செலவிடப்பட்ட உழைப்புச் சக்தி போன்ற செலவினங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். போரினால் ஐரோப்பிய பொருளாதார நிலை நலிவுற்றது. சாதான பொருளாதார வாழ்வை தேசிய கடனும், பணவீக்கமும் சீர்குலைத்து பொருளாதாரச் சீர்குலைவு ஐரோப்பிய வாணிபத்தில் நிலவிய சமநிலையைப் பாதித்தது. போருக்குப்பின் அமெரிக்கா உலகிலேயே சிறந்த தொழில்மயமான நாடாக மாறியது. தூரக்கிழக்கு நாட்டில் ஜப்பானின் எழுச்சி, இதுவரை கிழக்கிந்திய நாடுகளின் வாணிபத்தை ஏகபோகமாக இயக்கி வந்த வெள்ளையர் நாடுகளின் நலனைப் பாதித்தது.

முதல் உலகப்போரால் ஏற்பட்ட அரசியல் விளைவுகள் கணக்கிட முடியாது. ஜெர்மனி, ஆஸ்திரியா. ருஷ்யா போன் நாடுகளில் முடியாட்சி வீழ்ச்சியுற்றது. ஆனால் உலகை மக்களாட்சி மலர பாதுகாப்பான அமைப்பாக மாற்ற வேண்டும் என்று கண்ட கனா நிறைவேறவில்லை. ஃபாசிசக கொள்கை, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளில் எழுச்சியுற்றது. மக்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது. பழைய முதலாளித்துவ அடிப்படையிலான மக்களாட்சியை அச்சுறுத்துவதாக ருஷ்யாவில் நடந்த தொழிலாளர் புரட்சி அமைந்தது. தொழிலாளர் இயக்கங்களுக்கும், சமதர்ம கட்சிகளுக்கும் புதிய அளவிலான ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டது. தொழிலாளரின் நலன் பேணும் சட்டங்களை முதலாளித்துவ மக்களாட்சியில் உருவாக்கி தொழிலாளரின் நிலையை மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச சங்கம் தனது சர்வேதச தொழிலாளர் அமைப்புப் பிரிவு மூலம் தொழிலாளர் நல

மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தது. இத்தாலியில் முசோலினியும், ஜெர்மனியில் ஹிட்லரும், பின்பற்றி வந்த புதிய பிற்போக்கு தத்துவங்களை மக்களாட்சியைக் கடுமையாக எதிர்த்தது. இப்போக்கு கோட்பாடு ஃபாஸிசம் அல்லது நாசிசம் என்று அழைக்கப்பட்டது. சர்வதேச அரங்கில் ஒத்துழைப்பை உருவாக்கும் வழி வகையைச் சர்வதேசச் சங்கம் உருவாக்கிக் கொடுத்தது. ஆனால் சர்வதேசச் சங்கத்தில் அங்கம் வகிக்கம் நாடுகள் ஒன்றோடொன்று கொண்ட பகைமையால், கூட்டுப் பாதுகாப்பிற்கு உத்தரவாதத்துவம் கொடுக்க சர்வதேசச் சங்கம் தவறிவிட்டது. எனவே பழைய அதிகாரச் சமநிலை (Balance of Power) முறையை திரும்பவும் உலகம் பின்பற்ற ஆரம்பித்தது. இவ்வாறு சமாதானம் தகர்த்தெறியப்பட்டது.

தூரக்கிழக்கு நாட்டில் ஜப்பானின் எழுச்சி ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் ஒரு சவாலாக அமைந்தது. தனது துணி ஆலைத் தொழிலால் போருக்குப்பின் சீனா, இந்தியா, தென்அமெரிக்கா போன்ற நாடுகளின் சந்தையைப் பிடிக்க ஜப்பான் மேற்கொண்ட முயற்சி வெற்றிகரமாக அமைந்தது. போருக்குப்பின் உலக வாணிபத்தில் அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்து வந்தது யாரும் மறுக்க முடியாத உண்மை. முதல் உலகப்போர் முடிவுற்ற ஆண்டிலிருந்து சில ஆண்டுகளுக்கு அமெரிக்கா கடன் வழங்கும் ஒரு நாடாக விளங்கியது. போரால் ஏற்பட்ட அழிவிலிருந்து ஐரோப்பாவைத் தட்டி எழுப்பவும் நஷ்ட ஈடு வழங்கவும் தேவையான தொகையை பல ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா கடனாக வழங்கியது. வில்சனின் பதினான்கு அம்சக் கோட்பாட்டால் உருவான அமைப்பாக சர்வதேச சங்கம் திகழ்நதாலும், அவ்வமைப்பில் பங்கு பெற அமெரிக்க மறுத்துவிட்டது.

### 2.1.10. பாரிசில் சமாதான மாநாடு (The Peace Conference of Peris)

உலக அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களை மாற்றியமைக்க செல்வந்தர்கள், அறிஞர்கள், வாணிகர்கள் முன்னேற்றமடையா நாடுகளின் பிரதிநிதிகள், வல்லரசுகளின் பிரதிநிதிகள் போன்றோர் பாரிசில் ஒன்று கூடி கலந்தாலோசித்தனர். அமெரிக்க அதிபர் வில்சன், பிரான்சு பிரதமர் கிளமன்சு, இங்கிலாந்து பிரதமர் லாவட ஜார்ஜ் போன்றோரின் இயக்குதலினால் இம்மாநாட்டு வேலைகள் நடந்தேறியது. ஆனால் இம்மாநாடு இரக்கமற்ற முறையில் செயல்பட ஆரம்பித்ததால், இத்தலைவர்களுக்கு மாநாட்டின் மேல் எந்தக் கட்டுப்பாடும்

(குறிப்புக்கான இடம்)

இல்லாமலாகிவிட்டது. பலதரப்பட்ட பிரச்சனைகளும், தேவைகளும் வலியுறுத்தப்படல், முரண்பாடான விருப்பங்களைச் செயல்படுத்த பலதரப்பட்டோரும் முனைதல், போர்க்காலத்தில் உருவாக்கப்பட்ட ரகசிய உடன்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை போன்றவை மாநாட்டு அமைப்பாளர்களின் முன்னால் வைக்கப்பட்ட சில தடைகளாகக் கருதப்பட்டது. இவ்வகையான தடைகளில் மூன்று துடைகள் முக்கியமானவைகளாகக் கருதப்பட்டது. தீவிரமான நாட்டுப்பற்று இத்தடைகளுன் முதன்மையானதாக எண்ணப்பட்டது. செக்கோஷ்லவோக்கியர், போலந்து நாட்டைச் சேர்ந்தோர், ருமானியர்கள், செர்பியர்கள் போன்றோர் தேசிய அரசாங்கங்களை நிறுவனர். இந்நாட்டினர்களின் மேல் தங்கள் முடிவுகளைத் திணக்க நேசநாட்டினரால் (Allied Powers) முடியவில்லை. இரண்டாவதாக, போருக்கும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளுக்கும் ஜெர்மனி முழுப்பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. போர்க்காலத்தில் ஏற்பட்ட இழப்புக்கான நஷ்ட ஈடும், ஜெர்மனியின் வரம்பு மீறிய செயலால் விளைந்த துன்பங்களுக்காகப் பரிகாரமும் வேண்டும் என்ற கோரிக்கையை ஐரோப்பாவை சார்ந்த மக்கள் எழுப்பினர். பாரிசில் கூடிய தலைவர்கள் ஜெர்மனியை சிறிதே கண்டிக்க வேண்டும் என்று கருதிய போதிலும் அவர்களுக்கு அவ்வாறு செய்யப் போதிய தைரியம் இல்லை. ஏனென்றால் சரியான தண்டனை ஜெர்மனிக்கு அளிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை அவர்கள் முன்னதாகவே ஏற்றுக்கொண்டிருந்தனர். மூன்றாவதாக, சரியான இடத்தை மாநாட்டிற்குத் தேர்ந்தெடுக்கவில்லை. பாரீஸ் நகரம் போரினால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து முழு அளவில் அந்நேரம் விடுபட்டிருக்கவில்லை.

தனிப்பட்ட மனிதர்களின் குணநலனும் மாநாட்டின் மேல் அதிகஅளவில் பிரதிபலித்தது. மாநாட்டுத் தலைவர்களுள் வில்சன் பெருமதிப்புடையவராய்த் திகழ்ந்தார். அவருடைய தொலைநோக்கக் கோட்பாடுகள் அவரை வெற்றிச் சமாதானத்திற்காகப் பாடுபடச் செய்தது. அமெரிக்காவைச் சார்ந்த வில்சன், இங்கிலாந்ததைச் சார்ந்த லாயிட் ஜார்ஜ், பிரான்சைச் சார்ந்த கிளமன்சு, இத்தாலியைச் சார்ந்த அர்லேன்டொ ஆகிய நான்கு தலைவர்களும் ஒரு உடன்பாடு காணும் பொறுப்பேற்றனர். ஆனால் அத்தலைவர்களிடையே ஒரே சிரான கருத்து நிலவவில்லை. பகைவனைப் பழிவாங்குவதைக் காட்டிலும் நிலையான நீண்டகால சமாதானத்தின் நீதி நடுநிலை போன்றவற்றின் அடிப்படையில் உருவாக்க வேண்டும் என்று வில்சன் விரும்பினார். ஃபிரான்சைக் சார்ந்த கிளமென்சும், இத்தாலியைச் சார்ந்த அர்லேன்டோடும் ஃபிரான்சு, இத்தாலி, ஆகிய நாடுகளின் நிலப்பகுதிகளைப் பாதுகாப்பத்தில் கவனம்

செலுத்தினார். அவர்கள் உலகசமாதானம் என்ற பிரச்சனையைப் பற்றிக் கவலைப்படவில்லை. உண்மை, நீதி ஆகியவற்றின அடிப்படையில் சர்வதேச சமாதானத்தை உருவாக்குவதில் லாயிட் ஜார்ஜ் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால், பிரிட்டனின் விருப்பங்கள் பாதுகாக்கப்பட்டதால்தான் இக்காரியங்கள் செயல்படவேண்டும் என்று எண்ணினார். ஆகையால் இவ்வாறான மாறுபட்ட அணுகுமுறைகள் தலைவர்களிடையே நிலவியதால் மாநாட்டு நடவடிக்கைகள் தடைப்பட்டன.

வெற்றியின்றி சமாதானத்தைப் உருவாக்குவதை அதிகர் வில்சன் ஆதரித்தார். ஆகையால் உலகில் மக்களாட்சியைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளை நிலை நாட்டவும் ஜெர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்ய அமெரிக்க சட்டமன்றத்தை அதிபர் வில்சன் ஊக்குவித்தார் 1918—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் காங்கிரசில் நிகழ்த்திய உரையில் வருங்காலத்தில் உலகில் சமாதானம் ஏற்படவேண்டிய அடிப்படையை அமெரிக்க அதிபர் பிரகடனம் செய்தார். இதுதான் சிறப்புமிக்க "பதினான்கு அம்சம்" என்று அழைக்கப்பட்டது.

சமாதான உடன்பாடு (The Peace Settlement) நேசநாடுகள் ஜெர்மனியுடன் போர் நிறுத்த உடன்பாடு செய்ய ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து 1918ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள் முதல் உலகப்போர் முடிவுற்றது. சமாதான உடன்பாடு ஏற்பட ஏழுமாதங்கள் கூடுதலாக ஆகியது. பாரிஸில் நடந்த சமாதான மாநாட்டில் ஐந்து உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. அதில் மகிவும் முக்கியமானதாக கருதப்பட்டது வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆகும்.

## 2.1.11. வெர்சேல்ஸ் உடன்படிக்கை

நேச நாடுகளுக்கும், ஜெர்மனிக்கும் இடையே வெர்சேல்ஸ் உடன்படிக்கை 1919—ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28ம் நாள் கையொப்பமானது. ஆறுமாத காலம் பாரிஸ் மாநாட்டில் நிகழ்ந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எக்கட்டத்திலும் ஜெர்மனியர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லையாகையால், இது ஒரு திணிக்கப்பட்ட சமாதான ஏற்பாடு என்றழைக்கப்படுகிறது. மே 7—ஆம் தேதியன்று ஜெர்மானியப் பிரிதிநதிகள் தலைவராக வந்த வெளிநாட்டு அமைச்சரிடம் சமாதான உடன்படிக்கைகளைக் கொடுத்து, என்று வாரங்களுக்குள் அறிவித்தனர். மே 29ஆம் தேதி எண்ணற்ற ஆட்சேபனைகள் ஜெர்மானியரால் தெரிவிக்கப்பட்டது. லாயிட் ஜார்ஜ் சில சலுகைக்ள அளிக்க முன்வந்த போதிலும் கிளமன்சு விட்டுக் கொடுக்காத ஒரு போக்கினைக்

(குறிப்புக்கான இடம்)

கடைபிடித்தார். ஒரு சில சிறிய மாறுதல்களைச் செய்து, மறுபரிசீலனை செய்த உடன்படிக்கையை ஜெர்மானியரிடம் கொடுத்தனர். உடன்படிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்ள ஐந்து நாள் அவகாசமும் கொடுக்கப்பட்டது. உடன்படிக்கையை நிராகரிக்கும் பொழுது ஜெர்மனி மீது படையெடுப்பு நடைபெறும் என்று பயமுறுத்தப்பட்டது. ஜெர்மனி அந்நேரத்தில் பஞ்சத்தால் அவதியுற்றதால் போர்க் குற்றவாளிகளைத் தண்டித்தல் போர்க்குற்றவாளிகளை ஒப்படைத்தல் போன்ற சில விஷயங்களைத் தவிர்த்து ஏனையவற்றை ஜெர்மன் குடியரசின் தேசிய சட்டசபை ஒப்புக்கொண்டது. ஆனால், ஜெர்மனியர்களின் திருத்தங்களை நேச நாட்டினர் ஏற்றுக்கொள்ளாததால் வெறுவழியின்றி 1919—ம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் ஜெர்மானியர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

440 விதிகளைக் கொண்ட பல பிரிவுகளான மிகப்பெரிய ஆவணத் தொகுப்பாக வெர்சேல்ஸ் உடன்படிக்கை காட்சியளித்தது. இவ்வுடன்படிக்கை ஜெர்மானிய நிலப்பரப்பு இராணுவம், பொருளாதாரம், போர் இழப்பு மீட்டு மற்றும் அதன் அரசியல் ஏற்பாடுகள் பற்றிய சில முடிவுகளை ஜெர்மனியை ஏற்கச் செய்தது.

### 2.1.12. வெல்சேல்ஸ் உடன்பாடு பற்றிய திறனாய்வு

தற்காலத்தில் தேசங்களுக்கிடையே கையொப்பமிடப்பட்ட ஆவணங்களில் பிரச்சனை மிக ஒன்றாக வெர்செயில்ஸ் உடன்படிக்கை கருதப்படுகிறது. பின்வருகின்ற அளவில் அதனைத் திறனாய்வு செய்யலாம்.

1) திணக்கப்பட்ட அமைதி (Directed Peace): சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எக்கட்டத்திலும் ஜெர்மானியர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஜெர்மானியர்களின் எதிர்ப்புக்கள் எளிதாக ஒதுக்கி வைக்கப்பட்டு, உடன்படிக்கையை நிராகரிக்கும் பொழுது ஜெர்மனி மீது படையெடுக்கப்படும் என்று பயமுறுத்தி உடன்பாட்டில் கையெழுத்திடச் செய்தனர். போருக்குப்பின் உருவாக்கப்படும் உடன்பாடுகள் பொதுவாக அமைதியை திணித்த போதிலும் தற்காலத்தில் உருவாக்கப்பட்ட உடன்பாடுகளில் வெர்சேல்ஸ் உடன்படிக்கையில்தான் அமைதி திணிக்கப்படல் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஜெர்மனியின் பழிவாங்கும் போக்கு நேர நாடுகளை கடினமான போக்கைப் பின்பற்றச் செய்தது.

(குறிப்புக்கான இடம்)

ஆனால் நஷ்ட ஈட்டுத் தொகையை 1933–ஆம் ஆண்டு ரத்து செய்தது, நேச நாடுகளின் இராணுவம் ஜெர்மன் பகுதியிலிருந்து 15 ஆண்டு நிறைவுறுவதற்கு முன்னரே பின்வாங்கப்பட்டது. ஒரு டஜன் போர் குற்றவாளிகள் விசாரணை செய்யப்பட்டு அவர்களுக்கு சிறிய தண்டனைகள் வழங்கப்பட்டது போன்றவற்றை நோக்கும் போது வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் கடினப்போக்கு நடைமுறையில் குறைக்கப்பட்டது புலனாகிறது.

**(2) பழிவாங்கும் மனநிலை (Spirit of revenge):** அறிவற்ற முறையில் நேச நாட்டினர் பழிவாங்கும் போக்கினைக் கடைப்பிடித்தனர். சமாதானத்தை நிலைநாட்ட பாடுபட்டவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு இரக்கமான போக்கைக் கடைப்பிடித்திருந்தால் அமைதியை நிலைநாட்டச் சாதகமான சூழ்நிலையை நன்முறையில் தோற்றுவித்திருக்கலாம்.

(3) அநீதியான பொருளாதார குடியேற்ற நிபந்தனைகள். (Unjust Economic and colonial Terms): உடன்படிக்கை அநீதியான பொருளாதார நிபந்தனைகள் ஜெர்மனி மேல் திணித்தது. ஜெர்மனியின் நிலப்பரப்பினை 1/8 பாகத்திற்கு மேல் குறைத்ததோடு அதன் ஜனத்தொகையை 6,50,000 ஆகக் குறைத்து, குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றியது 15% புல்வெளியை ஜெர்மனி இழந்ததோடு, 12% கால்நடை விலங்குகளையும் இழந்தது. அதன் உற்பத்திக் கூடங்களில் 10% ஐயும் இழந்தது.

(4) நாட்டுப்பற்று, தனிமனித தற்சார்புரிமை ஆகிய தத்துவங்கள் முழு அளவில் பின்பற்றப்படவில்லை. (Prinicples of Nationalism and Self-determination not universally followed): நாட்டுப்பற்று தனிமனித தற்சார்புரிமை ஆகிய தத்துவங்கள் யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவோக்கியா ஆகிய நாடுகளைப் பொறுத்தமட்டில் பின்பற்றப்பட்ட போதிலும் ஜெர்மனியர் அதிகமாயிருக்கும் போசன், மேற்கு பிரஷ்யா, டேன்சிக் ஆகிய இடங்களில் மேற்கூறிய தத்துவம் முழு அளிவல் பின்பற்றப்படவில்லை. ஜெர்மனி, ஆஸ்திரிய ஆகிய நாடுகளை ஒன்று சேர தடை செய்வதிலிருந்து இத்தத்துவம் மீறப்பட்டது புலனாகிறது.

(5) பரஸ்பர போக்கின்மை (Lack of Reciprocity): உடன்படிக்கையில் காணப்பட்ட பல ஏற்பாடுகளையும் ஜெர்மனியில் மட்டுமே செயல்படுத்தினர். நேச நாட்டினர் அவ்வேற்பாட்டிலிருந்து

(குறிப்புக்கான இடம்)

விடுவிக்கப்பட்டனர். படைக்குறைப்பு, போர்க்குற்றம், மானிய முறைகள் போன்றவற்றிலிருந்து இப்போக்கு புலனாகிறது. பரஸ்பர போக்கின்மையால் இவ்வுடன்பாடு வலிமையின் அடிப்படையில் உருவான ஒன்றாக எண்ணப்படுகிறது.

(6) நம்பிக்கை மீறல் (Breach of Peace): ஜெர்மனி வில்சனின் பதினான்கு அம்சத்தின் அடிப்படையில் உருவாகவில்லை. எனவே இவ்வுடன்படிக்கையை நம்பிக்கை மீறல் என்று கூறலாம்.

(7) உடன்படிக்கையும் இரண்டாம் உலகப்போரும்: (Treaty and Second World War) இவ்வுடன்படிக்கை இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டது. ஜெர்மனியை நடத்திய விரம் மிகக் கொடூரமாக அமைந்தது. ஆகவே ஜெர்மனி வருகின்ற எல்லாக் காலங்களையும் அவ்வுடன்பாட்டின் நிபந்தனைகளை ஏற்று நடக்குமா என்பதை யாரும் எதிர்பார்க்க முடியாது அடுத்த இருபது ஆண்டுகளில் உடன்படிக்கையின் சில ஏற்பாடுகள் தவறவிடப்பட்டது. இன்னும் சில ஏற்பாடுகளை ஏற்க நேச நாட்டிலிருந்து எதிர்ப்பு இல்லாமையால் ஜெர்மனி மறுத்தது. பிற பல ஏற்பாடுகளைக் கடும் எதிர்ப்புக்களின் மத்தியில் ஜெர்மனி மீறியது. இவ்வாறு, நாளடைவில் வெர்சேல்ஸ் உடன்படிக்கை முற்றிலுமாக சின்னாபின்மாக்கப்பட்டது. வெற்றி பெற்றோரையும், தோல்வியுற்றோரையும் இவ்வுடன்படிக்கை திருப்பதிபடுத்தாமையால் இந்நிலை ஏற்பட வழி ஏற்பட்டது. மேலும், உடன்படிக்கையின் ஏற்பாடுகளைத் தீவிரமாகக கடைப்பிடிக்க நேச நாட்டினர் முயற்சிக்கவில்லை. நேரம் கிடைத்தவுடன் உடன்படிக்கையைக் காற்றில் பறக்கவிட மேற்கூறிய காரணங்கள் ஜெர்மனியை ஊக்குவித்தது. ஆனால் உடன்படிக்கையில் காணப்பட்ட தவறுகள் மட்டுமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவில்லை என்று எண்ணுதல் கூடாது. உண்மையில் உடன்படிக்கையைத் தொடர்ந்து நேச நாடுகளும், ஜெர்மனியும் பின்பற்றிய கொள்கையே முக்கியக் காரணம்.

### 2.1.13. வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1919—1939)

வெர்சேல்ஸ் உடன்படிக்கை (1919—1939) 20 வருடகாலத்திற்கே அமைதியைக் காக்க முடிந்தது என்பது வருந்ததத்தக்தே. சிரில் ஃபால்ஸ் "இரண்டாவது உலகப்போர், பழிவாங்கும் எண்ணத்துடன் ஜெர்மனி ஏற்படுத்திய போரே" என்று கூறுகிறார். இரண்டாவது உலகப்போரின் காரணங்கள் வெர்சேல்ஸ் உடன்படிக்கையிலேயே விதைக்கப்பட்டு விட்டது. ஜெர்மனி அவமதிக்கப்பட்ட தோடில்லாமல் துப்பாக்கி முனையில் அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட நேரிட்டது. அதுதன்

குடியேற்றங்களையும், வெளிநாட்டு சலுகைகளையும் இழக்க நேரிட்டது. ஜெர்மனி இரண்டாகப் பிளக்கப்பட்டது. டான்சிக் (Danzig) என்ற ஜெர்மானிய் நகரம் போலந்துக்குட்பட்ட சுதந்திர நாடாக (Free city) ஆயிற்று. அதன் கப்பற்படை சிதறுண்டு, இராணுவம் மிகுந்த அளவில் குறைவுபடுத்தப்பட்டது. நிலக்கரி, எஃகு சாதனங்கள் கொண்ட ஸார் ஆற்றுப்பகுதியை இழப்பதோடு மட்டுமல்லாமல், மிகப் பெரிய நஷ்டஈடுத் தொகையை கொடுக்கும் தாங்கமுடியாத சுமையை ஏற்றது. ஜெர்மனியால் கொடுக்கமுடியாத அளவு பெரிய தொகை கேட்கப்பட்டது. ஆகவே ஜெர்மனி அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை மறுத்ததில் வியப்பில்லை. தவிர ரூர் பள்ளத்தாக்கை பிரெஞ்சுக்காரர்கள் அடைந்தபொழுது, ஜெர்மனியர்களுக்கு இது மிகப்பெரிய பயத்தை உண்டு பண்ணி அமைதியை இழக்கச் செய்தது. இதன்விளைவாக புதிய சிக்கல்கள் வந்து ஜெர்மானிய அரசியல்வாதிகளால் அவைகளை விடுவிக்க முடியாமல் போய்விட்டது. ஐரோப்பாவிலுள்ள குடியரசு நாடுகள் ஒன்றும், வெய்மார் குடியரசுக்கு உதவவில்லை. ஜெர்மனியார்கள், வெர்சேல்ஸ் உடன்படிக்கை மாற்றியமைக்கப்படவேண்டுமெனக் கேட்டனர். ஆனால் பிரன்சு முழுமையாக மறுத்து, அந்த உடன்படிக்கைதான் பாதுகாப்பிற்கே உத்தரவாதம் எனக் கூறிவிட்டது. ஏதுாவது சலுகை ஜெர்மனிக்கு கொடுத்தால், உடனேயே நிலைமை ஆபத்தாகிவிடும் என பிரான்ஸ் நினைத்தது. ஆகவே பிரான்சு மறுப்பு தெரிவித்துவிட்டது. பிரான்சு மட்டுமே ஜெர்மானியர்களின் வேண்டுகோள் நிறைவேற்றியருக்க முடியும். இந்நிலையை கொண்டு நாஸி கட்சி, அதன் தலைவரான அடாவல்ஃப் ஹிட்லரை சான்சலராக நியமித்து ஆட்சியைப் பிடித்தது.

மேலைநாடுகளின் பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிந்தன. எந்த ஆக்கிரமிப்பையும் அப்பேச்சுவார்த்தைகளால் தடைசெய்ய முடியவில்ல. பார்க்கப்போனால், ஆச்சரியப்படும் வகையில் பிரான்சும், ஜெர்மனியும் நட்புறவு கொண்டு லொகார்னோ ஒப்பந்தம் (1925) செய்து கொண்டது முதல் உலகப்போர் ஏற்பட்டதே, இனிமேல் எந்தப்போரும் மூளாமலிருப்பதற்கே எனத்தோன்றிய காலம் போய் வெகுநாட்களுக்கு நட்புறவுகள் நிலைக்காது என்பது நிரூபிக்கப்பட்டது. ஜெர்மனியும், இத்தாலியும் நாட்டு நிலைமையை உயர்த்திக்கொள்ளவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்களை, மேலைநாடுகளானா பிரான்சு, பிரிட்டனும் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது மற்ற ஐரோப்பிய நாடுகளும் சவாலாயிருந்த காரணத்தினால் ஆக்கிரமிப்பு செய்வது ஊக்குவிப்பது போலிருந்தது.

(குறிப்புக்கான இடம்)

பொதுவாகவே, வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் அநியாயத்தை மேலைநாடுகள் உணர்ந்திருந்தால், ஜெர்மானிய உரிமைகளை அவைகள் தவறாகக் கருதவில்லை. அநியாய உடன்படிக்கையை பழிக்கும் மக்களுக்கெதிராக சண்டையிடுவது தவறு என்ற எண்ணமே பொதுவாக நிலவியிருந்தது.

ஜப்பானின் பேராதிக்க வளர்ச்சி அதிகரித்துக்கொண்டே போயிற்று. 1931--இல் தன் படைபலத்தை பெருக்கிக்கொண்டு மஞ்சூரியாவை ஆக்கிரமித்து. சர்வதேச சங்கம், 'லிட்டன் குழு'' அமைத்து இதைப்பற்றி ஆலோசனை கேட்ட பொழுது அக்குழு, ஜப்பானின் ஆக்கிரமிப்பிற்குக் கண்டனம் தெரிவித்தது. ஆகவே, ஜப்பான், சர்வதேச சங்கத்தினின்று 1933—இல் விலகியது சர்வதேச சங்கத்தால் ஜப்பானின் ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியவில்லை தண்டிக்கப்படாமலும், சரிப்படுத்தப்படாமலும் ஆக்கிரமிப்புக்கள் நடந்துகொண்டிருந்தன.

இத்தாலி 1935—இல் அபிஸீனியவை ஆக்கிரமித்தது. அபிஸீனிய (எத்தியோபிய) அரசர், சர்வதேச சங்கத்திடம் முறையிட்டபொழுது, சர்வதேச சங்கம் கண்டனம் தெரிவித்து "பொருளாதாரத் தடையைக்'' (Economic Sanctions) கொண்ந்தது. ஆனால் முக்கியமான பொருட்கள் இத்தாலிக்கு போய்க் கொண்டுதானியிருந்தன. இவ்வாறு சர்வதேச சங்கத்தினால் எந்த ஆக்கிரமைப்பையும் கட்டுப்படுத்தமுடியவில்லை.

சர்வாதிகாரம் ஐரோப்பாவில் ஸ்தாபிக்கப்பட்டவுடன், ஹிட்லர் சர்வதேச சங்கத்தின் தோல்வியையும், வெர்சேல்ஸ் ஒப்பந்தத்தின் பொதுக் கண்டனத்தையும் உபயோகப்படுத்திக் கொண்டு போருக்கு வழி செய்தார். எல்லோரிடமும் அமைதிக்குத்தான் ஆசைப்படுவதாக கூறினாலும் 'பசுத்தோல் போர்த்திய புலி போல், ஆக்கிரமிப்பு ஆசையை உள்ளடக்கி வைத்திருந்தார். சமயம் வந்ததும் சுயரூபம் தெரிய படிப்படியாக ஒவ்வொரு நாடாக ஆக்கிரமித்தார். அதேபோன்று, பெனிடோ முசோலினியும், 1622இல் பழைய ரோமாபுரி பெருமையைக் கொணரவேண்டும் என நினைத்தார். ஆகவே முஸோலினி அபிஸீனியாவை தாக்கினார். இத்தாலிய வீரர்கள் ஸ்பெயினுக்கும் உதவி செய்து பிரான்கோவை பதவியிலமத்தினர். இத்தாலி 1937—இல் கம்யூனிஸத்திற்கெதிராக (Anti-COmintern Pact) ஒப்பந்தம் செய்துகொண்டது ரோம் —பெர்லின் டோக்யோ அச்சு என்று முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது 1939இல் இத்தாலி ஜெர்மனியுடன் 1 வருடத்திற்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

(குறிப்புக்கான இடம்)

அதன்படி இருநாடுகளும் ஒன்றையொன்று ஆலோசனைக் கேட்டுதான் மற்ற நாடுகளுடன் பேச்சுவார்ததை வைத்துக்கொள்ள வேண்டும். வேறு நாடுகளில் எந்தநாடு போருக்காயத்தாமானாலும், இவ்விரு நாடுகளும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தனர்.

குடியாட்சிக்கும், சர்வாதகாரத்திற்கும், அரசியல் கருத்து வேறுபாடு இருந்தமையார், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியன ஒரு அரசியல் கருத்தையும் பிரிட்டன் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா மற்ற அரசியல் கருத்தையும் பறைசாற்றுவதாக இருந்தன. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி மற்ற நாடுகளைப் பிடிப்பதில் ஆர்வம் காட்டின.

குடியரசு நாடுகள் பலவீனமாகவும், சர்வாதிகார நாடுகள் பலம் பொருந்தியும் இருந்ததே இரண்டாம் உலகப்போர் மூலக் காரணமயிற்றென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். பிரிட்டன் தனித்திருந்தல் கொள்ளை (Splendid Isolation)யில் பெருமை கொண்டது. ஐரோப்பிய அரசியல் அலுத்து, சமாதானத்தை நிலைநாட்ட இனி எந்தப் பங்கும் வகிக்க ஆர்வமில்லையென காட்டிக்கொண்டது. பிரான்சோ ஜெர்மனியைக் கண்டு பியந்தது. நிச்சயமாக வெர்சேல்ஸ் ஒப்பந்தத்தினை வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் செயலில் ஜெர்மனி ஈடுபடும் என நினைத்து. ஆகவே தான் பிரான்ஸ் பிரிட்டனையும், அமெரிக்காவையும் லொகார்னோ ஒப்பந்தத்திற்கு பின்னால் கெல்லாக்— பிரியண்ட் (Kellogg-Briand Pact 1985) ஒப்பந்தத்திலும் பயன்படுத்திக்கொண்டது. பிரிட்டன் சமாதானப் பாதையிலேயே போய், ஹிட்லருக்கும், முசோலினிக்கும் சலுகை கொடுத்தது. அவர்களை போர் பாதையில் ஊக்குவித்தது போல் ஆகிவிட்டது. போலந்தை ஆக்ரமித்தால் இங்கிலாந்து போரிலிறங்கும் என்பதை ஹிட்லர் எண்ணிக்கூட பார்த்திருக்கமாட்டார்.

1935—இல் வெர்சேல்ஸ் ஒப்பந்தத்தை மீறி படைக்குறைப்பு விதியை தூக்கியெறிந்து கட்டாய இராணுவப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார். ஆங்கிலோ— ஜெர்மானிய கடற்படை ஒப்பந்தத்தின்படி 1935—இல், பிரிட்டன் ஜெர்மனி கடற்படை வைத்துக்கொள்ளலாமெனக் கூறியது. ஆகவே பிரிட்டனனின் சம்மதத்துடனேயே வெர்சேல்ஸ் ஒப்பந்தத்தை மீற முடிந்தது. லொகார்னோ ஒப்பந்தத்தை (1952) மீறி 1935இல் பிரான்ஸ் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதால், 1936 இல் ரைன்லாந்தை ஹிட்லர் ஆக்கிரமித்தபொழுது மேலைநாடுகள் பேசாமலிருந்தன.

### 2.1.14. திணிக்கப்பட்ட இடைவெளி (1936—1938)

1936—யிலிருந்து 1938 வரை இரண்டாம் உலகப்போருக்கு முன் இருந்த நிலை திணிக்கப்பட்ட இடைவெளி (loaded Pause) என வின்ஸடன் சர்ச்சில் கூறுகிறார். இருதரப்பாருமே போருக்கு வேண்டிய ஆயத்தங்களை செய்யத் தொடங்கிவிட்டனர். சர்வதேச சங்கத்தின்

(குறிப்புக்கான இடம்)

பலவீனம் மிகத் தெளிவாக தெரியவந்தது. 1938—இல் மூன்று முக்கிய சர்வாதிகார நாடுகளான ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி சர்வதேச சங்கத்தைவிட்டு விலகின. சர்வதேச சங்கம் உபயோகமற்றதென்பது விளங்கிற்று. 1936—இல் இத்தாலியும், ஜெர்மனியும் சேர்ந்து அச்சு நாடுகளின் கூட்டுறவை செய்து கொண்டன. அடுத்து, ஜெர்மனியும், ஜப்பானும் கம்யூனிஸ நாட்டுக்கெதிரான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. ஹிட்லர்: பிரிட்டனுடன் நட்புறவை விரும்பினர். ஆனால் அது முடியவில்லை. ஸ்பெயினுக்கு உதவி புரிந்து ஃபிரான்கோ பதவியில் அமர்ந்ததும் பிரான்ஸ் தனித்து விடப்பட்டது.

1938—லிருந்து 1939 வரை நெருக்கடி அதிகமாயிற்று. ஜெர்மானிய சங்கம் ஆஸ்திரியாவுடன் சேர்ந்தது. ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைக்க ஹிட்லர் தக்க தருணத்தை எதிர்பார்த்தார். ஆஸ்திரிய சான்ஸலர் வான் ஷீஸ்னிக்கை (Von Schuschingg) ஹிட்லர் கேட்டு கொண்டதன் பேரில் செய்ஸ் இன்குவார்ட் (Seyss Inquart) என்பவரை ஆஸ்திரியா நாஸிகளை காக்கும் உள்நாட்டு அமைச்சர் பதவியலமர்த்தினார். ஆஸ்திரியா ஜெர்மனியுடன் சேர்வதை மக்கள் வாக்கெடுப்புக்கு விடலாமென சான்ஸலர் கூறியபொழுது, இதை நம்புவது முழுமையான வெற்றியை தேடித்தர இயலாமல் போனாலும் போகும் என பயந்த ஹிட்லர். சான்ஸலராக நியமித்து, அவர் அனுமதி பேரில் ஜெர்மானிய படையை ஆஸ்திரியாவினுள் செலுத்தி வெற்றி பெற்றார். செக்கோஸ்லோவேகியாவின் மேற்குப் பாகம் ஜெர்மனியால் சூழப்பட்ட உடனேயே செக்கோஸ்லோவேகியாவிற்கு பயமுண்டாயிற்று.

முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்

அ) செய்தித்தொடர்புக் கோட்பாடு எங்ஙனம் பன்னாட்டு அரசியலைக் கற்க பயன்படுகிறது என்பதினை விளக்குக.

ஆ) ஆட்டக்கோட்பாட்டின் சிறப்பியல்புகளையும், நன்மைகளையும் விளக்கிக் கூறு.

இ) வெர்சேல்ஸ் அமைதி உடன்படிக்கை பற்றி ஒரு விரிவான கட்டுரை எழுதுக.

ஈ) இரண்டாம்உலகப்போர் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.

வெர்சேல்ஸ் உடன்படிக்கைக்குப் பிறகு, இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் உள்ள அரசியல் வாதிகளின் அனுதாபம் இத்தாலிய, ஜெர்மானிய சர்வாதிகள் பக்கம் இருந்தது. வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் கேவலமான தன்மை கொண்ட நிபந்தனைகள் அவர்களுடைய வருத்தத்திற்குக் காரணம் என்பதை உணரும் பக்குவம் கொண்டவர்களாக இருந்தனர். ஜெர்மனி ரஷ்யாவை தாக்குமாதலால் கம்யூனிசத்திற்கு ஒரு தடையிருக்குமென நினைத்துத்தான் ஜெர்மனியை படைபலம் கொண்ட நாடாக்க அனுமதித்தனர். நேசநாடுகளான இங்கிலாந்து, பிரான்சு ரஷ்யா அச்சு நாடுகளுக்கெதிராக ஒப்பந்தம் செய்துகொண்ட பொழுது, இங்கிலாந்து அதைப் பார்த்து கொண்டிருப்பது தவிர வேறுவழியின்றி தவித்தது. ஆங்கிலேயர்களும், சர்ச்சிலும் ஹிட்லரின் போக்கை புரிந்துகொண்டவர்களாக, அவருடைய எல்லா மனக்குறைகளையும் தீர்த்தால் தான் — போர், ஏற்படாமல் இருக்குமென

நம்பினர். ஆகவே, ஹிட்லர் சுடேட்டன்லாந்தை அடைந்த பொழுதும் வாளாயிருந்தனர்.

ரஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்ட போலந்து, பிரான்சுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைந்து, 1931—இல் போலந்து, ரஷ்யாவுடன் ஆக்கிரமிப்பு செய்யாமலிக்கும் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது. ஹிட்லரும், ரஷ்யாவுடன், ஓர் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டு அதன்படி, குடியரசு நாடுகளின் தொடர்பிலிருந்து விலகியிருப்பதாக வாக்களித்தார். பொஹிமியா, மொரேவியா ஸ்லோவாகியா, ஜெர்மனியின் கீழ் வந்தபொழுது போலந்தின் நிலை இராணுவத்தை நம்பியிருப்பது முடியாதென தெரிந்தது. 1939—இல் ஜெர்மனி பலவிதமான நிபந்தனைகளைப் போலந்திடம் திணத்து டபன்ஸிக் மற்றும் போலீஸ் காரிடோர் பகுதி வழியில் உரிமை ஆகியவற்றைக் கேட்ட பொழுது பிரிட்டன் போலந்துக்கு உதவ முன்வந்தது. உலக அமைதியின்மை இதனால் தவிரிக்கப்படலாம் என அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சமாதானத்தை வேண்டினார். ஹிட்லர் இதற்கெல்லாம் சம்மதிக்காமல், ஆங்கில – ஜெர்மானிய கடற்படை ஒப்பந்த்திற்கும், ஜெர்மானிய போலந்து ஆக்கிரமிப்பின்மை ஒப்பந்தத்திற்கும் முடிவு கட்டினார்.

1939—இல் ஜெர்மனியும், ரஷ்யாவும் கூட்டு சேர்ந்தபொழுது நேச நாடுகள் அதிர்ச்சியுள்ளன. ஹிட்லர் போலந்தை தனித்திருக்க செய்யும் எண்ணத்துடன், கடைசியாகப் பிரிட்டனிடம் போலந்து விஷயத்தில் தலையிடாமலிருக்கும்படி கூறினார். இங்கிலாந்து, இதற்கு ஒத்துவராததால் ஹிட்லர் போலந்தைத் தாக்கியபொழுது, இரண்டாம் உலகப்போர் மூண்டது. பிரிட்டனும், பிரான்சும் ஜெர்மனி மீது போர் செய்ய முடிவு செய்த பொழுது சாம்பர்லின் தன்னுடைய சமாதான முயற்சி வீணானதை நினைத்து மிகவும் வருந்தினார். நாடுகள் நாசமாகும் என்பதையறிந்த சாம்பர்லின் அமைதியைக் காக்கும் பணியில் தோல்வியடைந்ததை நினைத்து மிகவும் வருந்தினார்.

1939—லிருந்து 1942 வரை ஜெர்மனி வெற்றி நடைபோட்டது. ரஷ்யாவின் உதவியால் போலந்தை முற்றுகையிட்டது. முசோலினி பிரான்சைத் தாக்கினார். 1940ல் பிரான்ஸ் வீழ்ந்தது. இங்கிலாந்து விமானப்படைகளை தகர்த்தெறிந்துவிட்டு, ஹிட்லர், ரஷ்யாவை நம்பாமல், ரஷ்யாவையும் ஆக்ரமித்தார். 1943—இல் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தனர். 1941—இல் ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கியபொழுது, நேசநாடுகள் அமெரிக்காவின் துணையுடன் 1944ல் ரோமை வீழ்த்தியது.

(குறிப்புக்கான இடம்)

பிரான்சும் மீட்கப்பட்டு ஜெர்மனியில் நேசநாடுகளின் படைநுழைந்த பொழுது 1945 மே மாதம் 2ஆம் தேதி ஹிட்லர் கலமான செய்தி அறிவிக்கப்பட்டது. பெர்லின் வீழ்ந்தது.

ஜப்பான் தொடர்ந்து போரை நிறுத்தாது சரணடைய மறுத்ததால் ஆகஸ்டு 6ம் தேதி ஹிரோஷிமாவிலும் ஆகஸ்டு 9ஆம் தேதி நாகசாகியிலும் அணுகுண்டு விசப்பட்டு சொல்லொணா நாசத்தை அமெரிக்கா விளைவித்தது. ஆகஸ்டு 14ஆம் தேதி ஜப்பான் சரணடைந்தது உலகத்தையே மிகவும் பயங்கரமாக நாசமாக்கிய நிகழ்ச்சி, அணுகுண்டு வீசியது தான் எனக்கூறலாம். இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் மனித சமுதாயத்தைக் காக்கும் பணியை ஐக்கிய நாட்டு சபை ஏற்றுக் கொண்டது. அமெரிக்காவும், ரஷ்யாவும் உலக வல்லரசாக மாறின.

இரண்டாம் உலகப்போருக்கு முன் ஐரோப்பாவில் நிலவிய அரசுமுறை போருக்குப் பின் உலகம் முழுவதும் பரவியது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் புதிய அரசுகள் தோன்றிய பின் அரசு முறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. இன்று, இடைநிலை மற்றும் குறைந்த அளவு அதிகாரங்களைக் கொண்ட அரசுகள் உலக அரங்கில் செல்வாக்கு மிக்க ஒரு பங்கினைப் பெற்று காணப்படுகின்றன. இக்கால கட்டத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சியாக உலக அரங்கில் அமைதி காப்பதற்கென ஒரு ஐ.நா.சபை உருவாக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

## 2.1.13. தொகுப்புரை

இவ்வலகில் செய்தித்தொடர்பு, ஆட்டக்கோட்பாடு, ஆட்டக்கோட்பாட்டின் வகைகள், ஐரோப்பிய அரசியல் 1871 முதல் 1919, பாரீஸ் அமைதி மாநாடு, வெர்சேல்ஸ் உடன்படிக்கை, இரண்டாம் உலகப்போருக்கு முன் இருந்த நிலை மற்றும் இரண்டாம் உலகப்போ போன்ற நிகழ்வுகள் மிகச் சிறப்பாக சொல்லப்பட்டு இருக்கின்றன. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் புதிய அரசுகள் தோன்றின. உலக அமைதி காப்பதற்கு உருவாக்கப்பட்டன.

## 2.1.14. முக்கிய வார்த்தைகள்

வெர்சேல்ஸ் உடன்படிக்கை – நேசநாடுகளுக்கும், அச்சு நாடுகளுக்கும் இடையே நடந்த ஒப்பந்தம்.

சமாதான உடன்பாடு – முதல் உலகப்போர் முற்றுப்பெற்றது.

ஆட்டக்கோட்பாடு – சச்சரவு மற்றும் பேரம் பேசல் ஆகியவைகளின் தனிவகை பகுப்பாய்வு.

செய்தித்தொடர்பு – அரசியல் மற்றும் சமூக குறிக்கோள்களை மக்கள் சக்தியை ஒன்று திரட்டுதல்.

## 2.1.15. இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

1. Robertson C.L. International Politics since world war II – A short History (Wiley)

## 2.1.16. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைச் சோதனைக் கேள்விக்கான பதில்கள்:

| | |
|---|---|
| கேள்வி எண்:1 | பதில் எண்:2.1. |
| கேள்வி எண்:2 | பதில் எண்:2.1.1 |
| கேள்வி எண்:3 | பதில் எண்:2.1.6 |
| கேள்வி எண்:4 | பதில் எண்:2.1.8 |
| கேள்வி எண்:5 | பதில் எண்:2.1.9 |

## 2.1.17. மாதிரி வினாக்கள்

1. செய்தித்தொடர்புக்கோட்பாடு எங்ஙனம் பன்னாட்டு அரசியலைக் கற்க பயன்படுகிறது என்பதினை விளக்குக.
2. ஆட்டக்கோட்பாட்டின் சிறப்பியல்புகளையும், நன்மைகளையும் விளக்கிக் கூறு.
3. வெர்சேல்ஸ் அமைதி உடன்படிக்கை பற்றி ஒரு விரிவான கட்டுரை எழுதுக.
4. இரண்டாம்உலகப்போர் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.

(குறிப்புக்கான இடம்)

# அலகு – 3

## தேசீய அதிகாரம் பற்றிய மதிப்பீடு – பன்னாட்டு அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் — ஆதிக்க ஆட்சியின் வழிமுறைகள் — அதிகாரச் சமநிலை.

**முன்னுரை:**

இறைமை, தேசியம் போன்றவற்றைப் போன்று தேசிய அதிகாரமும் அரசு முறையில் இருந்து பிரிக்க முடியாத ஒரு முக்கிய பண்பாகும். மேலும் இது உலக அரசியலில் இருந்து பிரிக்க முடியாத ஒரு முக்கிய ஆக்க கூறாகும். பன்னாட்டு உறவுகளை நிர்ணயிக்கும் அடிப்படையாக தேசிய அதிகாரம் கருதப்பட்டது. இது உலக அரசுகளின் சமுதாய அமைப்பின் தனிப்பட்ட அரசுக்கு ஒரு முக்கியப் பங்கை உருவாக்கி வழங்குகிறது. பேராசிரியர் ஹேன்ஸ் ஜே. மொர்கென்தாவின் கூற்றுப்படி அதிகாரம் பிற மக்களுடைய மனதையும் செயலையும் கட்டுப்படுத்தும் மனித அதிகாரத்தைக் குறிக்கின்றது. பன்னாட்டு அரங்கில் ஒரு நாடு பிற நாடுகளை தனது குறிக்கோளை ஏற்று செயல்பட வலியுறுத்தும் திறனைப் பெற்றிருந்தால் அந்நாடு அதிகாரமிக்க நாடாகக் கருதப்பட்டது. தனது பல வகையான அதிகாரங்களை ஒரு நாடு பிற நாடுகளின் மேல் திணிக்கல் கொண்டிருக்கும் ஆவலை சுருக்கமாக தேசிய அதிகாரத்தைச் சார்ந்தே அந்நாடு உலக அரசியலோடு கொண்டிருக்கும் ஈடுபாடு அமைகிறது. தேசிய அதிகாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் தனது தேசிய நலன் சம்பந்தப்பட்ட கருத்துக்களை உருவாக்குகிறது. எனவே, தேசிய அதிகாரத்தை வலுப்பெறச் செய்தல் ஒவ்வொரு அரசின் தலையாய கடமையாகும். இக்காரணத்திற்காக, நாடுகளுக்கிடையே அதிகாரப் போராட்டம் உலகில் எக்காலத்திலும் நடைபெற்று வருகிறது, என்கிற கூற்று அனுபவத்தின் வாயிலாக எழுந்த மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

**நோக்கங்கள்:**

தேசீய அதிகாரத்தின் கூறுகள் பற்றி உணர்தல்

பன்னாட்டு அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் பற்றிய பகுப்பாய்வு செய்தஆதிக்க ஆட்சியின் வழிமுறைகளை கற்றறிதல்

அதிகாரச் சமநிலை பற்றி தெரிந்து கொள்ளுதல்

**அலகு வடிவமைப்பு:**

தேசீய அதிகாரத்தின் கூறுகள்

தேசீய அதிகாரத்தின் மதிப்பீடு

பன்னாட்டு அரசியல் அதிகாரம்

ஆதிக்க ஆட்சி

ஆதிக்க ஆட்சியின் வழிமுறைகள்

அதிகாரச் சமநிலையின் தன்மை

அதிகாரச் சமநிலையை நிலைநிறுத்தும் வழிகள்

அதிகாரச் சமநிலையின் இன்றைய நிலை

அதிகாரச் சமநிலை பற்றிய மதிப்பீடு

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key words)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for futher studying)

மாதிரி வினாக்கள் (Model Questions)

## 3.1. தேசிய அதிகாரத்தின் கூறுகள் (Elements of National Power)

அதிகாரத்தின் கூறுகளை பல்வேறு கோட்பாட்டாளர்கள் பல நிலைகளில் வகைப்படுத்தி காட்டியுள்ளனர். கார் (Car) என்பார் தேசிய அதிகாரத்தை மூவ்கையாக வகைப்படுத்தினார். அவை (1) இராணுவ அதிகாரம் (2) பொருளாதார அதிகாரம் (3) கருத்துக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் என்பவையாகும். ஆராய்ந்து நோக்கும் போது முடிவில் தேசீய அதிகாரம் இராணுவ அதிகாரத்தைக் குறிக்கிறது என்பது புலனாகிறது. ஏனென்றால், ஒரு அரசின் அதிகாரம் கடைசியில் போரினால் வெளிப்படுகிறது. எவ்வாறெனினும், இராணுவ அதிகாரத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் பொருளாதார அதிகாரம் போர்க்கலை என்ற எல்லைக்குள் அடங்கிவிடும் ஒன்றல்ல, சந்தைகள் மீதுள்ள கட்டுப்பாடு மூலப்பொருட்கள், கடன், போக்குவரத்து போன்றவை பொருளாதார அதிகாரத்தின் பிறப்பகுதிகளாக கூறலாம். நாட்டின் உள் விவகார மற்றும் வெளிவிவகார நலனுக்காக பொது உணர்வுகளை ஒன்று திரட்டும் திறனை கருத்துக்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் குறிக்கின்றது. இராணுவ மற்றும் பொருளாதார நோக்கங்களை அடைய கருத்துக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகிறது.

(குறிப்புக்கான இடம்)

தேசிய அதிகார கூறுகளை மொர்கென்தா இருவகையாகப் பிரித்துள்ளார். அவை: (i) உறுதியான தன்மையைக் கொண்ட கூறுகள் (ii) அடிக்கடி மாறுகின்ற தன்மை கொண்ட கூறுகள் என்பவையாகும். ஆக மொத்தம் அவர் தேசிய அதிகாரத்திற்கான ஒன்பது கூறுகளை கூறியுள்ளார். அவை (i) புவியியல் (ii) இயற்கை வளங்கள் (iii) தொழில் திறன் (iv) இராணுவ ஆயத்தம், (v) மக்கட்தொகை (vi) தேசிய குணநலன், (vii) தேசிய ஒழுங்குணர்வு, (viii) அரசியல் தந்திரத்தின் தன்மை, (ix) அரசாங்கத்தின் தன்மை என்பவையாகும். மொர்கென்தாவைப் போன்று பேராசிரியர் ஹார்ட்மேன் (Prof. Hartmann) என்பாரும் தேசிய அதிகாரத்தை வகைப்படுத்தியுள்ளார். அவர் தேசிய அதிகாரத்தின் ஆறு கூறுகளைக் கூறியுள்ளார். அவை: (i) மக்கட் தொகை, (ii) புவியியல் கூறு, (iii) பொருளாதார கூறு, (இயற்கை வளம் தொழில் திறன் போன்றவை) (iv) வரலாறு—சமூகவியல்—உளவியல் கூறுகள் (v) அமைப்பு மற்றும் நிர்வாக கூறு (அரசாங்கத்தின் தன்மை) (vi) இராணுவ கூறு என்பவையாகும். பல அறிஞர்கள் கொடுத்த, வகைப்படுத்தலையும் ஏற்றுக் கொண்டு பால்மர் பெர்கின்ஸ் என்போர் தேசிய அதிகாரத்தை ஏழு கூறுகளாக வகைப்படுத்தினர் அவை: (i) புவியியல் (ii) தேசிய வளம் (iii) மக்கட் தொகை, (iv) தொழில்நுட்பம், (v) கோட்பாடுகள் மனவுறுதி (vi) தலைமை என்பவையாகும்.

### 1) புவியியல் (Geography)

ஒரு நாட்டின் அதிகாரம் புவியியல் என்ற நிலையான ஆக்க கூறை சார்ந்திருக்கிறது என்ற உண்மையை பேராசிரியர் மொர்கென்தா ஏற்றுக் கொண்டுள்ளார். ஒரு அரசு தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கும் போது எப்பொழுதும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய அடிப்படை ஆக்கக் கூறாக அந்நாட்டின் புவியியல் கிடப்பு கருதப்படுகிறது. எனவே, இன்றைய உலகை தெளிவாக புரிந்து கொண்ட அரசியல், பொருளாதார மனித புவியியலைப் பற்றி அடிப்படை அறிவு அவசியம். அளவு, அமைவிடம், சீதோஷணம், வடிவமைப்பு, நிலகிடப்பு எல்லைகள் போன்ற ஆக்கக் கூறுகளை தேசிய அதிகாரத்தில் புவியியலின் பங்கை முயற்சிக்கும் போது எடுத்தாய வேண்டும்.

(குறிப்புக்கான இடம்)

**(அ) அளவு (Size):** ஒரு நாட்டின் நிலப்பரப்பு அந்நாட்டின் அதிகாரத்தின் ஒரு முக்கிய கூறாக கருதப்படுகின்றது. ஒரு நாடு கொண்டிருக்கும் பெரிய நிலப்பரப்பு உண்மையில் அந்நாட்டின் அதிகாரத்திற்கு பல வழிகளில் துணை புரிகின்றது. ஒரு பெரிய நிலப்பரப்பில் அதிக அளவிலான மக்களை குடியேற்றலாம். மேலும், பெரிய நிலப்பரப்பு பலவகையான இயற்கை வளங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் பெரிய நிலப்பரப்பால் இராணுவ சம்பந்தமான பல நன்மைகளும் கிட்டுகின்றன. ஒரு நாடு சரணடையாமல் பின்வாங்குவதற்கு பெரிய நிலப்பரப்பு உதவுகின்றது. ரஷ்யா உலகில் நிலப்பரப்பில் ஏழில் ஒரு பாகத்தை (1/7) தன்னகத்தே கொண்டுள்ளமையால் நெப்போலியன், ஹிட்லர் போன்றோரின் இராணுவம் தாக்குதலை முறியடிக்க முடிந்தது. போன்று சீனா பெரும் நிலப்பரப்பை கொண்டிருந்தமையால், ஜப்பானிய இராணுவம் சீனாவுடன் நடத்திய போர்களில் நழுவியது. ஆகையால் நிலப்பரப்பின் அளவு ஒரு நாட்டின் அதிகாரத்தில் செல்வாக்குடைய ஒரு கூறாகத் திகழ்ந்தது. இன்று பெரும் நிலப்பரப்புகளை கொண்டிருக்கின்றமையால் ரஷ்யாவும் அமெரிக்காவும் உலக வல்லரசுகளாகக் கருதப்படுகின்றது.

**(ஆ) அமைவிடம் (Location) :** அளவை காட்டிலும் அமைவிடம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பன்னாட்டு விவகாரங்களில் ஒரு நாட்டின் ஈடுபாட்டை அந்நாட்டின் அமைவிடத்தை வைத்து தீர்மானிக்கலாம். ஒரு நாடு வலிமையான கப்பற்படையை கொண்டிருக்கிறதா அல்லது தரைப்படையைக் கொண்டிருக்கிறதா என்பதை அந்நாட்டின் அமைவிடத்தை வைத்து கூறலாம். பிரிட்டனும், ஜப்பானம் தீவுகளில் நிறுவப்பட்ட பேரரசுகளாக காட்சியளித்தால் அவை கடற்போரில் பல வெற்றிகளை குவித்தன. மேலும், ஜெர்மனி ஐரோப்பாவில் ஒரு மைய இடத்தில் அமைந்திருந்தமையாலும் ரஷ்யா உலகின் மையத்தில் அமைந்திருந்தமையாலும் திறமையுடைய தரைப்படைக் கொண்ட நாடுகளாக அவ திகழ்ந்தன. அமெரிக்கா பெரிய நிலப்பகுதிகளையும் கடல்பகுதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தமையால் வலிமை வாய்ந்தகப்பற்கடையையும், தரைப்படையையும் அது கொண்டிருக்கிறது. போர்திறன் நடவடிக்கைக்கு வாய்ப்பான அமைவிடமாக ஒரு நாடு திகழ்ந்தால், அந்நாடு அதிகாரமிக்க நாடாக மாற வாய்ப்பு ஏற்படலாம். ஆனால் சில நேரங்களில் கட்டுப்பாடு அற்ற நிலையில் அந்நாடு போர்க்களமாக மாறவும் வாய்ப்பு உருவாகலாம். ஒரு நாட்டின் அமைவு அந்நாட்டை பல்லாண்டு காலம் சமாதானத்தை அனுபவிக்க

(குறிப்புக்கான இடம்)

வழிவகுக்கலம். எவ்வாறெனினும் அமைவிடம் மட்டும் அந்நாட்டை அதிகாரமிக்க நாடாக மாற்றாது. போர்திறன் நடவடிக்கைக்கு வாய்ப்பான அமைவிடமாக ஒரு வலுவற்ற நாடு அமைந்தால், அமைவிடமே அந்நாட்டிற்கு ஒரு சாபக்கேடாக அமைகிறது. அந்நாடு சில நேரங்களில் அதிகாரத்தை இழப்பதோடு, சுதந்திரத்தையும் இழந்து விடுகிறது.

**(இ) சீதோஷ்ணம்** (Climate) : தேசிய அதிகாரத்தைப் பெருக்கும் இன்னொரு புவியியல் கூறாக சீதோஷ்ணம் கருதப்படுகிறது. மக்களுடைய உடல்நலம், சக்தி ஆகியவைகளுடன் நெருங்கிய தொடர்புடைய சீதோஷ்ணம் காணப்படுகிறது. ஏறக்குறைய உலகின் எல்லா வல்லரசுகளும் மித சீதோஷ்ணப் பகுதிகளில் அமைந்திருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். எவ்வாறெனினும் இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு எதுவும் முடிவாக சொல்ல இயலாது. பண்டைய நாட்களில் மிக உஷ்ணப் பிரதேசங்களாகக் கருதப்பட்ட எகிப்து, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் நாகரீகம் நன்முறையில் வளர்ச்சியுற்றதற்கு சான்று வரலாற்றில் காணப்படுகிறது. கலாச்சாரத்தையும் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் ஆக்கக் கூறுகளில், ஒன்றாக இயற்கை வளம் அரசியல் நிறுவனம் மதம் போன்றவற்றோடு சீதோஷ்ணமும் கருதப்படுகிறது.

**(ஈ) நிலக்கிடப்பு** (Topography) : சீதோஷ்ணத்தைப் போன்று நிலக்கிடப்பும் அதிகாரத்திற்கான முக்கிய ஆக்கக்கூறாக கருதப்படுகிறது. மலைகள், பள்ளத்தாக்குள், ஆறுகள் போனறவை நாடுகளுக்கிடையேயான எல்லைகளை வரையறை செய்கின்றன. மேலும் இவைகள் நிலப்பரப்பு விஸ்தரிப்பை தடை செய்கின்றன. இவைகள் வியாபாரம், வாணிபம், நிர்வாகம், இராணுவம் போன்ற நடவடிக்கைகளில் செல்வாக்கம் செலுத்துகின்றது. மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள் சமவெளிகள் போன்றவை போக்குவரத்து தொடர்புகளை இலகுவாகவும் விரைவாகவும் ஏற்படுத்தினால் கலாச்சார ஒருமைப்பாடு சக்திவாய்ந்த அரசியல் கட்டுப்பாடு, சீரிய பொருளாதார வளர்ச்சி போன்றவற்றிற்கு உத்திரவாதமளிக்கலாம். ஒரு தேசிய அரசின் புவியியல் அமைப்பிற்கு நிலப்பரப்பு, அளவு அமைவிடம் போன்றவற்றோடு நிலக்கிடப்பு துணைபுரிகின்றது. நிலக்கிடப்பு ஒரு நாட்டின் இராணுவம் மற்றும் பொருளாதார அதிகாரத்தை வளர்க்க உதவுகிறது.

**(உ) புவியியல் சார்ந்த அரசியல்** (Geopolitics) : ஹெச். ஹெஸ்லர் (H.Hessler) என்பவரின் கூற்றுப்படி, புவியியல் சார்ந்த அரசியல் என்பது இப்பரப்பிற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பை விளக்கி, அதன் மூலம்

(குறிப்புக்கான இடம்)

அரசியல் தலைவர்களுக்கு புவியியல் அறிவை வழங்க முயற்சிக்கும் ஓர் அறிவியல் விரித்துரைக்கும் பண்புவாய்ந்த அரசியல் புவியியலை விட இது மேலானது. இது தேசிய பேரார்வத்தில் இருந்து தோன்றி உண்மைகளைத் தேடிக் கண்டடைந்து, தேசிய குறிக்கோளை அடைவதற்கான தத்துவங்களை வழங்குகின்றது. புவியியல் சார்ந்த அரசியல் அறிவியல் இம்மானுவேல் கான்ட்டிற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. ஒரு அரசின் அதிகாரத்தில் புவியியல் ஆக்கக் கூறுகளின் செல்வாக்கினைப் பற்றிய பொது கோட்பாடு ஒன்றினை கான்ட் உருவாக்கியுள்ளார். சர் ஹால்ஃபோர்டு மேகின்டர் (Sir Halford Mackinder) அறுபது ஆண்டுகளுக்கு முன் புவியியல் சார்ந்த அரசியல் அறிவியலை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். புவியிலுக்கும் ஒரு நாட்டின் அரசியல் கொள்கைகளுக்கம் இடையே நடந்த திருமணத்தினால் உருவான குழந்தையே இவ்வறிவியல் புவியியலுக்கும், அரசியலுக்கும் இடையேயான செயற்பாடுகளைப் பற்றி மேகின்டர் நடத்திய ஆராய்ச்சி புது கோட்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கோட்பாடுகள் அரசுகளின் கொள்கை உருவாக்குதலை பெருமளவில் கட்டுப்படுத்துகின்றது. அரசியலுக்கும், புவியியலுக்கும் இடையேயான தொடர்பு தேசிய வளர்ச்சி சம்பந்தப்பட்ட சில காரியங்களை அறிந்து கொள்ள உதவுகின்றது என்பதனை மறுக்க முடியாது. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் புவியியல் தொடர்பின்மையால் வெளிநாட்டு படையெடுப்பிலிருந்து தங்களைப் பாதுகாக்கும் நிலையை உருவாக்கி, தங்கள் நாடுகளில் மக்களாட்சியை வளர்த்துள்ளன. மூன்று கண்டங்கள் உலகில் ஒன்று சேரும் இடத்தில், எண்ணெய் வளமிக்க மத்திய கிழக்கு நாடுகள் காணப்படுவதால் அவை பன்னாட்டு அரசியலில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இவ்வாறு புவியியல் தேசிய அதிகாரத்திற்கான ஒரு சீரிய ஆக்கக் கூறாக காணப்படகிறது என்பதனை மறுக்க முடியாது. உலக அரசியலில் புவியியல் ஒரு முக்கிய பங்கு ஆற்றுகின்றது. பண்டைய காலத்திலிருந்தே புவியியலின் முக்கியத்துவம் உணரப்பட்டு வந்துள்ளது. ஒரு நாட்டின் வெளி நாட்டுக் கொள்கை புவியியலின் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்று நெப்போலியன் கூறியுள்ளார். எவ்வாறெனினும் புவியியலின் பங்கை மிகைப்படுத்துதல் விரும்பத்தக்கதல்ல. புவியியல் நிலையை, கொள்கை உருவாக்கும் அதிகாரிகள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தலாம். ஆனால் அடிப்படைக் கொள்கைகள் உருவாக்க முற்றிலும் புவியியலைச் சார்ந்திருத்தல் ஆபத்தாகும். போர்க்கருவிகள் போன்றவைகள் புவியியலின் முக்கியத்துவத்தை இன்று ஓரளவு குறைந்துள்ளது.

2) இயற்கை வளங்கள் (Natural Resource)

தேசிய அதிகாரத்தின் அடுத்த குறிப்பிடத்தக்க கூறு இயற்கை வளங்களாகும். ஒரு நாட்டின் நிலப்பகுதிகள் இயற்கை வளம் மிகுந்தவையாகக் காணப்பட்டால் அந்நாடு உலகில் வல்லரசு நிலையை அடையும். இயற்கை வளங்களின் கூறுகளை ஆராய நாம் அவற்றை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம் அவை: (i) மூலப்பொருட்கள் (Raw Materials) (ii) உணவு (Food) என்பவையாகும்.

அ) மூலப்பொருட்கள்: ஒரு நாட்டின் மூலப்பொருட்கள் வளமுடன் காணப்பட்டால் அந்நாட்டின் அதிகாரம் பெருக வாய்ப்பு உண்டு. போர்முறை இயந்திரமயமாக்கப்பட்டுள்ளமையால் தேசிய அதிகாரம் மூலப் பொருட்களைச் சார்ந்தே காணப்படுகிறது. அமெரிக்காவும், ரஷ்யாவும் திடீரென்று வல்லரசுகளாக மாறின என்று கூற முடியாது. இந்நாடுகளின் மூலப்பொருட்கள் இருந்தமையாலும் அல்லது முக்கிய மூலப்பொருட்கள் இருக்கும் இடங்களை இந்நாடுகளுக்கு அடைய முடிந்தமையாலும். இவை வல்லரசகளாக மாறின. ஒரு நாட்டின் இராணுவ மற்றும் அரசியல் அதிகாரம் அந்நாட்டின் தொழில் திறனின் அடிப்படையில் அமைகிறது. தொழில் திறன் பெருக்கத்திற்குப் பலதரப்பட்ட மூலப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறு, வரம்பற்ற ரீதியில் மூலப்பொருட்கள் திரட்டி கொடுக்கப்படாத நிலையில் ஒரு நாடு அதிகாரமிக்க நாடாக மாற வாய்ப்பில்லை. மிக முக்கியமாக மூலப்பொருளாகிய எண்ணெய் வளம் இல்லாமை ஹிட்லரின் பெரும் குறைபாடாக அன்று கருதப்பட்டது. இன்று, ரஷ்யாவும், அமெரிக்காவும் அதிகாரமிக்க நாடுகளாகக் கருதப்படுகின்றன. ஏனென்றால் இந்நாடுகள் இயற்கை வளத்தில் தன்னிறைவு பெற்று விளங்குகின்றன.

(ஆ) உணவு: இயற்கை வளங்களில் இன்றியமையாததாக உணவு கருதப்படுகிறது. உணவுப்பற்றாக்குறையில் இருக்கும் நாட்டைக் காட்டிலும் உணவு தன்னிறைவு பெற்றிருக்கும் நாடு மேன்மையான நிலையை அடைய இயலும். பெருமளவில் காணப்படும் உணவுப் பற்றாக்குறை இந்தியாவை உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரங்குளில் வலுவிழந்த நிலையில் செயலற்று போகச் செய்தது. கோடிக்கணக்கான மக்களை பட்டினியில் இருந்து காப்பாற்ற இந்தியா அடிப்படைக் குறிக்கோளை

மாற்றியமைத்து, தேசிய சக்திகளை ஒன்று திரட்ட வேண்டும். பிற தேசிய அதிகாரக் கூறுகளைப் பெற்றிருந்தாலும், உணவு பற்றாக்குறை என்ற நிரந்தரகுறைபாடு தனது வெளிநாட்டுக் கொள்கையை பலமாக செயல்படுத்தவிடாமல் வலுவற்ற ரீதியில் உலகில் செயலாற்ற வைத்தது என்று இந்தியாவைப் பற்றி மொர்கென்தா கூறுகிறார். உணவில் தன்னிறைவு பெற்றிருத்ததால் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் ஒரு பெரும் பலமாக அமைந்துள்ளது. ஏனென்றால் இந்நாடுகள் உணவைப் பற்றிய கவலை இன்றி செயல்படுகின்றன.

3) **தொழில் திறன் (Industrial Capacity) :**

தேசிய அதிகாரத்தின் இன்னொரு கூறாக தொழில் திறன் கருதப்படுகிறது. தொழில்திறன் ஒரு நாட்டின் மூலப் பொருட்களைச் சார்ந்தே உள்ளது. ஒரு நாட்டின் நிலையை மேம்படுத்த இயற்கை வளம்பெற்றிருந்தால் மட்டும் போதாது. அவ்வளங்களை திறம்பட தொழில் வளம் பெருக்க பயன்படுத்துவதால் ஒரு நாட்டின் நிலையை மேம்படுத்தலாம். இந்தியாவில் இயற்கை வளம் நிறைய காணப்பட்ட போதிலும், அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளைப் போன்று மேம்பட்ட நிலையை இந்தியா அடையவில்லை காரணம் என்னவெனில் இந்தியா போதிய அளவு தொழில் முன்னேற்றம் எய்தவில்லை. தற்கால போர் நடவடிக்கைகளும், செய்தித் தொடர்புகளும், கனரக தொழில் வளர்ச்சியை தேசிய அதிகாரத்தைப் பெருக்கும் முக்கிய ஆக்க கூறாக மாற்றியுள்ளது.

4) **இராணுவ பணியாளர் குழாமும் தலைமையும்: (Armed establishment and Military Leadership):**

அதிகாரத்திற்கான ஆக்கக்கூறுகளில் மிக முக்கியமான ஒன்றாக, இராணுவப்பணியாளர் குழாம் கூறப்படுகிறது. இராணுவ அமைப்புக்களை அரசுகள் நிறுவி சமாதான காலங்களில் தொடர்ந்து செயலாற்ற வைத்து போர்க்காலங்களில் அவைகளை விரிவுபடுத்துகிறது. இராணுவத் தலைமையின் தன்மை தேசிய அதிகாரத்தைப் பெருக்கும் செல்வாக்கு வாய்ந்தது. ஒரு நாடு எண்ணற்ற வளம் பொருந்திய ஒன்றாக இருக்கலாம், ஆனால் அவ்வளத்தைத் திறன்படப்பயன்படுத்தும் தலைமை இல்லையென்றால், தேசிய அதிகாரம் செயலற்றுப் போகிறது. எனவே, தேசிய அதிகாரத்தின் அடிப்படை, ஆக்கக் கூறுகளை சரிவரப் பயன்படுத்தும் தலைமையாகும். போர்க்காலத்தில் வளம், அமைப்பு போன்றவற்றை ஒன்று திரட்டல் அவசியம். ஒரு அரசில் போர்க்காலங்களில் வளங்களை ஒன்று திரட்டும் முடிவான பொறுப்பு

(குறிப்புக்கான இடம்)*

தலைவர்களைச் சார்ந்தது. சமாதான காலங்களில் அரசியல் தந்திர ஆற்றல், தலைவரின் தனிச்சிறப்புத் தன்மையைச் சார்ந்தே அமைகிறது. உணர்வுஆற்றல் சார்ந்த அடிப்படையில் நோக்கும் போது தலைமை தேசிய அதிகாரத்திற்கு அத்தியாவசியமான ஒரு தேவை என்பது புலனாகும்.

### 5) மக்கட் தொகை: (Population)

ஒரு அரசின் அதிகாரத்தோடு மக்கட் தொகை அளவு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. 1800 ஆம் ஆண்டு மக்கட் தொகையைக் கொண்டிருந்த பிரான்சு அதிகாரமிக்க நாடாகத் திகழ்ந்தது என்பது தற்கால ஐரோப்பிய வரலாற்றில் இருந்து புலனாகிறது. 1870— ஆம் ஆண்டின் இறுதியில் பிரான்சைவிட ஜெர்மனி பிரான்சிடம் ஒரு இராணுவ வெற்றியை அடைந்தது. ஐரோப்பாவில் இன்று ரஷ்யா ஒரு மேம்பாடான நிலையை அடைந்திருப்பதற்கு காரணம் அந்நாட்டின் மக்கள் தொகையே ஆகும். எவ்வாறெனினும், மக்கட் தொகை அதிகமாய் உள்நாடுகள் அத்தனையும் அதிகாரமிக்க நாடுகள் சீனா ஆனால் அந்நாடு உலகிலேயே அதிக அளவு மக்கட் தொகையைக் கொண்ட நாடு சீனா ஆனால் அந்நாடு உலகிலேயே அதிக அதிகாரம் படைத்த நாடாகக் கருதப்படவில்லை. இதைப்போன்று இந்தியா மக்கட் தொகையில் உலகில் இரண்டாவது இடத்தை வகித்தாலும் உலக வல்லரசுகளில் ஒன்றாக கருதப்படவில்லை. ஆனால் தேசீய அதிகாரத்தின் ஒரு கூறாக மக்கட் தொகை கருதப்படுவதன் மூலம், அது பெற்றுள்ள முக்கியத்துவத்தை ஒதுக்கித் தள்ளிவிட இயலாது.

அதிக அளவிலான மக்கட் தொகை ஒரு நாட்டின் அதிகாரத்தைப் பெருக்க பல வழிகளில் உதவுகின்றது. இராணுவத்தின் படைவீரர்களாக மக்களை பயன்படுத்தலாம். உண்மையில் தற்கால இராணுவ அமைப்புகளுக்கு எண்ணற்ற மக்கள் தேவை, தற்கால போர் கருவிகளை இயக்குதல், பழுது பார்த்தல், இடம் பெயர்தல் போன்ற பலதரப்பட்ட பணிகளுக்கு மக்கள் தேவைப்படுகின்றனர். மேலும், தரைப்படைக்கு இன்றும் ஏராளமானோர் தேவை, கொரியா, இந்தோ—சீனா, இந்தோ— பாகிஸ்தான் போன்ற பல போர்கள் தரைப்படை வீரர்களின் அவசியத்தை இன்று நிரூபித்துள்ளன. அதிக மக்கட்தொகை இருந்தால், அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு இலகுவாக ஒரு நாட்டை அபகரிக்க இயலாது.

தொழிலாளர்கள் என்ற ரீதியில் ஒரு நாட்டின் மக்கள் தேசீய உற்பத்தியின் அளவைத் தீர்மானிக்க உதவலாம். இன்றைய இயந்திர யுகத்தில் தொழிலாளர்கள் அதிகம் தேவைப்படாது என்று சிலர்

(குறிப்புக்கான இடம்)

விவாதிக்கலாம். ஆனால் உண்மை அதுவல்ல. உண்மையில் இயந்திரயுகத்தில் இயந்திரங்களை இயக்கி, உற்பத்தியை அதிகரிக்க, அதிக அளவில் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். ஒரு நாட்டில் மக்கள் உற்பத்தி செய்த பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளில் விற்கலாம் அல்லது அப்பொருட்களை பரிசாக வெளிநாடுகளுக்கு அனுப்பலாம்.

பலதரப்பட்ட பொருட்களை வாங்குவோர் என்ற முறையில் ஒரு நாட்டின் மக்கள், அந்நாட்டுச் சந்தையின் அளவை நிர்ணயிக்கின்றனர். ஒரு பெரிய மற்றும் நல்ல சந்தை உள்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. வெளிநாட்டிலுள்ள உற்பத்தியாளர்களுக்கு பெரிய மக்கட் தொகையை கொண்ட நாடு ஒரு பெரிய சந்தையை வழங்குகின்றது. இது ஒரு நாடு பிறநாடுகளின் மேல் கொண்டுள்ள அதிகாரத்தை அதிகரிக்கச் செய்கின்றது. கடைசியில், மக்கட்தொகை அதிகமாய் இருந்தால், அம்மக்கள் மேல் ஒரு நம்பிக்கை பிறக்க வழி ஏற்படுகிறது. மிகையான மக்கட்தொகையால் பிறநாட்டினர் அச்சுறுத்தப்படுகின்றனர். இவ்வச்சுறுத்தல் ஒரு நாடு பிற நாடுகளின் மேல் செல்வாக்கு பெற்றுத்திகழ பெரிதும் உதவுகிறது.

**தேசிய ஒழுங்குணர்வும் குணநலனும் (National Morale and National Character):**

ஒழுங்குணர்வு என்பது ஒரு மனப்பாங்கு ஆகும். இது ஒரு வகை மனநிலையை தனது கூறாக கொண்டிருக்கும் என்று பால்மர் மற்றும் பெர்கின்ஸ் என்போரின் கூற்றுப்படி, ஒழுங்குணர்வு என்பது வாய்மை தவறாமை, தைரியம், நம்பிக்கை, தனிமனிதர் நிலை மற்றும் தகுதி போன்றவற்றைப் பாதுகாக்க கொண்டிருக்கும் ஆவல், அறியக்கூடிய உணர்வுகள், அச்சம் அறியக் கூடாதவைகளை வெறுத்தல், தன் நலம் போன்றவைகளால் உருவாக்கப்படும் மனப்பாங்கு ஆகும்". இவ்வாறு தேசிய ஒழுங்குணர்வு நாட்டுப்பற்று மற்றும் தேசீயம் என்பவைகளால் உருவாக்கப்படும் ஒரு ஆக்கக்கூறாகும். ஆனால் தேசிய குணநலன் என்பது அறிவுத்திறன், ஒழுங்கு, இயல்பியல் மற்றும் தத்துவரீதியில் உருவான தனிக்கூறுகள் போன்றவைகளில் காணப்படும் வேறுபாடுகள், ஒவ்வொருவரையும் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது என்பதாகும். எவ்வாறெனினும், தேசிய குணநலனுக்கும். தேசிய ஒழுங்குணர்வுக்கும் இடையேயான உறவினை தெளிவாக எடுத்தியம்ப இயலாது. தேசிய குணநலன் ஒழுங்குணர்வைக் காட்டிலும் பரந்த நோக்குடையதாய்

(குறிப்புக்கான இடம்)

காணப்பட்டாலும் ஒழுங்குணர்வை நிர்ணயிக்கும் ஆக்கக்கூறுகளில் மிக முக்கயமானதாக இது கருதப்படுகிறது.

தேசிய குணநலன் தேசிய அதிகாரத்தின் அடிப்படை ஆக்கக்கூறாகும். ஒரு நாட்டின் வலிமையை மதிப்பிட அந்நாட்டின் தேசிய குணநலனை சரியாக கணக்கிடல் அவசியம். ஆனால் தேசிய ஒழுங்குணர்வும் தேசிய குணநலனும் போர்காலத்திலும், சமாதான நேரங்களில் ஒரு நாட்டின் அதிகாரத்தைப் பெருக்கப் பெரிதும் துணை புரிகின்றன. போர்க்காலத்தில் ஒரு நாட்டின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்க தேசிய ஒழுங்குணர்வு உதவுகின்றது. சமாதான காலங்களில் ஏற்படும் இடர்பாடுகளைத் தேவையான சக்தியை தேசிய ஒழுங்குணர்வு வழங்குவதோடு தேசிய முன்னேற்றத்திற்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்கிறது.

## அரசியல் தந்திரத்தின் தன்மை (The Quality of Diplomacy)

தேசிய அதிகாரத்தின் மற்றொரு முக்கிய ஆக்கக்கூறு அரசியல் தந்திரத்தின் தன்மையாகும். பேராசியர் மொர்மென்தாவின் கூற்றுப்படி தேசிய அதிககாரத்தின் அறிவாற்றல் அரசியல் தந்திரமாகும் மேலும் உயர்ந்த தன்மையிலான அரசியல் தந்திரம் எளிதாகக் கிடைக்கக் கூடிய தந்திரமாகும். மேலும் 'உயர்ந்த தன்மையிலான அரசியல் தந்திரம் எளிதாகக் கிடைக்கக் கூடிய தேசிய அதிகாரத்திற்கான வளங்களின், உதவியோடு வெளிநாட்டுக் கொள்கையின் குறிக்கோளையும் வழிமுறையும் ஒன்று சேர்க்கிறது. இது மறைந்துள்ள தேசிய சக்திகளை வெளிக்கொணர்கிறது. மேலும் இது அச்சக்திகளுக்கு முழு அளவில் பாதுகாப்பாக அரசியல் மெய்யுணர்வு அளித்து மாற்றுகின்றது என்கிறார் ஹேரன்ஸ் மொர்கென்தா.

பேராசிரியர் மொர்கென்தாவின் இக்கருத்து மிகைப்படுத்தப்பட்ட ஒரு கருத்ததாக கருதப்பட்டது. அரசியல் தந்திரத்தின் முக்கியத்துவம் கடந்த நூறு ஆண்டுகளாக குறைந்து வருகிறது. பண்டைய காலத்தில் தூதுவர்கள் தங்கள் நாடுகளை வெளிநாட்டு பிரதிநித்துவப்படுத்தும் நபர்களாக மட்டும் கருதப்பட்டனர். வெளிநாட்டு அரசாங்கங்கள் ஏதாவது முக்கிய காரியங்களை இத்தூதுவர்கள் மூலம் தான் அன்று விவாதித்தனர். ஆனால் அன்றைய இந்த நிலை இன்று மறைந்து விட்டது. இவை, செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, பொதுக்கருத்திற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் வெளிப்படையான அரசியல் தந்திரமுறைகள் போன்ற புதிய கூறுகள் அரசியல் முக்கியத்துவம் வெளிப்படையான அரசியல் தந்திரமுறைகள் போன்ற புதிய கூறுகள் அரசியல் தந்திரத்தின் தன்மையை மாற்றியமைத்துள்ளன.

(குறிப்புக்கான இடம்)

அரசியல் தந்திரம் இவ்வாறாக சில மாறுதல்களை இன்று அடைந்தாலும் அதன் முக்கியத்துவம் முற்றிலுமாக மறையவில்லை. இன்று வெளிநாடுகளில் அமர்த்தப்பட்டுள்ள தூதுவர்கள், அந்த நாடுகளில் தங்களின் நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கின்றனர். அந்நாட்டு அரசாங்கங்களோடு நல்லுறவை நிலை நாட்டுகின்றனர். வருங்காலத்தை எண்ணி நிலை நிறுத்தப்பட்ட உறவுகளின் வாயிலாக தங்கள் நாட்டின் நலனைப் பேண வழி வகுக்கின்றனர். சுருங்கக்கூறின் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் அரசியலில் அரசியலல் தந்திர நடவடிக்கைகள் ஓரளவு தனது செல்வாக்கினை இழந்த போதிலும் உயர்தன்மை வாய்ந்த அரசியல் தந்திர நடவடிக்கைகள் இன்றும் ஒரு நாட்டின் அதிகாரத்தை வலுப்படுத்த பெரிதும் துணை புரிகின்றன என்பதை திட்டவட்டமாக நாம் எடுத்துரைக்கலாம்.

## அரசாங்கத்தின் தன்மை (The Quality of Government)

ஓர் அரசின் ஆற்றல் மிக்க அரசாங்க அமைப்பும் நிர்வாகமும் இன்னொரு முக்கிய அதிகாரக் கூறாக கருதப்படுகின்றன. சில ஆண்டகளுக்கு முன் சீனா பலவீனமான ஒரு அரசாகக் காட்சியளித்தது. காரணம் என்னவென்றால், அந்நேரத்தில் சீனாவின் மத்திய அரசு நாட்டின் பெரும் பகுதியைக் கட்டப்படுத்தும் அதிகாரம் பெற்றுத் திகழவில்லை. பிரான்சு நாட்டில் 1950 ஆண்டு அதிபர் டிகால் பதவியேற்கும்வரை, அரசியல் அதிகாரம் பல அரசியல் கட்சிகளிடம் பிரித்து அளிக்கபட்டிருந்தது. இந்நிலை அமைச்சரவைக்கு அடிக்கடி ஆபத்தை விளைவித்ததோடு நீண்டகாலக் கொள்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையை தோற்றுவித்தது. ஜார்ஜ் கென்னன் என்ற அறிஞர் சோவியத் ரஷ்யா வலுமிக்க நிலையிலிருந்து ஒரு நாளில் பலவீனமாக ஒரு நிலையை அடையும் என்று கூறுகின்றார். இக்கூற்று சீனாவிற்கும் இதர கம்யூனிச நாடுகளுக்கும் பொருந்தும். எனவே அரசாங்க அமைப்பு மற்றும் நிர்வாகம் ஆகியவைகளின் ஆற்றல் ஒரு அரசை அதிகாரம் மிக்க ஒன்றாக மாற்றுவதற்கு உகந்த ஆக்கக் கூறாகும்.

அதிகாரத்திற்கு சாதகமான அமைப்பு, மக்களாட்சியா அல்லது சர்வாதிகாரமா என்ற கருத்துரு வேறுபாடு நிலவுகிறது. மக்களாட்சி அரசாங்கத்திற்கு சாதகமாக சில வாதங்கள் கூறப்பட்டுள்ளன. மக்களாட்சி அமைப்பு குடிமக்களுக்கு முழு அளவில் ஆன்மீக, அரசியல் மற்றும் விஞ்ஞான சுதந்திரம் அளிக்கின்றது. பொது விமர்சனம், முடிவெடுப்பதில் பொதுமக்கள் ஈடுபாடுபோன்றவை இம்முறையில் காணப்படுவதால் முடிவுகள் நன்முறையில் அமைய வாய்ப்பு உண்டு. சர்வாதிகார அமைப்புகளை

(குறிப்புக்கான இடம்)

ஆதரிப்பவர்களின் வாதப்படி, கருத்து வேறுபாடுகள் சர்வாதிகார முறையில் அடக்கப்படுவதால் இம்முறையில் இலகுவாகக் குறிப்பிடுகின்ற அளவில் ஒரே மாதிரியான கொள்கைகளை உருவாக்க வாய்ப்பு உண்டு. முடிவு எடுப்பதில் இம்முறையில் ஒரு சிலருக்கு அதிகாரமுண்டு இரண்டு விவாதங்களும் கேள்விக்குரியனவாக திகழ்கின்றன. சில நேரங்களில் மக்களாட்சி முறை வேகமாக செயல்படும் சில நேரங்களில் சர்வாதிகார முறை மக்களாட்சி முறையை விட விவேகமாக செயல்படும்.

### 3.1.1. தேசிய அதிகாரம் பற்றி மதிப்பீடு:

தேசிய அதிகாரம் தொடர்புகளை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது. ஒரு நாட்டின் அதிகாரத்தை அதன் முழுமையான தன்மையை வைத்து அளவிடல் கூடாது. ஏனென்றால், முழுமை பெறும் தன்மைக்கு அதிகாரத்தைப் பொறுத்த மட்டில் எந்த அர்த்தமும் கற்பிக்க இயலாது. எனவே ஒரு நாட்டின் அதிகாரத்தை பிற நாடுகளின் அதிகாரத்தோடு ஒப்பிட்டு மட்டுமே அளவிட இயலும். நாடுகள் அதிக அளவில் மக்கள் தொகையையும் மியைான இயற்கை வளத்தையும் நவீன ஆயுதங்கள் கொண்ட இராணுவ பலத்தையும், மக்களிடையே உயர் ஒழுக்க உணர்வையும் கொண்டு திகழலாம். ஆனால், இவை அதிக அதிகாரத்தை சில நேரங்களில் வழங்காது. ஏனென்றால், இவை ஒரு நாட்டின் எதிரியை சமாளிக்க தேவையான வலுவை வழங்கும் நேரத்தில், இன்னொருவரை சமாளிக்க போதாதவையாக கருதப்படும். ஆகையால் ஒரு நாட்டின் அதிகாரத்தை பிற நாடுகளின் அதிகாரத்தோடு ஒப்பிட்டு கணக்கிடல் சாலச்சிறந்தது என்று நாம் திட்டவட்டமாக கூறலாம்.

அதிகாரம் மாறிவரும் தன்மை படைத்தது என்பதனை மனதில் கொள்ளல் வேண்டும். நாட்டின் முழுமையான வரம்பற்ற அதிகாரத்தில் அந்நாட்டில் அதிகரிக்கும் அல்லது குறையும் மக்கட்தொகை நிலப்பரப்பு இராணுவ பலம் போன்வற்றால் மாறுதல் ஏற்படலாம் இம்மாறுதல்கள் ஒரு நாட்டின் அதிகாரத்தை மாற்றியமைக்கும் சக்தி படைத்தது. ஆகையால் இன்று அதிகாரமிக்க வல்லரசாக திகழும் நாடு வருங்காலத்தில் அதே நிலையில் இருக்கும் என்று எண்ணக்கூடாது. ஜெர்மனியை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இரண்டாம் உலகப்போருக்கு முன் ஜெர்மனி உலகில் மேன்மையான ஒரு வல்லரசாகக் கருதப்பட்டது. நாஜி மேம்பாடு ஐரோப்பாவில் நிரந்தரமாக நிலை நிறுத்தப்படும் என்று எண்ணினர். ஆனால் இரண்டாவது உலகப்போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டு, ரஷ்யா உலக வல்லரசாக உருவெடுத்த பிறகு வருங்கால ஐரோப்பாவின் ஏக போக தலைவனாக ரஷ்யா கருதப்பட்டது.

அதிகாரத்தின் ஒரு குறிப்பிட்ட ஆக்கக்கூற்றுக்கு சில அறிஞர்கள் அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர். ஆனால் உண்மையில் எந்தவொரு ஆக்கக்கூறும் அதிகாரத்திற்கு முழுப்பொறுப்பு ஏற்க இயலாது. நடைமுறையில் ஒவ்வொரு ஆக்கக்கூறும் தனது பணியை ஆற்றுவதோடு பிற ஆக்கக் கூறுகளைப் பாதிக்கும் அளவில் பணியாற்றுகின்றது. எனவே ஒரு குறிப்பிட்ட ஆக்கக்கூறு அதிகாரத்திற்கு பயன்படுகிறது என்ற கூற்று தவறு. அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளை விடவும் மிகையான ஒரு மக்கட்தொகையை இந்தியா கொண்டுள்ளது. பெல்ஜியம் முழு அளவில் தொழில் மயமாக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து ஒரு முதல்தர இராணுவத்தைக் கொண்டு திகழ்கிறது, என்றாலும் மேற்கூறிய இவ்வரசுகள் முதல்நிலை அரசுகளாக உலகில் கருதப்படவில்லை.

ஒரு அரசின் அதிகாரத்தை சரியாக கணக்கிடல் இலகுவான காரியமல்ல என்று நாம் முடிவாக கூறலாம். ஒவ்வொரு அதிகாரத்திற்கான கூறுகளும் ஒன்றையொன்று பாதிக்கின்ற அளவில் எதிர்மறையாகச் செயல்படுகின்றன. ஆகையால் சில ஆக்கக்கூறுகள் இணைந்து உருவாகும் அதிகாரத்தை மதிப்பிடல் அரிது — இயற்கை வளத்தில் நிலவும் பற்றாக்குறையை விவேகமான தொழில்நுட்ப வளர்ச்சியால் மாற்றியமைக்கலாம். தலைமையின் முக்கியத்துவத்தை ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டினால் குறைக்கலாம். ஒவ்வொரு ஆக்கக்கூறும் ஒன்றோடொன்று பிணைந்து காணப்படுகிறது. எனவே எந்த ஒரு நாட்டின் அதிகாரத்திறனையும் இறுதியாக மதிப்பிடுதல் அரிது எவ்வாறெனினும், நாடுகளின் அதிகாரத்தை மதிப்பிடலில் சிக்கல்கள் காணப்பட்டாலும் தேசிய அதிகார ஆக்கக்கூறுகள் நாடுகளின் அதிகாரத்தை மதிப்பிட தேவையான சிந்தனைக்கு விருந்தளிக்கின்ற அளவில் அமைகின்றது என்று நாம் கூறலாம்.

### 3.1.2. பன்னாட்டு அரசியல் அதிகாரத்திற்கான ஒரு போராட்டம்:

எல்லா நிலையிலும் உள்ள அரசியல்களைப் போன்று பன்னாட்டு அரசியலும் அதிகாரத்திற்கான ஒரு போராட்டமாகும். பன்னாட்டு அரசியலின் முக்கிய குறிக்கோளாக அதிகாரம் காணப்படுகிறது. உலகப் பெரும்தலைவர்கள் மற்றும் மக்கள், மத, தத்துவ, பொருளாதார, சமூக கொள்கைகளின் அடிப்படையில் தங்கள் குறிக்கோள்களை விளக்குகின்றனர். இவ்விலட்சியக் கொள்கைகள் பெற்றிருக்கும் சக்தியாலும் இறை தலையீட்டாலும் இயற்கையாக வளர்ச்சியுறும் மனித விவகாரங்களாலும் செயலாக்கப்படுகிறது. அரசியலுக்கு அப்பாற்பட்ட

(குறிப்புக்கான இடம்)

நிலையில் நாடுகளுக்கிடையேயான தொழில்நுட்ப ஒத்துழைப்பு அல்லது பண்பாட்டு நிறுவனங்கள் மூலம் இவர்கள் தங்கள் கொள்கைகளை அடைய முயற்சிக்கின்றனர். ஆனால் தங்கள் குறிக்கோளை எய்துவதற்கு அதிகாரத்தை கருவியாக தேர்ந்தெடுத்தனர்.

பன்னாட்டு அரசியலின் இக்கோட்பாடு இரு முடிவுகளை நிலைநிறுத்துகிறது. முதலாவதாக ஒரு நாடு இன்னொரு நாட்டிற்காக ஆற்றும் அத்தனை செயல்களும் அரசியல் தன்மை வாய்ந்ததல்ல. இவ்வகையான பல செயல்கள் அதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் நடந்தேறுகின்றன. சட்டம், பொருளாதாரம், மனிதாபிமானம், மற்றும் கலாச்சாரம் சார்ந்த செயல்கள் இவ்வகையைச் சார்ந்தவை. இவ்வாறு ஒரு நாடு பிற நாட்டோடு பொருட்களை பரிமாறிக் கொள்தல் இயற்கை விளைவித்த நாசங்களுக்கு நிவாரணம் அளிப்பதில் பிற நாடுகளுடன் ஒத்துழைத்தல் மற்றும் கலாச்சார வெற்றிகளை உலகெங்கும் பகிர்தறித்தலை வளர்த்தல் போன்று செயல்களைப் புரிவதால் அந்நாடு பன்னாட்டு அரசியலில் ஈடுபடுகிறது, என்று கூறமுடியாது. இரண்டாவதாக, எல்லாநாடுகளும் எல்லா நேரங்களிலும் ஒரே நிலையாக பன்னாட்டு அரசியலில் ஈடுபடுகிறது. என்று கூறமுடியாது. 16—வது 17—வது நூற்றாண்டுகளில் பன்னாட்டு அரங்கில் அதிகாரப் போராட்டத்தில் ஸ்பெயின் முக்கிய பங்கேற்றது. ஆனால் இன்று அந்நாடு அதிகாரப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கை ஏற்கவில்லை. இதைப்போன்று ஆஸ்திரியா சுவீடன் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இன்று அதிகாரப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றவில்லை. ஆனால் அதே நேரத்தில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் அந்நாடுகள் இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையைக் காட்டிலும் தீவிரமாக இன்று பன்னாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளது.

பிறருடைய மனதையும் செயலையும் கட்டுப்படுத்தும் மனிதனின் திறனை நாம் அதிகாரம் என்கிறோம். பொது அதிகாரத்தைப் பொற்றிருப்பேரிடையே நிலவும் உறவினைக் கட்டுப்டுத்தலையும் அவ்வதிகாரம் பெற்றிருப்போருக்கும் மக்களுக்கும் இடையே நிலவும் உறவினைக் கட்டுப்பத்தலையும், நாம் அரசியல் அதிகாரம் என்கிறோம்.

எவ்வாறெனினும், அரசியல் அதிகாரத்தை வலிமையில் இருந்து வேறுபடுத்தல் அவசியம். அத்துமீறி கட்டாயப்படுத்தும் செயல், சிறையிடுதல் தண்டனை அளித்தல் போர் போன்றவை அரசியலில் காணப்படும் முக்கிய ஆக்கக்கூறுகள். கட்டாயப்படுத்தல் அரசியலில் நிலவினாலும் அது

(குறிப்புக்கான இடம்)

பெரும்பாலும் இராணுவ அதிகாரத்தையே குறிக்கின்றது. பன்னாட்டு அரசியலில் படைபலம் ஒரு முக்கிய சக்தியாக நாட்டின் அரசியல் அதிகாரத்தை உருவாக்கும் ஆக்கக்கூறாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசியலின் அதிகாரம் என்பது அவ்வதிகாரம் பெற்றோருக்கும் அவர்களால் பயன்படுத்தப்படுகிறவர்களுக்குமிடையே உளவியல் சார்ந்த தொடர்பினைக் குறிக்கின்றது. இவ்வதிகாரம் பயன்படுத்தப்படுகிறவர்கள் மேல் அதிகாரம் கொண்டோருக்கு இவ்வதிகாரத்தால் ஒரு செல்வாக்கினை நிலைநாட்ட முடிகின்றது. இச்செல்வாக்கினால் அதிகாரம் கொண்டோர் அதிகாரம் செலுத்தப்படுபவர்கள் மனதைக் கட்டுப்படுத்துகின்றனர். 'இச்செல்வாக்கை அதிகாரம் கொண்டோர் பல வழிகளில் அடைக்கின்றனர். கட்டளைகள், அச்சுறுத்தல், தூண்டுதல்கள் அதிகாரம் அல்லது தனிமனிதன் அல்லது பதவி உருவாக்கிய வசீகரம் போன்றவைகள் இச்செல்வாக்கினை வழங்குகின்றது. அமெரிக்காவில் பணியாற்றுகிறவர்கள் தனது கட்டளைகளுக்கு கீழ்படுகின்றவரை அவர்கள் மீது தனது அதிகாரத்தை அமெரிக்க அதிபர் செலுத்துகின்றார். தனது கட்சி அங்கத்தினர்களை தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு இயக்குவிக்கின்ற காலம் வரையிலும் அவ்வங்கத்தினர்கள் மேல் அக்கட்சித்தலைவருக்கு அரசியல் அதிகாரத்தை செயல்படுத்த முடியும்.

ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது இராணுவ வலுவைபிரயோகத்தால், அந்நாட்டிற்கு அது ஆபத்தாக முடியும் என்று அச்சுறுத்துகின்ற வகையில், மற்ற நாடு, இராணுவ ஆயத்தங்கள் செய்தலை தனது அரசியல் குறிக்கோளாகக் அடக்குதல் போன்றவற்றை போரின் அரசியல் குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது. ஆனால் எதிரியின் மனநிலையில் மாற்றம் ஏற்படுத்தி எதிரியை வெற்றி பெற்றவரின் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள செய்தல் போரின் அரசியல் குறிக்கோளாக அமைய வேண்டும்.

எனவே, பொருளாதார அடிப்படையிலான நிலப்பரப்பு அல்லது இராணுவம் சார்ந்த கொள்கைகளை பன்னாட்டு விவகாரத்தில் விவாதிக்கும் போது, இக்கொள்கைகளை ஒரு நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தலையும், பிற நாட்டின் கொள்கைகளை கட்டுப்படுத்த உகந்த அரசியல் கொள்கையாகப் பயன்படுத்தலையும் வேறுபடுத்தி விவாதிக்க வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு சுவிட்சர்லாந்து கொண்டுள்ள ஏற்றுமதி ஏற்பாடுகள் தன் நலனுக்காகப் பின்பற்றப்படும் முதல்வகைக் கொள்கையைச் சார்ந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் ரஷ்யா செய்து

(குறிப்புக்கான இடம்)

கொண்டுள்ள பொருளாதார ஏற்பாடுகள் அந்நாடுகளின் கொள்கைகளைக் கட்டுப்படுத்த பின்பற்றப்படும் இரண்டாம் வகையைச் சார்ந்தது. இதைப் போன்ற இரண்டாம் வகைப் பொருளாதார ஏற்பாடுகளை அமெரிக்க, லத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே ஒரு நாட்டின் தேசிய அதிகாரத்தை அதிகரிக்க இக்கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் எங்ஙனம் துணை நிற்கிறது என்று கணக்கிட்டு, அதனடிப்படையில் கொள்கைகளையும், குறிக்கோளையும் மேற்கொண்டால், அக்கொள்கைகளையும் குறிக்கோள்களையும் மேற்கொள்ளும் நாட்டின் அதிகாரம் பிற நாடுகளின் அதிகாரத்தைக் காட்டிலும் மேம்பாடு உடையதாய் மாறுகின்றது. பன்னாட்டு அரங்கில் அதிகாரப் போராட்டம் நிலையான ஒன்று அல்ல. இது வரலாற்றில் எதிர்பாராமல் நிகழும் ஒன்று விசேட வரலாற்று நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டால் அதிகாரப் போராட்டம் தானாக மறையும். இவ்வடிப்படையில் பன்னாட்டு முரண்பாடுகளுக்கு அடிப்படைக் காரணம் குடியேற்ற நாடுகளுக்கான போட்டியே என்று பெந்தாம் நம்பினார். ‘குடியேற்ற நாடுகளின் அடிமைத்தன்மையை அறுத்துவிடு’ என்ற ஆலோசனைனயை அரசாங்கங்களுக்கு பென்தாம் கூறினார். மேற்கூறிய ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் நாடுகளுக்கிடையே நிரந்தரமாக ஒற்றுமையைத் தோற்றுவிக்கலாம். கட்டுப்பாடற்ற வாணிபத்தை எடுத்தியம்புகிறவர்கள் வாணிபத்திலுள்ள தடைகள் நீக்கப்பட்டால், நாடுகளிடையே நிலையான ஒற்றுமை ஏற்படுத்தி, பன்னாட்டு அரசியலையே உலகில் இல்லாமல் ஆக்கலாம் என்று கருதுகின்றனர். பன்னாட்டு ஒழுங்கினங்களுக்கும் போருக்கும், முதலாளித்துவம் தான் மூலகாரணம் என்று மார்ச்சீசிம், அவரது ஆதரவாளர்களும் எண்ணினர். பன்னாட்டு சமதர்மம் அதிகாரப் போராட்டத்தை பன்னாட்டு அரங்கிலிருந்து மாற்றி உலகில் நிலையான சமாதானத்தைத் தோற்றுவிக்கும் என்ற கருத்தை மார்க்ஸீய வாதிகள் கொண்டிருக்கின்றனர் வரம்பற்ற அதிகாரம் படைத்த அரசாங்க முறைதான் அதிகார அரசியலுக்கும் போருக்கும் வழி வகுத்தது என்ற எண்ணத்தை 19 ஆம் நூற்றாண்டில் முற்போக்காளர்கள் கொண்டிருந்தனர். வரம்பற்ற ஒழுங்கற்ற அதிகாரத்தை அரசியலமைப்பு அடிப்படையிலான மக்களாட்சி நிச்சயம் வென்று பன்னாட்டு ஒற்றுமையையும் நிரந்தர அமைதியையும் நிலைநாட்டும் என்று நம்பலாம். சமீப காலத்தில் பன்னாட்டு அரங்கில் அதிகாரப் போராட்டத்தைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையால், உலகை சர்வதேச சங்கம் மற்றும் ஐக்கிய நாட்டு சபை போன்ற ஸ்தாபனங்களின் கீழ் ஓர் அமைப்பாக கொணர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதிகாரப் போராட்டம் உலகம் முழுவதும் எல்லாக்காலத்திலும் காணப்படுகிறது. சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகளைக் கடந்து

வரலாற்றின் எல்லாக் காலகட்டத்திலும் நாடுகளுக்கிடையே அதிகாரப் போட்டிகள் நடந்து வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. உலகெங்குமுள்ள நாடுகளில் நிலவும் அதிகாரத்திற்கான விருப்பம் ஒழிக்கப்படல் வேண்டும். இல்லையென்றால் அதிகாரத்திற்கான விருப்பத்தை சில நாடுகள் பிற நாடுகளின் அதிகாரத்திற்குப் பலியாவார்கள்.

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு அரசியலின் அடிப்படையில் ஒரே ரீதியாகக் காணப்படுகிறது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரங்குகளில் அதிகாரப் போராட்டம் நடந்து வருகின்றது. ஆனால் இரு அரங்களிலும் இப்போராட்டம் வெவ்வேறு சூழ்நிலைகளில் நடைபெறுகிறது.

குடும்பங்கள், தொழிற்சங்கங்கள், தல அரசியல் அமைப்புகள், அரசுகள் போன்ற எல்லா மனித அமைப்புகளிலும் ஆதிக்கம் செலுத்தும் ஆக்கக்கூற்றை காணலாம். ஒரு குடும்பத்தில் மாமியாருக்கும், மருமகளுக்கும் இடையே அதிகாரத்தை நிலைநிறுத்தல் போராட்டம் நடைபெறுகின்றது. சமூக இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், வியாபார கழகங்கள் போன்றவற்றில் தாங்கள் பெற்ற அதிகாரத்தைத் தக்க வைக்கவும், அதிக அதிகாரத்தைப் பெறவும் தொடர்ச்சியாக அதிகாரப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. வியாபார அமைப்புகளிடையே போட்டிகளும் முதலாளி தொழிலாளி ஆகியோரிடையே தொழிற் தகராறுகளும் பொருளாதார நலனுக்கு மட்டும் அல்லாமல் பிறர் மேல் அதிகார ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் அடிக்கடி நடந்து வருகின்றது. கடைசியாக ஒரு மக்களாட்சி அரசியல் தல அமைப்பில் இருந்து தேசிய அமைப்பு வரை தொடர்ச்சியாக அதிகாரப் போராட்டம் நடைபெறுகிறது எனலாம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடைபெறுகின்ற தேர்தல், சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற வாக்கெடுப்புகள் நீதிமன்றங்களில் செயல்பாட்டிலும், மனிதன் தனது அதிகாரத்தை தக்க வைக்கவும், பிறருடைய அதிகாரத்தை தக்க வைக்கவும், பிறருடைய அதிகாரத்தைக் காட்டிலும் மேம்படுத்தவும் முனைகின்றான்.

### 3.1.3. நிலை நிறுத்துக் கொள்கை: (Policy of Status Quo)

அதிகாரப் போராட்டம் என்ற ஒரே கருத்தை இரண்டு வெவ்வேறான முறையில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசியல்கள் வெளிப்படுத்துகின்றன. இவ்விரு அரசியலும் வெவ்வேறான ஒழுக்க, அரசியல் மற்றம் சமூக சூழ்நிலைகளில் இயங்குவதால் அதிகாரப் போராட்டத்தின் வெளிப்டுத்தல் முறையும் வேறுபடுகின்றது. கலாச்சார ஒருமைப்பாடு தொழில் நுட்ப ஒருங்கிணைவு, வெளிநடப்பு, ஆதிக்கம்,

நறிப்புக்கான இடம்)

படிநிலை, அரசியல் அமைப்பு போன்றவை ஒருங்கிணைந்து தேசிய சமூகங்களைத் தோற்றுவிக்கின்றன. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அரசியல் சமுதாயம் நிலையானதாய் அமைகிறது. பன்னாட்டு அமைப்புகளைப் போன்று இலகுவாக இவற்றை ஆக்கிரமித்து மாற்ற இயலாது.

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசியல் மூன்று அடிப்படை கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. அதிகாரதத்தை நிலை நிறுத்த அதிகாரத்தை அதிகரிக்க மற்றும் அதிகாரத்தை செயல்படுத்தி நிரூபிக்க பின்பற்றும் அரசியல் கொள்கைகளாகும். ஒரு நாடு இருக்கிற அதிகாரத்தை தனக்கு சாதகமாகப் பகிர்ந்து கொள்ளாமல் அதிகாரத்தை நிலை நிறுத்த உகந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினால் அக்கொள்கை நிலை நிறுத்திக் கொள்கை எனப்படும். அதிக அதிகாரத்தை அடைவதற்கு உகந்த அளவில் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை அமையுமானால் அக்கொள்கை ஆதிக்க ஆட்சிக் கொள்கை எனப்படும். அதிகாரத்தை தக்க வைக்கும் அல்லது அதிகரிக்கும் நோக்கத்தோடு தன்னிடம் இருக்கும் அதிகாரத்தை செயல்படுத்தி நிரூபிக்கும் வெளிநாட்டுக் கொள்கையை ஒரு நாடு பின்பற்றினால் அக்கொள்கை தன்மானக் கொள்கை எனப்படும்.

நிலை நிறுத்துக் கொள்கையில் காணப்படும் 'நிலைநிறுத்தல்' என்ற பதம் அரசியல் தந்திரத்தில் போருக்குப் பின் ஏற்படும் சமாதான உடன்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும். இது போரில் தன் கைவசப்படுத்தியிருக்கும் நிலப்பகுதியிலிருந்து எதிரியை வெளியேறச் செய்து, அப்பகுதியில் போருக்கு முன் இருந்த இறைமையை நிலை நாட்டப் பயன்படுகிறது. வரலாற்றின் குறிப்பிட்ட காலகட்டத்தில் நிலவும் அதிகாரப் பகிர்வை தக்க வைத்தலை தனது குறிக்கோளாக, நிலை நிறுத்தல் கொள்கை கொண்டுள்ளது. வரலாற்றில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டள்ள சமாதான உடன்பாடுகளில் தொகுத்தளிக்கப்பட்டுள்ள போரை நிறுத்தும் அளவிலான அதிகாரப்பகிர்வு, நிலைநிறுத்தும் கொள்கையைக் குறிக்கின்றது. ஏனென்றால், சமாதான உடன்பாடுகளின் முக்கிய குறிகோள் நடந்து முடிந்த போரினால் வெற்றி பெற்ற மற்றும் தோல்வியுற்ற நாடுகளில் தோன்றிய அதிகார மாறுதல்களை சட்டப்பூர்வமாக்குதல் ஆகும். இவ்வாறு புதிய அதிகாரப் பகிர்வை சட்டபூர்வமாக்கி உலகில் ஒரு நிலையான தன்மையைத் தோற்றுவிக்கலாம். முதல் உலகப் போருக்குப் பின் தோன்றிய புதிய அதிகாரப் பகிர்வு 1919—ஆம் ஆண்டு உலகில் நிலவிய அதிகார நிலையை நிலை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்தல் சர்வதேச சங்கத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. 1919—ம் ஆண்டு உருவாக்கப்பட்ட

சமாதான உடன்பாடு கூறியபடி அவ்வமயம் உலகில் நிலவிய நிலையை தக்க வைத்தலை தனது முக்கியப் பணியாக சர்வதேச சங்கம் ஏற்றுக்கொண்டு தனது சட்டவரையில் 10—வது விதியில் பின்கூறப்பட்டுள்ள பகுதியைக் கூறியது. ‘சங்க உறுப்பினர்களின் நில ஒருமைப்பாட்டையும் அரசியல் சுதந்திரத்தையும் மதித்து வெளி ஆக்கிரமிப்புகளில் இருந்து அவ்வுறுப்பினர்களை பாதுகாத்தல் சர்வதேச சங்க உறுப்பினர்களின் கடமையாகும். “இரண்டு உலகப்போருக்கு இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த அதிகாரப் போராட்டம் வெர்சேயில்ஸ் உடனபடிக்கையில் கூறப்பட்டுள்ள நிலப்பரப்பு சம்பந்தமான ஏற்பாடுகள் மற்றும் சர்வதேச சங்கத்தின் சட்டவரையில் 10—வது விதியில் கூறப்பட்டுள்ள கருத்து போன்றவற்றை எதிர்த்தும் ஆதரித்தும், நடந்தது. முடிவில் 1919—ஆம் ஆண்டு நிலவிய அதிகார நிலையை நிலை நிறுத்தலை எதிர்த்த நாடுகள் சர்வதேச சங்கத்தோடு தாங்கள் கொண்டிருந்த தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டன. 1938 –ஆம் ஆண்டு ஜெர்மனியும் 1937 ஆம் ஆண்டு இத்தாலி”யும் 1939—ஆம் ஆண்டு ஜப்பானும், சர்வதேச சங்க அமைப்பில் இருந்து வெளியேறின.

ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்சு, பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகள் ஒருவருக்கொருவர் உத்திரவாதம் அளிக்கின்ற அளவில் 1925—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16—ஆம் நாள் லோகர்னோவில் வைத்து கையெழுத்திடப்பட்ட உடன்பாடு போன்றவற்றை அதிகாரப் பகிர்வை நிலைநிறுத்த விரும்புகின்ற நாடுகள் தாங்கள் கருவியாக பயன்படுத்தலாம். 1918 ஆம் ஆண்டு உலகிலுள்ள நிலப்பரப்பாட்சி நிலை நிறுத்தலுக்காக உருவாக்ககப்பட்டு சர்வதேச சங்க சட்டவரையில் 10—வது விதியில் இடம் பெற்றுள்ள பொது உத்திரவாதத்துடன் லோகர்னோவில் கையெழுத்தான உடன்பாடு உலக அரங்கில் இணைந்து அதிகார நிலை நிறுத்தலுக்காக பெருமுயற்சியை கொண்டது.

அதிகார நிலைநிறுத்தலைக் பாதுகாக்கும் பணி ஓரளவு கூட்டமைவு உடன்பாடுகளுக்கும் உண்டு. இரண்டு உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனி அதிகார நிலை நிறுத்தலைக் குலைக்க முயன்றபோது அம்முயற்சியைத் தோற்கடித்து அதிகார நிலை நிறுத்தத் தக்கவைக்க பிரான்சு, ரஷ்யா, போலந்து, செக்கோஸ்லேவேகியா, யுகோஸ்வியாருமேனியா ஆகிய நாடுகள் ஒரு கூட்டுஉடன்பாட்டை செய்து கொண்டன. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஐரோப்பா பகுதிகளில் பகிர்ந்து நிலை நிறுத்தப்பட்ட அதிகாரத்தை நிலை நிறுத்த இன்று ரஷ்யா

(குறிப்புக்கான இடம்)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமக்குள்ளும் அமெரிக்காவுடன் பல கூட்டு உடன்படிக்கைகள் ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க பன்னாட்டு உறுவுகளின் அடிப்படைக் கல்லாக கருதப்படும் மன்ரோ கோட்பாடு (Monroe Doctrine) அமெரிக்காவில் முக்கியமாகக் கருதப்படும் நிலை நிறுத்தும் கொள்கையின் வெளித்தோற்றமாகும். ஒரு சார்பாளரைக் கட்டுப்படுத்தும் இந்த அறிக்கை அதிபர் மன்ரோவால் 1823—ஆம் ஆண்டும் டிசம்பர் மாதம் 2ஆம் நாள் காங்கிரஸில் அளித்த உரையில் கொடுக்கப்பட்டது. நிலைநிறுத்தக் கொள்கையின் இரு முக்கிய தத்துவங்களை இக்கோட்பாடு எடுத்தியம்புகிறது. மேற்கத்திய உலகில் நிலவும் அதிகாரப் பகிர்வை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை அமெரிக்கா தடைசெய்யும் என பிரகடனப்படுத்துகின்றது.

வரலாற்றின் குறிப்பிட்ட கால கட்டத்தில் நிலவிய அதிகாரப் பகிர்வை தக்க வைத்தலை நிலைநிறுத்தல் கொள்கையின் குறிக்கோள் என்று கூறினோம். இக்கூற்று நிலை நிறுத்தும் கொள்கை எல்லா வகையிலும் கொண்டு வரப்படும் மாற்றங்களை எதிர்க்கொள்கின்றது என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுதல்ல. மாற்றங்களை இக்கொள்கை எதிர்க்கவில்லையென்றாலும் இரண்டு அல்லது பல நாட்டினங்களுக்கு இடையே காணப்பட்ட அதிகார உறவில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டால் இக்கொள்கை அதை எதிர்க்கும் ‘A’ என்ற நாடு முதன் நிலை அதிகாரமாக இருந்ததை மாற்றி அதை இராண்டாம் நிலைக்கு கொணர்ந்து அந்த முதல் நிலையை ‘B’ என்ற நாட்டிற்கு கொடுத்தலை அதிகார உறவில் ஏற்படும் தலைகீழ் மாற்றத்திற்கு எடுத்துக் காட்டாக கூறலாம். அதிகாரப் பகிர்வை சரிபடுத்த சில சிறிய மாற்றங்கள் கொண்டு வந்து நாடுகளின் அதிகார நிலையை சீராக வைத்திருந்தால், அச்சிறு மாற்றங்களை நிலை நிறுத்தக் கொள்கை ஏற்றுக் கொள்ளும். எடுத்துக்காட்டாக 1867 ஆம் அண்டு அலாஸ்காப் பகுதியை அமெரிக்கா விலைக்கு வாங்கியதை கொள்ளலாம். இவ்வாறு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே நிலவிய அதிகாரப் பகிர்வை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. எனவே இவ்வகை சிறிய முக்கியத்துவமற்ற மாற்றங்களை நிலை நிறுத்துக் கொள்கை தீர்ப்பதில்லை.

### 3.1.4. ஆதிக்க ஆட்சி (Imperialism)

‘ism’ என்ற ஆங்கில எழுத்துக்களுடன் முடியும் வல பதங்களைப் போன்று ஆதிக்க ஆட்சி (Imperalism) என்ற சொல்லும் பல நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றது. அரசுகள் பேரரசுகளை உருவாக்குதலையும் குடியேற்ற நாடுகளை அடைதலையும் வரலாற்றறிஞர்கள் ஆதிக்க ஆட்சி

(குறிப்புக்கான இடம்)

என்கின்றனர். எதிரியின் அரசகளை தங்கள் நிலப்பகுதிகளோடு இணைக்கும் பேராசையை தேச பக்தர்கள் ஆதிக்க ஆட்சி என்றார். மேற்கத்திய அரசுகளின் மற்றும் பொது உடைமையைச் சாராத நாடுகளின் எல்லா கொள்கைகளையும் கண்டிக்க ரஷ்யர்கள் இப்பதத்தைப் பயன்படுத்தினர்.

ஆதிக்க ஆட்சிக்கு பல பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது. "பிற இனம் அல்லது மக்கள் வாழும் பகுதிகளில் ஒரு அரசாங்கம் தனது அரசியல் தந்திரம் என்ற எந்திரத்தைப் பயன்படுத்தி அப்பகுதிகளை தனது நிலப்பகுதியாகவும் காப்பாட்சிப் பகுதியாகவும், செல்வாக்குக் உட்பட்ட பகுதியாகவும், அபகரித்து, அப்பகுதிகளில் தங்கள் தொழில், வியாபாரம், முதலீடு போன்றவைகளை வளர்த்தல்" ஆதிக்க ஆட்சி என்று சார்லஸ் பியர்ட் (Charles Beard) என்ற அறிஞர் கூறியுள்ளார். "ஒரு நாட்டின் அதிகாரத்தை அந்நாட்டு எல்லைக்கு அப்பால் பரப்புதல் ஆதிக்க ஆட்சி என்று ஹேரன்ஸ் மொர்கென்தா என்பார் கூறுகின்றார். "வலிமை, ஆக்கிரமிப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி ஒரு நாட்டில் வாழும் மக்கள் மீது அந்நிய ஆட்சியை திணிப்பது ஆதிக்க ஆட்சி" என்று ஷூமென் (Profo Schuman) என்ற பேராசிரியர் கூறியுள்ளார். மேற்கூறிய பொருள் விளக்கங்களை கற்கும் போது எந்த இரு அறிஞர்களும் ஆதிக்க ஆட்சிக்கு ஒரே ரீதியிலான பொருள் விளக்கம் அளிக்கவில்லை என்பது புலனாகிறது. எவ்வாறெனினும் ஆதிக்க ஆட்சிக்கு நடைமுறையிலான ஒரு சிறந்த பொருள் விளக்கத்தை சார்லஸ் ஹாட்ஜ்ஸ் (Charles hodges) என்ற அறிஞர் அளித்துள்ளார். அவர் கூற்றுப்படி, "ஆதிக்க ஆட்சி என்பது அந்நிய நாட்டின் அரசியல் பொருளாதாரம் அல்லது கலாசார அதிகாரத்தை ஒரு நாட்டில் வாழும் மக்களின் உள்நாட்டு வாழ்வில் வெளிப்படையாக, நேரடியாக அல்லது மறைமுகமாக செலுத்துதல் ஆகும். மேலும் வெளிப்படையாக அல்லது இரகசியமாக, நேரடியாக அல்லது மறைமுகமாக ஒருவருடைய கட்டுப்பாட்டை இன்னொருவர் மீது திணத்தலை இது குறிக்கின்றது.

சில முக்கிய உள்நோக்கங்கள் ஆதிக்க ஆட்சியாளர்களை ஆதிக்க ஆட்சிக் குறுக்கோளை அடைய வழி நடத்திச் செல்கின்றன. அவ்வுள் நோக்கங்களைப் பொருளாதார இலாபம், உளவியல் சார்ந்த நோக்கம் மனிதாபிமான நோக்கம், பாதுகாப்பு, மக்கட் தொகை மிகை என்ற ஐந்து தலைப்பின் கீழ் பிரிக்கலாம்:

(குறிப்புக்கான இடம்)

1) **பொருளாதார ஆதாயம்:** ஆதிக்க ஆட்சியின் அடிப்படை உள் நோக்கம் பொருளாதார இலாபம் அடைதல் ஆகும். பொதுவாக மூலப் பொருட்கள் பெறுவதற்காக, மிகையாக உற்பத்தி செய்த பொருட்களை விற்கும் சந்தைக்காக, மிகையாக இருக்கும் மூலதனத்தை முதலீடு செய்வதற்காக நாடுகள் பிறபகுதிகளை ஆக்கிரமிக்கிறது. தங்களுடைய நாட்டில் மூலப்பொருட்கள் உற்பத்தி செய்வதற்க அதிக செலவு ஆகின்றமையாலும், தங்கள் நாட்டில் தேவையான அளவிற்கு மூலப்பொருட்கள் இல்லாமையாலும், உலகிலுள்ள ஏறக்குறைய அத்தனை பெரிய தொழில்வல்லமை பெ ற்ற அரசுகளும் இறக்குமதி செய்யும் மூலப்பொருட்களையே சார்ந்துள்ளன. ஒவ்வொரு தொழில் வல்லமை பெற்ற அரசும் தனது மக்களின் தேவைக்கு அதிகமாக பொருட்களை உற்பத்தி செய்கின்றன. ஆகையால் மிகையாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளிச்சந்தைகளில் விறகப்படவேண்டும். முதலீடு செய்ய கொண்டுள்ள விருப்பம் ஆதிக்க ஆட்சி முறையில் ஒரு பெரும் பங்கை ஆற்றுகின்றது. வல்லரசுகள் தொழில் வளர்ச்சியினால் மிகையான மூலதனம் பெற்றுள்ளன. எனவே, அவ்வரசுகள் மிகையான மூலதனத்தை திரும்பவும் முதலீடு செய்து கூடுதல் இலாபம் திரட்ட முனைகின்றன. ஆகையால் மிகையான மூலதனம் ஒரு காரியங்களை அவ்வரசுகளின் முன் வைக்கின்றது. அவை (i) அவ்வரசுகளிடம் இருக்கும் மிகையான மூலதனத்தை உள்நாட்டில் இலாபம் கருதாமல் மதலீடு செய்தல் (ii) பெரும் இலாபத்தை ஈட்ட அவ்வரசுகள் தங்களிடமுள்ள மிகையான மூலதனத்தை பின் தங்கிய நாடுகளில் முதலீடு செய்தல் ஆகியவையாகும். இரண்டாவது நிலையைப் பின்பற்றி 1914—ம் ஆண்டிற்கு முன் பிரிட்டனும், பிரான்சும் தன்னிடம் இருந்து பெருந்தொகைகளை வெளிநாடுகளில் முதலீடு செய்தன. இன்றும், மிகையான மூலதனம் குடியேற்ற நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் முதலீடு செய்வதைக் காணலாம்.

ஆதிக்க ஆட்சியில் நிலவும் பொருளாதார இலாப எண்ணங்களைக் கற்க ஆதிக்க ஆட்சியில் பொருளாதார கோட்பாடுகளைக் கற்றல் அவசியம். ஆதிக்க ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை மூன்று வகையாகும். அவை (i) மார்க்ஸிய கோட்பாடு (ii) முதற்போக்கு கோட்பாடு (Liberal Therory) (iii) போர்வெறி கோட்பாடு (Devil Theory) ஆகியவையாகும்.

எல்லா அரசியல் கருத்துக்களும் முதலாளித்துவம் தோற்றுவித்த பொருளாதார உள்நோக்கத்தின் அடிப்படையிலும் தோன்றியவையாகும்

(குறிப்புக்கான இடம்)

என்று ஆதிக்க ஆட்சி பற்றிய மாக்கஸிய கோட்பாடு கூறுகின்றது. மூலதனத்தையும் பொருட்களையம் அதிகமாக உற்பத்தி செய்யும் போது முதலாளித்துவம் தோன்றுகின்றது, என்று இக்கோட்பாடு எடுத்தியம்புகிறது. உள்நாட்டுச் சந்தையில் மக்களின் வாங்கும் திறன் குறைந்திருப்பதால் மிகையான உற்பத்தி செய்த பொருட்களையம், மிகையாகப் பெற்றிருக்கின்ற மூலதன்தையும் பயன்படுத்த இயலாது. எனவே, வெளிச்சந்தைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. இதனால் முதலாளித்துவத்திற்கு அப்பாற்பட்ட மற்றும் உட்பட்ட பகுதிகளை அடக்கி ஆண்டு அப்பகுதிகளை தங்கள் மிகையான மூலதனத்திற்கும் பொருட்களுக்கும் உகந்த சந்தையாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாளித்துவ நாடுகள் ஆதிக்க ஆட்சி முறையை கட்டாயமாக தேர்ந்தெடுக்க உந்தப்பட்டனர் என்று கௌட்ஸ்கியன்பார் நம்பினார். ஆனால் அதற்கு மாறாக முதலாளித்துவம் ஆதிக்க ஆட்சிக்கு வழி வகுத்தது என்று லெனின் பறை சாற்றினார். அதிக உற்பத்தியும், குறைந்த வாங்கும் திறனும் ஆதிக்க ஆட்சியை உருவாக்கிற்று என்றால், அப்பொறுப்பை முதலாளித்துவ முறைதான் ஏற்க வேண்டும். உயர் சம்பளம், சமகிர்வு, உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்தல் அதிக சேமிப்பை ஒழித்தல் வாங்கும் திறனை அதிகரித்தல் போன்ற சமூக, பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் ஆதிக்க ஆட்சி பரவலுக்கு முடிவு கட்டலாம். பொருளாதார இலாபத்திற்காக பெரிய வியாபாரிகள் உருவாக்கிய சதியின் விளைவுதான் ஆதிக்க ஆட்சி என்று போர்வெறி கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். முதல் உலகப் போரில் நிலவிய பொருளாதார மற்றும் தொழில் நலன்களை ஆராய அமெரிக்க செனட் சபையால் நியமனம் செய்யப்பட்டதை நெய் குழு (Nye Committee) மேற்கூறிய கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. போர் சாதனங்களை உற்பத்தி செய்பவர்களும், இலாபம் தேடும் வியாபாரிகளும் போரினால் பொருள் ஈட்ட முடிவதால், போரை வரவேற்கிறார்கள் என இக்குழுவின் அறிக்கை கூறுகின்றது. ஆகையால் போரின் மூலம் தங்களை செல்வந்தர்களாக்கிக் கொள்வதே பணம் ஈட்ட விளைந்தோரின் திட்டம்.

இப்பொருள்தாராக் கோட்பாட்டை மூன்று அடிப்படைகளில் விமர்சிக்கலாம் முதலாவதாக, போர்களுக்கு அடிப்படை பொருளாதார உள்நோக்கம் என்று தவறுதலாக இப்பொருளாதார கோட்பாடுகள் எடுத்தியம்பின. 1899 – 1902 ஆம் ஆண்டுகளில் போயர் போர் போன்ற சில போர்களை தவிர்த்து ஏனைய அத்தனைப் போர்களும் அரசியல் குறிக்கோளை அடைய நடத்தப்பட்டன என்று வரலாறு நிரூபிக்கின்றது. உலகில் நடந்தேறிய இந்திய – பாக்கிஸ்தான் போர், வியட்னாம் போர்

(குறிப்புக்கான இடம்)

ஆகிய இரு முக்கிய போர்கள் அரசியல் குறிக்கோளை அடைய நடத்தப்பட்ட போர்களாகக் கருதப்பட்டது. பொருளாதாரக் கொள்கையின் ஒரு பிரிவாகிய மார்க்ஸிய கோட்பாடு ஆதிக்க ஆட்சி ஏற்படக் காரணமாயிருந்த முக்கிய ஆக்கக்கூறு முதலாளித்துவம் என்று தவறுதலாகக் கூறியுள்ளது. வரலாறும் இக்கூற்றை உறுதிப்படுத்தவில்லை. முதலாளித்துவம் உருவாவதற்கு முன்னால், அதாவது 16 ஆம், 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் முதலாளித்துவம் செயல்பட்ட 19 ஆம், 20ஆம் நூற்றாண்டுகளைவிட நாடுகள் பல குடியேற்றப்பகுதிகளை அபகரித்தன. போர் வெறிக் கோட்பாடும் உண்மையின் அடிப்படைகளில் நிலை நிறுத்தப்பட்ட ஒன்று இல்லை. முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்களும் போரினால் இலாபம் ஈட்டுகின்றவர்களும் போரை உண்மையில் ஆதரிப்பவர்கள் அல்ல. முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்களில் போரினால் விளையும் அழிவுகளையும் குழப்பங்களையும் நன்றாக அறிந்தவர்கள் எனவே, தனிமனிதனாகவோ அல்லது ஒரு குழுவாகவோ, முதலாளித்துவத்தை பின்பற்றுவார்கள் போரை விரும்ப மாட்டார்கள்.

2) உளவியல் சார்ந்த உள்நோக்கம் (Phychological Motive) : பொருளாதார ஆர்வத்தைக் தவிர்த்து உளவியல் சார்ந்த உள்நோக்கம் ஆதிக்க ஆட்சியில் ஒரு பங்கு வகித்தது. உண்மையில் ஆதிக்க ஆட்சி அரசின் தேசிய மதிப்பை மிகைப்படுத்தும் ஒன்றாக குடியேற்ற பகுதிகள், கருதப்படுகிறது. பிரிட்டிஷ் பேரரசில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று பெருமையை உலகில் பிரிட்டன் நாட்டைச் சார்ந்த ஆங்கிலேயர்கள் பல நூற்றாண்டுகள் பறை சாற்றி வந்தார்கள். ஆகையால் அதிகார தாகமும் ஆக்கிரமிப்பு தூண்டுதலும் ஆதிக்க ஆட்சி முறையில் ஒரு குறிப்பிட்ட பங்கு கொண்டுள்ளது எனலாம்.

3) மனிதாபிமான உள்நோக்கம் (Humanitarian Motive) : கிப்லிங் (Kipling) என்ற அறிஞர் வெள்ளையரின் கடப்பாட்டுச்சுமை (Whiteman's Burden) என மனிதாபிமான உள்நோக்கத்தை வர்ணித்துள்ளார். வெள்ளையர்கள் ஒரு மேம்பாட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் : எனவே தாழ்ந்த இனத்தைச் சார்ந்தோரை மேம்படுத்தல் அவர்களின் தலையாய பணி என்று "வெள்ளையரின் கட்டுப்பாட்டுச் சுமை" கூறுகிறது. மேம்பட்ட நாகரீகம் படைத்த சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் பின் தங்கிய மக்களிடம் நிலவும் அறியாமை அடிமைத்தனை மிருகத்தன்மை போன்றவற்றை உண்மையாக ஒழித்து தங்களுடைய மதத்தையும், பண்பாட்டையும், அவர்களிடையே பரப்பி, அவர்களை

(குறிப்புக்கான இடம்

நாகரீகம் படைத்தவர்களாக மாற்றுவதில் உண்மையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.மூன் என்ற அறிஞர் மனிதாபிமான உள்நோக்கத்தை ஒரு பயங்கர ஆக்கிரமிப்ப தன்மை கொண்டதாக கூறுகின்றார். ஏனென்றால், இம்முறையில் ஒரு நாட்டில் வாழும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக பயங்கர சக்தியை பயன்படுத்தி, அவர்கள் மீது பிரெஞ்சு அல்லது ஜெர்மனி பிரிட்டிஷ் அல்லது அமெரிக்க நாகரீகத்தின் ஆசீர்வாதங்களை திணிப்பது என்கிறார்.

4) தேசிய பாதுகாப்பு (National Defence) : தேசிய பாதுகாப்பிற்கு தேவையான மூலப்பொருட்கள், சந்தை, இராணுவத்திற்குத் தேவையான மனித சக்தி போன்றவற்றை ஆதிக்க ஆட்சி அளிக்கின்றது என்று ஆதிக்க ஆட்சியை ஆதரிப்பவர்கள் பலர் நம்பினர். இங்கிலாந்து 19—ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவிடமிருந்து இந்தியாவைப் பாதுகாக்க ஆப்கானிஸ்தான் பெர்சியா, திபெத் போன்ற நாடுகளை நடுநிலை நாடுகளாக பயன்படுத்திற்கு முதல் உலகப்போரில் பிரிட்டன் இந்தியாவிலிருந்து 4,00,000/— போர் வீரர்களை திரட்டியது. மேலும் பிரான்சு ஏறக்குறைய 50,000/— போர்வீரர்களை தனது குடியேற்ற நாடுகளில் இருந்து திரட்டியது.

5) மக்கட் தொகை மிகை (Surplus Population): ஒரு நாட்டின் மிகையான மக்கட் தொகையை வெளியேற்ற ஆதிக்க ஆட்சிமுறை பயன்படுகிறது. எவ்வாறெனினும், இம்முறை மக்கட் தொகை மிகையை சமாளிக்க உகந்ததல்ல, நடைமுறைக்கு சாத்தியமான ஒன்றல்ல. 1814—ஆம் ஆண்டிலிருந்து 1914 ஆம் ஆண்டு வரை ஜெர்மனி பல குடியேற்றப்பகுதிகளை அபகரித்து தன்னுடன் இணைந்தது. ஆனால் மிகக் குறைந்த அளவிலான ஜெர்மானியர்கள்தான் இக்குடியேற்றப்பகுதிகளில் குடியேறினர். ஜப்பான், கொரியா, ஃபர்மாசா, மஞ்சூரியா போன்ற நாடுகளை தன்னுடைய குடியேற்றப்பகுதிகளாக கொண்டிருந்தனர். ஆனால் ஜப்பானிய மக்கள் அக்குடியேற்றப்பகுதிகளில் சென்று குடியேறவில்லை. உண்மையில் மிகையான மக்கட் தொகைக்கு உகந்ததாக குடியேறவில்லை. குடியேற்றப்பகுதிகளை பயன்படுத்துவதில் ஆதிக்க ஆட்சிமுறை தோல்வியுற்றது.

**ஆதிக்க ஆட்சியின் வழிமுறைகள் (Methods of Imperlallsm):**

1) இராணுவ ஆதிக்க ஆட்சி (MIllitary Imperlallsm): இராணுவ ஆதிக்க ஆட்சி நேரடி இராணுவ தாக்குதல்கள் மூலம் வெற்றி அடைதலைக் குறிக்கின்றது. இவ்வடிப்படைகளில் இராணுவ வெற்றிகள் அடைவதை ஹிட்லர், நெப்போலியன், முசோலினி போன்ற வீரர்கள் பின்பற்றினர். ஆனால் போர் என்பது ஓர் சூதாட்டம் அதன் விளைவுகளைப் பற்றி திட்டவட்டமாக எதும்

(குறிப்புக்கான இடம்)

சொல்ல இயலாது. ஆதிக்க ஆட்சி குறிக்கோளை எய்த நாஜி ஜெர்மனி போர் நடத்தியது. ஆனால் அப்போரில் தோல்வியடைந்த ஜெர்மனி பிற ஆதிக்க ஆட்சி அதிகாரங்களுக்கு பலியானது.

2) பொருளாதார ஆதிக்க ஆட்சி: இம்முறை தற்காலத்தில் விவேகமான ஒரு முறையாகக் கருதப்படுகிறது. பொருளாதார முதலீட்டையும் பொருளாதார உதவிகளையும் வளாச்சியுறாத நாடுகளுக்கு வழங்கி அதன் வாயிலாக அந்நாடுகளின் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கொள்கைகளைக் கட்டுப்படுத்துவது பொருளாதார ஆதிக்க ஆட்சி எனப்படுகிறது. இம்முறையில் ஆதிக்க ஆட்சியைப் பின்பற்றும் நாடுகள் பிற நாடுகளின் நிலப்பகுதிகளை அபகரிக்காவிடினும், அந்நிலப்பகுதிகளை ஆள்வோரின் மனதைக் கட்டுப்படுத்துகின்றனர். பொருளாதார காரணங்களில் அடிப்படையில் பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்கா நாடுகளில் மேல் மேற்கத்திய நாடுகள் கொண்டுள்ள ஆதிக்கத்தை எடுத்துக்காட்டாக கொள்ளலாம். இவ்வாறாக லத்தீன் ஆதிக்கத்தை எடுத்தக்காட்டாக கொள்ளலாம். இவ்வாறாக லத்தீன் அமெரிக்கா, ஆசியா மத்திய கிழக்க மற்றும் தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளில் மேற்கத்திய அதிகாரங்கள் செய்யும் வெளிநாட்டு முதலீடு நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை அறியலாம்.

3) கலாச்சார ஆதிக்க ஆட்சி: ஒரு நாட்டின் மேம்பட்ட கலாச்சாரத்தையும் சீரிய அரசியல் கோட்பாடுகளையும் பிற நாடுகளில் வாழும் மக்கள் மனதில் அழுத்தமாக பதிய வைத்தல் கலாச்சார ஆதிக்க ஆட்சி எனப்படுகிறது. இன்று உலகிலுள்ள பிற நாடுகளில் இயங்கும் பொதுவுடமைக் கட்சி கட்டுப்படுத்துதலை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

4) மத ஆதிக்க ஆட்சி: ஆதிக்க ஆட்சி கோட்பாடுகளை அடைவதில் மதம் ஒரு பங்கு ஆற்றுகின்றது. பண்டைய நாட்களில் மதப்பிரச்சார இயக்கங்கள் ஆதிக்க ஆட்சி நிறுவும் முக்கிய அமைப்புக்களாக காணப்பட்டன. ஆதிக்க ஆட்சி நிறுவுவதில் மதப்பிரசங்கிகள் பிரிட்டனில் முக்கிய பங்கு வகித்தனர். ஆப்பிரிக்காவில் பிரிட்டனின் ஆதிக்க ஆட்சியை நிலைநாட்ட லண்டன் மதப்பிரபல்ய சங்கம் (The London Missinary Society) விறுவிறுப்பாக செயல்பட்டது.

இன்று குடியேற்ற ஆட்சி என்றழைக்கப்படும் ஆதிக்க ஆட்சி தனக்கு முன்பிருந்த செல்வாக்கை இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, அரபிய பகுதிகள், ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் போன்ற இடங்களில் இழந்த நிலையில் உள்ளது என்றாலும் இம்முறையை பழைய ஒரு ஆட்சி முறையாக ஒதுங்கிடமுடியாது. இன்றும் ஆசிய

ஆப்பிரிக்கா தென்மத்திய மற்றும் வடக்கு அமெரிக்க இடங்களைச் சார்ந்த நிலப்பகுதிகளும், மக்களும் ஆதிக்க ஆட்சி அதிகாரங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

### 3.1.6. கௌரவக் கொள்கை (Policy of Prestige)

பன்னாட்ட அரங்கில், அதிகாரப் போராட்டத்தின் மூன்றாவது வெளிப்பாடாகக் கௌரவக் கொள்கை கருதப்படுகின்றது. பன்னாட்டு உறவில் ஒரு நாட்டின் கௌரவம், அதிகரத்தை அடையும் ஒன்றாகக் கருதப்படுகிறது. சமுதாயத்தில் ஒரு நாட்டின் நிலையின் பிரதிபலிப்பே கௌரவம் எனப்படுகிறது. "ஒருநாடு உண்மையில் தான் பெற்றிருக்கும் அதிகாரம் அல்லது அதிகாரத்தில்தான் கொண்டிருக்கும் நம்பிக்கை, அல்லது தான் பெற்றிருக்கும் அதிகாரத்தின் மேல் பிறருக்கு நம்பிக்கைஏற்படுத்தும் விருப்பம் ஆகியவற்றை பிற நாட்டினரின் மனதில் பதிய வைக்கும் ஆற்றல்' தான் கௌரவக் கொள்கையின் குறிக்கோள் என்றும் ஹேன்ஸ்மொர்கென்தா கூறுகிறார். 'அதிகாரம்' முக்கியத்துவம் ஆதிக்கம் போன்றவற்றை பிரதிபலிக்கும் நன்மதிப்பும் கௌரவம்" என்று டைக் கூறுகின்றார். குறிப்பிடத்தக்க முக்கிய பிரச்சனைகள் அத்தனையும் வெற்றிகரமாக மேற்கொள்ளுதல் கௌரவமாகும் என்று மேலும், பேராசிரியர் டைக் (Dyke) விரிவான முறையில் பொருள் விளக்கம் அளித்துள்ளார். சவால் விடுகின்ற அளவில் அமையும் குறிக்கோள்களை அடைதல் அக்குறிக்கோள்களை அடைய கொண்டிருக்கும் விருப்பம். இக்குணநலன்களை அடையவிட்டால் வருங்காலத்தில் அடைதல் போன்ற திறனைத்தான் உண்மையில் கௌரவம் என்கிறோம். சவால்களை சமாளிக்க இயலாத நிலை கௌரவம் இழந்த நிலையாகக் கருதப்படுகிறது. எதிர்மாறா வெற்றிகரமாகச் சவால்களை சமாளித்தல் தன்மானத்தை பெருக்கும் கௌரவ மிக்க நாடுகளின் நலன்களில் பிற தலையீடுகள் உறதியாக இராது. மேலும் கௌரவ சம்பந்தப்பட்ட காரியங்களில் உலக அரங்கில் இந்நாடுகளுக்கு பெரும் மதிப்பு கிடைக்கும் உண்மையில் ஒரு நாடு மேற்கொள்ளும் குறிக்கோளில் மிக முக்கியமான கௌரவத்தை நிலை நிறுத்தல் ஆகும். எனவே நாடுகள் தன்னிடம் இருக்கும் காரியங்களை உலகிற்கு அடிக்கடி நிரூபித்துக் காட்ட முனைகிறது.

கௌரவக் கொள்கையை நிலைநிறுத்த உகந்த வழி முறைகளை மூன்று தலைப்பின் கீழ் கூறலாம். அவை (i) அரசியல் தந்திர சடங்காச்சாரம் (Diplomatic Ceremonial) (ii) இராணுவ பலத்தை

(குறிப்புக்கான இடம்)

வெளிக்காட்டல் (Display of Military force) (iii) பிரச்சாரம் (Propaganda) ஆகியவையாகும்.

(i) அரசியல் தந்திர சடங்காட்சாரம்: இது ஒருவரின் அதிகாரத்தை வெளிநாட்டில் நிரூபிக்கும் வழிவகைகளாகும். தூதுவர்கள் ஒரு நாட்டை வெளிநாட்டில் பிரதிபலிக்கச் செய்யும் பிரதிநிதிகளாவர். இவர்கள் அரசின் விருந்துகள், வரவேற்புகள், மங்கள மற்றும் சோக நிகழ்ச்சிகள் போன்ற சடங்காச்சாரங்களில் தங்கள் நாட்டின் சார்பாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகளாவர். தூதுவர்களுக்க அளிக்கும் மதிப்பு அவர்கள் நாட்டிற்கும் அளிக்கும் மதிப்பாக கருதப்படுகிறது. பன்னாட்டு அரசியலில் இத்தூதுவர்களுக்கு பல இடங்களில் அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை வரலாறு எடுத்துக்காட்டுகளுடன் எடுத்தியம்புகிறது. 1945—ஆம் ஆண்டு நடந்தேறிய போஸ்டம் மாநாட்டில் உலகின் அன்றைய முப்பெரும் தலைவர்களாகிய சார்ச்சில், ஸ்டாலின் ட்ருமேன் ஆகியோர் பங்கேற்றனர். யார் மாநாட்டினுள் முதலாவது பிரவேசிப்பது என்பதில் மூவருக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றியது. இப்பிரச்சனையின் மூலம் இத்தலைவர்கள் தங்கள் நாடுகளின் அதிகாரத்தை நிலைநிறுத்த முனைந்தனர். எவ்வாறெனினும் முடிவில் வெவ்வேறு வாசல் வழி மூவரையும் ஒரே சயத்தில் மாநாட்டிற்குள் பிரவேசிக்க வைத்து, இப்பிரச்சனைக்கு முடிவுகட்டினர்.

(ii) ராணுவ பலத்தை வெளிக்காட்டுதல்: ஒரு நாட்டின் அதிகாரத்தை பிற நாடுகளின் மனதில் பதிய வைக்கும் இன்னொரு முக்கிய வழிமுறையாக இராணுவ பலத்தை கொள்ளலாம். அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் விண்வெளியில் நடத்திய சோதனை நிகழ்ச்சியில் பெற்ற வெற்றி அந்நாடுகளின் தன்மானத்தை உலக அரங்கில் உயர்த்தியது. 1945 ஆம் ஆண்டிற்கு பிறகு நடந்தேறிய முக்கிய அணுகுண்டு சோதனைகள் அதிகாரத்தை வெளிக்காட்டுவதற்கு நடந்தேறிய முக்கிய நிகழ்ச்சிகளாக கருதப்படுகிறது. இராணுவ பலத்தை ஒன்று திரட்டி குவித்தல் இராணுவ பலத்தை வெளிக்காட்டும் முக்கிய வழிமுறையாகும். பண்டைய காலம் தொட்டு இன்று வரை நாடுகள் தங்கள் இராணுவ பலத்தை ஒன்று திரட்டி, தங்கள் இராணுவ வலிமையும், மேம்பாட்டையும் நிலை நாட்ட முயற்சித்தது வருகின்றது.

(iii) பிரச்சாரம்: பிரச்சாரம் கௌரவக் கொள்கையை நிலை நிறுத்தும் மூன்றாவது முக்கியவழிமுறையாகும். உலக தலைவர்கள் தங்கள் நாடுகள் பெற்றிருக்கும் அதிகாரத்தை பிறநாடுகளின் மனதில் பதிய வைக்க பிரச்சார முறையை பயன்படுத்தினர் என்பதை வரலாற்றில் பார்க்கலாமல் செய்தித் தொடர்பகளில் ஏற்பட்ட புரட்சி, கல்வி வசதி பெருக்கம்,

விஞ்ஞான வளர்ச்சி போன்றவற்றால் பிரச்சாரம் கௌரவக் கொள்கையின் முக்கிய வழிமுறையாகக் கருதப்படுகிறது. இன்று, நாடுகள் தங்கள் வாழ்க்கை வழிமுறைகளை பிறநாடுகளில் பரப்ப பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இப்பொழுது, தூதரகங்களோடு சில கலாச்சார அடைப்புகள் இணைக்கப்பட்டள்ள. இவ்வமைப்புகளின் வாயிலாக விரிவுரைகள், படங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை வெளியிட்டு நாடுகள் தங்கள் புகழைப் பரப்ப முனைகின்றன. அமெரிக்க செய்தி விளம்பர நிலையம் அமெரிக்காவின் கதையை வெளிநாடுகளில் எடுத்தியம்பி வருகின்றது. பிரிட்டிஷ் கவுன்சிலும் இதே பணியை ஆற்றிவருகின்றது.

கௌரவக் கொள்கைக்கு இரு குறிக்கோள்கள் உண்டு. அவை (i) தனக்காக கௌரவத்தை நிலைநிறுத்தல் (ii) நிலை நிறுத்த அல்லது ஆதிக்க ஆட்சி கொள்கைக்கு ஆதரவாக கௌரவத்தை நிலைநிறுத்தல். தனக்காக கௌரவக்கொள்கையை பின்பற்றும் போது நாடுகள் பொதுவாக வெளிநாட்டுக் கொள்கையின் கௌரவக் கொள்கையை இணைப்பதில்லை. சமுதாயத்தில் வாழுகின்ற தனிப்பட்ட நபர்களைப் பாதுகாக்க உள்நாட்டில் காணப்படும் சமூக நிறுவனங்களும், நன்னெறி விதிகளும், பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் பன்னாட்டு அமைப்பில் அங்கங்கள் என்ற வகையில் பன்னாட்டு அரங்கில் நாட்டின் நலனைப் பாதுகாக்க நாடுகள் தனது அதிகாரத்தை மட்டும் சார்ந்திருத்தல் வேண்டும். எனவே நாடுகளுக்கு கௌரவத்தை இலகுவாக மதிப்பிட முடியாது. கௌரவக் கொள்கையின் அடுத்தகுறிக்கோள் நிலைநிறுத்தக் கொள்கையை அல்லது ஆதிக்க ஆட்சிக் கொள்கையை ஆதரிப்பதாகும். பிறநாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், தனது நாடு அதிகாரமிக்க ஒரு நாடாக வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் நிகழ்தலையும் அந்நிலையை வருங்காலங்களில் வளர்ந்து கொண்டு வருதலையும் நாடுகள் வெளிவிவகார கொள்கையின் அடிப்படையாக கொண்டுள்ளது.

பன்னாட்டு அரசியலில் கௌரவத்தை அடைய முயற்சித்தல் மேன்மை மற்றும் புகழை அடைய முயற்சியோடு ஒத்திருக்கின்றது. தலைவர்கள் அனைவரும் தங்கள் நாட்டின் கௌரவத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர். சில நகரங்களில், ஒரு நாடு தன்னிடம் இருக்கும் அதிகாரத்தை மிகைப்படுத்திக் காட்டும். இவ்வாறு மிகைப்படுத்தி காட்டி நம்பச் செய்து தான் இருப்பதைக் காட்டிலும் பெரிய ஒரு கௌரவமான நிலையை உலகில் எய்த முனையும். இங்கு கௌரவக் கொள்கை நம்பச் செய்யும் கொள்கையாக மாறுகிறது. எனவே விவேகமான ஒரு வெளிநாட்டுக் கொள்கையில் கௌரவத்திற்கும் உண்மை அதிகாரத்திற்கும் இடையே வேறுபாட்டை ஏற்படுத்தக் கூடாது.

(குறிப்புக்கான இடம்) "விவேகமான ஒரு வெளிநாட்டு கொள்கை என்பது ஒரு நாடு தான் பெற்றிருக்கும் உண்மையான அதிகாரத்தை மிகைப்படுத்தாமலும், குறைக்காமலும் வெளிக்காட்டுதலே ஆகும்" என்ற பேராசிரியர் மொர்கன்தா சுட்டி காட்டியுள்ளார்.

### 3.1.7. அதிகாரச் சமநிலையின் தன்மை:

பன்னாட்ட உறவுகளில் அதிகாரச் சமநிலையைப் போன்று வேறெந்த கோட்பாடும் விரிவாகத் தொடர்ந்து கடைபிடிக்கப்படவில்லை. எப்பொழுதாவது, எங்காவது பலதரப்பட்ட அரசு முறை தோன்றினால் அங்கு அதிகாரச் சமநிலைக் கோட்பாடும், நிலவும் பன்னாட்டு உறவுகளின் அடிப்படைத் தத்துவமாக அதிகாரச் சமநிலை கருதப்படுகிறது. உலக அரசியலை கட்டுப்படுத்தும் வழிமுறையாக தேசிய அரசு முறை இருக்கும் வரையிலும் அதிகாரச் சமநிலை நிச்சயமாக செயல்படும் தத்துவமாக இயங்கும் சுதந்திர நாடுகளுக்கு இடையேயான அரசியல் உறவுகளை அதிகாரச் சமநிலை தத்துவத்தின் மூலம் விவரிக்கலாம். இதனுடைய ஒப்புயர்வற்ற நிலை தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஏனென்றால் பல இறைமை வாய்ந்த அரசுகளால் உருவாக்கப்பட்ட பன்னாட்டுச் சமூகத்தைப் பாதுகாக்கும் மற்றும் நிலைப்படுத்தும் பங்கை இக்கோட்பாடு ஆற்றுகின்றது.

கிரேக்க நகர அரசு தோன்றிய காலம் முதல் அதிகாரச் சமநிலைக் கோட்பாடும் செயல்பட்டு வருகின்றது என்று சொல்லப்பட்டுகின்றது. ஆனால், இக்கூற்று சந்தேகத்திற்குரியது. எவ்வாறெனினும், அதிகாரச் சமநிலைக் கோட்பாடு 16—ஆம் நூற்றாண்டில் இருந்து 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலான காலகட்டம், அதிகாரச் சமநிலையின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. முந்திய நூற்றாண்டுகளைக் காட்டிலும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் இக்கோட்பாடு ஆற்றலிழந்து திருப்தி அளிக்காத அளவில் செயல்படுகிறது.

பெரும்பாலும் அதிகாரச் சமநிலைக் கோட்பாடு தெளிவாக துல்லியமாக காட்சியளிப்பதில்லை இதனுடைய தன்மையையும் முக்கியத்துவததையும் எடுத்தியம்பவதில் எழுத்தாளர்களிடையே கருத்து வேற்றுமை இல்லை. "அதிகார சமநிலை" என்ற சொற்றொடருக்கு ஆயிரம் வகையான பொருள் விளக்கங்கள் அளிக்கலாம் என்று பேராசிரியர் போலார் (prof A.R. Pollar) கூறுகின்றார். ஒவ்வொரு எழுத்தாளரும் தங்கள் வழிகளில் இச்சொற்றொடருக்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளனர். எவ்வகை வரையறையும் இன்றி இச்சொற்றொடர்

(குறிப்புக்கான இடம்)

பயன்படுத்தப்படுமேயானால் கூடுமானவரை சமநிலையில் அதிகாரத்தைப் பல நாடுகளுக்கிடையே பகிர்ந்து அளித்தலையே இச்சொற்றோடர் குறிப்பிடும் என்று பேராசியர் மொர்கென்தா கூறியுள்ளார். பேராசிரியர் சிட்னி, பிஃபே என்பார். அதிகார சமநிலை என்பது "நாடுகளின் குடும்ப அமைவில் அங்கம் வகிப்போரிடையே அதிகார சமநிலையைத் தோற்றுவித்து, அதன் வாயிலாக எந்தவொரு நாடும் தன் விருப்பத்தை பிறநாடுகளின் மீது திணிக்கப் பெறும் வலிமையைத் தடை செய்வது" என்கிறார். பால்மர், பெர்கின்ஸ் என்போரின் கூற்றுப்படி ஒப்பந்தங்கள் மற்றும் எதிர் செயலாற்றும் வற்புறுத்தல் வாயிலாக ஒரு அதிகாரம் அல்லது அதிகாரங்களின் கூட்டமைப்பு பிற நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் வலிமை பெற்று விடாமல் தடை செய்தல் அதிகாரச் சமநிலை" எனப்படுகிறது. சுருங்கக் கூறின், பல இறைமை வாய்ந்த அரசுகள் பெருக்க முயற்சிக்கிறது இவ்வாறு அதிகாரத்தை பெருக்க முயற்சிக்கின்ற எந்தவொரு நாடும் அல்லது நாடுகளின் கூட்டமைவும் வலிமைபெற்று பிற நாடுகளை விழுங்கி விடாமல் தடை செய்ய பலநாடுகள் அளிக்கப்படும் இன்னொரு வகையான விளக்கமாகும். ஒன்றையொன்று எதிர்க்கும் கூட்டமைவுகளின் அதிகாரத்தைச் சரிசமமாக நிலைநிறுத்தல் அதிகாரச் சமநிலையைக் குறிக்கின்றது. இவ்வாறு எந்தவொரு நாடும் அல்லது நாடுகளும் ஆக்கிரமிப்பாளராக மாறாமல் அதிகாரத்தைச் சமநிலையில் நிலைநிறுத்த அதிகாரச் சமநிலை எனப்படுகிறது.

எந்த ஒரு நாடும் அச்சுறுத்தலின் மூலமோ அல்லது ஆக்கிரமிப்பின் மூலமோ தனது விருப்பத்தைப் பிற நாடுகள் மீது திணிக்காமல் தடை செய்ய நாடுகளிடையே அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்து நிலைநிறுத்தல் அதிகாரச் சமநிலையில் குறிக்கோளாகும் என்று பொதுவான ரீதியில் கூறலாம். சமாதானமும் அதிகாரச் சமநிலையின் இன்னொரு குறிக்கொளாகும். ஆனால் சமாதானத்தை அதிகாரச் சமநிலையின் மெய்யான குறிக்கோளாகக் கொள்ளமுடியாது. சமநிலையை உருவாக்க முற்படும் பொழுது தற்செயலாக நிகழும் விளைவாக சமாதானத்தைக் கொள்ளலாம். உண்மையில் சில நேரங்களில் நாடுகள் சமநிலையை தோற்விக்க அல்லது பாதுகாக்க போரை வேண்டுமென்றே மேற்கொள்ளலாம்.

அதிகாரச் சமநிலைக் கோட்பாடு ஊகங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவை: முதலாவது, நாடுகள் தங்களிடம் இருக்கும் போர் போன்ற செயல்முறைகளின் வாயிலாக தங்கள் முக்கிய நலன்களைப் பாதுகாக்க தீர்மானிப்பதை அதிகாரச் சமநிலை குறிப்பிடுகிறது. முக்கிய

குறிப்புக்கான இடம்)

நலன்கள் என்பது சுதந்திரம், ஒருமைப்பாடு, பாதுகாப்பு உள்பாட்டு அரசியல் அல்லது பொருளாதார முறையைப் பாதுகாத்தல் போன்றவற்றைக் குறிக்கின்றது. இரண்டாவது நாட்டின் முக்கிய நலன்களுக்கு ஆபத்து நேரிட்டால், அதிகாரச் சமநிலையின் தேவை ஐயத்துக்கிடமின்றி தெளிவாக உணரப்படுகின்றது. மூன்றாவது அதிகாரச் சமநிலை ஆக்கிரமிப்பு நடத்த இருக்கும் நாட்டை தடுத்து நிறுத்துகிறது அல்லது ஆக்கிரமிக்கப்பட்டு, முக்கிய நலன்கள் பறிபோகும் ஆபத்தில் இருக்கும் நாட்டை தோல்வியிலிருந்து பாதுகாக்கிறது. நான்காவது நாடுகளின் அதிகார நிலைகள் குறிப்பிடத்தக்க அளவில் தெளிவாக அளவிடப்படுகிறது. இவ்வாறு அதிகாரம் அளவிடப்பட்டால், வருங்காலத்தில் ஒரு சரியான அதிகாரச் சமநிலைக் கொள்கை உருவாவதற்க அது உதவுகிறது. ஐந்தாவது தலைவர்கள் வெளிநாட்டக் கொள்கை சம்பந்தமான முடிவுகள் அதிகாரத்தை அடிப்படையாக வைத்து எடுக்கின்றனர். அப்படி முடிவு எடுக்க முடியவில்லையென்றால் அதிகாரச் சமநிலை ஏற்படாது.

அதிகாரச் சமநிலைக் கோட்பாட்டில் அடங்கியுள்ள சில முக்கிய குணநலன்களை பால்மர் பெர்கின்ஸ் என்போர் விவாதித்துள்ளனர். முதலாவது, அதிகாரச் சமநிலை ஒரு சரியான அமைதி நிலையக் குறிக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் ஒன்று அல்லது பல நாடுகள் பொறாமையுறத்தக்க ஒரு நிலையில் இருக்கும் சரிசமம் அற்ற ஒரு நிலையையும் அது குறிக்கின்றது. இரண்டாவது, அதிகாரச் சமநிலை முறைகள் தற்காலிகமான நிலையற்ற முறைகளாக நிரூபிக்கப்ட்டுள்ளன. மூன்றாது, நிக்கோலஸ். ஜே.ஸ்பிக்மேன் என்பாரின் கூற்றுப்படி, "அதிகாரச் சமநிலை கடவுள் அளித்த ஒரு நன்கொடை அல்ல. ஆனால் அது மனிதன் சுறுசுறுப்பான தலையீட்டினால் அடையப்பட்ட ஒன்றாகும். அதிகாரச் சமநிலை ஏற்படும் வரை அரசுகள் காத்த இருக்க இயலாது. நாடுகள் தொடர்ந்து வாழ வேண்டுமெனில், அக்காலகட்டத்தில் வளர்ந்து வரும் மேலாட்சி செய்கிற அதிகாரத்திற்கு எதிராக அதிகாரச் சமநிலை பாதுகாப்பதோடு அதனை நிறுவ போரிடவும் தயாராக இருத்தல் வேண்டும்" இவ்வாறு ஸ்பிக்மேன் கூறியுள்ளார். இதனடிப்படையில் நாம் அரசியல் தந்திர திட்டமிடுதலோடு அதிகாரச் சமநிலையைத் தொடர்படுத்தியுள்ளோம். வரலாற்று விளைவு உண்டாக்கும் காரியங்களோடு நாம் அதனைத் தொடர்பு கொள்ளச் செய்யவில்லை. நான்காவது அதிகாரச் சமநிலை பொதுவாக நடைமுறையில் இருக்கும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாத்து நிலைநிறுத்தலை ஆதரிக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் அது மாற்றத்தையும் செயலாற்றலையும் குறிப்பிடுகின்றது. ஐந்தாவது, எப்பொழுது அதிகாரச் சமநிலை ஏற்படுத்தப்பட்டது என்று ஒரு நாட்டால்

(குறிப்புக்கான இடம்)

எளிதில் சொல்வது முடியாது. அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்தவும் சீர்குலைக்கவும் போர்தான் உண்மையான கருவி. ஆறாவது, அதிகாரச் சமநிலை குறியிலக்கு மற்றும் தன்னுள்ளணர்வுக்குரிய அணுகுமுறையைக் கொண்டுள்ளது. வரலாற்றறிஞனுக்கு அதிகாரச் சமநிலையின் அடிப்படை கூறாகத் தெரிகிறது. ஆனால் தலைவர்கள் தன்னுள்ளுணர்வுக்குரிய முறையில் அணுகுகின்றனர். இவர்கள் தங்களுடைய நாடு பிறநாடுகளைக் காட்டிலும் அதிகாரமிக்கதாக திகழ்ந்தால் சமநிலையை பற்றி எண்ணுவர். ஏழாவது, சமாதானத்தை பாதுகாக்க அதிகாரச் சமநிலையை அடிப்படையாக கொள்ளல் முடியாது. அதிகாரச் சமநிலையின் அடிப்படை நோக்கம் சுதந்திரத்தை நிலை நிறுத்தல் ஆகும். சமாதானத்தை நிலைநிறுத்தல் அக்கோட்பாட்டின் அடிப்படை நோக்கமல்ல. ஆனால் இந்த அணுயுக காலத்தில் சமாதானம் நிலை நிறுத்தப்பட்டால் தான் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும். எட்டாவது, அதிகாரச் சமநிலை கோட்பாடு வல்லரசுகளுக்குத்தான் பொருந்தும் சிறிய அரசுகள் அதிகாரப் போட்டியைக் கண்டு களிக்கும் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர். ஒன்பதாவது, அதிகாரச் சமநிலை மக்களாட்சி சர்வாதிகாரம் ஆகிய இரண்டிற்குமே பொருந்தாத ஒரு கொள்கை. நெருக்கடி ஏற்படுகின்ற கால கட்டத்தின்தான் மக்களாட்சி அதிகார அரசியலில் ஈடுபடும். ஆனால் அதே நேரத்தில் சர்வாதிகாரம் மேம்பாட்டைக் குறிக்கின்றது. எனவே இவ்விரு முறைகளும் அதிகாரச் சமநிலையைச் செயலிழந்து போகச் செய்கின்றது. கடைசியாக, பல விமர்சகர்கள், தற்கால சூழ்நிலையில் அதிகாரச் சமநிலைக் கோட்பாடு செயலிழந்து காணப்படுகிறது எனக் கூறுகின்றனர். ஐரோப்பிய அரசு முறையில் இக்கோட்பாடு நன்முறையில் செயல்பட்டது. அரசு முறை விரிவுபடுத்தப்பட்ட பிறகு சமநிலையாளரின் பங்கை ஆற்ற எந்த நாடும் அல்லது பன்னாட்டு அமைப்பும் முன்வரவில்லை. புது அதிகாரச் சமநிலை உருவாக்கப்படுகிறதா அல்லது அக்கோட்பாடு இன்றைய சூழ்நிலைக்கு உகந்தது அல்ல எனப்படுகிறதா என்ற கேள்விகள் இன்றைய பன்னாட்டு அரசியலில் அடிக்கடி எழுப்பப்படுகிறது. நிச்சயமாக புது சக்திகளும் முறைகளும் இன்று வளர்ந்து வருகின்றன.

### 3.1.8. அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்தும் வழிமுறைகள்:

சமநிலையைத் தோற்றுவித்தல் ஆற்றல் வாய்ந்த அதே நேரத்தில் திறமை சார்ந்த விவகாரமாக கருதப்படுகிறது. ஆற்றல் மிக்க சக்திகளில் தோற்றுவிக்கப்படும் சமநிலை தற்காலிகமாகும். நம்பமுடியாத அளவிலும் காணப்படகிறது. இச்சமநிலையை செயல்பாடு மிகுந்த திறமை அவசியம். அதிகாரச் சமநிலையை நிறுத்த பயன்படுத்தப்படும் பல வழிமுறைகளில் பின்

(குறிப்புக்கான இடம்)

கூறப்பட்டுள்ள சில வழிமுறைகளுக்கு விசேட முக்கியத்துவம் அளித்து விவாதித்தல் சாலச்சிறந்தது.

1) உடன்பாடுகளும் எதிர்உடன்பாடுகளும்: அதிகாரச் சமநிலையைத் தோற்றுவிக்க பொதுவாக பயன்படுத்தப்படும் விதிமுறையாக இம்முறை கருதப்படுகிறது. பல அரசு முறையில் இயங்கிவரும் தேவையாக ஒரு அதிகாரச் சமநிலையின் செயல்படாக உடன்பாடு கருதப்படுகிறது." என்று பேராசிரியர் மொர்கென்தா கூறுகிறார். ஆக்கிரமிப்பு நடத்தும் அரசுகளை எதிர்த்துப் போராட ஒரு அரசு பிற அரசுகளோடு வலுவான முறையில் நட்பை ஏற்படுத்த முயற்சிக்கிறது. எவ்வாறெனினும் ஒரு அரசு தானாக இயங்கும் சக்தியைப் பெற்றிருந்தால், அவ்வரசு உடன்பாடுகள் ஏற்படுத்த விருப்பம் கொள்ளாது.

பால்மர் மற்றும் பொகின்ஸ் என்பாரின் கூற்றுப்படி உடன்பாடுகள் இருவகைப்படும் அவை தற்காப்பிற்கான உடன்பாடு (Defensive alliance) எதிர்த்து தாக்குவதற்கான உடன்பாடு (Offensive alliance) என்பவையாகும். எதிர்த்துத் தாக்குவதற்கான உடன்பாடு சமநிலையை தனது அங்கத்தினர்களுக்கு தன்மை பயக்கின்ற அளவில் சீர்குலைக்கின்றது. தற்காப்பிற்கான உடன்பாடு அவ்வுடன்பாட்டில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்குச் சாதகமாக சமநிலையை நிலை நிறுத்துகிறது. அதிக அளவிலான நாடுகள் உடன்பாடுகளை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டால் அதிகாரச் சமநிலை திருப்திகரமாக செயல்பட தகுந்த வாய்ப்பு உருவாகும் என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டுள்ளது. உடன்பாட்டில் சில நாடுகளே பங்கேற்றால் சமநிலை செயலற்றுப் போய்விடுகிறது.

நாடுகளிடையே உருவாகும் பொது நலன் சார்ந்த உணர்வுகளின் அடிப்படையில் ஒரு உடன்பாடு ஏற்பாடாகிறது. ஒரு பொது கோட்பாட்டின் அடிப்படையில் உடன்பாடுகள் ஏற்படுகின்றன. 1815 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தூய உடன்பாடு ஒப்பந்தம் (Treaty of Holy Alliance) 1941 – ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அட்லாண்டிக் உரிமைப் பட்டயம் (Atlantic Charter) ஆகியவை தூய்மையான கோட்பாடு உடன்பாடுகளாகும். போர்முறைத் திறம், புவியியல், கலாச்சார ஒற்றுமை, பொருளாதாரச் சார்பு போன்றவை நாடுகளிடையே நிலையான உடன்பாடு ஏற்படுத்த உதவும் பிற அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன.

பிற நாடுகள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்தியிருக்கும் உடன்பாட்டால் அச்சம் கொண்டு, அதிகாரச் சமநிலையை நிலைநிறுத்த சில நாடுகள் தமக்குள் ஓர் எதிர் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்கின்றன. சமநிலையை பாதுகாக்கவும், சீர்குலைக்கவும் நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகள் ஐரோப்பிய வரலாற்றில் நிறைய காணப்படுகின்றன.

2) இழப்பீடு (Compensatin): பொதுவாக நிலப்பகுதியை இணைத்தல் அல்லது பிரித்தல் இவ்வழிமுறையில் இன்றியமையாத ஒன்றாகும். பிரஷ்யா, ரஷ்யா, ஆஸ்டிரியா —ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கிடையே அதிகாரச் சமநிலையை நிலை நிறுத்த 18 ஆம் நூற்றாண்டில் போலந்து நாடு பிரிக்கப்பட்டு அந்நாடுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டது. பொதுவாக பலவீனமான அரசுகளின் செலவில் வலிமை மிக்க அரசுகள் நிலப்பகுதிகளை இழப்பீடாக வழங்குகின்றன. உலகை குடியேற்றப் பகுதிகளாகவும், செல்வாக்கு நிலைநிறுத்தும் பகுதிகளாகவும் பிரித்தல் அதிகாரச் சமநிலையை சீர்குலைக்காமல் நிலைநிறுத்த உதவும் சரியான வழிமுறை என்று கூறுகின்றனர்.

3) போர்தளவாடமும், படைக்குறைப்பும் (Armaments Disarmaments): இராணுவ ஆயத்தங்களுக்கும் இதர தேசீய பாதுகாப்பு வழிமுறைகளுக்கும் எல்லா வல்லரசுகளும் அதிக முக்கியத்துவம் வழங்குகின்றன. இக்கொள்கை ஒரு போர்த் தளவாடப் பெருக்கத்திற்கான போட்டியைத் தோற்றுவித்து, வல்லரசுகளுக்கு இடையிலான போட்டிகலை தீவிரப்படுத்துகிறது. கிழக்கிற்கும், மேற்கிற்கும் அல்லது குறிப்பாக அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான போர்தளவாடப் பெருக்க போட்டி இன்றைய உலகில் சந்தேகத்தையும், பதட்ட நிலையையும், குழப்பத்தையும் தோற்றுவித்துள்ளது.

போத்தளவாடப் பெருக்க போட்டிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து போட்டியிடும் அதிகாரங்களிடையே விகிதாச்சார முறையில் படைக்குறைப்பு ஏற்படுத்தி நிலையான அதிகாரச் சமநிலைத் தோற்றுவிக்கலாம் என்பது பொதுவான ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு கால கட்டத்திலும் பலதரப்பட்ட படைக்குறைப்பு எடுத்தியம்பட்டு வருகின்றது. ஆனால், படைகுறைப்பிற்காக மேற்கொள்ப்பட்ட முயற்சிகள் ஏற்படுத்திய விளைவுகள் ஏமாற்றத்தை அளித்துள்ளன. அடிக்கடி படைக்குறைப்பிற்கான நடவடிக்கைகளை உண்மையாக ஒரு காலத்தில் மேற்கொள்வதில்லை. ஒருவர் சமாதானத்திற்காகவும் நடபிற்காகவும் கொண்டுள்ள விருப்பத்தைத்

தெளிவுபடுத்தவும் எதிரி கொண்டுள்ள போர் விருப்பத்தை வெளிப்படுத்தவும் படைக்குறைப்புத் தத்துவம் அடிக்கடி எடுத்தியம்பப்படுகிறது. இந்நிலை நிலையான அதிகாரச் சமநிலையை கோட்பாட்டளவில் உருவாக்கும் பின் செயலற்ற தன்மையை நிரூபிக்கின்றது.

4) தலையீடு மற்றம் தலையீடாக் கொள்கை (Intervention and Non-Intervention): சமநிலையை நிலைநிறுத்தப் பொதுவாக பயன்படுத்தப்படும். கொள்கைகளாக இவை கருதப்படுகின்றன. கூட்டமைவில் அங்கத்தினர்களாய் இருப்பவர்களின் பற்றுதியில் நிலை மாறுதல் ஏற்படலாம். இவ்வாறு பற்றுறுதி நிலை மாறுவதால், ஒரு பெரிய அரசு தன்னிடம் இருந்து பிரிந்து சென்ற நாட்டை, அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு ஒரு நட்புறவான அரசாங்கத்தை அங்கு நிறுவி தன் பக்கம் மீண்டும் ஈர்க்கலாம். சமநிலையாளர் நிலையில் இருக்கும் நாடுகள் அடிக்கடி இம்முறையைப் பயன்படுத்துகின்றன. இரண்டாம் உலகப்போர் முடிவடைவதற்கு முன் கிரேக்க நாட்டை கம்யூனிசத்தின் பிடியில் அகப்படாமல் தடை செய்வதற்கு அந்நாட்டின் விவகாரங்களில் பிரிட்டன் தலையிட்டது. அதிகாரச் சமநிலையில் மாற்றம் ஏற்படாமல் தடை செய்ய வல்லரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எடுத்தக்காட்டு ரஷ்யா கிழக்கு ஐரோப்பியா நாடுகளில் தலையிடுதலையும், அமெரிக்கா இராணுவம் மற்றும் பொருளாதார உதவி அளிக்கும் நாடுகளின் விவகாரங்களில் தலையிடுதலையும் கொள்ளலாம்.

சிறிய அரசுகளும், நிலவுகின்ற அரசியல் நிலை திருப்திபடுகின்ற வல்லரசுகளும் தலையிடா கொள்கையைப் பின்பற்றி சமாதான முறையில் சமநிலையைத் தக்க வைக்க முனைகின்றன. தலையிடாக் கொள்கை என்பது நடுநிலைக் கொள்கைகளையும் குறிக்கும்.

5) நடுநிலை அரசுகள்: சமநிலையை தக்க வைக்கவும் பாதுகாக்கவும் நடுநிலைப் பகுதிகள் ஒரு முக்கிய வழிமுறையாகக் கருதப்படுகிறது. நடுநிலை நாடு என்பது இரு வலிமை வாய்ந்த எதிரிகளின் நடுவில் அமைந்திருக்கும் வலுவற்ற ஒரு நாட்டைக் குறிப்பது. இந்நாட்டின் முக்கியப்பணி இருவறுமை வாய்ந்த நாடுகளையும் மோதவிடாமல் பிரித்து வைத்து இருவருக்குமிடையேயான முரண்பாடுகளைக் குறைப்பதாகும். எடுத்துக்காட்டாக போலந்து ரஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையில் நடுநிலை அரசாக அமைந்திருப்பதையும் பெல்ஜியமும், ஹாலந்தும் பிரான்சிற்கும் ஜெர்மனிக்கும் இடையில் நடுநிலை அரசுகளாக அமைந்திருப்பதையும்

கொள்ளலாம். சுவிட்சர்லாந்து முதல் உலகப்போருக்கு முன் ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு, ஆஸ்திரியா போன்ற நாடுகளுக்கு இடையில் நடுநிலை அரசாங்க செயல்பட்டது. நடுநிலை அரசுகள் வல்லரசுகளிடையே ஏற்படும் மோதல்களை தடுக்கவும் சக்தி படைத்திருப்பதால் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகிறது: அவை நடுநிலையாக அல்லது நடுநிலைப்படுத்தப்பட்ட அரசுகளாகவும், சார்ந்து வாழும் அரசுகளாகவும் ஆதரவில் இயங்கும் பகுதிகளாகவும் அல்லது ஒன்று அல்லது இரண்டு அல்லது பல அதிகாரங்களோடு ஒருங்கிணைந்து ஒரு கௌரவமான பங்கை, ஆற்றும் பகுதியாகவும், கருதப்படுகிறது" என்று பால்மரும் பெர்கின்சும் கூறுகின்றனர்.

6) பிரிந்து ஆளுதல் (Divide and Rule): அதிகாரச் சமநிலையை நிறுத்த கடைசி வழிமுறை பிரித்து மேற்கொள்ளுதல் ஆகும். இங்கிலாந்து தனது குடியேற்றப் பகுதிகளில் இக்கொள்கையை வெற்றிகரமாக செயல்படுத்தியது. ஆங்கிலேயர் இந்தியாவில் இந்துக்களையும் முகமதியர்களையம் ஒருவருக்கொருவர் எதிராக செயல்பட தூண்டி விட்டு, இருவர் மேலும் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தினர். பிரான்சு ஜெர்மனியிடம் கடைப்பிடித்த கொள்கையையும் ஐரோப்பிய பகுதிகளில் சோவியத் யூனியன் கடைபிடித்த கொள்கையையும் இம்முறைக்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாக கொள்ளலாம்.

மேற்கூறிய ஆறு முறைகளாலும் ஒரு நாடு தனது அதிகாரத்தைப் பெருக்கிறது, என்பதனை மறுக்கமுடியாது. இம்முறைகள் அத்தனையும் திரும்ப திரும்ப நாடுகள் உலக அரங்கில் பயன்படுத்துகின்றன. ஆனால் இம்முறைகள் உண்மையாகவே நாம் விரும்புகின்ற அதிகாரச் சமநிலையைத் தோற்றுவிக்கின்றதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. ஒரு நாடு தனது அதிகாரத்தைப் பெருக்கவும் சமநிலையை தனக்கு ஆதரவாக சீர்குலைக்கவும் எம்முறையில் பயன்படுத்தினாலும், சமநிலையை அடையும் வழிமுறையில் சமநிலையை நிறுத்துகின்ற ஒரு நாடு ஒரு சீரியநிலையை அடைகின்றது.

நாடுகளின் போட்டிகளில் தலையிடாமல் பிரிந்து நிற்கும் ஒரு நாடு அல்லது நாடுகளின் கூட்டமைப்பு சமநிலையாளர் (Balancer) என்றழைக்கப்படுகிறது. பன்னாட்டு அரங்கில் அதிகாரச் சமநிலை நிலைநிறுத்தப்பட்டால், சமநிலையாளரின் நலன் சீரிய முறையில் நிறைவேற்றும் அதிகாரம் சமநிலையில் நின்று நிலவுகின்ற வரை சமநிலையாளர் எதிலும் தலையிடமாட்டார். அதிகாரச் சமநிலை வலிமை

(குறிப்புக்கான இடம்)

வாய்ந்த ஒரு நாட்டிற்கு சாதகமாக மாற்றப்பட்டால் சமநிலையாளர் வலிமையிழந்த நாட்டுடன் தன்னை இணைத்துக் கொண்டு உலகில் அதிகாரச் சமநிலையைத் தோற்றுவிப்பார். சமநிலையாளர் ஒரு "உயரிய தொடர்பின்னை" (Splendid isolation) நெறியை கடைபிடிப்பார் என்று பேராசிரியர் மொர்கென்தா கூறுகின்றார். சமநிலையாளர் எந்த அணியிலும் தன்னை நிரந்தரமாக இணைத்துக் கொள்ள மறுத்து தொடர்பின்மை தத்துவத்தை தானாக தேர்ந்தெடுக்கின்றார். இவர் அளிக்கும் ஆதரவையும், ஆதரவு அளிக்காத நிலையையும் சார்ந்தே, அதிகாரப் போராட்டம் பன்னாட்டு அரங்கில் நடைபெறுகிறது. நன்முறையில் சிந்தித்து இவர்தன் ஆதரவை வழங்கினால், இவரின் ஆதரவைப் பெறுவோரிடம் இருந்து விலைமதிப்பற்ற சலுகைகளை இவர் பெறுகின்றார். எனவே, இவர் பின்பற்றும் தொடர்பின்மைக் கொள்கை உயரிய ஒன்றாகக் கருதுப்படுகிறது. வெற்றிகரமாகச் செயல்பட சமநிலையாளருக்குப் போதிய அதிகாரம் தேவைப்படுகிறது. பிரச்சனைக்குரிய மையப் பகுதியில் இருந்து வெகுதொலைவுக்கு அப்பால் சமநிலையாளர் பகுதி அமைந்திருத்தல் நல்லது சமநிலையாளர் பகுதி ஒரு தீவுப் பகுதியாக இருத்தல் சாலச் சிறந்தது. மேற்கூறிய நிலையில் இங்கிலாந்து அமைந்திருந்தால் பல்லாண்டு காலம் அந்நாடு சமநிலையாளராக தொடர்ந்து பணியாற்றியது சமநிலையாளர் தனித்து இயங்குகின்றார் தனது அதிகாரத்தை சமநிலைக்கு புறம்பே இருந்து பெறுகின்றார். அவ்வாறு பெற்ற அதிகாரத்தைக் கொண்டு சமநிலையை நிலை நிறுத்துகின்றார். இன்றைய உலகில் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் இடையில் அதிகாரத்தைச் சமமாக பகிரிந்து அளிக்க சமநிலையாளர் இல்லாமையால் அதிகாரச் சமநிலை சரிவர இயங்க முடியாத நிலையில் உள்ளது என்று சொல்லப்படுகிறது.

### 3.1.9. அதிகாரச் சமநிலையின் இன்றைய நிலை:

அவ்வப்போது நிலவும் சூழ்நிலையைக் சார்ந்து அதிகாரச் சமநிலையின் ஆற்றல் அமைகிறது என்ற கருத்திற்கு அதிகாரச் சமநிலையின் இன்றைய பங்கை ஆயும் போது நாம் முக்கியத்துவம் வழங்கல் வேண்டும். 16 ஆம் நூற்றாண்டிற்கும் 18 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் அதிகாரச் சமநிலையின் பொற்காலமாக கருதப்படுகிறது. ஆனால் பிரெஞ்ச பரட்சிக்குப்பின் அதிகாரச் சமநிலைக்கு உகந்த சூழ்நிலை உருவாகவில்லை. அதற்குபின் உருவாகிய தேசீயம், தொழில்மயம், மக்களாட்சி, பொருளாதார சார்புநிலை, பன்னாட்டுச்சட்டம், நவீன போர் நடவடிக்கை போன்ற சக்திகள் அதிகாரச் சமநிலையை இலகுவான ஒன்றாக மாற்றியதோடு, முக்கியத்துவத்தை

வேறுசில ஆக்கக் கூறுகளுக்குக்குறைத்தன. அதிகாரச் சமநிலையின் ஆற்றலைக் குறைந்த சில முக்கிய கூறுகள் அடியில் விளக்கப்பட்டள்ளன.

அ) சமநிலையாளர் இல்லாமையும், அச்சுறுத்தும் துருவமும்: (Disappearance of Balancer and Alarming Unipolarism): சமநிலையாளர் இல்லாத நிலையில் அதிகாரச் சமநிலைக் கொள்கை அதிகாரத்தை ஒருமுகப்படுத்தலுக்கு வழிவகுத்தது. ஒரு காலத்தில் சமநிலையாளராகப் பணிபுரிந்த பிரிட்டன் அன்று சுதந்திரமாக ஆற்றிய அப்பணியை இன்று ஆற்றமுடியாத நிலையில் உள்ளது. வல்லரசுகளிடையே சமநிலையாளராக ஐக்கியநாட்டு சபை பணியாற்றும் என்று நம்பியிருந்தோர் இன்று ஏமாற்றம் அடைந்துள்ளனர். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு பிறகு உலகத்தலைமையையும், அனைத்து அதிகாரங்களையும் அமெரிக்கா பெற்றுள்ளது.

ஆ) கோட்பாட்டு முக்கியத்தின் வளர்ச்சி: உலக நிகழ்ச்சிகளை பெருமளவில் செல்வாக்குடன் நிர்ணயிப்பவையாக இன்று கோட்பாடுகள் கருதப்படுகின்றன. இன்று கோட்பாடுகள் தேசீய எல்லைகளை கடந்த பொதுவான ஒரு கோட்பாட்டில் பற்றுக் கொண்டோரிடையே நிலவுகின்ற தேசிய உணர்வுகளை மாற்றி அமைந்துள்ளன. கோட்பாடுகள் வலுவாக வேரூன்றியுள்ளமையால், இன்று அதிகாரச் சமநிலை தனது முக்கியத்துவத்தை இழந்த நிலையில் காணப்படுகிறது.

இ) முழு அளவுப் போரிலடங்கிய சிக்கல்கள்: (Implications on total war) : நவீன போர் முறைகளின் கண்டுபிடிப்பு இன்றையப் போரை முழு அளவில் மாற்றும் தன்மை கொண்டுள்ளது. முழு அளவிலான உலகப் போரில் காணப்படும் சிக்கல்கள் அதிகாரச் சமநிலைச் சார்பாளர்களையும் இயற்கையாகவே ஒரு எச்சரிக்கையான கொள்கையை பின்பற்ற செய்துள்ளன. ஏனென்றால் சமநிலைக் கொளகைய்ய தீவிரமாக நிலை நிறுத்த முயற்சிக்கும் போது தங்களை உலகப் போரில் தாங்களாகவே ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படலாம் என்று அவர்கள் அறிந்திருக்கின்றனர். இவ்வாறான நிலை அவர்களது வீழ்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஈ) அதிகாரத்தில் ஏற்றத்தாழ்வு (Disparity in Power) : இன்றைய உலகில் அரசுகளிடையே நிலவும் அதிகாரதில் பெருமளவில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. வல்லரசுகள் மேலும் மேலும்

(குறிப்புக்கான இடம்)

அதிகாரமிக்கவையாக மாறிவருகின்றன. சிறிய அரசுகள் மேலும் மேலும் வலுவிழந்து வருகின்றன. சிறிய அரசுகள் வல்லரசுகளைச் சார்ந்து இன்று இயங்கி வருவதால் அதிகாரச் சமநிலைத் தத்துவம் செயலிழந்த நிலையில் உள்ளது.

ஆனால் மேற்கூறிய விவாதங்கள் அகில உலக அளவில் நிலைக்கக் கூடியதல்ல. சமநிலையாளரைப் பொறுத்தமட்டில் பிரிட்டனும், ஏனைய பிற அரசுகளும் சமநிலையாளராகப் பணியாற்ற முடியாத நிலையில் இன்று உள்ளன. ஆனால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சார்பற்ற ஆசிய ஆப்பரிக்க நாடுகள் சார்பாளராகப் பணியாற்றும் ஆற்றலைப் பெற்றுள்ளன. உலகில் அதிகாரச் சமநிலையின் வருங்காலம் பெருமளவில் சார்பற்ற நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சார்ந்திருக்கிறது என்று பேராசிரியர் மொர்கென்தா கூறுகின்றார். மேலும் இரு துரவ அமைப்பால் அதிகாரச் சமநிலைக்கு எந்த ஆபத்தையும் காணமுடியாது என்று கியுன்சி ரைட் என்பார் கூறுகிறார். இரு துருவ அமைப்பு ஏற்பட்டால் அவ்வடைப்பில் ஒரு அதிகார அமைப்பு மற்றொரு அதிகார அமைப்பின் தாக்குதலைப் பற்றிய அச்சத்தோடு செயல்படும் என்று ரைட் மேலும் கூறுகிறார். இரு துரவ அமைப்பு ஏற்பட்டால் அவ்வடைப்பில் ஒரு அதிகார அமைப்பு மற்றொரு அதிகார அமைப்பின் தாக்குதலைப் பற்றிய அச்சத்தோடு செயல்படும் என்று ரைட் மேலும் கூறுகிறார். இவ்வம்சத்தில் சமநிலை தொடர்ந்து செயல்படும் இரு துரவ அமைப்பு படிப்படியாக பழமையான ஒரு அமைப்பாக மாறிவருகிறது. உலக அரசியலில் இரு துரவ அமைப்பு முறைக்கு வழி வகுத்துள்ளது. மீண்டும் அடிப்படையில் வேறுபட்ட அரசுகளுக்கிடையேயான உறவு முறையில் கோட்பாட்டாலும் அதிகாரச் சமநிலையாலும் முரண்பாடுகளை அகற்ற முடியும்.

எவ்வாறெனினும் அதிகாரச் சமநிலை சீரிய முறையில் செயல்பட்டு வந்த சூழ்நிலைகள் இன்று மறைந்து விட்டன. இன்றைய பன்னாட்டு அரங்கிற்கு ஏற்றவாறு அதிகாரச் சமநிலை நன்முறையில் மாற்றி அமைக்கப்படவில்லை. பகுத்தறிவினால் உணரும்போது அதிகாரச் சமநிலை ஒரு பழமையான கோட்பாடாக தென்படுகிறது என்றாலும் உண்மையில் அது அவ்வாறான தன்மை வாய்ந்தது அல்ல என்று பல அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். கியூன்சி ரைட் என்பாரின் கூற்றுப்படி "உலக அரசியலின் அமைப்பு முறையாகக் கருதப்படும் அதிகாரச் சமநிலை, மக்களாட்சி கட்டுப்பாடற்ற செயல், பொருளாதார முன்னேற்றம் சமாதானம் போன்றவற்றிற்கு முரணான ஒன்றாகும்.

(குறிப்புக்கான இடம்

ஆனால், பன்னாட்டு அரசியலில் புதுமை வாய்ந்த அறிஞர்கள் பன்னாட்டு உறவுகளின் அடிப்படை ஆக்கக் கூறாக இன்றும் அதிகாரச் சமநிலை திகழ்வதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்று நிலவுகின்ற சர்வதேச அமைதியின்மையை சமாளிக்க இது தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் நன்மை விளைவிக்கும் குறிக்கோள் கொண்டது என்பதற்காக அதிகாரச் சமநிலையை ஏற்றுக் கொள்வதை விட, அரசியல் தலைவர்களும், அறிவு செறிந்த எழுத்தாளர்களும் ஏதாவதொரு வகையிலான அதிகாரச் சமநிலை வெளிநாட்டுக் கொள்கை உருவாவதற்கு அடிப்படையாகத் திகழ்கிறது என்று கருதுவதால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே, பால்மரும் பெர்கின்சும் பின்வருகின்ற அளவில் அதிகாரச் சமநிலையின் இன்றைய நிலையை எடுத்தியம்பியுள்ளனர். "அதிகாரச் சமநிலை கோட்பாடு அதனுடைய பழைய உறுதிப்பாட்டை பெருமளவில் இழந்த போதிலும் இன்றும் பொருள் பயக்கின்ற ஒரு கோட்பாடாகத் திகழ்கின்றது. தேசிய அரசுமுறையின் அடிப்படைச் சிறப்புக் கூறாக அது அளித்துள்ள பயன்களை குறைத்து மதிப்பிட இயலாது.

### 3.1.10. அதிகாரச் சமநிலைப் பற்றிய மதிப்பீடு:

அதிகாரச் சமநிலைக் கோட்பாடு ஆதரவாளர்கள் உலக அரங்கில் அச்சுறுத்தப்படும் சிறிய நாடுகளின் சதந்திரத்தைப் பாதுகாக்க இது பயன்படுகிறது என்ற கருத்தை வலியுறுத்துகின்றனர். சமாதானத்திற்கு உத்தரவாதத்துவம் அளித்தல் இக்கோட்பாட்டின் இன்னொரு நன்மையாகக் கருதப்படுகிறது. அதிகாரம் பல நாடுளுக்கிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டால் எந்தவொரு அணியாலும் பெரிய செல்வாக்கைப் பெற்று ஆக்கிரமிப்பு நடத்தி வெற்றிகளை பெற இயலாது. இவ்வாறு அதிகாரச் சமநிலை ஆக்கிரமிப்புகளை தடை செய்கிறது. எழுச்சியுறும் அதிகாரத்திற்கு எதிரான கூட்டமைவுகளை உருவாக்கி அதிகாரச் சமநிலை சமாதானத்தை நிலை நிறுத்துகிறது என்ற கருத்தை இன்னொரு சாரார் எடுத்தியம்புகின்றனர். இவ்விதமாய் எந்தவொரு நாடும் முதன்மையான செல்வாக்கு பெற்று திகழ்வதையும் ஆதிக்க ஆட்சி புரிதலையும் இது தடை செய்கின்றது. பன்னாட்டுச் சட்டங்களை செயலாக்குதற்கு எந்தவொரு மேம்பட்ட பன்னாட்டு அதிகாரமும் கிடையாது. சர்வதேச சங்கமும் ஐக்கிய நாட்டு சபையும் பன்னாட்டு சட்டங்களுக்கு கீழ்ப்படிய அரசுகளுக்கு வேண்டுகோள் விடுக்கும் நிறுவனங்களாக கருதப்படுகின்றன. ஆனால் இவை விடுக்கும் வேண்டுகோள் சட்டப்பூர்வமாக அரசுகளைக் கட்டுப்படுத்தாது. இவ்வாறான சூழ்நிலையில் அரசுகளை பன்னாட்டு சட்டங்களுக்கு கீழ்ப்படியவைக்கும் சக்தியை அதிகாரச் சமநிலை பெற்றுத்

(குறிப்புக்கான இடம்)

திகழ்கின்றது. "பன்னாட்டுச்சட்டம் உயிர்பெற்று இயங்க தவிர்க்க முடியாத ஒரு நிலையாக அதிகாரச் சமநிலை இருக்கிறது" என்று எடுத்துரைதும் மேற்கூறிய கருத்தை ஒப்பன்கிம் ஆதரிக்கின்றார்.

அதிகார சமநிலைக் கொள்கையைப் பலரும் திறனாய்வு செய்துள்ளனர். அதிகாரச் சமநிலைக் கொள்கை நிலையற்ற தன்மை, போலித்தன்மை, போதாமை ஆகிய மூன்று குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது என்று பேராசிரியர் ஹேரன்ஸ் மொர்கென்தா குறை கூறியுள்ளார்.

அமெரிக்கர்களின் கருத்துப்படி அதிகாரச் சமநிலை தவிர்க்கப்பட வேண்டிய ஒரு பெரிய ஆபத்தாகும். எவ்வாறெனினும், அதிகாரச் சமநிலைக் கோட்பாடு, அடியில் கூறப்பட்டுள்ள அடிப்படையில் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது.

(i) அதிகார சமநிலைக்கோட்பாடு சமாதானத்தை உருவாக்காது. மாறாக அது போர் உருவாகும் வாய்ப்பை அதிகரிக்கிறது. அதிகாரச் சமநிலை சில அரசுகளை ஆக்கிரமிப்பு செய்ய தூண்டுகிறது என்ற பல அறிஞர்கள் கருத்துக் கொண்டுள்ளார். ஒரு அரசு ஆற்றல் மிக்க ஒரு அரசை எதிர்த்துப் போரிட அஞ்சலாம். ஆனால் அரசுகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளைப் போதுமான அளவு சமநிலையில் கொண்டு வந்தால், அரசுகள் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமநிலை எப்பொழுதும் போர் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும் என்று ஆர்கன்ஸ்கி கருத்துக் கொண்டிருந்தார். உண்மையில், அதிகாரச் சமநிலை நிலவிய காலங்கள் போர் நடந்தேறிய காலங்களாகவும், அறிகின்ற அளவில் ஆற்றல் மிக்க சக்திகள் உருவாகிய காலங்கள் சமாதானத்திற்கான காலங்களாகவும் கருதப்பட்டது. எவ்வாறெனினும் இக்கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் ஆற்றல் மிக்க ஒரு அரசு தன்னடக்கத்துடன் சமாதானத்தைப் பாதுகாக்கும் என்பது சந்தேகத்திற்குரியதாகும்.

அதிகாரச் சமநிலை போரை ஒத்தி வைக்கும் ஆற்றல் படைத்தது என்பது உண்மை என்று சில சிந்தனையாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், நிலையான சமாதானத்தை தோற்றுவிப்பதற்கு இது உகந்தது அல்ல என்று அவர்கள் கருத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உலகை பல இராணுவ அமைப்புக்களாக பிரிப்பதில் வெற்றி

கொண்டாலும், தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தால் ஒரு பிரிவு இன்னொரு பிரிவை தாக்குவதில்லை. ஆனால், இதனால் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

அதிகாரம் நிலை போரை ஒத்தி வைக்கும் ஆற்றல் படைத்தது என்பது உண்மை என்று சில சிந்தனையாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் நிலையான சமாதானத்தை தோற்றுவிப்பதற்கு இது உகந்தது அல்ல என்று அவர்கள் கருத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உலகை பல இராணுவ அமைப்புகளாக பிரிப்பதில் வெற்றி கொண்டாலும், தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தால் ஒரு பிரிவு இன்னொரு பிரிவை தாக்குவதில்லை. ஆனால், இதனால் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

(ii) நாடுகள் நிலையான அமைப்புகள் அல்ல என்பது, அதிகாரச் சமநிலையைப் பற்றி எழுப்பப்படும் இன்னொரு கருத்து, இராணுவ ஆக்கிரமிப்பு, நில அபகரித்தல், உடன்பாடுகள் போன்றவற்றால் நாடுகள் தங்கள் அதிகாரத்தைப் பெருகுகின்றன. உள்நாட்டு சமூக நிறுவனங்களை சீரமைப்பதின் மூலமும், நாட்டை தொழில் மயமாக்குவதின் மூலமும் நாடுகள் தங்கள் அதிகாரத்தை மாற்றியமைக்கின்றன. ஆகையால் அதிகாரத்தை அதிகரிப்பதற்கு அதிகாரச் சமநிலை தான் முழுப் பொறுப்பு ஏற்கிறது என்பது கூற முடியாது.

(iii) அதிகாரத்திற்கு முக்கியத்துவம் வழங்கு வேண்டும் என்று ஆர்வத்தால் நாடுகள் கட்டுபாடற்ற முறையில் உடன்பாடுகளை உருவாக்கவும் அல்லது உடன்பாடுகளை சீர்குலைக்கவும் சுதந்திரம் பெற்றுள்ளன என இக்கோட்பாடு தவறான எண்ணத்தை உருவாக்கியுள்ளது என்றும் விமர்சிக்கப்படுகிறது. இவ்வெண்ணம் தொழில் மையத்திற்கு முற்பட்ட காலத்திற்கும் ஐரோப்பாவில் வம்சவழி ஆட்சி நடைபெற்ற காலத்திற்கும் பொருந்தலாம். ஆனால் இவ்வொண்ணம் 9—ஆம் நூற்றாண்டிற்கும் இன்றைய சூழ்நிலைக்கும் ஒவ்வாத ஒன்றாகும். தொழில் மயம் விரிவாக பரவியிருக்கும் இக்கால கட்டத்தில், ஒரு நாட்டோடு ஒரு நாடு இணைவது என்பது பொதுவாக நடைபெறும் ஒன்று அல்ல. அப்படி மேற்கூறிய நிகழ்ச்சி நடந்தேறினால் அது நடைபெறுவதற்கு முன்னர் முன்னேற்றங்களின் அடிப்படையில் பல உள்நாட்டு மாற்றங்களை அந்நாட்டில் நடைபெறும்.

**முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்**

அ)தேசீய அதிகாரம் என்றால் என்ன.

ஆ)அரசியல் தந்திரத்தில் பொருள் கூறு.

இ)அரசியல் என்றால் என்ன.

ஈ)நிலைநிறுத்தம் கொள்கையின் பொருள் விளக்கு.

உ)கௌரவ கொள்கையின் பாதம் யாவை.

(iv) மேலும் சமநிலையாளர் என்ற நிலையில் எந்தக் காலத்திலும் எந்த நாடும் இயங்கவில்லை. சமநிலையை நிலை நிறுத்தும் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்ட உலக அரங்கில் இயங்கும் ஒரு நாட்டை நம்மால் காணமுடியவில்லை.

இவ்வாறான குறைபாடுகள் காணப்பட்டாலும் பன்னாட்டு அரசியலில் இன்னும் அதிகாரம் சமநிலை ஒரு முக்கிய கோட்பாடாக கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் இன்றைய உலகில் புது கொள்கைகளும் புதுச்சக்திகளும் கொண்டிருக்கும் செல்வாக்கும் சம நிலையை சரிவர இயங்க கோட்பாடு கோட்பாட்டளவில் சரியான ஒன்றாக காணப்படுகிறது. ஆனால் இன்றைய உலக அரசியலில் நிலவும் புதிய சூழ்நிலைகள் அத்தத்துவத்தை சரியாக இயங்க விடுவதில்லை இன்று அதிகாரச் சமநிலை தனது பழைய உறுதிப்பாட்டை இழந்த போதிலும், அதனுடைய இயக்கம் விளைவு பயக்கும் ஒன்றாக காட்சியளிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம். ஒரு நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், எந்தவொரு நாடும் அதிகாரமிக்கதாக மாறுவதைத் தடை செய்யவும் இக்கோட்பாடு பெருமளவில் உதவியுள்ளது என்பதனை மறுக்க முடியாது.

### 3.1.11. தொகுப்புரை:

இறைமை, தேசீயம் போன்று தேசீய அதிகாரமும் அரசு முறையில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும். அதிகாரத்தின் கூறுகளை கார் (car) தெளிவாக கூறியுள்ளார். இவ்வலகில் மார்கந்தோ அரசியல் அதிகாரத்தின் தன்மையினை உணர்த்தியுள்ளார். மேலும் பன்னாட்டு அரசியல் அதிகாரத்திற்கான ஒரு போராட்டம் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன. ஆதிக்க ஆட்சி பற்றி மிகவும் தெளிவாக (Prof.Schuman) பேராசிரியர் ஹீமென் கூறியுள்ளார்.

### 3.1.12. முக்கிய வார்த்தைகள்:

1. தேசீய அதிகாரம் — ஒவ்வொரு நாடும் தனது தேசீய நலன் சம்பந்தப்பட்ட கருத்துக்கள்.

2. ஒழுங்குணர்வு – ஒரு மனப்பாங்கு

3. அரசியல் அதிகாரம் — பிறருடைய மனதையும் செயலையும் கட்டுப்படுத்துதல்.

4. ஆதிக்க ஆட்சி – காப்பாட்சி

**3.1.13. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கான பதில்கள்.**

| | |
|---|---|
| கேள்வி எண்: 1 | பதில் எண்: 3.1.1 |
| கேள்வி எண்: 2 | பதில் எண்: 3.1.2. |
| கேள்வி எண்: 3 | பதில் எண்: 3.1.3. |
| கேள்வி எண்: 4 | பதில் எண்: 3.1.4. |
| கேள்வி எண்: 5 | பதில் எண்: 3.1.5. |

**3.1.14. இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள்.**

1. Chicotte, R Edeistein J – Latin America : The struggle with Dependency and Beyond (Wily)

**3.1.15. மாதிரி வினாக்கள்:**

1. தேசீய அதிகாரம் பற்றி ஒரு மதிப்பீடு செய்க.
2. அதிகாரச் சமநிலை கோட்பாட்டை விவாதிக்கவும்.

(குறிப்புக்கான இடம்)

# அலகு – 4

## கூட்டுப் பாதுகாப்பு – பன்னாட்டு கோட்பாடுகள் — தேசிய கோட்டுப்பாடும் தேசீய அரசுகளின் எழுச்சி — இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கைகளும் ஒப்பந்தகங்களும் — பிராந்திய பற்று.

**முன்னுரை:**

இரண்டாம் உலகப் போர் முதற்கொண்டே கூட்டுப்பாதுகாப்புக்கோட்பாடு தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு இருந்து வந்தது. தற்பொழுது கூட்டுப்பாதுகாப்பு மேலை நாடுகளிடையே பெருத்த வரவேற்பை பெற்றுள்ளது. பன்னாட்டு அரசியலை ஒழுங்குபடுத்தும் சக்திகளை எடுத்தியம்பும் வழிகாட்டியாக தற்காலத்தில் சில முக்கிய கோட்பாடுகள் காணப்பட்டன. பன்னாட்டு சமூகத்தில் நிலவும் எல்லா சக்கதிகளையும் முக்கியமான ஒன்றாக காணப்படுவலது தேசீமாகும். மேலும் இவ்வலகில் இரண்டாம் உலகப் போருக்கப்பின் எழுந்த உடன்படிக்கைகளும் ஒப்பந்தஙற்களையும் மிக தெளிவாக கூறப்பட்டு உள்ளன.

**நோக்கங்கள்:**

கூட்டுப்பாதுகாப்பின் பொருளும் மற்றும் நோக்கத்தினையும் கற்றறிதல்.
பன்னாட்டு அரசியலில் கோட்பாடுகளின் பங்கினை புரிந்து கொள்ளுதல்.
தேசீய அரசுகளின் எழுச்சியினை பகுப்பாய்வு செய்தல்
இரண்டாம் உலகப்போருக்குப்பின் எழுந்த உடன்படிக்கை மற்றும்
ஒப்பந்தங்களையும்
புரிந்து கொள்ளுதல்.

**அலகின் வடிவமைப்பு:**

கூட்டுப்பாதுகாப்பும் அதன்நோக்கமும்
கூட்டுப்பாதுகாப்பும் அதிகாரச் சமநிலையும்.
பன்னாட்டு கோட்பாடு பற்றிய பொருள் விளக்கம்
தேசீயம் மற்றும் பொருள் விளக்கம்
தேசீயத்தின் நன்மை தீமைகள்
புதிய பிராந்தியப்பற்று
ஐரோப்பாவில் பிராந்திய ஏற்பாடுகள்
பிராந்திய கூட்டமைப்புகள்
தொகுப்புரை
முக்கிய வார்த்தைகள்
இந்த அலகில் மேலும்படிக்க வேண்டிய நூல்கள்
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக்கான பதில்கள்
மாதிரி வினாக்கள்

## 4.1. கூட்டுப் பாதுகாப்பு: விளக்கமும் அதன் நோக்கமும்

மேலெழுந்தவாரியாக பார்க்குமிடத்து கூட்டுப் பாதுகாப்பு என்ற சொல் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாகவும், தன்நிலை விளக்கம் அளிப்பதாகவும் தோன்றினாலும் உண்மையில் சிக்கலானதும், ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய தன்மை உடையதாகவும் விளங்குகின்றது. ஜார்ஜ் வர்ஜென்பர்ஜர் தன்னுடைய கருத்தின்படி "நிலவி வரும் உலக அமைதி, மற்றும் ஒழுங்கு இவற்றிற்கு எதிராக மேற்கொள்ளப்படவிருக்கும் தாக்குதல்களை தவிர்ப்பதற்கும் அல்லது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைச் சமாளித்து உலகில் அமைதியைப் போற்றிப் பாதுகாப்பதற்கும் எடுத்துக்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கையே ஆகும்" என்று குறிப்பிடுகின்றார். பேராசிரியர் சார்லஸ் டிஸ்லீசர் என்பர், "கூட்டுப்பாதுகாப்பு" என்பது உலகிலுள்ள நாடுகளில் ஏதாவது ஒன்று பிற நாளுகளுக்கெதிராக உலக அரங்கில் தடை செய்யப்பட்டுள்ள எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், அதைத் தடுப்பதற்காக உள்ள ஓர் ஏற்பாடே ஆகும்" என்று கூறுகிறார்.

மரபுவழி வந்த பன்னாட்டுச் சட்டம் சட்டத்தை நிலைநாட்டும் பணியை, பாதிக்கப்பட்ட நாடுகளிடமேவிட்டிருந்தது. ஆனால் இக்கூட்டுப் பாதுகாப்பு பண்பானது, பன்னாட்டுச் சட்டத்தை அமல்படுத்தும் பணியை அதன் அங்கத்துவநாடுகள் அனைத்திடமும் ஒப்படைத்து இருக்கின்றது. இவ்வாறு இச்சட்டத்தை நிலை நாட்ட முயலும் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இல்லை. கூட்டுப் பாதுகாப்பு பண்பை அதன் இலட்சியத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து குறையற்றதாகக் காணப்படுகின்றது. இறைமையுடைய நாடுகளின் சமுதாயத்தில் சட்டத்தை அமல்படுத்தும் பிரச்சனைக்கு இப்பண்பு ஒரு சரியான தீர்வு காண்கிறது. ஆனால் இக்கூட்டுப் பாதுகாப்புப் பண்பை நடைமுறைப்படுத்தும் வகையில் சர்வதேச சங்கச் சாசனத்தின் விதி 16—ஐயும் ஐ.நா.சபை சாசனத்தின் பகுதி 7ஐயும் செயல்படுத்த இருமுறை முயன்ற பொழுது இருமுறையும் தோல்வி ஏற்பட்டது. இங்கு குறிப்பிடத்தக்கது.

கூட்டுப் பாதுகாப்புப் பண்பானது போரைத் தடுப்பதற்கு உரிய கருவியாகக் செயல்பட வேண்டுமெனில் அது பின்வரும் மூன்று எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும் அவையாவன:

1) வலுத்தாக்குதல் புரிவோருக்கு எதிராக, அவர்கள் மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்வதற்கு அஞ்சும் வகையில்

இக்கூட்டுப் பாதுகாப்புப் பண்பானது போதுமான வலுவைப் பெறும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

2) கூட்டுச்சேரும் நாடுகள் அனைத்தும் தாங்கள் போற்றிப் பாதுகாக்க இணைந்திருக்கும் 'பாதுகாப்பு'' குறித்து ஒரே விதமான கருத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

3) அந்நாடுகள் அனைத்தும் தாங்களுடைய மாறுபட்ட அரசியல் நலன்களைத் தங்களுடைய பொதுநலத்திற்காகவும் எல்லா அங்கத்துவ நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பிற்காகவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும்.

## கூட்டுப் பாதுகாப்பும், கூட்டு நடவடிக்கையும்

பாதுகாப்பிற்கு கூட்டு நடவடிக்கை தவிர்த்த பிற மாற்று வழிகள் எதுவும் இல்லை. இ.எ. கிராஸ் என்பவர் 'கூட்டுப் பாதுகாப்புமுறை இல்லையெனில் நாடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் கிடையாது' என்று குறிப்பிடுகின்றார். கூட்டுப் பாதுகாப்பு என்பது உலக அமைதிக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிப்பதெற்கென எடுக்கப்படும் கூட்டு நடவடிக்கையே எனினும் எல்லாக் கூட்டு நடவடிக்கைகளும் கூட்டு பாதுகாப்பு குறித்தல்ல மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சில கூட்டு நடவடிக்கைகளே கூட்டுப் பாதுகாப்பு குறித்து மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கூட பெரும்பாலும் ஒரு வரையரைறுக்கு உட்பட்டது தான். இது நாடுகள் எவ்வளவு விருப்பமுடன் தங்களை இப்பணியில் ஈடுபடுத்திக் கொள்கின்றன என்பதைப் பொறுத்தே அமையும். பொதுவாக நாடுகள் மிக முக்கியமான பிரச்சனைகளில் தீவர நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதற்குத் தயக்கம் உள்ளவைகளாகவே காணப்படுகின்றன.

சாதாரணமான சூழ்நிலைகளில் கூட்டுப் பாதுகாப்பும், வல்லரசுச் சமநிலைக் கோட்பாடும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்றதாகக் காணப்படும் கூட்டுப் பாதுகாப்பின் நோக்கம் என்னவெனில் தவறிழைக்கும் நாட்டிற்கெதிராக பிற நாடுகள் அனைத்தும் கூட்டுச் சேர்வதாகும். ஆனால் வலிமைச் சமநிலைக்கோட்பாடு எந்த ஒரு நாடும் போர் தொடுப்பதற்கு இயலாத அல்லது மேற்கொள்ள அஞ்சும் ஒரு அதிகார சமநிலையைப் பராமரிக்கு வலியுறுத்துகின்றது. கூட்டுப் பாதுகாப்பு வலுத் தாக்குதல் புரிய விழைவோருக்கு எதிராக ஓர் உலக அணியைத் திரட்ட முயலும் பொழுது வலிமை சமநிலைக் கோட்பாடு உலகில் ஒன்றையொன்று எதிர்க்கும் சம வலிமையுள்ள இரு அணிகளைத் திரட்ட முயல்கின்றது.

ஒரு சக்திவாய்தாக கூட்டுப் பாதுகாப்பு முறையானதா எந்த அரசின் அல்லது அரசுகளின் சேர்க்கயைின் வலுத்தாக்குதுல்களைக்

(குறிப்புக்கான இடம்)

சமாளிப்பதற்கேற்ற வலிமையைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் வலுத்தாக்குதல் தொடங்கப்பட்ட உடனேயே கூட்டுப் பாதுகாப்பும் செயல்படத் தொடங்க வேண்டும். ஏனைய நாடுகள் அனைத்தும் அத்தகைய வலுத்தாக்குதல்களைச் சமாளிப்பதற்கென எடுக்கப்படும் நடவடிக்கைகளில் முழுமனதுடன் பங்கேற்க வேண்டும். அவ்வாறு வலுத்தாக்குதல் நடத்தும் நாட்டின் மீது பொருளாதார தடை உள்ளிட்ட பல கட்டுப்பாடுகளை விதிக்கவும் தேவையானால் போர் தொடுக்கவும் அவைகள் விருப்பம் உள்ளவைகளாக இருக்க வேண்டும். இத்தகைய ஒரு அமைப்பு ராணுவ உடன்படிக்கைகளை விட உயர்ந்த ஒன்றாகும். இத்தகைய ஒரு அமைப்பு தங்களுடைய பொதுவான எதிரிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு மட்டுமின்றி பொதுவாக உலகில் வலுத்தாக்குதல்கள் எங்கு நடந்தாலும் அதை எதிர்ப்பதற்குரிய சக்தியையும் துணிச்சலையும் கொண்டிருக்கவேண்டும். இந்த அமைப்பின் கதவுகள் தங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர புரிந்து அவற்றின் மீது நல்லதொரு நம்பிக்கையையும் கொண்டிருக்கும் நாடுகள் அனைத்திற்கும் திறந்துவிடப்படவேண்டும். இது எந்த ஒரு குறிப்பிட்ட அரசிற்கோ அல்லது ஒரு சில அரசுகளுக்கோ எதிராகச் செயல்படுவதெற்கென அமைக்கப்படல் கூடாது. பேராசிரியர் ஃபிரட்மென் இதுபற்றி கூறும்பொழுது, ஒரு சிறந்த வெற்றிகரமான கூட்டுப்பாதுகாப்பு முறைக்கு ஒரு நாடு அதன் தனித்தன்மையையோ, அல்லது அதன் சுதந்திரத்தையோ முழுமையாகக் கைவிட்டுவிடவேண்டிய அவசியமில்லை. ஆனால் தத்தம் சொந்த நலன்களைச் சில கூட்டு முயற்சிகளுக்காக விட்டுக்கொடுக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். இது மேலும் சிறப்புறச்செயல்பட வேண்டுமெனில் ஒவ்வொரு நாட்டினுடைய ராணுவமும் அவைகளின் வலிமை மிக்க ஆயுதங்களும் பன்னாட்டு ராணுவமும் அவைகளின் வலிமை மிக்க ஆயுதங்களும் பன்னாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். ஆனால் இத்தகைய செயல்களை நாடுகளுடைய இறைமையை வெகுவாகப் பாதிக்காவண்ணம் செயல்படுத்த முடியாது" என்று குறிப்பிடுகின்றார். கூட்டுப் பாதுகாப்புப் பண்பானது ஏன் கொள்கை அளவில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் அலட்சியப்படுத்துகின்றது என்பதனை மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

## இராணுவ ஒப்பந்தங்களும், கூட்டுப்பாதுகாப்பும்

தற்பாதுகாப்பிற்கெனவும், மற்றும் பிறநோக்கங்களுக்காகவும் ஒரு சில நாடுகளோ, அல்லது பல நாடுகளோ பிராந்திய அமைப்புக்களைத் தோற்றுவிப்பதும், கூட்டுப்பாதுகாப்பு முறையைச் சார்ந்ததே எனப் பலர்

(குறிப்புக்கான இடம்)

கருதுகின்றனர். எனினும் இக்கருத்து தவறானது என்றும் சிலர் கருதுகின்றனர். ஏனெனில் அத்தகைய அமைப்புக்கள் பூகோள ரீதியில் குறைந்த அளவு நில அமைப்பயையும், அதன் அங்கத்தினர்களுக்கிடையே போதிய கட்டுப்பாடு இல்லாமையும் அவைகள் அதுபோன்ற பிற நாடு அல்லது நாடுகளின் கூட்டினுடைய வலிமையைச் சமாளிப்பதற்கேற்ற வகையில் இல்லாமல் இருப்பதும் இதற்குரிய காரணங்கள் ஆகும். தற்பொழுது இருக்கக்கூடிய பிராந்திய அமைப்புக்களில் "நேட்டோ" (NATO)விற்கு மட்டுமே எத்தகைய எதிர்ப்பயையும் சமாளிக்க வல்ல வலிமை இருப்பதாகக் கருதமுடியும். எனினும், அதன் அங்கத்துவ நாடுகள் தாமாகவே முன்வந்து ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றினாலேயன்றி அவற்றால் கூட உண்மையான கூட்டுப்பாதுகாப்பைச் செயல்படுத்த முடியாது. தற்பொழுது அதன் அங்கத்தினர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை, அதிலும் குறிப்பாக பிரான்சின் போக்கு அவ்வமைப்பின் செயல்திறனை மிகவும் பாதித்துள்ளது.

எனினும் பிராந்திய அமைப்புக்கள் பரந்த கூட்டுப்பாதுகாப்பு முறையில் ஒரு அங்கமாகத் திகழ முடியும், ஐ.நாவின் பொதுச்சபையில் 1950—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட அமைதி காப்பதற்கென ஒன்றிணைதல் தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவும் தனது முதல் அறிக்கையில் இக்கொள்கையை ஆதரித்திருந்தது. 1951—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட அவ்வறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டது. 'பிராந்திய அமைப்புக்கள்'' ஐ.நா.சபையின் கீழுள்ள உலகக் கூட்டுப்பாதுகாப்பு அமைப்பில் முக்கியமான பங்கேற்றிருக்கின்றன. அத்தகைய அமைப்புக்களின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒன்றையொன்று ஆதரிக்கும் வகையில் இருக்க வேண்டும். அத்துடன் அவைகள் ஐ.நா. சபை எடுக்கும் கூட்டு நடவடிக்கைகளுக்குத் தங்களது முழுமையான ஆதரவைத் தரவேண்டும். இவ்வாறு, இத்தகைய பிராந்திய அமைப்புக்கள் (அல்லது கூட்டு தற்காப்பு நிறுவனங்கள்) தங்களுடைய சட்டதிட்டங்கள் மற்றும் தகுதிகட்கு உட்பட்டுச் செயல்படும் பொழுது அந்தந்தப் பகுதிகளில் அமைதி மற்றும் ஒழுங்கு பாதுகாக்கப்படுவதுடன் வலுத்தாக்கல் புரிவோருக்கு எதிரான ஐ.நா.வின் கொள்கைகளையும், நோக்கங்களையும் செயல்படுத்தவும் வழிவகைகள் செய்கின்றன.

பிராந்திய அமைப்புகளுக்கும் ஐ.நா. சபைக்கும் இடையேயுள்ள தொடர்புகள் இன்னும் தெளிவாக்கப்படவில்லை. இப்பிராந்திய அமைப்புக்கள் ஐ.நா. சபையின் பணிகளை நிறைவுபடுத்துவதாகக் கருதப்படுகிறது. இத்தகைய அமைப்புக்கள் ஐ.நா.சபைக்கும் மேற்பட்டது

அல்ல. ஆனால் 1952ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் தேதி ஐ.நா.வில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தின் அடிப்படையை ஆராய்ந்த பொழுது ஐ.நாவின் அங்கத்துவ நாடுகள் தாங்கள் அதற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை விட தாங்கள் சார்ந்திருக்கும் பிராந்திய அமைப்புகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையே பெரிதாக மதித்தது என்பது புலனாயிற்று.

**கூட்டுப் பாதுகாப்பும் ஆயுதக் குறைப்பும்**

இதுகாலம் வரை கூட்டுப் பாதுகாப்பிற்கும் ஆயுதக் குறைப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்விரண்டும் போர் மற்றும் அமைதி ஆகிய இரு பிரச்சனைகளுக்கும் உரித்தான தனித்தனியாக அணுகுமுறையாகவே பெரும்பாலும் கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் அவற்றின் அடிப்படையை நோக்கின் அவை இரண்டிற்கும் மிகுந்த தொடர்புடையது புலனாகும். ஆயுதக் குறைப்பானது பிறநாடுகளை அச்சுறுத்தும் படைகளையோ, ஆயுதங்களையோ, எந்த ஒரு நாடும் வைத்திருக்காத ஒரு நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. கூட்டுப்பாதுகாப்பானது நாடுகள் தங்களுடைய பாதுகாப்பிற்கும் அவைகளுடைய படைபலனை நம்பி இல்லாமல், ஐ.நா. சபையை முற்றிலும் நம்பியிருக்கும் நான்னாளை நோக்கிக் கொண்டிருக்கிறது. நாடுகள் ஒவ்வொன்றிற்கும் அவைகள் தாக்கப்படும்பொழுது, மற்ற நாடுகளுடைய ஆதரவு நிச்சயமாகக் கிடைக்கும் என்று உறுதி அளிக்கப்பட்டால் தங்களுடைய பாதுகாப்பிற்கென அவைகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்று உறுதி அளிக்கப்பட்டால் தங்களுடைய பாதுகாப்பிற்கென அவைகள் எவ்வித விசேச முயற்சிகளும் எடுக்கவேண்டிய அவசியம் இல்லால் போய்விடுகின்றது. ஆயுதக் குறைப்பு முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் பொழுது கூட்டுப் பாதுகாப்பு முறை அமைப்பு மிகவும் எளிதாகவும் சாத்தியமாகவும் காணப்படுகின்றன. ஆனால் படை பலப்போட்டி தொடருமேயானால் சரியான கூட்டுப்பாதுகாப்பு முறை அமைவது மிகவும் கடினமே.

### 4.1.1.கூட்டுப் பாதுகாப்பும், அதிகாரச் சமநிலையும்
### (Collective Security and the Balance of Power)

நாடுகள் பன்னாட்டு நிறுவனங்களை அமைத்து ஒருங்கிணைந்து செயல்படுகின்ற நேரத்திலும், சமாதானத்தை நிலைநிறுத்த உண்மையாக ஒத்துழைக்கின்ற நேரத்திலும், உடன்பாடுகள் துன்பம் பாய்கின்ற போர்தளவாட பெருக்கம், அரசியல் சூழ்ச்சிகள், எதிர்ப்புகள் போன்றவை தேவையற்றவைகளாகக் கருதப்படுகின்றன. ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு சர்வதேச சங்கம் மற்றும் ஐக்கிய நாட்டு வகை ஆகிய மூன்றினையும்

(குறிப்புக்கான இடம்)

தற்காலத்தில் காணப்படும் கூட்டுப் பாதுகாப்பிற்கு உகந்த எடுத்துக்காட்டுகளாக கொள்ளலாம்.

(I) ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு (The Concert of Europe):

வியன்னா காங்கிரஸ் தோற்றுவித்த உடன்பாடு முறை விரிவுபடுத்தப்பட்டு 1815—ஆம் ஆண்டிற்குப் பிறகு உலக அரங்கில் நடந்தேறிய பன்னாட்டு மாநாடுகளில் செயலாக்கப்பட்டது. இதுதான் உண்மையில் ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு என்றழைக்கப்படுகிறது. எதிர்ப்புணர்ச்சியின் அடிப்படையில் ஒருங்கிணையும் அதிகாரங்களை தடை செய்ய வல்லரசுகள் முரண்பாடுகளை மறந்து ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாடு அதிகாரச் சமநிலையில் இருந்து வேறுபட்டு, ஒரு உயர்ந்த நோக்கத்தை அடைய முயற்சித்தது எனலாம்.

ஐரோப்பாவில் உள்ள முக்கிய நாடுகள் நெப்போலியனின் போர்களுக்குப்பின் உறுதியற்ற உறவுகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்து ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பாட்டை உருவாக்கின. இவ்வேறுபாடு முதல் உலகப்போர் ஆரம்பிக்கும் காலகட்டம் வரையிலும் செயல்பட்டது. இவ்வாறே அதிகாரச் சமநிலை வெற்றிகரமாக செயல்பட்ட காலக்கட்டத்தில் இவ்வேறுபாடு ஐரோப்பாவைக் கட்டுப்படுத்தும் மாபெரும் சக்தியாகத் திகழந்தது. விரிவான இவ்வேறுபாட்டு அமைப்பில் மரபு விதிகளின் அடிப்படையில் ஐரோப்பிய அரசுகள் அதிகார விளையாட்டில் பங்கேற்றன. ஐரோப்பிய கண்டத்தில் அல்லது குடியேற்ற பகுதிகளில் ஐரோப்பிய அரசுகளின் பலதரப்பட்ட விருப்பங்களினால் விளைந்த பெரிய கருத்து முரண்பாடுகளை முன்னறிந்து தடை செய்யும் ஆற்றலை இவ்வேறுபாடு பெற்றிருந்தது. பால்கன் பகுதியில் உள்ள பிரச்சனைகளை வெற்றிகரமாக இவ்வேறுபாடு தீர்த்து வைத்தது. 1854—56ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய கிரிமியன் (Crimian War) 1877—78—ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய ரஷ்ய துருக்கியப் போர் போன்றவற்றை இவ்வேறுபாட்டால் தடை செய்ய முடியாத போதிலும் பால்கன் பகுதியோடு போரை மட்டுப்படுத்தி, அப்பகுதியில் வல்லரசுகள் கொண்டிருந்த முரண்பாடுகளை தீர்த்து வைத்து வெற்றிகரமாக பல்லாண்டுகள் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. ஜெர்மானிய எழுச்சியும், ஆதிக்க நாடுகளிடையே தோன்றிய பகைமையும் எதிர்மறையும் பெரும இராணுவ முகாம்களாக உருவெடுத்தமையும் ஐரோப்பிய ஒற்றுமை ஏற்பட்டதைச் சீர்குலைத்தது ஐரோப்பவை போரிடும் அரசுகளின் ஒரு களமாக மாற்றியமைத்தது. அதிகாரச் சமநிலைக்கு பதிலான ஒரு ஏற்பாடாக இது அமையாமல் பெரிய

அரசுகளின் ஒத்துழைப்பை விரும்புகின்ற அதிகாரச் சமநிலைகளைச் சார்ந்து இது செயல்பட்டது.

**II) சர்வதேச சங்கம் (The League of Nations)** : உலகில் அதிகாரச் சமநிலைலையை அகற்றி அதற்குப் பதிலாக பன்னாட்டு ஒத்துழைப்பையும் கூட்டுப்பாதுகாப்பையும் தோற்றுவித்து, உண்மையான ஒரு பொது அதிகார அமைப்பைச் சர்வதேசச் சங்கம் வளர்க்கும் என்று அச்சங்கத்தை நிறுவிய உட்ரோ வில்சனும் பிற தலைவர்களும் நம்பினர். சர்வதேச சங்க கருத்து அகில உலக தன்மை சார்ந்ததாக திகழ்ந்தது என்றாலும் அமெரிக்காவும் இதர சிறிய நாடுகளும் அதில் சேர மறுத்தன. ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் ஜெர்மனியும் ரஷ்யாவும் அதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இச்சங்கம் தனது அதிகாரத்தை எதித்து அறை கூவலிடும் அரசுகளுக்கு எதிராக கட்டாயப்படுத்திச் செயல்படுத்தும் அதிகாரத்தையும், தானாக இயங்கும் ஆற்றலையும் கொண்டிருந்தது. உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள தங்கள் கடமைகளாக அங்கத்தினர் மதித்துச் செயல்படவேண்டும் என்றாலும் சிறிய அரசியல் பிரச்சனைகளைக் கூட சர்வதேசச் சங்கம் திருப்திகரமாக தீர்த்து வைக்கவில்லை. இச்சங்கத்தின் கூட்டுப்பாதுகாப்புத் தத்துவத்தை வலுவோடு செயல்படுத்த, லோகர்னோ உடன்படிக்கை போன்ற பிராந்திய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அவ்வேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்ட அந்நேரங்களில் மட்டும் எழுச்சியூட்டும் ஏற்பாடுகளாக அமைந்தன.

1920—ஆம் ஆண்டிற்குப்பிறகு உலகளவில் தோன்றிய பொருளாதாரச் சரிவும் ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், அக்காலக் கட்டத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளினால் ஏற்பட்ட அறைகூவலும் 1931—ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியதும் சர்வதேசச் சங்கத்தின் செயலற்ற நிலையையும், போதாமையையும் தெளிவாக வெளிப்படுத்தியது. இச்சங்கம் அதிகாரச் சமநிலை ஏற்பாட்டிற்கு மாற்றாக திகழவில்லை இச்சங்கம் தன்னை ஒரு விநோதமான நிலையற்ற சமநிலையில் ஈடுபடுத்தியது.

**II) ஐக்கிய நாட்டு சபை (The United Nations)** : பல நிலைகளிலும் ஐக்கிய நாட்டு சபை சர்வதேச சங்கத்தைக் காட்டிலும் வலிமை மிக்கதாய் திகழ்கின்றது. எவ்வாறெனில் நடைமுறையில் நிலவுகின்ற சில சலுகைகள் இச்சபையை சீரிய அளவில் கூட்டுப்பாதுகாப்பை ஏற்படுத்தும் கருவியாக வலிமையோடு செயல்பட விடாமல் தடை செய்கின்றன. எடுத்துக்காட்டாக வல்லரசுகள்

(குறிப்புக்கான இடம்)

பெற்றிருக்கும் தனிச் சலுகைகளைக் கொள்ளலாம். ஐக்கிய நாட்டு சபை எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்த விடாமல் பாதுகாப்புச் சபையில் தடை செய்யும் மறுப்பாணை (Veto power) அதிகாரத்தை அவ்வல்லரசுகள் பெற்றுள்ளன. மேலும் ஐ.நா. சாசனம் ஐக்கிய நாட்டு சபை அமைப்பிற்குப் புறம்பாக தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் நாடுகள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அங்கீகரிப்பதோடு அவைகளுக்கு ஆதரவும் அளிக்கின்றது. ஐநா.விற்கு வெளியே செய்யப்பட்டுள்ள பிராந்திய ஏற்பாடுகளுக்கு ஐ.நா. சாசனம் அங்கீகாரம் அளிக்கின்றது. 1917—ஆம் ஆண்டு செய்யப்பட்ட ரியோ உடன்படிக்கை (Rio Treaty) அமெரிக்க அரசுகளின் அமைப்பு (Organisation of American States) அரேபிய சங்கம் (The Arab League) போன்றவை எங்ஙனம் ஐக்கிய நாட்டு அழைப்பில் கூட்டுப்பாதுகாப்பை நிலைநாட்ட தேவையான வலுவை வழங்குகின்றனர் என்பதை நிர்நிணயிப்பது அரிது.

சர்வதேச சங்கத்தைப் போன்று ஐக்கிய நாட்டு சபையை நிறுவியவர்களும் உயர்ந்த எதிர்பார்ப்புகளோடு இச்சபையை தோற்றுவித்தனர். சர்வதேச சங்கத்தைப் போன்று ஐக்கிய நாட்டு சபையும் தேசிய அரசு முறையில் அங்கத்தினர்களான திறமை வாய்ந்த அரசுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றது. இச்சபை ஒரு வெற்றிடத்தில் செயல்படவில்லை. இச்சபையின் செயல்பாடு பன்னாட்டு சமூக அமைப்பாலும் வல்லரசுகளின் உறவின் தன்மையாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. வல்லரசுகளின் உறவுகள் அதிகாரச் சமநிலை கருத்துக்களின் அடிப்படையில் அமைந்திருப்பதாகும். வல்லரசுகளின் வெளிநாட்டுக் கொள்கை பல்வேறு நிலைகளில் ஐ.நா.விற்குப் புறம்பாக செயல்படுகின்றமையாலும் ஐக்கிய நாட்டு சபை இன்றும் அதிகாரச் சமநிலை சூழ்நிலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

சர்வதேச சங்கத்தைப் போன்று ஐக்கிய நாட்டு சபையை நிறுவியவர்களும் உயர்ந்த எதிர்பார்ப்புகளோடு இச்சபையை தோற்றுவித்தனர். சர்வதேச சங்கத்தைப் போன்று ஐக்கிய நாட்டு சபையும் தேசிய அரசு முறையில் அங்கத்தினர்களான திறமை வாய்ந்த அரசுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றது. இச்சபை ஒரு வெற்றிடத்தில் செயல்படவில்லை. இச்சபையின செயல்பாடு இக்கால பன்னாட்டு சமூக அமைப்பாலும் வல்லரசுகளின் உளவின் தன்மையாலும் பெருமளவில் பாதிக்ப்பட்டடுள்ளது. வல்லரசுகளின் உறவுகள் அதிகாரச் சமநிலை கருத்துக்களின் அடிப்படையில் அமைந்திருப்பதாகும். வல்லரசுகளின் வெளிநாட்டுக் கொள்கை பல்வெலறு நிலைகளில் ஐ.நாவிற்குப்புறம்பாக

செயல்படுகின்றமையாலும் ஐக்கிய நாட்டு சபை இன்றும் அதிகாரச் சமநிலை சூழ்நிலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

**பன்னாட்டு அரசியலில் கோட்பாடுகளின் பங்கு: கோட்பாடு பற்றிய பொருள் விளக்கம் — பல்வேறான கோட்பாடு இயக்கங்கள்.**

## 4.1.2. பன்னாட்டு கோட்பாடு பற்றிய பொருள் விளக்கம்

ரிச்சர்ட்சினைடர் மற்றும் ஹியூபர்ட் வில்சன் ஆகியோர் பின் கூறப்பட்டுள்ள அளவில் கோட்பாட்டிற்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளனர். "உணர்வோடும் உறுதிபாட்டோடும் எடுத்தியம்பப்படும் சமூக அரசியல் அல்லது சமய முழக்கங்கள் அல்லது வீராவேச முழக்கங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு போதிக்கப்பட்டுவந்தால், நாளடைவில் அவை ஒரு குறிப்பிட்ட குழுவின் அல்லது கட்சியின் அல்லது தேசியத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையான அல்லது திட்டவட்ட கொள்கைகளாக மாறுகின்றன. இவ்வாறான உயிர், சமூகம் மற்றும் அரசாங்கத்தை பற்றி எடுத்தியம்பும் கொள்கையின் தொகுப்புதான் கோட்பாடு என்ற சொல் தற்காலத்திலும், பண்டைக்காலத்திலும், செயல்பட்டு வந்த பல்வேறான கொள்கைகளை குறிக்கின்ற அளவில் அமைந்துள்ளது.

கோட்பாடு (Ideology) என்ற சொல் முதலாவது (Destitute Tracy) என்பவரால் தொகுக்கப்பட்டது என்று வெப்ஸ்டரின் புதிய பன்னாட்டு அகராதி கூறுகின்றது. இப்பொழுது, பன்னாட்டு அரசியலில் எல்லோராலும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகக் கோட்பாடு காணப்படுகின்றது. "கோட்பாடு சமூக மற்றும் அரசியல் வாழ்வில் ஒரு முக்கிய ஆகக் கூறாக பல நூற்றாண்டுகளாக வரலாற்றில் திகழ்ந்தாலும் இருபதாம் நூற்றாண்டிற்கு முன் முடிவெடுக்கும் ஆற்றல் அதற்குப் பல நேரங்களிலும் இருக்கவில்லை" என்ற கருத்தை பார்மர் பெர்கின்சு என்பார் கொண்டிருந்தனர். கோட்பாட்டளவிலான முரண்பாடுகள் பண்டைய காலத்திலும் பெருமளவில் காணப்படுகிறது. 'கோட்பாடு சமூக மற்றும் அரசியல் வாழ்வில் ஒரு முக்கிய ஆக்கக் கூறாக பல நூற்றாண்டுகளாக வரலாற்றில் திகழ்ந்தாலும், இருபதாம் நூற்றாண்டிற்கு முன் வெடிக்கும் ஆற்றல் அதற்குப் பல நேரங்களிலும் இருக்கவில்லை" என்ற கருத்தை பார்மர், பெர்கின்சு என்பார் கொண்டிருந்தனர். கோட்பாட்டளவிலான முரண்பாடுகள் பண்டைய காலத்திலும் பெருமளவில் காணப்பட்டன. ஆனால் கோட்பாடுகள் ஏற்படுத்திய போராட்டங்கள் தற்காலத்தைப் போன்று

(குறிப்புக்கான இடம்)

பெருமளவிலான விளைவுகளைப் பண்டைய காலத்தில் தோற்றுவிக்கவில்லை. கோட்பாட்டிற்கான பொருள் விளக்கம் அளிக்கும் போது அவற்றின் பல்வேறு குண நலன்கள் தெளிவாக தெரிய வருகின்றன.

முதலாவதாக, கோட்பாடு அணுகுமுறை, தனிநபர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்ல. "தங்களை விட மேலான சக்திகளைப் பெருமளவில் தனிநபர்கள் வெளிப்படுத்துகின்றனர்" என்று கோட்பாடு அணுகுமுறை கூறுகிறது. இவ்வணுகுமுறை கருத்துக்களுக்கு தேவையான உருவமைப்பை உருவாக்குகின்றனர். இரண்டாவதாக, ஒவ்வொரு அரசியல் முறைமைப்பிற்கும் ஒவ்வொரு கோட்பாடு உண்டு. அக்கோட்பாட்டுக் கருத்துக்கள் உலகம் எவ்வாறு இருக்கிறது என்றும் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் தெளிவாக எடுத்தியம்புகிறது. கோட்பாடு என்பது எதிர்பார்ப்புக்களை அறிவிக்கும் ஒரு செய்து அன்று. ஆனால் மக்களுடைய மனதில் நிலையாக இடம் பெற்றிருக்கும் உண்மையான நம்பிக்கைகளைக் கோட்பாடு குறிக்கின்றது. மூன்றாவதாக, கோட்பாடுப்பொருள் விளக்கம் சமாதானத்தைத் தோற்றுவிக்கலாம். அல்லது போரை உருவாக்கலாம். சில நேரங்களின் கோட்பாட்டுப்பொருள் விளக்கம் தீவிர தன்மை படைத்ததாய் அல்லது மிதவாத்தன்மை படைத்ததாய் காணப்படும். ஆனால் எல்லா நிலைகளிலும் மனிதர்கள் மற்றும் குழுக்களிடையே கருத்துக்களைப் பரப்புதல் சக்திகளாக கோட்பாடு காணப்படுகிறது. நான்காவதாக, ஒரு நாட்டின் ஒற்றுமையைத் தோற்றுவிக்க கோட்பாடு பயன்படுகிறது. கோருபாம் நாட்டின் குறிக்கோளை ஒழுங்கான ரீதியில் அறிவிக்கின்றது. நாட்டின் குறிக்கோளை எய்த நாடு கடைபிடிக்கும் வழிமுறைகளைச் சரியெனக் காட்ட கோட்பாடு பயன்படுகிறது. கடைசியாக, ஒரு நாடு பின்பற்றும் கோட்பாடு எகித்தியம்பும் செயல் திட்டங்கள், பிறநாட்டினரைக் கவர்கிறது. அவ்வாறு கவரப்பட்ட கோட்பாட்டினை எடுத்தியம்பிய நாட்டிற்கு உதவிபுரிய முன்வருகின்றன. சுருங்கக்கூறின், கோட்பாடு என்பது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தன்மை படைத்தது. பொதுவுடைமைக் கோட்பாடு இன்று உலகமெங்கும் பற்றுறுதியாளர்களைக் கொண்டு திகழ்கிறது.

### பல்வேறான கோட்பாடு இயக்கங்கள்

பண்டைய காலத்தில் கோட்பாடு இயக்கங்கள் பெரும்பாலும் மரபு அடிப்படையில் செயல்பட்டு வந்தன. தற்காலப் பன்னாட்டுச் சமூக அமைப்பிற்கு உருவடிவம் வழங்கியதில் மூன்று கோட்பாட்டு சக்திகள் பெரும் பங்கு வகித்துள்ளன என்று பிரைட்மேன் என்பவர் கூறுகிறார்.

அவை (i) கிருத்துவம் (ii) இந்நூற்றாண்டில் நிலவும் முற்போக்கு மற்றும் மனிதாபிமான கருத்துக்கள் (iii) பாகுபாடற்ற சமுதாயகருத்து ஆகியவையாகும்.

## கிருத்துவம் (Christianity)

ஃபிரைட்மேனின் கருத்துக்களை விளக்கும் போது, கிருத்துவ சமயம் கொள்கைகள் வாழ்விற்குகந்த வகையில் ஆன்மீக தரத்தை உயர்த்துகிறது என்பது புலனாகிறது. சில நன்னெறி விதிகளின் அடிப்படையில் சர்வதேச உடன்பாடு இக்கொள்கைகள் நிலைநிறுத்துகின்றன. கிழக்கிந்திய இந்து, புத்த கம்பூசியனிச, இஸ்லாமிய சமயக் கோட்பாடுகள் உலகில் நடந்தேறிய பல நிகழ்ச்சிகளை நிலைநிறுத்த தேவையான வடிவமைப்பை வழங்கின.

## மனிதாபிமானம் (Humanitarianism)

அறிவார்ந்த மனிதாபிமானம் கிருத்துவ நெறிகள் வழங்கிய வர்க்க மற்றும் தேசிய பாகுபாடற்ற அடிப்படை மனித சமத்துவ நெறிகளை ஏற்றுக்கொண்டுள்ளது. பன்னாட்டுச் சமூகத்தை சமாதான ரீதியில் அமைப்பதை இக்கொள்கை எடுத்துக் கூறுகிறது. இக்கொள்கை போரை வெறுத்து ஒதுக்குவதோடு யாவராலும் எதிர்க்கப்படவேண்டிய அறிவற்ற ஒரு செயலாக அதைச் சித்தரித்துக் காட்டுகின்றது.

## மார்க்ஸியம் (Marxism)

அண்மைக் காலம் வரையில் எழுச்சிமிக்க தத்துவாக பொதுவுடைமைக் கோட்பாடு காணப்பட்டது. வர்க்கபேதமற்ற சமூகத்தைப் படைத்தல் பொதுவுடைமை கோட்பாட்டின் குறிக்கோளாக அமைகிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு போராட்டம் நடைபெறாதிருந்தால், இவ்வாறன சமூக அமைப்பை அடைதல் இயலாது என்று மார்க்ஸிய வாதிகள் எண்ணுகின்றனர். வராலாற்றின் இப்பொருள் வாம் (materialistic interpretation) மார்க்ஸிய கோட்பாட்டின் உருவாக்கத்திற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. உலகவாழ்வில் பொருள்களை உற்பத்தி செய்யும் வழி முறைகள் மனித வாழ்வின் பொருள் மற்றும் ஆன்மீக காரியங்களுக்காகப் பின்பற்றப்படும் வழிமுறைகளை நிர்ணயிக்கின்றது என்று வரலாற்றின் இற்பொருள் வாதம் எடுத்தியம்புகின்றது. வர்க்கப் போராட்டம் சமூக வாழ்விற்கூறு என்பதில் மார்கஸியவாதிகள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

'உள்ளவர்களும்' (haves) 'இல்லாதவர்களும்' (have nots) மாறுபட்ட தன்மையைக் கொண்டிருப்பதால், சமாதனமாக இணைந்து வாழ இயலாது. மேலும் ஒரு சமூகப் புரட்சியின் தவிர்க்க முடியாத தேவையை மார்க்ஸிய வாதிகள் நம்புகின்றனர். கண்டோருக்கும், காணப்படுவோருக்கும் இடையே நிகழும் போராட்டமாக தொடர்ந்து என்றென்றும் நடைபெற்றுக்கொண்டிராது என்று மார்க்ஸிய வாதிகள் கூறுகின்றனர். பாட்டாளி வர்க்கம் ஒன்று திரண்டு முதலாளி வர்க்கத்தை எதிர்த்து ஒரு ஆயுதப் போராட்டம் நடத்தும் காலம் நிச்சயம் உருவாகும். அப்போராட்டத்தைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார காலம் உருவாகும். அக்கால கட்டத்தில் தனியார் சொத்துக்கள் ஒழிக்கப்படும். உற்பத்திக்கான முறைகள் சமூக உரிமையாகப்படும். உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும். அதிக இலாபம் ஈட்டும் நோக்கம் மறைந்து, சமூக தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தன்மை உருவாகும். பட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் சமூக மாறுதலுக்கு அடிகோலுகிறது. முடிவில் அச்சமூக மாறுதல் பொதுவுடைமை ஒழுங்கமைப்பாக உருப்பெறுகின்றது. "ஒவ்வொருவரிடமும் அவர்கள் திறனின் அடிப்படையில் எதிர்பார்த்தாலும், ஒவ்வொருவருக்கும் அவர்கள் திறனின் அடிப்படையில் வழங்கலும்', என்ற தத்துவம் பொதுவுடைமைச் சமூகத்திற்கு வழிகாட்டியாக அமையும் பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூகத்தில் வர்க்க பேதங்கள் இல்லாமையால், அவ்வமைப்பில் அரசு என்ற அமைப்பே தேவையில்லை.

### மார்க்ஸியத்தின் நெகிழும் தன்மை (Flexibility of Mzrxism)

லெனின் மார்க்ஸிய, கருத்துக்களை உறுதிக் கோட்பாடாகக் கருதாமல், செயல்முறைக்கு வழிவகுக்கும் வழிகாட்டியாகக் கருதினார். மார்க்ஸிய நம்பிக்கையைச் சமயக் கோட்பாட்டைப் போன்று நெகிழாத தன்மை படைத்ததாய் மாற்றிவிடல் கூடாது என்று லெனின் பல நேரங்களிலும் வலியுறுத்தியுள்ளார். ஸ்டாலின் மார்க்ஸியத்தை பற்றுறுதிக் கோட்பாடாகப் பின்பற்றுதலைக் கண்டித்தார். தற்கால வாழ்விற்கு உகந்த அளவிலான நெகிழும் தன்மை படைத்த ஆக்கபூர்வ மார்க்ஸியத்தை ஸ்டாலின் ஆதரித்தார். மார்க்ஸியம் அடைய முயலும் குறிக்கோளில், மார்க்ஸியத்தின் உறுதிப்பாடு பெருமளவில் வெளிப்படவேண்டும். உழைக்கும் வர்க்கம் வெற்றியின் பாதையில் வீறுநடை போட மார்க்ஸீயம் வாக்குறுதி வழங்குகின்றது. இன்று நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார முறை அழிவுறும் என்று மார்க்ஸியம் முன்கூட்டியே

(குறிப்புக்கான இடம்)

அறிவிக்கின்றது. மனித சமூகத்தை மார்க்ஸிய சார்பு படைத்ததாகக் கொண்டு வருதலை இத்தத்துவம் எதிர்பார்க்கிறது.

### பாசிஸமும், நாஸிஸமும்

இரண்டு உலகப்போருக்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் இவ்விரு கோட்பாடுகளும் உலக அரசியலில் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் உலகப்போருக்கான அடிப்படையாக இவ்விரு கோட்பாடுகளும் உலக அரங்கில் திகழ்ந்தது. பாசிஸவாதிகள் தேசீய நலன் மேம்பாட்டிற்கு போரை ஒரு கருவியாக எடுத்தியம்பியதோடு, உலகை ஆள வல்லரசுகளின் ஆதிக்கம் தேவை என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் தங்களை உலகத்தை ஆளும் தகுதி படைத்தவர் என்று எண்ணியதோடு, அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இதனால் உலகம் இரண்டாம் உலகப்போரைச் சந்தித்தது. இரண்டாம் உலகப்போர் மனித வர்க்கத்திற்கு கொண்டு வந்த இழப்பீட்டை நம்மால் மறுக்க இயலாது. இந்த இரண்டு கோட்பாடுகளும் முசோலினி, ஹிட்லர் ஆகிய இரு தலைவர்களின் மறைவுக்குப்பின் உலகில் மறைந்துவிட்டது என்று. ஆனால் இக்கோட்பாடுகளின் மறைமுக ஆதிக்கத்தை இன்றும் நம்மால் பல தேசீய அரசுகளின் செயற்பாட்டில் காணமுடிகிறது. பல தேசிய அரசுகளில் நிலவும் ஏதேச்சதிகாரப் போக்கில் இக்கோட்பாட்டின் மறைமுக ஆதிக்கத்தை ஒருவரால் காண இயலும்.

### தாராள மனப்பான்மை கொண்ட முதலாளித்துவம் (Liberal Capitalism)

தாராள மனப்பான்மை கொண்ட முதலாளித்துவம் சுதந்திரம் தனியார் தொழில் மற்றும் ஜனநாயக சமூக ஒருமைப்பாடு ஆகியவற்றை எடுத்தியம்புகிறது. இன்றைய உலகில் போதுமான அளவு இக்கொள்கை ஆதிக்கம் செலுத்த வருகின்றது. மேலும் சில மேற்கத்திய அதிகாரங்களின் செயல்பாட்டை இக்கொள்கை நிர்ணயம் செய்கின்றது.

### சமதர்ம மக்களாட்சி (Democratic Socilism)

தற்காலத்தில் இக்கொள்கை பெருமளவில் மனித மனத்தை ஆட்சி கொண்டுள்ளது. ஆப்பிரிக்க மற்றும் ஆசிய நாடுகள் இக்கோட்பாட்டின் தத்துவங்களை அரசு கொள்கையின் வழிகாட்டு நெறியாக

(குறிப்புக்கான இடம்)

ஏற்றுக்கொண்டுள்ளன. சமதாம மக்காளட்சி சமதர்மத்தின் நன்மைகளைச் செயலாக்குவதோடு, தனிமனித உரிமைக்கும் உத்தரவாதம் அளிக்கின்றது.

## அஹிம்சைக் கோட்பாடு (Ideology of Non-iolence)

திடமான அடிப்படையில் பன்னாட்டு அரங்கில் வளர்ந்து வரும் ஆற்றல் மிக்க கோட்பாடாக அஹிம்சைக் கோட்பாட்டைக் கொள்ளலாம். தற்காலத்தில் அணு ஆயுத தயாரிப்பால் மனிதன் தனது புதிய கண்டுபிடிப்புக்களுக்குக் கட்டுப்பட்டுள்ளான். மேலும் உலகமெங்கும் வன்முறைகள் இன்று தலைவிரித்தாடுகின்றன. இச்சூழ்நிலையில் அஹிம்சை என்ற கோட்பாட்டை மனித வாழ்வை உய்விக்கும் ஒரு சஞ்சீவியாக உலகெங்கும் உள்ள மனித வர்க்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இன்று எல்லா நாடுகளிலும் கலாச்சாரத்தின் எல்லா நிலைகளிலும் அஹிம்சை கோட்பாட்டைப் போதித்தும்" செயல்படுத்தியும் வருகின்றனர். மேலும், இந்து, புத்த, ஜெயின், கிருத்துவ மற்றும் இஸ்லாமிய சமயங்கள் அஹிம்சைக் தத்துவங்களைப் பல்லாண்டு காலமாக எடுத்தியம்பியுள்ளன. லாவோசி ஜான், ரஸ்கின், லியோ டால்ஸ்டாய் (Leo Tolstory) போன்ற பல தத்துவமேதைகள் இக்கோட்பாட்டில் முதலில் நம்பிக்கை தெரிவித்த அறிஞர்களாக கருதப்படுகின்றனர். ஆனால் உலகில் இத்தத்துவத்தை உயிருள்ள ஒரு தத்துவமாக மாற்றிய பெருமை அண்ணல் காந்தி அடிகளையோ சாரும் காந்திஜியின் அஹிம்சை கோட்பாடு அறநெறியின் அடிப்படையில் புலனாகாத அளவில் அமையவில்லை. இக்கோட்பாட்டிற்கு உலகில் நிலவும் நடைமுறை, உண்மைகளின் அடிப்படையில் ஒரு தெளிவான மற்றும் விஞ்ஞான ரீதியிலான விளக்கத்தை அவர் அளித்துள்ளார். இதனடிப்படையில் அஹிம்சை இயக்கம் பன்னாட்டு அரங்குகளில் புதுப்பொலிவு பெற்றுள்ளது. உள்நாட்டுப் பன்னாட்டு அரங்குகளில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இக்கோட்பாடு ஒரு சிறந்த ஆயுதமாகக் கருதப்படுகிறது. இன்றைய உலகில், இக்கோட்பாடு மிக முக்கியமான ஒன்றாகும்.

## கோட்பாடு அணுகுமுறையின் குறைபாடுகள்

கோட்பாட்டு அணுகுமுறையில் முரண்பாடுகளும் கட்டுப்பாடுகளும் வெளிப்படுகின்றன. கோட்பாடுகள் நிச்சயமாக பகுத்தறிவுக்கு மாறாக அமைகின்றன என்று சொல்லப்படுகின்றது. அவை உணர்ச்சிபூர்வமாக எடுத்தியம்பப்படும் தத்துவங்களாகக் கருதப்படுகின்றன. இக்கோட்பாடு சில

நேரங்களில் ஒரே கொள்கையைப் பிடிவாதமாக வலியுறுத்தும் தன்மை படைத்ததாய் காட்சியளிக்கின்றன. இத்தாலியில் ஃபாஸிஸ்டுகளும், ஜெர்மனியில் நாஜிகளும் தங்கள் கோட்பாடுகளைத் தாங்கள் முழுவதும் அறிவுறும் வரை பிடிவாதமாகப் பின்பற்றினர். சில நேரங்களில் ஒரே கோட்பாட்டைப் பின்பற்றுவோரிடையே பிரிவினைகள் ஏற்படும் தற்காலத்தில் பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பின்பற்றுவோரிடையே ஏற்பட்டுள்ள பிரிவினையை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கு ரஷ்யாவும், சீனாவும் ஒன்றுக்கொன்று முரண்பாடான பொருள் விளக்கங்களை அளித்து வருகின்றன. இதன் விளைவாக ஒரு முகப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் இன்று பெருமளவில் சரிவு ஏற்பட்டுள்ளது.

## அதிகாரம் மற்றும் கோட்பாடுகளின் இணைவு

உலக அரசியலில் நிலவும் சக்திகளை விவரித்துக் கூற அதிகார அணுகுமுறையாலும் கோட்பாடு அணுகுமுறையாலும் தனிப்பட்ட அளவில் இயலாது என்பது பன்னாட்டு வாழ்வில் தெளிவாக உணரப்படும் ஒரு உண்மை. இரு அணுகுமுறைகளிலும் சில வரையறைகளும் குறைபாடுகளும் நிலவுகின்றன. அதிகாரமும், கோட்பாடும் இன்று ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயல்படுகின்றன. இந்நிலை பன்னாட்டு அரசியல் நடந்தேறும் முறையைக் கண்டறிவதில் சில சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. அதிகாரம் செல்வாக்கு மிக்க ஒரு ஆக்கக் கூறாகக் கருதப்படுகிறது. மேலும் அதிகாரம் கட்டாயப்படுத்தும் செல்வாக்குப் படைத்ததாய் இன்று நிலவுகிறது. ஆனால் அதிகாரத்தை ஆதரிக்க ஒன்றிணைக்கப்பட்ட கொள்கைகள் இல்லையேல் அவ்வதிகாரம் செயலிழந்த ஒன்றாகக் கருதப்படும். இதைப்போன்று கோட்பாடும் தேசிய அதிகாரத்தோடு இணைந்து காணப்படுகிறது. ஆர்வமிக்க தேசியத்தை அடையும் கருவியாக அதிகாரம் பயன்படுவதைப் போன்று, கோட்பாடுகளைச் செயல்படுத்தும் கருவியாகவும், அதிகாரம் பயன்படுகிறது'', என்று பால்மரும் பெர்கின்சும் கருத்து தெரிவிக்கின்றனர். சோவியத் ரஷ்யா அதிகாரமிக்க ஒன்றாய் இல்லாமிலிருந்தால், பொதுவுடைமைக் கோட்பாடு செயலிழந்து மறைந்திருக்கும். உள்நாட்டு அரசியலையும் பன்னாட்டு அரசியலையும் இயக்கும் ஒரே ஆற்றல் மிக்க சக்தியாக அதிகாரத்திற்கான போட்டியாக் கருதமுடியாது. கோட்பட்டின் சக்தி ஓரளவு வலுவிழந்த நிலையில் கணாப்பட்டதாலும் உலக அரசியலில் அவற்றின் முக்கியத்துவம் இன்றும் நிலவுகிறது.

இறுதியாக அதிகாரம் மற்றும் கோட்பாடு ஆகியவை அரசியலில் ஆற்றும் பங்கினைச் சரியான அளவில் மதிப்பிடுதல் பன்னாட்டு அரசியலை அறிவு சார்ந்த முறையில் கற்க வழிவகுக்கும் என்பதனை நினைவில் கொள்ளல் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

### 4.1.3. தேசியம் மற்றும் பொருள் விளக்கம்

பன்னாட்டு சமூகத்தில் நிலவும் எல்லா சக்திகளும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுவது தேசியமாகும். உலக விவகாரங்களில் செல்வாக்கு மிக்க சக்தியாக இன்று தேசியம் நிலவுகிறது. தேசியம் என்ற எண்ணம் புதிதாக தோன்றிய ஒன்றாக தற்கால தேசியம் என்ற தத்துவம் காணப்படுகிறது. பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகு, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் உலகில் பல நாடுகளில் வாழும் மக்களுக்கு எழுச்சியூட்டும் ஒரு சக்தியாக தேசயிம் நிலவுகிறது. ஆனால் வரலாற்றின் பல காலகட்டங்களிலும், உலகின் பல பாகங்களிலும் இது பல கருத்துக்களை வெளிக்காட்டும் நிலையில் செயல்பட்டு வருகின்றது.

திருப்தி அளிக்கக்கூடிய அளவிலான ஒரு பொருள் விளக்கத்தை தேசியத்திற்கு காண்பது மிகவும் அரிது. ஜே.ஹெச். ஹேய்ஸ் என்பார் தனது தேசியம் பற்றிய கட்டுரைகளில் பின்கூறப்பட்டுள்ள பொருள் விளக்கத்தைக் கொடுத்துள்ளார். "தேசியத்தன்மை, நாட்டுப்பற்று ஆகிய இரு பழைய குறிப்பிடத்தக்க குணநலன்களின் தற்கால உணர்ச்சிப்பூர்மான கூட்டிணைவும், மிகைமைப்படுத்தலும் தேசியம்" என்றழைக்கப்படுகிறது. இவ்வாறு, தேசியம் என்பது தேசியத் தன்மையையும், அத்தன்மை பெற்றுள்ள அரசியல் நிறுவன அமைப்பாகிய தேசிய அரசையும் இணைக்கும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தேசியத் தன்மையின் உணர்வாக தேசியம் கருதப்படுகிறது. மக்களின் மாற்ற முடியாத கூட்டு முடிவுகளை பொதுவான ஒரு கடந்த கால நிகழ்ச்சி மூலமும், பொதுவான ஒரு கடந்த கால நிகழ்ச்சி மூலமும், பொதுவான வருங்காலத்தைப் பற்றிய ஒரு கற்பனை மூலமும் எடுத்தியம்புவது தேசியத்தை குறிப்பதாகும் என்பது விரிவான ரீதியில் பொருள் விளக்கம் அளிக்கலாம். ஒவ்வொரு நாட்டிற்கும் பிறநாடுகளில் இருந்து வேறுபட்ட ஒரு தோற்றத்தை தேசியம் அளிக்கின்றது. தேசிய அரசிற்கு விசுவாசமாக செயல்பட மக்களைத் தூண்டுவதற்கு உகந்த ஒரு மனநிலையை தேசியம் தோற்றுவிக்கின்றது. "தங்களுக்குச் சொந்தம்" என்ற ஒரு தன்மையை மக்களிடையே தேசியம் வளர்க்கிறது என்று கிரேன் பிரின்டன் கூறுகின்றார். தேசத்தின் மேல் உருவாகும் சொந்த

உணர்வு ஒரு தனிப்பட்டநபர் தான் அங்கத்தினராக இருக்கும் பிற குழுக்களின் மீது கொண்டிருக்கும் சொந்த உணர்வைக் காட்டிலும் மிகையான அளவில் காணப்படும்.

**தேசியத்தின் அடிப்படைகள் (Roots of Nationalism)**

தேசியத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் தொடர்ந்து செயல்படல் ஆகியவற்றிற்கு சில ஆக்கக் கூறுகள் காணரமாக அமைந்துள்ளன. இவ்வாக்கக்கூறுகளை தேசியத்தின் அடிப்படைகள் என்றழைக்கலாம். தேசியம் என்பது உணர்வோடு செயல்படும் ஒரு முதன்மையான மனநிலைய என்று ஹேன்ஸ்கான் என்பவர் கூறியுள்ளார். இன்றைய உலகில் தேசியம் ஒரு வலிமை மிக்க அரசியல் சக்தியாக காணப்பட்டாலும் அதன் அடிப்படை அரசயில் சார்புடையதய் அமையாமல், அக உணர்வு சார்ந்ததாக அமைந்துள்ளது,என்று பால்மர் மற்றும் பெர்கின்சு என்பவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே, உளவியல் சார்நத அடிப்படைகளை முதலாவதாக விவாதித்தல் நல்லது அதன்பிறகு தேசியத்தின் வளர்ச்சிக்கு உதவும் இயற்பியல் சார்நத ஆக்கக்கூறுகளை விவாதித்தல் சாலச் சிறந்தது.

**பொதுவான தேசிய பாரம்பரியம் (Common Nationalist traditions)**

தேசியத்தின் வளர்ச்சிக்கு ஒருமைத் தன்மை உணர்வு மக்களிடையே தோன்றி வளரவேண்டும் அவ்வுணர்வை சீரிய முறையில் வளர்க்க மக்கள் தங்களை ஒரே பொது மற்றும் தொடர்ச்சியான தேசிய மரபு மற்றும் பாரம்பரியத்தோடு ஒருங்கிணைக்க வேண்டும் கடந்த கால புகழைப் பற்றிய பெருமையைப் பொதுவாக பகிர்ந்து கொள்ளுதல், தற்காலத்தில் ஒன்றாக இணைந்து செயல்களைச் செய்யும் பொது விருப்பம், பொதுவான வருங்காலத்தைப் பற்றிய ஒரே சீரான விற்பனை முதலானவை ஒருங்கிணைக்க உகந்த உணர்ச்சி பூர்வமான பிணைப்பினை உருவாக்குகிறது.

ஒரு நாட்டை உருவாக்குவதில் முக்கிய ஒரு ஆக்க கூறாக புவியியல் திகழ்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாடுகள் குறிப்பிட்ட நிலப்பரப்பைக் காட்டிலும், காலகட்டத்தில் அதிகமாக தோன்றுகின்றன. பொது வெற்றிகளைப் பற்றி வரலாறு, பண்டைய காலத்தில் வீர சகாப்தங்கள் புரிந்த பொது வீரர்கள், ஒன்றாக அனுபவித்து பொது துன்பங்கள் போன்றவை நிச்சயமாக தேசிய உணர்வை நிலைநிறுத்த உகந்த ஆக்கமிக்க உணர்ச்சிகளை எழுச்சியுறச்செய்யும்.

**மனிதத்தன்மை (Human Nature):** உணவும், உறைவிடமும் இன்றி மனிதனால் வாழ இயலாது. இவை அவனுடைய உயிரியல்

(குறிப்புக்கான இடம்)

சார்ந்து தேவைகள். இவற்றைக் காட்டிலும் மனிதனுக்குப் பிறபல விருப்பங்கள் உண்டு. ஒரு குழுவிற்கு விசுவாசமாய் இருத்தல், நாட்டுப்பற்றை வளர்க்கும் மனப்பாங்கு போன்றவை மனிதனிடம் உறைந்து காணப்படுகின்றது. இப்பண்புகள் தேசியத்திற்கு மிகவும் தேவையானவையாகக் கருதப்படுகிறது. ஆனால், இப்பண்புகள் தேசியத்திற்கு மிகவும் தேவையானவையாகக் கருதப்படுகிறது. ஆனால், இப்பண்புகள் மட்டும் தேசியத்தை உருவாக்கும் என்று முடிவாக கூற இயலாது. "தேசியத்தை உயிரியல் அல்லது உளவியல் சார்ந்த ஒரு தேவையாக கொள்ளக்கூடாது. ஆனால், சில சூழ்நிலைகளில் சில மனித குணநலன்கள் தேசியத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது. அல்லது அதன் வளர்ச்சியைத் தடைசெய்யலாமல் செயல்படுகிறது", என்று Schleicher என்பார் எடுத்தியம்பியுள்ளார்.

**சமூக நிலையற்ற தன்மையையும் பாதுகாப்பின்மையையும்:** சமூக சீர்குலைவும் அதனால் தனிமனிதனுக்கு ஏற்பட்ட பாதுகாப்பின்மையும் தற்கால தேசியத்திற்கும் அடிப்படையாகத் திகழ்ந்தது என்று பேராசிரியர் மார்கந்தோ கூறியுள்ளார். நவீன தேசியத்தின் தீவிரம் சமூக சீர்குலைவு, அதனால் ஏற்படும் தனிமனித பாதுகாப்பின்மை போன்றவை சம்பந்தப்பட்டு காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடி மற்றும் பல ஆக்கக்கூறுகளின் பலனாக இருபதாம் நூற்றாண்டில் சமூகத்தில் நிலையற்ற தன்மை பெருமளவில் நிலவுகிறது என்று மார்கந்தோ கூறுகிறார். சமூகத்தின் நிலையற்ற தன்மை மக்களிடையே பாதுகாப்பின்மை மற்றும் ஏமாற்றம் போன்ற உணர்வுகளைத் தங்களிடமிருந்து வெறியேற்ற, தங்களிடையே உணர்ச்சிமிக்க தேசியம் சார்ந்த எண்ணங்களைத் தீவிரமாக வளர்க்கின்றனர். பாதுகாப்பின்மை, அதிருப்தி, ஏமாற்றம் போன்றவைகளிலிருந்து தப்ப இயலாமல் அவதியுறும் மனிதன் தன்மை நாட்டோடு இணைப்பதின் மூலம் திருப்தி அடைகிறான். இருபதாம் நூற்றாண்டில் அழிற்விற்கு அடிகோலும் தீவிர தேசியம் மேற்கூறிய ஆக்கக்கூறுகளின் அடிப்படையில் வளர்ச்சியடைகிறது. புவியியல், வர்க்கம், பொருளாதாரம், மதம் பொது அரசாங்கம் போன்றவை தேசியத்தை வளர்க்கும் இயற்பியல் சார்ந்த ஆக்கக் கூறுகளாகக் காணப்படுகிறது.

**புவியியல்:** ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் அப்பகுதியின் பால் ஒரு பிணைப்பை தமக்குள் ஏற்படுத்திக்கொள்கின்றனர். பொதுவான நிலப்பகுதியின் மூலம் உருவாகும் உணர்வு தேசியத்தை வளர்க்கின்றது. குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் குழுவைச் சார்ந்த மக்கள் தமக்குள் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு, அத்தொடர்வுகளின்

வாயிலாக "ஒருமைப்பாடு" உணர்வை வளர்க்கின்றனர். இவ்வுணர்வு தேசியத்திற்கு தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது.

வர்க்கம்: தேசியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்த இன்னொரு முக்கிய ஆக்கக்கூறாக வார்க்கத்தைக் கொள்ளலாம். மனிதன் தோன்றியது முதல் பல வர்க்கங்கள் தொடர்ச்சியாக ஒன்றோடொன்று கலப்புற்று வருவதால் இன்றைய உலகில் ஒரே வர்க்கத்தைக் கொண்ட ஒரு தேசியக் குழுவை காணமுடியாது என்ற கருத்தை மனித இன நூல் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது வர்க்கம் நிச்சயமாக தேசியத்தை வளர்க்க உதவாது என்பது தெரியவருகிறது. ஆனால் தோலின் நிறம் போன்ற வெளித்தோற்றம் சமூக குழுக்கள் அமைக்கப்பட உகந்த அடிப்படையாகக் காணப்படுகிறது.

பழைய வர்க்க அடிப்படையிலான கற்பனைக் கதைகளின் வாயிலாக வர்க்க மேம்பாட்டைப் பற்றி தீவிரமாக பிரச்சாரம் பண்ணுவதின் மூலம் ஆக்கிரமிக்கும் தன்மை வாய்ந்த தேசியத்தை வளர்க்கலாம். ஜெர்மனியில் நாஜிக் கோட்பாடு வளர்ச்சியுற்றமையை மேற்கூறிய கருத்திற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

இவ்வாறு, எந்த ஒரு நாட்டிலும் ஒரே வர்க்கத்தைச் சார்ந்த மக்களை முற்றிலுமாக காண இயலாது, என்றாலும், வர்க்கம் தேசிய வளர்ச்சிக்குத் துணை புரிந்தது என்ற தப்பான எண்ணம் பரவலாக உலகில் காணப்படுகிறது.

மொழியும் இலக்கியமும்: தேசியத்தை உருவாக்கி வளர்ப்பதில் மொழியும், இலக்கியமும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றது. பொது மொழியின்றி ஒரு நாடு முன்னேறலாம் என்றாலும், பொதுமொழி ஒருங்கிணைக்கும் ஒரு முக்கிய ஆக்கக்கூறாக கருதப்படுகிறது. மொழி ஒரு நாட்டை உருவாக்கும் முக்கிய ஆக்கக்கூறாக ஹேய்ஸ் கூறுகின்றார். 'பொதுமொழியைப் போன்று வேறெந்த ஆக்கக்கூறாலும் பல்வேறு வர்க்கத்தைச் சார்ந்தோரை உடனடியாக இணைத்தல் இயலாது. பலநேரங்களில் ஒரே மொழியும், அம்மொழி உருவாக்கும் ஒரு முகத்தான கருத்துக்களும் ஒரு நாட்டைக் கட்டமைப்போடு காக்கும் சக்தியாக நிகழ்கிறது'' என்று ராம்சேமூர் என்பார் கூறுகின்றார்.

சிறந்த இலக்கியத்திற்கும், ஓவியம் இசை போன்ற கலைகளுக்கும் உலகெங்கும் வரவேற்பிருக்கிறது. அவை தேசிய எல்லைகளைக் கடந்து செல்லுகிறது, என்றாலும் சமூக பிணைப்பையும், தேசிய உணர்வுகளையும் ஏற்படுத்தும் சக்திவாய்ந்தவையாக அவை கருதப்படுகிறது. தற்காலத்தில் பல நாடுகளில் தேசியம் அறிவுசார்ந்த இயக்கங்களின் மூலம் ஆரம்பித்து இலக்கியம் மற்றும் பிற்பல கலைகளின் வாயிலாகப் பரவி வருகிறது.

(குறிப்புக்கான இடம்)

இலக்கியங்கள் தேசிய உணர்வுகளைத் தூண்டுகின்ற அளவில் காணப்படுகிறது.

மதம்: மதம் தேசியத்தோடு இரு நிலைகளில் தொடர்பு கொண்டுள்ளது முதல் நிலையில், பொதுவான மத நம்பிக்கைகள் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுகளைத் தோற்றுவிக்கத் துணைபுரிகின்றது. இரண்டாவது நிலையில், பிற்பல காரியங்க்ளுடன் இணைந்து தேசியத்தை மாற்றியமைக்க செயல்படும் ஒரு ஒருங்கிணைக்கும் சக்தியாக மதம் காணப்படுகிறது. இன்று மதத்தின் முக்கியத்துவம் ஓரளவு குறைந்துள்ளது என்றாலும் மதம் இன்றைய உலகிலும் ஓர் உயிர்பெற்ற சக்தியாக திகழ்வதை மறுக்க முடியாது. மத்தின் அடிப்படையில் தேசங்கள் உருவாகியமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைக் கூறலாம்.

**பொருளாதாரம்** : தேசியத்தின் வளர்ச்சிக்குப் பொருளாதாரம் பல வழிகளில் துணைபுரிகின்றது. மத்திய வகுப்பினர் சமுதாயத்தில் எழுச்சியுற்றபின் தேசியம் தோன்றி வளர்ந்தது என்று நிச்சயமாக கூறலாம். பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த நடுத்தர வகுப்பைச் சார்ந்த வணிகர்கள் தங்களுடைய பொருளாதார நலனைப் பாதுகாக்க பிரெஞ்சுப் புரட்சியை நடத்தினர். அப்புரட்சி நவீன தேசியத்தைத் தோற்றுவித்தது. ஆதிக்க ஆட்சியாளர்களின் பொருளாதாரச் சுரண்டலை எதிர்க்க இன்று புதுவேகத்தோடு தேசிய உணர்வுகள் ஆசியா, ஆப்பிரிக்கா லத்தின், அமெரிக்கா போன்ற நாடுகளில் எழுச்சிபெற்று இயங்கி வருகிறது.

தற்கால நாடுகள் இன்று பெருமளவில் ஒரு பொருளாதாரப் பகுதிகளாக மாறியுள்ளது. ஒரு நாடு வெளிநாட்டினரின் போட்டியிலிருந்து தன்னுடைய பொருளாதாரத்தைப் பாதுகாத்து முன்னேற ஒருங்கிணைந்து செயல்படுகிறது. ஒரு வலிமையான தேசிய அரசாங்கம் மட்டுமே பெருவாரியான பகுதியனரின் பொருளாதார நலனைப் பாதுகாக்கும் என்ற எண்ணம் இன்று நிலவுகிறது. இவ்வெண்ணம் தேசியத்தின் வளர்ச்சியில் பொருளாதாரம் கொண்டுள்ள பங்கினைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

எவ்வாறெனினும், பொருளாதார ஆக்கக்கூறுகளைப் பகுப்பாய்வு செய்யும் பொழுது, பொருளாதாரத்தில் சமநிலை இல்லாமை மற்றும் ஒரு வகுப்பினரைப் பொருளாதார ரீதியில் சுரண்டுதல் போன்றவை தற்கால தேசிய அரசுகளை எழுச்சி பெற்றதற்குரிய முக்கிய காரணங்களாகும். சுரண்டல் மற்றும் சமநிலை அற்றநிலை உலகில் மறைத்தால், தேசிய அரசுகளின் தேவையும் காலப்போக்கில் மறையும், அறநிலையில் உண்மையான ஒரு உலக அரசாங்கம் உருவாகும். அவ்வாறு

உருவாகும் போது தற்கால தேசியம் மறைந்து நாடுகளுக்கு இடையிலான தேசியம் உருவாகும்.

பொதுஅரசாங்கம்: பிற ஆக்கக்கூறுகளால் தேசியம் வளர்ச்சியுறவில்லையென்றால், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் அக்கால கட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பொதுவான அரசாங்கம் தேசியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் அமெரிக்க தேசியம் தோன்றியதை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். உள்நாட்டுப் போரில் ஒருமைப்பாட்டாளர்கள் வெற்றி பெற்றமையால் வடக்கு மாநிலங்களின் ஒன்றியம், தெற்கு மாநிலங்களின் ஒன்றியும், என்ற அமைப்புக்கள் உருவாக்கப்படாமல் நாம் இன்று காணுகின்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்கின்ற ஒரு பொது அரசாங்கம் நாடுமுழுவதையும் தொடர்ந்து ஆள நியமிக்கப்பட்டது. எனவே, தேசியத்தை உருவாக்கும் நிலை நிறுத்தவும் பொது அரசாங்கம் ஒரு முக்கிய ஆக்கக்கூறாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு தேசியத்தின் உணர்வுகள் பல ஆக்கக் கூறுகளால் நலமுடன் வளர்க்கப்படுகிறது. இவ்வாக்கக்கூறுகள் காலத்திற்கும், நாட்டிற்கு நாடும் வேறுபடுகிறது. ஆனால் தேசியம் என்பது உணர்வு, உணர்ச்சி அல்லது கூட்டுணர்வு போன்ற கருத்துக்கள் சம்பந்தப்பட்டமையால் அத்தேசியத்தைப் படைப்பதில் இயற்பியல் சார்ந்த ஆக்கக்கூறுகளைக் காட்டிலும் உளவியல் சார்ந்த ஆக்கக்கூறுகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

### 4.1.4. தேசியத்தின் பரிணாம வளர்ச்சி

நிலமானிய முறை செயல்பட்ட காலகட்டத்தில் மக்கள் நிலமானிய பிரபுகளுக்கு விசுவாசம் உடையவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் பிற்காலத்தில் ஆக்கிரமிப்பின் மூலம் அல்லது விவகாரத்தின் மூலம் பெரும் நிலப்பகுதிகள் அரசர்களின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டன. அக்காலத்தில், மக்கள் நாட்டிற்கு விசுவாசம் உடையவர்களாகச் செயல்படாமல், அரசர்களுக்கு விசவாசம் படைத்தவர்களாயச் செயல்பட்டனர். ஆனால் அரசன் ஒருமைப்பாட்டுச் சின்னமாக அளித்த காட்சி பதினாறாவது லூயி என்ற பிரெஞ்சு அரசனின் தலை துண்டிக்கப்பட்டதோடு மறைந்தது. அதற்கு பிறகு தற்கால தேசியம் தோன்றியது

விடுவிக்கும் தேசியம் (Liberating Nationalism) தற்கால தேசியம் முதலாவதாக பிரெஞ்சு நாட்டில் புரட்சிக்குப்பின் தோன்றியது. அங்கிருந்து பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் நாளடைவில் உலகின் பல பகுதிகளுக்கும் இது பரவியது. பிரெஞ்சுப் புரட்சியாளர்களால் பிரச்சாரம் செய்யப்பட்ட தேசியம் ஒரு பெரும் விடுவிக்கும் சக்தியாக காணப்பட்டது. தேசிய சிந்தனை அரசியல் ஜனநாயக சிந்தனைகளோடு இணைந்து செயல்பட

(குறிப்புக்கான இடம்)

ஆரம்பித்தது. 19வது நூற்றாண்டில் அந்நிய ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்கவும் அடக்கி ஆளும் சமூக பொருளாதார மற்றும் அரசாங்க அமைப்புக்களிலிருந்து தங்களை விடுவிக்கவும் உகந்த உணர்வுகளை பல்வேறான தேசியக் குழுக்களிடையே தேசியம் தூண்டியது. இவ்வாறு ஒரு கால கட்டத்தில் தேசியமும், விடுவிக்கும் முற்போக்கு எண்ணமும் ஒன்றோடொன்று இணைந்த செயல்பட்டது. இவ்வகை தேசியத்தின் முக்கிய ஆதரவாளர்கள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். நாடுகள் தொழில் மயமாக்கப்பட்ட அக்காலகட்டத்தில் நடுத்தர வகுப்பினர் சக்தி வாய்ந்த வகுப்பினராகத் திகழ்ந்தனர்.

வன்முறை தேசியம் (Militant Nationalism) : 19வது நூற்றாண்டின் இறுதியில் விடுவிக்கும் தேசியம் வன்முறைத் தேசியமாக உருப்பெற்றது. வாணிபப் போட்டி, குடியேற்றப் பகுதியை அடைதல், தொழில் முன்னேற்றம், இராணுவ மற்றும் கடற்படை மேம்பாடு போன்றவைகளால் நாடுகளிடையே போட்டிகள் ஏற்படும். அச்சுறுத்தும் ஒரு நிலை உருவாக்கப்பட்டது. தனி நபர்களுக்கு அதிக சுதந்திரம் வழங்குவதைக் காட்டிலும், தேசிய நலன் காக்க அரசு மக்களிடையே சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியது. இவ்வாறு கட்டுப்பாடுகளைச் செலுத்தும் அளவில் அமைந்த ஐரோப்பிய நாடுகளில் நிலவிய, வன்முறை சார்ந்த தேசியம் பல்லாண்டு காலம் நின்று நிலவவில்லை. இவ்வகை தேசியம் முதல் உலகப்போராய் இறுதியில் முடிவுற்றது.

முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த பொழுது, வெற்றி பெற்ற நாடுகள், உலகை மக்களாட்சிக்குத் தயாராக ஆக்க அப்போரை நடத்துவதாய்க் கூறினர். மேலும், வெற்றி பெற்ற நாடுகள் எல்லா நாடுகளின் தேசிய உணர்வுகளையும் மதிப்போம் என்று உறுதி கூறினார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொல்லை நிறைவேற்றவில்லை. முதல் உலகப்போருக்குப்பின் ஏகாதிபத்தியம் உருவெடுத்தது.

**ஏகாதிபத்திய தேசியம் :** (Totalitarian Nationalism) : விடுவிக்கும் தேசியம் வன்முறைத் தேசியமாக மாறி முடிவில் ஏகாதிபத்திய தேசியமாக உருப்பெற்றது. தங்களுடைய அரசை வலுமிக்க அரசாக மாற்றவும், பிற நாடுகளின் சவால்களைச் சமாளித்து வெளிநாட்டு அபாயங்களுக்கு ஈடுகொடுக்கும் சக்தியைப் பெறவும், ஏகாதிபத்திய தேசியம் தனிமனித உரிமைகளை அரசின் உரிமைக்கும் விருப்பத்திற்கும் அர்ப்பணித்தலை எடுத்தியம்பிய சார்லஸ் மாராஸ் ஏகாதிபத்திய தேசியத்தை "முழுமையான

தேசியம்" (Mationalism) என்றழைத்தார். "தேசிய கொள்கைகளை முழு அளவில் அடைய முயற்சித்தல், தேசிய ஒருமைப்பாட்டை முழு அளவில் பராமரித்தல், தேசிய அதிகாரத்தை நிலையாக அதிகரிக்க முனைதல் போன்றவை முழுமையான தேசியத்தின் முக்கிய சொற்றொடர்களாகும். ஏனென்றால் இராணுவ வலுவை இழந்தால் ஒரு நாடு வீழ்ச்சியுறும்" என்று ஹெய்ஸ் கூறியுள்ளார். இக்கால கட்டத்தில் பொருளாதார தேசியம் தோன்றியது. இது தேசிய பொருளாதாரத்தில் அதிக அளவிலான அரசுக் கட்டுப்பாட்டை எடுத்தியம்பியது. இவ்வாறு ஏகாதிபத்திய தேசியம் எழுச்சியுற்ற போது, தனிமனித வாழ்வில் எல்லா நிலைகளிலும் தேசிய விருப்பத்திற்கு அடிபணிந்து இயங்க ஆரம்பித்தது. தேசிய சுயநலன் மற்றும் செல்வாக்கு வளர்த்தல் ஆகிய கொள்கைகளை முழுமையான தேசியம் தன்னகத்தே கொண்டுள்ளது. "முழுமையான தேசியம் உணர்ச்சி நிறைந்த நாட்டுப் பற்றுற்கான அறைகூவல் விடுக்கின்றது. இது எடுத்தியம்பும் நாட்டுப்பற்று, அந்நியர் மேல் வெறுப்புணர்வை ஏற்படுத்துக்கின்றது. இதன் வளம் பெருக்கும் விருப்பம் நிலப்பரப்பிற்கான போட்டியைத் தோற்றுவிக்கின்றது. இது எடுத்துக்கூறும் தேசியச் சேவைக்கான தேசிய ஒற்றுமையை பாதுகாக்கும் பணியைக் குறிக்கின்றது." என்று ஹேய்ஸ் கூறியுள்ளார். முழுமையான தேசியத்திற்குரிய அறிகுறிகள் ஏகாதிபத்திய நாடுகளில் பெருமளவில் காணப்பட்டது. இன்றை உலகில் ஏறக்குறை எல்லா நாடுகளிலும் இதற்குரிய அறிகுறிகள் ஓரளவு காணப்படுகின்றன. சில நாடுகளில் அதிக அளவிலும் சில நாடுகளில் குறைந்த அள்விலும் இவ்வறிகுறிகள் தென்படுகின்றன. முதல் உலகப்போருக்குப்பின் பல நாடுகள் பொருளாதார தேசியக் கொள்கைகளைப் பின்பற்றியது. இது முறைமையான தேசியம் எழிச்சியுறவும், வளர்ச்சியுறவும் பொறுப்பாக அமைந்தது. 1919—ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏகாதிபத்திய அரசுகள் பல உலகின் பல பாகங்களில் எழுச்சியுள்ளன. இவ்வரசுகளின் எழுச்சி இவ்வகை தேசியம் வளர்ச்சியுற பெருந்துணை புரிந்தது.

**புதுவகை தேசியம் (New Nationalism):** விடுவிக்கும் தேசியம் இரண்டாவது போருக்குப்பின் தனது ஆற்றல் மிக்க செயற்பாட்டால் உலகில் பல தேசிய அரசுகளை தோற்றுவித்து. இக்காலக் கட்டத்தில் பொதுவுடைமைக் கோட்பாடும் சில விளைவுகளை தேசியத்தில் ஏற்படுத்தியது.

ஐரோப்பாவில் புதுவகை தேசியம்: தற்கால தேசியம் முதலாவது ஐரோப்பாவில் தோன்றியது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அங்கு

(குறிப்புக்கான இடம்)

தேசிய உணர்வு தீவிரமாகக் காணப்பட்டது. பல தீவிர தேசியவாதிகளின் தேசிய உணர்வுகளை ஓரளவு இரண்டு உலகப்போர்களும் மிதப்படுத்தியுள்ளது. பழைய விரோதங்களும் வெறுப்புகளும் ஓரளவு இன்று மறைந்துள்ளது. பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான விருப்பம் இன்று அதிக அளவில் வளர்ந்து வருகின்றது வளர்ந்து வரும் பிராந்திய ஒத்துழைப்பும் மேம்பட்ட தேசிய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமையும், ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ள குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும். இந்நிகழ்ச்சிகள் ஐரோப்பாவில் தேசிய உணர்வுகள் குறைந்து வருதலைப் பறை சாற்றுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் ஒரு நாள் நிச்சயமாக ஐக்கிய ஐரோப்பா உருவாகும்.

**மேற்கத்திய உலகைச் சாராத நாடுகளில் புதுவகை தேசியம்**

தேசியத்தின் தீவிரம் ஐரோப்பிய நாடுகளில் குறைந்தாலும் புதிதாக சுதந்திரம் பெற்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இவ்வுணர்வு தீவிரமாக செயல்படுகிறது. இந்நாடுகளில் நடைபெற்ற தேசியப் போராட்டங்கள் தேசியத்திற்கான பெரிய தூண்டுதலாக அமைந்தது. இன்று இந்நாடுகள் தங்களை முந்நாள் ஆண்டோர்களுடன் ஒத்த சமநிலையை அடையும் போட்டிக்குத் தேவையான வலுவைப் பெற முயற்சிக்கின்றன. சமூகம் மற்றும் அரசியலில் நிலையான தன்மையைக் காக்க இந்நாடுகளில் தேசிய உணர்வுகள் துணைபுரிகின்றன. எவ்வாறெனினும், தேசியத்தால் சில முக்கிய பிரச்சனைகளுக்கு இந்நாடுகளால் தீர்வு காண முடியவில்லை.

புது வகை தேசியத்தின் குணநலன்கள்: பொது கருத்திசைவைத் தோற்றுவிப்பதில் புதிதாக சுதந்திரம் பெற்ற பல நாடுகளில் குறைபாடுகள் காணப்படுவதால் அவை பலகீனமான நாடுகளாக காட்சியளிக்கின்றன. இந்நாடுகள் போதுமான அளவு எடுத்துக்கூறுகின்ற அளவிலான பழைய சிறப்புக்களை கொண்டிருக்கவில்லை. பொதுவாக பழம் பெருமைகள் தீவிர தேசியத்தை வளர்க்க உதவும் அதேநேரத்தில், வளமிக்க கலாச்சார மற்றும் அறிவு செறிந்த பாரம்பரியம் கொண்ட நாடுகள், குறைந்த உணர்வுகளை நன்முறையில் வளர்க்கலாம். பல ஆப்பிரிக்கா நாடுகள் முதல் வகையைச் சார்ந்தது. எடுத்தியம்புகின்ற அளவிலான பழைய பராமபரியங்களை இந்நாடுகள் கொண்டிருக்கவில்லை. எனவே, இந்நாடுகளில் ஆக்கப்பூர்வமான அரசியல் காணப்படுகிறது.

புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் தங்களை முன்பு ஆண்டோர்களின் மேல் பயங்கர வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது இன்னொரு குறிப்பிடத்தக்க குணநலனாகும். ஆனால் இந்நாடுகள் தங்களுடைய அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்களை அமைப்பதில், தங்களுடைய சுய தேசிய அமைப்பு முறைகளைப் பின்பற்றாமல் தங்களை ஆண்டார்கள் பின்பற்றிய அமைப்பு முறைகளைப்

(குறிப்புக்கான இடம்)

பின்பற்றினர். சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குள் பல ஆசிய ஆப்பிரிக்கா நாடுகள், ஆதிக்க ஆட்சி அமைப்புக்களைத் திரும்பவும் தங்களுடைய நாடுகளில் உருவாகியுள்ளன. இவ்வாறு தேசியம் இந்நாடுகளுக்குச் சுதந்திரத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் அளித்தாலும் தனிநபர் சுதந்திரத்திற்கும், மக்களாட்சி தத்துவங்களுக்கும் தேவையான பாதுகாப்பை அளிக்கவில்லை.

புதுவகை தேசியம் ஆதிக்க ஆட்சியை தீவிரமாக எதிர்க்கும் ஒன்றாக காணப்படுகிறது. புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் ஒருங்கிணைந்து வர்க்க மேம்பாட்டுக் கொள்கையை எதிர்க்கின்றது. அவ்வாறான பொருளாதாரத்தை விரைவாக மேம்படுத்த முயற்சிக்கின்றது. அவ்வாறன பொருளாதார மேம்பாடு ஏற்பட்டால், வளர்ச்சியுற்ற நாடுகளுக்கு இணையாக இந்நாடுகளும் திகழும்.

ஐக்கிய நாட்டு அவையில் அங்கத்தினராக அமர்வது பெருமைக்குரிய ஒன்று என்றும் தங்களுடையை இறைமையை நிலைநாட்டும் ஒன்று என்றும் சமத்துவத்தைத் தோற்றுவிக்கும் ஒன்று என்றும், இந்நாடுகள் கருதியமையால் உலக சபைகளில் அங்கத்துவம் பெறுவதை புதுவகைத் தேசியம் ஒரு முக்கிய குணநலனாகக் கொண்டுள்ளது. பெருவாரியான ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் கிழக்கு – மேற்கு போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொள்ளாமல் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுவது இன்னொரு முக்கிய குணநலனாகும். அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுவது தங்கள் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்ற அச்சம் இந்நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தேசியமும் பொதுவுடைமையும் : இரண்டாம் உலகப் போருக்குப் பிறப்பட்ட காலத்தில் பொதுவுடைமை ஆற்றல்மிக்க ஒரு சக்தியாக திகழ்கிறது. பொதுவுடைமைக் கோட்பாடு பன்னாட்டு தேசியத்தில் நம்பிக்கை கொண்டுள்ளது முடிவில் அரசு மறைத்து போதலை மார்க்ஸிய கோட்பாடு போதிக்கிறது. ஆகையால் பொதுவுடைமை, தேசியத்தை எதிர்க்கும் ஒரு கோட்பாடாக திகழ்கிறது. எனவே பொதுவுடைமை வளர்ச்சியுறும் போது தேசியம் பலகீனமான தன்மையை எய்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தேசியம் வீழ்ச்சியுறாமல் புதுப்பொலிவோடு ஆற்றல் மிகுந்து காணப்படுகிறது. பொதுவுடைமை நாடுகளிலும் தேசியத்தின் செயற்பாட்டைக் காணமுடிகிறது.

எவ்வாறெனினும், வளர்ந்து வரும் புதிதாக சுந்திரம் பெற்ற நாடுகளில் தேசியம் ஆதிக்க ஆட்சியை எதிர்க்கும் ஒரு முற்போக்கு சக்தியாக செயல்படுகிறது. எல்லா நாடுகளுக்கிடையே ஒரு சமத்துவம் உருவாகாத வரையில் வலுப்பெற்ற நாடுகளை வலுமிக்க நாடுகள் சுரண்டாமல் தடுக்கும் சக்தியாக தேசியம் திகழும்.

(குறிப்புக்கான இடம்)

### 4.1.5 தேசியத்தின் நன்மைகளும், தீமைகளும்

நன்மைகள்: தேசியம் பின்வரும் நன்மைகளைக் கொண்டுள்ளது.

1) தேசியம் உலகநாடுகளுக்கிடையே சமத்துவத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றது. தனிப்பட்ட முறையில் தேசிய நிலப்பரப்போடு தங்களை இணைத்துக்கொள்ளும் உணர்வை மக்களிடையே தோற்றுவிக்கிறது. ஆகையால் இவை அனைத்தும் உலக நாடுகளுக்கிடையே சமத்துவத்தைத் தோற்றுவிக்கின்றது.

2) கலாச்சார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான ஆற்றல் மிக்க சக்திகளை தேசியம் வழங்குகின்றது.

3) அந்நிய ஆட்சியை துாக்கி எறிய முயற்சிக்கும் நாடுகளுக்கு நம்பிக்கையை தேசியம் வழங்குகிறது. இவ்வுண்மையை இந்திய சுதந்திர போராட்டம் தெளிவாக்குகின்றது.

**தீமைகள்:** தேசியத்தால் தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. "தேசியம் சாபமா அல்லது ஆசீர்வாதமா" (Nationalism: Curse of Belssing) என்று தனது கட்டுரையின் கடைசி அத்தியாத்தில் ஹேய்ஸ் தேசியம் ஒரு சாபமே என்று உறுதியோடு எடுத்தியம்புகின்றார். "வலிமை மற்றும் திறமை போன்றவற்றால் நடத்தப்படும் பெரும் முயற்சியாக தேசியம் காணப்பட்டாலும், இது பெரிய ஒரு துன்பமாகக் கருதப்படுகிறது. இது மனித சக்தியை இழக்க வைப்பதோடு, மனிதனின் ஆக்கப்பூர்வமான மற்றும் சுய தியாக தன்மைகளை முற்றிலுமாக அழித்து விடுகின்றது" என்று இந்திப் புலவரும் தத்துவமேதையுமான ரவீந்திரநாத் தாகூர் கூறியுள்ளார். கர்னால்டு டாயின்பி தனது "A Study of History" என்ற புத்தகத்தில் தேசிய அரசு மற்றும் தேசியம் என்ற போர்வையில் கடந்த மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகள் நடந்து வந்துள்ள தீமைகளைப் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார்.

**தேசியத்தில் காணப்படும் பிற தீமைகளைப் பின்கூறப்பட்டுள்ள அளவில் விவாதிக்கலாம்**

1) மனித சுதந்திரத்திற்காகவும், உலக சமாதானத்திற்காகவும் உலகை ஒரு ஒழுங்கமைப்பில் கொண்டுவர எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றமைக்கு முழுப்பொறுப்பு தேசியம் ஆகும். இவ்வுண்மை சர்வதேச சங்கம் தோல்வியுற்றமையில் இருந்து புலனாகிறது.

2) உலக அரசாங்கம் நிறுவுவதில் தேசியம் ஒரு தடையாக திகழ்கிறது.

(குறிப்புக்கான இடம்)

3) பெரிய பன்னாட்டுப் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக பிரச்சனைகளைத் தீர்வு செய்வதில் தேசியம் முட்டுக்கட்டையாக நிற்கின்றது.

4) போர் உருவாகத் துணைபுரியும் முக்கிய சக்தியாக இதனைப் பல எழுத்தாளரும் கருதுகின்றனர்.

தேசியம் நன்மை பயக்கும் ஒன்றா அல்லது தீமை பயக்கும் ஒன்றா என்பது விவாதத்திற்குரிய ஒன்று ஆனால், அது நன்மைகளையும், தீமைகளையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும், இன்றய உலகில் உயிருள்ள ஒரு சக்தியாக திகழ்கிறது. தேசியம் தோன்றி நேரத்தில் இது சுதந்திரம் மற்றும் மக்களாச்சி ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு திகழ்ந்தது. இன்றும், இது விடுதலை அளிக்கும் சக்தியாக உலகின் பல பகுதிகளில் காட்சியளிக்கின்றது. ஆனால், தேசியம் தீவிரமானதாக அல்லது ஏகாதிபத்திய தன்மை படைத்ததாக திகழ்ந்தால், மனித மற்றும் சமூக சிறப்பியல்புகளை சிதறடிக்கும் தன்மையோடு காணப்படும் முழுமையான போரைத் தோற்றுவித்துப் பெரும் அழிவை ஏற்படுத்தும் காரணமாகவும் சில நேரங்களில் தேசியம் அமையும்.

## இரண்டாம் உலகப் போருக்குப்பின் எழுந்த உடன்படிக்கைளும் ஒப்பந்தங்களும் (Pacts and alliances)

### 4.1.6. புதிய பிராந்தியப்பற்று

தற்காலப் பன்னாட்டு உறவில் ஒருமைப்பாட்டிற்காக உலகில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மிக முக்கியமான நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன. இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலக ஒருமைப்பாட்டின் அவசியத்தை, உலகின் எல்லாப் பகுதியில் வாழ்ந்த மக்களும் உணர்ந்தனர். எனவே ஒருமைப்பாட்டிற்கான பல பரிசோதனைகள் ஐரோப்பா, ஆசியா மற்றும் பல உரகப் பகுதிகளில் நடந்தேறின. ஒருமைப்பாட்டிற்காக பல உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் செய்து கொள்ளப்பட்டன. இப்பாடத்தில் உலகில் செய்து கொள்ளப்பட்டு, இயங்கி வருகின்ற ஒரு சில முக்கிய உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் நாம் பகுப்பாய்வு செய்யலாம். உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் செய்து முடிக்க சில முக்கிய ஆக்கக்கூறுகள் பொறுப்பேற்கின்றன. பின் கூறப்பட்டுள்ளவை அவ்வாக்கக் கூறுகளாகும்.

i) வல்லரசுகள் எண்ணற்ற வலிமை மிக்க அணு ஆயுதங்களையும், விண்வெளிக் கலங்களையும் பெற்றிருக்கின்றன. எனவே உலகின் வருங்காலம் வல்லரசுகளின் கையில் அமைந்திருப்பதால் எண்ணப்படுகிறது. இவ்வெண்ணம்

(குறிப்புக்கான இடம்)

உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் உருவாக்கிய ஒரு முக்கிய கூறாகக் கருதப்படுகிறது.

ii) இரண்டாம் உலகப்போருக்குப்பின் எழுந்த சமாதானத்திற்கான விருப்பம் தற்காலத்தில் பல உடன்படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் ஏற்படுத்திய மற்றொரு ஆக்கக்கூறாகும்.

iii) மூன்றாவதாக, பொதுவுடைமை உலகம் தனது இராணுவ மற்றும் நிலப்பரப்பை விரிவாக்க எடுத்த முயற்சிகள், பிராந்திய குழுக்கள் உருவாக உதவிய இன்னொரு முக்கிய ஆக்கக்கூறு என்று அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

iv) பெரிய நிலப்பரப்பில் பெரிய சந்தைகளை நிறுவி பொருளாதாரத்தை வளர்க்கலாம் என்ற எண்ணம் பல நாட்டு மக்களிடையே ஏற்பட்டதால், தற்கால உலகில் பல ஒப்பந்தங்களின் வாயிலாக அந்நாடுள் பிராந்திய குழுக்களை அமைத்துக் கொண்டனர்.

## அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனம் (The Organisation of American States _OAS)

1862—ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க நாடுகளுக்கிடையே ஒரு முறையமைவை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளளப்பட்டன. அப்போது சைமன் பொலிவர் என்பார் அமரிக்க நாடுகளின் மாநாட்டை பனாமா என்ற இடத்தில் கூட்டினார். 1889—90—ஆம் ஆண்டில் அமெரிக்க நாடுகளுக்கிடையோன மாநாடு வாஷிங்டனில் நடந்தேறியது. அதிலிருந்து மேற்கத்திய நாடுகளின் சமுதாய அமைப்பைப் பற்றிய கருத்துக்களை அமரிக்க ஐக்கிய நாடுகள் தீவிரமாக எடுத்துரைத்து வந்துது. முதலாவது அரசியல் சாதாரண காரியங்களில் அமெரிக்க நாடுகளிடையே ஒத்துழைப்பு ஏற்பட்டது. ஆனால், மெதுவாக சமூக உணர்வு உருவெடுத்தது. அதனடிப்படையில் ஒரு நிரந்தர செயலகம் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா நாடுகளின் ஒருமைப்பாட்டை (The Plan American Union) இரண்டாம் உலகப் போர் துரிதப்படுத்தியது. நாளடைவில் அரசியல் காரியங்களில் ஓரளவு ஒத்துழைப்பு உருவாகியது.

1954—ஆம் ஆண்டு போர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும், சமாதான காரியங்களையும் விவாதிக்க மெக்சிகோவில் அமெரிக்க நாடுகளின் மாநாடு நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் பிராந்திய ஏற்பாடுகளைத் திட்டமாகவும், விரிவாகவும் நிறுவ, தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டன. இதைத் தொடர்ந்து இரண்டாவது மாநாடு பகோட்டாவில்1948—ஆம் ஆண்டு நடந்நது. 1947—ஆம் ஆண்டு செய்யப்பட்ட ரியோ உடன்படிக்கையின் செயற்பாட்டிற்கான் வழிவகையை இம்மாநாடு வகுத்தத்தோடு அமெரிக்க நாடுகளின் நிறுவனத்திற்கான (OAS)

சாசனத்தையும் அளித்தது. அவ்வமைப்பில் 21 நாடுகள் சேர்ந்தது கொண்டன.

**ரியோ உடன்படிக்கை (The Rio Trety):**

Riode Janeiro என்ற இடத்தில் வைத்து ரியோ உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. "எதாவது ஒரு அமெரிக்க நாட்டின் மீது இன்னொரு நாடு தாக்குதல் நடத்தினால் அத்தாக்குதலை மற்ற அமெரிக்க நாடுகள் தங்கள் அத்தனைபேர் மீதும் நடத்திய தாக்குதலாகக் கருத வேண்டும்" என்று இவ்வுடன்படிக்கை கூறியது. அவ்வாறாக ஐக்கிய நாட்டுச் சபையின் சாசனத்தின் 10—வது விதியில் கூறப்பட்டுள்ளபடி முதலாவதாக கூட்டுப் பாதுகாப்பை ரியோ உன்படிக்கை ஏற்படுத்தியது. 1949—ஆம் ஆண்டு வட அட்லாண்டிக் உடன்படிக்கை உருவாக இது வழிமுறை வகுத்தளித்தது. "அமெரிக்க பிராந்திய சமூகம்" என்றழைக்கப்படும் ரியோ உடன்படிக்கை மேற்கத்திய உலகில் ஒரு பிராந்திய பாதுகாப்பு உடன்பாட்டை ஏற்படுத்தியது. அமெரிக்க கண்டம் மற்றும் கிரின்லாந்து பகுதிகளில் ரியோ உடன்படிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்கியது.

1989—ஆம் ஆண்டு பகோட்டா மாநாட்டில் அமெரிக்க நாடுகளின் நிறுவனத்திறன்கான சாசனம் நிறைவேற்றப்பட்டது. இச்சாசனம் ரியோ உடன்படிக்கையின் நோக்கு, எல்லையை விரிவாக்கியது. இது சமாதனம், பாதுகாப்பு போன்ற காரியங்களிலிருந்து பொருளாதார முன்னேற்றம், கலாச்சார வளர்ச்சி போன்ற காரியங்கள் வரை கவனித்து முதல் முறையாக அமெரிக்க கண்டத்தில் ஒரு பிராந்திய ஏற்பாட்டை உருவாக்கியது.

அமெரிக்கா நாடுகளின் நிறுவனத்தின் முதலாவது விதி இவ்வமைப்பை ஐக்கிய நாட்டு அமைப்பின் உள்ளடங்கிய பிராந்திய அமைப்பாக குறிப்பிடுகிறது. இந்த அமைப்பில் எந்த அமெரிக்க நாடும் தன்னை அங்கத்தினராக இணைத்துக் கொள்ளலாம். இதனுடைய அதிகார எல்லை மற்றும் தோற்றம் முதலியவற்றில் இது ஐக்கிய நாட்டுச் சபையை ஒத்திருந்தது.

அமெரிக்க நாடுகளின் நிறுவன அமைப்பின் பணிகள் ஐந்து முக்கிய செயற்பிரிவுகளின் வாயிலாக நடந்தேறுகிறது. அவை : (i) அமெரிக்க நாடுகளுக்கிடையேயான மாநாடு (The inter American Conference) (ii) வெளிநாட்டு அமைச்சர்களைக் கலந்தாலோசிக்கும் கூட்டம் (iii) மன்றம் (Council ) (iv) பான் அமெரிக்கப் பேரவை (Pan American Union) (iv) அமைப்பு சம்பந்தப்பட்ட விசேட மாநாடுகள்.

(குறிப்புக்கான இடம்)

அமைப்பின் மன்றம் ஐக்கிய நாட்டுச் சபையின் பொது அசெம்பெளியை ஒத்திருந்தது விவாதங்களை நடத்தும் ஒரு அவையாக இது காணப்பட்டது. அமைப்பின் முக்கிய செயற்பிரிவாக இது கருதப்பட்டது. ஐந்து ஆண்டிற்கொருமுறை மாநாடு கூடியது. சபை இருபத்தி ஒரு உறுப்பினர்களைக் கொண்டது. ஓர் உறுப்பினர் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இச்சபையை ஐக்கிய நாட்டுச் சபையின் பாதுகாப்புச் சபையோடு ஒப்பிடலாம். இச்சபை நிரந்தர செயலாக்கப் பிரிவாக இருக்கிறது. அரசியலில் ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வை செய்யும் பணிகளை இச்சபை ஆற்றுகின்றது. அத்தனையும் வெளிநாட்டு அமைச்சர்களின் கலந்தாலோசிக்கும் கூட்டத்தில் வைத்து முடிவு செய்யப்படுகிறது. பிற நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்கவும் இணக்குவிக்கவும் உகந்த வழிமுறைகள் வகுக்கின்றது. அவ்வழிமுறைகளில் தீர்வு ஏற்படாவிடில் தூதராக மற்றும் பொருளாதார தடைகள் விதிப்பதின் மூலம் தீர்வு காண வழி வகுத்துள்ளது. கடைசியாக ஒழுங்கை நிலை நிறுத்த வலிமையைப் பயன்படுத்தலை சிபாரிசு செய்துள்ளது.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பு நடக்கும்போது, நாடுகள் அமெரிக்க நாடுகளின் நிறுவனத்திடம் முறையிட வேண்டும். அவ்வாறு முறையீடு செய்தால் ஆக்கிரமிப்பைச் சாமாளிக்க உகந்த பொது கொள்கையை அவ்வமைப்பு வழங்கும். ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு நாடும் தான் விரும்பிய அளவில் பாதிக்கப்பட்ட நாட்டிற்கு உதவும் உரிமையைப் பெற்றுள்ளது. பான் அமெரிக்க நாடுகளுக்கிடையேயான பொருளாதார மற்றும் சமூக மன்றம், கலாச்சார, மன்றம் நீதி பரிபாலன் சட்ட வல்லுநர் மன்றம் போன்றவைகளும் அமைக்கப்பட்ள்ளன. இவ்வமைப்புகள், அமரிக்க நாடுகளின் நிறுவனத்தின் பணிகளை ஆய்வு செய்யும் போது இரு காரியங்கள் புலனாகிறது. ஒரு வகையில் நோக்கும் போது பிரச்சனைகளைத் தீர்க்கும் அமைப்பாக இது உள்ளது. இன்னொரு வகையில் இது அரசியல் ஒருமைப்பாட்டிற்கு முயற்சிப்பது புலனாகிறது.

எவ்வாறெனினும் சிறிய லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்க நாடுகளின் நிறுவனத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்க மேம்பாட்டை தடைசெய்ய உகந்த அமைப்பாக கருதுகின்றன. மேலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சிறிய நாடுகளுடைய காரியங்களில் தலையிடாமல் ஏராளமான பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவிகளை இந்த நிறுவனத்தின் மூலம் வழங்குவதை, சிறிய நாடுகள் எதிர்பார்கின்றன. அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்த

அமைப்பை கிழக்கு—மேற்குப் போராட்டத்திற்குப் பயன்படும் ஒரு முக்கிய பிராந்திய ஏற்பாடாகக் கருதுகின்றது.

அமெரிக்க நாடுகளின் நிறுவனம் உலகில் வெற்றிகரமாக் செயல்படும் பிராந்திய ஏற்பாடாகக் கருதப்படுகின்றது. இதனால் மட்டுமே ஒரு பெரிய நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு நிலையாக உள்நாட்டுப் பாதுகாப்பை அளிக்க இயலும்.

### 4.1.7.ஐரோப்பாவில் பிராந்திய ஏற்பாடுகள்

ஐரோப்பிய சமுதாயங்கள் (The European Communities) : ஒரு காலத்தில் அதிகாரமிக்க பகுதியாகக் கருதப்பட்ட ஐரோப்பா பிற்காலத்தில் அந்த நிலையில் இல்லை. அதனுடைய அதிகாரத்தில் சரிவு ஏற்பட ஆரம்பித்தது. இரண்டு உலகப் போர்களும் ஐரோப்பாவின் அதிகாரத்தை உலக அரங்கில் வெகுவாகக் குறைத்தது. தன்னுடைய சொந்த பொருளாதார மற்றும் அரசியல் பலவீனம், ஒற்றுமையின்மை, வலுமிக்க சோவியத் ரக்ஷ்யாவின் தொல்லை ஆகிய பிரச்சனைகளினால் மேற்கு ஐரோப்பா அட்லாண்டிக்கைக் கடந்து அமரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியை எதிர் நோக்கியது. தனது பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தை கூட்டு முயற்சியினால் பெருக்க, ஐரோப்பிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பெனிலக்ஸ் ஒன்றியம் (The Benelux Union) “Benelux” என்ற பதம் மூன்று நாடுகளின் பெயர்களை அப்படையாகக் கொண்டு உருவாகக்ப்பட்டது. அந்த நாடுகள் பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் என்பவையாகும். இம்மூன்று நாடுகளும் இணைந்து ஒரு சுங்க ஒன்றியத்தை ஏற்படுத்தின. ஒன்றியம் பல பன்னாட்டு பிரச்சனைகளில் இணைந்து செயல்பட ஆரம்பித்தது. ஆதிகாரப்பூர்வமாக ஒருமைப்பாட்டிற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள் எடுத்த முதலாவது முயற்சியாக வெனிலக்ஸ் ஒன்றியம் கருதப்படுகிறது. மேலும் பல ஒருமைப்பாட்டு அமைப்புகளுக்கும் இவ்வொன்றியம் வழி வகுத்தது என்று கூறலாம். சுங்க ஒன்றியம் அமைக்கப்பட்டாலும், அதைத் தொடர்ந்து அமைக்க எண்ணிய பொருளாதார ஒன்றியம் இன்னும் திட்ட நிலையிலேயே இருக்கிறது.

அமெரிக்காவிடமிருந்து உதவி பெற்ற பதினாறு ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் கலந்தாலோசிக்க ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்தை ஆரம்பித்தன. இந்நிறுவனத்தின் மூலம் போரினால் ஏற்பட்ட சிதைவுளிலிருந்து தங்களை விடுவிக்க இந்நாடுகள் இணைந்து உகந்த திட்டங்களைத் தீட்டி உழைத்தனர். ஐரோப்பிய பொருளாதா ஒத்துழைப்பை உருவாக்க உகந்த வழிமுறையை இவ்வமைப்பு தோற்றுவிக்கும் என்றும் நாடுகளுக்கிடையில் முன்னேற்றத்திற்குகந்த கலந்தாலோசனைகளுக்கு ஏற்பாடு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

(குறிப்புக்கான இடம்)

ஐரோப்பிய பணம் செலுத்தும் ஒன்றியம் (European Payments Union) : மார்க்ஷல் திட்டத்தில் பங்கேற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஐரோப்பிய பணம் செலுத்தும் ஒன்றியத்தின் அங்கத்தினர்களாக கருதப்பட்னர். 1950—ஆம் ஆண்டு இது உருவாக்கப்பட்டது. ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு நிறுவன செயல்பாட்டிற்கு இவ்வமைப்பு உறுதுணையாய் இருந்தது. இதில் அங்கம் வகித்த எல்லா நாடுகளின் மைய வங்கிகளும் இதில் அங்கத்தினாக இருந்தன. எனவே நாடுகள் தங்களுக்கிடையே உள்ள கணக்குகளை இவ்வமைப்பின் மூலம் தீர்த்துக் கொண்டன.

அறுவர் சமுதாயம் (The Community of the Six) : பிரான்சு, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய ஆறுநாடுகளும் ஒருங்கிணைந்து இவ்வமைப்பை உருவாக்கினர். பல காரியங்களுக்காக ஒத்துழைப்பை உருவாக்க அறுவர் சமுதாயம் தமக்குள் மூன்று முக்கிய பிராந்திய அமைப்புக்களை உருவாக்கியது.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாய அமைப்பு (European Coal and Steel Community ECSC) நீண்ட விவாதங்களுக்குப்பின் மேற்கூறிய ஆறுநாடுகளும் ஒரு ஒப்பந்தத்தில் 1951—ஆம் ஆண்டு ஏப்பரல் மாதம் 18—ஆம் நாள் கையெழுத்திட்டு, அதனடிப்படையில் இச்சமுதாய அமைப்பை உருவாகினர். இவ்வமைப்பை அங்கத்திர்களின் வளத்தைப் பொதுவாகச் சேமித்து வைத்தது.

இவ்வமைப்பின் பணிகளை ஆற்ற நான்கு செயற் பிரிவுகள் உள்ளன. அவை (i) பொதுச் சபை : ஆலோசனை கூறும் அதிகாரம் படைத்த இதன் அங்தத்தினர்கள் அங்கம் வகிக்கும் நாடுகளின் பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் (ii) அமைச்சரவை, கொள்கை முடிவெடுக்க பல அரசாங்க பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு : (iii) நிர்வாக உயர் அதிகார அமைப்பு (iv) நீதி பரிபாலன மன்றம் (தகராறுகளையும் ஒப்பந்த மீறுதல்களையும் தீர்வு செய்யும் )

நிர்வாக உயர் அதிகார அமைப்பு இயக்குநர் குழுவை போன்ற அமைப்பாகம். இவ்வமைப்பில் ஒன்பது அய்கத்தினர்கள் உள்ளனர். அவர்கள் குறிப்பிடத்தக்க அதிகாரம் படைத்தவர்களாய்த் திகழ்ந்தனர். நிலக்கரி மற்றும் உருக்கு ஆகியவற்றின் உற்பத்தி விகிதம், விலைபட்டியல், சந்தை நிலவரம் போன்றவற்றைப் பெருவாரி வாக்குகளின் மூலம் முடிவெடுத்து, நிர்ணயித்து ஆறு அங்க நாடுகளிலும் செயல்படுத்துவது நிர்வாக உயர் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன. இவ்வமைப்பின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அங்கத்தினர்கள் தங்கள் நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுகின்றனர்,

பொதுச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் பொறுப்புடையவர்களாகச் செயல்படுகின்றனர்.

நிலக்கரி மற்றும் உருக்காலைக்காக ஆறு தேச சந்தையை ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாயம் தோற்றுவித்தது. இவ்வமைப்பில் பங்கேற்ற நாடுகள் கவனமாக குறிக்கோளை அடைந்து பயனடைய வேண்டி ஒப்பந்தத்தின் வாயிலாக தங்கள் இறைமையின் ஒரு பகுதியை மேம்பட்ட இந்த ஆறு தேசமடங்கிய அமைப்பிடம் ஒப்படைத்தனர். எனவே இவ்வமைப்பு மேம்பட்ட அதிதாரம் படைத்ததாய்த் திகழ்கிறது.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் (the European Economic Community – EEC) ஒரு பொதுச் சந்தை உருவாக்குவதை ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. ரோம் ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டது. இது 1958—ஆம் ஆண்டு ஜனவர் மாதம் முதல் தேதி முதல் செயல்பட ஆரம்பித்தது. சிறிய ஐரோப்பா (Little Europe) என்றழைக்கப்படும் ஆறு நாடுகள் அடங்கிய பகுதியல் வாடும் ஏறக்குறைய 170 மில்லியன் மக்களுக்ககாக இது கட்டுப்பாடற்ற சந்தையை உருவாக்கியது. அவ்வமைப்பு பதினேழு ஆண்டுகளுக்கு அங்கத்தினர்களிடையே எவ்வித வரி தடைகளும் விகித வரையறைகளும் இல்லாமல் செய்தது. இந்நடவடிக்கை இறக்குமதியில் ஒரு சீரான வரி விதிப்பைக் கடைபிடிக்க வழி முதலீடு, பொருட்கள் பொருட்கள் போன்றவை இடம் பெயர இவ்வமைப்பு உதவி பரிந்தது. சமுதாய கெர்கைகளை சீரமைக்கவும், சமூகப் பாதுகாப்ப குறிக்கோளை அடையவும் ஐரோப்பிய சமூக நிதி உருவாக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டது. ஐரோப்பிய முதலீட்டு வங்கியை உருவாக்க தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இச்சமுதாய அமைப்பிற்குட்பட்ட பொருளாதாரத்தில் பின் தங்கிய பகுதிகளை முன்னேற்ற ஒரு வளர்ச்சிகான நிதி அமைச்கம் முயற்சிகள் எடுக்கப்பட்டன. பொறுப்பாட்சி நிறுவனங்கள் ஒழிக்கப்பட்டன. ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் அமைச்சரவை மூலமும், பாராளுமன்றம் மூலமம் இயக்கப்பட்டது. இந்த இரு அமைப்பக்களும் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாயம், ஐரோப்பிய பொருளாதார சமுதாயம், யூராட்டம் ஆகிய மூன்றையும் இயக்குகின்றன. ஐரோப்பிய பாராளுமன்றம் இந்த மூன்று அமைப்புகளையும் மேற்பார்வை செய்து, கட்டுப்படுத்துகிறது. அந்த நாடுகளின் அரசாங்களுக்கிடையேயான தொட்புகளை அமைச்சரவை பரிபாலக்கிறது. ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமுதாய அமைப்பில் நிர்வாக உயர் அகிகாரம் புரிந்த பணிகளை ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தில் பிரஸ்ஸெல்ஸ் என்ற இடத்தில் அமைந்திருக்கும் இணையம் ஆற்றுகிறது.

(குறிப்புக்கான இடம்)

**ஐரோப்பிய கட்டுபாடற்ற வாணிப சங்கம்** (European Free Trade Association – EFTA) : பிற மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவும் பொருளாதார பிரச்சனைகளை எதிர்த்துச் செயல்பட அறுவர் சமுதாயத்தில் சேராத ஆஸ்திரியா, டென்மார்க், நார்வே, போர்ச்சுக்கல், சுவீடன், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து ஆகிய ஏழு நாடுகள் ஒருங்கிணைந்து 1959—ஆம் ஆண்டு ஐரோப்பிய கட்டுபாடற்ற வாணிப சங்கத்தை நிறுவினர், இவ்வமைப்பு எழுவர் அல்லது வெளியிலுள்ள "எழுவர்" என்றும் அழைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி, வியாபாரத்தில் நியாயமான போட்டி, வாணிப இடர்பாடுகளை நீக்குதல் போன்ற காரியங்களுக்காக இவ்வேழு நாடுகளும் ஸ்டாக்காம் என்ற இடத்தில் ஒரு உடன்பாட்டில் கையெடுத்திட்டனர். இச்சங்கம் அமைக்கப்பட்ட பிறகு ஐரோப்பாவில் வாணிபம் புரிந்த நாடுகள் போட்டியிடும் இரு பிரிவாகப் புரிந்து செயல்பட ஆரம்பித்தன. இவ்விரு பிரிவினரின் வேறுபட்ட கருத்துக்களை ஒருங்கிணக்கவில்லையெனில் ஐரோப்பாவின் பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் சீர்குலையலாம். பல காரணங்களை முன்னிட்டு இங்கிலாந்து ஐரோப்பிய பொதுச் சந்தையில் அங்கத்துவம் பெற விண்ணப்பித்தது. ஆனால் பிரான்சின் எதிர்ப்பினால் இங்கிலாந்தால் பொதுச் சந்தை அமைப்பில் அங்கத்துவம் பெற முடியவில்லை.

**யூராட்டம்** (Eurtom) : ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயத்தைப் போன்ற ஐரோப்பிய அணுசக்தி இணையம் (European Atomic Energy Commission) அல்லது யூராட்டம் ரோம் உடன்படிக்கையின் வாயிலாக ஆறு நாட்டுச் சமுதாயத்தில் அணுசக்தியை வளர்த்து முன்னேற உருவாக்கப்பட்டது. மற்ற இரு அமைப்புகளைப் போன்று நிறுவன அமைப்பையும் கட்டுப்பாட்டுத் திறனையும் கொண்டு அவ்விணையும் செயல்படுகிறது. கூட்டு ஆராய்ச்சி, ஆணு ஆலை அமைத்தல், அணுசக்தி நிபுணர் பரிமாற்றம் போன்றவைகளையும் யூராட்டம் திறம்பட நடத்துகிறது. அங்கத்தினர்களிடையே கூட்டு முயற்சியை உருவாக்கி, மேற்பார்வை செய்து அணுசக்தி வளர்ச்சிக்கு யூராட்டம் துணைபுரிகின்றது. அணுசக்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணம் போன்றவற்றைப் பெற கட்டுப்பாடற்ற பொதுச் சந்தையை இது தோற்றுவிக்கின்றது.

சில அரசியல் பிரச்சனையைத் தீர்க்க எடுக்கப்பட்ட புரட்சிகரமான முயற்சியாக மேற்கூறிய ஐரோப்பிய சமுதாய அமைப்புகள் கருதப்பட்டன. இதன் பயனாக இன்று ஒரே பாராளுமன்றம். ஒரே செயலவணி, ஒரே சந்தை போன்ற பல கொள்கைகளை அடையம் நோக்கத்துடன்

இருபதுக்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்து ஐரோப்பிய இணையம் (EU) உருவாகியுள்ளது.

**வடஅட்லாண்டிக் உடன்படிக்கை நிறுவனம் :** (The North Atlantic Treaty Organisation – NATO ) நேட்டோ சோவியத் ரகஷ்யாவின அறைகூவலுக்கு மேற்கு ஐரோப்பாவினால் மட்டும் ஈடு கொடுக்க இயலாது என்ற எண்ணம் இரண்டாம் உலகப்போருக்குப் பின் வளர்ந்து வந்தது. மேற்கு ஐரோப்பியப் பகுதிகளும் பொதுவுடைமைக் கோட்பாடு ஆதிக்கத்தின் கீழ் சென்றால் அமெரிக்காவின் பலம் பெருமளவில் குறைந்து விடும். இவ்வச்சந்தினால் வடஅட்லாண்டிக் உடன்படிக்கை நிறுவனம் (நேட்டோ) தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்கா, கனடா, மற்றும் பெல்ஜியம், டென்மார்க், பிரான்சு, ஐஸ்லாந்து, இத்தாலி, லக்ஸ்ம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுக்கல், இங்கிலாந்து ஆகிய பத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளும் 1949—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4—ஆம் நாள் ஒரு உடன்படிக்கையில் வாசுஷிங்டனில் வைத்து கையெழுத்திட்டனர். அதனடிப்படையில் வட அட்லாண்டிக் உடன்படிக்கை உருவானது. 1952—ஆம் ஆண்டு கிரேக்க நாடையும் துருக்கியையும் சேர்த்ததோடு 1955—ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனியையும் இணைத்து அவ்வமைப்பை விரிவாக்கினர்.

இவ்வுடன்படிக்கை கூட்டுப் பாதுகாப்பு என்ற தத்துவத்தை அடிப்படையாகத் கொண்டு உருவாக்கப்பட்டது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஐரோப்பா அல்லது வட அமெரிக்காவிலுள்ள அங்கத்தினர்களின் மேல் நடத்தும் தாக்குதல் அங்கத்தினர் அத்தனைபேர் மேலும் நடத்திய தாக்குதலாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று இவ்வுடன்படிக்கையின் ஐந்தாவது விதி எடுத்தியம்புகிறது.

இவ்வுடன்படிக்கையில் கையேழுத்திட்டோர் அத்தனை பேரும் ஐக்கிய நாட்டுச் சபையின் சசாசனத்தின மேல் தங்களுக்குள்ள நம்பிக்கையை உறுதி செய்துள்ளனர். அங்த்தினர்கள் தமக்குள் தகராறுகளை தீர்த்துக் கொள்ளவும், பன்னனாட்ச் சமாதானத்தை வளர்க்கவும், பாதுகாப்ப மற்றும் நீதியை நிலை நிறுத்தவும் இணைக்கம் தெரிவித்துள்ளனர். பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பை முறியடிக்கவும் அங்கத்தினர்கள் உறுதி எடுத்துள்ளனர். பாதுகாப்புச் சபை ஆக்கிரமிப்பாளர் மீது நடவடிக்கை எடுத்கம் வரை ஆக்கிரமிப்பைக் கூட்டாகச் சமாளிக்க அங்கத்தினர்கள் முடிவெடுத்துள்ளனர். எல்லா நடவடிக்கைகளைப் பற்றியும் ஒரு அறிக்கை பாதுகாப்புச் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக பன்னாட்டுச் சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் பாதுகாப்பச் சபை

(குறிப்புக்கான இடம்)

எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் முழு அளவிலான ஆதரவு அளிப்பது என்றும் இசைவு தெரிவித்துள்ளனர்.

வட அடலாண்டிக் உடன்படிக்கை நிறுவனம் குழு என்ற ஒரு அமைப்பால் தலைமை ஏற்று நடத்தப்படுகிறது. இக்குழுவின் அங்க நாடுகளைச் சார்ந்த முக்கிய அமைச்சர்களும், நிரந்தர பிரிதிநிதிகளும் இடம் பெறுகின்றனர். இக்குழுவிலுள்ள அமைச்சர்கள், இடையிடையே மட்டும் கூடுவர். ஆனால், நிரந்தர பிரதிநிதிகள் தொடர்ச்சியாக பாரிஸில் கூட்டும் நடத்தி வருகின்றனர். NATO விற்கு ஒரு இராணுவ அமைப்பு உண்டு. அவ்வமைப்பில் ஒரு இராணுவ குழு செயல்படுகிறது. அக்குழுவில் நாடுகளின் உயர் இராணுவ அதிகாரிகள் இடம் பெறுவர். இக்குழு இராணுவ சம்பந்தப்பட்ட ஆலோசனைகளைக் கூறும் இராணுவ குழுவின் முடிவுகளைச் செயலாக்க அமெரிக்க, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் அடங்கிய ஒரு நிலைக் குழு உண்டு, இன்னும் மூன்று முக்கிய குழுக்கள் NATO குழுவின் கீழ் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆவை (i) பொருளாதாரக் குழு : (ii) பாதுகாப்பு குழு (iii) கப்பல் சம்பந்தப்பட்ட திட்டம் தீட்டும் குழு என்பவையாகும்.

நேட்டோவைப் பற்றிய தெளிவான முறையில் அறிய அதனுடைய சாதனைககைளையும் குறைபாடுகளையும் எடுத்துரைப்பது சாலச்சிறந்தது. நேட்டோவை கடுமையாக சிலர் விமர்ச்சிக்கின்றார்கள். இவ்வாறான ஒரு இராணுவ அமைப்பிற்கு எந்த தேவையும் கிடையாது என்று சிலர் வெளிப்படையாக கூறுகின்றனர். இராணுவ உடன்படிக்கையான இது சமாதானத்திற்கு ஆபத்து விளைவிக்கும் என்று கூட்டுச்சேரா நாடுகள் தொடர்ந்து கூறிவருகின்றன. அங்கத்தினர்கள் சிலர் பிற அங்கம் வகிக்கும் நாடுகளை கலந்தாலோசிக்காமல் முடிவுகளை ஒரு தலைப்பட்சமாக எடுத்து, அம்முடிவுகளைப் பிற அங்கத்தினர்களுக்கு தெரியப்படுத்துகின்றனர். இது NATO வின் ஒரு பெரிய குறைபாடாகக் கருதப்படுகிறது, இக்குறைபாடு 1956—ஆம் ஆண்டு சூயஸ் நெடுக்கடி எழுந்தபோது தெளிவாகத் தெரியவந்நது. அந்த நேரத்தில் ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுக்காரர்களுடைய கொள்கைகள் அமெரிக்காவின் கொள்கைகளிலிருந்து பெருமளவில் வேறுபட்டிருந்தன. இராணுவ பலத்தைப் பொருத்தமட்டில் அமெரிக்கா பிற நாடுகளைக் காட்டிலும் அதிக அளவிலான வலுவோடு திகழ்ந்தது. இந்நிலை கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்களைத் தோற்றுவித்தது.

இவ்வாறான குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் இது காணும் நேட்டோ கொண்டருந்த இணைவுத் தன்மை குறிப்பிடத்தக்கது. வளத்தை ஒருங்கிணைத்து இதன் அங்கத்தினர்கள் செயல்பட்டது வட அட்லாண்டிக்

சமுதாயத்தில் உண்மையான ஒரு பிராந்திய ஏற்பாட்டை உறுதியோடு நிறுவத் துணைபுரிந்தது. அமெரிக்கா இந்நிறுவனத்தின மேம்பட்ட ஒரு இடத்தைப் பெற்றுத் திகழ்வதாக ஐரோப்பிய நாடுகள் குறை கூறுவது உண்மை. ஆனால், இந்நிறுவனத்தின் மேம்பட்ட ஒரு இடத்தைப் பெற்றுத் திகழ்வதாக ஐரோப்பிய நாடுகள் குறை கூறுவது உண்மை. ஆனால், இந்நிறுவனத்தின் பொறுப்புகள் அத்தனையையும் அமெரிக்கா தனியாகவே சுமக்கிறது. அமரிக்காவின் மேன்பாற்ற NATO அமைப்பால் சோவியத்திற்கு நிகராக மேற்கத்திய அணிக்குத் தேவையான போர் தளவாடங்களைத் திரட்ட இயலாது தகராறுகளையும் விரோதங்களையும் தவிர்த்து அங்கத்தினர்களிடையே அரசியல், சமூக மற்றும் இராணுவ ஒத்துழைப்பை NATO வலுவாகத் தோற்றுவித்துள்ளது என்று தைரியமாகச் சொல்ல முடியம். இவ்வமைப்பின் வலிமையினால் சோவியத் ரகஷ்யாவால் ஐரோப்பாவில் வெற்றிகரமாக ஊடுருவ இயலவில்லை. NATO குழு இராணுவ பலத்தை அதிகரிக்க மட்டும் முயலாமல், பொருளாதார மற்றும் அரசியல் ஒத்துழைப்பிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

சோவியத் ரகஷ்யாவைப் பற்றிய அச்சம் நேட்டோ உருவாக அமைந்த முக்கிய காரணமாகும். பல நேரங்களில் அங்கத்தினர்களுடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தது. எகிப்து மற்றும் சூயல் கால்வாய்ப் பகுதிகளை ஆங்கிலோ—பிரெஞ்சு படை தாக்கிய போது இவ்விரு நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது. ஆனால் முடிவில் அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில் இவ்விரு நாடுகளும் எகிப்தின் மேல் தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை நிறுத்தின. சைப்ரஸ் சம்பந்தமாக—கிரீஸிற்கும் துருக்கிக்கும் இடையில் கருத்து வேறுபாடு எழுந்தது. இப்பிரச்சனையில் இங்கிலாந்தும், துருக்கியம் NATO -வின் செயலர் சமரசம் செய்வதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே சைப்ரஸ் பிரச்சனை தீவிரம் அடைந்தது. சோவியத் யூனியனின்மறைனவிற்குப் பிறது NATO-வின் முக்கியத்துவம் குறைந்தது போல் காணப்படுகிறது. அதில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை நிறுவனம்** (South East Asia Treaty Organization – SEATO) **சியாட்டோ**

நேட்டோவைப் போன்று தென்கிழக்கு உடன்படிக்கை நிறுவனமும் கூட்டுப்பாதுகாப்பு ஏற்பாட்டிற்காக உருவாக்கப்பட்டது. 1957—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்க, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, பிரான்ச, பாகிஸ்தான், தாய்லாந்து. பிலிப்பைன்ஸ் ஆகிய எட்டு நாடுகள் ஒரு பரஸ்பர கூட்டு ஏற்பாட்டில் கையேழுத்திட்டு இதனை உருவாக்கின.

(குறிப்புக்கான இடம்)

அடிப்படையில் இது பொதுவுடமையை எதிர்க்க உருவாக்கப்ட்ட ஒன்றாகும். ஆனால், பாதுகாப்பு திறன் வளர்த்தல், பொருளாதார நிலை வளர்த்தல் கவிழ்க்கும் நடவடிக்கைககளை எதிர்த்தல் போன்ற பிற பணிகளையும் ஆற்றியது. தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை என்று இது அழைக்கப்பட்ட போதிலும் மூன்று நாடுகள் தான் இப்பகுதியல் இருந்து இதில் பங்றேற்ன. இந்தியா போன்ற சில முக்கிய நாடுகள் இதில் சேராமல் ஒதுங்கி விட்டன. மேற்கத்திய ஆதிக்க ஆட்சியாளர்கள் இவ்வைமைப்பின் மூலம் இப்பகுதியல் திரும்பவும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்கிச்கின்றனர் என்ற எண்ணத்தை இந்தாடுகள் கொண்டிருந்ததால், தங்களை இவ்வமைப்போடு இணைத்துக் கொள்ளவில்லை.

இவ்வுடன்படிக்கையில் ஒரு முகவுரையும் பதினோரு விதிகளும் காணப்பட்டன. இவ்வடன்படிக்கையின் அங்கங்கள் எல்லா அங்கத்தினரின் இறைமையை அங்கீகரிக்கின்றன. மேலும் ஐக்கிய நாட்டு அவையின் சாசனம் கூறும் குறிக்கோள் மற்றும் தத்துவங்கள் மேல் தாங்கள் தொண்டிருக்கும் நம்பிக்கையயை உறுதி செய்கின்றனர். உடன்படிக்கை பகுதியிலுள்ள மக்களிடையே சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்த கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளல் போன்றவற்றை விரும்புகின்றனர் என்று இவ்வுடன்படிக்கையின் முகவுரை எடுத்தியம்புகிறது.

இவ்வுடன்படிக்கை முடிவின்றி பல்லாண்டு காலம் தொடர்ந்து செயல்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு நாடு அவ்வமைப்பில் இருந்து வெளியேற விரும்பினால் ஒரு ஆண்டிற்கு முன் தகவல் கொடுக்க வேண்டும்.

சியாட்டோ என்ற அமைப்பிற்கு நிரந்தர இராணுவம் கிடையாது. இதனுடைய தலைமை பீடம் பாங்காக்கில் அமைந்திருக்கிறது. இதனுடைய அமைப்பில் ஒரு குழு காணபட்டுகிறது. அக்குழுவில் அங்கத்தினர்களின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

சியாட்டோ என்ற அமைப்பை உருவாக்கி பொதுவடமை உலகைச் சுற்றி தான் அமைத்த உடன்பாட்டு வளையத்தில் காணப்பட்ட காலி இடத்தை அமெரிக்கா நிரப்பிற்று. ஆனால் அவ்வுடன்பாட்டில் அங்கம் வகிக்கம் ஆசிய நாடுகள் பெருமளவில் அமெரிக்காவிலிருந்து பொருளாதார மற்றும் போர்த் தளவாட உதவிகளைப் பெறவே, தங்களை இவ்வமைப்போடு இணைத்துக் கொண்டுள்ளன.

### பாக்தாத் உடன்படிக்கை அல்லது CENTO (சென்டோ)

ஈராக், துருக்கி ஆகிய இரு நாடுளின் பிரதம அமைச்சர்கள் தங்களுடைய நாடுகளின் பாதுகாப்பிறகாக ஒத்துழைப்பை ஏற்படுத்தி 1955—

ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24—ஆம் நாள் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இது பாக்தாக் ஒப்பந்தத்தின் ஆரம்பமாக கருதப்படுகிறது. "இப்பகுதியின் மத்திய கிழக்கு பாதுகாப்பிலும் சமாதானத்திலும் அக்கறை கொண்ட நாடுகள் தங்களை இதில் தாராளமாக இணைத்துக் கொள்ளலாம்" என்று இவ்வுடன்படிக்கையின் ஐந்தாவது விதி கூறுகிறது. இதனடிப்படையில் பிரிட்டன் 1955—ஆம் ஆண்டு ஏப்ரம் மாதாம் 24—ஆம் நாள் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது. அதே ஆண்டு ஜூலை மாதம் பாகிஸ்தான் தன்னை இவ்வுடன்பாட்டோடு இணைத்துக் கொண்டது. 1955—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் ஈரான் இவ்வுடன்படிக்கையில் சேர்ந்தது இவ்வாறு ஈரான், பாகிஸ்தான், துருக்கி, பிரிட்டன், ஈராக் ஆகிய ஐந்து நாடுகள் இவ்வுடன்படிக்கையின் அங்கங்களாக மாறின.

1959—ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாட்டில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக ஈராக் உடன்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. இச்செயலினால் இவ்வுடன்படிக்கைக்கு சென்டோ (CENTO) என்று புதிய பெயரும் இவ்வமைபிற்கு அன்காரா என்ற இடத்தில் புதிய தலைமையகமும் அமைக்கப்பட்டது.

பாக்தாத் உடன்படிக்கையும் ரகஷ்ய ஆக்கிரமிப்பிற்கு எதிராக உருவாக்கப்பட்டது சென்டோ பொது திட்டங்களுக்கு ஓரளவு வழிவகுத்தது. இதன் அங்கத்தினர்கள் தங்கள் இராணுவ பலத்தை அதிகரிக்க விரும்பின. அதற்கு அமெரிக்கா பெருமளவில் உதவி புரிந்தது. ஆனால் அங்கத்திர்களுடைய வலுவிழந்த தன்மையால் CENTO என்ற அமைப்பால் மத்திய கிழக்கப் பகுதியை சோவியத் ஆக்கிரமிப்பிலிருந்து சரிவர பாதுகாக்க முடியவில்லை. உண்மையில் பாக்தாக் உடன்படிக்கை அதன் குறிக்கோளை அடைவதில் தோல்வியுற்றது. முதலாவதாக மத்திய கிழக்குப் பகுதியில் இவ்வுடன்படிக்கை இராணுவ அமைப்பத் தோற்றுவிப்பதில் வெற்றி பெறவில்லை. மத்திய கிழக்கில் கம்யூனிஸ்டுகளின் ஊடுருவலைத் தடுக்க இவ்வுடன்பாட்டால் இயலவில்லை.

**வார்சா உடன்படிக்கை (Warsaw Pact):**

இரண்டாம் உலகப்போருக்குப்பின் சோவியத் யூனியனுக்கு எதிராக உடன்பாடுகளை ஏற்படுத்துவதில் அமெரிக்கா தீவிரமாக செயல்பட்டது. எனவே தன்னை வலுப்படுத்த சோவியத் ரகஷ்யா சில எதிர் உடன்பாடுகளை ஏற்படுத்தியது. ஐரோப்பாவில் உள்ள பொதுவுடைமை நாடுகளோடு ஒரு தொடர்பான பரஸ்பர பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒப்பந்தங்களை ரகஷ்யா செய்து கொண்டது.

(குறிப்புக்கான இடம்)

1955—ஆம் ஆண்டு அல்போனியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோலேலகியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, சோவியத் ரக்ஷ்யா ஆகிய எட்டு ஐரோப்பிய நாடுகளும் செஞ்சினாவின் ஒரு பார்வையாளரும் மாஸ்கோவில் கூடி நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவற்றிற்காக ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். கையெழுத்திட்ட நாடுகளுக்காக ஒரு கூட்டு இராணுவ அமைப்பை நிறுவ முடிவு எடுக்கப்பட்டது. எட்டு இராணுவ அமைப்பின் தலைமை மாஸ்கோவில் அமைந்தது. சோவியத் இராணுவ உயர் தளபதி அதைத் தலைமை ஏற்று நடத்துவார். கையெழுத்திட்ட பிறநாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் அல்லது இராணுவ தலைவர்கள் கூட்டு இராணுவ அமைப்பின் துணைத் தவைர்களாக நியமிக்கப்பட்டனர்.

வார்சா உடன்படிக்கை கையெழுத்திட்ட நாடுகள் தங்கள் பிரச்சனைகளைதச் சமாதான முறைகளில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஆதிக்க ஆட்சியாளர் மற்றம் முதலாளித்துவத்தைச் சார்ந்தோரின் தாக்குதலை இணைந்து சமாளிக்க கையெழுத்திட்ட நாடுகள் இசைவு தெரிவித்தன. ஏதாவதொரு அங்கத்தினர் மேல் அந்நியர் தாக்கினால் கூட்டாக தாக்குதலை எதிர்த்து சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலை நாட்ட அங்கத்தினர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

கலந்தாலோசனை நடத்த கையெழுத்திட்ட நாடுகள் அடங்கிய ஒரு அரசியல் கலந்தாலோசனைக் குழுவை உடன்படிக்கை வழங்கியுள்ளது. உடன்படு பணியாற்றத் தேவையான அமைப்புக்களை நிறுவும் உரிமை அக்குழுவிற்கு வழங்கப்பட்டது. உடன்படிக்கை செய்த நாடுகள் தமக்குள் பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை வளர்க்க இணக்கம் தெரிவித்தன. எந்தவொரு நாடும் உடன்படிக்கையின் விதிமுறைகளை முழு அளவில் ஏற்றுக்கொண்டால், அந்த நாட்டை அதன் சமூக அல்லது அரசாங்க அமைப்பை நோக்காமல் வார்சா உடன்படிக்கையின் ஒரு அங்கமாக சேர்த்துக் கொள்ளலாம்.

இவ்வுடன்படிக்கையின் போர்வையில் 1995—ஆம் ஆண்டு ஹங்கேரியில் நடந்த பொதுவுடைமை அரசிற்கு எதிரான புரட்சியை சோவியத் ரக்ஷ்யா வெற்றிகரமாக அடக்கியது. 1969—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த கூட்டத்தில்வார்சா உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள் மேற்கு ஜெர்மனியின் பிரச்சனையில் ஒரு தாராள அணுகு முறையைப் பின்பற்றின. அந்நேரத்தில் வார்சா உடன்படிக்கையை அதனுடன் விரோதிகளும் புகழ்ந்தனர். சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொதுவுடைமை ஆட்சி மறைந்ததும் வார்சா உடன்படிக்கையும் மறைவுற்றது.

**அரேபிய சங்கம் (The Arab League) :**

எகிப்து, சிரியா, லெபனான், ஜோர்தான், ஈராக், சவுதி அரேபியா, சூடான், ஓமன் ஆகிய அரேபிய நாடுகள் அடங்கிய அரேபிய சங்கம் மத்திய கிழக்குப் பகுதியில் காணப்படடும் மிக முக்கிய பிராந்திய ஏற்பாடாகக் கருதப்படுகிறது. 1945—ஆம் ஆண்டு பிரிட்டனின் ஆசியோடும் ஆதரவோடும் இது உருவாக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் இருபது விதிகள் உண்டு. ஈடுபட்டுள்ள நாடுகளிடையே உறவை வலுப்படுத்துதல், அவைகளுக்கிடையே உண்மையான ஒத்துழைப்பை ஏற்படுத்து வண்ணம் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைத்தல், சுதந்திரத்தையும், இறைமையும் பாதுகாத்தல் மற்றும் பொதுவாக அரோபிய நாடுகளின் பொதுக் காரியங்களை கவனித்தல் ஆகியவை இவ்வுடன்பாட்டின் அடிப்படை நோக்கங்கள் என்று இவ்வுடன்பாட்டுச் சட்ட வரைவு ஏற்படுத்தியம்புகிறது.

உறவுகளை ஏற்படுத்த இச்சங்கம் ஏற்பட்டதாக் கருதப்பட்டாலும், முக்கியமாக இரு காரியங்களின் அடிப்படையில் இச்சங்கம் எழுந்தது எனலாம். அவை (1) ஆங்கிலோ—பிரெஞ்சு காலனி ஆதிக்கம் மீண்டும் இப்பகுதியில் வராமல் தடுக்க ஒரு ஒருங்கிணைந்த கூட்டு முன்னனியை படைத்தல் (2) பாலஸ்தீனத்தில் ஒரு யூத நாடு உருவாததைத் தடுத்தல் என்பவையாகும்.

இச்சங்க அமைப்பு அங்கத்தினர்களின் பிரிதிநிகளைக் கொண்ட ஒரு குழுவைக் கொண்டுள்ளது என்று மூன்றாவது விதி கூறுகிறது. இக்குழுவில் ஒரு நாட்டிற்கு ஒரு வாக்கு உண்டு. சங்கத்தின் குறிக்கோளை அடைந்து சங்க அங்த்தினர்கள் தங்களிடையே செய்துகொண்ட உடன்பாடுகளைச் செயல்படுத்துவது பாதுகாப்பை உருவாக்க பன்னாட்டு அமைப்புகளோடு எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பதனைத் தீர்மானிப்பது பொருளாதார மற்றும் சமூக உறவுகளை ஒழுங்குபடுத்துவது ஆகியவை இச்சங்த்தின் முக்கியப் பணிகள். விசேட குழுக்கள் உருவாக்குவதைப் பற்றி நான்காவது விதி கூறுகிறது. கூட்டுறவு நடவடிக்கைகளைக் குறித்த உடன்பாடுகளை விசேட குழுக்கள் உருவாக்கும். இவ்வாறு உருவாக்கப்பட்ட உடன்பாடுகள் குழுவின் முன்னிலையில் வைக்கப்படுகிறது. சமரசம், பேச்சு வார்த்தை ஆகியவைகளின் மூலம் பிரசசனைகளைத் தீர்ப்பதைப் பற்றி ஐந்தாவது விதி கூறுகிறது.

கெய்ரோ, அரேபிய சங்கத்தின் நிரந்தர தலைமையகமாக இருக்க வேண்டும் என்று பத்தாவது விதி கூறுகின்றது. அரேபிய சங்க குழு வருடத்திற்கு இருமுறை தனது சாதாரண கூட்டத் தொடரை நடத்தும். விசேட கூட்டத் தொடர்கள் தேவை எழுந்தால் நடத்தப்படும்.

(குறிப்புக்கான இடம்)

. சங்கம் ஒரு தலைமைச் செயலர், துணைச்செயலர்கள், பணியாளர்கள் போன்றோரைக் கொண்ட ஒரு நிரந்தர செயலகத்தின் துணையோடு பணிபுரியலாம் என்று பன்னிரெண்டாவது விதி கூறுகின்றது. தலைமைச் செயலர் 3ல் 2 பாகம் பெருவாரியோடு நியமனம் செய்யப்படுகின்றார். தலைமைச் செயலர் துணைச் செயலரையும் பிற அலுவலர்களையும் சங்க குழுவின் ஆலோசனையைப் பெற்று நியமனம் செய்கிறார்.

தலைமைச் செயலர் வரவு செலவுக் கணக்குகளைத் தயாரிக்கிறார். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரின் பங்கையும் கணக்கிடுகிறார். இக்கணக்குகளை குழுவிடம் தலைமைச் செயலர் சமர்ப்பிக்கின்றார்.

ஒரு நாடு உடன்படிக்கையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்றால் ஓராண்டுக்கு முன் தகவல் அளித்தல் வேண்டும். உடன்படிக்கையின் விதிகளை மீறிய அங்கத்தினர்களை எந்நேரமும் சங்க அமைப்பிலிருந்த வெளியேற்ற சங்கத்தின் குழு உரிமைப் பெற்றுள்ளது.

பொதுவான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்கு முறைகளை வளர்க்கவும் பொதுவான தொழில் மற்றும் விவசாய கொள்கைகள உருவாக்கவும் 1964—ஆம் ஆண்டு ஒரு அரேபிய பொதுச்சந்தை உருவாக்கப்பட்டது. ஆனால் ஆது 1965—ஆம் அண்டு ஜனவரி 1—ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது. குவைத் இவ்வமைப்பில் இருந்து 1965—ம் ஆண்டு தன்னை விடுவித்துக் கொண்டது.

இச்சங்க அமைப்பு போதுமான அளவு ஒற்றுமையோடு திகழ்ந்தது. இதனுடைய அங்கத்தினர்கள் எகிப்திலிருந்து பிரிட்டிக்ஷ் வீரர்கள் திரும்ப அழைக்கப்பட்டதை கூட்டக ஆதரித்தனர். இதன் அங்கத்தினர்கள் ஐக்கிய நாட்டுச் சபையில் ஒரு முகமாக வாக்களித்தனர். 1945—ஆம் ஆண்டு பிரான்சு, லெபனான், சிரியா ஆகிய பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சித்த போது இச்சங்கம் இப்பிரச்சனையை ஐக்கிய நாட்டுச் சபையில் சமர்ப்பிக்க வற்புறுத்தியது.

ஆனால், அரசியல், இராணுவ மற்றும் பொருளாதாரம் அடிப்படையில் நோக்குங்கால், அரேபிய சங்கம் பலவீனமான ஒன்றாக காணப்பட்டது. அரேபிய சங்கத்தால் இஸ்ரேலின் தோற்றத்தைத் தடுக்து நிறுத்த முடியவில்லை. சங்க அங்கத்தினர்களின் மத்தியில் பரம்பரை விரோதங்கள் நிலவின. மேற்கு ஆசியாவில் நிலையான ஒரு தன்மையையும், சமாதானத்தையும் தோற்றுவிக்கும் ஒரு சக்தியாகச் செயல்பட இச்சங்கம் தவறிவிட்டது.

### 4.1.8 பிரிட்டிக்ஷ் காமன் வெல்த்

பிரிட்டிக்ஷ் காமன்வெல்த் என்பது தனிக் குணநலம் படைத்த ஒரு அமைப்பு, அதற்கு இலகுவான ரீதியில் பொருள் விளக்கங்கள் அளிக்க இயலாது. இதனுடைய தனிக் குணநலம் யாதெனில் இது சுதந்திர நாடுகளிடையே தோன்றிய ஒரு பிராந்திய ஏற்பாடு அல்ல. ஆனால் பேரரசினால் உருவாக்கட்பட்ட ஒரு ஏற்பாடு. பேரரசு கலைக்கப்படும் பொழுது ஒரு புதுவகை அரசியல் அமைப்பை காமன்வெல்தின் மூலம் படைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னர் பிரிட்டிக்ஷ் பேரரசின் ஆதிக்கத்திலிருந் நாடுகள் சுதந்திரம்பெற்ற அரசுகளாக மாறிய பின் தங்களுக்கென்று ஒரு அமைப்பை உருவாக்க வெண்டுமென்ற நோக்கத்தோடு காமன்வெல்த் அமைப்பின் கீழ் ஒன்று திரண்டன.

காமன் வெல்தின் அமைப்பு திடமாக உருவாக்கப்படவில்லை. இதனுடைய அங்கத்தினர்கள் உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்படவில்லை. இதனுடைய அங்கத்துவம் எந்த உரிமையயையும் கட்டுப்பாடுகளையும் அங்கத்தினருக்க அளிக்கவில்லை. பொருளாதாரக் கொள்கைகளை இவ்வமைப்பு கட்டுப்படுத்தவில்லை. இதுவரை நிர்வாக நிறுவனத்தை அமைக்கவில்லை. காமன்வெல்த் நாடுகளை ஒருங்கிணைக்கம் அடையாளச் சின்னமாக பிரிட்டிக்ஷ் மகுடம் கருதப்படுகிறது. இங்கும் முரண்பாட்டை நம்மால் உணர முடியம். ஏனென்றால், இங்கும் முரண்பாட்டை நம்மால் உணர முடியம். ஏனென்றால், பெரும்பாலான காமன்வெல்த் அங்த்தினர்கள் குடியரசுகளைச் சார்ந்தவர்கள்.

காமன்வெல்த்தில் அரசியல் ஒருமைப்பாட்டை காண முடியாது. இதனுடைய அங்கத்தினர்கள் இடையிடையே குறிப்பிட்ட இடைவெளிகளில் கூடி அரசியல் காரியங்களை விவாதித்தாலும், நிறுவன அமைப்பு இல்லாமையால் விவாதங்களின் முடிவில் தாங்கள் எடுத்த முடிவுகளை செயலாக்க முடிவதில்லை. ஐக்கிய நாட்டுச்த சபையின் கீழ் உருவாக்கப்பட்ட அத்தனை பிராந்திய ஏற்பாடுகளிலும், காமன்வெல்த் மட்டுமே குறைந்த அளவிலான ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. வெளிநாட்டுக் கொள்கையில் அங்கத்தினர்கள் பெருமளவில் வேறுபாடுகளைக் கொண்டிருப்பதால் அவர்களால் ஒன்றுபட்டு இயங்க முடியவில்லை.

எவ்வாறனினும், பொருளாதார உறவுகளை ஏற்படுத்துவதில் காமன்வெல்த் வெற்றி பெற்றுள்ளது. கொழும்புத் திட்டதின் வாயிலாக பின் தங்கிய காமன்வெல்த் நாடுகளுக்கு சீரிய முறையில் தொழில் நட்ப உதவியும பொருளாதார உதவியும் வழங்கப்பட்டது.

(குறிப்புக்கான இடம்)

பொதுவாக அங்கத்தினர்களாகிய அரசுகளில் வாழும் மக்களிடையே பெருமளவில் இம் பெயரும் தன்மை காணப்படுகிறது. ஒரு காமன்வெல்த் நாட்டிலுள்ள மக்கள் இன்னொரு காமன்வெல்த் நாட்டிற்குச் செல்லும் போது சில விசேட உரிமைகளைப் பெறுகின்றனர்.

பல குறைபாடுகளைப் பிராந்திய அமைப்பு என்ற முறையில் கொண்டுருந்த போதிலும், காமன்வெல்த் இதுவரை சூழ்நிலைகளுக்கு கதுந்த வண்ணம் தன்னை மாற்றியமைத்து செயல்பட்டு வருகிறது. இதுவரை பரிட்டன் காமன்வெல்த்தின் தலைமை ஏற்று நடத்தி வருகிறது. பிட்டனின் அதிகாரம் குன்றிய இன்றைய நிலையில், இதனுடைய வருங்கால தலைமையை யார் ஏற்பது என்ற பிரச்சனை தலை தூக்க ஆரம்பித்துள்ளது. இக்கேள்வி வர்க்க பேதம் மற்றும் குடியேற்ற பிரச்சனைகளை போன்றவற்றால் மேலும் பிரச்சனைகள் நிறைந்த ஒன்றாய் மாறி வருகிறது. வர்க்கபேதம், குடியேற்ற பிரச்சனைகள் போன்றவற்றை நன்முறையில் தீர்த்ததில்தான் காமன்வெல்த்தின் எதிர்காலம் சார்ந்திருக்கிறது.

### 4.1.9.பிராந்திய பற்று – பிராந்திய கூட்டமைப்புக்கள்

#### பிராந்தியப் பற்று

அரசுகளையம், அவற்றைச் சார்ந்து வாழும் நிலப்புதிகளையும் பிராந்திய அடிப்டையில் ஒருங்கிணைத்து அமைத்தல் பிராந்தியப் பற்றைக் குறிக்கின்றது. பொதுவாக பிராந்தியம் என்ற பதம் பன்னாட்டு அரசியலிலும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளின் நிலப்பகுதிகளின் இணைவைக் குறிக்கின்றது. இவ்வினைவில் பங்கேற்கும் அரசுகளின் நிலப்பரப்பு தொடச்சியாக அடைந்திருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது அவ்வரசுகளின் நிலப்பரப்பு உலகெங்கும் பரவலாக காணப்படலாம்.

#### பிராந்தியப் பற்றின் முக்கியத்துவம்

பிராந்திய அமைப்புபள் அல்லது ஏற்பாடுகள் சில முக்கியப் பிரச்சனைகளைக் கலந்தாலோசித்து, தீர்வு செய்யும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளன. கீழ்க்காணும் பிரச்சனைகளைத் தீர்வு செய்ய அவை முனைகின்றன. அவை பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சார மற்றும பரஸ்பர பாதுகாப்புப் பிரச்சனைகளாகும். பிராந்திய ?எற்பாடுகள் அரசியல் ஒழுங்கைத் தமது குறிக்கோளாகக் கொண்டுரப்பதால் மும்முனை ஒப்பந்தம் பொன்ற இராணுவ ஒப்பந்தங்களில் இருந்து அவை வேறுவடுகின்றன.

பிராந்திய அமைப்புகள் மூன்று மக்கிய குணநலன்களைக் கொண்டு திகழ்கின்றன. அவை: (i) பிந்திய அமைப்புகளின் அங்கத்துவம்

வரையறை செய்யப்பட்டுள்ளது: (ii) பிராந்திய ஏற்பாடுகள் விசேட குறிக்கோள்களைக் கொண்டுள்ளன: (iii) பிராந்திய ஏற்பாடு ஒரு குழுவின் நலன் பேண ஏற்பட்டிருக்கிறது என்பவையாகும். அக்குழு எப்பொழுதும் பன்னாட்டு சமுதாயத்தை விட சிறியது.

தேசிய அரசுகள் தங்கள் வளத்தை ஒருங்கிணைத்து, ஒன்று திரட்டி அணு ஆயுதப்போர் உருவாக்கிய அச்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் உலகில் தங்களுக்குத் தேவையான பாதுகாப்பை உருவாக்கிக் கொள்கிறது. உலக உளவிலான முழுமையான அமைப்பை நிறுவுதல் என்பது முடியாத காரியம். எனவே, அதற்கு மாறாகப் பிராந்திய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளல் நல்லது: உலக அளவிலான அமைப்புக்களை விரும்புவோர் எவ்வாறெனினும் பிராந்திய ஏற்பாட்டை, உலக ஏற்பாட்டிற்கான படிக்கல் என்று எண்ணுகின்றனர். உலக அரசாங்கம் உருவாக்கம சாத்தியக் கூறுகள் சமீப காலத்தில் இல்லாத ஒரு நிலையில், பிராந்திய ஏற்பாடு பன்னாட்டு உறவுகளில் முக்கியப் பங்கு வகித்து; இன்றைய தேசிய அரசு முறையை மாற்றியமைத்த வருகிறது.

ஒன்று சேர்ந்து வருகின்ற நாடுகளுக்கிடையே தாங்கள் ஒரே பொது விருப்பங்கள் கொண்டிருப்பதான ஒரு உணர்வு தோன்றி அப்போது வேண்டும் விருப்பங்களை அடைய கூட்டு முயற்சி தேவை என்ற எண்ணமாக உருவாக அவ்வெண்ணத்தின் அடிப்படையில் பொது விருப்பத்தைக் கொண்டுள்ள நாடுகள் தமக்கிடையே பொது ஏற்பாடுகளைச் செய்து கொள்கின்றன. இதுவே பிராந்திய ஏற்பாடு உருவாக உகந்த அடிப்படைக் காரணியாகக் காணப்படுகிறது. நாடுகளின் நிலப்பரப்பு இத்தடுத்து அமைந்துருந்தால், அந்நாடுகள் சில பொது விருப்பங்களளைக்கொண்டிருக்கும். அப்பொது விருப்பங்களை நிறைவேற்ற அந்நாடுகள் தமக்குள் பன்னாட்டு அமைப்புக்களை பிரந்திய அடிப்படையில் செய்து கொள்ளலாம். சில நேரங்களில் பொதுவான வெளிநாட்டு அபாயத்தை எதிர்நோக்குகின்ற நாடுகள் தமக்குள் அவ்வபாயத்தை எதிர்நோக்க பிராந்திய அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும். சில வேலைகளில் பொது விருப்பங்கள் ஏற்படுத்தும் தூண்டுதல் அல்லது பொது துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் நாடுகளிடையே பிராந்திய ஏற்பாடுகளை உருவாக்கிறது.

பொதுவாக பிராந்திய ஏற்பாடுகள் பின்வருகின்ற குறிக்கோளை அடைய பயன்படுகின்றன. (i) அரசாங்களுக்குகிடையே அரசியல் மற்றும் பிற ஆலோசனைகளை நடத்த உகந்த வழிமுறையை பிராந்திய ஏற்பாடு வழங்குகிறது. (ii) குறிப்பிட்டஇடைவெளிகிளல் நடத்தப்படம் கூட்டங்களின் மூலம் பலமுனைப் பேச்சு வார்த்தைகள் நடந்தேற வாய்ப்பு உருவாகிறது.

(குறிப்புக்கான இடம்)

(iii) அங்கத்தினர்களிடையே சுமூகமான முறையில் பிரச்சனைகளைத் தீர்க்க வழி வகுக்கிறது. (iv) அங்கத்தினர்கள் பிராந்திய ஏற்பாட்டின்மூலம் ஒருவரையொருவர் பாதுகாக்குட் ஏற்பாட்டினை அமைத்துக் கொள்ள முடிகிறது.

பொது குறிக்கோளைப் பகிர்ந்து கொள்தல் மற்றும் பொது விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவற்றைச் சார்ந்தே பிராந்திய ஏற்பாடுகளின் வலிமை காணப்படுகிறது. ஒருவரோடொருவர் சீரிய அளவில் ஒத்துழைத்து, பொது விருப்பங்களையும் குறிக்கோளையும் நிறைவேற்றும் காலம் வரை பிராந்திய ஏற்பாடுகள் வெற்றிகரமாக செயல்பட்டு வரும், அங்கத்தினர்களிடையே அதிக அளவிலான சமுதாய உணர்வும், குறிக்கோளுக்கான பொது இசைவும் தோற்றுவிக்கப்பட்டால் பல நாடுகள் இணைந்து உருவாக்கியது அந்த பன்னாட்டு அமைப்பு நம்முறையில் பின்னிப் பிணையப்பட்டு செயல்படும்.

கோட்பாடுகளில் முரண்பாடு இல்லையென்றால் ஒரு நாடு ஒன்றிற்கு மேலாக பிராந்திய அமைப்புகளில் அங்கத்தினராக இருக்கலாம். இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒன்றிற்கு மேற்பட்ட பிராந்திய அமைப்புகளில் அங்கம் வகித்து வருகின்றது.

பிராந்திய அமைப்புகளை ஆதரிப்போர் தம்மை நடைமுறைவாதிகள் என்று பறைசாற்றுகின்றனர். குறிப்பிட்ட வரையறை செய்யப்பட்ட சில குழுக்களுடைய பிரச்சனைகளைத் தீர்வு செய்ய பன்னாட்டு அமைப்புகளைக் காட்டிலும் பிராந்திய அமைப்புகள்தான் சாலச் சிறந்தது. ஏனென்றால், இவ்வமைப்புக்கள் சமுதாய உணர்வை அங்கத்தினர்களிடம் தோற்றுவித்து, ஒருங்கிணைந்து பணியாற்ற அவர்களைத் தூண்டுகிறது. ஆனால், அங்கத்துவத்தை உலகெங்கும் பரப்பினால் வெகு தொலைவில் எழும் பிரச்சனைகளைப் பற்றி நாடுகள் பற்றில்லாமல் செயல்படும். தொலைவில் அமைந்திருக்கும் நாடுகள் பிற பிரச்சனைகளில் கவனம் செலுத்தும். இந்நிலையில் பன்னாட்டு ஏற்பாடு தோல்வியுறும்.

எவ்வாறு பிராந்திய அமைப்புகள் தங்கள் பணிகளை ஆற்ற வேண்டும் என்பதில் பிராந்திய சிந்தனையாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. கூட்டமைப்பு சிந்தனையாளர்கள் கூட்டமைப்பு அணுகுமுறையை எடுத்தியம்புகின்றனர். மேம்பட்ட ஒரு அவைக்கு அங்கத்தினர்கள் தங்கள் இறைமையில் ஒரு பகுதியை அர்ப்பணிக்க வேண்டும் என்றும், அப்பொழுதான் பிராந்திய அமைப்புக்கு அதிக அரசியல் அதிகாரமும், அதன்மூலம் செயல்பாடு அதிகரிக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். இரண்டாவது சாரார் செயற்பாட்டு அணுகுதலை எடுத்தியம்புகின்றனர். அரசியல் ஒருமைப்பாட்டிற்கு, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு முதலில் தேவை என் இவர்கள்

கூறுகின்றனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட விசேட குறிக்கோளை அடையும் அமைப்புகளில் இறைமை பழைய அரசு அமைப்புகளிடமிருந்து படிப்படியாக புதிய பன்னாட்டு அமைப்பிடம் மாறகிறது. இம்மாற்றம் வருங்காலத்தில் நிலையான ஒரு உலக முறையமைவிற்கு வழிவகுக்கம்.

செயற்பாட்டு முறையில் சில நம்மைகள் காணப்படுகின்றன. இம்முறையில் நெகிழும் தன்மை காணப்படுகிறது. இத்தன்மை பல அமைப்பு முறைகளையும், வழிமுறைகளையும் முயற்சிக்க வழிவகுக்கிறது.

இன்று பிராந்தியப் பற்று ஏற்பாட்டை விரும்பி ஏற்றுக் கொள்ளும் தன்மை உலகில் போதுமான அளவு உருவாகியுள்ளது. கடந்த நான்கு நூற்றாண்டுகளாக பன்னாட்டு அரங்கில் செல்வாக்குடன் திகழ்ந்து, வந்த தேசிய அரசமறை தனது செல்வாக்கை இன்று இழந்து விட்டது. இன்றைய உலகில் சுதந்திரம் பெற்ற இறைமை வாய்ந்த அமைப்புகளைக் காட்டிலும், அரசுகளின் பிராந்திய அமைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. பிராந்திய அமைப்பக்களைத் தோற்றுவிக்க உலகில் எண்ணற்ற ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் நடந்தேறியுற்றன. ஐக்கிய நாட்டுச் சபையின் பிராந்திய ஏற்பாட்டிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

**ஐக்கிய நாட்டுச் சபையும் பிராந்திய ஏற்பாடுகளும்**

பிராந்திய ஏற்பாடுகளுக்கு ஐக்கிய நாட்டுச் சபையின் சாசனம் அங்கீகாரம் அளித்துள்ளது. சான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் பிராந்திய மற்றும் பன்னாட்டு அமைப்புகளைப் பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டது. சான் பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் பிராந்திய ஏற்பாட்டிற்காக அமைக்கப்பட்ட மூன்றாவது குழுவில் அங்கம் வகித்த ஒரு அமெரிக்க நிபுணர் பினவரும் கருத்தை வெளியிட்டுள்ளர். பல்வேறு நாடுகளும் பிராந்திய ஏற்பாட்டுப் பிரச்சனைகளை அணுகிய விதத்தை ஐந்து கருத்துக்கள் ஒருவகையில் அல்லது இன்னோரு வயையில் ஒழுய்குபடுத்தின. பிராந்திய அல்லது வரையறை செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஐக்கிய நாட்டுச் சபையின் பொது அமைப்பினுள் சுயமாக இயங்க வேண்டும் என்ற எண்ணத்தை எல்லாக் கருத்துக்களும் எடுத்தியம்பின.

1) அமெரிக்க குடியரசின் விருப்பம் அமெரிக்க மாநிலங்களுக்கிடையேயான முறையமைப்பை பாதுகாத்தல்.

2) இதைப்போன்ற உணர்வை அரேபிய அரசுகளின் சங்க அமைப்பும் தங்கள் அரசுகளைப் பொறுத்தமட்டில் கொண்டுள்ளது. சங்கத்தின் நிலை பாதுகாக்கப்படல் வேண்டும்.

3) பரஸ்பர இருமுனை உதவிபுரியும் ஒப்பந்தங்கள் ஏற்படுவதை தடைசெய்யும் சாசனத்திலிருந்து நாடுகளுக்கு விதிவிலக்கு வழங்குவதை சோவியத் ரஷ்யா விரும்பியது.

4) ஜெர்மனி திரும்ப ஆக்கிரமிப்பு ஆக்கிரமிப்பு நடத்தும் என்ற அச்சத்தை பிரான்சு கொண்டிருந்தது. எனவே, பழைய விரோதிக்கு எதிராக பாதுகாப்புச் சபையின் அனுமதிக்குக் காத்திராமல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையை பிரான்சு கோரியது.

5) யால்டா வாக்களிக்கும் விதிமுறை பாதுகாப்பு சபைக்க அதிக அதிகாரத்தை அளித்தது. சிறிய அரசுகளிடையே முணுமுணுப்பை ஏற்படுத்தியது.

ஐக்கிய நாட்டுச் சபை சாசனத்தின எட்டாவது அத்தியாயம் 52,53,54 ஆகிய விதிகள் பிராந்திய ஏற்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறியுள்ளன. இதைத் தவிர்த்து 33—ஆம் விதியும் சமாதான ரீதியில் பிரச்சனைகளை பிராந்திய அமைப்பு மற்றும் பிராந்திய ஏற்பாடுகளினால் தீர்த்து வைப்பதைத் தெளிவாக வெளியிட்டுள்ளது. இரண்டாம் உலகப்போரில் ஆக்கிரமிப்பு நடத்திய விரோதி அரசுகளின் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாதுகாப்பு சபையின் அனுமதி தேவையில்லை என்று 53—விதி கூறுகிறது. இதைக்காட்டிலும் முக்கியமாக ஒரு விதி விலக்கை, 57—வது விதி கூறுகிறது. இவ்விதிவிலக்கின் மூலம் ஐக்கிய நாட்டுச் சபை, அமைப்பின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் நாடுகள் பிராந்திய பாதுகாப்பு மேற்பாடுகளை நாடுகள் செய்து கொள்ளலாம்.

1948—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11—ஆம் நாள் ஐ.நா. செயலர் ட்ரிக்விலீ (Trygye Lie) "ஐக்கிய நாட்டு அமைப்பில் கூட்டுப் பாதுகாப்பை உருவாக்க பிராந்திய ஏற்பாடு பயன்படுகிறது. ஆனால், பிராந்திய ஏற்பாடு சாசனத்தின் மேம்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தினை வெளியிட்டார். இக்கருத்தை சாசனத்தின் 103—ஆம் விதியும் தெளிவாகக் கூறியுள்ளது. "ஐக்கிய நாட்டுச் சபையின் அங்கத்தினர்கள் சாசனத்தின் அடிப்படையில் கொண்ட கடப்பாட்டிற்கும் நாடுகள் பன்னாட்டு ஏற்பாட்டினால் கொண்ட கட்டுப்பாட்டிற்கும் நாடுகள் பன்னாட்டு ஏற்பாட்டினால் கொண்ட கட்டுப்பாட்டிற்கும் இடையே முரண்பாடுகள் எழுந்தால், ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அடிப்படையில் கொண்ட கட்டுப்பாடு மேம்பாடு படைத்ததாயக் காணப்படும்." மேலும் லீ என்பார் 1950—ஆண்டு ஜுன் மாதம் 6—ஆம் நாள் இன்னொரு கருத்தை வெளியிட்டார். "கூட்டு சுய பாதுகாப்பு மனற்றும் பிரச்சனைகள் பிராந்திய நடவடிக்கைகள் இடைக்கால நடவடிக்கைகளாகவே

கருதப்படுகிறது. அவர்களுக்கு வருங்காலப்போரில் இருந்து பாதுகாப்பு அளிக்கம் ஆற்றல் கிடையாது." இன்னொரு விதத்தில் பின் கூறப்பட்டுள்ள அளவில் இக்கருத்தைக் கூறலாம். பிராந்திய ஏற்பாடுகள் பெருமளவில் ஐக்கிய நாட்டுச் சபையைச் சார்ந்து செயல்பட்டால்தான், அவைகளால் ஆக்கப்பூர்வமான நடவடிக்ககைகளை நிரந்தமாக ஆற்ற முடியம்.

பிராந்தியப் பற்று பன்னாட்டு உறவில் யாவரும் ஏற்றுக் கொண்ட ஒரு உண்மை, இன்று பிராந்தியப் பற்று புது பொருள் விளக்கத்தைப் பெற்று, முக்கியத்தவம் வாய்ந்து திகழ்கிறது. இப்பற்று இன்று நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறெனினும், பிராந்திய ஏற்பாடுகளுக்கு சில இடர்பாடுகள் உண்டு. ஒருங்கிணைப்புப் பிரச்சனை அதன் ஒரு இடர்பாடாகக் கருதப்படுகிறது. "ஒருங்கிணைப்புப் பிரச்சனைகள் அதிக அளவில் காணப்பட்டாலும், அக்கட்டுப்பாடுகள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமல், சார்பு நிலையில் தான் அமைந்துள்ளது." ஜார்ஜ் சீயல் (George Scelle) என்பார், "இந்த ஒருங்கிணைப்பில் அல்லது குழு அமைப்புகளில் சமாதானத்திற்கான உத்தரவாதத்தைக் காண முடிகிறது" என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளார். அரசு ஒன்றிற்கு மேற்பட்ட முறையமைவுகளில் அங்கத்தினராக இருந்தால், அவ்வரசு தனது போர் விருப்பத்தைக் கட்டுப்படுத்துவதோடு, தான் பல முறையமைவுகளில் பெற்றிருக்கின்ற அங்கத்துவத்தின் உதவியோடு அம்முறையமைவுகளில் அங்கத்தினராய் இருக்கும் பிற நாடுகளின் போர் விருப்பையும் அமைதிப்படுத்தி தான் சார்ந்திருக்கும் அமைப்புகளைப் பாதுகாக்கும். மேலும், பிராந்திய அளவில் நாடுகள் பெறும் அனுபமும் கூட்டு முயற்சியையும், பிராந்திய எற்பாட்டை வெற்றிகரமாக ஒருங்கிணைப்பிற்கு உகந்த பன்னாட்டுக் கரத்தை உருவாக்கம் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும், அச்சூழ்நிலை உருவாகாவிடில் தேசியத்திற்கு மேம்பட்ட அத்துழைப்பு முயற்சிகள் நிச்சயமாக தோல்வியுறும்.

## ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் (Organisation of African Unity-OAU)

அதிகமான அக்கதினர்களைக் கொண்டு பல நோக்கோடு புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு பிராந்திய அமைப்பாக ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் காணப்படுகிறது. ஆப்பிரிக்க நாடுகளில் செயல்பட்டு வந்த பல சிறிய பிராந்திய குழுக்கள் ஒருங்கிணைந்து 1963—ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தை (OUS) நாளடைவில் 40 நாடுகளுக்கு மேற்பட்ட அங்கத்தினரக் கொண்ட அமைப்பாக வளர்ந்தது. இவ்வமைப்பின் சாசனம் ஆப்பிரிக்க பகுதியைச் சாராத நாடுகளை

(குறிப்புக்கான இடம்)

அவ்வமைப்பில் சேர்ப்பதைத் தடை செய்தது. இன்று எல்லா உறுப்பு நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளே காணப்பட்டது. சுதந்திரமும், இறைமையும் கொணட நாடுகள் மட்டும் அங்கத்துவம் பெறும் தகுதி பெற்றன. அவ்வமைப்பின் சாசனத்தை ஏற்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பிக்கும் நாடுடுகளை உறுப்பு நாடுகளின் ஒப்புதலை சாதாரண பெரும்பான்மை ஆதரவடன் பெற்று உறுப்பு நாடுகளாய் மாற்றுகின்றனர்.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் பின் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை கொண்டு செயல்படுகின்றது. அவை (i) ஆப்பிரிக்க நாடுகிடையே ஒற்றுமையையும் ஒருங்கிணைவையும் வளர்ப்பது (ii) முயற்சிகளை ஒருங்கிணைத்து ஆப்பிரிக்க மக்களின் நல்வழ்வை எய்துவது: (iii) ஆப்பிரிக்க நாடுகளின் சுதந்திரம், இறைமை மற்றும் நில ஒருமைப்பாட்டை பாதுகாப்பது (iv) ஆசிய பகுதியில் காலனி ஆதிக்கத்தை ஒழிப்பது; மற்றும் (v) மனித உரிமைப் பிரகடனம் மற்றும் ஐக்கிய நாட்டு சபை சாசனம் போன்றவற்றால் பன்னாட்டு ஒத்துழப்பை வளர்ப்பது போன்றவையாகும். இவை தவிர்த்து பின் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தத்துவங்களை தன்னகத்தே கொண்டு இவ்வமைப்பு செயல்படுகிறது. அவை: (i) பேச்சு வார்த்தை, மத்தியஸ்தம், நடுவர் தீர்ப்பு போன்ற வழிமுறைகளின் வாயிலாக பிரச்சனைகளுக்கு சுமூகமான திர்வ காணுதல்: (ii) அரசியல் வழிமுறைகளின் வாயிலாக பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வு காணுதல் எல்லா நிலைகளிலும் கண்டித்தல் மற்றும் (iii) கூட்டுச்சேரா கொள்கையை உறுதிப்படத்துதல் என்பவையாகும்.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் ஆரம்பிக்கபட்டவுடன், பொதுவான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கவும் பொருளாதார வளர்ச்சிக்குகந்த பொதுவான திட்டம் வளக்கவும், பொது நாணயம் மற்றும் பொது பாதுகாப்பு முறைகளை தோற்றுவிக்கவும் அதிகாரத்துடன் செயல்படக்கூடிய ஒரு மைய அரசியல் அமைப்பினைத் தோற்றுவிக்க கானா ஒரு முயற்சியை மேற்கொண்டது. அதிகாரத்துடன் செயல்படக் கூடிய மைய அரசியல் அமைப்பிற்கு தம் இறைமையச் சமர்ப்பிக்க ஆப்பிரிக்க நாடுகளின் இணைய சாசனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளின் தலைவர்களுக்கு விருப்பமில்லை. எனவே கானாவின் கட்டுக் கோப்பான முழு அளவிலான அரசியல் அமைப்பினை நாடுகள் நிராகரித்தது. அதே நேரத்தில் குறிப்பிட்ட பல பணிகளுக்காக மேலோட்டமாக ஒருங்கிணைவதை உறுப்பு நாடுகள் வரவேற்றன.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தின் மேம்பட்ட செயற்பாட்டு அமைப்பாக நாடுகளின் தலைவர்கள் அடங்கிய வருடாந்திர கூட்டம் கருதப்பட்டது. சாதாரண நேரங்களில் வருடத்தினற்கு இருமுறை கூடிய

அவ்வமைப்பின் பொது பணிகளை மேற்பார்வை அமைச்சர் குழு வருடந்திர கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கின்றது. நெருக்கடி நேரங்களில் அமைச்சர் குழுவின் அவசரக்கூட்டம் கூட்டப்படுகிறது. வருடாந்திர கூட்டத்தில் நாடுகளின் தலைவர்கள் மேற்கொள்ளும் முடிவுகளை அமைச்சர் குழு செயல்படுத்துகின்னறது. இவ்வமைப்பின் தொர்ச்சியான பணிகளை நிரந்தரமான பொதுச் செயலகம் ஒன்று நடத்திவருகின்றது. இச்செயலகம் கொள்கை உருவாக்கும் அமைப்புகளுக்கு உறுதுணையாய்த் திகழ்கின்றது. பொதுச் செயலகம் ஒரு நிர்வாக ஆணைய அமைப்போடு ஐந்து விசேட செயற்பாட்டு ஆணையங்களும் ஒரு மத்தியஸ்த ஆணையமும் இணைக்கப்பட்டுள்ளன.

பல நேரங்களில் ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் ஐக்கிய நாட்டு சபையுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்த பொழுது ரோடீசுஷியாவின் மீது தடைகள் விதிக்க ஐக்கிய நாட்டு சபையை ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் கட்டாயப்படுத்தியது. தன்னுடைய இராணுவ மற்றும் பொரளாதார பலவீனத்தை உணர்ந்து, ஆப்பிரிக்க நாடுகள் OMA—வின் வாயிலாக பொது அசெம்பிளி மற்றும் பாதுகாப்பு சபையில் வாதாடி இயான் ஸ்மித்தின் அரசாங்கத்தை கவிழ்க்க ஐக்கிய நாட்டு சபையின் நடவடிக்கைகள் மேற்கொண்டன. 1965—ஆம் ஆண்டு ரொடீசுஷியாவில் தன்னுடைய முடிவுகளைச் செயல்படுத்த பாதுகாப்பு சபை ஆப்பிரிக்க நாடுகளின் இணையத்தை நாடியது. மேலும் 1965—ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பை ஏற்படுத்த ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் ஆப்பிரிக்காவின் ஐக்கிய நாட்டு பொருளாதரா ஆணையமும் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. இது ஆப்பிரிக்காவின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு அடிகோலியது.

ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் பல நெருக்கடி எதிர்நோக்கியது. அது கலைக்கப்பட்டு விடும் என்ற அச்சம் ஆரம்பத்தில் நிலவியது. அதனுடைய நிரந்தர நலனை நிலையாக இப்பொழுது மதிப்பிட முடியாவிட்டாலும் அரசியல், பொருளாரதார, சமூக நலன் பேண அது பல காரியங்களை ஆற்றியுற்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அது ஆற்றிய பணிகளை ஆராயுமிடத்து, தொடர்ந்து பயனுடையதாகவும் திகழும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**பரஸ்பர பொருளாதரா உதவிக்கான குழு (Council of Mutual Economic Assisttance – COMECON)**

COMECON என்ற இக்குழு ஐரோப்பிய நாடுகளின் தேசியப் பொருளாதராத்தைத் திட்டமிட்டு ஒருகிணைத்து வளர்க்கவும், இந்நாடுகளின்

(குறிப்புக்கான இடம்)

பொருளாதரா மற்றும் சமூக முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தவும், தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தை வளர்க்கவும், தொழில் திறனைப் பெருக்கவும், உறுப்பு நாடுகளின் மக்கள் வளத்தை வளர்க்கவும், தொழில் திறனைப் பெருக்கவும், உறுப்பு நாடுகளின் மக்கள் நலனைப் பேணவும் மாஸ்கோவின் தலைமையின் கீழ் 1949—ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. COMECON-ன் சாசனம் 1949, 1962 ஆகிய ஆண்டுகளில் மாற்றி அமைக்கபட்பட்டது. 1962—ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மாற்றத்தின் வாயிலாக ஐரோப்பாவைச் சார்ந்த நாடுகளும் இவ்வமைப்பில் அங்கத்துவம் வகிக்க வழி வகை செய்யப்பட்டது. பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மன் ஜனநாயக குடியரசு, ஹங்கேரி, மங்கோலியா, போலந்து, ருமேனியா, ரக்ஷ்யா போன்ற நாடுகள் இவ்வமைப்பில் ஈடுபாடு கொண்ட முக்கிய உறுப்பினர்கள், அதிகாரப்பூர்வமாக அல்பேனியா இவ்வமைப்பில் அங்கம் வகித்தாலும் 1961—ஆம் அண்டு முதல் இவ்வமைப்பின் நடவடிக்கைகளில் அல்பேனியா தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. 1964—ஆம் ஆண்டு முதல் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளில் மட்டும் யூகோஸ்லாவியா பங்கேற்று வந்தது. ஒரு குழு, ஒரு நிர்வாககக் குழு, திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு குழு, விஞ்ஞான தொழில் நுட்ப ஒத்துழைப்பு குழு, ஏறக்குறைய இருபது நிலைக் குழுக்கள் மற்றும் பல நிலை அமைப்புகளின் வாயிலாக COMECON செயல்பட்டது. பணியின் செயல்பாட்டிற்கு உறுதுணையாக ஒரு செயலகம் இருந்தது. தலைமை அலுவலகம் மாஸ்கோவில் அமைந்துள்ளது.

தேசிய பொருளாதார திட்டங்களை ஒருங்கிணைத்தலும், அங்கத்திர்களிடையே செய்திகளைப் பரிமாறலும் COMECON -ன் முக்கிய நடடிவக்கைகளாகும். COMECON வாயிலாக அங்கத்தினர்களிடையே பொருளாதார ஒருங்கிணைவு ஏற்பட்டாலும், EEC—ஐப் போன்று பொது ஒருங்கிணைவு எண்ணிய அளவு ஏற்படவில்லை.

**எண்ணெய் ஏற்றுமதிநாடுகளின் அமைப்பு (Organistion of problem exporting counties OPEC)**

1960—ஆம் ஆண்டு ஈரக்கில் இவ்வமைப்பு நிறுவப்பட்டுள்ளது. ஈரான், ஈராக், குவெயித் சவுதி அரேபியா, வெனிசுலா போன்ற நாடுகள் இதில் ஆரம்ப உறுப்பினர்கள், அங்கத்துவ நாடுகளின் பெட்ரோலிய கொள்கைகளை ஒருங்கிணைத்தல்; பெட்ரோலிய நாடுகளின் தனிப்பட்ட கூட்டான நலன்களைப் பாதுகாத்தல்; சர்வதேச எண்ணைய் சந்தையில் எண்ணெய் விலையை அங்கத்துவ நாடுகளின் நலன் கருதி நிலையாக

வைக்கம் வழி முறைகளை வகுத்தல்; எண்ணைய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு நிலையான வருமானத்திற்கான திட்டமிடல்; திறமையாகவும் சிக்கனமாகவும், ஒழுங்காகவும் நுகரும் நாடுகளுக்க எண்ணெய் வழங்கல் போன்றவை இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோளாகும்.

அல்ஜீரியா, ஈக்வடோர், கேபன், இந்தோனேசியா, ஈரான், ஈராக், குவைத், லிபியா, நைஜீரியா, கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரேபிய நாடுகள், வெனிசுலா ஆகியவை இதன் அங்த்தினர்கள். பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் இதன் அங்கத்தினர் ஆகலாம்.

இவ்வமைப்பின் தலையாய அதிகாரம் கொண்டு நிறுவனம் 'மாநாடு' என்றழைக்கப்படுகிறது. இந்நிறுவனம் இவ்வமைப்பின் பொதுக் கொள்கையை வடிவிக்கின்றது. இதில் அங்கத்தவ நாடுகளின் பிரதிநிதிகள் அங்கத்துவம் விக்கின்றனர். 'மாநாடு' ஆண்டிற்கு இருமுறை கூடுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் இருந்து நியமனம் செய்யப்படும் ஆளுநர்களுக்கு இது அங்கீகாரம் வழங்குகிறது. ஆளுநர் குழுவின் தலைவரை இம்மாநாடு தேர்ந்தெடுக்கிறது. "அனைவரின் ஒப்புதல்" என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இது செயலபடுகிறது.

இவ்வமைப்பை ஆளுநர் குழு மேலாண்மை செய்கிறது. இக்குழு மாநாட்டின் முடிவுகளைச் செயல்படுத்துகிறது. வருடாந்திர வரவு செலவு கணக்கினை இது தயார் செய்கிறது. ஒவ்வொரு அங்தத்தவ நாட்டிலும் இருந்த ஒரு ஆளுநர் இக்குழுவில் இடம் பெறுகின்றார். ஒவ்வொரு ஆண்டும் இரு முறை இக்குழு கூடுகின்றது.

பொருளாதார ஆணையம் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பின் விசேட நிறுவனமாக செயலக அமைப்பிற்குட்பட்டுச் செயல்படுகிறது. சர்வதேச எண்ணேய் விலையை சமநிலையில் நிலையாகப் பராமரிக்க எணணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிற்கு இவ்வாணையம் உதவி செய்கின்றது. ஒரு குழு, தேசிய பிரநிதிகள் மற்றும் ஆணைய ஊழியர்கள் அடங்கிய ஒன்றாக இவ்வாணையம் காணப்படுகிறது. ஆண்டொன்றிற்கு இருமுறை மன்றக்குழு கூடுகிறது.

1976—ஆம் ஆண்டு எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஒரு விசேட கூட்டத் தொடரில் அமைப்பிற்கென ஒரு விசேட நிதி உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்நிதி 800 மில்லியன் அமெரிக்க டாலர்களைக் கொண்டிருந்தது. வளர்ந்து வரும் நாடுகளுக்கு கடனுதவி மற்றும் பல உதவிகள் வழங்கும்பல நோக்குடையதாய் இந்நிதி அமைந்தது.

இவ்வமைப்பின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுச் செயலரின் தலைமையின் கீழ் ஒரு செயலகம் செயல்பட்டு வருகிறது. ஒப்பந்களைச் செயல்படுத்தும் பணி மற்றும் மாநாட்டு முடிவுகளை

(குறிப்புக்கான இடம்)

செயல்படுத்தும் பணி ஆகியவற்றை பொதுச் செயலர், செயலக ஊழியாகளின் துணையோடு ஆற்றுகின்றனர்.

**தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு(Association of South East Asian Nations-ASEAN )**

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் 1967—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8—ம் நாள். பாங்காக் பிரகடனத்தில் கையொப்பமிட்டு உருவாக்கிய ஒரு பிராந்திய அமைப்பாகம். 1984—ஆம் ஆண்டு புருணை இவ்வமைப்பில் சேர்ந்தது.

இவ்வமைப்பு பின்வரும் சில முக்கிய குறிக்கோள்களுக்காக செயல்படுகிறது. அவை; பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுதுவது, சமூக மற்றும் கலாச்சார வளர்ச்சி, பொது நலனுக்காக பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்குதல், தென் கிழக்கு ஆசியப் பகுதியின் நிலையான தன்மையை உறுதிப்படுத்தல், ஒத்த நோக்கம் கொண்ட பன்னாட்டு மற்றும் பிராந்திய அமைப்புகளோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு சில முக்கிய செயல் திட்டங்களை நிறைவேற்றல் பொருளாதார ஒத்துழைப்பை வளர்ச்சியையும் ஏற்படுத்துதல், தென்கிழக்கு ஆகிய நாடுகள் மற்றும் உலக நாடுகளிடையே வாணிபத்தை வளர்த்தல், பொது ஆய்வு மற்றும் தொழில் நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்தல், போக்குவரத்து மற்றும் செய்திக் தொடர்பு ஒத்துழைப்பை ஏற்படுத்துல், சுற்றுலா மற்றும் தென்கிழக்கு ஆசிய கல்வியை வளர்த்தல், கலாச்சார, விஞ்ஞான, கல்வி மற்றும் நிர்வாக பரிமாற்றத்தை உருவாக்குதல் முக்கியத் திட்டங்களாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அரசாங்கத் தலைவர்கள் தேவைப்படும் போது கூடி சங்க அமைப்பிற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவதோடு, இவ்வமைப்பின் அமைச்சர்கள் அடங்கிய வருடாந்திர அமைச்சர்களின் கூட்டம் இவ்வமைப்பின் கொள்கைகளை உருவாக்கும் உயர்மட்ட அமைப்பாக கருதப்படுகிறது. அமைச்சர்களின் நடைபெறுகிறது. அமைச்சர்களின் கூட்டத்தை நடத்து நாட்டின் வெளியுறவு அமைச்சரும், உறுப்பு நாடுகளின் தூதுவர்களும் அடங்கிய ஒரு நிலைக குழு அமைச்சர்களின் கூட்டத்திற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இச்சங்க அமைப்பின் பணியினை மேற்கொள்கிறது. மேலும் இந்நிலைக் குழு ஒழுங்கான பணிகளை தொடர்ச்சியாகப் புரிவதோடு, அமைச்சர் கூட்டம் கூடுவதற்கு முன் சில முக்கிய முடிவுகளை மேற்கொள்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் பல குழுக்களின் பரிந்துரைகளையும் அறிக்கையும் வெளியுறவு அசைச்சர்களின் கவனத்திற்கு அக்குழு சமர்பிக்கின்றது. நிலைக்குழுவின் கீழ் நான்கு விசேடக் குழுக்களும்,

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பின் ஒத்துழைப்பிற்கு தேவையான பொருளாதார நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய ஐந்து குழுக்களும் உள்ளன. ஒவ்வொரு உறுப்பு நாட்டின் தேசிய செயலகம் நிறுவப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பின் மத்திய செயலகம் இந்தோனேசியாவிலுள்ள ஐகர்தாவில் இயங்கி வருகின்றது. இச்செயலகத்தை கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஒருவர் தலைமையேற்று நடத்தி வருகின்றார். இப்பொதுச் செயலர் பதவி அங்கத்துவ நாடுகளுக்கு இரண்டாண்டுக்கு ஒருமுறை அகரவரிசை கிரமமாக வழங்கப்படுகிறது. இந்யெலகத்தின இதர பெரிய அதிகாரிகளும் இயக்குனர்களும் மூன்று ஆண்டிற்குப் பதவி வகிப்பார்கள்.

### 4.1.10. தெற்காசிய நாடுகளின் இணையம் (South Asian Association for Regional Co-operation – SAARC)

1985—ஆம் அண்டு டிசம்பர் மாதம் 7—ம், 8—ம், தெற்கு ஆசியாவைச் சார்ந்த பங்களாதேக்ஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான, ஸ்ரீலங்கா ஆகிய ஏழு நாடுகளும் டாக்காவில் ஒன்று கூடி வரலாற்றுச் சிறப்புமிக்க சாசனத்தில் கையொப்பமிட்டு "தெற்காசிய நாடுகளின் இணையம்" (சார்க்) என்ற அமைப்பினை ஏற்படுத்திதெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். பன்னாட்டு அரசியல் முறையமைவில் உலக மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பங்கை தன்னகத்தே கொண்டிருக்கும் தெற்காசிய பிராந்தியத்தை சக்தி மிக்க ஒரு அமைப்பாக தெற்காசிய நாடுகளின் இணையம், உருவாக்கியது.

டாக்காவில் கையொப்பமிடப்பட்ட பிரகடனம் தெற்காசிய நாடுகளின் இணையத்தின் முக்கிய குறிக்கோளை தெளிவாகவும் திட்டமாகவும் விளக்கிக் கூறுகிறது, அவ்விளக்கம் பின்வருமாறு:

"அரசுகளின் தலைவர்கள் தங்கள் நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு உகந்த வண்ணம் மனித மற்றும் பொருளாதார வளங்களைப் பெருக்கி நாட்டு மக்களின் நலனையும் வாழ்கைத் தரத்தையையும் மேம்படுத்துதல் தங்கள் அடிப்படைத் நோக்கம் என உறுதி பூண்டனர். இக்குறிக்கோளை அடைய சமாதானமும் பாதுகாப்பும் அடிப்படை தேவை என்று இத்தலைவர்கள் உணர்ந்தனர், உலக மக்கட் தொகையில் நிலை, உற்பத்தி முடக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், மக்கட்தொகைப் பெருக்கத்தின் பாதிப்பு போன்ற பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளது என்னும் ஒத்த கருத்தை இந்நாட்டு தலைவர்கள் கொண்டுள்ளனர். இவர்கள் தங்கள் தனிப்பட்ட மற்றும் பிராந்திய வலிமை, தங்கள் ஆற்றல் மிக்க வியாபாரச் சந்தைகள், போதுமான அளவிலான தங்கள் மனித

(குறிப்புக்கான இடம்)

மற்றும் இயற்கை வளங்கள், தங்கள் பொருளாதாரம் ஆகியவற்றைப் பற்றிய உணர்வுடையவர்களாக காணப்படுகின்றனர். திறமையான பிராந்திய அத்துழைப்பின் மூலம், தங்கள் ஆற்றல்களை விரும்பத்தக்க முறையில் பயன்படுத்தி, மக்கள் நலனைப் பெருக்கி, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி தேசிய மற்றும் கூட்டு தற்சார்பை இந்நாடுகள் பெருக்கம் என்ற நம்பிக்கை கொண்டுற்றன. மனித பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய இந்நாடுகள் பன்னாட்டு உறவு மற்றும் தங்கள் நலன் சம்பந்தப்பட்ட பன்னாட்டு முடிவுவுகளைக் கட்டுபடுத்தும் ஆற்றல் ஆகியவற்றை போதுமான அளவு கொண்டுள்ளன.

அடிப்படையில் பின் கூறப்பட்டுள்ளவை பிராந்திய குறிக்கோட்களாக கருதப்படுகின்றன. அவை (i) தெற்காசிய நாடுகளின் இணையத்தைச் சார்ந்த உறுப்பு நாடுகள் வறுமை, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், பிணி, அறியாமை போன்ற பிரச்சனைகளை தமக்குள் பகிர்ந்து கொள்ளுதல்: (ii) பிராந்தியத்தைச் சார்ந்த மக்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துதல் என்ற நோக்கோடு சமூக மறறும் பொருளாதார வளாச்சியை துரிதப்படுத்தல் (iii) உறுப்பு நாடுகளின் தேசிய விருப்பங்களைக் கருத்தில் கொண்டு கூட்டு சார்புடைமையை எய்துதல்: (iv) உலக அளவில் பிராந்தியத்தின் பங்கை மேம்படுத்துதல்: (v) குழப்பங்களை உருவாக்கம் பதட்டநிலையைக் குறைத்து, சமூகமான பரஸ்பரப் போக்கை வளர்க்க முயற்சிக்கும் பிராந்திய அமைப்புகளை உருவாக்குதல் பொருளாதாரம் மற்றும் கலாச்சார சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சார்ந் சில குறிப்பட்ட பகுதிகளில் தன் கவனத்தை அதிக அளவில் செலுத்திய போதிலும் இவ்விணையத்தின் பிராந்திய ஒத்துழைப்பு சில பரஸ்பர உதவி புரியும் அசியல் சம்பந்தப்பட்ட நடவடிச்கைகளிலும் காணப்படுகிறது.

தெற்காசிய பிராந்தியதின் சமூக, அரசியல் செயற்பாட்டின் தெற்காசிய நாடுகளின் இணையம் பிரதிபலிப்பதோடு, இவ்விணையம் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைகிறது. பிராந்திய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட காரியங்களில் தெற்காசிய நாடுகளின் இணையம் கவனம் செலுத்தவில்லை. உறுப்பு நாடுகளிடம் ஏற்கெனவே நிலவிவரும் இருகூட்டு மற்றம் பல கூட்டு உறவுகளில் தலையிடா வண்ணம் தெற்காசிய நாடுளின் இணையம் உறுப்பு நாடுகளிடையே விரும்பத்தக்க முறையில் ஒரு நல்லுறவை உருவாக்கி வருகிறது. உறுப்பு நாடுகளுக்கு மேம்பட்டதோர் அமைப்பாக கருதப்படாமை அவ்விணையத்தின் ஒரு சிறப்பு அம்சமாக காணப்படுகிறது. எந்த ஒரு நாடோ அல்லது நாடுகளின் கூட்டமைவோ எந்த முடிவையும் உறுப்பு நாடுகளின் மீது தணிக்க இயலாது. கருத்திசைவை உருவாக்குதலின் அடிப்படையில் இல்லாமல்

எல்லா முடிவுகளும் மேற்கொள்ளுவதில் அங்கத்துவ நாடுகளின் இறைமையும் சமநிலையும் பாதுகாக்கப்படுகின்றன.

1986—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தெற்காசிய நாடுகளின் இணையத்தின் இரண்டாம் மாநாடு இந்தியாவில் பெங்களூரில் வைத்து நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தெற்காசிய நாடுகளின் இணையத்தின் பொதுச் செயலகம் 1987—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16—ஆம் நாள் நேபாளத்தில் உள்ள காத்மண்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. இச்செயலக அமைப்பு தெற்கு ஆசிய நாடுகளின் இணையத்திற்கு மிகவும் தேவையான ஒரு நிர்வாக அமைப்பிற்கான அடிப்படையைத் தோற்றுவித்தது. 2004—ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் விளைவாக தெற்கு ஆசிய நாடுகளின் இணையத்திற்கு ஒரு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கை இன்று உருவாகியுள்ளது. எவ்வாறெனினும் தெற்கு ஆசிய பிராந்திய ஒத்துழைப்பை உருவாக்கி, சமாதானத்தை ஏற்படுத்தி, நிலைத்தன்மையை உறுதிபடுத்த, தெற்கு ஆசிய நாடுகளின் இணையம் தீவிரமாய் செயல்பட வேண்டும். இது நிறைவேற உறுப்பு நாடுகளுக்கு போதுமான விவேகமும் தூர நோக்கும் தேவை.

**தொகுப்புரை: 4.1.11**

கூட்டுப் பாதுகாப்பு, பன்னாட்டு கோட்பாடுகள், தேசீய கட்டுப்பாடும் தேசிய அரசுகளின் எழுச்சி, இரண்டாம் உலகப்போருக்குபின் ஏற்பட்ட உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் மற்றும் பிராந்திய பற்றிய இப்பாடத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**முக்கிய வார்த்தைகள்: 4.1.12**

1.கூட்டுப்பாதுகாப்பு – உலகில் அமைதியைப் பாதுகாப்பதற்கும் எடுத்துக்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கை ஆகும்.

2. பிராந்திய பற்று — அரசுகளையம், அவற்சைச் சார்ந்து வாழும் நிலப்புதிகளையுமு பிராந்திய அடிப்டையில் ஒருங்கிணைத்து அமைத்தல்

**இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்: 4.1.13**

Roy – International Relations Since 1919

(World Press)

**மாதிரி வினாக்கள்: 4.1.14**

4.1. கூட்டுப்பாதுகாப்பு பொருள் அதன் நோக்கமும்

4.1.1. கூட்டுப்பாதுகாப்பும், அதிகாரச் சமநிலையும்

4.1.2. பன்னாட்டு கோட்பாடு பற்றிய பொருள் விளக்கம்.

4.1.3. தேசீயம் மற்றும் பொருள் விளக்கம்

4.1.4. தேசீயத்தின் பரிணாம வளர்ச்சி

(குறிப்புக்கான இடம்)

4.1.5. தேசீயத்தின் நன்மைகளும் தீமைகளும்.

4.1.6. புதிய பிராந்தியப்பற்று

4.1.7. பிரிட்டிஷ் காமன்வெல்த்

4.1.8. பிராந்திய கூட்டமைப்புகள்

4.1.9. ஆப்பிரிக்க நாடுகளின் இணையம் (OAU) சிறு குறிப்பு எழுதுக.

4.1.10 எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) பற்றி எழுதுக.

4.1.11 தெற்காசிய நாடுகளின் இணையம் பற்றி (SAARC) பற்றி விவாதி.

(குறிப்புக்கான இடம்)

# அலகு — 5

**சர்வதேச சங்கம் — அதன் அமைப்பு மற்றும் பணிகள் — சர்வதேச சங்கம் தோல்விக்கான காரணங்கள் — ஐக்கிய நாடுகள் சபை – ஐக்கிய நாடு சபையும், சர்வதேச சங்கமும் — ஐ.நாவும் அமைதி மற்றும் பிரச்சனைகளும்.**

**முன்னுரை:**

முதலாம் உலகப் போரில் முடிவில் மேற்கொள்ளப்பட்ட வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையின் அடிப்படையில் சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. பிறகு சர்வதேச சங்கம் 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்டன. பின்பு சர்வதேச சங்கம் பல காரணங்களால் தோல்வி ஏற்பட்ட பின்பு இரண்டாம் உலகப் போரின் முடிவால் ஐக்கிய நாடுகளின் சபை 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் உருவெடுத்தன. ஐக்கிய நாட்டு சபை மிக முக்கியமான உலக அரங்கு என்பதனை யாரும் மறுக்க முடியாது. மேலும் இவ்வுலகில் ஐ.நாவின் சானைகளையும் எடுத்து சொல்லப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்:**

சர்வதேச சங்கத்தின் அமைப்பு மற்றும் பணிகளை கற்றறிதல்.
சர்வதேச சங்கம் தோல்விக்கான காரணங்களை தெரிந்து கொள்ளுதல்.
ஐக்கிய நாட்டு சபையின் அமைப்பு மற்றும் அதன் சாதனைகளை பகுப்பாய்வு செய்தல்.

**அலகின் வடிவமைப்பு:**

சர்வதேச சங்கத்தின் குறிக்கோள் மற்றும் அமைப்பு
சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சிக்காலம்
சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்
ஐக்கிய நாடுகளின் சபையின் குறிக்கோள்கள்
ஐக்கிய நாடுகளின் சபையின் அமைப்பு
பன்னாட்டு நீதிமன்றம்
ஐக்கிய நாடுகளின் சமாதானத்தை நிலைநாட்டல்
ஐக்கிய நாடும் சர்வதேச சங்கமும்
ஐக்கிய நாடுகளின் சபை பற்றிய மதிப்பீடு
தொகுப்புரை (Summary)
முக்கிய வார்த்தைகள் (Key words)

(குறிப்புக்கான இடம்)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for futher studying)

மாதிரி வினாக்கள் (Model Questions)

## 5.1. சர்வதேச சங்கம்:

முதலாம் உலகப் போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையிலேயே சர்வதேச சங்கம் நிறுவுவது சம்பந்தப்பட்ட விதிகளும் இணைக்கப்பட்டன. உட்ரோவில்ஸனின் தலைமையின் கீழ் 19 பேர் அடங்கிய குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அது குறித்த நாடுகள் பல யோசனைகளை வெளியிட்டன. 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14—ஆம் தேதி வெளியிடப்பட்ட சர்வதேச சங்க உடன்படிக்கையின் பூர்வாங்க வரைவு சில திருத்தங்களுக்குப் பிறகு 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் தேதி கூட்டப்பட்ட சமாதான மகாநாட்டினால் ஒரு முகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சர்வதேச சங்கத்தின் குறிக்கோள்:

சர்வதேச சங்கம் பின்வரும் நோக்கங்களைக் கொண்டிருந்தது.

1. உலகில் அமைதியை ஏற்படுத்தி, நாடுகளிடையே ஒற்றுமை உணர்வை வளர்த்தல்
2. உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்குப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதில்லை என உறுதி கொள்ளச் செய்தல்.
3. நாடுகளிடையே நேர்மையான வகையிலும் விரும்பத்தக்க வகையிலும் உறவுகளை வளர்த்தல்:
4. உலக விவாகரங்களில் நாடுகளைப் பன்னாட்டுச் சட்டப்படி நடக்கத் தூண்டுதல்
5. நாடுகள் தங்களிடையே மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களை மதித்து நடக்கச் செய்தல் இவையே சர்வதேச சங்கத்தின் நோக்கங்களாகக் காணப்பட்டன.

சர்வதேச சங்க உடன்படிக்கையில் 26 விதிகள் காணப்பட்டன. ஏழு விதிகள், அச்சங்கத்தின் அமைப்பு, அதிகாரம், பேரவை, மன்றம் மற்றும் ஒரு நிலையான தலைமைச் செயலகம், போன்றவற்றை நிறுவுவதற்கு வேண்டிய வழிமுறைகளைக் கொண்டிருந்தன. அதன்விதி 14. ஒரு நிலையான பன்னாட்டு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட வழி செய்தது. போர்த்தளவாடங்களைக் குறைத்தல், கூட்டுப் பாதுகாப்பு, பிரச்சனைகளுக்குச் சமாதான முறையில் தீர்வு காணும் முறைகள், வெளிப்படையான அரசியல்

செயல்நயம், அதிகாரக் கட்டளை முறை (Mandate System) பன்னாட்டுச் சமூக மற்றும் பொருளாதாரக் கூட்டு நடவடிக்கைகள் செஞ்சிலுவைச் சங்க அமைப்பு மற்றும் சர்வதேசச் சங்க உடன்படிக்கையின் விதிகளின் திருத்தம் சம்பந்தப்பட்ட வழிகள் ஆகியவை பற்றி பிற விதிகள் தெளிவாக எடுத்துரைத்தன.

**சர்வதேச சங்கத்தின் அமைப்பு:**

சர்வதேச சங்கம் தன்னிடயே நான்கு பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. முதல் பிரிவில் பேரவை மன்றம் தலைமைச் செயலகம் ஆகியன அடங்கும். அதன் இரண்டாவது பிரிவில் பன்னாட்டு நிரந்தர நீதி மன்றமும், பன்னாட்டுத் தொழிலாளர் சங்கமும் காணப்பட்டன. சில துணை நிறுவனங்களும் அதிகாரக் கட்டளை ஆணைக் குழுவும் மூன்றாவது பிரிவாக விளங்கின. அதன் நான்காவது பிரிவில் சில சிறப்பு நிறுவனங்கள் காணப்பட்டன.

**சங்கத்தின் அங்கத்துவம் (Membership of the League):**

1919—ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்த நாடுகள் அனைத்தும் சர்வதேசச் சங்கத்தின் அங்கத்தினராக ஏனைய நாடுகள் அங்கத்துவம் பெறவேண்டுமென்றால், அதற்கு அந்நாடுகள் பேரவையின் 3ல் 2 பங்கு பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற வேண்டும். ஒரு நாடு சங்கத்தைவிட்டு வெளியேற வேண்டுமெனில் அதற்கு அது இரண்டு ஆண்டு கால அவகாசம் கொடுக்க வேண்டும். அதன்பிறகு, அந்நாடு சங்கத்திற்குச் செய்ய வேண்டிய தன் கடமைகளைச் செய்திருந்தால் வெளியேற அனுமதிக்கப்படும். சங்கத்தை விட்டு அங்கத்தினர்கள் நீக்கப்படுவது பற்றிய வழிமுறைகளை விதி 16 கூறியது அதன்படி சம்பந்தப்பட்ட நாடு தவிர, பிற நாடுகள் ஏகமனதாக ஆதரவு தரும் பட்சத்தில் ஒரு நாடு சங்கத்திலிருந்து நீக்கப்படலாம். இச்சங்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அங்கத்துவம் மறுக்கப்பட்டதாயினும், பின்னர் யூனியனுக்கு முதலில் அங்கத்துவம் மறுக்கப்பட்டதாயினும், பின்னர் அதுவும் அச்சங்கத்தின் உறுப்பினராயிற்று, எனினும் அது 1939—ஆம் ஆண்டும் பின்லாந்தின் மீது வலுத்தாக்குதல் மேற்கொண்ட பொழுது சங்கத்தினின்று புறம் தள்ளப்பட்டது. 1933 ஆம் ஆண்டு ஜெர்மனி சங்கத்தை விட்டு தானாகவே வெளியேற்றியது 1937 ஆம் ஆண்டு இத்தாலி தன் அங்கத்துவத்தை நிறுத்தியது. 1940 ஆம் ஆண்டு வாக்கில், பிரிட்டன் மற்றும் பிரான்சு ஆகிய இருவல்லரசுகள் மற்றும் சுமார் 40 நாடுகள் ஆகியன மட்டுமே சர்வதேசசங்கத்தின் உறுப்பினர்களாகக் காணப்பட்டன.

(குறிப்புக்கான இடம்)

**பேரவை (Assembly):**

சங்கத்தின் அங்கத்தினராக இருக்கும் எல்லா நாடுகளும் இடம் பெற்ற பேரவையில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு இருந்தது. எனினும் ஒவ்வொரு நாடும் மூன்று பிரதிநிதிகள் வரை அனுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பேரவை ஒருவரையும் எட்டு துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுத்தது. பேரவை அல்லது மன்றத்தில் முடிவுகள் எடுப்பதற்கு வாக்களித்தவர்களிடையே ஏகோபித்த தன்மை (Unanimity) தேவை என 5— ஆவது விதி கூறியது. ஆனால் வழிமுறை சம்பந்தப்பட்ட சிக்கல்களைத் தீர்க்கச் சாதாரணப் பெரும்பான்மை ஆதரவு பேரவையில் கிடைத்தால் போதுமானது. புது அங்கத்தினர்களைச் சேர்க்க பேரவையில் 2/3 பங்கு அங்கத்தினர்களின் ஆதரவு தேவை. சர்வதேச சங்கம் செயல்படும் எல்லைக்குள்ளான விவாகரங்களைக் கவனிக்க பேரவைக்கு 3—ஆவது விதி முழு அதிகாரம் வழங்கியது. நடைமுறையில் மன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட காரியங்களிலும் பேரவை தனது கருத்துக்களையும் சிபாரிசுகளையும் அறிவித்து வந்தது. பேரவை, விவாதங்கள் நடக்கும் மன்றமாகத் திகழ்ந்தது. பொதுச் செயலாளரையும், நீதிபதிகளையும் மன்றத்தோடு பேரவையும் அமர்த்து தேர்ந்தெடுத்தது. மன்றத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களைப் பேரவை தேர்ந்தெடுத்து நிதி விவகாரங்களில் முழு அதிகாரமும் பேரவைக்கு அளிக்கபட்டிடிருந்தது. இப்பேரவை உலகப் பொதுக் கருத்தினையும் சிறிய நாடுகளின் எண்ணங்களையும் பிரதிபலித்தது. சர்வதேச சங்க உடன்படிக்கையை பேரவையின் பெரும்பான்மையுடனும் மன்றத்தின் ஏகோபித்த ஒப்புதலுடனும் திருத்தி அமைக்கலாம்.

**மன்றம் (The Council) :**

ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டபடி இதில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் நிரந்தர அங்கத்தினராகவும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாடுகள் அங்கத்தினராகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா உலகநாடுகள் சங்கத்தில் அங்கத்திலும் பெறவில்லை. மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படம் அங்கத்தினர் எண்ணிக்கை 1922—ஆம் ஆண்டு ஆறாகவும் 1926 ஆம் ஆண்டு ஒன்பதாகவும் உயர்த்தப்பட்டது. எனினும் ஜெர்மனியும், ஜப்பானும் மன்றத்திலிருந்து வெளியேற்றியதால் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது. 1934 ஆம் ஆண்டு ரஷ்யா சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது உடனடியாக அதற்கு மன்றத்தில் நிரந்தர அங்கத்துவம் கொடுக்கப்பட்டது. ஆயினும் நிரந்தர உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகவே

(குறிப்புக்கான இடம்)

காணப்பட்டனர். பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டாக மாற்றப்பட்டது. 1939 ஆம் ஆண்டு வாக்கில் பிரிட்டன், ரஷ்யா, பிரான்சு ஆகிய மூன்ற நிரந்தர உறுப்பினர்கள் மட்டுமே காணப்பட்டன. அதே ஆண்டு சோவியத் யூனியன் வெளியேற்றப்பட்டு விடவே அவ்வெண்ணிக்கை இரண்டாகக் குறைந்தது.

1923—ஆம் ஆண்டு வரையிலும் இம்மன்றம் ஒவ்வொரு மாதமும் கூடியது. அதன்பின்னர் ஒவ்வொர ஆண்டும் மார்ச், ஜுன், செப்டம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் குறிப்பிட்ட தேதிகளில் கூடியது. தேவைப்பட்ட பொழுது விசேடக் கூட்டங்களும் கூட்டப்பட்டன. 1925 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மன்றத்தில் அங்கத்தினராக இருந்த நாடுகள் தமது வெளியுறவு அமைச்சர்களை மன்றக் கூட்டங்களில் பங்கு பெற அனுப்ப முற்பட்டதால் இம்மன்றத்தின் அதிகாரமும் முக்கியத்துவமும் அதிகரித்தன.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை மன்றம் கவனித்தது மன்றம் ஏகமனதாகத்தான் முடிவுகள் எடுக்க முடியும் என்று காணப்பட்டது. நாடுகளிடையே முறிவை ஏற்படுத்தக் கூடிய தகராறுகள் குறித்து முடிவுகள் எடுக்கப்படும்பொழுது அத்தகராறுகளில் சம்பந்தப்பட்ட நாடுகளது வாக்குகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. மன்றத்தில் விவாதிக்கப்படும் விஷயங்களில் சம்பந்தப்பட்ட நாடுகள் சங்கத்தில் அங்கத்தினராக விரும்பின், அவ்விவாதம் முடியும் வரையிலும் மன்றத்தில் அங்கத்துவம் பெற உரிமை பெற்றிருந்தன. காலப்போக்கில் மன்றத்தில் விவாதங்கள் தாமதத்திற்கும் சமரசத்திற்கும் வழிகோலின.

### தலைமை செயலகம் (The Secretariat):

சங்க உடன்படிக்கையின் ஆறாவது விதி தலைமைச் செயலகம் பற்றிக் குறிப்பிட்டது. இது சர்வதேச சங்கத்தின் மற்றொரு முக்கிய உறுப்பாகத் திகழ்ந்தது. இச்செயலகம் பொது செயலாளரையும் அவரது பிற சக ஊழியரையும் கொண்டிருந்தது. சர்வதேசச் சங்க உடன்படிக்கையில் சர். எரிக் டிரம்மன்ட் என்பவரின் பெயர் பொது செயலாளராகப் பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டது. அவருக்குப் பின்னால் வந்த அத்தனை பொதுச் செயலாளர்களும் மன்றத்தின் சிபாரிசோடு பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல்வேறு நாடுகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 750 ஊழியர்கள் 11 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். இவர்கள் முடிவுகளைச் செயலாக்குதல், தகவல் அறிவித்தல், உடன்படிக்கைகளைப் பதிவு செய்தல், நிர்வாகத்தை இயக்குதல் விசாரணை செய்தல், போன்ற பணிகளைச் செய்து வந்தனர். சங்கத்தின் எல்லாக் கூட்டங்களுக்கும், தலைமைச் செயலர், பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். வேண்டுகோளின் அடிப்படையில், கூட்டத் தொடர்களைச் தலைமைச் செயலர் கூட்டினார். மேலும் விசாரணைகள் நடத்த தேவையான

(குறிப்புக்கான இடம்)

ஒழுங்குகள் செய்தார். சர்வதேச சங்கத்தின் பல்வேறு உறுப்புகளின் பணிகளையும் இவர் ஒருங்கிணைத்தார்.

**பன்னாட்டு நிரந்தர நீதிமன்றம் (The permanent Court of International Justice):**

சர்வதேசப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் ஆலோசனைகள் வழங்கவும் 14வது விதியின்படி ஒரு பன்னாட்டு நிரந்தர நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்நீதிமன்றம் 1921 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் 11 நீதிபதிகளும் (1930—ல் 15 நீதிபதிகள்), 4 துணை நீதிபதிகளும் (1936 ல் துணை நீதிபதி பதவி ஒழிக்கப்பட்டது) பேரவையிலும் மன்றத்திலும் பெரும்பான்மை ஆதரவோடு, திறமையின் அடிப்படையில் அவர்கள் சார்ந்திருக்கும் தேசத்தைக் கணக்கிடாமல் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நீதிபதிகள் வழங்கும் தீர்ப்பு பெரும்பான்மை தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது. ஒரு பிரச்சனையை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் இதன் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அப்பிரச்சனைகளை இந்நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரணை செய்தது. இந்த உலக நீதிமன்றம் பேரவைக்கும் மன்றத்திற்கும் ஆலோசனைகள் வழங்கியது. இது ஆக மொத்தம் 600 ஆணைகளைப் பிறப்பித்தது. 65 வழக்குகளை விசாரித்து 35 தீர்ப்புகளை அளித்தது. அத்துடன் இது பாரபட்சமற்ற மன்றம் என்ற பெயரையும் சம்பாதித்தது.

**பன்னாட்டு தொழிலாளர் சங்கம் (International Labour Organization)**

பன்னாட்டுத் தொழிலாளர் சங்கம் தன்னாட்சி உரிமையுடைய ஒரு அமைப்பாகும். சர்வதேச சங்க உறுப்பினர்கள் அத்தனை பேரும் பன்னாட்டு தொழிலாளர் சங்கத்திலும் உறுப்பினராயினர். வேலை நேரம் நிர்ணயித்தல் தொழில் ஒழுங்குபடுத்தல், வேலையில்லாத திண்டாட்டத்தை நீக்குதல் வாழ்விற்குத் தேவையான ஊதியம் வழங்கல், விபத்து போன்றவற்றிலிருந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், பெண்களையும், சிறுவர்களையும் பாதுகாத்தல் தொழில் அடிப்படையில் தொழில் நுட்பக் கல்வி கொடுத்தல், சங்கங்கள் அமைக்க உரிமை வழங்கல், பின்தங்கிய நாடுகளுக்கு தொழில் நுட்ப உதவி அளித்தல், வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற சேவைகளைப் புரிந்து அதன் மூலம் சமூக நீதியை ஒழுங்குபடுத்தி உலக சமாதானத்தை வளர்ப்பதே பன்னாட்டுத் தொழிலாளர் சங்கத்தின் குறிக்கோளாகும். 300 ஊழியர்கள் அடங்கிய பன்னாட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தனிப்பட்ட அலுவலகம் ஜெனிவாவில் இருந்தது. மாநாட்டிற்குத் தேவையான நிகழ்ச்சி

நிரலைத் தயாரித்தல் புள்ளி விபரங்களைச் சேகரித்தல், தொழில் சம்மந்தப்பட்ட செய்திகளை வெளியிடுதல் போன்ற பணிகளை அதன் அலுவலக ஊழியர்கள் ஆற்றி வந்தனர். பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் செய்த அநேக ஒப்பந்தங்கள் உறுதி செய்யப்படவில்லை. 1941 ஆம் ஆண்டு இறுதிவரை ஏறக்குறைய 50 நாடுகள் 879 ஒப்பந்தங்களை உறுதிப்பாடு செய்வதற்காகச் சர்வதேச சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தன. அவைகளில் 49 ஒப்பந்தங்களே உறுதி செய்யப்பட்டுச் செயலாக்கப்பட்டது.

**துணை நிறுவனங்கள் (The Auxiliary Institutions) :**

உலக நாடுகள் சங்கத்தின் துணை நிறுவனங்கள் சட்ட, அரசியல் சமூக பொருளாதாரத் தன்மையுடையவையாக இருந்தன. பன்னாட்டு நிரந்தர நீதிமன்றம், நிரந்தர அதிகாரக்கட்டளை ஆணைக்குழு மன்றத்தின் சிறுபான்மையினர் குழுக்கள் போன்றவை சட்டம் அல்லது அரசியல் தன்மையுடையவையாக இருந்தன. பன்னாட்டு தொழிலாளர் சங்கம் பொருளாதார நிதிச்சங்கம் செய்தித் தொடர்பு போக்குவரத்துச் சங்கம், உடல் நலச் சங்க ஆய்வறிவாளர் கூட்டுறவுச் சங்கம், போன்றவை சமூக பொருளாதாரத் தன்மையுடையனவாக இருந்தன.

**சர்வதேச சங்கம் பணியாற்றுதல்:**

சர்வதேச சங்கம் 20 ஆண்டுகள் பல்வேறு துறைகளில் பணியாற்றி வந்தது. இதனுடைய பணி குறிப்பிட்ட பகுதிகளில் வெற்றிகரமாக அமைந்த போதிலும், சில பகுதிகளில் இது தோல்வியைச் சந்திதத்து. உலகநாடுகள் சங்கம் செயல்பட்ட முறையை இங்கு காண்போம்.

**சர்வதேச சங்கமும் போர் தடுப்பும்:**

1920– ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் ஏற்படுத்தப்பட்ட பொழுது அதில் 41 அங்கத்தவ நாடுகள் காணப்பட்டன. பின்னர் 1921–ஆம் ஆண்டு 51 ஆகவும், 1932 ஆண்டு 57 ஆகவும், 1934 ஆம் ஆண்டு 60 ஆகவும் உயர்ந்தது

அதன் ஆரம்பகாலம் முதல் “பன்னாட்டு அரங்கில் அது ஒரு சாதாரண அமைப்புத்தான்” என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படாத வகையில் செயல்பட்டு வந்தது. அதன் தொடக்க காலத்தில் பல பிரச்சனைகளைத் திறமையாக சமாளித்தது. 1921 ஆம் ஆண்டு இத்தாலிக்கும் கிரீஸிற்கும் இடையே காணப்பட்ட பிரச்சனையைத் தீர்த்து வைத்தது. சர்வதேச சங்கம் இப்பிரச்சனையில் தலையிட்டிருக்காவிடில் அவ்விரு நாடுகளிடையே

(குறிப்புக்கான இடம்)

போர் மூண்டிருக்கக்கூடும், அதே ஆண்டு ஆஸ்டிரியாவிற்கும் ஹங்கேரிக்கும் இடையே காணப்பட்ட பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது.

1924 ஆம் 1930–க்கும் இடைப்பட்ட காலத்தில் சர்வதேச சங்கத்தின் புகழும் அதிகாரமும் கொடிகட்டிப் பறந்தது. 1924 வரை தங்களின் பிரதிநிதிகளைச் சங்கக் கூட்டங்களுக்கு அனுப்பி வைத்த அங்கத்துவ நாடுகள் அவ்வாண்டிலிருந்து தங்களுடைய வெளி விவகார அமைச்சர்களைக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் பணித்தன. 1929 ஆம் ஆண்டு அனைத்து ஐரோப்பிய நாடுகளில் வெளிவிவகார அமைச்சர்கள் பேரவைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

சர்வதேச சங்கம், 1925 ஆம் ஆண்டு கிரீஸ் மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகளிடையே காணப்பட்ட எல்லைப் பிரச்சனையைச் சுமூகமாகத் தீர்த்து வைத்தது. பின்னர் ஜெர்மனி சங்கத்தில் சேர்ந்த பொழுது அதன் புகழ் மிகவும் அதிகரித்தது. இக்காலக் கட்டத்தில் போரில் முடிந்திருக்கக் கூடிய பல பிரச்சனைகளைச் சர்வதேச சங்கம் தலையிட்டு சுமூகமாகத் தீர்த்தது. உதாரணமாக, 1924 ஆம் ஆண்டு ஒரு குழுவை நிறுவி துருக்கிக்கும் ஈராக்கிற்கும்மிடையே இருந்து வந்த எல்லைப் பிரச்சனையை ஆராயப் பணித்தது. பின்னர் அம்மன்றத்தின் தீர்ப்பின்படி இப்பிரச்சனைக்கு முடிவு காணப்பட்டது. சம்மந்தப்பட்ட நாடுகள் சர்வதேச சங்கத்தின் தூண்டுதலால் இம்முடிவை ஏற்க நேரிட்டது. இதே போல் லுதுவேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளிடையே காணப்பட்ட பிரச்சனைக்கும் சர்வதேச சங்கம் ஒரு சிறந்த முடிவைக் கொணர்ந்தது. இக்காலகட்டத்தில் நாடுகளிடையே காணப்பட்ட பல பிரச்சனைகளுக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சர்வதேச சங்கம் சிறப்பாகத் தீர்வு கண்டது.

**சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சி காலம்:**

சர்வதேச சங்கம் கடைசியாக மேற்கொண்ட இரு வெற்றிகரமான நிகழ்ச்சிகள் 1928–ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தம்' மேற்கொண்டதும் 1930 ஆம் ஆண்டு ஐரோப்பிய 'கூட்டாட்சி ஒன்றியம்' ஒன்றை நிறுவியதுமே ஆகும். அதன்பின்னர். 1931 க்கும், 1939 க்கும் இடைப்பட்ட காலத்தில் சர்வதேசச் சங்கம் பல தோல்விகளாகக் காண நேர்ந்தது. இக்காலகட்டத்தில் பல நாடுகள் வலு தாக்குதல்கள் மேற்கொள்ள தலைப்பட்டன. வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தைத் தூக்கி எறிவதில் நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடத் துவங்கின. பன்னாட்டு அரங்கில் காணப்பட்ட ஒரு நம்பிக்கை மிகுந்த சூழ்நிலை மாறி பேராசையும் போர் வெறியும் தலை தூக்கின. இக்காலத்தில் தோன்றிய பல பிரச்சனைகள் "சர்வதேசச் சங்கம் நீடித்திருக்குமா?" என்ற வினாவும்

(குறிப்புக்கான இடம்)

வகையில் அமைந்திருந்தன. அதிலும் குறிப்பாக 1931 ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கியபொழுதும் 1935 இல் இத்தாலி எத்தியோப்பியாவைத் தாக்கிய பொழுதும் சர்வதேசச் சங்கம் வெற்றி பெறத்தவறியதன் விளைவாகச் சர்வதேசச் சங்கத்தின் மீது நாடுகள் கொண்டிருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்தது. ஜப்பானும் இத்தாலியும் தண்டிக்கப்படாமல் போனதின் காரணமாக வேறுசில நாடுகளும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டன ஹிட்டலர் இக்காலக்கட்டத்தில் பல நாடுகளைத் தாக்கியதையும் சோவியத் யூனியன் பின்லாந்தைக் கைப்பற்றியதையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். பின்னர் ஜெர்மனி போலந்தைத் தாக்கிய பொழுது இரண்டாம் உலகப் போர் தொடங்கியது அத்துடன் சர்வதேச சங்கமும் மடிந்தது.

**சர்வதேச சங்கத்தின் தோர்விக்கான காரணங்கள்:**

உலகின் எல்லா நாடுகளும் சர்வதேசச் சங்கத்தில் அங்கத்துவம் பெறவில்லை. இதில் அங்கத்துவம் பெறாமலிருந்த வல்லரசு அமெரிக்காவாகும். சங்கத்தின் திறனாய்விற்குட்பட்ட நாடுகள் சங்கத்தினின்று விலகிக் கொண்டன சங்கத்தை வலிமைப்படுத்துவதற்குத் தேவையான அளவு தமது இறைமையில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்க எந்த நாடும் முன்வரவில்லை. முதலாம் உலகப் போரின் விளைவாக நிர்மூலமாக்கப்பட்டு ஃபாசிசம் (Fascism), கம்யூனிசம் ஆகிய கோட்பாடுகளிடையே பிரிக்கப்பட்டு, பரஸ்பர நம்பிக்கையற்ற ஐரோப்பிய வல்லரசுகளில் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த உலகில் அமைதியை நிலைநாட்டச் செய்யவும் வளமடையச் செய்யவும் சர்வதேச சங்கம் பாடுபட்டது.

சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து உலகின் வல்லரசுகளிடையே பரஸ்பர சந்தேக மனோபாவம் இருந்து வந்தது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனால் முடிக்கப்பட்ட உடன்படிக்கை அந்நாட்டு செனட் ஆமோதிக்காததால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உலகநாடுகள் சங்கத்தில் அங்கத்துவம் பெற முடியவில்லை. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு இதனையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த பிற வல்லரசுகளிடையே ஒற்றுமை நிலவவில்லை. உதாரணமாக பிரிட்டனும், பிரான்சும், இச்சங்கத்தினுள்ளேயே தமது போட்டி மனப்பாங்கைக் காட்டி வந்தன. இவ்விரு நாடுகளது நடவடிக்கைகளும் ஒன்றிற்கொன்று முரண்பட்டவையாக இருந்தன. பாரிஸ், மற்றும் வெர்செயில்ஸ் சமாதான உடன்படிக்கையின் விளைவாக அமைக்கப்பட்டது தான் சர்வதேச சங்கம், ஜெர்மானியர் வெர்செயில்ஸ் சமாதான உடன்படிக்கையை தம் மீது

(குறிப்புக்கான இடம்)

சுமத்தப்பட்டு உடன்படிக்கையாகக் கருதினர். இவ்வுடன்படிக்கை அவர்களை வெட்கித் தலைகுனிய வைத்ததாக அவர்கள் கருதினர். இதனால் உலகில் சமாதானம் நிலவச் செய்ய உலகநாடுகள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் ஜெர்மனி ஆர்வம் காட்டவில்லை. புரட்சிகர ரஷியாவும் சர்வதேச சங்கத்தை எதிர்ப்பதாகவே காணப்பட்டது.

1931 ஆம் ஆண்டு ஜப்பான், மஞ்சூரியாவைத் தாக்கியவுடன் உலக நாடுகள் சங்கத்தின் அழிவும் ஆரம்பமாயிற்று. ஜப்பான் தனது தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று அதை கேட்டுக் கொள்வதை விடுத்து உலக நாடுகள் சங்கத்தால் வேறொன்றும் செய்ய இயலவில்லை. உலக நாடுகள் சங்கத்தின் இத்தோல்வியினால் உந்தப்பெற்ற ஜப்பான், சோவியத் யூனியனுடனும் போர் தொடுக்கத் தயாராயிற்று 1933 ஆம் ஆண்டு ஜப்பான் உலக நாடுகள் சங்கத்தை விட்டு வெளியேறிற்று 1937– ஆம் ஆண்டு சீனாவிலுள்ள ஷாங்காய் (Shanghai) நகரத்தைத் தாக்கியதன் மூலம் ஜப்பானின் ஏகாதிபத்திய கொள்கை சர்வதேச சங்கத்திற்கும் உலகிற்கும் புரிந்தது. ஜப்பான் மஞ்சூரியாவில் முன்னேறிக் கொண்டிருந்த பொழுது சர்வதேச சங்கம் படைத்தளவாடக் குறைப்பு மாநாடொன்றைக் கூட்ட முயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்தது ஆனால் இம்முயற்சி பயனளிக்கவில்லை.

சர்வதேச சங்கத்தால் ஜப்பானைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதும் படைத்தளவாடக் குறைப்பு முயற்சியில் அது பெற்ற தோல்வியும் இத்தாலியும் பாசிசத் தலைவரான பெனிடோ முசோலினியை 1935 ஆம் ஆண்டு எத்தியோப்பியாவைத் தாக்க ஊக்குவித்தது. உலகநாடுகள் சங்கம் இத்தாலிக்கு எதிராகப் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை (Economic Sanctions) கொணர்ந்தது. ஆனால் இவற்றைப் பின்பற்ற எந்த அரசும் முழுமனதுடன் முன் வரவில்லை. இதனால் ஊக்கமடைந்த முசோலினி எத்தியோப்பியா முழுவதையும் வசப்படுத்தினார். 1937 ஆம் ஆண்டு இத்தாலி சர்வதேச சங்கத்தினின்று விலகியது.

1936– ஆம் ஆண்டு நிகழ்ந்த ஸ்பானியக் கிளர்ச்சியில் முசோலினியும் ஹிட்லரும் நேரடியாகத் தளபதி ஃபிராங்கோவிற்கு உதவினர். இவ்விஷயத்திலும் சர்வதேச சங்கத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதற்கு முன்பிருந்தே ஜெர்மனி தனது போர்த் தளவாடங்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தது இதனால் அச்சமடைந்த பிற ஐரோப்பிய அரசுகள் தம்மை வலிமைப்படுத்துவதிலும், பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்வதிலும், முனைந்திருந்தன. இங்ஙனம் இவ்வலரசுகள் தத்தம் பணிகளிலேயே ஈடுபட்டிருந்ததினால், சர்வதேச சங்கத்தால் ஸ்பெயினுக்கு உதவியளிக்க முடியவில்லை.

சர்வதேச சங்கத்தின் மறைவிற்கு உடனடிக் காரணமாக அமைந்தது ஜெர்மனியாகும். தேச நாடுகளால் தயாரிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கைகள் ஜெர்மனியருக்கு இழைக்கப்பட்ட அவமானமாகும் எனக் கருதிய ஜெர்மனியில் நாஸித் தலைவரான ஹிட்லர் அந்நாட்டின் படைபலத்தை அதிகரிப்பதில் முனைந்தார். லொகார்னோ (Locarno) உடன்படிக்கையை உடைத்தெறிந்த ஹிட்லர் போலந்தைத் தாக்கியதைத் தொடர்ந்து இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாயிற்று, சோவியத் யூனியனும் சர்வதேச சங்கத்தின் அழிவிற்குக் காரணமாயிற்று. அது 1939—ஆம் ஆண்டு பின்லாந்தைத் தாக்கியதால் உலகநாடுகள் சங்கத்தினின்று வெளியேற்றப்பட்டது.

உலகநாடுகள் சங்கம் நிறுவப்பட்ட பிறகும் ஐரோப்பாவில் நிலையான அமைதி நிலவவில்லை. இந்நிலையற்ற நிலைமைக்கு பரஸ்பர நம்பிக்கையற்ற பேராசை கொண்ட அரசுகளே காரணமாக இருந்தன. சர்வதேச சங்கத்தின் தோல்வியினின்று நாம் அறிவதென்னவெனில் எந்த ஒரு பன்னாட்டு நிறுவனம் வெற்றியடைய வேண்டுமென்றாலும் அதனில் அங்கத்தினராக உள்ள நாடுகள் ஒன்றையொன்று நம்புவனவாகவும் அந்நிறுவனத்தில் நம்பிக்கையுள்ளவனவாகவும் இருக்க வேண்டும்.

### 5.1.1. தேசிய சுய நிர்ணயம்:

சமாதான உடன்படிக்கைகளை நிர்ணயம் செய்யும்பொழுது சமாதான மாநாட்டில் கூடியவரையிலும் சுயநிர்ணயக் கொள்கையைப் பின்பற்றுவது என்று முடிவு செய்திருந்தனர். போலந்து மக்கள், செக்ஸ் (Czechs), க்ரோடஸ் (Croats), லெடஸ் (Letts), ஃபின்ஸ் (Finns), அல்சேஷியன்ஸ் (Alsatius), போன்றோர் அன்னையரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டனர். இதற்கு முன்னால் ஏற்படுத்தப்பட்ட எந்த உடன்பாட்டிலும் தேசியம் என்ற தத்துவத்திற்கு இம்மாதிரியான சிறந்த அளவிலான ஒரு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சில பிரச்சனைகளில் பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இவ்வாறு மக்களுக்க தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. 1919 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை போன்று எந்தவொரு உடன்படிக்கையும் பெரும்பாலான மக்களை அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவில்லை.

1919—ஆம் ஆண்டு முதல் உலகப்போர் ஆரம்பிக்கும் நேரம் ஏறக்குறைய 40 மில்லியன் மக்கள் அன்னிய ஆட்சியின் கீழ் வாழ்ந்து

(குறிப்புக்கான இடம்) வந்தனர். ஆனால் 1919—ஆம் ஆண்டு அவர்தம் எண்ணிக்கை 16 மில்லியனாகக் குறைந்தது.

வில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்தின் வாயிலாக யூகோஸ்லேவியா, போலந்து, செக்கோஸ்லவேகியா போன்ற நாடுகள் சுதந்திர நாடாக உருவெடுத்ததோடு, அல்சாகலோரேனும் பிரான்சுக்குக் கிடைத்தது. 'ஒரு தேசம் ஒரு நாடு' என்ற தத்துவத்தின் அடிப்படையில் சமாதானத்தை உருவாக்க முன்வந்தார்கள் சிறிய, சிறிய நாடுகளைத் தோற்றுவிக்கவும் தயங்கவில்லை.

வெர்செய்ல்ஸ் உடனபடிக்கை வில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்திலிருந்து சில சமயங்களில் விலகிச் சென்றது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை ஆனால் அவ்வாறு விலகிச் சென்றது தவிர்க்க முடியாத ஒன்று. மேலும் சமாதானத்தை உருவாக்க முனைந்தவர்கள் புதிய உலகமைப்பை உருவாக்குதலையும், மனித இனத்தைப் பற்றிய பொது நல காரியங்களைப் படைத்தலையும் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். உலக மக்களிடையே இடைவிடாத பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன்மூலம்தான் இக்குறிக்கோள்களை அடையமுடியும். ஜெர்மனி போன்ற ஒரு தனி நாட்டோடு செய்து கொண்டு ஒரு உடன்பாட்டில் இக்குறிக்கோள்களை இணைத்தல் கூடாது.

வில்சனின் தத்துவங்கள் ஒன்றுக்கொன்ற முரண்பட்டிருப்பது இன்னொரு பிரச்சனையாகும். ஆஸ்திரோ ஜெர்மன் இணைப்பைத்தடை செய்யும் உடன்பாட்டு பகுதிகள் தேசிய சுய நிர்ணயம் என்ற தத்துவத்திலிருந்து விலகிச் சென்றமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆனால் இவ்விணைப்பு அனுமதிக்கப்பட்டால் தேவையான நீதி என்பது மதிக்கப்படாமலிருப்பதோடு 'நிலையான அமைதிக்கு இவ்விணைப்பு அனுமதிக்கப்பட்டால் 'தேவையான நீதி என்பது பதிக்கப்படாமலிருப்பதோடு 'நிலையான அமைதிக்கு' அவ்விணைப்பு ஒரு அபாயமாக அமைந்திருக்கும் இவ்விதமாய் கடைசி உடன்பாட்டின் ஒவ்வொரு பகுதியும் அப்பகுதி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தேவையான நீதியை வழங்கும் அடிப்படையில் அமைதல் வேண்டும் என்ற அடிப்படையைத் தேசிய சுய நிர்ணய தத்துவம் செயல்படுத்தப்படும் போது ஆங்காங்கே அது மீறப்பட்டிருப்பதை உணரலாம்.

### 5.1.2. ஐ.நா.வின் துவக்கம்:

இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருக்கும் போதே பிரிட்டனும் அதனுடைய நட்பு நாடுகளும் சர்வதேச சங்கத்தின் வாரிசாக ஒரு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினர். நாடுகள் பாதுகாப்பின்றிக் காணப்பட்ட அச்சூழ்நிலையில்

(குறிப்புக்கான இடம்

அமைதியை விரும்பிய நாடுகள் அனைத்தும் இருளை அகற்றி நம்பிக்கை ஒளி தரக்கூடிய வகையில் செயலாற்றும் ஒரு நிறுவனத்தை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் தேவை உலகெங்கிலும் உணரப்பட்டது. இந்த எண்ணத்தை மனதில் கொண்டே அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் சர்ச்சிலும் 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடர்ச்சியாகப் பலமுறை சந்தித்து இது பற்றி விவாதம் மேற்கொண்டனர். அதே ஆண்டு உருவாக்கப்பட்ட அட்லாண்டிக் சாசனத்தின் ஒரு புதிய பன்னாட்டு நிறுவனம் உருவாக்கப்படும் என்பதன் அறிகுறி காணப்பட்டது. 1942 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அட்லாண்டிக் சாசனத்தின் அடிப்படைத் தத்துவத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தின் மூலமாக 26 நாடுகள் அங்கீகரித்தன. இதைத் தொடர்ந்து 1943 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி பொதுப் பாதுகாப்புப் பற்றிய மாஸ்கோ பிரகடனம் வெளியிடப்பட்டது. பன்னாட்டு அமைப்பின் தேவையையும் அவ்வமைப்பு கூடிய விரைவில் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதையும் இந்த பிரகடணம் வலியுறுத்தியது. 1944 ஆம் ஆண்டு நடந்த டம்பார்டன் ஓக்ஸ் (Dumbarton Oakes) மாநாட்டின் போது ஐ.நா.வின் முக்கிய அம்சங்களைக் குறித்து வல்லரசுகள் விவாதித்தன. ஆனால் வல்லரசுகளின் மறுப்பானை குறித்து இவை எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. இதன்பின்னர் இங்கிலாந்து சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகியவற்றின் தலைவர்கள் யால்டாவில் (Yalta) கூடி இப்பிரச்சனை குறித்து மீண்டும் விவாதம் நடத்தினர். வழிமுறை சம்பந்தப்பட்ட விஷயங்களில் (Procedural) மறுப்பாணை அதிகாரத்தை வல்லரசுகள் பயன்படுத்தக்கூடாது என்ற அவர்கள் தீர்மானித்தனர். மேலும் ஒரு தகராறில் வல்லரசு ஒன்று சம்பந்தப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிடினும் ஐ.நாவின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதில் வல்லரசுகள் ஏகமனதாக ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சான் பிரான்சிஸ்கோ நகரில் கூடிய 50 நாடுகள் 1945 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் தேதி ஐ.நா.வின் சாசனத்தில் கையொப்பமிட்டன. தேசிய இறைமை சம்பந்தப்பட்ட கோட்பாடுகளும், வல்லரசுகள் ஏகமனதாக முடிவெடுப்பது பற்றிய விதிகளும், அவ்வமயம் சாசனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மூன்று வல்லரசுகளுடன் சீனா, பிரான்சு ஆகிய இரு நாடுகளும் பாதுகாப்புக் குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக்கப்பட்டன. முக்கியமான தீர்மானங்கள் யாவற்றிலும் இந்த ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் மறுப்பாணை கொண்டிருப்பர் என்று

(குறிப்புக்கான இடம்)

சாசனத்தின் 27—வது விதியில் சேர்க்கப்பட்டது. அர்ஜென்டினாவையும், போலந்தையும் ஐ.நாவில் சேர்த்தல், வல்லரசுகளின் மறுப்பாணை போன்ற பல்வேறு விஷயங்களைக் குறித்துக் தற்காலிகப் பிரச்சனைகள் தோன்றின. அதிர்ஷ்டவசமாகக் கருத்தொருமைப்பாடு கண்டெய்தப்பட்டு, சாசனம் கையெழுத்திற்குத் தயாராக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் ஐ.நா சபை உருவெடுத்தது. போரின் பொழுது காணப்பட்ட நாடுகளின் ஒற்றுமை தொடர வேண்டும் என்பதற்காகத்தான் ஐக்கிய நாடுகளின் சபை என்ற பெயர் இப்பான்னாட்டு நிறுவத்திற்குச் சூட்டப்பட்டது இதன் தலைமைச் செயலகம் நியூயார்க் மாநகரில் நிறுவப்பட்டன.

## ஐ.நா.வின் குறிக்கோள்களும் கொள்கைகளும் (Objective and principles of the U.N.)

ஐ.நா.சாசனத்தில் ஒரு முகவுரையும் 111 விதிகளும் காணப்படுகின்றன. ஐ.நா.வின் வழிகாட்டியாகத் திகழ்வது அதன் சாசனத்தின் முன்னுரையாகும். வருங்கால சந்ததியினரைப் போரின் உபாதைகளினின்று காப்பது ஐ.நா.வின் குறிக்கோள் என்று அதன் சாசனத்தின் முகவுரை கூறுகின்றது. மனிதனின் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகின்றது. பன்னாட்டுக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பும் உலகில் நீதியும் நிலவுவதற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவதில் ஐ.நா. கொண்டுள்ள திடமான நம்பிக்கையை இது தெரிவிக்கின்றது. சமூக முன்னேற்றம் நல்ல வாழ்க்கைத்தரம் போன்றவற்றை வளர்ப்பதை தமது குறிக்கோளாக ஐ.நா. கொண்டுள்ளது. பொது நடவடிக்கைக்கல்லாமல் வேறெதற்கும் படைகளைப் பயன்படுத்துவதில்லை என்று ஐ.நா.வின் முன்னுரையின் மிகச் சிறந்த அம்சம் என்னவென்றால் அது இந்திய, அமெரிக்க அரசியலமைப்புக்களைப் போல மக்களாகிய நாம் என்ற வாசகங்களுடன் ஆரம்பிக்கப்படுகின்றது. இதற்கு நேர் எதிரான பாணியில் பன்னாட்டுச் சங்கத்தின் ஒப்பந்தம் துவங்கியது. 'ஒப்பந்தம் செய்து கொள்ளும் உயர் நாடுகள்' என்ற வாசகம் பன்னாட்டுச் சங்கத்தின் உடன்படிக்கையின் ஆரம்பத்தில் காணப்பட்டது.

ஐ.நா.வின் நோக்கமும், கோட்பாடும் அதன் சாசனத்தின் முதலாவது அத்தியாயத்தில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஐ.நா.வின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1) பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுதல், உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கின்ற அல்லது பங்கம் விளைவிக்க அச்சுறுத்துகின்ற நாட்டிற்கெதிராகக் கூட்டு நடவடிக்கைகள் எடுத்தல்.

2) சம உரிமை, சுயநிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்,

3) பன்னாட்டு பொருளாதார, சமூக காலச்சார, மனிதாபிமான பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண பன்னாட்டு ஒத்துழைப்பைப் பெற முயற்சி எடுத்தல், மனித உரிமைகட்கும் அடிப்படை சுதந்திரங்கட்கும் மதிப்பை வளர்த்தல்.

4) மேற்கூறிய பொதுவான குறிக்கோள்களை எய்துவதற்கென நாடுகளெடுக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மையமாகத் திகழ்தல்.

ஐ.நா.வின் அடிப்படைக் கோட்பாடுகள் அதன் சாசனத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. நமது கட்டுப்பாடுகளையும் குறிப்பாக அமைதி நிலை நாட்டலையும் செயல்படுத்துவோம் என்று அங்கத்துவ நாடுகள் ஒப்புக்கொண்டன. ஐ.நா.வின் அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

1) உறுப்பினர் ஒவ்வொருவரது இறைமையையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது தான் ஐ.நா.சபை.
2) சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நல்லெண்ணத்துடன் எல்லா அங்கத்தினர்களும் செயல்படுத்த வேண்டும்.
3) அங்கத்துவ நாடுகள் யாவும் தமது தகராறுகளை அமைதியான முறையில், பாதுகாப்பிற்கும், நீதிக்கும் அமைதிக்கும் ஊறு ஏதம் நிகழாமல் தீர்த்துக் கொள்ளவேண்டும்.
4) அங்கத்துவ நாடுகள் அவற்றிடையே உள்ள உறவுகளில் ஒரு நாட்டின் அல்லது எல்லைக்கோ சுதந்திரத்திற்கோ பாதகம் ஏற்படும் வண்ணம் அச்சுறுத்தலையோ அல்லது படைகளையோ பயன்படுத்தக் கூடாது. மேலும் அவற்றின் நடவடிக்கைகள் ஐ.நாவின் குறிக்கோள்களுக்கு ஒவ்வாத முறையில் அமையக் கூடாது.
5) சாசனத்திற்கேற்ப ஐ.நா. எடுக்கும் நடவடிக்கைகளில் அங்கத்துவ நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் ஐ.நா.வின் நடவடிக்கைக்கு இலக்காகியுள்ள நாட்டிற்கும் அங்கத்துவ நாடுகள் உதவி அளிக்கக் கூடாது.
6) எந்த நாட்டின் உள்நாட்டு விவகாரத்திலும் ஐ.நா. தலையிடக்கூடாது. ஆனால் உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகள் அல்லது தாக்குதலுக்கு இணையான நடவடிக்கைகள் போன்றவற்றை நேரிடுவதற்கெனப்

பாதுகாப்புக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தலையீடெனக் கருதப்பட மாட்டாது.

7) பன்னாட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கென ஐ.நாவின் உறுப்பினரல்லாத நாடுகளும் இயன்ற அளவு இக்கோட்பாடுகளுக்கு ஒப்ப செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், பாதுகப்பிற்காகவும் ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகள் பிராந்திய ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கான உரிமையை ஐ.நா.சாசனம் ஆமோதித்தது. தனித்தனியாகவோ அல்லது கூட்டுச் சேர்ந்தோ சுய பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான உரிமை அங்கத்து நாடுகளுக்கு வழங்கப்பட்டன.

## ஐ.நா. சபையின் அமைப்பு:

அங்கத்துவம் : ஐ.நா.வின் சாசனத்தின் 1945—ஆம் ஆண்டு கையொப்பமிட்ட 51 நாடுகள் ஐ.நா.வின்உறுப்பினராயின. தற்பொழுது ஐ.நாவில் 192 உறுப்பினர்கள் உள்ளன. அமைதியை விரும்பவும் சாசனத்தின் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்தத் தயாராக உள்ளவையும் ஆன எல்லா நாடுகளும் ஐ.நாவின் உறுப்பினராகலாம். பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக்குப் பின் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் ஐ.நா.விலிருந்து புறந்தள்ளவோ அல்லது தற்காலிகமாகப் புறந்தள்ளவோ செய்யலாம். ஒரு முறை புறம் தள்ளப்பட்ட நாடு மீண்டும் இச்சபையில் உறுப்பினராக முடியாது தாமாகவோ ஐ.நாவிலிருந்து விலகிக் கொள்ளும் நாடுகளைப் பற்றி சாசனம் எதுவும் கூறவில்லை. இந்தோனேசியா ஐ.நாவின் அங்கத்துவத்தைத் தானாகவே ரத்து செய்து கொண்டது ஐ.நாவின் வரலாற்றில் நிகழ்ந்த இம்மாதிரியான முதல் நிகழ்ச்சி என இதைக் கூறலாம்.

ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் அதற்கு நிதி உதவி அளிக்கின்றன. அதன் துணைக்குழு ஒன்றின் சிபாரிசுக்கேற்ப பொதுச்சபை (General Assembly) ஒவ்வொரு நாடும் செலுத்த வேண்டிய நிதியின் அளவை நிர்ணயிக்கிறது.

சாசனத்தின் ஏழாவது விதி ஐ.நா.வின் முக்கிய உறுப்புக்களை விவரிக்கின்றது. இதன் முக்கிய உறுப்புகள் பின் வருமாறு:

1. பொதுச்சபை (The General Assembly)
2. பாதுகாப்புக்குழு (The Security Council)

3. பொருளாதார மற்றும் சமூகக் குழு (The Economic and Social council)

4. பொறுப்பாண்மைக் குழு ( The Trusteeship Council)

5. பன்னாட்டு நீதிமன்றம் (The Internationmal Court of Justice)

6. தலைமைச் செயலகம் (The secretariat)

1) பொதுச்சபை: ஐ.நாவின் அனைத்து அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டது. பொதுச்சபை, ஒவ்வொரு அங்கத்துவ நாடும் பொதுச்சபைக்கு ஐந்துபிரதிநிதிகள் வீதம் அனுப்பலாம் என அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. முக்கியமான விஷயங்களைக் குறித்து முடிவெடுப்பதற்குப் பொதுச்சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையின் ஆதரவு தேவை. பொதுச்சபை அதன் ஒவ்வொரு கூட்டத் தொடருக்கும் ஒரு தலைவரையும் ஒரு துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கின்றது. இச்சபை ஆண்டிற்கொருமுறை சாதாரணமாகக் கூடுகின்றது. செப்டம்பர் மாத்தில் துவங்கும் கூட்டத் தொடர் மூன்று மாதங்கள் நடக்கின்றது. பொதுச் சபையின் உறுப்பினரில் பெரும்பான்மையினர் விரும்பினாலும் அல்லது பாதுகாப்புக்குழு விரும்பினாலும் ஐ.நா. வின் தலைமைச் செயலாளர் இச்சபையின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டலாம். பொதுச் சபையின் பணிகளைப் புரிவதற்கென ஏழு குழக்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1) அரசியல் மற்றும் பாதுகாப்புக்கு (The Political and Security Committee)

2) பொருளாதாரம் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட குழு (Economic and Financial Committee)

3) சமூக மனிதாவிமானம் மற்றும் கலாச்சாரக்குழு (Social, Humanitarian and Cultural Committee)

4) பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Committee)

5) நிர்வாகம் மற்றும் வரவு – செலவுத் திட்டம் பற்றிய குழு (Administrative and Budgetary Committee)

6) சட்டக்குழு (Legal Committee)

7) சிறப்பு அரசியல் குழு (Special Political Committee)

(குறிப்புக்கான இடம்)

ஒவ்வொரு குழுவின் கூட்டங்களும் தனித்தனியே நடக்கின்றன. பொதுச் சபையின் அங்கத்துவ நாடுகள் யாவும் இக்கூட்டங்களிலும் பங்கு கொள்ளலாம்.

## பணிகளும், அதிகாரங்களும்:

1) சாசனத்தின் வரம்பிற்குட்பட்ட எந்த விஷயங்களையும் ஆராய்வதற்குப் பொதுச்சபை அதிகாரம் கொண்டுள்ளது. இது மட்டுமின்றி அதன் குழுக்களின் அதிகாரங்களையும் பணிகளையும் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் இச்சபை பரிசீலிக்கலாம். ஆனால் பாதுகாப்புக்குழு தலையிட்டுள்ள விஷயங்கள் பொதுச் சபையின் பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட முடியாது.

2) ஒரு விஷயத்தை ஆராய்ந்து அதுசம்பந்தப்பட்ட சிபாரிசுகளை அங்கத்துவ நாடுகட்கோ, பா்துகாப்புக் குழுவிற்கோ அல்லது இரண்டிற்குமோ அனுப்பும் உரிமை பொதுச் சபைக்கு உள்ளது.

3) ஐ.நா.வின் இதர நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெறும் வருடாந்திர அறிக்கைகளையும் விசேட அறிக்கைகளையும் இது பரிசீலிக்கின்றது. மேலும் இச்சபை வரவு செலவுத் திட்டத்தை ஆமோதித்து ஒவ்வொரு அங்கத்துவ நாடும் மொத்தச் செலவினங்களில் ஏற்றுக் கொள்ள வேண்டிய விகிதத்தை நிர்மயிக்கின்றது. இது மட்டுமின்றி சிறப்பு நிறுவனங்களின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இச்சபை பரிசீலிக்கின்றது.

4) பெறுப்பாண்மைக்குழுவை இச்சபை மேற்பார்வை செய்கின்றது.

5) ஐ.நா.வின் இதர உறுப்புகளின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது. உதாரணமாக:

   i) பாதுகாப்புக் குழுவின் பத்து தற்காலிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

   ii) பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் பதினெட்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

   iii) பொறுப்பாண்மைக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது.

   iv) பொதுச் சபையும் பாதுகாப்புக் குழுவும் தனித்தனியே வாக்களித்துப் பன்னாட்டு நீதிமன்றத்தின் பதினைந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றது.

6) பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக் கேற்ப பொதுச் செயலாளரை நியமனம் செய்கின்றது.

7) ஐ.நா.வின் சாசனத்தைத் திருத்தி அமைப்பதில் பொதுச்சபை சில அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

**பொதுச்சபை இரு வழிகளில் ஏதாவது பின்பற்றி முடிவுகள் எடுக்கலாம். அவை பின்வருமாறு:**

1) ஆஜராகி, வாக்களிக்கும் உறுப்பினரின் சாதாரணப் பெரும்பான்மையுடன்

2) ஆஜராகி, வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன்,

பாதுகாப்புக் குழுவின் தற்காலிக உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் பெருளாதாரம் மற்றும் சமூகக் குழு, பொறுப்பாண்மைக் குழு ஆகியவற்றின் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல், ஐ.நா.வில் ஒரு நாட்டிற்கு அங்கத்துவம் அளித்தல் அல்லது அதனின்று ஒரு நாட்டை புறம் தள்ளல் போன்ற முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பதற்கு மேற்கூறிய இரண்டாவது முறை பின்பற்றப்படுகின்றது. இதர பிற சாதாரண விஷயங்கள் சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானிக்கப்படுகின்றன.

**மதிப்பீடு**

சட்டப்பூர்வமான அதிகாரமும் அரசியல் பூர்வமான அதிகாரமும் பொதுச் சபைக்கு உள்ளன. ஆரம்பத்தினின்று இச்சபை ஒரு முக்கியமான பங்கு பெற்று வந்துள்ளது. பன்னாட்டு அரங்கமாகத் திகழும் இச்சபை ஐ.நா.வின் மிகப் பெரிய உறுப்பாகும். சாசனத்தின் வரம்பிற்குட்பட்ட எவ்விஷயத்தைக் குறித்தும் விவாதம் நடத்த இச்சபை உரிமை கொண்டுள்ளது. ஒரு முடிவைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பாதுகாப்புக்குழு மட்டுமே எடுக்க முடியும் என 950—ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட "அமைதி காப்பதற்கென ஒன்றிணைதல்" (Unting For Peace) என்ற தீர்மானம் பொதுச் சபையின் அதிகாரங்களை விரிவுபடுத்தியுள்ளது எனலாம். கொரியாவில் கம்யூனிசத் தலையீடு 1956—ஆம் ஆண்டு சூயஸ் பிரச்சனை — ஹங்கேரியில் சோவியத் தலையிட 1958—ஆம் ஆண்டு லெபனான் பிரச்சனை மற்றும் 1960 ஆம் ஆண்டு காங்கோப் பிரச்சனை ஆகியவை பொதுச் சபையால் மிகத் திறம்படக் கையாளப்பட்டன. வல்லரசுகளிடையே 1950—க்குப் பின் தோன்றிய கருத்து வேற்றுமை காரணமாகப் பாதுகாப்புக்குழு அதன் வலிமையை இழந்ததனால் பொதுச்சபையின் அரசியல் சம்பந்தப்பட்ட பணி எதிர்பார்த்ததை விட பலமடங்கு அதிகரித்துள்ளது. இன்னும் சொல்லப்போனல் பாதுகாப்புக் குழுவின் பின்னால் காணப்படுவது பொதுச் சபையாகும்.

- பாதுகாப்புக் குழு: உலகில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்ட வேண்டிய முக்கியப் பொறுப்பு பாதுகாப்புக் குழுவிற்கு உள்ளது. ஐ.நா.வின் ஆட்சித்துறையாகச் செயல்படுவது பாதுகாப்புக் குழு ஆகும். ஆரம்பத்தில் இக்குழுவில் ஐ.நா.வின் பதினோரு உறுப்பினர்கள் அங்கத்துவம் கொண்டிருந்தனர். 1965 ஆம் ஆண்டு இவ்வுறுப்பினரது எண்ணிக்கை பதினைந்தாக உயர்த்தப்பட்டது. இப்பதினைந்து உறுப்பினர்களில் ஐவர் நிரந்தர உறுப்பினராவர். அமெரிக்கா, சோவியூனியன், இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகிய ஐந்தும் தான் நிரந்தர உறுப்பினர்கள் எஞ்சியுள்ள 10 உறுப்பினர்கள் இரண்டாண்டுப் பதவிக் காலத்திற்கென பொதுச் சபையின் 3ல் 2 பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாதுகாப்புக் குழுவின் தற்காலிக அங்கத்துவம் பிராந்திய அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. (ஆசிய, ஆப்பிரிக்கப் பகுதி—5, கிழக்கு ஐரோப்பா—1, தென்ஆப்பிரிக்கா —2, மேற்கு ஐரோப்பாவும் இதர நாடுகளும் —2, உறுப்பினர்) பதவியினின்று ஓய்வு பெறும் நாடுகள் உடனடியாக இக்குழுவிற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. தற்காலிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதற்கெனப் போட்டியிடும் நாடுகள் உலக அமைதிக்கு ஆற்றியுள்ள பணி மற்றும் பிராந்தியப் பிரதிநிதித்துவம் ஆகியவை கணக்கிலெடுக்கப்படுகின்றன.

**வாக்கெடுப்பு முறை:**

1. பாதுகாப்புக்குழுவின் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
2. நடைமுறை சார்ந்த விஷயங்களைக் குறித்து இக்குழு திர்மானம் எடுப்பதற்கு ஒன்பது உறுப்பினரின் ஆமோதிப்புத் தேவை.
3. இதர முக்கியமான விஷயங்களை (Substantiat Matters): சம்பந்தப்பட்ட முடிவுகள் எடுப்பதற்கும் ஒன்பது உறுப்பினர்களின் ஆமோதிப்புத் தேவை. ஆனால் இந்த ஒன்பது வாக்குளில் எல்லா நிரந்தர உறுப்பினருக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்படும் பொழுது அந்நிரந்தர உறுப்பினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாவிடில் அதனின் மறுப்பாணையாகக் கருத முடியாது.
4. முக்கியமான விஷயங்களைக் குறித்து வாக்கெடுப்பு நடத்தப்படும் பொழுது நிரந்தர உறுப்பினர்களுள் ஒருவர் அதற்கு எதிராக வாக்கித்தால் அது மறுப்பாணை (Veto) என்ற கருதப்படும்.

**பணிகளும், அதிகாரங்களும்:**

1. பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் பராமரிப்பது தான் பாதுகாப்புக்குழுவின் அடிப்படைப் பணி ஆகும்.
2. ஒரு சச்சரவில் ஈடுபட்டள்ள நாடுகள் கலந்தரையாடல் மூலமாகவோ அல்லது சமரசம் மூலமாகவோ அல்லது நீதித்துறையின் தீர்ப்பிற்கேற்பவோ அல்லது பிராந்திய நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது அமைதியான வேறெந்த வழிகள் மூலமாகவோ தமது சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பாதுகாப்புக் குழு கூறலாம்.
3. பன்னாட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடும் என்று இக்குழு கருதும் எந்தத் தகராறை குறித்தும் அல்லது சூழ்நிலையைக் குறித்தம் விசாரணை நடத்த இக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.
4. அடிபணிய வைக்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதன் உறுப்பினரை இக்குழு கேட்டுக் கொள்ளலாம். இந்நடவடிக்கை பின்வருமாறு மேற்கொள்ளப்படலாம்.
   - i) முழுமையாக அல்லது அரைகுறையாக பொருளாதார உறவைத் துண்டித்தல்.
   - ii) செய்தித் தொடர்பைத் துண்டித்தல்.
   - iii) ராஜதந்திரி உறவுகளைத் துண்டித்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகள் பலனளிக்கவில்லையென்றால் தாக்குதல் நடத்தும் நாடுகளைத் தண்டித்து தாக்குதலைத் தடுப்பதற்கென ஐ.நா.வின் படைகளைப் பயன்படுத்தலாம் விமானப்படை, கடற்படை, தரைப்படை போன்றவற்றைப் பயன்படுத்தி நேரடி நடவடிக்கைகளோ அல்லது அச்சுறுத்தற்குரிய படைத்துறைச் செயல் முறைகளையோ பயன்படுத்தலாம். ஐ.நாவின் உறுப்புகள் இவ்விஷயங்களில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா சாசனம் குறிப்பிடுகின்றது. படைகளும் பொருட்களும் கடந்து செல்வதற்கான வழி உரிமைகள் அளிக்க வேண்டுமென்றும், மேலும் படைகளும் போர்களும் அளிக்க வேண்டுமெனவும் பாதுகாப்புக் குழுவின் வாயிலாக அங்கத்துவ நாடுகளுக்கு விண்ணப்பிக்கப் பொதுச்சபை அதிகாரம் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் இதற்கென பொதுச்சபை அதிகாரம் கொண்டுள்ளது ஒவ்வொரு நாடும் இதற்கென ஐ.நாவுடன் விசேஷ ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும். தீர்மானங்களைச் செயல்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளையும் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கெனப் பாதுகாப்புக் குழுவில் படைத்துறை அலுவலர் குழு (Military Staff Committee) ஒன்று காணப்படுகின்றது. இக்குழுவில்

(குறிப்புக்கான இடம்)

நிரந்திர உறுப்பினரின் படைத்தலைவர்களோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ அங்கத்துவம் வகிப்பர். நமது பாதுகாப்பிற்கென அங்கத்துவ நாடுகள் தனியாகவோ அல்லது இணைந்தோ நடவடிக்கை எடுப்பதை ஐ.நா.வின் சாசனம் தடை செய்யவில்லை. ஆனால் இவ்விஷயம் பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வரப்படல் வேண்டும்.

5. திருத்தி அமைக்கும் அதிகாரம் (Amending Power)

பாதுகாப்புக் குழுவின் ஆமோதிப்பைப் பெற்ற பின்தான் ஐ.நா.வின் சாசனம் திருத்தி அமைக்கப்பட முடியும் இங்ஙனம் திருத்த அமைப்பதற்குப் பாதுகாப்புக்குழுவின் ஒன்பது உறுப்பினர்களின் ஆமோதிப்பு வாங்கும் அதில் ஐந்து நிரந்தர உறுப்பினரின் ஒப்புதல் வாக்கும் இன்றியமையாதது.

6. பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைப் பாதுகாப்புக்குழு தேர்ந்தெடுக்கின்றது. சட்டம் சம்பந்தப்பட்ட எவ்விஷயங்களைக் குறித்தும் இந்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க இக்குழு அதிகாரம் பெற்றுள்ளது.

பொதுச்சபை போலன்றி தொடர்ந்து செயல்படும் இக்குழுவின் தலைமைச் செயலகம் நியூயார்க்கில் உள்ளது.

மதிப்பீடு

எதிர்பார்த்த அளவு பாதுகாப்புக்குழு வெற்றி பெறவில்லை. இதற்கான காரணம் மிகத் தெளிவானது. உலகப் போரின் போது வல்லரசுகளிடையே காணப்பட்ட ஒத்துழைப்பும் ஒற்றுமையும் போர் முடிந்தபின் தொடரவில்லை. இரண்டாவது உலகப் போருக்குப்பின் வல்லரசுகளிடையே போட்டி காணப்படலாயிற்று இதனால் தனித்தனி மறுப்பாணையைக் கொண்ட ஐந்து நிரந்தர உறுப்பினரை உடைய பாதுகாப்புக்குழு செயற்திறன் இழந்து விட்டது. வல்லரசுகளிடையே தோன்றிய கருத்து வேற்றுமைகள் பொதுச்சபையின் முக்கியத்திற்கு வழிக்கோலின், நடைமுறையில் பாதுகாப்புக்குழு ஒரு தேவையற்ற உறுப்பாக மாறிவிட்டது.

## பொருளாதாரச் சமூகக் குழு (The Economic and social council):

இக்குழுவின் மூலமாக உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறவும் வளமை, ஸ்திரத்தன்மை, நீதி ஆகியவை உள்ள உலகை உருவாக்கும் முயற்சியிலும் ஐ.நா. சபை ஈடுபட்டுள்ளது. இது மட்டுமின்றி பல்வேறு சிறப்பு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும் செய்கின்றது.

இக்குழுபிராந்தியப் பொருளாதாரக் குழுக்களின் உதவியுடன் செயல்படுகின்றது. ஆரம்பத்தில் 18 ஆக இருந்த இக்குழுவின் உறுப்பினரது எண்ணிக்கை 1965—ஆம் ஆண்டு 7 ஆக குறைந்தது. பின்னர் இது 54 ஆக உயர்த்தப்பட்டது. இதன் உறுப்பினர்களின் பொதுச் சபையின் 3—ல் 2 பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 18 உறுப்பினர்கள் மூன்றாண்டு பதவிக்காலத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக்குழுவின் தீர்மானங்கள் யாவும் குழுவின் கூட்டங்களின் பங்கு பெற்று வாக்களிப்போரின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுகின்றன. இக்குழு தனது தலைவரையும் துணைத்தலைவரையும் தேர்வு செய்கின்றது. சாதாரணமாக இக்குழு ஆண்டிற்கு இருமுறை கூடுகின்றதெனினும் தேவைப்படும் பொழுது விசேடக் கூட்டங்களும் கூட்டப்படலாம். இக்குழுவின் பணிகளில் பெரும்பாலானவை அதன் கீழுள்ள பல்வேறு பிராந்தியப் பொருளாதாரக் குழுக்களாலும் பணிசார்ந்த குழுக்களாலும் (Functional Committees) புரியப்படுகின்றன.

குழுக்களும், ஆணைக்குழுக்களும் (Committee and Commissions) பதினொன்று சிறப்பு நிறுவனங்களும் பணிசார்ந்த நிறுவனங்களும் இக்குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை பனிவருமாறு: பன்னாட்டு தொழிற்சங்கம், (International Labour Organisation) உலக தபால் ஒன்றியம் (International Postal Organisation) பன்னாட்டு நாணயமுறை நிதி (international Monetary Fund) உலக சுகாதார நிறுவனம் (would Helath Organisation) பன்னாட்டு விமான சேவை சங்கம் (International Civil Aviation Organisation) ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சார சங்கம் (UNESCO) புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி (IBRD) ஐரோப்பா, ஆசியா துார கிழக்கு தென் அமெரிக்கா ஆகியவற்றிற்கான பொருளாதார ஆணைக்குழு.

சில முக்கியமான பணிசார்ந்த ஆணைக் குழுக்கள் பின்வருமாறு: ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு குழந்தைகட்கான அத்தியாவசிய நிதி (UNICEF) பன்னாட்டு அணுசக்தி நிறுவனம் (IAEA) பன்னாட்டு வளர்ச்சித் திட்டம் (UNDP) மேற்கூறியவை மட்டுமின்றி தொழிற்சங்கங்கள் வர்த்தக சங்கங்கள் போன்ற 100—க்கும் அதிகப்பட்ட அரசாங்கத்துடன்

(குறிப்புக்கான இடம்)

தொடர்பற்ற (Non Government) பன்னாட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

**பணிகளும், அதிகாரங்களும்:**

வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் பொளாதார சமூக முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் தேவையான முழு வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குதல் ஆகிய பொறுப்புக்களை இக்குழு கொண்டுள்ளது. பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி. உடல்நலம், போன்ற விஷயங்கள் குறித்து ஆய்வுகள் நடத்தவும் அறிக்கைகள் தயாரிக்கவும் இக்குழு நடவடிக்கைகள் எடுக்கலாம். தனது ஆய்வுகளின் அடிப்படையில் உசிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பொதுச்சபைக்கும், விசேட நிறுவனங்களுக்கும் ஐ.நா.வின் உறுப்பினர்களுக்கும் இக்குழு சிபாரிசுகள் செய்யலாம். மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், மக்கள் எல்லோரது தனி உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பதற்கெனவும் இக்குழு சிபாரிசு செய்யலாம். தனது அதிகார வரம்பிற்குட்பட் விஷயங்களைக் குறித்து விவாதங்கள் நடத்துவதற்கென உலக நாடுகளை இக்குழு கூட்டலாம். ஒப்பந்தத்தின் வரைவைக் தயாரித்து பொதுச்சபையின் முன் அதனைத் தாக்கல் செய்யும் உரிமையும் இக்குழு பெற்றுள்ளது. பாதுகாப்புக் குழுவிற்குத் தேவையான தகவல்களை அளிக்கும் இக்குழு அதன்பணிகள் திறம்படச் செய்யப்படுவதற்குத் தனது ஒத்துழைப்பை அளிக்கின்றது. சிறப்பு நிறுவனங்கள் பணியை இக்குழு ஒருங்கிணைக்கின்றது. இந்நிறுவனங்களினின்று கிடைக்கப்பெறும் அறிக்கைகளை ஆராய்ந்து தன் கருத்துக்களைப் பொதுச்சபைக்கு இக்குழு தெரியப்படுத்துகின்றது.

**மதிப்பீடு**

சிக்கலான அமைப்பைக் கொண்ட பல்வேறு நிறுவனங்கள் இக்குழுவின் கீழ் காணப்பட்ட போதிலும் இவை ஆலோசனை வழங்கும் உரிமையை மட்டும் கொண்டுள்ளன. போர், பொருளாதாரம் ஆகிய இரண்டையும் கட்டப்படுத்தினால் தான் அமைதியைப் பெற முடியும். ஒரு நாட்டுடன் நேரடியாகப் போர் தொடுப்பதற்கு முன் தாக்குதல் நடத்திய நாட்டிற்கெதிராகப் பொருளாதாரத் தடைகள் (Economic Sanctions) போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற நிரந்தரமாக அமைதி காணப்பட வேண்டுமெனில் ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார வளம் காணப்பட வேண்டும். பொருளாதார மற்றும் சமூகக் குழு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், முழு வேலை வாய்ப்பு அளித்தல், வளர்ந்து வரும்

நாடுகளுக்கு நிதி உதவி அளித்தல், மனித உரிமைகட்கு மதிப்பளித்து அவற்றைப் பின்பற்றல் ஐ.நா.வின் சாசனம் எதிர்பார்த்த அளவு வெற்றிகரமாக இக்குழு செயல்பட்டு வருகின்றது. குழந்தைகளின் நலனுக்காகவும் உடல்நலனுக்காகவும் இக்குழுவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. பணி சார்ந்த நிறுவனங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இன்றியமையாத தொண்டு புரிந்து வருகின்றன.

## பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Counsil)

குடியேற்றப் பகுதிகளில் விடுதலை இயக்கம் இரண்டாவது உலகப் போருக்குப்பின் தீவிரமடைந்து இதனால் 75 சதவீதத்திற்கும் அதிகமான குடியேற்ற நாடுகள் விடுவிக்கப்பட்டன. எஞ்சியுள்ளவை மிக விரைவில் சுதந்திரம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய பகுதிகளைப் பின்வரும் இருமுறைகளில் ஒன்றைப் பின்பற்றி ஐ.நா. பாதுகாத்து வருகின்றது.

### 1) பொறுப்பாண்மை முறை (The Trusteeship System)

தன்னாட்சி இல்லாத பகுதிகள் (The Non-self Governing Areas) சர்வதேச சங்கத்தின் கீழ்காணப்பட்ட உரிமைக் கட்டளை முறை (Mandatory System) தோன்றியது தான் பொறுப்பாண்மை முறை ஐ.நாவின் கீழ் மிகப்பரந்த முற்போக்கான அடிப்படையைக் கொண்டுள்ளது. பொறுப்பாண்மை முறையை செயற்படுத்துவதற்கெனப் பொறுப்பாண்மைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் பொறுப்பில் விடப்பட்டுள்ள பகுதிகள் சுதந்திரத்தைப் பெற்று தன்னாட்சி நிறுவுவதற்குத் தேவையான அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி போன்ற துறைகளில் அப்பகுதிகளில் மக்கள் முன்னேற்றமடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இக்குழு செயல்படுத்துகின்றது. இக்குழுவில் பொறுப்பாண்மைக்குட்படுத்தப்பட்ட பகுதிகளை ஆட்சிபுரியும் அரசுகள் எல்லாவற்றின் பிரதிநிதிகளும், ஐந்து வல்லரசுகளின் பிரதிநிதிகளும், பொதுசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அங்கத்துவம் கொண்டுள்ளனர். பொறுப்பாண்மை உடைய நாடுகளின் எண்ணிக்கையும் பொறுப்பாண்மை அற்ற நாடுகளின் எண்ணிக்கையும் சமமாகக் காணப்படுவதற்குத் தேவையான அளவு அங்கத்தினரைப் பொதுச்சபை தேர்ந்தெடுக்கின்றது. இக்குழுவின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு அளிக்கப்பட்டுள்ளது. சாதாரணப் பொரும்பாண்மைக் கேற்ப இக்குழுவின் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தனது தலைவரைத்தானே தேர்ந்தெடுக்கும் இக்குழு தனக்கென விதிகளைக் கொண்டுள்ளது.

(குறிப்புக்கான இடம்)

ஆண்டிற்கு இருமுறை இக்குழு கூடுகின்றது. 1955—ஆம் ஆண்டு இக்குழு 11 ஆட்சிப் பகுதிகளுக்குப் பொறுப்புடையதாக இருந்தது. பின்னர் பசிபிக் தீவுகள் தவிர பிற பகுதிகள் யாவும் சுதந்திரம் அடைந்தன. பொறுப்பாண்மைக்குட்படுத்தப்பட்ட பகுதிகள் மட்டுமின்றி தன்னாட்சி புரியாத் பகுதிகளைக் குறித்தம் ஐ.நா.வின் சாசனத்தில் விதிகள் காணப்படுகின்றன. இத்தகைய பகுதிகளை ஆட்சிபுரியும நாடுகள் அப்பகுதிகளில் ஏற்பட்டள்ள பொருளாதார, சமூக, கல்வி வளர்ச்சி சம்மந்தமான அறிக்கை மட்டுமின்றி அப்பகுதிகள் சுய ஆட்சி புரிவதற்கு அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறித்தும் ஐ.நா.வின் பொதுச் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் ஒரு பகுதி தன்னாட்சி அடைந்த பின்னர் அதனை மேற்பார்வை செய்த நாடுகள் அதனை குறித்து தலைமை செயலாளருக்கு அறிக்கை ஏதும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. சர்வதேச சங்கத்திடமிருந்து உரிமைக் கட்டளை முறைக்கேற்ப தென் ஆப்பிரிக்கா பெற்ற தென்மேற்கு ஆப்பிரிக்காவைக் குறித்து அது ஐ.நா.விற்கு எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்க மறுத்தது. ஐ.நா.வின் அங்கத்தினரிடையே அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

**பணிகளும், அதிகாரங்களும்:**

பொதுச்சபையின் அதிகாரத்திற்குட்பட்டு பொறுப்பாண்மைக் குழு செயல்படுகின்றது. பொறுப்பாண்மைப் பகுதிகள் சம்பந்தமாகப் பொதுச்சபை கொண்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இக்குழு உதவி புரிகின்றது. பொறுப்பாண்மைக் குழுவின் பணியைப் பொதுச்சபை பரிசீலனை செய்கின்றது. இக்குழு மூன்று வகை அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

1) பொறுப்பாண்மைக் குட்படுத்தப்பட்ட பகுதிகளை ஆட்சிபுரியும் நாடுகட்கு வினாத்தாள்களை (Questionarie) அனுப்பவும் அவற்றிலிருந்து அறிக்கைகளைப் பெறவும் இக்குழு உரிமை பெற்றுள்ளது.
2) பொறுப்பாண்மைக் பகுதிகளினின்று மனுக்களைப் பெற்று அவற்றை ஆராய இதற்கு உரிமை உள்ளது. பொறுப்பாண்மைப் பகுதிகளை ஆட்சிபுரியும் நாடுகளுடன் கலந்துயையாடல் நடத்தவும் இக்குழு அதிகாரம் பெற்றுள்ளது.
3) பொறுப்பாண்மைப் பகுதிகளை அவ்வப்பொழுது பார்வையிடவும் இக்குழுவிற்கு உரிமை உள்ளது. ஆனால் அப்பகுதிகளை ஆட்சிபுரியும் நாடுகளுடன் கலந்தாலோசித்த பின்னர்தான் அவற்றைப் பார்வையிடுவதற்கான காலம் குறிக்கப்பட வேண்டும்.

**மதிப்பீடு**

பொறுப்பாண்மைக் குழுவின் பணி மிக வெற்றிகரமாக அமைந்துள்ளது. மேற்பார்வை செய்வதற்கு இக்குழு கொண்டுள்ள உரிமை பன்மடங்கு அதிகரித்துள்ளது. தனக்கு அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை மிக நல்ல முறையில் இக்குழு பயன்படுத்திவந்திருக்கிறது. இக்குழுவின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்ட பதினொரு பகுதிகளில் பத்து சுதந்திரமடைந்து விட்டன. இது தவிர தன்னாட்சி இல்லாமலிருந்த பல பகுதிகள் தன்னாட்சி உரிமை பெற்றன. சர்வதேச இல்லாமலிருந்த பல பகுதிகள் தன்னாட்சி பெற்றிருந்த மேற்பார்வை உரிமையை விட அதிக அதிகாரம் பொறுப்பாண்மைக் குழுவிற்கு ஐ.நா.வால், வழங்கப்பட்டது. இப்புதிய அமைப்பிற்கேற்பப் பொறுப்பாண்மைப் பகுதிகளைப் பராமரிப்பதற்கெனக் குழுக்களை நியமிக்க வேண்டுமென ஐ.நா.விடம் பொறுப்பாண்மைக் குழு கோர முடியும். ஆகவே பொறுப்பாண்மைக் குழு போதிய வலிமையைப் பெற்றுத் திறமையுடன் செயலாற்றுகின்றது.

**பன்னாட்டு நீதிமன்றம் (International Court of Justice)**

**குறிக்கோள்கள்**

இது வரை விளக்கமளிக்கப்பட்ட ஐ.நா.வின் நான்கு உறுப்புக்களும் அரசுகளை அங்கத்தினராகக் கொண்டவையாகும். ஆனால் பன்னாட்டு நீதிமன்றமும் தலைமைச் செயலகமும் தனி நபர்களின் உதவியுடன் பணிபுரிகின்றன. ஐ.நா.வின் நீதித்துறையின் முக்கிய அம்சமாகத் திகழ்வது பன்னாட்டு நீதிமன்றம், சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நீதி வழங்கும். இந்நீதிமன்றம் தன்னாட்சி கொண்டுள்ள அரசுகளிடையே எழக்கூடிய சட்டம் சார்ந்த தகராறுகளை விசாரணை செய்கின்றது. அரசியல் சார்ந்த தகராறுகளை இந்நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது. ஒரு தனி அமைப்பாகத் திகழும் இந்நீதிமன்றம் அதற்கென ஒரு சாசனத்தைக் கொண்டுள்ளது. ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகள் யாவும் இந்நீதிமன்றத்தின் அடிப்படைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவை ஆகும். ஐ.நா.வின் உறுப்பினரல்லாத ஒரு நாடு இந்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய வேண்டுமெனில் அவ்விஷயம் பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக்கேற்ப பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நெதர்லாந்திலுள்ள திஹேக் (The Hauge) என்னும் நகரில் இந்நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றது. ஆனால் தன் விருப்பத்திற்கேற்ப இந்நீதிமன்றம் எங்கு வேண்டுமானாலும் கூடலாம். இந்நீதிமன்றத்தின் செலவினங்கள் யாவும் ஐ.நா.வின் பொறுப்பாகும். இந்நீதிமன்றத்தின் விசாரணைகள் யாவும் வெளிப்படையாக நடத்தப்பட்ட போதிலும் ரகசியமாகவும் விசாரணைகள் நடத்தப்படலாம். இந்நீதிமன்றத்தால் அளிக்கப்படும் தீர்ப்பு இறுதியானது. இத்தீர்ப்புக்குப்பின் மேல் முறையீடு செய்ய முடியாதெனினும் அதனை

(குறிப்புக்கான இடம்)

மறுபரிசீலனை செய்யக் கோரலாம். அங்ஙனம் மறு பரிசீலனை செய்ய வேண்டுமெனில், தகராறில் சம்பந்தப்பட்ட நாடுகள் அதற்குரிய காரணங்களைத் தெரியப்படுத்த வேண்டும் இம்மறுபரிசீலனை பத்து ஆண்டுகளுக்குள் செயல்பட வேண்டும். தீர்ப்பு வழங்கும் பொழுது நீதிபதிகளின் வாக்குகள் சமமாகக் காணப்பட்டால் முடிவு கட்டும் வாக்கை நீதிமன்றத்தின் தலைவர் அளிப்பார்.

நீதிமன்றத்தின் அமைப்பு: பன்னாட்டு நீதிமன்றம் 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இவர்களின் 3 இல் 1 பகுதியினர் மூன்றாண்டிற்கு ஒருமுறை பதவியினின்று ஓய்வு பெறுகின்றனர். பல்வேறு நாட்டினங்களையும் சேர்ந்த சிறப்பு மிக்க சட்ட வல்லுநர்கள்தான் இந்நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றனர். இந்நீதிபதிகள் ஒன்பதாண்டிற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களைப் பொதுச்சபையும் பாதுகாப்புக் குழுவும் தனித்தனியே வாக்களித்து பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கின்றன. ராஜினாமா, மரணம் போன்ற காரணங்களால் காலி இடங்கள் எழும் போது அதனை நிரப்புவதற்கென பிரத்தியோகத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. ஒரே நாட்டைச் சேர்ந்த இருவர் ஒரே சமயத்தில் இந்நீதிமன்றத்தின் நீதிபதிகளாகச் செயல்பட முடியாது. பதவியினின்று ஓய்வு பெற்ற ஒருவர் உடனடியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். அதன் விடுமுறைக் காலம் தவிர பிற நாட்களில் இந்நீதிமன்றம் தொடர்ந்து செயல்படுகின்றது. இந்நீதிமன்றத்தின் குறைவெண்வரம்பு (Quorum) ஒன்பது.

## அதிகாரவரம்பும் வலிமையும் (Jurisdictions and Competence)

ஏற்கனவே கூறியது போல் இந்நீதிமன்றத்தின் சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகள் மட்டுமே இதன்முன் வழக்குகளைக் கொண்டு வரமுடியும். ஐ.நா.வின் அங்கத்தினரல்லாத நாடுகள் இந்நீதிமன்றத்தின் முன் வழக்குகளைத் தொடர விரும்பினால் அதற்குப் பாதுகாப்புக் குழுவும், பொதுச் சபையும் அனுமதி அளிக்க வேண்டும். நடைமுறையில் உள்ள உடன்படிக்கைகள் மரபுகள், ஐ.நா.வின் சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் ஆகியவற்றின் மீது அந்நீதிமன்றம் அதிக வரம்பு கொண்டுள்ளது. இது தவிர அரசுகள் இந்நீதிமன்றத்தின் முன் கொண்டு வரும் வழக்குகளையும் இது விசாரணை செய்யலாம். இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு பன்னாட்டுச் சட்டத்திற்கேற்ப வழங்கப்பட வேண்டும். பன்னாட்டுச் சட்டம் என்பது பன்னாட்டு மரபுகள், பழக்க வழக்கங்கள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டத்தின் பொதுப்பண்புகள், நீதிமன்றத்தின் தீர்ப்புகள், மிகத் தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். பன்னாட்டு

(குறிப்புக்கான இடம்

நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கெதிராக மேல்முறையீடு செய்ய முடியாது. ஒரு வழக்கை இந்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதற்கு முன்னர் அவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நாடுகள் பன்னாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தாம் ஏற்றுக் கொள்வோம் என்று வாக்குறுதி அளிக்க வேண்டும் பன்னாட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கேற்ப பணிபுரிவோர் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு எவ்வளவு இழப்பு ஊதியம் அளிக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பதும் இந்நீதிமன்றமாகும்.

**மதிப்பீடு**

இந்நீதிமன்றம் பல்வேறு தகராறுகளைச் சுமூகமாகத் தீர்த்து வைத்தள்ளது. சூயஸ் கால்வாய் தகராறு. ஆங்கில — ஈரானிய ஆயில் கம்பெனித் தகராறு (Anglo – Iranian Oil Company dispute) போன்றவை இந்நீதிமன்றத்தால் திருப்திகரமாகத் தீர்வு காணப்பட்ட முக்கியத் தகராறுகள் ஆகும். இந்நீதிமன்றத்திற்குப் பல்வேறு சிறப்புகள் காணப்படினும் சர்வதேச சங்கத்தின் கீழ் செயல்பட்ட நிரந்தர நீதிமன்றத்திற்கு இருந்த மதிப்பு இதற்குக் காணப்படவில்லை. இந்நீதிமன்றம் சில விஷயங்களில் செயற் திறனுற்றுக் காணப்படுவதற்கு இதன் சாசனம் தான் காரணமாகும். சில விஷயங்களில் இந்நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு கட்டுப்படுத்தும் தன்மை உடையதாக காணப்பட்ட போதிலும் பெரும்பாலான நாடுகள் இந்நீதிமன்றதின் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டதுதான் இந்நீதிமன்றத்தின் பணி என்ற போதிலும் இது அரசியல் சார்ந்த தகராறுகளிலும் சம்பந்தப்பட்டுள்ளது. இவ்வண்ணம் இந்நீதிமன்றம் தொடர்ந்து செயல்படுமேயானால் இது ஐ.நா.வின் பொதுச்சபையின் நீதிப்பிரிவாக மாறக்கூடும்.

### 5.1.3. தலைமைச் செயலகம்

ஐ.நா.வின் ஆட்சித்துறைப் பிரிவாகச் செயல்படுவது தலைமைச் செயலகம் ஐ.நா.வின் அன்றாடப்பணிகளில் பெரும்பாலானவற்றை இத்தலைமைச் செயலகம் தான் புரிகின்றது. பல்வேறு நாடுகளினின்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு பன்னாட்டுக் குடிமுறைப் பணியாளர் தொகுதிதான் இத்தலைமைச் செயலகம். இதன் கிளை அலுவலகம் ஒன்று ஜெனீவாவில் செயல்படுகின்றது. இதன் மொத்தப் பணியாளர்களில் 75 சதவிகிதத்திற்கும் அதிகமானோர் நியூயார்க்கில் உள்ள தலைமை அலுவலகத்தில் பணிபுரிக்கின்றனர்.

தலைமைச் செயலகத்தின் தலைவராகத் திகழ்பவர் தலைமைச் செயலாளர். இவர் ஐந்தாண்டு பதவிக் காலத்திற்கெனப் பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுக்கேற்ப பொதுச்சபையினால் நியமிக்கப்படுகின்றார்.

(குறிப்புக்கான இடம்)

தலைமைச் செயலகத்தின் இதர அலுவலர்கள் பொதுச் சபையால் உருவாக்கப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப தலைமைச் செயலரால் நியமிக்கப்படுகின்றனர். இங்ஙனம் அலுவலர்களை நியமனம் செய்யும் பொழுது உலகின் பல்வேறு பகுதிகட்கும் பிரதிநிதித்துவம் அளிக்க தலைமைச் செயலாளர் முயல வேண்டும். தலைமைச் செயலகத்தில் பணிபுரிவது ஒரு சிறப்பாதலால் உலகின் பல்வேற பகுதிகளிலிருந்து திறமைமிக்கோர் இதில் பணி புரிய முன் வருகின்றனர். தலைமைச் செயலகத்தின் அலுவலர்கட்கு நாட்டுப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் விதிவிலக்குகளும், சிறப்புகளும் அளிக்கப்படுகின்றன. தலைமைச் செயலகத்தில் எட்டாயிரத்திற்கும் அதிகமான பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் தலைமைச் செயலாளரின் கீழ்ப்பணிபுரிகின்றனர். ஐ.நா.வின் பணிகள் சம்பந்தப்பட்ட வருடாந்திர அறிக்கையைத் தயரித்து சபையில் சமர்ப்பிப்பவர் தலைமைச் செயலாளர்; பொதுச்சபை, பாதுகாப்புக்குழு, பொருளாதார மற்றும் சமூகக்குழு, பொறுப்பாண்மைக் குழு ஆகியவற்றின் கூட்டங்களில் செயலாராகப் பணிபுரிபவர் தலைமைச் செயலாளர், பன்னாட்டு அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிக்கக் கூடும் என்று இவர் கருதும் எவ்விஷயத்தையும் பாதுகாப்புக்குழுவின் பிரேரனையைத் துவக்கவும் இவரால் இயலும். ஒரு உறுதியான கொள்கையை ஐ.நா. பின்பற்ற வேண்டும் என்றும் இவர் ஆலோசனை வழங்கலாம்.

தலைமைச் செயலகம் பணியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலகத்தில் எட்டு முக்கிய இலாகாக்கள் காணப்படுகின்றன அவை பின்வருமாறு:

1. பாதுகாப்புக் குழுவின் நடவடிக்கைகள்
2. பொருளாதார நடவடிக்கைகள்
3. சமூக நடவடிக்கைகள்
4. பொறுப்பாண்மை மற்றும் தன்னாட்சி இல்லாத பகுதிகளினின்று கிடைக்கப் பெறும் தகவல் சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள்
5. பொது மக்கட் தொடர்பு
6. மாநாடு மற்றும் பொதுப்பணிகள்
7. நிர்வாகம் மற்றும் நிதி சம்மந்தப்பட்ட பணிகள்
8. சட்டத்துறை.

**பணிகள்:**

பன்னாட்டு நிர்வாகம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் தலைமைச் செயலகம் ஈடுபடுகின்றது. ஐ.நா.வின் உறுப்புகள், விசேட அமைப்புகள் போன்றவற்றின் கூட்டங்களுக்குச் சேவை புரிகின்றது. நிகழ்ச்சி

(குறிப்புக்கான இடம்)

நிரலைத் தயாரிக்கும் இவ்வமைப்பு கூட்டங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரிக்கின்றது. பன்னாட்டு நீதிமன்றம் தவிர பிற அமைப்புக்களின் கூட்டங்களின் சம்மந்தப்படட விவரங்களைச் சேகரிக்கும் பொறுப்பு உள்ளது. ஆய்வுகள் நடத்தும் இந்நிறுவனம் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுகின்றது. தமக்கு அனுப்பப்படும் அறிக்கைகள் திட்டங்கள் போன்றவற்றைத் தலைமைச் செயலாளர் பரிசீலிக்கின்றார். பொருளாதாரம் சம்மந்தப்பட்ட கணக்கெடுப்பு நடத்தும் தலைமைச் செயலகம் பல்வேறு நாடுகளில் பொருளாதார, சமூக வளர்ச்சி பற்றிய அறிக்கைகள் தயாரிக்கின்றது. ஐ.நா.வின் இதர உறுப்புக்கள் தமது கொள்கைகளை உருவாக்குவதற்குத் தேவையான இன்றியமையாத தகவல்களைத் தலைமைச் செயலகம் அளிக்கின்றது. அரசாங்கங்களினின்று தகவல்களைப் பெறுவதும் அவற்றிற்குத் தகவல் அனுப்புவதம் இச்செயலகம் புரியும் பணிகளாகும்.

மதிப்பீடு: தலைமைச் செயலகத்தின் செயலாளர் பதவி மதிப்பு மிக்க ஒன்றாகும். தமது ஆண்டறிக்கையின் மூலமாக அமைதிக்குச் சாதகமான கருத்தை இவர் உருவாக்கலாம். ஐ.நா.வின் கொள்கைகளின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பு இவருக்கு ஓரளவு உண்டு என்று கூறலாம். ஐ.நா. என்பது பொதுச்சபை, குழுக்கள் போன்றவை அவ்வப்பொழுது கூட்டும் கூட்டங்கள் மட்டுமின்றி ஒருமைப்பாடும் நிரந்தரத் தன்மையுடயதுமான ஒரு அமைப்பு என்ற உணர்வை அளிப்பது தலைமைச் செயலகமாகம். பன்னாட்டு நீதிமன்றத்தைப் போல நாடுகள் யாவற்றிற்கும் பொதுவானதும் உயர்வானதுமான ஒரு நிறுவனம் தலைமைச் செயலகம். இச்செயலகம் முறையாக அளிக்கும் உதவிகள் இல்லாவிடின் ஐ.நா. திறம்படச் செயல்பட முடியாது. தலைமைச் செயலாளரின் பதவிக்கு கிடைக்கப் பெற்றுள்ள உயர் மதிப்பு ஐ.நா.வின் இரண்டாவது தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய டாக் ஹாம்மர்ஷீல்டு (Dog Hammerskjold) அளித்த திறமையான தலைமையின் விளைவாகும். ஐ.நா.வின் சாசனத்தை உருவாக்கியவர்கள் எதரிர்பார்த்ததை விட அதிகமாக தலைமைச் செயலாளரின் முக்கியத்துவமட் அதிகரித்துள்ளது. தலைமைச் செயலகம் சம்பந்தமாகச் சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் நல்ல முறையில் பயனளித்தள்ளன என்று கூறலாம்.

(குறிப்புக்கான இடம்)

## சிறப்பு நிறுவனங்கள்:

## (Specialised Agencies)

ஐ.நா.வில் காணப்படும் 11 சிறப்பு நிறுவனங்கள் மூலமாக அதன் பணிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படுகின்றன. இந்நிறுவனங்கள் ஐ.நா.வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. பொருளாதாரம் சமூகம் போன்ற துறைகளில் பின்பற்றப்படும் பணிசார்ந்த அடிப்படையினின்று தோன்றியவை தான் இந்நிறுவனங்கள். அரசியல் சார்பற்று வளர்ந்துவரும் நாடுகளின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும். அவற்றின் மீது பன்னாட்டு அக்கறை வளரச் செய்வதற்கும் இந்நிறுவனங்கள் முயற்சி எடுக்கின்றன. இச்சிறப்பு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை பொரளாதாரம் மற்றும் சமூகக்குழு கொண்டுள்ளன, அவை ஒவ்வொருன்றிலும் ஒரு தலைமைச் செயலகம். விவாதத்திற்கான ஒரு அவை நிர்வாகத்துறை போன்றவை காணப்படுகின்றன. இவற்றின் முடிவுகள் பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. UNESCO, WHO, UPU, FAG ஆகியவை ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்களுக்குள் குறிப்பிடத்தக்க நிறுவனங்களாகும்.

## ஐ.நா. சபை சமாதானத்தை நிலைநாட்டல்:

பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவதற்காகத் தான் ஐக்கிய நாடுகள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இது தான் ஐ.நா.வின் சாசனத்தில் முக்கியக் குறிக்கோள், பல தகராறுகட்கு ஐ.நா.வில் தீர்வு காண முடியவில்லை. எனினும் சில பிரச்சனைகளில் காணப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளை ஓரளவு குறைப்பதற்கு இது பயன்பட்டுள்ளது. நடுவராகச் செயல்பட்டு வரும். ஐ.நா போர்கள் பல எழாமல் தடுத்துள்ளது.

1949— ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நெதர்லாந்திற்கும் இந்தோனேசியாக் குடியரசுக்குமிடையே போர் மூண்டது இவ்விரு நாடுகளிடையே சமாதான உடன்படிக்கை செய்வதற்கு ஐ.நா. முயற்சி எடுத்தது. இரண்டாவது முறை நெதர்லாந்து போர் துவங்கிய பொழுது மீண்டும் அமைதி உடன்படிக்கை செய்வதற்கு ஐ.நா. வழிவகுத்தது. திஹேக் நகரில் ஐ.நா.வை நடுவராகக் கொண்டு இரு நாடுகளிடையேயும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இறுதியில் 1949 ஆம் ஆண்டு இந்தோனேசியா சுதந்திரமடைந்தது.

(குறிப்புக்கான இடம்)

1948 ஆம் ஆண்டு பாலஸ்தீனியா பிரச்சனை சம்மந்தமாக நடந்த அராப் இஸ்ரேல் போரில் ஐ.நா. தலையிட்டு இவ்விரு நாடுகளும் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதற்கு உதவியது.

வடகொரியா தென்கொரியாவைத் தாக்கிப் பொழுது ஆக்கிரமிப்பாளரைத் தண்டிப்பதற்கென ஐ.நாவின் படைகள் அனுப்பப்பட்டன. இதன் விளைவாக வடகொரியப் படைகள் ஐ.நாவின் படைகளால் துரத்தியடிக்கப்பட்டு அதன்பின் ஐ.நா.வுக்கும் வடகொரியாவுக்குமிடையே அமைதி உடன்படிக்கை செய்யப்பட்டது.

சூயஸ் கால்வாய் பிரச்சனை சம்மந்தமாகப் பிரரெஞ்சுப் படைகளும் ஆங்கிலேயப் படைகளும் எகிப்தைத் தாக்கிய பொழுது அமைதி உடன்படிக்கை செய்வதற்கு ஐ.நா. முயற்சிகள் எடுத்தது. அதன் விளைவாகப் பிரெஞ்சுப் படைகளும், ஆங்கிலேயப் படைகளும் அங்கிருந்து வெளியேறிய பின்னர் ஐ.நாவின் படைகள் அப்பகுதியில் அமைதியைக் காத்தன.

1960— ஆம் ஆண்டு காங்கோப் பிரச்சனை விஷயமாக ஐ.நா. பெல்ஜியத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, திருப்திகரமான முடிவைக் காண்பதற்கு உதவியது. தனது படைகளை அனுப்பி காங்கோ பகுதியில் அமைதி நிலை நாட்டப்படுவதற்கு ஐ.நா. உதவியது.

சைப்ரஸ் பகுதியில் காணப்பட்ட சிக்கலைத் தவிர்க்கும் பணியில் ஐ.நா.வின் அமைதி காப்புப் படைகள் (The UN Peace Keeping Forces) முக்கியபங்கு கொண்டிருந்தன. கிரீஸிற்கும் துருக்கிக்குமிடையே போர் மூண்ட பொழுது சைப்ரஸ் தீவை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து பிரச்சனைக்கு திருப்திகரமான முடிவு காண ஐ.நா. வழிவகுத்தது.

1965— ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் பாகிஸ்தானக்குமிடையே போர் மூண்டபொழுது அதனை நிறுத்துவதற்கென ஐ.நா. முயற்சிகள் எடுத்துப் போர் நிறுத்த உடன்படிக்கையைச் செயல்படுத்துவதற்கென தனது பிரநிதிதிகளை அனுப்பி வைத்தது.

நமிபியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளை விடுவிக்கும் முயற்சியில் ஐ.நா. தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ரொடீஷியாவை வெள்ளைச் சிறுபான்மை ஆட்சியிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் அது வெற்றி கண்டுள்ளது. மேலும் தென் ஆப்பிரிக்கா பின்பற்றும் இனப்பாகுபாட்டுக் கொள்கையை

**முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்**

அ) சர்வதேச சங்கம் பற்றிய கூறு.

ஆ)தேசீய சுய நிர்ணயம் என்றால் என்ன.

இ)ஐ.நா.வின் குறிக்கோள்கள் யாவை.

(குறிப்புக்கான இடம்)

முடிவுறச் செய்வதற்கெனப் பல தீர்மானங்களை ஐ.நா. நிறைவேற்றியுள்ளது.

படைக்குறைப்பின் மூலமாக அமைதியை எய்துவதற்கென ஒரு படைக் குறைப்புக் குழுவை ஐ.நா. உருவாக்கியது. 1963– ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட அணு ஆயுதப் பரிசோதனைத் தடை உடன்படிக்கை இக்குழுவின் முயற்சியின் பயனாக உருவானதாகும். இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகளும் வேறுபல நாடுகளும் இவ்வுடன் படிக்கையில் கையொப்பமிட்டுள்ளன. விண்வெளியிலும் நீருக்கடியிலும் அணு ஆயுதங்களை வெடித்துப் பரிசோதனை செய்வதை இவ்வுடன்படிக்கை தடுக்கின்றது.

பொறுப்பாண்மைப் பகுதிகளையும் தன்னாட்சி இல்லாத பகுதிகளையும் ஐ.நா. நன்கு பராமரித்து அவற்றில் பெரும்பாலானவை சுதந்திரமடைவதற்கு வழிவகுத்துள்ளது.

ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்களில் ஒன்றான பன்னாட்டு அணுசக்தி நிறுவனம் அணுசக்தியை உருவாக்குவதற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம்அணு சக்தியை அமைதியான நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்து வருகின்றது.

இங்ஙனம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற போரை நிறுத்துவதற்கும் அமைதி ஒப்பந்தம் செய்வதற்கும் ஐ.நா. முயற்சிகள் எடுத்து வந்திருக்கிறது. சில வேளைகளில் தனது வலிமையைப் பயன்படுத்தியோ அல்லது விருப்பு வாக்கெடுப்பு நடத்தியோ அல்லது மேற்பார்வை செய்தோ அல்லது கலந்துரையாடல் நடத்தியோ அமைதியை நிலைநாட்டவதற்கு ஐ.நா. நேரடி முயற்சிகள் எடுத்துள்ளது. சில தருணங்களில் பாதுகாப்புக்குழு, பொதுச்சபை ஆகியவற்றின் சிபாரிசுகள் உலகின் பல பகுதிகளிலும் தோன்றிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் பயன்பட்டுள்ளன. ஐ.நா.வின் நடவடிக்கைகளுக்கு மதிப்பளிக்கப்படல் வேண்டும் ஏனெனில் இது ஒரு உலக அமைப்பாகும். பன்னாட்டு அரங்கில் இன்றும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டி வளர்ப்பதற்கு ஐ.நா. முயற்சிகள் எடுத்து வருகின்றது.

1. சர்வதேச சங்கம் பற்றிய ஒரு சிறு குறிப்ப தருக 5.1.
2. தேசீய சுய நிர்ணயம் என்றால் என்ன? 5.1.1.
3. ஐ.நா.வின் குறிக்கோள் யாவை? 5.1.2.
4. பன்னாட்டு நீதிமன்றம் பற்றி பொருள் கூறுக. 5.1.3.
5. தலைமைச் செயலகம் பற்றி குறிப்பு தருக. 5.1.4.

### 5.1.4. ஐ.நாவும் சர்வதேச சங்கமும்:

### (The U.N. and the League of Nations)

ஐ.நா.வை புத்துயிர் அளிக்கப்பட்ட சர்வதேச சங்கம் எனலாம். இவ்விரு அமைப்புகளுக்கு சில அதிகாரங்கள் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. மாறாக அவ்விரண்டு மாறுபட்ட கருத்துகட்கு மதிப்பளிக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. ஐ.நா.வின் முக்கிய உறுப்புகளான பொதுச்சபை, பாதுகாப்புக்குழு, தலைமைச் செயலகம் ஆகியவை சர்வதேச சங்கத்தின் உறுப்புகளான பேரவை (Assumbly) குழு (Council) தலைமைச் செயலகம் (The Secretariat) ஆகியவற்றின் அமைப்பைக் கொண்டுள்ளன. ஐ.நா.விலுள்ள பொறுப்பாண்மைக் குழுவை சர்வதேச சங்கத்தின் கீழ் காணப்பட்ட உரிமைக் கட்டளைமுறையின் புதுப்பதிப்பு என்று கூறலாம். பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டு தொழிற்சங்கம், மற்றும் ஐ.நா.வின் இதரச் சிறப்பு நிறுவனங்கள் சர்வதேச சங்கத்தில் காணப்பட்ட உறுப்புகளின் தொடர்ச்சியே ஆகும். இருப்பினும் இவ்விரு அமைப்புகளிடையே முக்கிய வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

ஐ.நா. ஒரு பிரத்தியேக அடிப்படையைக் கொண்டு தோன்றியதாகும். சர்வதேச சங்கத்தைத் தோற்றுவித்த உடன்பாடு வெர்செய்லஸ் அமைதி உடன்படிக்கைகளின் ஒரு பகுதியாக அமைந்தது. ஐ.நாவை உருவாக்கியவர்கள் இத்தவறை மீண்டும் செய்யவில்லை.

அமைப்பு அதிகாரங்கள், பணிகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டோமெனில், ஐ.நா. சர்வதேச சங்கத்தினின்று மாறுபட்டது எனலாம். சர்வதேச சங்கத்தின் கிழ் காலப் போக்கில் சிறிய நாடுகள் முக்கியத்துவம் பெறலாயின. ஆனால் நிரந்தர உறுப்பினரது எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய பாணியிலான திருப்பங்கள் ஏற்படுவதற்கு ஐ.நா.வின் கீழ் வழி ஏதம் இல்லை. மேலும் பாதுகாப்புக் குழுவிற்குள் வல்லரசுகளுக்குச் சிறப்புரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. சர்வதேச சங்கத்தைப் பொறுத்தமட்டில் கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனில் எல்லா அங்கத்துவ நாடுகளும் ஒத்துக்

(குறிப்புக்கான இடம்)

கொள்ளவேண்டும். ஆனால் ஐ.நாவின் கீழ் ஐந்து நிரந்தர உறுப்பினர்களின் ஏகோபித்த ஒத்துழைப்பையும், மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவும் கிடைக்கபெற்றால் போதும் என்ற நிலை காணப்படுகின்றது. இந்த அடிப்படையினின்று பார்க்கும் பொழுது தனது குறிக்கோள்களை எய்துவதில் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சங்கத்தைவிட அதிக வெற்றியைக் கண்டுள்ளது என்றே கூறவேண்டும்.

## ஐ.நா. பற்றிய மதிப்பீடு

ஐ.நா.வின் நடவடிக்கையை ஆராயும் பொழுது இது பல வெற்றிகளைக் கண்டுள்ளளது என்று தெரிய வருகின்றது. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு இது செயல்படவில்லை என்றும் கூறவேண்டும். உலகப் போரின் பொழுது காணப்பட்ட ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு ஐ.நா. உருவாக்கப்பட்ட போதிலும் போர் முடிந்த பின்னர் இவ்வொத்துழைப்பு மறைந்தது. இதனால் குறிப்பிடத்தக்க வெற்றியேதும் காண இந்நிறுவனத்திற்கு இயலவில்லை. வியட்நாம் போரை எடுத்துக் கொண்டோமென்றால் ஐ.நா. ஒரு பார்வையாளரைப் போல்தான் செயல்பட்டது. பாலஸ்தீனப் பிரச்சனையில் அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையே நிரந்தரமான ஒரு முடிவை ஐ.நா.வால் முடியவில்லை. மேலும் தென் ஆப்பிரிக்கா பின்பற்றி வரும் இனப்பாகுபாட்டக் கொள்கைக்கெதிராக ஐ.நா. எடுத்த நடவடிக்கைகள் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை. மேற்கூறியவற்றினின்று ஐ.நா.வின் வலிமையற்ற நிலை தெரிய வருகின்றது. வடகொரியா காங்கோ ஆகிய பகுதிகளில் ஐ.நா. தனது படைகளைப் பயன்படுத்தியது ஒரு நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒரு போரை நிறுத்துவதற்கென மற்றொரு போரில் ஈடுபடுவதென்பது ஒரு சிறந்த கொள்கையாகாது.

எனினும் ஐ.நா. ஒரு தோல்வி கண்ட நிறுவனம் என்று அதனை உதாசீனப் படுத்துவது சரியல்ல: தனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பல்வேறு பிரச்சனைகட்கு பரிகாரம் காண ஐ.நா. எடுத்துக் கொண்ட முயற்சியில் அது கண்டுள்ள சில வெற்றிகளை வலியுறுத்த பாமர், பெர்கின்ஸ் (Palmer and Perkins) ஆகிய இரு ஆசிரியர்களும் பின்வரம் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். "பின்னாட்டப் பிரச்சனைகட்கு" முழுப் பரிகாரம் காண்பதென்பது நடக்கக் கூடியதல்ல பிரச்சனைகட்குப் பரிகாரம் காண எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் கருத்தொருமைப்பாடு உருவாக்குவதிலோ அல்லது காலம் கடந்து பரிகாரம் காணலாம் என்று தள்ளி வைப்பதிலோ முடிவுறுகின்றன. ஒரு பன்னாட்ட பிரச்சனை போராக மாறாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிறிது காலம்

கடந்தால் எந்தப் பிரச்சனையும் அதன் வலிமையை இழந்துவிடுகிறது. இரண்டாவதாக ஒரு தகராறில் சம்பந்தப்பட்ட நாடுகள் பேச்சு வார்த்தைகளிலும் சமரசத்திலும் இதர அமைதியான நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்று ஐ.நா. ஒரு நடுவராகச் செயல்படுகின்றது. அமைதியானவைகளைப் பின்பற்றி ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாத நிலையில் தான் பாதுகாப்புக்குழு கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதில் கவனம் செலுத்துகின்றது''.

பாதுகாப்புக் குழு ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனில் ஐந்து நிரந்நர உறுப்பினிடையே கருத்தொருமைப்பாடு காணப்படல் வேண்டும் தற்பொழுது ஐ.நாவின் வெற்றி தோல்விகள் வல்லரசுகளின் ஒத்துழைப்பைப் பொறுத்துத்தான் அமைகின்றன. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பின் வல்லரசுகளிடையே கருத்து வேற்றுமை மிக அதிகமாகக் காணப்பட்டதனால் ஐ.நா. செயல்திறன் இழந்த நிலையில் காணப்பட்டது. எங்ஙனம் பிரான்சும், இங்கிலாந்தும், பாசிஸநாடுகளைத் திருப்திபடுத்துவதற்கென சர்வதேச சங்கத்தைப் பயன்படுத்துனவோ, அதே போல் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஒவ்வொன்றின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கென ஐ.நா.வைப் பயன்படுத்தின. குவையத் — இராக் நெருக்கடியில் அமெரிக்கா ஐ.நா.வை நிர்வந்தப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. ஐ.நாவின் நடவடிக்கைகளைத் திறனாய்வு செய்துள்ள ஒரு சிலர் கூறுவது என்னவென்றால் பொதுச் சபையை விட பாதுகாப்புக்குழு அதிக அதிகாரம் பெற்றுள்ளதனால் அண்மைக் காலத்தில் ஐ.நா. அதன் நடவடிக்கைகளில் தோல்வி காண நேரிட்டது. இது மட்டுமன்றி அணுசக்தியைக் கட்டுப்படுத்துவதற்குச் சரியான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்படாவிட்டால் உலகிற்கு ஆபத்து எத்தருணத்திலும் நேரக்கூடும். அது கண்ட தோல்விகட்காக ஐ.நா.வைக் குறை கூறுவத சரியல்ல. தேசியம், இறைமை, தேசிய அரசு மனப்பாண்மை, மனித இனத்தின் குறைபாடுகள் ஆகியவற்றில்தான் ஐ.நா.வின் தோல்விகள் வேரூன்றிக் கிடைக்கின்றன என்று பாமர்பெர்கின்ஸ் என்ற இரு ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ஐ.நா. ஒரு முக்கியமான உலக அரங்கு என்பதை யாரும் மறுக்க முடியாது. இது பல பிரச்சனைகளையும் கடந்த இன்னும் செயல்பட்டு வருகிறதோடன்றி உலகெங்கினும் வியத்தகு அளவிற்கு வரவேற்பையும் ஆமோதிப்பையும் பெற்றுள்ளது. ஐ.நா. முழுவதையும் புனராய்வு செய்ய வேண்டியுள்ளது. மேலும் தற்பொழுது காணப்படும் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப இதன் சாசனம் திருத்தி அமைக்கப்படவேண்டும். உலகில் அமைதியைக் காக்கும் தனது குறிக்கோளை ஐ.நா. எய்த வேண்டுமெனில் வல்லரசுகளிடையே காணப்படும் வேற்றுமைகள் குறைய

(குறிப்புக்கான இடம்)

வேண்டும். மேலும் படைக் குறைப்பை முழுமையாகச் செயற்படுத்துவதோடு மட்டுமின்றி, அங்கத்துவ நாடுகள் யாவும் ஐ.நாவின் குறிக்கோள்களை மனமுவந்து பின்பற்ற முன் வரவேண்டும் இவற்றை எல்லாம் விட முக்கியமானது அமைதியாக இணைந்து வாழ உலகின் மக்கள் யாவருக்கும் விருப்பம் இருக்க வேண்டும். ஐ.நா. அவையின் பல்வேறு அமைப்புகளிலும் சில மாற்றங்கள் தேவை என்பது உணரப்பட்டு, அவை குறித்து விவாதம் ஏற்பட்டுள்ளது.

### 5.1.5. தொகுப்புரை:

அமெரிக்க அதிபர் உட்ரேவில்சனின் 14—வது விதியின் படி சர்வதேச சங்கம் உருவாகியது. பின்பு 1931 ல் ஐப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமிப்பு 1936—ல் இத்தாலி எத்தியோப்பியாவை ஆக்கிரமித்து 1939—ல் ஜெர்மன் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால் சர்வதேச சங்கம் தோல்வி தழுவியது. மேலும் இவ்வுலகில் சர்வதேச சங்கம் தோல்விக்குப்பின் ஐக்கிய நாடுகளின் சபை 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதி நடைமுறைக்கு வந்துள்ளன. தற்பொழுது ஐ.நா.வில் 192 நாடுகள் அங்கம் பெற்றுள்ளன.

### 5.1.6. முக்கிய வார்த்தைகள்:

| | | |
|---|---|---|
| சர்வதேச சங்கம் | — | உலக அமைதியை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட நிறுவனம் |
| பாசிசம் | — | ஜனநாயகத்திற்கு எதிரான கொள்கையினை கொண்ட அமைப்பு |
| தேசீய சுய நிர்ணயம் | — | தன்னாட்சி பெறுதல் |

### 5.1.8. இந்த அலகு சம்பந்தமாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள்

Dyke, V.V. International, Politics (VPS, 1968)

### 5.1.7. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்:

| | | |
|---|---|---|
| கேள்வி எண்: | 1 | பதில் எண்: 5.1 |
| கேள்வி எண்: | 2 | பதில் எண்: 5.1.1. |
| கேள்வி எண்: | 3 | பதில் எண்: 5.1.2. |
| கேள்வி எண்: | 4 | பதில் எண்: 5.1.3. |
| கேள்வி எண்: | 5 | பதில் எண்: 5.1.4. |

### 5.1.9. மாதிரி வினாக்கள்:

1. சர்வதேச சங்கத்தின் அமைப்பு மற்றும் அதன் வெற்றி தோல்விக்கான காரணங்களை ஆராய்க.

2. ஐக்கிய நாடு சபையின் சாதனைகளையும் தோல்விகளையும் ஆராய்க.

# அலகு – 6
# பன்னாட்டுச் சட்டம் : பன்னாட்டுச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – அரசியல் விவேகம் – எண்ணெய் நாடுகளில் அரசியல் விவேகம்

## முன்னுரை

இவ்வுலகில் பன்னாட்டுச் சட்டம் மற்றும் அதன் தன்மை பொருளடக்கம் அரசியல் விவேகம் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அரசியல் விவேகம் மற்றும் உலக அரசியலில் மத்திய கிழக்கு நாடுகளின் முக்கியத்துவம் மிக தெளிவாக கூறப்பட்டுள்ளன. பின்பு ஒவ்வொன்றையும் தனித்தனியாக விரிவாக காண்போம்.

## நோக்கங்கள்

பன்னாட்டுச்சட்டத்தின் தன்மையும் பொருளடக்கத்தினை புரிந்து கொள்ளுதல்
பன்னாட்டு சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கற்றறிதில்
அரசியல் விவேகத்தின் இடர்பாடுகளையும் மற்றும் வீழ்ச்சியையும் தெரிந்து கொள்ளுதல்

## அலகின் வடிவமைப்பு

பன்னாட்டு சட்டத்தின் விளக்கம் மற்றும் தோற்றம் வளர்ச்சி
பன்னாட்டு சட்டத்தின் வரையறைகள்
அரசியல் விவேகம்
அரசியல் விவேகத்தின் வகைகள்
அரசியல் விவேகத்தில் ஏற்படும் வீழ்ச்சி
அரசியல் தந்தர முறைகளில் காணப்படும் குறைகள்
எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அரசியல் விவேகம்
உலக அரசியலில் மத்திய கிழக்கு நாடுகளின் முக்கியத்துவம்
தொகுப்புரை (Summary)
முக்கிய வார்த்தைகள் (Key Words)
இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for further studing)
முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)
மாதிரி வினாக்கள் : (Questions)

### 6.1. பன்னாட்டுச் சட்டம்

விரோதிகளை முறியடித்து தங்களுடைய மேம்பட்ட அதிகாரத்தை நிலைநிறுத்த அரசுகள் போட்டியிடும் இக்காலகட்டத்தில், தேசிய அதிகாரத்தை வரையறை செய்யும் பன்னாட்டுச் சட்டத்தின் முக்கியத்துவம் யாவுராலும் உணரப்பட்டுள்ளது. இன்றைய உலக விவாகரங்களுக்கு இது தேவைப்படுகிறது. மனித செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் இல்லாத ஒரு சமூகத்தில் மனிதனால் வாழ இயலாது, அதைப்போன்று நாடுகளின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்த பன்னாட்டுச் சட்டங்கள் இல்லையென்றால், நாடுகளுக்கு சுமுகமாக ஒன்றொடொன்று, தொடர்புகொண்ட செயல்பட இயலாது. இவ்வாறான சட்டங்கள் இல்லாத போது குழப்பங்கள் ஏற்பட்டு 'வெளிகொண்ட வலிமை" முக்கிய சக்தியாக உலகில் நிகழும், உண்மையில் உலக அரங்கில் ஒழுங்கைப் பாதுகாத்து, அதிகாரத் துஷ்பிரயோகத்தை தடை செய்யத் தேவையான முக்கிய ஆக்கக்கூறாக பன்னாட்டுச் சட்டம் காணப்படுகிறது.

#### 6.1.1. பன்னாட்டுச் சட்டத்தின் தன்மையும் பொருளடக்கம்

விளக்கம்: (Definition): பன்னாட்டுச் சட்டத்திற்கு பல்வேறான பொருள் விளக்கங்கள் அறிஞர்களால் வழங்கப்பட்டுள்ளன. பண்பட்ட அரசுகளின் இடையே நிலவும் உறவுகளை சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தும் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட விதிகளே பன்னாட்டுச் சட்டம் என்று ஒப்பன்கிம் (Oppenhiem) விளக்குகிறார். 'நாடுகளுடைய உரிமைகளையும், அவ்வுரிமைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகளையும் உரிமை மீறலைத் தடுக்கும் பரிகாரங்களையும் எடுத்துக்கூறும், நாடுகளில் பொது சமுதாய அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளின் தொகுப்புதான்" பன்னாட்டுச் சட்டம் என்று பென்பிக் (Fenwick) என்ற அறிஞர் கூறுகின்றார். அரசுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புக்களிடையே நிலவும் உறவுகளைக் கட்டுப்படுத்தச் சட்டப்பூர்வமான விதிகளின் தொகுப்புத்தான் பன்னாட்டுச் சட்டம் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டம் அரசுகளை மட்டும் ஒழுங்குபடுத்துகிறது என்றும், இது தனிப்பட்ட நபர்களின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தாது என்றும் முன்னர் எண்ணினார். இது அரசுகளுக்கிடையே உறவுகளுக்கான சட்டம், எனினும், தனி நபர்களுக்கான சட்டம் அல்ல என்றும் ஒப்பன்கிம் இச்சட்டத்தை விளக்கும் போது கூறியுள்ளார். இவ்வெண்ணம் இன்று மாறி வருகின்றது. இப்பாடத்தை கற்றுத்தேர்ந்த தற்கால அறிஞர்களின் கருத்துப்படி இச்சட்டம் தனிமனிதர்களைப் பற்றி

(குறிப்புக்கான இடம்)

ஓரளவு குறிப்பிடுகின்றது என்று தெரிய வருகின்றது. குறிப்பாக தனிமனிதர்கள் அரசுகளோடு கொண்டுள்ள தொடர்புகளை இச்சட்டம் வரையறை செய்கிறது. என்று இவ்வறிஞர்கள் மேலும் கூறியுள்ளார்.

எவ்வாறெனினும், மரபார்ந்த பன்னாட்டுச் சட்டத்தை பொதுவுடைமை நாடுகள் சந்தேகக் கண்ணோட்டத்துடன் நோக்கின. ஆரம்பத்தில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் இச்சட்டத்தை முழு அளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. முதலாளித்துவ மற்றும் ஆதிக்க ஆட்சி கொள்கைகளைக் கொண்ட மேற்கத்திய நாடுகள் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தி பாதுகாக்க உகந்த கருவியாக மரபார்ந்த பன்னாட்டுச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றன என்று பொதுவுடைமையாளர்கள் எண்ணினர். சோவியத் நாட்டைச் சார்ந்த ஏ.ஒய் விஷின்ஸ்கி (A.Y. Vishinsky) என்பார் 1949ஆம் ஆண்டு பன்னாட்டுச் சட்டத்திற்கு சீரிய வகையிலான ஒரு பொருள் விளக்கம் வழங்கியுள்ளார். "ஆளும் வர்க்கத்தினர் தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்தி, தனியாகவும் கூட்டாகவும் கட்டாய வழிமுறைகளைப் பின்பற்றி அரசுகளிடையே போராட்டம் மற்றும் ஒத்துழைப்பை உருவாக்குதலை ஒழுங்குபடுத்தும் விதிகளின் மொத்த தொகுப்புத்தான் பன்னாட்டுச் சட்டம்" என்று அன்னார் கூறியுள்ளார். பன்னாட்டுச் சட்டக்கல்விக்கு இன்று ரஷ்யாவில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. சோவியத் அதிகாரிகளும், அறிஞர்களும் பன்னாட்டுச் சட்டத்தின் முக்கியத்துவத்தை இன்று எடுத்தியம்புகின்றனர். ஆனால் அச்சட்டத்தை அவர்கள் அணுகும்முறை இரகசியமாகவும், மார்க்ஸிய லெனினிய கொள்கையோடு தொடர்பினை கொண்டதாகவும் திகழ்கிறது. இறைமை, தலையிடாமை, நில ஆக்கிரமிப்பின்மை, அரசுகளின் சமநிலை ஆகிய மரபார்ந்த தத்துவங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். ஆக்கிரமிப்பின்மை, சுய நிர்ணயம், சமாதானக் "கூட்டு வாழ்வு" படைகுறைப்பு போன்ற புதியதத்துவங்களும் பன்னாட்டுச் சட்டத்தில் அவர்கள் முக்கிய இடம் அளித்துள்ளனர். டன்கின் (Tunkin) என்பார் தற்கால பன்னாட்டுச் சட்டம் குடியேற்றக் கொள்கையை எதிர்க்கின்ற அளவில் அமைந்திருப்பதாக 1962—ஆம் ஆண்டு கூறியுள்ளார். உருவாக்கப்படுகின்ற நிலையில் பொதுவுடைமைச் சீனாவில் பன்னாட்டுச் சட்டம் இருக்கின்றது. பொதுவாக சோவியத் தலைவர்களைப் போன்று, சீனத்தலைவர்களும் மார்க்ஸிய – லெனினிய அணுகுமுறையைப் பின்பற்றுகின்றனர். ஆனால் சீனத்தலைவர்கள் அரசு முறைகளுக்கிடையேயான போராட்டதிற்கு அதிக அளவில் முக்கியத்துவம்

(குறிப்புக்கான இடம்)

வழங்குவதோடு வெளி விவகாரங்களைச் சட்டபூர்வமாக அணுகுவதைக் காட்டிலும் அரசியல் ரீதியாக அணுகுவதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

குடியேற்ற பகுதிகளை ஒழித்தல், சுய நிர்ணயம், மனித உரிமைகள், இயற்கை வளத்தை சமூக நலனுக்காக பயன்படுத்தல் போன்றவற்றை முன்னேறுவதைச் தடை செய்கின்ற அளவில் அதிகார நிலைநிறுத்தலை பாதுகாக்கப் பயன்படும் ஒரு கருவியாக பன்னாட்டுச் சட்டம் மாறிவிடக்கூடாது என்பதில் பொதுவுடைமை நாடுகளைப் போன்று வளர்ந்து வரும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளும் கவனம் செலுத்துகின்றன. பன்னாட்டுச் சட்ட வளர்ச்சியின் முன்னேற்றத்தில் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மிகவும் அக்கறை கொண்டுள்ளன. பொதுவுடைமையாளர்களைப் போன்று அல்லாமல், இந்நாடுகள் பன்னாட்டுச் சட்டத்தைப் பற்றி ஒரு எதிர்மறையல்லாத கருத்தைக் கொண்டுள்ளனர். அச்சட்டத்தின் மரபார்ந்த விதிகளைப் பல நேரங்களிலும் இந்நாடுகள் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டுள்ளன. பெரும்பாலான ஆசிய ஆப்பிரிக்கா நாடுகள் பன்னாட்டு நிறுவனங்களில் அங்கத்தினராக தயாராக உள்ளன. இந்நாடுகள் பலமுனை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, பன்னாட்டு வாழ்வில் முக்கிய பங்கு ஆற்ற முன்வந்துள்ளன. இவ்வாறு, பன்னாட்டுச் சடட்த்தைப் பெருமளவில் இந்நாடுகள் மதித்த போதிலும், வளர்ந்து வரும் நாடுகளிடையே மரபார்ந்த பன்னாட்டுச் சட்டத்தைப் பற்றிய அதிருப்தி நிலவுகிறது. குடியேற்றக் கொள்கையை, எதிர்த்து நடத்திய போரிலும், சமூக மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தைநிலைநிறுத்த எடுத்த முயற்சிகளிலும் தாங்கள் பின்பற்றிய சுயநிர்ணயக் கொள்கைக்குப் பன்னாட்டுச் சட்த்தில் இணைக்க வளர்ந்து வரும் நாடுகள் விரும்பின. ஆனால் இக்கொள்கையை மேற்கத்திய நாடுகள் சட்டப்பூர்வமான கொள்கையாகக் கருதாமல், அரசியல் கொள்கையாகக் கருதின.

பன்னாட்டுச் சட்டத்தின் பொருளடக்கத்தை மூன்று தலைப்பின் கீழ் விரிவான அளவில் எடுத்தியம்பலாம் அவை: (1) அரசுமுறை சார்ந்த சட்டம் (2) சமாதான முறையிலான பன்னாட்டு செயலிணைவுறவு பற்றிய சட்டம் (3) போர் பற்றிய சட்டம் என்பவையாகும்.

பன்னாட்டுச் சமூகத்தின் அடிப்படை அமைப்புக்களாக அரசுகள் கருதப்படுவதால், அரசுகளின் சட்டப்பூர்வமான தோற்றத்தையும், அவற்றின் பணிகள், உரிமைகள், சலுகைகள் போன்றவற்றை விளக்குதலையும்,

பன்னாட்டுச் சட்டம் தனது முக்கியப் பணியாகக் கொண்டுள்ளது. அரசுமுறை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றை அங்கீகரித்தல், நிலப்பரப்பு அதிகார வரையறை தேசியம் மற்றும் குடியுரிமை வழங்கல் போன்றவை இச்சட்டத்தின் நோக்க எல்லையினுள் அடங்குகிறது.

சமாதான முறையிலான பன்னாட்டுச் செயலிணைவுறவு பற்றி சடடம்ட மூன்று வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளன. அவை (i) அரசியல் தந்திரம் சார்ந்த சட்டம், (ii) உடன்பாடுகள் சார்ந்த சட்ம், (iii) பன்னாட்டுத் தகராறுகளை சமாதானமாகத் தீர்ப்பது பற்றி சட்டம் என்பவையாகும். அரசியல் தந்திர பணிகளில் ஈடுபடும் பலதரப்பட்ட அதிகாரிகளின் அதிகாரத்தையும், சலுகைகளையும் பன்னாட்டு ஒப்பந்தகள் முடிவு செய்கின்றன. உடன்பாடுகளுக்குப் பொருள் விளக்கம் அளித்தல் அவைகளை முடித்து வைத்தல், அவைகளைப் பரிசோதித்தல் போன்றவை பன்னாட்டுச் சட்டத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. முறையில் இடையீடு செய்தல், நடுநிலைத் தீர்ப்பளித்தல், சட்டப்பூர்வ தீர்ப்பளித்தல் போன்ற வழிமுறைகளின் வாயிலாக சமாதானமாக பிரச்சனைகளைத் தீர்த்தல் மூன்றாவது பிரிவில் அடங்கும்.

சட்டத்தின் அடிப்படையில் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போரில் ஈடுபடல், நடுநிலையை மேற்கொள்ளல் போன்றவற்றைப் போர், சார்ந்த சட்டங்கள் எடுத்துக் கூறுகின்றன. போரில் ஈடுபடுவோர் மற்றும் போரில் ஈடுபடாதோர் பற்றிய வேறுபாடுகள் சிலவகை ஆயுதங்களை பயன்படுத்தலைத் தடைசெய்தல், போர்க் கைதிகளை நடத்துதல், தரை மற்றும் கடல் சம்பந்தப்பட்ட போர் நடவடிக்கைகள், போரில் ஈடுபடுோர் மற்றும் நடுநிலை மேற்கொள்வோர் ஆகியவர்களின் உரிமைகளும், கடமைகளும் போன்றவற்றைப் பன்னாட்டுச் சட்டத்தின் மூன்றாவது பகுதி விளக்குகின்றது.

## பன்னாட்டுச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அரசாங்கங்களுக்கிடையே தொடர்புகளை நிலை நிறுத்தும் தேவையின் அடிப்பபடையில் பன்னாட்டுச் சட்டம் வளர்ந்துள்ளது. உடன்பாடுகள், ஒப்பந்தங்கள், எழுதப்பெற்ற அல்லது எழுதப்பெறாத பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் மூலமாக இச்சட்டம் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வாறாக, தற்கால அரசுகளின் சட்டம் பணடைக் காலத்திலும்,மத்திய காலத்திலும், தற்காலத்திலும் தோன்றியுள்ளது. பரிணாம வளர்ச்சி முறையின் மூலமாக இச்சட்டம்

தோன்றி வளர்ந்து வருகின்றது. முக்கியமாக நான்கு அடிப்படையின் வாயிலாக இவை தோன்றியுள்ளன.

பன்னாட்டுச் சட்டத்தின் முக்கிய அடிப்படையாக பன்னாட்டு வழக்காறு கருதப்படுகிறது. வசதியை முன்னிட்டும், பல்வேறான நலனைக் கருதியும், பல்லாண்டு காலம் பன்னாட்டுச் செயல் தொடர்பிணைவிற்குப் பின்பற்றப்படும் வழக்காறு சார்ந்த பழக்க வழக்கங்கள் அதில் அடங்குகின்றன. இப்பழக்க வழக்கங்களை எந்தவொரு நாடும் நிராகரிக்கவில்லையெனில் நாளடைவில் அவை பொதுச் சட்டங்களில் அந்தஸ்ததைப் பெறுகின்றன. எந்தவொரு நாட்டாலும் கடுமையாக எதிர்க்கப்படாத பழக்க வழக்கங்கள் பன்னாட்டுச் சட்டத்தின் இப்பகுதியை பொதுவாக யாவரும் ஏற்றுக் கீழ்ப்படிகின்றனர்.

உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும் பன்னாட்டுச் சட்டதின் இன்னொரு குறிப்பிடத்தக்க அடிப்படையாகும். பண்டைய காலந்தொட்டே போட்டியிடும் நாடுகள் ஏற்றுக்கொண்ட உடன்பாடுகள், சட்டங்களை இயற்றுவதில் பெரும் பங்கு வகித்தன. சட்டமியற்றி, அரசுகளின் அங்கீகாரம் பெறப்பட்ட உடன்பாடுகள் பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது. வியன்னா காங்கிரசில் எடுத்த முடிவுகள் வெர்சேயில்ஸ் உடன்பாடு ஐ.நா.சபையின் உரிமையாவணம் போன்ற சட்டமியற்றும் உடன்பாடுகள் பொதுவாக பல நிலையிலான ஒப்பந்தகள் என்றழைக்கப்படுகின்றன. இவ்வகையிலான பலமுறை உடன்பாடுகளை பன்னாட்டுச் சட்டங்களாகக் கருதலாம்.

நீதிமன்றங்கள் வழங்கிய நீதியின் தீர்ப்புக்கள் பன்னாட்டுச் சட்டத்தின் மூன்றாவது அடிப்படையாகும். இருபதாவது நூற்றாண்டில் பன்னாட்டு தீர்ப்பு மன்றத்தில் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சர்வதேச சங்கத்தின் கீழ் பன்னாட்டு நீதிக்காக நிரந்தர நீதிமன்றம் காணப்பட்டது. ஐக்கிய நாட்டுச் சபையின் கீழ் நீதிக்காக பன்னாட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அவைகள் சிறந்த முறையில் நீதி பரிபாலனப் பணியை ஆற்றி வந்துள்ளன.

மெய்யறிவு மற்றம் அதிகாரம் பன்னாட்டுச் சட்டத்தின் நான்காவது முக்கிய அடிப்படையாகத் திகழ்கிறது. எல்லாச் சட்டங்களும் பொதுத் தத்துவத்தைப் போன்று கூறப்பட்டுள்ளது. மெய்யறிவு மற்றும் வாதமுறைகளைப் பின்பற்றி உய்த்தாய்ந்து, முடிவெடுத்து ஒவ்வொரு வழக்கிற்கும் அப்போதுத் தத்துவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(குறிப்புக்கான இடம்)

ஹியூகோ குரோசியஸ் (Hugo Grotius) போன்ற வாதத்திறமை வாய்ந்த புகழ் சான்ற எழுத்தாளர்கள் பன்னாட்டுச் சட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளனர்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்ற அளவில் இதன் பொருளடக்கம் தொகுக்கப்படாமையால் இச்சட்டங்களுக்கும், தத்தவங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் மற்றும் ஒப்பந்தமுறை சொற்களுக்கும் விளக்கம் அளிப்பதில் கருத்து வேறுபாடுகள் அடிக்கடி தோன்றுகின்றன. இக்கருத்து வேறுபாடுகள் பொதுவாக அரசியல் தந்திர நடவடிக்கைகளின் வழியாகவும் மற்றும் சில நேரங்களில் வலிமையை பிரயோகித்தும் தீர்த்து வைக்கப்படுகின்றன.

இச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிய, மறுப்பவர்களுக்குத் தண்டனை வழங்கவும் எந்த நிறுவன அமைப்பும் இல்லாமையால் சாதாரண நகராட்சி சட்டங்களைப் போன்று பன்னாட்டுச் சட்டங்களை அமலாக்க இயலாது. நெருக்கடி நேரங்களில் இச்சட்டத்தின் அமலாக்கம் வல்லரசுகள் இதற்கும் வழங்கும் ஆதரவையே சார்ந்து அமைகிறது. ஆனால் வல்லரசுகள் பெரும்பாலும் தங்கள் நலனை வளர்ப்பதற்கே இதைப் பயன்படுத்துகின்றன. பன்னாட்டுச் சட்டங்களை அமலாக்க இதுகாரும் ஐக்கிய நாட்டுசபை மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை.

### 6.1.3. பன்னாட்டுச் சட்டம் இயற்றல்

வழக்காறுகளும், உடன்பாடுகளும் பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படைத் தோற்றுவாயாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வழக்காற்றை இலகுவாக உறுதிப்படுத்த இயலாது ஏனென்றால் எப்பொழுது ஒரு பழக்க வழக்கம் வழக்காறாக மாறுகிறது என்று அறுதியிட்டுக் கூற இயலாது. மேலும் எப்பொழுது அந்த வழக்காறு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் கூறமுடியாது. எனவே, சட்டம் இயற்ற உகந்த திருப்பதிகரமான அடிப்படையாக இது தோன்றவில்லை. ஆகவே உடன்பாடுகள் புதிய பன்னாட்டுச் சட்டத்தை உருவாக்க உகந்த அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் இம்முறையும் போதிய அளவில் திருப்தியை அளிக்கவில்லை. எதிர்மறைப் பொருள் அடங்கிய தன்மை பொருள் விளக்கம், முடித்துவைக்கும் தன்மை ஆகிய இருமுனைத் தன்மைகளை வரலாற்றுப் பூர்வமாக உடன்பாடுகள் கொண்டுள்ளன. இப்பொழுது, சட்டம் உருவாக்க அரசுகள் ஒப்பந்த உடன்பாடுகளைச் சார்ந்திருப்பதில்லை. பன்னாட்டுச் சட்டம் இயற்றும் அமைப்பு முறையை இன்று நாடுகள் பயன்படுத்துகின்றன.

(குறிப்புக்கான இடம்)

பன்னாட்டுச் சட்டம் இயற்றல் உண்மையான சட்டம் இயற்றலாகத் திகழ்ந்தால், அரசுகள் இயற்றும் சட்டங்களில் அத்தனைக் குடிமக்களும் நேரடியாகப் பற்கேற்றுத் தங்கள் இசைவை வழங்காத போதிலும், அதற்கு கட்டுப்படுவது போன்று அரசுகள் தாமாகப் பன்னாட்டுச் சட்டமன்றம் வழங்கும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றன. ஆனால் நாடுகளின் சட்டமன்றங்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்ற அளவில் எந்தவொரு பன்னாட்டு மன்றமும் இதுகாறும் நிறுவப்படவில்லை. உடன்பாடுகள் அல்லது மாநாடுகள் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்திட அரசுகளின் அரசியலைமைப்பு முறைகளின் வாயிலாக அங்கீகரிக்கப்பட்டால், அவ்வொப்பந்தங்கள் அவ்வரசுகளைக் கட்டுப்படுத்துகின்ற அளவில் அமைகின்றன.

பன்னாட்டுச் சட்டமியற்றல் எந்தவொரு குறிப்பிட்ட வழி முறையையும் கூறவில்லை. சட்டமியற்றும் வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த அரசுகளால் எந்தவொரு வழிமுறை பயன்படுத்தப்பட்டாலும் அவ்வுடன்பாட்டை ஒவ்வொரு அரசும் தனித்தனியாக அங்கீகரித்தால்தான், அவ்வுடன்பாடு அவ்வரசுகளைக் கட்டுப்படுத்தும். பலமுறை உடன்பாடுகள் பன்னாட்டுச் சட்டங்களை ஒத்திருந்தாலும், அவைகளுள் சில வேறுபாடுகளும் நிலவுகின்றன. பன்னாட்டுச் சட்டம் கருத்து வேறுபாடுகளுக்கிடையே இசைவைத் தோற்றுவிக்க முயற்சிக்காது. அது சட்டத்தின் வழி ஆட்சியை நிலைநிறுத்த முனைகின்றது. விரும்புகின்ற அத்தனை அரசுகளும் பொதுவாக அச்சட்டத்தை அணுகலாம். பன்னாட்டுச் சட்டங்களை தன்னம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உணர்வை தங்கள் ஒழுக்கம் சார்ந்த கடமையாக இன்று அரசுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

பன்னாட்டுச் சட்டம் இயற்றும் முறையை முதலாவது,, 1815—ஆம் ஆண்டு வியன்னா காங்கிரஸ் ஆரம்பித்து வைத்ததாகக் கொள்ளலாம். 1856 ஆம் ஆண்டு நடந்தேறிய ஹேக் மாநாடுகள் போன்றவை பல பன்னாட்டுச் சட்டங்களைத் தோற்றுவித்தன. சர்வதேச சங்கம் ஆரம்பித்த கால கட்டத்தில் அச்சங்கம் எண்ணற்ற பன்னாட்டுச் சட்டங்களை இயற்றியது. இச்சட்டம் தன்னகத்தே கொண்டுள்ள பொருளடக்கம் மனித நலனைப் போன்று பரந்து காட்சியளித்தது. தொடர்பு மற்றும் போக்குவரத்து, அடிமைத்தனம் போன்ற பிரச்சனைகளுக்குச் சமாதான முறையில் தீர்வு காணல், ஒப்பியம், பெண்டிரும் குழந்தைகளும்,

(குறிப்புக்கான இடம்)

போர்க்கருவிகள், கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டும் வெளியீடுகள் போன்ற இழிதொழில் வாணிகஞ்செய்தல், போலி நாணய வெளியீடு, செலவாணி மற்றும் தொழிலில் ஒற்றுமை போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் விதிகளை இச்சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. பன்னாட்டுச் சட்டமியற்றும் வழிமுறை சர்வதேச சங்கத்தால் சீரமைக்கப்படாவிட்டாலும், அச்சங்கத்தால் குறிப்பிடுகின்ற அளவிலான முன்னேற்றத்தை அடைந்தது. சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின் அரசுகளிடையே ஏற்பட்ட பல்வேறான உடன்பாடுகளுக்குப் பேராசிரியர் ஹட்சன் பதினாறு பெயர்களைச் சூட்டியுள்ளார். அவை சட்டம் (Act), இசைவு (agreement), பொது இணக்க ஒப்பந்தம் (Convention), கூட்டு ஒப்பந்தம் (Convenant), உறுதிமொமழி (Declaration) முடிவான சட்டம் (final Act), பொதுச்சட்டம் (general act), ஒப்பந்தம் (Pact) திட்டம் (Plan), கூட்டு ஒப்பந்த மூலப்படி (Protocol), கட்டுப்பாடு விதிமுறை (regulation), விதி (Rule) செயல்வரைச் சட்டம் (Scheme), சட்ட வரைவு (Statute), உடன்பாடு (treaty) என்பவையாகும். பன்னாட்டுச் சட்டம் என்ற தொகுப்பீட்டில் இவற்றை அன்னார் தொகுத்து அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாட்டு அமைப்பில் சட்டம் இயற்றும் வழிமுறை பின் கூறப்பட்டுள்ள வகையில் செயல்படுகிறது. பொதுக்குழு ஒரு குறிப்பிட்ட கருத்தின் அடிப்படையில் சட்ட முன்வரைவு (draft Statute) தயாரிக்க ஒரு குழுமை அமைக்கும். அக்குழுவின் ஒரு உட்பிரிவு அப்பணியை மேற்கொள்ளும். அவ்வுட்பிரிவின் அறிக்கையை குழு அங்கீகரித்து பொதுக்குழுவின் முன் சமர்ப்பிக்கும், பொதுக்குழு சமர்ப்பிக்கப்பட்ட சட்ட முன் வரைவை அங்கீகரிக்கும் அல்லது குழுவிடம் மறு பரிசீலனைக்குத் திரும்ப அனுப்பும். பொதுக்குழுவில் அங்கீகரிக்கப்பட்டால் அங்கத்தனர் அரசுகளின் அங்கீகாரம் பெற சட்ட வரைவுக்கு அனுப்பி வைக்கப்படும்..

### 6.1.4. பன்னாட்டுச் சட்டத்தின் வரையறையும் சாத்தியக்கூறுகள்

பன்னாட்டுச் சட்டத்தின் வரையறைகள் அச்சட்டத்தின் சில குறைபாடுகளை எடுத்தியம்புகின்றன. அவ்வரையறைகளாவன 1) சட்டமியற்றும் பணியின் முடிவ பெறாத நிலை 2) நீதி பரிபாலன பணியில் நிலவும் பல்வேறான தடைகள் 3) திறம்பட அமலாக்கும் நிலை இல்லாமல் 4) பன்னாட்டுச் சட்டத்தின் நோக்கு: எல்லை மற்றும் குறிக்கோள் பற்றிய பரவலான தப்பெண்ணம்.

சட்டமியற்றும் பணி: பன்னாட்டுச் சட்டம் பரவலாக்கப்பட்டுள்ளமையால் எவ்வாறு பன்னாட்டுச் சட்ட விதிகள் வரையறுக்கப்பட்ட வேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. இரண்டு முக்கிய அமைப்புக்கள் மூலம் இவ்விதிகள் உருவாக்கப்படுகின்றன. அவை வழக்காறுகள் மற்றும் உடன்பாடுகள் என்பவையாகும்.

தற்கால பன்னாட்டுச் சட்டத்தை உருவாக்கியதில், 'வழக்காற்று விதிகள் பெரும் பங்கு பெற்றுள்ளன. எவ்வாறெனினும் வழக்காறு சம்மந்தப்பட்ட விதிகளை நிரூபிப்பது மிகவும் அரிது. வழக்காற்றுச் சட்டங்களின் செயல்பாட்டைப் பொதுவாக அரசுகள் ஏற்றுக்கொள்ளாது. ஒரு குறிப்பிட்ட விதியை நாடுகளின் சமூக அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதா என்பைத நிரூபிப்பது அரிது. இவ்விதிகளை சாட்சியங்களின் மூலம் நிரூபித்தல் வேண்டும்.

பன்னாட்டுச் சட்டத்தின் வழக்காறு விதிகளில் குறைபாடுகள் நிலவுவதால், தற்காலத்தில் உடன்பாடுகளின் வாயிலாக அரசுகள் பன்னாட்டுச் சட்டத்தை உருவாக்குகின்றன. உடன்பாடுகளை இருவகையாக பிரிக்கலாம். அவை சட்டமியற்றும் உடன்பாடுகள் மற்றும் உடன்பாட்டு ஒப்பந்தம் என்பவையாகும். சட்டமியற்றும் உடன்பாடுகள் அரசுகளைக் கட்டுப்படுத்தும் விதிகளை அளிக்கின்றது. உடன்பாட்டு ஒப்பந்தம் ஒப்பந்த நாடுகளுக்கு இடையேயான விசேட காரியங்களை எடுத்துக் கூறுகின்றது. சட்டமியற்றும் உடன்பாடுகள் மட்டுமே பன்னாட்டுச் சட்ட வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன. உடன்பாட்டு ஒப்பந்தங்கள் இரண்டு அல்லது பல அரசுகளுக்கிடையேயான முக்கிய காரியங்களைக் கவனிக்கிறது. சட்டமியற்றும் உடன்பாடுகளுக்கு சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். அவை: வெஸ்ட்ஃபேலியா உடன்பாடு (1618), பாரிஸ் உடன்பாடு (1815) வெர்செயில்ஸ் உடன்பாடு (1919), பாரிஸ் உறுதிமொழி 1856, 1864, 1906, 1929, 1949, சூயஸ் கால்வாய் ஒப்பந்தம் (1888) (1899) மற்றும் (1907) ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய ஹேக் மாநாட்டு ஒப்பந்தங்கள், சர்வதேச் சங்க கூட்டு ஒப்பந்தம் (1920) ஐக்கிய நாட்டுச் சபையின் ஒப்பந்தச் சட்டம் (1915) போன்றவையாகும். எவ்வொறெனினும், ஒரு பன்னாட்டு உடன்பாடு அவ்வுடன்பாட்டில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்கு மட்டுமே பன்னாட்டுச் சட்டங்களைத் தோற்றுவிக்கும். உடன்பாட்டில் பங்கேற்காகத நாடுகளை அச்சட்டம் கட்டுப்படுத்தாது.

சட்டப்பூர்வமான பன்னாட்டு ஆவணங்களுக்கு விளக்கம் அளிப்பது கடினம் என்று வல்லுநர்கள் விவாதிக்கின்றனர். பன்னாட்டு அரங்கில்

(குறிப்புக்கான இடம்)

பொதுவாக பன்னாட்டுச் சட்ட விதிகள் தெளிவற்ற மற்றும் உறுதியற்ற நிலையில் காட்சியளிக்கின்றன. இச்சட்டம் கட்டுப்படுத்தும் மக்கள் தங்களுக்கு தேவையான சட்டங்களை தாங்களே உருவாக்கவும், சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கவும் தேவையான மேம்பட்ட அதிகாரத்தைக் கொண்டு திகழ்கின்றனர். இவ்வாறு குடிமக்கள் தங்கள் தேசநலனுக்கு உகந்தவாறு சட்ட நுணுக்கங்களையும் பொருள் தெளிவற்ற நிலையையும் பயன்படுத்துகின்றனர். இந்நிலை சர்வதேச சங்கம் செயல்பட்ட காலத்தில் நிலவியது. அதன்பின் ஐக்கிய நாட்டுச் சபையின் கீழும் அதேநிலைதொடர்கிறது. சர்வதேசச் சட்டம் ஒரு நாட்டில் வாழும் குடிமக்களைக் கட்டுப்படுத்துமா என்பது தெளிவற்ற நிலையில் காணப்படுவது இன்னொரு முக்கிய குறைபாடாக கருதப்படுகிறது. ஆனால் உள்ளாட்டு சமூக அமைப்பில் ஒரு சட்டம் மக்களைக் கட்டுப்படுத்துமா அல்லது கட்டுப்படுத்தாதா என்ற கேள்வியே எழாது.

உள்நாட்டு சமுதாய அமைப்பில் சட்டத்தை மீறுகின்ற ஒரு நபர் அரசின் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார். ஆனால் பன்னாட்டுச் சட்டவிதிகளின் தெளிவற்றநிலை அச்சட்டத்தின் அடிப்படையினையே சீர்குலைக்கின்ற அளவில் காணப்படுகின்றது.

நீதிபரிபாலன பணி: நீதிபரிபாலன பணி சம்பந்தப்பட்ட பிரச்சனை சிக்கலான ஒன்றாக கருதப்படுகிறது. பின் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் பன்னாட்டுச் சட்டத்திற்கு இடர்பாடுகள் தோன்றுகின்றன.

(i) பன்னாட்டு நீதிபரிபாலன அமைப்பின் தன்மை: (The Nature of International Judicial Machinery) பன்னாட்டுச் சட்டம் தேசிய நீதிமன்றங்களில் செயலாக்கப்படுகிறது. இந்நிலையில் வெளிநாட்டில் பாதிக்கப்பட்ட ஒரு குடிமகன் அந்த நாட்டு நீதிமன்றங்களில் குறை தீர்க்க முறையிடுகிறான். அந்த நாட்டு நீதிமன்றம் அந்நாடு உருவாக்கிய சட்டத்தின் உதவியோடு வெளிநாட்டினருக்கு நீதி வழங்குகிறது. பாதிக்கப்பட்ட வெளிநாட்டு குடிமகனுக்கு நீதிநிலை நாட்டப்படவில்லையெனில், அவன் தனது சொந்த அரசாங்கத்திடம் முறையிடுவின்றான். அவனுடைய அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் வற்புறுத்தலின் வாயிலாகவும் நீதி வழங்க முயற்சிக்கும். பன்னாட்டு அரங்கில் சர்வதேச சங்கத்தின் கீழ் பன்னாட்டு நீதிபரிபாலனத்திற்காக நிரந்தர நீதிமன்றம் நிறுவிய காலத்திற்கு முன் ஒவ்வொரு வழக்கிற்கென்றும் விசேடமாக நியமிக்கப்பட்ட தனிநபர்கள் மூலமாகவும் அல்லது குழுக்கள் மூலமாகவும் புதிய

(குறிப்புக்கான இடம்)

நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுப் பன்னாட்டு வழக்குகளுக்கு தீர்ப்பளிக்கப்பட்டன. சர்வதேச சங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிரந்தர நீதிமன்றத்தின் மூலமாகவும் ஐக்கிய நாட்டு சபையில் அமைக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தின் மூலமாகவும் பன்னாட்டு நீதிபரிபாலத்திற்கு நிரந்தர நீதிமன்றம் அமைக்கப்பட்டது. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பில் சர்வதேச நீதிமன்றம் உயர்நீதிமன்றமாக கருதப்படுவதில்லை. ஆகவே சர்வதேச நீதிமன்றம் விசாரிக்கின்ற வழக்குகளிலும் அந்நீதிமன்றம் அளிக்கின்ற தீர்ப்புகளிலும் பன்னாட்டுச் சட்டம் ஒரே சீராகப் பயன்படுத்தப்படல் அவசியம். அவ்வாறு பயன்படுத்தப்பட்டால் அதன் தீர்ப்புகள் உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்படும் மேலும், முன்னோடி நிகழ்ச்சிகளைப் பின்பற்றும் கடமை சர்வதேச நீதிமன்றத்திற்குக் கிடையாது. தேசிய நீதிமன்றங்கள், நிலையில் ஒரு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பை இன்னொரு நீதிமன்றம் புறக்கணிக்கும் சுதந்திரம் பெற்றிருப்பதோடு, சர்வதேச நீதிமன்றத்தில் தீர்ப்பபைப் புறக்கணிக்கும் உரிமை பெற்றிருக்கிறது.

(ii) கட்டாய அதிகார எல்லையிலான குறைபாடு (The lack of Compulsory Jurisdiction)

விருப்பத்திற்கு மாறாக அவ்வரசு சம்பந்தப்பட்ட வழக்கைப் பன்னாட்டு நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க கட்டாயப்படுத்தும் அதிகாரம் பன்னாட்டச் சட்டத்திற்குக் கிடையாது.

(iii) சட்டத்தின் பொருள் தெளிவின்மை (The ambiguity of the law)

ஒப்பந்தங்கள் பொதுவாகவும், தெளிவற்ற நிலையிலும் கூறப்பட்டுள்ளமையால் சட்டத்தில் பொருள் தெளிவின்மை ஏற்படுகிறது. நீதிமன்ற படிநிலை அமைப்பில் நிலவும் குறைபாடும், முன்னோடி நிகழ்ச்சிகளைப் பின்பற்றிய நிலையும் சட்டத்தின் பொருள் தெளிவின்மையை தோற்றுவித்தது எனலாம். வழக்காற்றுச் சட்டத்தின் நிலையற்ற தன்மையும் சட்டத்தின் பொருள் தெளிவின்மையைத் தோற்றுவித்த இன்னொரு காரணியாகும். மேலும் தள்ளுபடி செய்யும் வழிமுறைகள் பன்னாட்டு சட்டத்தில் கிடையாது.

(iv) நீதிபதிகளாக ஆளப்படுபவர்கள் (Subjects as Judges): பன்னாட்டுச் சட்டத்தினால் ஆளப்படுபவர்கள் அச்சட்டத்தின் நீதிபதிகளாகவும் திகழ்வது நீதிபரிபாலன பணியின் இன்னொரு முக்கிய குறைபாடாகும். பன்னாட்டுச் சட்டத்தினால் ஆளப்படுபவர்களாகிய தனிப்பட்ட அரசுகள், அச்சட்டத்திற்குப் பொருள் விளக்கம்

(குறிப்புக்கான இடம்)

அளிக்கும் உரிமையும், அமலாக்கும் அதிகாரத்தையும் பெற்றிருப்பது இதன் பொருளாகும். ஆளப்படுபவராகவும் நீதிபதிகளாகவும் அரசுகளே செயல்படுவதால், சட்டத்தின் தெளிவற்ற தன்மையை அவ்வரசுகள் தங்களுக்குச் சாதகமாக அமைத்துக் கொள்கின்றான்.

(v) நீதிமன்ற விசாரணைக்குட்பட்ட வழக்குகளில் நிலவும் குறைபாடு (The Limitation of Justiclable disputes): அரசுகள் கட்டாய அதிகார எல்லைக்குள் உட்படாத அளவில் இருப்பதால் அவை அவ்வழக்குகளைப் பன்னாட்டு நீதிமன்ற விசாரணைக்குச் சமர்ப்பிக்க வேண்டாம் என்று நிர்ணயிக்கும் உரிமையைப் பெற்றுத் திகழ்கின்றன பொதுவாக, அரசுகள் வழக்ககளை விசாரணைக்குட்பட்ட வழக்குகள், விசாரணைக்குட்பட்ட (Unjusticiable) வழக்குகள் என்று வேறுபடுத்துகின்றன. விசாரணைக்குகந்த சட்ட விதிகளில் காணப்படும் வழக்குகள். விசாரணைக்குட்பட்ட வழக்குகள் என்றும் விசாரணைக்குகந்த சட்டங்களில் காணப்படாத அளவிலான வழக்குகள் விசாரணைக்குட்படா வழக்குகள் என்றும் அழைக்கப்படுகின்றன. உள்நாட்டுச் சட்டத்தில் விசாரணைக்கு உகந்த வழக்குகள், விசாரணைக்குட்படாத வழக்குகள் என்ற வேறுபாட்டைக் காணமுடியாது.

செயலாண்மை பணி: சட்டமன்ற மற்றும் நீதிபரிபாலன பணிகளைக் காட்டிலும் செயலாண்மைப் பணியின் குறைபாடு தெளிவாகத் தெரியவருகின்றது. பன்னாட்டுச் சட்டத்தை அமலாக்க பன்னாட்டு சமூக அமைப்பில் எந்தவொரு மையப்பிரிவும் கிடையாது. இவ்வாறு பன்னாட்டுச் சட்டச் செயலாக்கத்திற்கான தனிப்பிரிவு இல்லாமையால், ஒவ்வொரு நாடும் தனது உரிமைகைளச் செயல்படுத்தத் தனக்குச் சரியென்று படுகிற செயல்களைத் தனது விருப்பத்தின் அடிப்படையில் செய்கின்றன. எவ்வாறெனினும் பன்னாட்டுச் சட்டத்திற்குத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் கிடையாது என்று எண்ணுதல் தவறு. உண்மையில் பெரும்பாலான சட்டங்கள் பெரும்பாலன நேரத்தில் எல்லோராலும் மதிக்கப்படுகின்றன. இவ்வாறு சட்டபூர்வ விதிமுறைகளை மதித்துப் பின்பற்றுதலுக்கு சில ஆக்கக் கூறுகள் துணைபுரிகின்றன. இவ்வாக்கக்கூறுகளை மனப்பாங்கு, சுயநலன் மற்றும் கூட்டுப் பாதுகாப்பு என்ற தலைப்பின் கீழ் வகைப்படுத்தலாம்.

(குறிப்புக்கான இடம்)

தொடர்ச்சியாகப் பல்லாண்டு காலம் பின்பற்றப்படும் தத்துவங்கள் வருங்காலத்திலும் தொடர்ந்து பின்பற்றப்படும் என நம்பலாம். வெளிநாட்டுத் தூதுவர்களின் காப்புரிமையையும், மதிப்பையும் கடந்த பல நூற்றாண்டுகளாக உலக நாடுகள் மதித்து நிலைநாட்டி வந்தள்ளன. இன்றும் எந்தநாடும் தானாக அவற்றை மீறவில்லை. சுயநலன் பன்னாட்டுச் சட்டத்தில் காணப்படும் ஒரு முக்கிய தடை விதிக்கும் சக்தியாகக் கருதப்படுகிறது. ஒரு வாணிப உடன்பாட்டில் கூறப்பட்டுள்ளவற்றை மதித்து நடப்பதை ஒரு அரசு தனது கடமையாக ஏற்று நடக்கிறது. ஏனென்றால் அவ்வுடன்பாட்டின் செயல்பாட்டால் அவ்வரசிற்குப் பல நன்மைகள் கிட்டுகிறது. இறைமை வாய்ந்த நாடுகளின் சமுதாய அமைவில் சட்ட அமலாக்கலில் எழும் இடர்பாடுகளைத் தீர்வு செய்ய உகந்த வழிமுறையாகக் கூட்டுப் பாதுகாப்பைக் கொள்ளலாம். நாடுகளின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் ஆக்கிரமிப்பாளர்களை நாடுகளின் கூட்டு நடவடிக்கையினால் முறியடிப்பதை இம்முறை குறிப்பிடுகிறது. சர்வதேசச் சங்கம் மற்றும் ஐக்கிய நாட்டுச் சபை ஆகியவைகளின் சட்ட வரைவில் கூட்டுப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

இதுகாறும் கூறிவற்றிலிருந்து பன்னாட்டச் சட்டம் பன்னாட்டு உறவுகளுக்கு தேவையான அத்தனைக் காரியங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாக தெரிய வந்தாலும் அச்சட்டம் பன்னாட்டு அரசியலை கட்டுப்படுத்துவதில் போதுமான ஒரு பங்கை ஆற்றுகின்றது என்பது புலனாகிறது. பன்னாட்டு உறவுகளுக்கு வழிகாட்டும் செயல்பட்டு விதிகளை அமைப்பதில் அச்சட்டம் பெரும் பங்கு ஆற்றுகின்றது. வழக்காறு, கூட்டாக உருவாக்கப்பட்ட சட்டம் போன்றவற்றின் அடிப்படையில் வளர்ச்சியுற்ற பன்னாட்டுச் சட்டம் பன்னாட்டு நடவடிக்கைகளை நெறிப்படுத்தி, பன்னாட்டு உறவுகளை வழிகாட்டி ஒழுங்குபடுத்துகின்றது. இவ்வாறு சமாதான காலங்களுக்கும் போர்க்காலங்களுக்கும் உகந்தவாறு, அரசுகளின் செயல்பாட்டிற்கும் அரசுகளுக்கிடையேயான சமூக உறவிற்கும் தேவையான நன்னெறி விதிகளை விரிவான அளவில் இச்சட்டம் வகுத்தளிக்கின்றது. பன்னாட்டு உறவுகளில் சமாதான காலங்களில் அரசுகளுடைய உரிமையையும், பணிகளையும் அரசியல் தந்திர செயல்பாட்டினையும், பேச்சு வார்த்தைகளையும் உடன்பாடுகளின் அங்கீகாரத்தையும், அமலாக்கலையும் நாடுகளின் இச்சட்டம் ஒழுங்குபடுத்துகின்றது. பன்னாட்டச் சட்டத்தின் துணையோடு வாணிபமும் வியாபரமும் நாடுகளுக்கிடையே சுமூகமாக நடந்தேறியது.

நாடுகளுக்கு இடையிலான உறவுகளை ஒழுங்காக நிலைநிறுத்த பன்னாட்டச் சட்டம் உதவுவதோடு, பிரச்சனைகளைச் சமாதானமாக தீர்க்கமாகவும் பயன்படுகிறது. கருத்து வேறுபாடுகதைத் தீர்ப்பதற்கு வலிமையைப் பயன்படுத்தாமலிக்க, பிற வழிமுறைகளைப் பன்னாட்டுச் சட்டம் தொகுத்தளிக்கிறது. இடையீடு, நடுவர் தீர்ப்பு ஆகிய முறைகளின் மூலம் பன்னாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம் என்று பன்னாட்டுச் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது. பிரச்சனைகளைத் தீர்த்துப் பன்னாட்ட நீதிமன்றத்தின் உதவியையும் நாடலாம்.

பன்னாட்டுச் சட்டத்தை செயலாக்க, உலகில் ஒரு மைய செயலாக்கும் அதிகாரம் படைத்த அமைப்பு இல்லாத போதும், அச்சட்டத்தை, பொதுக்கருத்தை நிலைநாட்டிச் செயல்படுத்தலாம், இன்று பன்னாட்டச் சட்டத்தை நிலைநிறுத்த உகந்த உலக அமைப்பு உருவெடுத்துள்ளது. பொதுக் கருத்தை செயலாக்கவும் இவ்வமைப்பு உதவுகிறது.

### 6.1.5. அரசியல் விவேகம்: (Diplomacy)

அரசியல் விவேகம் (ராஜதந்திரம்) என்ற தொடருக்குப் பல பொருள்கள் காணப்படுகின்றன. மார்கந்தோவின் கருத்துப்படி, "அரசியல் எல்லா மட்டங்களிலும் கொள்கைகள் உருவாக்கப்பட்டு அவைகள் செயலாக்கப்படுவதை குறிப்பதே" அரசியல் விவேகம் என ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி கூறுகிறது. சுருங்கக் கூறின் அரசியல் விவேகம் என்பது பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சனைகளுக்கு முடிவுகாண்பதைக் குறிப்பதாக உள்ளது இதன் மூலம்தான் நாடுகளிடையே பேச்சுவார்த்தைகளும், தொடர்புகளும், உறவுகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசியல் விவேகம் என்பதைக் குறிக்கும் 'Diplomacy' எனும் ஆங்கிலச் சொல் 'Diploum' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். இந்த அரசியல் விவேகமானது பண்டைக்கால கிரீஸின் நகர அரசுகளிடையே முதன்முதலாகத் தோன்றியதாக அரசியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். இதைத் தொடர்ந்து ரோமானியர்களும் சிறந்த ராஜதந்திர முறைகளைக் கையாண்டு, அதனை இதைத் தொடர்ந்து ரோமானியர்களும் சிறந்த ராஜதந்திர முறைகளைக் கையாண்டு, அதனை மென்மேலும் வளர்த்து வந்தனர். எனினும் இந்தியா போன்ற கிழக்குப் பகுதியிலிருக்கும் நாடுகளில் சுமார் கி.மு.400 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே ஒரு சிறந்த ராஜதந்திர முறை பின்பற்றப்பட்டு வந்திருப்பது

தெரியவருகிறது. அரசியல் விவேகம் குறித்து கௌடில்யர் தன்னுடைய அர்த்தசாஸ்திரத்தில் மிகவும் தெளிவாகவும், சிறப்பாகவும் எழுதியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் ஒரு ஒழுங்குற அமைக்கப்பட்ட அரசியல் விவேகமுறைகள் இடைக்கால இத்தாலிய நகர அரசுகளிடையேதான் முதன் முதலில் தோன்றியது. இத்தாலிய ஐக்கயமும், மாக்கியவல்லியின் கருத்துக்களும் அந்நாட்டின் ராஜதந்திர முறைகளை வலுப்படுத்தின. பின்னர் 1648—ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வெஸ்ட்பாலிய உடன்படிக்கையும், பிரான்சின் அரசர்கள் சிறந்த ராஜதந்திரக் கருவிகளை நிறுவி அவற்றை ஸ்திரப்படுத்தியதம் பன்னாட்டு அரங்கில் நாடுகள் மேற்கொள்ள வேண்டிய அரசியல் விவேகம் சிறந்த முறையில் வளர்வதற்குப் பேருதவி புரிந்தன. பிரான்சிஸ் திகாலியர்ஸ் என்பவரின் கூற்றுப்படி 17,18 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த அரசியல் விவேகமுறைகள் மன்னர் என்ற ஒரு தனி நபருடைய விருப்பமாகவே காணப்பட்டு வந்தது. அம்மன்னர்களின் கீழ் பணியுரிந்து வந்த ராஜதந்திரிகள் அவர்களின் பிரத்யோகத் தூதுவர்களாகவே விளங்கிவந்தனர். பின்னர் பிரான்சு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் தோன்றிய புரட்சிகளின் காரணமாக, அரசர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படவோ, நாடுகளின் பலதரப்பட்ட மக்களும் இதில் பங்கேற்க வாய்ப்புகள் பெருகின. பின்னர் மன்னராட்சிகள் படிப்படியாக அகற்றப்படவே ராஜதந்திரம் குறித்த அதிகாரங்களும் அமைச்சரவையிடம் விடப்பட்டது. 1815— ஆம் ஆண்டைய வியன்னா மகாநாடு ராஜதந்திரம் குறித்த விதிகளை நிலைப்படுத்தியது.

**அரசியல் நிபுணர்களின் பணிகள்:**

"தன் நாட்டிற்கு விசுவாசமாக, சாதகமாக வெளிநாடுகளில் பொய் சொல்வதற்கென்றே அனுப்பி வைக்கப்படுகிறவர்கள் தான் அரசியல் நிபுணர்கள்" என்று சர்ஹென்றிவாட்டன் கூறுகிறார். இவர்களது பணிகளை மூன்று வகையாகக் கொள்ளலாம்.

1) தன் நாட்டின் பிரதிநிதியாக செயல்படுதல்.
2) பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளுதல்.
3) வேண்டிய தகவல்களைச் சேகரித்துத் தன் நாட்டிற்கு அனுப்பித்தருதல்.

ஒரு அரசியல் நிபுணர் தன் தாய்நாட்டின் பிரதிநிதியாக அயல்நாடுகளில் செயல்படுகிறார். அங்கு நடத்தப்படும் உத்யோக பூர்வமான

(குறிப்புக்கான இடம்)

நிகழ்ச்சிகள் பொதுவான கூட்டங்கள் போன்றவற்றில் தன் நாட்டின் சார்பாகக் கலந்து கொள்கின்றார். தான் சார்ந்திருக்கும் நாட்டின் கொள்கைகளுக்கு ஏற்புடைய விளக்கங்கள் கொடுத்தும் அந்நாட்டின் பல மட்டத் தலைவர்களிடையே தன் தொடர்புகளை ஏற்படுத்தியும் நாட்டின் செல்வாக்கைப் பெருக்குகிறார். மேலும் அவ்வித நாடுகளிடையே அதிகாரப்பூர்வமான கூட்டங்கள் ஏற்படுத்தப்படுவதற்கும் வழி செய்கிறார்.

பேச்சு வார்த்தைகள் மூலம் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காண விழைவதே அரசியல் நிபுணர்களின் தலையாய கடமையாகும். பிறநாடுகளின் தலைவர்களுடன் பேரங்கள் பேசி, தன் நாட்டிற்குச் சாதகமாக வார்த்தகம் மற்றும் வியாபாரச் சலுகைகளைப் பெற முயலுகிறார். இத்தகைய சலுகைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தான் பெறமுடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதே போல் வெளிநாடுகளிலிருந்து தங்கள் நாட்டிற்குத் தேவையான செய்திகளைச் சேகரித்து அனுப்பிவைப்பதும் அவர்களது மற்றுமொரு பணியாகும். தாங்கள் பணிபுரியும் நாடுகளில் காணப்படும் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமுதாய நிலைகள் குறித்தும், அவைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் அவ்வப்பொழுது தன் நாட்டிற்கு அறிவிக்கும் பொறுப்பும் இவர்களுடையதே. நாடுகள் தங்களுடைய வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்கும் பொழுது அரசியல் நிபுணர்கள் சமர்ப்பிக்கும் இத்தகைய அறிக்கைகளையும் அடிப்படையாகக் கொள்கின்றன.

மேலும், வெளிநாடுகளில் இருக்கும் தன் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதும் அவர்களுடைய நலத்தைப் பேணுவதும் அரசியல் நிபுணர் தம் பணியாகும். இதற்கு உதவி புரிபவைகளென 'கவுன்செல்ஸ்' (Councels) எனப்படுபவை. இத்தகைய கவுன்செல்ஸில் பணிபுரியும் அரசியல் நிபுணர்களின் பணி அயல் நாட்டில் வாழும் தன்நாட்டு மக்களின் நலத்தைப் பாதுகாப்பதும் வர்த்தகத் தொடர்பகளை பேணுவதும் ஆகும்.

மேலே கூறப்பட்ட பணிகளுடன், வேறுசில பணிகளையும் கொண்டிருக்கும் அரசியல் நிபுணர்கள் அவைகளை நிறைவேற்றுமிடத்து பின்வரும் முறைகளைக் கையாள வேண்டும் என மார்கத்தோ கூறுகிறார்.

1. முதலில் ஒரு அரசியல் நிபுணர் தன் நாட்டின் விருப்பங்களை நன்கு ஆராய்ந்து, அவற்றைத் தெளிவுற வரையறுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அந்த விருப்பம் நாட்டிற்கு மிகவும் அவசியமானது தானா என்று ஆராய வேண்டும். மிகவும்

(குறிப்புக்கான இடம்)

அத்தியாவசியமானதாகப்பட்டால் அதை எவ்வகையிலும் செயல்படுத்த முயலவேண்டும்.

2. அத்துடன் தன்நாட்டு விருப்பத்திற்கு பிறநாடுகளின் விருப்பங்கள் இடையூறாக உள்ளதா? என்றும், அத்தகைய விருப்பங்கள் அவற்றிற்கும் மிகவும் இன்றியமையாதவையா? என்றும் ஆராய வேண்டும்.
3. பின்னர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் நிபுணர் தன் நாட்டின் சக்தி, செல்வாக்கு, மதிப்பு ஆகியவற்றை மதிப்பிட வேண்டும்.
4. அதே போல், இதே விருப்பத்தைக் கொண்டிருக்கும் அப்பிறநாட்டின் சக்தி, செல்வாக்கு ஆகியவற்றை மதிப்பிட்டு, அதனை தன் நாட்டின் சக்தியுடன் ஒப்பிட்டு, தன் நாட்டிற்கு தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேண்டிய வலு இருக்கிறதா என்றும் கணிக்க வேண்டும்.

இவற்றைச் சரிவர நிர்ணயித்த பின்னர் பின்னரும் மூன்று முறைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுமாறு, தன் நாட்டுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும். அவைகள் பின்வருமாறு:

1) பேச்சுவார்த்தைகள்:
2) அச்சுறுத்தல்:
3) போர்புரிதல்:

மேற்கண்ட மூன்று முறைகளில் எம்முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் அரசியல் நிபுணர்கள் கணிக்கவேண்டும். பேச்சுவார்த்தைகளின் மூலம் எளிதாகக் காரியம் கைகூடிவிடக்கூடிய தருணத்தில் போர் புரிதலை சிபாரிசு செய்தலா அதனால் பல தீமைகள் ஏற்பட நேரிடும். அது போல மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துவதும் காலவிரையத்திற்கு வழி செய்யும் எனவே இம்முறைகளில் எவற்றை எத்தருணத்தில் பின்பற்றவேண்டும் என்பதனையும் அரசியல் நிபுணர்கள் தெளிவுறக் கணிக்க வேண்டும்.

### 6.1.6. அரசியல், விவேகத்தின் வகைகள்:

இரகசிய அரசியல் விவேகம் (Secret Diplomcy)

20 ஆம் நூற்றாண்டு வரை நாடுகள் பின்பற்றி வந்த ராஜதந்திர முறை இரகசியமான ஒன்றாகும். இதன் விளைவாக நாடுகள் பிற நாடுகளுக்கெதிராகப் பல இரகசியமான ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

இது குறித்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் திரைமறைவிலேயே நடத்தப்பட்டன. இதில் பங்கேற்கும் பிரதிநிதிகள் சிலவற்றை விட்டுக் கொடுத்தும் பலவற்றை சாதித்துக் கொண்டும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வழிவகை செய்கின்றனர்.

இத்தகைய ஒப்பந்த முறைகள் உலகில் பல போர்களை ஏற்படுத்தியதால், 20—ஆம் நூற்றாண்டில் அது தன் செல்வாக்கை இழக்க நேரிட்டது. அதிலும் குறிப்பாக, முதலாம் உலகப் போருக்குப் பின்னர், வெளிப்படையான அரசியல் விவேமுறைக் கருத்துக்கள் (Open dislomacy) பரவத் தொடங்கின.

## வெளிப்படையான அரசியல் விவேகம்: (Open dislomacy)

முதலாம் உலகப்போரின் முடிவில் உட்ரோவில்சன், தனது 14 அம்சத்திட்டத்தில் 'Open Diplomacy' யின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இத்தகைய இராஜதந்திரங்கள் ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் நடத்தப்படுகின்றன. இம்முறைகளின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் மற்றும் அவற்றின் நோக்கங்கள் ஆகியன வெளிப்படையாகக் காணப்படும். இதனால் நாடுகள் மற்றொன்றிற்கெதிராகச் சதித்திட்டங்கள் தீட்டப்படுவது தவிர்க்கப்படுகிறது. எனினும் இம்முறைகளின் மூலம் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுவதில் சில சிக்கல்கள் உள்ளன. ஏனெனில் இம்முறையில் எல்லாம் வெளிப்படையாகவே நடைபெறுவதால், நாடுகள் விட்டுக் கொடுப்பதின் மூலம் தங்களுடைய மதிப்பு உலக அரங்கில் குறைந்து விடும் என்று நாடுகள் நம்புவதால் இம்முறைப்படி மேற்கொள்ளப்படும்ட பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறுவது கடினமாக உள்ளது. அத்துடன் மக்களின் பிரதிநிதிகள் இதில் நேரடியாகப் பங்கேற்பதால் பிரச்சனைகளின் தன்மைகள் சரிவர ஆராயப்படாமல் போகின்றன. இப்பிரதிநிதிகள் அரசியல் நிபுணத்துவமில்லாத சாதாரண நபர்களே, ஆதலால் அவர்களுக்கு இது குறித்த நுணுக்கங்கள் சரிவரத் தெரிவதில்லை. இதனால் பல பேச்சு வார்த்தைகள் தோல்வியுற நேரிடுகிறது. மேலும் இவ்வகை முறைகளில் காலவிரையம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இத்தகைய மக்கள் பிரதிநதிகள் தாங்கள் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு மக்களுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டியதிருப்பதால் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளயே அவர்கள் செயல்பட வேண்டியதுள்ளது.

(குறிப்புக்கான இடம்)

எனினும் இவ்வகையான வெளிப்படையானது அரசியல் விவேகம் நாட்டின் பிரச்சனைகளில் மக்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவர்களையும் பங்கேற்கச் செய்யும் வகையில், முன் நாளைய இரகசிய ஒப்பந்தங்களினின்று சிறந்து விளங்குகிறது. ஒரு நாடு பன்னாட்டு அரங்கில் ஏற்றுக் கொண்டிருக்கும் பணிகளை அதன் மக்களுக்கு உணர்த்துவதில் வெளிப்படையான ராஜதந்திரம் சிறந்து காணப்படுகிறது.

## தனிநபர் இராஜதந்திரம் (Personal Diplomacy):

முற்காலத்தில், தகவல் தொடர்பு மட்டும் போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியுற்றிராமல் இருந்ததனால் நாட்டின் தலைவர்கள், (தலைவர் தலைமை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர்கள்) நேரடியாக அரசியல் விவேகத்தில் பங்கேற்பத என்பது அரிதாக இருந்தது. தற்காலத்தில் இவ்வசதிகள் அதிகரித்துக் காணப்படுவதால் இம்முறை அரசியல் விவேகம் மிகவும் அதிகரித்துள்ளது. இரண்டாம் உலகப்போரின் போது நட்பு நாடுகளின் தலைவர்களான சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் போன்றோர் பலமுறை கூடிப்பேசி, போர்பற்றியும், எதிர்கால உலகம் குறித்தும் பல முடிவுகள் மேற்கொண்டனர். இதன் விளைவாகவும் தனிநபர் ராஜதந்திரம் வளர்ச்சியுறலாயிற்று.

அவ்வகை அரசியல் விவேகத்தின் மூலம் பிரச்சனைகளுக்கு உடனடியான தீர்வு காணப்பட வழிகள் உள்ளன. தலைவர்கள் நடத்தும் பேச்சு வார்த்தைகளில் நல்ல தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும், உண்மையான சலுகைகள் வழங்கப்படுவதற்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவர்களிடையே நடைபெறும் இயல்பான, எளிதான, உண்மையான கருத்துப் பரிமாற்றங்களின் மூலம் சிறந்த முடிவுகள் ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. எனினும் இதிலும் சில தீமைகள் காணப்படுகின்றன. நாட்டின் தலைவர்களுக்கும் இத்தகைய அரசியல் விவேக முறைகளில் அதிகம் ஈடுபாடு செலுத்த இயலாது. ஏனெனில் அவர்களுக்கு இத்துடன் வேறு பல பிரச்சனைகளும் காணப்படுகின்றன. இப்பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் தலைவர்கள் தங்களுடைய நெருக்கடியான சூழ்நிலைகளின் காரணமாக அவசரமான முடிவுகள் எடுக்க நேரிடுமாதலால் அவர்கள் தவறான வழிகளில் செல்ல வாய்ப்புகள் உள்ளன. இவர்கள் ஒரு முடிவை மேற்கொண்டு விட்டார்களேயானால் அதை மாற்றுவது கடினமாகும். ஒரு நாட்டின் தலைவர் ஒரு தீர்மானத்திற்கு எதிர்ப்பத் தெரிவித்து விட்டால், பூர்வமான அரசியல் நிபுணர்களின் பேச்சுவார்த்தைகளில் தோல்வி ஏற்பட்டால்கூட, பின்னர் நாட்டின் தலைவர்கள் அதில் நேரடியாகத் தலையிட்டு அதனைச்

(குறிப்புக்கான இடம்)

சரிசெய்யக்கூடும். மேலும் இந்த மக்கள் தலைவர்கள் ராஜதந்திர முறைகளில் அவ்வளவு அனுபவம் பெற்றவர்கள் என்று சொல்ல முடியாது. எனவே மிகவும் முக்கியமான பன்னாட்டு விவரங்களில் நாட்டின் தலைவர்கள் நேரடியாக ஈடுபட்டு முடிவுகள் மேற்கொள்ளுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

## மாநாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் அரசியல் தந்திரம் (Diplomacy by Conference)

பல நாடுகள் பங்கேற்கும் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்டு அரசியல் தந்திர முறைகள் தற்காலத்தில் மிகவும் அதிகரித்துள்ளது. முதலாம் உலகப்போரின் முடிவில் தோன்றிய சர்வதேசச் சங்கடத்துடன் தொடங்கிய இம்முறை இன்று மேலும் வலிமை பெற்றுள்ளது. ஐ.நா.சபை நோட்டோ, சீட்டோ, வார்சா, கூட்டுச் சேரா இயக்கம் போன்ற அமைப்புகள் அவ்வப்பொழுது தங்களது மகாநாடுகளைக் கூட்டி பல தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றன. இதன் விளைவாக அரசியல் தந்திரமுறையில் ஜனநாயகப் படுத்தப்பட்டுள்ளன என்றே கூறவேண்டும். இத்தகைய முறைகள் போர்களை தவிர்ப்பதற்குப் பேருதவி புரிகின்றன. இத்தகைய முறைகள், பேச்சுவார்ததைகளுக்கு உதவிபுரியும் கருவிகள் எளிதாகவும், செம்மையாகவும் இருக்கும்பட்சத்தில் பல பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காணமுடியும். எனினும் இம்முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இம்மகாநாடுகளில் வல்லரசுகளின் குறுக்கீடுகள் அதிகரித்துக் காணப்படவதால் உலகநாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் அதிரிக்கவும் பிரிவுகள் வளரவும் கூடும் மேலும் தற்காலங்களில் கூட்டப்படும் மகாநாடுகள் எங்கோ எடுக்கப்படும் முடிவுகளை ஏற்றெக்கும் கூட்டங்களாகவே காணப்படுகின்றன என்று ஒரு சில வல்லுநர்கள் கருத்துக் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் தந்திரத்தின் அவசியம்

பன்னாட்டு விவகாரங்களில் தீர்வுகள் காணப்படுவதற்கு அரசியல் தந்திர முறைகள் இன்றியமையாதனவாகும். விரோதமானப்பான்மை கொண்டு விளங்கும் நாடுகளிடையே கூட பரஸ்பரம், சமாதானம் ஏற்படுத்தப்பட அரசியல் தந்திர முறைகளே உதவி செய்வனவாகக் காணப்படுகின்றன. இது தவிர்த்த பிற வழியான போர் தற்காலத்தில் அதுவும் இந்த அணுயுகத்தில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாக உள்ளது. எனவே உலகில் அமைதி நிலைநாட்டப்படுவதற்கும்,

பிரச்சனைகள் எளிதில் தீர்க்கப்டுவதற்கும் அரசியல் தந்திர முறைகளே உதவி செய்யக்கூடும்.

### 6.1.8. அரசியல் தந்திரத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி

அரசியல் தந்திரத்தின் அவசியம் மிகவும் அதிகரித்துக் காணப்படும் இவ்வேளையில் அதில் காணப்பட்டுவரும் வீழ்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாகவும், வருந்தத்தக்கதாகவும் உள்ளது. தற்காலத்தைய அரசியல் தந்திர முறைகளின் மூலம் தீர்வுகள் கண்டறியப்படுவது மிகவும் கடினமாக உள்ளது. இதற்குக் காரணமாக ஐந்து காரணிகள் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றன. அவையாவன:

1. தகவல் தொடர்ந்து போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சி.
2. அரசயில் தந்திர முறைகளின் தேய்வு.
3. ஜனநாயக முறைப்படியான அரசியல் தந்திர முறைகளின் வளர்ச்சி.
4. பன்னாட்டு அரசியல் வல்லரசுகள் பின்பற்றி வரும் மரபிற்கொவ்வாத அரசியல் தந்திர முறைகள்.
5. தற்கால உலக அரசியலின் தன்மை.

**1. தகவல் தொடர்பு போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியின் தாக்கம்:**

முற்காலத்தில் அரசியல் தந்திரம் ஏற்பட்டதற்கும் அயல்நாடுகளில் தூதரகங்கள் அமைக்கப்பட்டதற்கும் விரைவான தகவல் தொடர்பு வசதிகளின்றிக் கால விரயம் அதிகம் ஏற்பட்டதாலும், பிறநாடுகளில் நடைபெற்றுவரும் மாற்றங்கள் பற்றி தொடர்ந்து செய்திகள் அனுப்பப்பட வேண்டியிருந்ததாலும் அயல் நாடுகளில் நாடுகள் தங்களது தூதுவர்களை நிலையாக தங்கிச் செயல்பட ஏற்பாடுகள் செய்தன. ஆனால் தொலைபேசித் தொடர்புகள், விரைவான போக்குவரத்து வசதிகள் ஆகியவை வளர்ச்சியுடையவே, நாடுகளின் தலைவர்கள் நினைத்த மாத்திரத்தில் பிற நாடுகளின் தலைவர்களுடன் நேரத் தொடர்புகள் மேற்கொள்ள வழி பிறந்தது. எனவே இதுகாறும் தூதரக அலுவலர்கள் கொண்டிருந்த செல்வாக்கும், அவர்கள் சுயமாக முடிவுகள் மேற்கொள்ள பெற்றிருந்த அதிகாரங்களும் குறைந்துபடலாயின. தற்பொழுது அவர்கள் எத்தகைய முடிவுகளையும் மேற்கொள்ளும் முன்னர், தங்கள் நாட்டின் தலைவர்களைக் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது அவசியம் ஏற்படும் பட்சத்தில், அரசாங்கங்கள் தங்கள் நாட்டிலிருந்து யாராவது ஒரு முக்கியமான நபரை சம்பந்தப்பட்ட தூதரகத்திற்கு அனுப்பி அங்குள்ள அரசியல் நிபுணர்களை ஒரு குறிப்பிட்ட முடிவை மேற்கொள்ளுமாறு செய்யப்பணிக்கின்றன. மேலும் தற்காலத்தில் பெரும்பாலான பிரச்சனைகள், நாடுகளின் உயர்மட்டத் தூதுக் குழுக்களால் ஆராயப்படுகின்றன.

(குறிப்புக்கான இடம்)

இத்தகைய தூதுக்குழுக்கள், நினைத்த வேளையில், சிலமணி நேரங்களில் எந்த நாட்டிற்கும் செல்லும் வகையில் போக்குவரத்து வசதிகள் வளர்த்துள்ளன. இதன் விளைவாக உத்யோகப் பூர்வமான அரசியல் தூதர்களின் பணி குறைந்துள்ளது. ஆனால் அதே வேளையில் அரசியல் தலைவர்களின் பணி பெருகிவருகிறது. இத்தகைய அரசியல் தலைவர்களுக்கு அரசியல் தந்திரங்களின் அடிப்படைகள் தெரிந்திருக்க வாய்ப்புகள் இல்லையாதலால் அவர்கள் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் வெற்றி அடைவது சிறிது கடினமாக உள்ளது.

## 2. அரசியல் தந்திர முறைகளில் ஏற்பட்டிருக்கும் தேய்வு

தற்கால அரசியல் விவேகத்தால் முடிவுகள் கிட்டுவது கடினமாக உள்ளதுடன், பெரும்பாலான சமாதான முயற்சிகள் தோல்வியடைந்து வருவதும், அரசியல் தந்திர முறைகளில் ஒரு தேய்வை உண்டாக்கியுள்ளளது. அத்துடன் இக்காலகட்டத்தில் தூதுவர்கள் வெளிநாடுகளில் பணியாற்றும் பாங்கும். அவர்கள் கையாளும் முறைகளும் அவர்களுக்கு கெட்ட பெயரைச் சம்பாதித்துத் தந்துள்ளன. எனவே முற்காலத்தில் தூதுவர்கள் பெற்றிருந்த மதிப்பு தற்பொழுது பெரிதும் குறைந்துபட்டுள்ளது. அயல்நாடுகளில் பணிபுரியும் ஒரு நாட்டின் தூதுவர் தன் நாட்டிற்காக உளமறிந்து செய்திகள் அனுப்பி வருகிறார். எனவே அவர் 'தூதுவரல்லர்' அவர் ஒரு 'ஒற்றர்' (Spy) என்ற கூற்று தற்காலத்தில் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

## 3. ஜனநாயக முறைப்படியான அரசியல் தந்திரம்

முதலாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் இத்தகைய ராஜதந்திர முறைகள் பெரிதும் வளர்ந்துள்ளன. சர்வதேச சங்கம், ஐ.நா. சபை போன்ற அமைப்புகளில் இத்தகைய முறை பின்பற்றப்பட்டது. பின்பற்றப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இம்முறையில் பிரச்சனைகள் குறித்து நாடுகள் விவாதித்த பின்னர் பெரும்பான்மையின் விருப்பத்திற்கேற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறு ஏற்றெடுக்கப்படும் முடிவு சிறுபான்மையினரையும் கட்டுப்படுத்தும் இதன் காரணமாக, பிரச்சனைகள் தீர்க்கப்பட முடியாமல் போகிறது. சிறிது காலம் கழித்து இச்சிறுபான்மையினர், தங்களது செல்வாக்கைப் பெருக்கி, அதிக ஆதரவாளர்களைப் பெற்று, பெரும்பான்மை பலம் பெறுவார்களேயானால் அவர்கள் முன்னால் தங்கள் மீது திணிக்கப்பட்ட முடிவுகளை மாற்றத்தயங்க மாட்டார்கள். இது ஒரு தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை மாறக்கூடும். இத்தகைய முறைகளில் எப்பொழுதும் ஏதாவது ஒரு அணியினர் திருப்தி இழந்து காணப்படுவர்.

### 4. வல்லரசுகள் பின்பற்றி வரும், மரபுக்கொவ்வாத அரசியல் தந்திர முறைகள்

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ராஜதந்திரங்களில் காணப்படும் குறைபாடுகளும், தற்காலத்தில் அதன் மதிப்பு அழிக்கச் செய்துள்ளது. 1930—ஆம் ஆண்டுகளில் மிகவும் தீவிரமான அயல்நாட்டுக் கொள்கைகளை அமெரிக்க மக்கட்கருத்துக்கு அவ்வளவு மதிப்பளிக்காமல் அதன் ஆட்சியாளர்கள் வெளிநாட்டுக் கொள்கைகளை மேற்கொள்ளுவதும் அந்நாட்டின் அரசியல் தந்திர முறையில் தொய்வு ஏற்பட்டிருப்பதற்கு காரணமாகும். இதே போல் ரஷ்யாவில் ஏற்பட்ட போல்ஸ்விக் புரட்சியும் அதன் ராஜதந்திர முறைகளைப் பெரிதளவு சீர் குலைத்துள்ளது. பின்னர் இவ்விரு வல்லரசுகளிடையே தோன்றிய கெடுபிடிப் போர் அரசியல் தந்திர முறைகளைப் பெரிதும் பாதித்தன.

### 5. தற்கால உலக அரசியல்

தற்காலத்தில் பிறநாடுகளின் செயல்களைக் கட்டுபடுத்தக் கூடிய வகையில் வல்லரசுகள் அதிகாரங்களைத் தங்களிடம் கொண்டிருப்பதும், இவ்வல்லரசுகள் ஒன்றுடன் ஒன்று விரோதமனப்பாங்குடன் செயல்பட்டு வருவதும் அரசியல் தந்திர முறைகளுக்குப் பெருத்த சவாலாக உள்ளது. பன்னாட்டு அரங்கில் தங்களுடைய கொள்கைகளைப் புகுத்த ஒவ்வொரு வல்லரசும் முயன்று வருவதும் பிற கருத்துக்களை ஏற்க மறுப்பதும், தற்காலதில் இராஜதந்திர முறைகளுக்கு ஏற்பட்டுவரும் வீழ்ச்சிக்கான பிற காரணங்களாகும்.

அரசியல் விவேகமும் வெளிநாட்டுக் கொள்கையும் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையும் அதன் அரசியல் தந்திர முறைகளும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையனவாகும். ஒரு நாடு மற்றொரு நாட்டுடனான தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கு முன்னர், அந்நாடு பன்னாட்டு அரங்கில் பெற்றிருக்கும் இடம், சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கிடையேயான உறவு முறைகள், அப்பிற நாடு தன்மீது கொண்டிருக்கும் மதிப்பு அல்லது எண்ணம் ஆகியவை சரிவர கணிக்கப்படல் வேண்டும். இதைக்கணிப்பதற்குப் பேருதவி புரிபவர்கள் அரசியல் தந்திர நிபுணர்கள் ஆவர். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அயல்நாட்டுக் கொள்கை, நாடுகளிடையே காணப்படும் உறவு முறையின் தன்மையினை விளக்குகின்றன. கொள்கைகள் உருவாக்கப்பட்டவுடன், அதைச் செயல்படுத்தும் பணியும் அரசியல் தந்திர நிபுணர்களையே சாரும். எனவே இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன.

(குறிப்புக்கான இடம்)

வெளிநாட்டு கொள்கைகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கொள்கைகளை செயல்படுத்தவும் உதவும் ஒரு முக்கியமான கருவியே அரசியல் தந்திரம் எனப்படுவது. நாடுகளிடையேயான உறவுகள் மிகவும் மோசமடைந்த பின்னரும் கூட, போர்வராமல் தடுப்பதற்காக அரசியல் தந்திரமுறைகள் தொடர்ந்து கையாளப்படுகின்றன. மேலும் நாடுகளிடையே ஒரு போரே மூண்டாலும் கூட அப்போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இராஜதந்திர முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இராஜதந்திர முறைகளுக்கும் அயல்நாட்டுக் கொள்கைகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஒரு சிறந்த இராஜதந்திரியால் அவ்வளவு சிறப்பில்லாத ஒரு வெளிநாட்டுக் கொள்கையை கூட பெரிய வெற்றியாக்கி விடமுடியும். அதே வேளையில் மிகவும், சிறப்பு வாய்ந்த அயல்நாட்டுக் கொள்கைகளை கூட திறமையில்லாத ஒரு அரசியல் தந்திர நிபுணர் முற்றிலும் கெடுத்துவிடக்கூடும்.

## அரசியல் தந்திர முறைகளில் காணப்படும் குறைபாடுகள்:

அரசியல் தந்திர முறைகளில் மூன்று முக்கிய குறைபாடுகள் காணப்படுவதாக மார்கந்தோ குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு:

### 1) விளம்பரத்தினால் ஏற்படும் தீமைகள்:

தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெளிப்படையான அரசியல் தந்திர முறைகளுக்கு கொடுக்கப்பட்டு வரும் விளம்பரங்கள் அவற்றை வெகுவாகப் பாதித்துள்ளன. இதன் விளைவாக பேரங்கள் பேசப்பட்டு பிரச்சனைகளுக்கு ஏற்ற முடிவுகள் காணப்படுவது. கடினமாக உள்ளது. விளம்பரங்கள் அதிகமாக உள்ளதால், பேச்சு வார்த்தைகளில் அதிகமான சலுகைகளைப் பிறநாடுகளுக்களித்தால் உலக அரங்கில் தங்களுடைய செல்வாக்குக் குறைந்துபடும் என நாடுகள் கருதுகின்றன. எனவே பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண உதவும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு மறைந்து வருகிறது. நாடுகள் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளுக்கே அதிக மதிப்புக் காணப்படுவதாக கவனித்துக் கொண்டிருப்பதால் ஆவேசப் பேச்சாளர்களுக்கே அதிக மதிப்புக் காணப்படுவதாக தற்கால அரசியல் தந்திர நிபுணர்கள் கருதிவருகின்றனர். மேலும் பேச்சுவார்த்தைகளில் பெரும்பாலும் அரசியல் தலைவர்களே பங்கேற்று வருவதால் அவர்கள் வீரமிக்க, ஆனால் பொருளற்ற பேச்சுகளின் மூலம் தங்கள் நாட்டு மக்களின் ஆதரவை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். மக்களும் பேச்சுவார்த்தைகளில் தங்கள் நாடு அதிகப் பயன்பெற வேண்டும்

என விரும்புவதாலும், மக்களும் பேச்சுவார்த்தைகளில் தங்கள் நாடு அதிகப் பயன்பெறவேண்டும் என விரும்புவதாலும், அதிக வெற்றிகளைப் பெற்றுத்தரும் அரசியல் தலைவர்களையே அவர்கள் போற்றுவதாலும், அரசியல் தலைவர்களும் தன் நாட்டு மக்களின் ஆதரவைப் பெரும் வகையிலேயே செயல்பட முனைகின்றனர். எனவே, பேச்சு வார்த்தைகளில் தாங்கள் அதிகமான சலுகைகளைப் பெற முயலுகின்றனர். அதே வேலையில் மற்றவர்கள் தங்களை விடக் குறைவாகவே பெறவேண்டும் என நினைக்கின்றனர். இதையே எல்லாநாட்டின் தலைவர்களும் நினைப்பதால் பேச்சவார்த்தைகள் தோல்வியுறுகின்றன.

2) பெரும்பானமை முடிவினால் எடுக்கப்படும் தீர்வுகளினால் ஏற்படும் தீமைகள்

பெரும்பான்மை முடிவினால் ஏற்றெடுக்கப்படும் தீர்மானங்களும் தற்காலத்தில் அரசியல் தந்திர முறைகளின் வீழ்ச்சிக்கு வழிகோலியுள்ளன. கொரியாப் பிரச்சனையின் போது, ஐ.நா. சபையில் சோவியத்யூனியனும் அதன் நண்பர்களும் தொடர்ந்து மேலை அணியின் பெரும்பான்மை பலத்தால் தோற்கடிக்கப்பட்ட வந்தது. இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் கொரியாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இத்தகைய பெரும்பான்மை ஆதரவு தீர்மானங்கள் எவ்வகையிலும் உதவி செய்யவில்லை என்பதையும் யாரும் மறுக்க முடியாது. அப்பிரச்சனை ஒரு போரின் மூலமும், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு தனி நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளின் மூலமும்தான் தீர்க்கப்பட்டதேயன்றி ஐ.நா. சபையின் மூலம் தீர்க்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்தகைய முறைகளில் சிறுபான்மையினர் திருப்தி அடைய முடியாததாகையால் பிரச்சனைகள் தொடர்ந்து காணப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிரச்சனைகளுக்கான முழுத்தீர்வு என்பது இம்முறைகளின் மூலம் கண்டறிப்படுவது சிறிது கடினமே.

**பிரச்சனைகளை துண்டாக்கப்படதல் (Fragmention of Issues)**

பெரும்பான்மை அடிப்படையில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயலுகையில், பன்னாட்டுப் பிரச்சனைகள் துண்டாடப்பட்டு உலகநாடுகள் பலபிரிவாக பிரித்து காணப்படுகின்றன. சுருங்கக் கூறின் நாடுகள் பல அணிகளாகப் பிரிந்து நின்று தங்களுடைய அறிவுக்கொப்ப பிரச்சனைகளை நோக்குகின்றன. இதன் விளைவாகவும் முடிவுகள் மேற்கொள்ளப்படுவது தாமதப்படுகிறது அல்லது இயலாததாகிவிடுகிறது.

(குறிப்புக்கான இடம்)

இம்மூன்று தற்கால ராஜதந்திர முறைகளை வெகுவாகப் பாதித்து வருகின்றன. அத்துடன் தற்பொழுது உத்தியோகப் பூர்வமான தூதுவர்களுக்கும் அரசியல் தலைவர்களின் தூதுக்குழுவிற்குமிடையே வேறுபாடு அவ்வளவு சிறப்பாகக் கண்டறியப்படவில்லை. இதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன.

எது எவ்வாறிருந்த பொழுதும், தற்கால உலகில், பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண உதவும் ஒரே வழி சமாதான முறைகளிலான தீர்வு முறைகளே ஆகும். எனவே சமாதான முறைகளிலொன்றுதான் பேச்சு வார்த்தைகளின் துணையுடன் செயல்பட்டக் கொண்டுவரும் அரசியல் தந்திர நிபுணர்களும் தூதரங்களும், உலகில் அமைதி நிலவிடச் செய்ய உதவும் இன்றியமையாக் கருவிகளாகும். சில சமயங்களில் தோல்விகளைச் சந்திக்க நேரிட்டிருப்பினும் வேறு சில இடங்களில் அரசியல் தந்திர முறைகள் வெற்றியை ஈட்டித் தந்துள்ளன. தற்காலத்தில் அதற்கு ஏற்பட்டுவருமட் வீழ்ச்சியை ஒரு இடைக்காலத் தடை என்றே கொள்ளவேண்டும். இத்தடைகளை அகற்றி அரசியல் தந்திரக் கருவிகளைச் செம்மைப்படுத்தி அவற்றின் சிறப்புக்களை அவைகளுக்கு மீண்டும் பெற்றுத் தர வேண்டியது உலக நாடுகளின், கடமையாகும்.

### 6.1.9. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் அரசியல் விவேகம்:

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்கள் ஒன்றாகச் சந்திக்கும் இடம் மத்திய கிழக்குப் (Middle-East) பகுதியாகும். ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் மிகவும் முக்கியமான நீர்வழியான சூயஸ் கால்வாய் இங்குதான் உள்ளது. இப்பகுதியில் காணப்படம் நாடுகளில் இஸ்லாமியக் கலாச்சாரம் நன்கு வேரூன்றியிருக்கிறது. அத்துடன் உலகில் அதிகமான அளவு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் பல இங்கு காணப்படுகின்றன. இதன் காரணமாக இப்பகுதி பூகோள ரீதியாகவும், அரசியல் மற்றும் இராணுவ அடிப்படைகளிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. இப்பகுதியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கும் அல்லது இப்பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் எந்த ஒரு நாடும், இங்கு காணப்படும் எண்ணெய் வளங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும் இக்காலகட்டத்தில் இப்பகுதியில் அந்நிய அரசுகளின் தலையீடுகளும் சிறிது அதிகமாகவே காணப்படுகின்றன. குறிப்பாகச்

(குறிப்புக்கான இடம்)

சொல்லப் போனால் 1960ற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பகுதியில் வல்லரசுகளின் தலையீடு மிகுந்திருந்தது. எனலாம்.

. ஆட்டோமன் பேரரசு (Otomen Empire) சிதறுண்ட பொழுது இப்பகுதியில் காணப்பட்ட நாடுகள் தங்களை நன்கு பராமரித்துக்கொள்ளும் வகையில் அவைகளுக்கு நண்பனாக இருந்து அறிவுரை · வழங்கி வழிகாட்டும் பணியை பிரிட்டன் மேற்கொண்டது. ஜெர்மனி, ஆஸ்டிரியா, பிரான்சு மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளும் இது போன்றே துருக்கி மற்றும் பெர்சியப் பேரரசிடமிருந்து சலுகைகள் அல்லது முன்னுரிமைகள் பெற்றிருந்தன. இக்காலக்கட்டத்தில் அப்பிரதேசத்தில் எண்ணெய் வளம் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடுகள் அனைத்தும் அப்பகுதியிலிருந்த நாடுகளுக்கு நிதி உதவி அளித்து வந்தன. எனவே, அவைகள் அப்பகுதியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. எனினும் முதலாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் மத்திய கிழக்கு அரசியலானது. அரபு தேசியம் (Arab Nationalism) மேலை நாடுகளின் ஏகாதிபத்தியம் மற்றும் ஜியானிசம் என்ற யூத இயக்கம் (Zionism) ஆகியவற்றைப் பொறுத்தே அமைந்து வருகிறது.

இரு உலகப் போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் உலகெங்கிலும் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக சவுதி அரேபிய நாடுகளுக்கு யாத்திரிகர்கள் மேற்கொண்ட புனிதப் பயணங்களும் பெருமளவு குறையலாயிற்று, இதையே தங்களது முக்கிய வருவாயாகக் கொண்டிருந்த இந்நாடுகள், இது குறித்து பெரும் கவலை கொள்ளலாயின. எனினும் அவர்கள் எதிர்பாரா வண்ணம் அங்கு எண்ணெய் வளம் கண்டறியப்பட்டடவே அவர்களுடைய பொருளாதாரம் மிகவும் உன்னதமான நிலையை நோக்கி நகரத் தலைப்பட்டது டிவிட்சல் (Twitchell) என்பவர் எண்ணெய் மற்றும் இதர கனி வளங்கள் குறித்து சோதனை நடத்த ஏமன் நாட்டிற்கு வந்திருந்த பொழுது இத்தகைய பணிகளைத் தங்கள் நாட்டிலும் மேற்கொள்ளுமாறு அவருக்கு சவுதி அரேபியா அழைப்பு விடுத்தது. அந்நாட்டில் சோதனைகள் மேற்கொண்ட பொழுது அங்கும் எண்ணெய் வளம் மிகுந்திருப்பதைக் கண்டார். பின்னர் அங்கு எண்ணெய் உற்பத்தி மேற்கொள்ளுவதற்குக் கலிபோர்னியாவைச் சேர்ந்த 'ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி (Standard Oil Compnay) என்ற நிறுவனத்துடன் சவுதி அரேபியா 60 ஆண்டு கால ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. அதன் விளைவாக அக்கம்பெனி சவுதி அரேபியாவிற்கு 30,000 தங்க வராகன்களை முன்பணமாக அளித்ததுடன், அங்கு எடுக்கப்படும்

(குறிப்புக்கான இடம்) ஒவ்வொரு டன் எண்ணெய்க்கும் நான்கு தங்க பவுன்கள் கொடுப்பதாகவும் ஒத்துக்கொண்டது.

ஆரம்ப காலங்களில் இக்கம்பெனிக்கு அதிகமான இலாபம் கிடைக்கவில்லையாயினும் 1938— ஆம் ஆண்டிற்குப் பிறகு இச்சூழ்நிலை மாறியது. டெஹ்ரான் போன்ற இடங்களிலிருந்த எண்ணெயக் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்ட பொழுது அங்கு ஏராளமான எண்ணெய் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தருணத்தில் எண்ணெய் உற்பத்தி நாளென்றுக்கு 12,000 பாரல்களாக இருந்தது. எனவே இக்கம்பெனி வியாபாரரீதியில் தொடங்கியது. அதே வேளையில் மெக்காவிற்கு மெதினாவிற்கும் இடைப்பட்ட பகுதிகளில் தங்கப்படிகங்கள் இருப்பதும் கண்டறிப்பப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்காவைச் சார்ந்த ஒரு சில நிறுவனங்கள் மிகுந்த லாபமடையலாயின.

இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் இதற்கான முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டன. சவுதி அரசாங்கம் தன் வருமானத்திற்காக எண்ணெய் உற்பத்தியை மட்டும் நம்பியிருந்ததால் உற்பத்தியை மென் மேலும் பெருகுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடலாயிற்று 1944—ஆம்ஆண்டு 'அரேபியன்— அமெரிக்கன் ஆயில் கம்பெனி (Aramco) என்ற நிறுவனம் இப்பணிகளை மேற்கொண்டது. இதன் விளைவாக எண்ணெய் உற்பத்தி மிகவும் அதிகரித்தது. 1943 இல் நாளென்றுக்கு 15,000 பாரல்கள் எண்ணெய் எடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அது 1946—ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிப்பார்க்கக் கூட இயலாத ஒன்றாகக் காணப்பட்டது. அதன் பட்ஜெட்டில் குறிப்பிட்டுவரும் மொத்த வருமானத்தில் சுமார் 90 சதம் எண்ணெய் உற்பத்தியிலிருந்து பெறப்பட்டு வருகிறது.

சவுதி அரேபியாவைத் தவிர பிற நாடுகளும் பஹ்ரெய்ன், குவைத் ஓமன் மற்றும் ஏமன் போன்றவைகள் குறிப்பிடத்தக்கவைகள் ஆகும். இந்த அரபு நாடுகளைத் தவிர இப்பகுதியில் காணப்படும் எண்ணெய் வளமிக்க இரு நாடுகள் ஈரானும் ஈராக்கும் ஆகும். இந்நாடுகள் அனைத்தும் அங்கு எண்ணெய் வளம் கண்டறியப்படும் வரை உலக அரங்கில் எந்த முக்கியத்துவமும் பெற்றிருக்கவில்லை. உலகில் எண்ணெயின் அத்தியாவசிம் அதிகரித்துக் கொண்டிருந்த அதே வேலையில், இந்நாடுகளில் எண்ணெய் வளம் இருப்பது கண்டறியப்படவே உலக அரசியலில் இந்நாடுகளின் பங்கு அதிகரிக்கலயிற்று இந்நாடுகளின் இத்தகைய வளர்ச்சிக்கு மேலை நாடுகளின் பொருளாதார மற்றும்

(குறிப்புக்கான இடம்

தொழில்நுட்ப உதவிகளே முக்கிய காரணம் என்பதனை யாரும் மறுத்துரைக்க முடியாது. எனினும் இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கெடுபிடிப்போரின் விளைவாக இப்பகுதியில் வல்லரசுகளின் தலையீடும் அதிகரிக்கலாயிற்று. இப்பகுதிகளிலுள்ள பல நாடுகளில் பல ஆண்டுகளாகவே பிரிட்டன் தனத ஆதிக்கம் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றைக் கொண்டிருந்தது. பஹ்ரெய்ன், குவைத் போன்ற நாடுகள் பிரிட்டனின் பாதுகாப்பின் கீழ் நீண்ட காலமாக இருந்து வந்தன. அந்நாடுகளிலும் எண்ணெய்வளம் கண்டறியப்படவே, அவைகளுடைய பொருளாதாரமும் மிக உன்னதமான நிலையை அடைந்தது. இவ்வாறு இங்கு திடீரென்று செல்வம் கிடைத்த போதிலும் அந்நாடுகளால் பெரும்பாலான காரியங்களைச் சாதிக்க முடியவில்லை. அந்நாடுகளிடையே தொழில் நுட்பவன்மை சிறிதும் காணப்படவில்லை. அது தவிர அங்கு வசித்த மக்களிடையே ஒரு சில விஷயங்களில் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. மேலை நாடுகள் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளின் வாழ்க்கை முறையை பின்பற்றுவதற்கு ஒரு சிலர் ஆதரவளித்தனர் மற்றும் சிலர் ஒவ்வொரு புதிய மாற்றத்தைக் கொணரவும் விரும்பவில்லை. அத்துடன் அங்கு ஒரு நிலையற்ற அரசியல் தன்மையும் காணப்பட்டது. அதே வேளையில் இம்மாறுப்பட்ட சக்திகளைப் பிரித்தாளுவதற்கு வேண்டிய சூழ்நிலைகளைப் பெருக்குவதற்கான செயல் முறைகளை அப்போதைய வல்லரசுகள் மேற்கொண்டிருந்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் கெடுபிடிப்போர் தோன்றவே, இந்நாட்டு விவாகாரங்களில் வல்லரசுகளில் குறுக்கீடு மிகவும் அதிகரித்தது. இப்பகுதிகளைக் கட்டுப்படுத்தும் ஒரு வல்லரசு உலகில் இருக்கும் எண்ணெய் வளத்தின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை 1938 ஆம் ஆண்டில் இந்த மத்திய கிழக்குப்பகுதியில் வெட்டியெடுக்கப்பட்ட எண்ணெய் உலகின் அப்போதைய சூழ்நிலையில் உலகில் இருக்கும் பெட்ரோலிய சுமார் 65 சதவிகிதம் மத்திய– கிழக்குப்பகுதியில் காணப்படுகிறது. இந்நாடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எண்ணெயை நம்பித்தான் பெரும்பாலான மேலைநாடுகள் செயல்பட்டக் கொண்டு வருகின்றன. தொழில் நுட்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வரும் இக்காலத்தில் புதிய புதிய இயந்திரங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. இவ்வாறு கண்டறியப்படும் இயந்திரங்களில் பெரும்பாலானவற்றை இயக்குவதற்கு வேண்டிய மூலப்பொருள் எண்ணெய் ஆகும். வீட்டில் இயங்கும் குளிர் சாதனப்பெட்டி முதல் விண்ணில் பறக்கும் விமானம் வரையுள்ள எல்லா இயந்திரங்களுக்கும் எண்ணெய் தேவைப்படுகிறது. இது தவிர

(குறிப்புக்கான இடம்)

பெரும்பாலான தொழில் மையங்கள் எண்ணெய் இன்றிச் செயல்படமாட்டா. இச்சூழ்நிலை வளர்ச்சி பெற்றுள்ள மேலை நாடுகளுக்கு மட்டுமின்றி வளர்ந்து வரும் மூன்றாவது உலக நாடுகளுக்கும் பெருந்தக்கூடிய ஒன்றாகும். தற்கால உலகில் மிகவும் அத்தியாவசியமான பொருளான எண்ணெய் மத்திய கிழக்குப் பகுதயில் மிகுந்திருப்பதால் அப்பகுதியின் மதிப்பு உலக அரங்கில் மிகவும் அதிகரித்துள்ளது. ஆனால் அதே வேளையில் அந்நாடுகளின் பாதுகாப்பிற்கும் பங்கம் விளைவிக்கக் கூடியதாகவும் உள்ளது. இவை பற்றி கீழே சற்று விரிவாகக் காண்போம்.

மத்திய கிழக்குப்பகுதியில் எண்ணெய் வளமும், அதன் விளைவாக செல்வமும் அதிகரிக்கவே, அப்பகுதியில் வல்லரசுகளின் தலையீடுகள் அதிகரிக்கலாயிற்று. பாலஸ்தீனத்திலும், ஈராக்கிலும், பிரிட்டன் தனிப்பட்ட கட்டுப்பாடு கொண்டிருந்தது. ஏனைய வல்லரசுகளுக்குத் திருப்தி அளிப்பதாகவில்லை. எனவே 1920ஆம் ஆண்டு வாக்கில் அமெரிக்காவும் அப்பகுதியில் பரவேசிக்கலாயிற்று அத்தருணத்தில் அமெரிக்கா தன்னுடைய ‘open door’ கொள்கையை அறிவித்தது, எனினும், தென்கிழக்குப் பகுதிகளில் அமெரிக்கா மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கியதால், அப்பகுதிகளில் இக்கொள்கையைப் பிற நாடுகள் பின்பற்ற அமெரிக்கா அனுமதிக்கவில்லை. 1925—ஆம் ஆண்டு துருக்கிய எண்ணெய் நிறுவனத்தில் அமெரிக்காவிற்கு 25 சதவிகித பங்குகள் தரப்பட்டன. இவ்வாறாக: பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு, டச்சு மற்றும் பிறநாடுகளின் எண்ணெய் நிறவனங்கள் அங்கு எண்ணெய் வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தங்களை அந்நாடுகளின் தலைவர்களுடன் மேற்கொண்டன. அதன் பொருட்டு அத்தலைவர்களுக்கு அதிக அளவில் மானியம் (Royalties) வழங்கவும் ஒப்புக்கொண்டன. இத்தலைவர்கள் இவ்வாறு பெற்ற பணத்தைக் கொண்டு அங்குள்ள மக்களுக்கு வசதிகளை அதிகரித்துக் கொடுக்க முனையாமல் நாட்டின் இராணுவம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களுக்காகச் செலவிட்டனர். எனவே அந்நாட்டு மக்கள் மேலை நாடுகள் தங்களுடைய செல்வங்களைச் சுரண்டி வருவதாக எண்ணத் தலைப்பட்டனர். எனவே அங்கு மேலை நாடுகளுக்கெதிரான போக்கு காணப்பட்டது. அது போன்றே அவர்கள் ரஷ்யர்களின் செல்வாக்கையும் வெறுத்தனர். ஈரானில் எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கு அதிகாரம் பெற்றிருந்த ஆங்கிலோ—ஈரானியன் எண்ணெய் நிறுவனம் அந்நாட்டில் ஒரு தனி அரசு போல் செயல்பட்டு வந்தது. அந்நிறுவனத்தைப் பகைத்துக் கொண்ட அரசியல் தலைவர்கள் யாரும் வெகுகாலம் பதவியில் நீடித்திருக்க இயலாத சூழ்நிலை காணப்பட்டது

இவ்வாறாக அந்நிறுவனம் அந்நாட்டு அரசியலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. எனினும் 1951—ஆம் ஆண்டு ஈரானில் எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டன. அந்நாட்டுடன் பிரிட்டன் 1933—ஆம் ஆண்டு மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தை பல முறை முயன்றும் புதுப்பிக்க முடியவில்லை. சிறிது காலம் கழித்து இதுகுறித்து ஈரானும் பிரிட்டனும் பேச்சு வார்த்தைகள் நடத்தின. அதில் முடிவுகிட்டாது போகவே பிரிட்டன் பன்னாட்டு நீதிமன்றத்தில் ஈரானுக்கெதிராக வழக்குத் தொடுத்தது. எனினும் ஈரானின் நடவடிக்கைகளில் எவ்வித மாற்றத்தையுமே உண்டு பண்ண அதனால் இயலவில்லை. இது போன்ற வேறுபல மத்திய கிழக்கு நாடுகளும் நடவடிக்கைகள் மேற்கொண்டன.

உலகில் எண்ணெயின் முக்கியத்துவம் 1973—ஆம் ஆண்டு வாக்கில் அனைத்து நாடுகளுக்கும் தெரிய வந்தது. அத்துடன் மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள நாடுகளின் முக்கியத்துவம் புலனாயிற்று. இப்பகுதியிலுள்ள அரபுநாடுகளுக்கும், இஸ்ரேலுக்கும் தொடர்ந்து விரோதம் நீடித்து வருவது யாவரும் அறிந்த ஒன்றே முந்தைய போர்களில் தாங்கள் பெற்ற தோல்வியையும் அவமானத்தையும் போக்கிக் கொள்வதற்காக, எகிப்தும், சிரியாவும் இணைந்து, 1973—ஆம் ஆண்டு இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் மேற்கொண்டன. முதலில் இஸ்ரேல் சிறிது தடுமாற்றம் கண்ட பொழுதும் பின்னர் அப்போரின் போக்கைத் தனக்குச் சாதகமாக மாற்றியது. அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் தலையீட்டால் இந்நாடுகளிடையே தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. போர் புரிவதன் மூலம் பாலஸ்தீனப் பிரச்சனைக்கு ஒரு முடிவு காணமுடியாது என்பதனை இத்தருணத்தில் நன்குணர்ந்த அரபு நாடுகள் வேறு வழிகளின் மூலம் அப்பிரச்சனைக்குத் தீர்வு காண முனைந்தன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பில் (Organisation of Petroleum Exporting Countries) இந்நாடுகள் மிகுந்த எண்ணிக்கையில் இருந்ததால், அவ்வமைப்பின் மூலம் தங்கள் பிரச்சனைகளுக்கு விடை காண வழி தேடின. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் மகாநாட்டில், எண்ணெய் உற்பத்தியில் மாதாமாதம் ஐம்பது சதவிகிதம் குறைப்பதென சவுதி அரேபியா கொண்டு வந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானம் 1973—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் நடந்து முடிந்த அரபு இஸ்ரேலியப் போரில் இஸ்ரேலை ஆதரித்த அல்லது அதன் மீது அனுதாபம் கொண்டிருந்த அமெரிக்கா, ஹாலந்து மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதை நிறுத்தவும் முடிவு செய்தனர். இதன் விளைவாக ஜப்பானிலும் ஹாலந்திலும் மிகுந்த எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டது. இச்சூழ்நிலைகள்

(குறிப்புக்கான இடம்)

ஜப்பான், அமெரிக்காவின் நிபந்தனைகளையும் மீறிதான் அதுகாறும் கொண்டிருந்த இஸ்ரேல் ஆதரவுக் கொள்கைகளைக் கைவிட்டது. இந்நெருக்கடியைச் சமாளிக்க ஹாலந்திற்கு ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகள் கை கொடுத்தன. அமெரிக்காவும் தன்னுடைய எண்ணெய் உபயோகத்தைச் சிக்கனப்படுத்திக் கொள்ள நேரிட்டது.

OPEC நாடுகள் தங்களுடைய எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க முடிவு மேற்கொண்டதுடன், அதன் விலையை உயர்த்தவும் முடிவு செய்தன. பிற உலகநாடுகள் அனைத்தும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபொழுதும் அரபு நாடுகள் தங்களுடைய முடிவை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டன. அத்துடன் அவர்கள் ஏற்றுமதி செய்யும் எண்ணெயின், விலை மூன்று மாதத்திற்கு ஒரு முறைபரிசீலனை செய்யப்படும் என்றும், அவசியமேற்படும் பட்சத்தில் அதன் விலை உயர்த்தப்படும் என்றும் அறிவித்தன. அதே தருணத்தில், ஈராக்கும் தன்னுடைய எண்ணெயை ஒரு ஏலத்தின் மூலம், அதிக விலை தரும் நாட்டிற்கு விற்பதென முடிவுசெய்தது. இவ்வாறாக, வேறு சில காரணங்களுக்காக அரபு நாடுகள் மேற்கொண்ட இத்தகைய முடிவினால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் மூன்றாம் உலகத்தைச் சார்ந்த வளர்ந்து வரும் நாடுகளே ஆகும். அந்நாடுகளில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி அவைகளின் பொருளாதார நிலையைச் சீர்குலைத்தது.

இதை அடுத்து 1977—ஆம் ஆண்டு மீண்டும் எண்ணெய் விலை உயர்த்தப்பட்டது. இத்தருணத்தில் OPEC நாடுகள் இருவிதமான விற்பனை முறையைக் கொண்டன. அதன் 11 நாடுகள் 1977—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் எண்ணெயின் விலையை 10 சதவீதம் அதிகரிப்பதெனவும், பின்னர் அதே ஆண்டு ஜூலை மாதம் முதல் மேலும் 5 சதவீதம் அதிகரிப்பதெனவும் முடிவு மேற்கொண்டன. அவ்வமைப்பின் மற்றுமிரு நாடுகளான சவுதி அரேபியாவும் ஐக்கிய அரபுக் கூட்டும் (U.A.F.) எண்ணெய் விலையை ஒரே ஒரு முறை 5 சதவிகிதம் மட்டும் (1977, ஜனவரி முதல்) அதிகரிக்க முடிவு செய்தன. அப்பொழுதிலிருந்து அரபு எண்ணெயின் விலை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட்டு வருகின்றது. பிற நாடுகள் இத்தகைய செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதிலும், அரபு நாடுகள் அது பற்றிக் கவலையின்றிக் காணப்படுகின்றன. மேலும் நெடுங்காலத்திற்கு எண்ணெய் வளம் நீடித்திருக்க வேண்டுமெனில், அதனை உபயோகிக்கும் நாடுகள் மிகவும் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டும். எண்ணெய் விலை உயர்த்தப்பட்டால்தான் உலகநாடுகள் எண்ணெயைச் சிக்கனமாக செலவழிக்கும்'' என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். எனினும்,

அந்நாடுகள் தங்களுடைய எண்ணெய் மூலமான வருமானத்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொள்ள விளைந்தது தெள்ளெனத் தெரிந்தது.

உலகில் காணப்படும் முக்கிய நாடுகளில் சோவியத் யூனியன், சீனா ஆகிய இருநாடுகளுமே எண்ணெய் வளத்தில் தன்னிறைவு பெற்றுக் காணப்படுகின்றன. அவைகளின் தேவைகளுக்கு மேல் அங்கு எண்ணெய் காணப்படுவதால் சோவியத் யூனியனும் சீனாவும் முறையே கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றன. இந்நாடுகளும் தங்களது எண்ணெய் விலையை அரபு நாடுகளின் எண்ணெய் விலைக்கு இணையாக உயர்த்தியுள்ளன. இதன் மூலம் இந்த நாடுகளும் ஒரு கணிசமான வருமானத்தைப் பெற்று வருகின்றன.

1. பன்னாட்டுச் சட்டம் என்றால் என்ன?
2. பன்னாட்டு சட்டத்தின் வளர்ச்சியினை விளக்குக.
3. அரசியல் விவேகம் என்றால் என்ன?
4. அரசியல் விவேகத்தின் வகைகளை கூறுக..
5.அரசியல் வீழ்ச்சியினை பகுப்பாய்க.

**பொருளாதார விளைவுகள் :** இவ்வாறாக அரபு நாடுகள் ஒரு சிறந்த ராஜதந்திரத்தைப் பின்பற்றி, எண்ணெய் உற்பத்தியைக் குறைத்து, அதன் விலையையும் உயர்த்தியதுடன், தங்களுக்கு ஆதரவு அளிக்காத நாடுகளுக்கு எண்ணெய் வழங்கவும் மறுத்துவிட்டன. இவ்வாறு இந்நாடுகள் தங்களிடம் மட்டுமே தகுதியாக இருக்கும். அதே சமயத்தில், எல்லா நாடுகளுக்கும் மிகவும் தேவையான, எண்ணெய்யைப் பயன்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை அடைய முயன்று வருகின்றன. இதையே நாம் ‘ஆயில் டிப்ளமசி’ (Oil diplomacy) என்கிறோம். தற்காலத்தில் உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் எண்ணெய் மிகவும் அவசியமான ஒன்றாக விளங்குகிறது. வளர்ந்தநாடுகள் தங்களது தொழிலகங்களை விரிவுபடுத்தி தொடர்ந்து செயல்படச் செய்யவும், வளர்ந்து வரும் நாடுகள் தங்களை விரைவில் தொழில்மயப்படுத்திக் கொள்ளவும் எண்ணெய் மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்நாடுகள் அனைத்தும் எண்ணெய்க்காகத் தங்களது வருமானத்தில் ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி வருகின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்பு நாடுகள் எண்ணெய்காகச் செலவிட்ட தொகையைவிட மும்மடங்கு அதிகம் தற்பொழுது செலவிட நேர்ந்துள்ளது. நாடுகளால் எண்ணெய்க்காகச் செலவிடாமலும் இருக்க முடியாது. எனவே ஒவ்வொரு ஆண்டும் நாடுகள் தங்களது வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான தொகையை எண்ணெய்க்காக ஒதுக்கி வருகின்றன. இதன் விளைவாகப் பிற வளர்ச்சித் திட்டங்களுக்கு இவைகளால் அதிகரித்த தொகையை ஒதுக்க

(குறிப்புக்கான இடம்)

முடியவில்லை. தற்காலங்களில் இந்த எண்ணெய் மீதான செலவுடன் இராணுவச் செலவுகளும் அதிகரித்த வண்ணமிருப்பதால், இந்நாடுகளில் வளர்ச்சிப் பணிகள் மிகவும் தடைப்பட்டுள்ளன. இவ்வாறிருக்கும் பட்சத்தில் அரபுநாடுகள் திடீர் திடீரென்று எண்ணெய் விலையை உயர்த்துவதால் இந்நாடுகள் அனைத்தும், தங்களுடைய வளர்ச்சிப் பணிகளுக்கென ஒதுக்கியிருக்கும் நிதியை எண்ணெய்க்காகச் செலவிட வேண்டியுள்ளது. மற்றும் சில நாடுகள் பிறநாடுகளிலிருந்து அல்லது பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்கி இந்நெருக்கடியைச் சமாளித்து வருகின்றன. இப்பிரச்சனைகளை வளர்ந்த நாடுகள் ஓரளவு திறமையுடன் சமாளித்து வருகின்றன. இந்த மத்திய கிழக்குப் பகுதிகளில் காணப்படும் நாடுகளில் ஸ்திரமற்ற ஒரு அரசியல் நிலை தொடர்ந்து காணப்படுவதால் அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் தங்களுடைய ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் வளர்ந்த நாடுகளிடமிருந்து மிகவும் நவீன ஆயுதங்களைப் பெற்று வருகிறார்கள். ஆயுத விற்பனை மூலம் கிடைக்கும் வருமாத்தைக் கொண்டும் மத்திய கிழக்கு நாடுகளைத் தொழில் மயப்படுத்த இந்நாடுகள் மேற்கொள்ளும் திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் மானியத் தொகைகளைக் கொண்டும், இந்த வளர்ந்த நாடுகள் தங்களுடைய எண்ணெய்ச் செலவுகளைக் கட்டுப்படுத்தி வருகின்றன. ஆனால், இத்தகைய சிறப்புகளைப் பெற்றிராத வளர்ந்து வரும் நாடுகளே இதன்மூலம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நாடுகள் அரபு நாடுகளுடன் சிறந்த முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலம் ஒரு சில சலுகைகளைப் பெற முடியும். கூட்டுச் சேரா நாடுகளின் அமைப்பில் இந்த அரபு நாடுகளும் அங்கத்துவம் பெற்றுள்ளன. இவ்வமைப்பில் உள்ள எல்லா நாடுகளுமே வளர்ந்து வரும் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது அரபு நாடுகளிடம் பணமிருந்த போதிலும், அவைகளின் அரசியல் மற்றும் சமுதாயச் சூழ்நிலைகள் பிற வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளது போன்றே காணப்படுகின்றது. அத்துடன் இந்நாடுகளின் தொழில் நுட்ப வன்மை ஒரு சில வளர்ந்து வரும் நாடுகளிலுள்ளது போன்று கூட இல்லை என்பதையும், மறுக்கமுடியாது. எனவே கூட்டுச் சேராவியக்கத்தில் அங்கத்துவமேற்றிருக்கும் பிற நாடுகள் அரபு நாடுகளின் உதவியைப் பெறமுயற்சிக்க வேண்டியது விரும்பத்தக்கதாகும். அதே வேளையில் இந்தியா யூகோஸ்லாவியா போன்ற தொழில்நுட்ப மேன்மையுடைய நாடுகள் இந்த அரபு நாடுகளின் தொழில் முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியது அவசியமானதாகும்.

**அரசியல் விளைவுகள் :** இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கெடுபிடிப்போரின் பயனாக, இப்பகுதியில்

(குறிப்புக்கான இடம்)

வல்லரசுகளின் தலையீடும் மிகவும் அதிகரித்தது. இதனால் அப்பகுதியிலுள்ள நாடுகளில் பதட்டமான அரசியல் சூழ்நிலையும் காணப்பட்டது. தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கத்தில் அப்பகுதியிலிருக்கும் நாடுகளிடையே காணப்படும் சில மனஸ்தாபங்களைப் பெரிதுபடுத்தி ஒன்றிற்கெதிராக மற்றொன்றைத் திருப்பிவிடவும் இவ்வரசுகள் தயங்கவில்லை, அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான பிரச்சனைகளில் இஸ்ரேலை அமெரிக்காவும் அரபு நாடுகளை ரஷ்யாவும் தொடர்ந்து ஆதரித்து வருகின்றன. அதே வேளையில் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் அரபு நாடுகளை ஆதரித்து வருகின்றன. அந்நாடுகளிலிருந்து தொடர்ந்து எண்ணெய் பெறுவதற்காகப் பின்னிரு நாடுகளும் அரபு நாடுகளை ஆதரித்து வருகின்றன என்றும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதே போல் அப்பகுதியிலிருக்கும் ஈரான்—ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. ஈரானும் அமெரிக்காவும் நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். எனினும் 1979—ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் ஈரானில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக அமெரிக்கா—ஈரான் உறவுகள் நலிவடைந்தன. இந்நாட்களில் ஈராக்கை ரஷ்யா ஆதரித்து வந்தது. அமெரிக்கர்களின் ஆதரவை இழந்த ஈரான், ரஷ்யர்களின் உதவியைப் பெறவும் மறுத்து விட்டது. இக்காலக் கட்டத்தில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபுக் குடியரசு போன்ற நாடுகள் அமெரிக்காவின் நண்பனாகத் திகழ்கின்றன. ஈராக், சிரியா பேன்ற நாடுகள் ரஷ்யாவின் தார்மீக ஆதரவைப் பெற்று விளங்குகின்றன. சமீபத்தில் அமெரிக்காவின் ஆசியுடன் இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமிடையே மேற்கொள்ளப்பட்ட 'கேம்ப்—டேவிட்' ஒப்பந்தம் மத்திய கிழக்கு நாடுகளின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது. இவ்வாறாக மத்திய கிழக்குப் பகுதி முழுவதும் ஒரு பதட்டமான அரசியல் சூழ்நிலையைக் கொண்டுள்ளது. இதற்கு அந்நாடுகளின் எண்ணெய் வளமும் ஒரு முக்கிய காரணம் என்றால் அது மிகையாகாது. ஈராக்—குவைத்—அமெரிக்கா—மோதலும், தொடர்ந்த நெருக்கடியும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

## 6.1.10. தொகுப்புரை

இவ்வாறாக உலகில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அதே தருணத்தில் பதட்டமான சூழ்நிலைகள் மிக்கதாக இந்த மத்திய கிழக்குப் பகுதி காணப்படுகிறது. இப்பகுதியிலிருக்கும் நாடுகள் தங்களிடமிருக்கும் எண்ணெய் வளத்தைக் கொண்டு தங்களுடைய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயலுவதும், அதனால் பிற நாடுகளில் ஏற்படும்

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக்

அ) பன்னாட்டுச் சட்டம் என்றால் என்ன என்பதை விளக்குக.

ஆ) பன்னாட்டு சட்டத்தின் வளர்ச்சினை கூறு.

இ) அரசியல் விவேகம் என்றால் என்ன.

ஈ) அரசியல் விவேகத்தின வகைகளை கூறு.

உ) எண்ணெய் அரசியல் விவேகம் பகுப்பாய்க.

(குறிப்புக்கான இடம்)

பொருளாதாரத்தாக்கமும் இந்நாடுகளிலிருந்து தேவையான எண்ணெய் அதிக சிரமமின்றிப் பெற உலகநாடுகள் முழுவதும், இதன் காரணமாக அங்கு காணப்படும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையும், அது மட்டுமின்றி அவைகளிடையே இருக்கும் கருத்து வேறுபாடுகளும் அன்றாட நிகழ்ச்சியாகக் காணப்படுகிறது. சார்ந்திருக்கும் தன்மை அதிகரித்துவரும் தற்கால வாழ்க்கையில், இவ்வுலக நாடுகள் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து, ஒற்றுமையாகவும் நன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். 1997—98ல் தொடர்ந்து அமெரிக்க—ஈராக் மோதல் ஏற்பட்டு, போர் மூளும் சூழ்நிலையை ஐ.நா. பொதுச் செயலர் அண்ணன் நேரடித் தலையீட்டு மூலம் தவிர்த்த போதிலும் பதட்டம் நிலவுகிறது எனலாம்.

### 6.1.11. முக்கிய வார்த்தைகள்:

பன்னாட்டு சட்டம் — தேசீய அதிகாரத்தினை வரையறை செய்தல்

பன்னாட்டு நீதிமன்றம் — உலக நாடுகளின் சமாதானத்தை நிலைநிறுத்தம் மன்றம்

அரசியல் விவேகம் — பேச்சு வார்த்தைகளின் மூலம் பிரச்சனைக்கு முடிவு காணுதல்

### 6.1.12. இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்:

Calvocoressi, Peter: World Politice Since 1945 ClG. 1975

Rama A.P. Amperatick of Non Hlignemnt

### 6.1.13. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண். 1: பதில் எண். 6.1.1

கேள்வி எண். 2: பதில் எண். 6.1.2

கேள்வி எண். 3: பதில் எண். 6.1.5

கேள்வி எண். 4: பதில் எண். 6.1.6

கேள்வி எண். 5: பதில் எண். 6.1.8

### 6.1.14. மாதிரிவினாக்கள்:

1. பன்னாட்டுச் சட்டத்தின் பொருள் மற்றும் தன்மையினை விவாதிக்க.
2. பன்னாட்டுச் சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினை பகுப்பாய்க.
3. அரசியல் விவேகம் என்றால் என்ன? அது 20 – 30 நூற்றாண்டில் பின்பற்றப்பட்டு வரும் அரசியல் தந்திர முறைகளை ஆராய்க.
4. எண்ணெய் நாடுகளில் அரசியல் விவேகம் பற்றி விரிவான கட்டுரை வரைக.

# அலகு—7

## கூட்டுச் சேராக் கொள்கை : தற்கால உலக அரசியலில் கூட்டு சேரா இயக்கத்தின் பங்கு – கெடுபிடிப்போர் — தோற்றம், தன்மை, பிரச்சனைகளும், விவரங்களும் — படை குறைப்பு.

**முன்னுரை**

இரண்டாம் உலகப்போருக்குப்பின் வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா நாடுகளின் சேராமல் தனித்து ஒதுங்கி நின்ற நாடுகளை கூட்டுச் சேராக் கொள்கையினை பின்பற்றியது. கூட்டுச்சேராமைகளினால் நடுநிலை (Neutrality) என்று பொருள் இரு வல்லரசுகளிடையே நிலவிய போட்டி பொறாமை, பகைமை, அச்சம், அவநம்பிக்கை சந்தேகம் காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலையே (Tension) கெடிபிடிப்போர் (Cold war) எனப்படுகிறது. இவ்வுலகில் இவ்வொவ்வொன்றையும் தெளிவாக கூறப்பட்டள்ளன.

**நோக்கங்கள்**

கூட்டுச்சேரா கொள்கையின் பொருள், தன்மை மற்றும் அதன் வளர்ச்சியினை புரிந்து கொள்ளுதல் கெடுபிடிப்போரின் தோற்றம், தன்மை மற்றும் பிரச்சனைகளை கற்றறிதல்.

ஐரோப்பாவில் கெடிபிடிப் போர் பற்றி பகுப்பாய்வு செய்தல்

**அலகு வடிவமைப்பு:**

கூட்டுச் சேராக் கொள்கையின் தோற்றம்

கூட்டுச் சேராக் கொள்கையும் இறைமையும்

கெடிபிடிப் போரின் தோற்றம் மற்றும் தன்மை

கெடிபிடிப்போரின் நிகழ்ச்சிகள்

தூரகிழக்கு நாடுகளில் கெடுபிடிப்போர்

ஐரோப்பாவின் கெடுபிடிப்போர்

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key Words)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for further studing)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

மாதிரி வினாக்கள் : (Questions)

(குறிப்புக்கான இடம்)

## 7.1. கூட்டுச் சேராக் கொள்கையின் தோற்றம்:

இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் ஒரு சில நாடுகளின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட ‘கூட்டு சேரா’ இயக்கம், இன்று பன்னாட்டு அரங்கில் ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் பன்னாட்டு அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலகட்டத்தில் வல்லரசுகளிடையே தோன்றிய கெடுபிடிப்போர் அதன்போக்கு மற்றும் அதனுடைய விளைவுகள் ஆகியவைபற்றி இதற்கு முந்தைய பாடத்தில் விரிவாகக் கண்டோம் மேலும் இக்கட்டத்தில் தான் பல நாடுகள் தன்னாட்சி பெற்றன. ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கும், சக்தியும் இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் குறைந்துவிடவே, அவற்றின் கீழிருந்த நாடுகளனைத்தும் விடுதலை அடைந்தன. அந்நாட்டின் தேசியத் தலைவர்கள் தத்தம் நாடுகளின் சுதந்திரத்தை பெரிதும் போற்றி மதித்தனர். பெரும்பாலான நாடுகள் பன்னாட்டு அரங்கில் சுதந்திரமாகச் செயல்பட விரும்பின. இவற்றில் பெரும்பாலானவை ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களில் இருந்தன. இதுகாறும், அடிமைதனத்தில் பூட்டிவைக்கப்பட்டிருந்த இந்நாடுகள் புத்துயிர் பெற்றன இத்தருணத்தில்தான் வல்லரசுகளிடையே கெடுபிடிப்போர் மிகவும் தீவிரமடைந்தது. முன்னாளைய ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கு பன்னாட்டு அரங்கில் குறைந்துவிடவே, பன்னாட்டு அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் இவ்வல்லரசுகளை வந்தடைந்தன. இந்நாடுகள் அதிக வலிமை பெற்றிருந்தால் ஏனைய சிறுசிறு நாடுகளின் போக்கைக் கட்டுப்படுத்த கூடிய நிலையில் இருந்தன. அவைகளிடையே பகைமை உணர்வு வளர வளர அவ்வல்லரசுகள் பிற நாடுகளின் விவகாரங்களில் தங்களது தலையீட்டை விரிவாக்கின ஒரு சில நாடுகள், வேறுவழியின்றி ஏதாவது ஒரு வல்லரசுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை வல்லரசுகள் மேற்கொண்டன. மேலும் இப்புதிய நாடுகளின் பொருளாதாரமும் மிகவும் நலிவடைந்து காணப்பட்டது அதுகாறுதம் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழிருந்து இந்நாடுகள் தொடர்ந்து சுரண்டப்பட்டு வந்தமையால், அவைகளின் புனரமைப்புக்கு அதிகமான நிதி வசதிகள் தேவைப்பட்டன, இதை இரத ஒரு சாக்காக வைத்துக் கொண்டு வல்லரசுகள் அந்நாடுகளின் விவகாரங்களில் தலையிட வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. மேலும் அக்காலக் கட்டத்தில் ஜனநாயகத்திற்கும் கம்யூனிசத்திற்குமிடையே போர் துவங்கவே ஜனநாயக நாடுகளின் தலைவராக அமெரிக்கா தன்னைப் பாவித்துக் கொண்டு, பிற ஜனநாயக நாடுகளை தன் பின்னே அணிவகுத்து நிற்கச் செய்யத் தலைப்பட்டது. அதே தருணத்தில் சோவியத்யூனியன் கம்யூனிசத்தின் தலைவராகச் செயல்படத் தொடங்கிற்று.

(குறிப்புக்கான இடம்)

இதன் விளைவாக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்த நாடுகளில் கம்யூனிசப் புரட்சிகளும், பொதுவுடைமைத் தத்துவத்தைப் பின்பற்றத் தலைப்பட்ட நாடுகளில், ஜனநாயகவாதிகளின் போராட்டங்களும் தலை எடுக்கலாயின. ஜனநாயக சக்திகளுக்கு அமெரிக்காவும், கம்யூனிசப் புரட்சியாளர்களுக்கு சோவியத்யூனியனும் எல்லா வழிகளிலும் உதவி செய்யலாயின.

இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இப்புதிய நாடுகளில் பல மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த பொழுதிலும், அவைகள் தங்கள் நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீட்டை அறவே வெறுத்தன. ஒரு சில நாடுகள் வல்லரசுகளின் வலையில் சிக்குண்டபோதிலும், பெரும்பாலான நாடுகள் மீண்டும் தங்களுடைய சுதந்திரத்தையும், இறைமையும் இவ்வல்லரசுகளிடம் அடகு வைக்க விரும்பவில்லை. அவைகள் வல்லரசுகளிடமிருந்து பொருளாதார உதவியை எதிர்பார்த்த போதிலும், வல்லரசுகளின் அதிகார ஆதிக்கத்தை தவிர்க்க விரும்பினர். வளமான வாழ்வா? அல்லது இறைமையா? என்ற வினாவிற்கு, அவர்கள் விடைகாண வேண்டியிருந்தது. அத்துடன் அந்நாடுகள் உலக அரங்கில் அமைதியை நிலை நாட்டப் பெரிதும் விரும்பின. உலகில் அமைதி நிலவினால்தான் தங்கள் நாடுகளின் வளர்ச்சி பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள முடியும் என்பதனையும் அவைகள் உணர்ந்திருந்தன எனவே அவைகள் ஏற்கனவே தீவிரமடைந்திருந்த கெடுபிடிப்போரை, வல்லரசுகளின் அணிகளில் சேருவதன் மூலம் மேலும் தீவிரப்படுத்த விரும்பவில்லை. ஆகவே அப்புதிய நாடுகள், வல்லரசுகளின் பிடியில் சிக்காமல், அதே வேளையில் அவைகளின் உதவியுடன் தங்களது பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்பங்களை எங்ஙனம் வளப்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் அந்நாடுகள் ஆராயத் தலைப்பட்டன. எனினும் இந்நாடுகள் அனைத்தும் இணைந்து கூட்டு சேரா இயக்கத்தைத் தோற்றுவிக்க ஏறத்தாழ 10 ஆண்டுகள் (1950—60) காத்திருக்க வேண்டியதிருந்தது அதற்கான ஆரம்ப முயற்சிகள் 1955—ம் ஆண்டில் 'ஆசிய ஆப்பிரிக்கா' நாடுகளின் பாண்டுங் (Bandung) மகாநாட்டில் துவக்கி வைக்கப்பட்டன. அம்மகாநாட்டில், ஏகாதிபத்திய ஆட்சிகளை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கென அந்நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்பட வேண்டுமெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அந்நாடுகளிடையேயான உறவுகள் பஞ்ச சீலக் (Panch Shila) கொள்கையின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அம்மாநாட்டில் இந்தியா, சீனா, எகிப்து, யூகோஸ்லாவியா, இந்தோனேசியா போன்ற முக்கியமான நாடுகள் பங்கேற்றிருந்தன.

கூட்டு சேரா இயக்கம் உருவெடுக்க காலதாமதம் ஆனபோதிலும் சில நாடுகள் தனித்தனியானக் கூட்டு சேராக் கொள்கையைப் பின்பற்றத் தலைப்பட்டன. அந்நாடுகளில் இந்தியா, எகிப்து மற்றும் யூகோஸ்லாவியா போன்ற நாடுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை ஆகும். எகிப்து, யூகோஸ்லாவியா போன்ற நாடுகள் கூட்டு சேரா இயக்கத்தைத் தோற்றுவிக்க பெரும் பங்காற்றிய பொழுதிலும் அவ்வியக்கத்திற்கு ஒரு கொள்கை வடிவம் தந்த பெருமை இந்தியாவைச் சாரும். 1946—ஆம் ஆண்டு இங்கு இடைக்கால அரசாங்கம் (Interim government) தோற்றுவிக்கப்பட்ட பொழுதே ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட்டுச் சேராமையாக (Non alignment) இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கையாக அறிவித்தார். பின்னர் சுதந்திர இந்தியாவின் தலைமை அமைச்சரான பின் அவர் தன்னுடைய வானொலி உரையில் (1947 ஆகஸ்ட் 15) இது பற்றி கூறுகையில், கூடிய மட்டிலும் நாம் வல்லரசு அரசியலிலிருந்து விலகி நிற்கவே விரும்புகிறோம். நாம் ஏதாவது ஒரு வல்லரசுடன் இணைவதின் மூலம் உலகில் காணப்படும் பதட்ட நிலையை மேலும் அதிகரித்தவர்கள் ஆவோம். இந்நூற்றாண்டில் ஏற்கனவே இருபெரும் கொடிய போர்கள் நிகழ்ந்துள்ளன. அத்தகைய போர் இவ்வல்லரசுகளிடையே மீண்டுமொருமுறை ஏற்படுமேயானால் இவ்வுலகம் அதுகாறும் கண்டிராத கொடிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். எனவே இவ்வல்லரசுகளிடமிருந்தும் விலகி நிற்பதே நமக்குகந்தது'' என்று குறிப்பிட்டார். இதே போன்று, யூகோஸ்லாவியாவும் கம்யூனிசத்தைத் தன்வழியாக ஏற்றெடுத்த போழ்திலும் தன்னுடைய விவகாரங்களில் அந்நியத்தலையீட்டை சிறிதும் விரும்பவில்லை. அதைப் போல் எகிப்தின் நாசரும் ஒரு சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றத்தலைப்பட்டார். பாண்டுங் மாநாட்டின் முடிவுகள் இத்தலைவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக இருந்தது. அங்கு கூடிய நாடுகளிடையே தங்களுக்கென்று ஒரு சுதந்திரமான அமைப்பு வேண்டுமென்ற எண்ணம் காணப்பட்டது 1955க்கும் 60க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் பாண்டுங் தலைவர்கள் பலமுறை சந்தித்து இது குறித்து கலந்தாலோசித்தனர். நேரு, நாசர், சுகர்னோ (இந்தோனேசியா) போன்ற தலைவர்கள் தங்களுக்குள் இது பற்றி ஒரு முடிவு கண்டனர். பின்னர் இத்தலைவர்கள் யுகோஸ்லாவியா அதிபர் டிட்டோவுடன் கலந்தாலோசித்து கூட்டுச் சேரா இயக்கத்தைத் தொடங்க வழிவகுத்தனர். அதையடுத்து, இவ்வியக்கத்தில் சேரா விருப்பம் தெரிவித்த நாடுகளின் பிரதிநிதிகள் 1961 ஆம் ஆண்டு பெல்கிரேடில் (யூகோஸ்லாவியா) தங்களுடைய முதல் மாநாட்டைக் கூட்டுவதென முடிவு செய்தனர். அத்துடன் பின்வரும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற

நாடுகளுக்கு அம்மாநாட்டில் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கப்படலாம் என்று தீர்மானம் செய்தனர். அவைகள் பின்வருமாறு:

1. எந்தவொரு வல்லரசுடனும் சேராமல் சுதந்திரமான கொள்கைகளைப் பின்பற்றி வருகின்ற வெவ்வேறு விதமான சமூக அரசியல், பொருளாதார அமைப்புகளைக் கொண்டிருப்பினும், இணைந்து வாழ்தலில் நம்பிக்கை கொண்டிருக்கின்ற கூட்டு சேராக் கொள்கையில் ஓரளவேனும் விருப்பம் காட்டுகின்ற நாடுகள்.
2. அத்தகைய நாடுகள் தேசிய சுதந்திர இயக்கங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்திருக்க வேண்டும்.
3. அத்தகைய நாடுகள் வல்லரசுகள் மேற்கொண்டிருக்கும் பன்முக இராணுவக் கூட்டுக்களில் அங்கத்துவம் பெற்றிருத்தல் கூடாது.
4. அத்தகைய நாடுகள் ஏதாவது ஒரு வல்லரசுடன் இருமுனை இராணுவ ஒப்பந்தங்களிலோ அல்லது பிராந்திய தற்காப்பு ஒப்பந்தங்களிலோ அங்கத்தினராக இருப்பினும், அத்தகைய ஒப்பந்தங்கள் வல்லரசுகளின் கெடுபிடிப்போர் காரணமாக, ஒன்றிற்கெதிராக எழுந்த ஒப்பந்தமாக இருத்தல் கூடாது.
5. அத்தகைய நாடுகள், தங்கள் நாட்டில் ஏதாவது ஒரு அந்நிய அரசிற்கு இராணுவத் தளங்களை அமைக்க உரிமை அளித்திருப்பினும், அது வல்லரசு சம்பந்தப்பட்டதாக இருத்தல் கூடாது.

மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஓரளவேனும் திருப்தி செய்யக்கூடிய நாடுகளுக்கு அழைப்பு விடுக்க தீர்மானிக்கப்பட்டது. அதை அடுத்து சுமார் 25 நாடுகளுக்கு 1961—ஆம் ஆண்டைய கூட்டுசேரா நாடுகளின் முதல் மகாநாட்டில் பங்கேற்க அழைப்பு அனுப்பப்பட்டது அன்று தொடங்கி இன்றுவரை 13 மாநாடுகள் நடைபெற்றுள்ளன சுமார் 25 அங்கத்தினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் இன்று சுமார் 123 நாடுகளை அங்கத்தினராகக் கொண்டிருக்கின்றது. இம்மாநாடுகளைப்பற்றியும் அதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பற்றியும், இந்நாடுகளின் செயல்முறை பற்றியும் உலக அரசியலில் இவ்வமைப்பின் முக்கியத்துவம் குறித்தும் சற்றுப்பின்னே காண்போம். அதற்கு முன் கூட்டுச்சேராப் பண்பு என்றால் என்ன என்பதைப் பற்றி ஆராய்வோம்.

(குறிப்புக்கான இடம்)

### 7.1.1. கூட்டு சேராமை பொருள்

இத்தொடருக்கு பல பொருள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கூட்டு சேரா இயக்கத்தில் எத்தனை அங்கத்தினர்கள் உள்ளனரோ அத்தனை விளக்கங்கள் இச்சொல்லுக்கு உண்டு என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர் இக்கூற்றை நாம் முழுவதும் ஏற்பதற்கில்லை. இதில் ஓரளவு உண்மையிருப்பினும் கூட்டு சேரா நாடுகள் தங்களுடைய மாநாடுகளில், எல்லோருக்கும் ஏற்புடைய வண்ணம் இருக்கும் விளக்கங்களை கண்டறிய பல முயற்சிகள் மேற்கொண்டு வருவதுடன், அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளன ஒவ்வொரு மகாநாட்டிலும் இதன் பொருள் பற்றி விவாதிக்கப்படுகின்றன.

கூட்டு சேராமை என்றால் இருவல்லரசுகளிலும் ஒன்றுக்கொன்று எதிராக மேற்கொண்ட கெடுபிடி போர்க்கால இராணுவ ஒப்பந்தங்களில் நாடுகள் அங்கத்துவம் பெறாதிருத்தலை வலியுறுத்துவதாக உள்ளது. கூட்டுச் சேராமை என்றால் நடுநிலைமை (Neutrality) என்று பொருள் அல்ல. இருபகைநாடுகளுக்கு இடையே எழும் போர்களில் எவ்வொரு நாட்டையும் ஆதரிக்காமலும், எவ்வொரு நாட்டையும் எதிர்க்காமலும் இருக்கும் பண்பைக் குறிப்பதே நடுநிலைமை ஆகும். ஆனால், கூட்டுச் சேராக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகள் நடுநிலைமையைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அவ்வப்பொழுது எழும் பிரச்சனைகளுக்கு அதன் அடிப்பண்டயில் அதற்கான முடிவுகளைக் கண்டறிந்து, செயல்படும் தன்மையைக் கொண்டதே கூட்டுச்சேராமை எனப்படுவது. உதாரணமாக ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு வலுத்தாக்குதல் செய்யுமானால் அத்தகைய வலுத்தாக்குதல் செய்யும் நாட்டை கண்டனம் செய்யும் தன்மையைக் கூட்டுச் சேராக் கொள்கை கொண்டிருக்கிறது. தேவையானால் ஐ.நா. சபையின் துணைகொண்டு அவ்வலுத்தாக்குதல் புரியும் நாட்டிற்கெதிராகப் போரில் ஈடுபடும் உரிமையையும் இப்பண்பு குறிப்பிடுகிறது.

கூட்டுச் சேராமை என்பதற்குத் தனித்திருத்தல் (Isoationism) என்றும் பொருள் அல்ல. உலகில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும், அதை பொருட்படுத்தாமல் "தான் உண்டு, தன் வேலை உண்டு" என்றிருத்தலைக் குறிப்பதே தனித்திருக்கும் பண்பாகும். உதாரணமாக முதல் உலகப்போருக்கும், முற்பட்ட காலத்திலும், இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்திலும் அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் பற்றற்றிருந்த நிலையைக் குறிப்பதே தனித்திருத்தல் ஆகும். ஆனால் கூட்டுச் சேராமை என்பது நாடுகள் தாங்களாகவே முன்வந்து பன்னாட்டு அரசியலில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண விழைவதும்,

(குறிப்புக்கான இடம்)

உலக அமைதிக்காக நாடுகளுடன் இணைந்து செயல்படுவதுமாகும். பன்னாட்டு அரசியலிலிருந்து விலகி இருத்தல் என்று பொருள்படாது. ஆனால், இது வல்லரசு அரசியலுக்கே உரித்தான சில கட்டுப்பாடுகளைத் தவிர்த்தலைக் (Non-commitment) குறிக்கிறது. கூட்டுச் சேராமை என்பது முன்னேற்றமிக்க கருத்துக்களின் அடிப்படையில் நடைமுறைக்கொத்த செயல்களை தன்னம்பிக்கையுடன் நிறைவேற்றத்தலைப்படுவதைக் குறிப்பதாகும்.

இராணுவக் கூட்டுக்களுக்கு எதிரான மனப்பான்மையே (Anti-alliance attitude) கூட்டுச் சேராமையின் முக்கிய அடிப்படையாகும். இக்கூட்டுக்கள் உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என இந்நாடுகள் கருதுகின்றன. இத்தகைய கூட்டுக்களே கெடுபிடிப்போரின் ஒரு அம்சமாக விளங்கின. சிலநாடுகள் தங்களுடைய அரசியல், சமூகமற்றுப் பொருளாதார அமைப்புகளைத் தங்களுக்கேற்ற வகையில் அமைத்துக்கொள்ள விழைவது இக்கோட்பாட்டின் இரண்டாவது அடிப்படையாகும். ஆனால், அதே தருணத்தில் பிற நாடுகளில் காணப்படும் மிகச் சிறந்த கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் தங்களைச் சுதந்திரமாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியமானது என இந்நாடுகள் கருதுகின்றன.

கூட்டுச் சேராப் பண்பிற்கு ஒரு பொருளாதார அடிப்படையும் உண்டு. பெரும்பாலான கூட்டுச் சேரா நாடுகள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதால், அவைகள் தங்களுடைய அயல் நாட்டுக் கொள்கையில் பொருளாதார வளர்ச்சியை ஒரு முக்கிய இலக்காகக் கொண்டிருக்கின்றன. இவ்வமைப்பில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்கு முதலீடுகளும், தொழில் நுட்ப உதவிகளும் தேவைப்படுகின்றன எந்த ஒரு வல்லரசுடனும் சேராதிருத்தலின் மூலம், அவ்விரு நாடுகளிடமிருந்தும் மேற்கண்ட உதவிகளைப் பெறுவதற்குக் கூட்டுச் சேராமை வழி வகுக்கிறது. இவ் வளர்ந்து வரும் நாடுகள் ஏதாவது ஒரு வல்லரசுடன் தங்களை இணைத்துக் கொள்ளுமாயின் அந்த வல்லரசு அந்நாடுகளை, வல்லரசு அரசியலில் சாதுர்யமாக பயன்படுத்தி அவைகளை மிரட்டித் தன் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் மிகுந்த வாய்ப்புகள் உள்ளன. எனவே நேரு போன்ற தலைவர்கள் அந்நிய முதலீடுகளை ஏற்க முனைந்த போழ்திலும், அத்தகைய உதவிகளோடு ஏதாவது கட்டுப்பாடுகளும் காணப்படுமேயானால் அதனை அவர்கள் மறுக்கச் சிறிதும் தயங்கவில்லை.

(குறிப்புக்கான இடம்)

## 7.1.2. கூட்டு சேராக் கொள்கையும், இறைமையும்

கூட்டு சேராக் கொள்கையின் ஒரு இயற்பண்பாக இறைமை கருதப்படுகிறது. நாடுகள் சுதந்திரமான ஒரு அயல் நாட்டுக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தை இக்கொள்கை வலியுறுத்துகிறது. இவ்வியக்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகள் பெரும்பாலானவை ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து சமீப காலத்தில்தான் விடுதலை பெற்றன. அவைகள் தங்களை ஏதாவது ஒரு வல்லரசுடன் இணைத்துக் கொள்ளுவதன் மூலம் தாங்கள் அரும்பாடுபட்டு போராடிப் பெற்ற சுதந்திரத்தை இழக்க விரும்பவில்லை. வல்லரசுகளின் கூட்டில் இணைவதன் மூலம் இராணுவம் மற்றும் பொருளாதார ரீதியில் இந்நாடுகள் பயன் பெறுதல் கூடுமாயினும் இந்நாடுகள் தங்களது அரசியல் சுதந்திரத்தைக் கணிசமான அளவில் இழக்க நேரிடும் இதனை அந்நாடுகளின் தலைவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். எனவே, அவர்கள் தங்களுடைய இறைமையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, ஒரு சுதந்திரமான அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினர்.

ஆனால் அதே சமயத்தில் இக்கூட்டு சேராக்கொள்கை நாடுகளுடைய இறைமையை ஓரளவு கட்டுப்படுத்தவும் செய்கின்றது. இக்கொள்கயையின்படி, நாடுகள் தங்களுடைய சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையின் துணை கொண்டு பன்னாட்டு அரங்கில் அமைதி நிலவிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இதனடிப்படையில் பார்க்குமிடத்து அதாவது, கூட்டுச் சேராக்கொள்கை பன்னாட்டு அரசியல் அமைதிகாக்க விழைவதால், அவ்வியக்கத்தில் சேர்ந்துள்ள நாடுகள் போரைத் தங்களுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவும் ஒரு கருவியாகக் கையாள இயலாது எனினும் இக்கட்டுப்பாடு முழு அளவில் காணப்படுகிறது என்று நாம் கூறமுடியாது.

1961—ஆம் ஆண்டு சுமார் 25 நாடுகளைக் கொண்டு பெல்கிரேடில் முதன் முதலாகக் கூட்டப்பட்ட கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கம் படிப்படியாக வளர்ந்தது. 1964—ல் கெய்ரோவிலும், 1970—ல் லுஸாகாவிலும், 1973—ல் அல்ஜியவிலும், 1976—ல் கொழும்பிலும், 1979—ல் ஹவானாவிலும் (க்யூபா) இவ்வியக்கத்தின் மாநாட்டில் கூட்டப்பட்டன. 1983—ம் ஆண்டு புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநாட்டில் பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இவ்வியக்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் தற்போது 103 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இக்கூட்டுச் சேரா இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை? தாங்கள் கொண்டிருந்த குறிக்கோள்களை இந்நாடுகள் எய்தினவா?

இம்மாநாடுகளின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணங்கள் யாவை? என்பன பற்றி இனி ஆராய்வோம்.

1961—ஆம் ஆண்டு பெல்கிரேடில் கூடவிருந்த முதல் கூட்டு சேரா மாநாட்டில் பங்கேற்க எத்தகைய நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்படல் வேண்டும் என்பதை டிட்டோ, நாசர் மற்றும் நேரு போன்ற தலைவர்கள் தீர்மானித்தனர். முடிவில் அது தொடர்பாக முன்னாலே கூறப்பட்டுள்ள ஐந்து பண்புகளைப் பின்பற்றுவதெனத் தீர்மானித்தனர்.

இத்தகைய பண்புகளைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு அவர்கள் அழைப்புகள் அனுப்ப தீர்மானித்த போதிலும், இதைச் செயல்படுத்துகையில் மிகவும் தாராளமான போக்கைக் கையாண்டனர். உதாரணமாகக் கூறின் சவுதி அரேபியா மற்றும் மொராக்கோ போன்ற நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு இராணுவத்தள வசதிகள் செய்து கொடுத்திருந்த போழ்திலும், அவைகளும் பெல்கிரேடு மாநாட்டில் பங்கேற்றிருந்தன. அது போன்ற நாடுகள் வல்லரசுகளுடன் மேற்கொண்டிருந்த இருமுனை ஒப்பந்தங்களில் அவ்வல்லரசுகளிடமிருந்து அந்நாடுகள் சுதந்திரத்தைப் பெறுவதற்குத் தேவையான ஒரு அம்சம் காணப்படின், அது குறித்தும் அதிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை, சுருங்கக்கூறின் விதிகள் 1 மற்றும் 2—ஐ திருப்தி செய்ய நாடுகளனைத்தும் அம்மாநாட்டில் பங்கேற்றிருந்தன. இந்நாடுகள் அனைத்தும் ஆசியா மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவையாகவிருந்த போழ்திலும், ஐரோப்பியப் பிரச்சனைகள் அணு ஆயுதச் சோதனைகள் மற்றும் கெடுபிடிப்போர் குறித்த விஷயங்கள் மிகவும் முக்கியமாக விவாதிக்கப்பட்டன. இந்நாடுகள் கெடுபிடிப்போரையும், அதன் விளைவாக வல்லரசுகள் மேற்கொண்ட இராணுவக் கூட்டுக்கள், மற்றும் அரசியல் யுக்திகள் ஆகியவற்றையும், மிகத் தெளிவாக எதிர்த்தன. எனவே, வல்லரசுகளிடையே காணப்பட்ட கெடுபிடிப்போரை நிறுத்தவும், அதன் விளைவாக உலகில் தோன்றியிருந்த ஒரு பதட்டமான சூழ்நிலையைத் தணிக்கவும் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள இந்நாடுகள் முடிவு மேற்கொண்டன.

இவை தவிர காலனி ஆதிக்கத்திற்கெதிரான விடுதலைப் போராட்டங்களுக்கு எல்லா வகையான ஆதரவுகள் அளிக்கவும், அத்தகைய நாடுகளின், விடுதலைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவும் இந்நாடுகள் தீர்மானித்தன எனவே இந்நாடுகள் அனைத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டன. இவ்வாறு கூட்டப்பட்ட இம் மாநாட்டிற்கு ரஷ்யர்களிடையே வெளிப்படையான ஆதரவு காணப்பட்டது. அமெரிக்கர்கள் தங்களது ஆதரவு குறித்து எதுவும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. இவ்வியக்கம் மேலும் வளருமேயானால், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிடையே தனது

(குறிப்புக்கான இடம்)

செல்வாக்கைக் குறைத்துவிடும் என சீனா கருதிய போதிலும், இவ்வியக்கத்தின் மூலகாரணியான பாண்டுங் மாநாட்டில் அது முக்கியப் பங்கேற்றிருந்தால் வேறு வழியின்றி சீனாவும் அதற்கு ஆதரவு அளிக்கவேண்டியிருந்தது.

இதனையடுத்து எகிப்து மற்றும் யுகோஸ்லாவியாவின் கூட்டு முயற்சியால் 1964—ஆம் ஆண்டு கெய்ரோவில் கூட்டுச் சேராவியக்கத்தின் இரண்டாவது மாநாடு கூட்டப்பட்டது. அப்பொழுது மேற்கண்ட பிரச்சனைகளுடன், அங்கத்துவ நாடுகளின் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும் விவாதிக்கப்பட்டன. எனினும் இக்காலகட்டத்தில் சோவியத்—சீனா உறவுகளில் பிளவு தோன்றவே, அது சம்பந்தமான விஷயங்களில் அங்கத்துவ நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் மிகவும் அதிகமாகக் காணப்பட்டன. அத்துடன் 1962—ஆம் ஆண்டைய இந்திய சீனப்போரும், இவ்வியக்கத்தை ஓரளவு பாதித்தது. எனவே, மீண்டும் இத்தகைய மாநாடுகள் கூட்டப்பட்டு இவ்வியக்கம் தழைத்தோங்குமா? அல்லது அத்துடன் மறைந்து விடுமா என்ற வினாவிற்கு விடையின்றி இம்மாநாடு முடிவுற்றது. எனினும் இந்நாடுகளால் உருவாக்கப்பட்ட "77 நாடுகளின் குழு" (Group of 77) என்ற அமைப்பு 1964—க்கும் 1970—க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நாடுகளிடையேயான தொடர்புகள் நீடித்திருக்க ஓரளவு உதவி புரிந்தது. இவ்வமைப்பின் முயற்சியாலும், டிட்டோ போன்ற தலைவர்களின் முயற்சியாலும் 1970—ஆம் ஆண்டு லுஸாகாவில் (Lusaka) இந்நாடுகளின் மூன்றாவது மாநாட்டைக் கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1970—ஆம் ஆண்டு கூட்டப்பட்ட லுஸாகா மாநாடு இவ்வியக்கத்தின் மிக முக்கியமான மாநாடு ஆகும். இக்கூட்டத்திற்குத் தலைமை ஏற்றிருந்த கென்னத் கௌண்டா (Kenneth Kaunda) தனது திறமையாலும், செயலாற்றலாலும், மற்ற அங்கத்துவ நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று அவைகளைப் பின்வரும் கொள்கைகளை ஏற்கச் செய்தார். அவைகளாவன,

1) கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாடு மூன்றாண்டுகளுக்கு கொருமுறை கூட்டப்படல் வேண்டும்.

2) இரு மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், முடிவடைந்த மாநாட்டின் தலைவர், கூட்டுச் சேராவியக்கத்தின் பிரதிநிதியாகச் செயல்பட வேண்டும்.

3) இத்தகைய மாநாடுகளைக் கூட்டும் பொழுதும், அதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை

நிறைவேற்றுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டியது தலைவரின் பொறுப்பாகும்.

இவ்வாறு இம்மாநாட்டில் இவ்வியக்கத்திற்கு ஒரு செயல்வடிவம் கொடுக்கப்பட்டது. இத்தருணத்தில் இவ்வியக்கத்தில் பல ஆப்பிரிக்க நாடுகள் அங்கத்துவம் பெற்றிருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனை எடுத்து 1973—ஆம் ஆண்டு அல்ஜீயர்ஸில் (Algiers) இவ்வியக்கத்தின் நான்காவது மாநாடு கூட்டப்பட்டது. இவ்வியக்கத்தின் சிறப்பு மிக்க மாநாடுகளுள் இதுவும் ஒன்றாகும்.

சுருங்கக்கூறின், கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பு ஒரு இயக்கமாக உருவெடுத்தது. 1973ற்குப் பிறகு தான் என்பது குறிப்பிடத்தக்கது இதுகாறும் உலக அமைதி குறித்து இந்நாடுகள் கவனம் செலுத்தி வந்தன. இம்மாநாட்டிற்குப் பிறகு இந்நாடுகள் உலக பொருளாதாரம் குறித்தும் தங்கள் சக்திகளை செலவிடத்துவங்கின இந்நாடுகளின் முயற்சியினால் ஐக்கிய நாடுகள் சபையில் புதிய பன்னாட்டுப் பொருளாதாரம் ஒழுங்கு (New International Economic Order) குறித்து 1974—ஆம் ஆண்டு ஒரு தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும், இம்மாநாட்டில்தான் இரு உச்சிமாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பல சிறப்புக் கூட்டங்களைக் கூட்ட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு இவ்வியக்கத்தின் ஐந்தாவது உச்சி மாநாடு கொழும்புவில் (Colombo) கூட்டப்பட்டது. இம்மாநாட்டிலும் நாடுகளின் பொருளாதாரத் தேக்க நிலையைக் குறித்து விவாதிக்கப்பட்டது. இம்மாநாட்டில் லத்தீன் அமெரிக்க நாடான கியூபா (Cuba) பெரும் பங்கேற்றிருந்தது. கூட்டுச்சேரா அமைப்பின் ஆறாவது மாநாடு 1979—ஆம் ஆண்டு ஹவானாவில் (Havana, Cuba) நடைபெற்றது. இக்காலகட்டத்தில் இவ்வியக்கத்தில் சேர்வதற்கு பெரும்பாலான நாடுகள் விருப்பம் தெரிவித்தன. இம்மாநாட்டின் போது வியட்நாம் பிரச்சனை, எகிப்து—இஸ்ரேல் உடன்படிக்கை குறித்த விவகாரங்கள் ஆகியன விவாதிக்கப்பட்டன. இப்பிரச்சனைகள் குறித்த விவாதத்தின் போது இந்நாடுகளிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. இக்கூட்டத்தின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட அறிக்கைகள் அவ்வியக்கத்தை சோவியத் யூனியன் சார்புடைய ஒன்றாகத் திகழ்வதாகத் தோற்றமளிக்கச் செய்தன என்று ஒரு சில வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதற்கிடையில் 1981—ஆம் ஆண்டு புதுடில்லியில் இக்கூட்டுச்சேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அம்மாநாட்டின் போது வியட்நாம், கம்போடியா, ஆப்கானிஸ்தான், ஈரான்,

(குறிப்புக்கான இடம்)

ஈராக்போர், எகிப்து ஆகிய பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டன. இம்மாநாட்டில் ஆசியன் (ASEAN) அமைப்பைச் சார்ந்த நாடுகள் இவ்வியக்கத்தை அமெரிக்கச் சார்புடையதாக முயற்சிகளை மேற்கொண்டன. எனினும் இந்தியா, யுகோஸ்லாவியா போன்ற நாடுகளின் தலைவர்களின் முயற்சியால் இவ்வியக்கம் எந்த ஒரு வல்லரசுக்கும் சாதகமாகத் தீர்மானங்களை மேற்கொள்ளுவது தவிர்க்கப்பட்டது. இவ்வியக்கத்தின் அடுத்த உச்சி மாநாடு 1983—ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது. அதில் புதுடில்லியில் பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

தற்காலத்தில் இவ்வியக்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கேற்ப அவைகளிடையேயான பிரச்சனைகளும் பன்மடங்கு அதிகரித்துள்ளன. இந்நாடுகளிடையே கொள்கைகள் (ideologies) மற்றும் பொருளாதார பிரச்சனைகள் குறித்து பல மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. எனினும், ஒன்றிரண்டைத்தவிர இந்நாடுகள் அனைத்தும் மிகவும் மோசமான பொருளாதார நிலையைக் கொண்டுள்ளன. இந்நாடுகள் அனைத்தும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த வளர்ந்து வரும் நாடுகள் ஆகும். அரபுநாடுகளை இதற்கு விதிவிலக்காகக் கொள்ள வேண்டும். அவைகள் மிகவும் சிறப்பான, செழிப்புமிக்க பொருளாதார நிலையைப் பெற்றிருப்பினும் பிற விஷயங்களில் (அரசியல் மற்றும் சமுதாய அடிப்படையில்) அவைகளும் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. எனவே இவைகளும் தங்களுடைய முன்னேற்றம் குறித்த பிரச்சனைகளில் தங்களது கவனத்தைத் திருப்பியுள்ளன. இந்நாடுகள் வடக்கு நாடுகள் தெற்குநாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. இவ்வடக்கு நாடுகள் (அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, சோவியத்யூனியன், இத்தாலி, கனடா போன்ற நாடுடகள்) தங்களது ஆயுத உற்பத்திக்காக செலவிடும் தொகையில் ஒரு பகுதியைத் தெற்கு நாடுகளுக்கு வழங்குமேயானால் பெரும்பாலான தெற்கு நாடுகளின் வறுமைச் சூழ்நிலை நீங்கிவிடும் என்று இத்தெற்கு நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. இத்தெற்கு நாடுகள் அனைத்தும் ஆசியா ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கப் பகுதிகளைச் சார்ந்தவைகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாடுகளின் கூற்றுப்படி உலகின் தெற்குப் பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதுடன், அணு ஆயுதங்கள் போன்றவற்றிற்காகப் பல தேவையற்ற செலவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் உலக அமைதிக்கே பங்கம் ஏற்படக்கூடும் உலகின் தெற்குப் பகுதியில்தான் உலக மக்கள் தொகையில் சுமார் 65

சதவிகிதத்தினர் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது மேலும் இவ்வடக்கு நாடுகள்தான் தங்களது ஏகாதிபத்திய ஆட்சியை இத்தெற்கு நாடுகளின் மீது செலுத்திக் கொண்டிருந்தன என்பதனையும் நாம் இங்கு நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். எனவே இந்நாடுகள் தங்களது பொருளாதார முன்னேற்றம் குறித்த பிரச்சனைகளில் தங்களது கவனத்தை திருப்பியிருப்பது வரவேற்றகத்தக்க ஒன்றாகும்.

இவ்வியக்கத்தின் வெற்றி தோல்விகளை அளவிட வேண்டுமெனில் நாம் அவைகள் கொண்டிருந்த நோக்கங்கள் யாவை என்பதனையும் அவைகளை அந்நாடுகளால் அடைய முடிந்ததா என்பதனையும் ஆராய வேண்டும். இவ்வியக்கம் துவங்கப்பட்டதின் முக்கிய நோக்கமே நாடுகள் ஒரு சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையின் துணைக்கொண்டு வல்லரசு அரசியலிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதும், உலகில் அமைதியை நிலைநாட்டுவதுமே ஆகும். சுருங்கக்கூறின் இந்நோக்கங்களில் இந்நாடுகள் வெற்றி அடைந்துள்ளதாகவே கொள்ள வேண்டும். இவ்வியக்கத்தின் பயனாக நாடுகள் வல்லரசுகளின் பின்னே அணிவகுத்து நிற்பது தவிர்க்கப்பட்டு, உலகில் காணப்பட்ட ஒரு பதட்டமான சூழ்நிலையும் குறைக்கப்பட்டது. அத்துடன் இரண்டாம் உலகப்போருக்கு பிற்பட்ட காலத்தில் ஏராளமான நாடுகள் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக காலனி ஆட்சி பெரும்பாலும் ஒரு முடிவுக்கு வந்ததில் இக்கூட்டுச் சேரா நாடுகளின் பங்கு தறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் (General Assembly) இந்நாடுகள் பெரும்பான்மை பலம் பெற்று விளங்குவதால் இந்நாடுகளின் செல்வாக்கும் உலக அரசியலில் வளர்ந்துள்ளது எனவே நாடுகள் தாங்கள் கொண்டிருந்த குறிக்கோள்களை இவ்வியக்கத்தின் துணை கொண்டு குறிப்பிடத்தக்கவகையில் எய்தியுள்ளன என்றால் அது மிகையாகாது.

1970க்கும் 80க்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் உலகில் கெடுபிடிப்போர் இல்லை என்ற சூழ்நிலை காணப்படுவதற்கு இவ்வியக்கம் பேருதவி புரிந்துள்ளது. கெடுபிடிப்போர் குறைந்துவிட்ட இச்சூழ்நிலையில் கூட்டுச் சேரா இயக்கம் அதன் அவசியத்தை இழந்து விட்டது என்று ஒரு சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதை நாம் முற்றிலும் உண்மை என்று கருத முடியாது தற்காலத்தில் மீண்டும் கெடுபிடிப்போர் தோன்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இது தவிர வடக்கு தெற்கு நாடுகளிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வேண்டிய பெரும் பணியும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது இப்பிரச்சனையில் இந்நாடுகள் தங்களை ஏற்கனவே ஈடுபடுத்திக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவ்வியக்கம் மேலும்

(குறிப்புக்கான இடம்)

சிறப்புடன் செயல்பட வேண்டிய அவசியம் காணப்படுகிறது. குறிப்பாக வடக்கு—தெற்கு பிரச்சனைகளை அணுகும் பொழுது இந்நாடுகள் மிகுந்த நிதானத்துடனும் அதிக ஒற்றுமையுடனும் செயல்படவேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகும். இந்நாடுகளிடையே காணப்படும் கருத்து வேறுபாடுகளை அவைகளின் செயல்பாட்டிற்கு குறுக்கீடாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவைகளின் கடமையாகும். எனவே, தற்காலத்தில் 'கூட்டு சேரா' இயக்கத்தின் தேவை முன்பிருந்ததை விட அதிகரித்துக் காணப்படுவதை யாரும் மறுக்க முடியாது.

### 7.1.3 கெடுபிடிப்போர் தோற்றம்

இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மேற்கு நாடுகளும் கம்யூனிச நாடான ரஷியாவும் "நேச நாடுகளாக" ஒன்றுபட்டு ஒரே அணியில் நின்று போராடின ஆனால் அப்போருக்கு முன்பு அந்நாடுகளிடையே நல்லுறவு நிலவியதில்லை ஹிட்லரின் நாஸி ஜெர்மனி இருதரப்பினருக்கும் பொது எதிரியாக எழுச்சியுற்றதால் அந்நாடுகள் தற்காலிகமாகத் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைந்து போரிட்டன. போர் முடிந்தது அதாவது பொது எதிரி மறைந்ததும், "போர்க்காலத் தேனிலவும்" முடிந்துவிட்டது. அந்நாடுகளிடையே குறிப்பாக ரஷியா, அமெரிக்க நாடுகளிடையே பழைய கருத்து வேறுபாடுகளும் ஐயப்பாடுகளும் தலைத்தூக்கின. போருக்குப்பின் அவ்விரு நாடுகள் மட்டும் தான் வலிமை மிகுந்து விளங்கின. எனவே அந்நாடுகள் உலகளாவிய ஆதிக்கப் போட்டியில் இறங்கின. இருவரும் தங்களின் அரசியல் கோட்பாடுகளே சிறந்தது, அவற்றையே உலகநாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பேராசைப்பட்டன. ரஷியா பொதுவுடைமைக்கோட்பாட்டை உலகமெங்கும் பரப்ப முயன்றபோது அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்தி, தனிமனித உரிமைப்பாதுகாப்புள்ள சுதந்திரக்கோட்பாட்டை நிலை நாட்ட முயன்றது, இந்த கோட்பாட்டுப் போட்டி ஆதிக்கப்போட்டியாக உருமாறியது. அப்போட்டி, பொறாமை பகைமை உணர்வுகளைக் கிளறியது. அதன்காரணமாக ஒன்றையொன்று அழித்திடமுயன்றன. அதற்கு நேரடிப்போர் தவிர பிறவழிவகைகள் அனைத்தையும் பயன்படுத்தின. இதனால் உலகில் பதட்ட நிலை உருவாகியது. இருவல்லரசுகளிடையே எந்த நிமிடமும் போர் மூண்டுவிடலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. இதுவே "கெடுபிடிப்போர்" எனப்படுகிறது, 1945இல் தொடங்கிய இக்கெடுபிடிப்போர் கால்நூற்றாண்டு காலம் நீடித்தது. அதன் பின் அதன் கடுமை தணிந்தது. இக்கெடுபிடிப்போர்க் காலத்தில் உலகநாடுகளில் பல இரு முகாம்களாகப் பிளவுபட்டு நின்றன ஒரு முகாமிற்கு சோவியத் யூனியன் தலைமை

தாங்கியது. அமெரிக்க முகாமிற்கு பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பல லத்தீன் அமெரிக்க நாடுகளும், பிலிப்பைன்ஸ் தேசிய சீனா, பாகிஸ்தான் போன்ற ஆசியநாடுகளும் அணிதிரண்டு நின்றபோது ரஷிய முகாமில் போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லோவாகியா, அல்பேனியா ருமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு நின்றன.

### 7.1.4. கெடுபிடிப்போரின் தன்மை

இக்கெடுபிடிப்போர் போர்க்களத்தில் நடைபெறவில்லை ஆனால் பிற "களங்கள்" அனைத்திலும் அது நடைபெற்றது பிரச்சாரப் பொருளாதாரம், அறிவியல் படைப்பெருக்கம், ராணுவக்கூட்டு ஆகியவற்றிலும் போட்டி ஏற்பட்டு போர் ஊக்கத்துடன் காரியங்கள் நடைபெற்றன. தங்கள் கூட்டில் புதிய நாடுகளை வளைத்துப் போடுவதில் அதிக ஆர்வம் காட்டின. அந்நாடுகளுக்குப் படைஉதவி அளிப்பதில் தீவிரம் காட்டப்பட்டது. உலகின் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது இரு நாடுகளிடையே மோதல் ஏற்பட்டால் இருவல்லரசுகளும் அங்கு விரைந்து அந்நாடுகளில் ஒன்றை ஆதரித்து அச்சிக்கலைப் பெரிதாக்கிவிட்டது. அதனால் எந்த ஒருசிக்கலும் பெரும் போராகமாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. பயங்கர அழிவைத் தரக்கூடிய அணு ஆயுதங்கள் தயாரித்துக் குவிக்கப்பட்டன: போருக்கமான முன்னேற்பாடுகள் அனைத்தும் முழுமூச்சுடன் செய்து முடிக்கப்பட்டு இருபத்தி நான்கு மணிநேரமும் இருவல்லரசுகளும் தயார் நிலையில் இருந்தன கெடுபிடிப்போர்க்காலம் முழுவதும் மூன்றாம் உலகப்போர் என்ற பேராபத்து உலகை அஞ்சி நடுங்கச் செய்தது. இதுவே கெடுபிடிப்போரின் உண்மைத் தன்மையாகும்.

### 7.1.5. கெடுபிடிப்போரின் காரணங்கள்

பொது எதிரி ஒழிப்புதான் அதற்கு முதல் காரணமாக இருந்தது. இரண்டாவதாக, ஐரோப்பாவில் முதுபெரும் வல்லரசுகளாக இருந்த பிரிட்டனும், போருக்குப்பின் இரண்டாந்தர அரசுகளாகிவிட்டன. ஜெர்மனி, இத்தாலி ஆகிய அரசுகளும் அடியோடு அழிந்து போயின ரஷ்யா மட்டும் தான் ஐரோப்பாக் கண்டத்தில் வல்லரசாக எஞ்சி நின்றது. பிற நாடுகள் அனைத்தையும் விட வலிமை பெற்று விளங்கியதால் ஐரோப்பிய வல்லமைச் சமநிலை கெட்டுவிட்டது இது மோதலுக்கு வழிவகுத்தது. மூன்றாவதாக கோட்பாட்டு வேறுபாடுகள் அவைகளிடையே போட்டி மனப்பான்மையை உண்டுபண்ணின. நான்காவதாக, பொருளாதார ஆதிக்கத்திட்டங்கள் பகைமையை அதிகரித்தன. முதலாளித்துவ நாடான அமெரிக்கா தன் உற்பத்திப் பொருட்களுக்கும் உலகளாவிய சந்தை இருக்க வேண்டும் என்று விரும்பியது. இறுதியாக யார் வல்லமை வாய்ந்தவர்,

(குறிப்புக்கான இடம்)

யார் உலகளாவிய ஆதிக்கம் பெறுவது, என்ற ஆதிக்க வெறி ஒன்றையொன்று அழித்திடத் தூண்டியதன் காரணமாகக் கெடுபிடிப்போர் தோன்றியது.

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது யால்டாவில் கூடிய 1945 பிப்ரவரி மாநாட்டில் வல்லரசுகளிடையே பல்வேறு பிரச்சனைகளில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இது பற்றி முந்திய பாடத்தில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக போலந்தின் எதிர்காலம் ஜெர்மனியின் எதிர்காலம் ஆகியவற்றில் அவைகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே யால்டாவிலே கெடுபிடிப்போருக்கான விதை ஊன்றப்பட்டது. அதன் பின் ரஷியா தன்னிச்சையாகப் பலகாரியங்களைச் செய்தது. தன்னால் நாஸி ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட்மயமாயின. இந்நாடுகள் அரசியல், பொருளியல் பண்பாட்டுத் துறைகளில் முற்றிலும் ரஷியாவையே பின்பற்றின. மேற்கு நாடுகளுடன் அனைத்து அரசியல், பொருளாதார தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன. ஐரோப்பா இரு முகாம்களாகப் பிளவுபட்டது. அவற்றிற்கிடையில் "இரும்புத்திரை" போடப்பட்டது. சர்ச்சில் கூறியது போல பால்டிக்கில் உள்ள ஸ்டெட்டின் துறைமுகத்திலிருந்து ஓட்ரியாக்கில் உள்ள ரிடிஸ்டிவரை அந்த இரும்புத்திரை ஐரோப்பாவில் தென்வடலாகப் போடப்பட்டது.

### 7.1.6. கெடுபிடிப் போர்க்கால நிகழ்ச்சிகள்

கெடுபிடிப் போர்காலத்தில் இரு முகாம்களிடையே பகையையும் போட்டியையும் அதிகரித்து பதட்ட நிலையை உண்டு பண்ணும் நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன.

**ட்ருமன் கொள்கை**

கிழக்குக ஐரோப்பாவில் எஞ்சி நின்ற கிரிஸ் நாட்டிலிலும் கம்யூனிஸ்டுகள் ஊடுருவி அரசைக் கவிழ்க்க குழப்பம் விளைவித்தனர். அதுபோல் ரஷ்யாவின் தெற்கில் உள்ள துருக்கியிலும் ரஷியா ஊடுருவல் ஏற்பட்டது. இந்த இருநாடுகளிலும் உள்ள அரசுகளில் கம்யூனிஸ்டுகளின் குழப்பங்களை அடக்க இயலவில்லை. அங்கும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படும் சூழ்நிலை தோன்றியது. இவ்வாறு அக்கோட்பாடு விரைவாகப் பரவி, பல்வேறு நாடுகளும் சிவப்புமயமாகி இரும்புத் திரைக்குள் இழுக்கக் கண்டு அமெரிக்கா அதிர்ச்சியுற்றது கம்யூனிஸம் பரவாது தடுப்பது சுதந்திர நாடுகளின் தலைவன் என்ற முறையில், தனது தார்மீகக் கடமை என்றும் கருதியது. எனவே ("கம்யூனிஸம் பரவாமல் தடுப்பதை" Containment of Communism) தன் புனிதப் பொறுப்பாகக் கொண்டது. உலகில்

கம்யூனிஸத்திற்கு எதிராகப் "போலீஸ் பணி" புரியவும் உறுதி பூண்டது. (இதுவே கெடுபிடிப்போர் காலத்தில் அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படையானது) அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ட்ருமன் அதற்கு ஒரு கொள்கை வடிவம் கொடுத்தார் அதுவே அவர் பெயரால் ட்ருமன் கொள்கை எனப்பட்டது. அதன்படி உள்நாட்டுக் குழப்பங்களாலோ, வெளிநாட்டுத் தலையீடுகளோ தவிர்க்கும் ஒரு அரசுக்கு அமெரிக்கா உதவி அளிக்கத் தயார் எனக்கூறப்பட்டது.

இப்புதிய கொள்கையின்படி கிரீசிற்கும் துருக்கிக்கும் அமெரிக்காவில் பொருளாதார, படை உதவிகள் அளிக்கப்பட்டன. அதன் காரணமாக அந்நாடுகளில் குழப்பங்களும் அயல் நாட்டு ஊடுருவல்களும் ஒடுக்கப்பட்டன. அவை அந்த இரு நாடுகளையும் கம்யூனிசத்திற்கு இரையாகாதவாறு தடுத்து நிறுத்தின.

## மார்ஷல் திட்டம்

போருக்குப் பின் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ் இத்தாலி ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குப் பெறத் தொடங்கியது. 1947—ல் நடைபெற்ற தேர்தலில் அக்கட்சி பிரான்சில் தனிப்பெருங்கட்சியாக வெற்றி பெற்றது, இதற்குக் காரணம் பொருளாதாரம் சீர்கெட்டிருந்ததுதான். போர்ச் சீரமைப்புப் பணிகளுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் அந்நாடுகளில் பொருளாதாரம் சீர்கெட்டிருந்தது. தொழில் துறையில் அமைதி நிலவவில்லை. தொழிலாளர்கள் தொல்லைகள் காரணமாகக் கம்யூனிசக் கோட்பாடுகளால் கவரப்பட்டிருந்தனர். இந்நாடுகளில் கம்யூனிசம் பரவாமல் தடுப்பதற்கு பொருளாதாரத்தைச் சீரமைப்பதே சீரிய வழி என அமெரிக்கா உணர்ந்தது உடனே அந்நாடுகளுக்குப் பொருளாதார உதவி அளிக்க ஒரு திட்டத்தை வகுத்தது. இத்திட்டம் அமெரிக்க வெளி நாட்டமைச்சர் ஜார்ஜ் மார்ஷல் என்பவரால் வகுக்கப்பட்டதால் அவர் பெயராலே அத்திட்டம் வழங்கப்பட்டது.

அதன்படி கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்கள் போர்ச்சீரமைப்புப் பணிகளுக்கென ஐரோப்பாவில் கொட்டப்பட்டன ரஷியா மார்ஷல் திட்டத்தை எதிர்த்தது. இது டாலர் ஏகாதிபத்தியத்தை மறைமுகமாக ஐரோப்பாவில் திணித்துவிடும் என்று கூறியது. அதன் காரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இத்திட்டத்தைப் புறக்கணித்தன. அந்நாடுகளுக்கு ரஷ்யா நிதி உதவி வழங்கியது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே மார்ஷல் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அங்கு நிதிநிலை சீரடைந்து வாழ்க்கை உயர்ந்தது. அதனால் கம்யூனிசம் செல்வாக்கிழந்தது. இவ்வாறு கெடுபிடிப்போரில் பொருளாதாரமும் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது.

குறிப்புக்கான இடம்)

## ஜெர்மானியப் பிரச்சனை

போஸ்டாம் மாநாட்டு முடிவின்படி ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு வல்லரசின் படைக்கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டது. ஜெர்மனியில் நாஸிக் கருத்துக்களையும் நிறுவனங்களையும் ஒழித்து மக்களாட்சிக் கருத்துக்களையும் நிறுவனங்களையும் ஏற்படுத்தி சுதந்திரமான தேர்தல்கள் நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வல்லரசுகள் வெளியேறிவிட வேண்டும் என்று போட்ஸ்டாம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மேற்கு நாடுகளிடையே மையத்தில் அமைந்திருந்த ஜெர்மனி வல்லரசுகளின் வெளியேற்றத்திற்குப் பின் தங்கள் முகாமில் சேரவேண்டுமென்று இரு வல்லரசுகளும் விரும்பியதால் ஜெர்மன் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியமாயிற்று குறிப்பாக ரஷியா சுதந்திரத் தேர்தல்கள் நடத்துவதற்குப் பலமுட்டுக்கட்டைகள் போட்டது.

இந்நிலையில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஆகிய மேற்கு வல்லரசுகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று மண்டலங்களையும் ஒருங்கிணைத்து, ஜெர்மனி கூட்டாட்சிக் குடியரசு (German Federal Republic) என்ற பெயரில் சுதந்திர நாடாக்கிவிட்டு வெளியேறின. இதுவே மேற்கு ஜெர்மனி எனப்பட்டது பான் (BONN) அதன் தலைநகரமானது இங்கு ஒரு சில படைத்தளங்களில் மட்டும் மேற்கு நாடுகளின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன மற்றபடி அது சுய ஆட்சி பெற்ற நாடாக இயங்கத் தொடங்கியது. அங்கு உருவான அரசு மேற்கு நாடுகளுக்கு ஆதரவாக இயங்கியது.

உடனே இதற்குப் பதிலடியாக ரஷியா தன் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு ஜெர்மனியை ஜெர்மனிய ஜனநாயகக் குடியரசு (German Democratic Republic) என்ற சுதந்திர நாடாக்கியது பெர்லின் அதன் தலைநகரானது. நாளடைவில் மேற்கு ஜெர்மனி மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார பாதுகாப்பு நிறுவனங்களோடு இணைந்து செயல்பட்டது. நேட்டோவிலும் உறுப்பினரானது அது போல கிழக்கு ஜெர்மனி வார்சா ஒப்பந்தத்தில் இணைந்து பிற கம்யூனிஸ்ட் நாடுகளோடு பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்தி ரஷ்யத் தலைமையின் கீழ் இயங்கியது. இவ்வாறு கெடுபிடிப்போர்ச் சூழ்நிலை காரணமாக ஜெர்மனி நிரந்தரமாக இரு நாடுகளாக பிரிக்கப்பட்டது.

## பெர்லின் சிக்கல்

பெர்லின் நகர் ரஷிய மண்டலமான கிழக்கு ஜெர்மனியுள் அமைந்திருந்த போதிலும் அந்நகரின் மேற்குப்பகுதி மேற்கு வல்லரசுகளுக்கு

அமைக்கப்பட்டிருந்தது. ஜெர்மனி இரண்டாகப் பிளவுபட்ட பின்பும் மேற்குப் பெர்லின் மேற்கு ஜெர்மனிக்குச் சொந்தமான பகுதியாகவே கருதப்பட்டது. அந்நகர் மேற்கு ஜெர்மனியைவிட்டு தனித்து கிழக்கு ஜெர்மனிக்குள் அமைந்திருந்ததால் மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்லினுக்கும் இடையிலான போக்குவரவுத் தொடர்புகள் எல்லாம் கிழக்கு ஜெர்மனி வழியாகவே அமைந்திருந்தன.

தன் ஆதிக்க மண்டலத்தினுள் மேற்கு நாடுகளின் ஆதிக்க மையம் (மேற்கு பெர்லின்) அமைந்திருப்பதை ரஷியா விரும்பவில்லை பல நிர்பந்தங்களை உண்டு பண்ணி அங்கிருந்து வல்லரசுகளை வெளியேற்ற ரஷியா திட்டமிட்டது. 1948இல் மேற்கு நாடுகள் தங்கள் புதிய நாணயச் சீர்திருத்தத்தை மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இடையிலான நீர், நில மார்க்கங்களை அடைத்து விட்டது. இதனால் அங்கு வாழ்ந்த மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்க வழியில்லாது போயிற்று. சகல தொடர்புகளிலிருந்தும் துண்டிக்கப்பட்ட மேற்கு பெர்லினுக்கு ஆகாயவழி வழியாக மட்டும் தொடர்பு கொள்ள முடிந்தது. அமெரிக்கா தனது விமானபலத்தைப் பயன்படுத்தி மேற்கு பெர்லினில் வாழும் மக்களுக்கு அனைத்துப் பொருட்களையும் அனுப்பியது. 1948—மே மாதம் தொடங்கிய பெர்லின் முற்றுகை 1949—மே வரை நீடித்தது. மேற்கு நாடுகள் அதனை உறுதியுடன் சமாளித்ததால் ரஷியா விட்டுக் கொடுத்தது. முற்றுகைத் தளர்த்தப்பட்டது. இந்த ஓராண்டு காலமும் பெர்லின் நகரில் அருகருகே இரு வல்லரசுகளும் பல தற்காப்பு படை நடவடிக்கைகளை எடுத்ததால் பதட்டநிலை நீடித்தது.

அதன்பின், ரஷியா மேலும் இரண்டு தடைவ பெர்லின் நகரிலிருந்து மேற்கு வல்லரசுகளை வெளியேற்ற நிர்ப்பந்தங்களை மேற்கொண்டது. 1957—லிலும் 1961—லிலும் பெர்லின் நெருக்கடி ஏற்பட்டது அப்போதும் மேற்கு வல்லரசுகள் உறுதியுடன் நின்றதால் ரஷியா விட்டுக் கொடுக்க நேர்ந்தது.

### நேட்டோ பாதுகாப்பு ஒப்பந்தம்

பெர்லின் நெருக்கடி கண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் ரஷியாவிற்கு எதிராகத் தங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த முயன்றன. அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து ரஷியப் படைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய திட்டமிட்டன. அதன் விளைவே (North Atlantic Treaty Organisation : NATO) இதில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜீயம், நெதர்லாந்து லக்சம்பர்க், நார்வே, டென்மார்க், இத்தாலி, ஐஸ்லாந்து, கனடா, போர்ச்சுக்கல் ஆகிய 12 நாடுகள் சேர்ந்திருந்தன. இதன் தலைமையகம் பாரிசில் நிறுவப்பட்டது. உறுப்பு நாடுகளின் கூட்டுப்படைகள் உருவாக்கப்பட்டன. இந்நாடுகளுள்

(குறிப்புக்கான இடம்)

ஏதாவது ஒரு நாட்டின் மீதான தாக்குதல் அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படவேண்டும் என்பது அவ்வொப்பந்தத்தின் முக்கியமான அம்சமாகும். 1952இல் இதில் கிரீசும், துருக்கியும் சேர்ந்தன 1955இல் மேற்கு ஜெர்மன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### வார்சா ஒப்பந்தம்

நேட்டோவிற்குப் பதிலடியாக ரஷியா வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது இதில் ரஷியாவும் பிற கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் (யூகோஸ்லாவியா நீங்கலாக) இணைந்திருந்தன.

இவ்வாறு ஐரோப்பா மீண்டும் இரு ராணுவ முகாம்களாகப் பிளவுபட்டது, அதனால் பதட்டநிலை மேலும் அதிகரித்தது.

### பணப்பெருக்கம்

கெடுபிடிப்போர்க் காலத்தில் பதட்டநிலை அதிகரித்ததற்குப் படைப் பெருக்கம் முக்கிய காரணமாகும். பயங்கர அழிவைத் தரும் கொடிய ஆயுதங்களை இரு வல்லரசுகளும் செய்து குவிக்கத் தொடங்கின அணுகுண்டை முதலில் தயாரித்த நாடு அமெரிக்காவாகும். 1949 வரை அந்நாடு அதில் முழு உரிமை பெற்றிருந்தது. அவ்வாண்டில் ரஷியா அணுக் குண்டு ரகசியத்தை கண்டறிந்தது. அதனைத் தயாரிக்கத் தொடங்கியது. நாளடைவில் அணுகுண்டை விடக் கொடிய அழிவை உண்டாக்க வல்ல நீர்வாயுக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளும், அணுகுண்டு ஏவுகணைகளைக் கொண்ட நீர் மூழ்கிக் கப்பல்களும் கண்டு பிடிக்கப்பட்டன. பின் இரு வல்லரசுகளும் உலகில் பல்வேறு பகுதிகளில் படைத்தளங்களை அமைத்தன. நட்பு நாடுகளுக்கு படை உதவி அளித்தன. இந்தப்படைப் பெருக்கமும் படை நடமாட்டமும் பதட்ட நிலையை அதிகரித்தன.

## 7.1.7. தூரக்கிழக்கில் கெடுபிடிப்போர்

கெடுபிடிப்போர் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியிலோ கண்டத்திலோ நடைபெறவில்லை. அது உலகளாவிய போராக இருந்தது. ஏனென்றால் உலகின் எந்த மூலையில் ஒரு சிக்கல் தோன்றினாலும் வல்லரசுகள் அதில் தலையிட்டு தங்களுக்கு ஆதரவான கட்சி வெற்றி பெற உதவின.

## 1. சீன உள்நாட்டுப்போர் (1947—49)

சீனாவில் சியாங்கே ஷேக் தலைமையிலான கோமிண்டாங் கட்சியினருக்கும் (தேசிய சீனா) மாசேங் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் உள் நாட்டுப் போர் ஏற்பட்டது. அமெரிக்கா சியாங்கேவிற்கு உதவிய போது ரஷியா மாசேதுங்கிற்கு உதவியது. இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்று, 1949 அக்டோபர் முதல் தேதியில் சீன் மக்கள் குடியரசை நிறுவியது. சீனப்பிரச்சனை இத்துடன் தீர்ந்தபாடில்லை. கெடுபிடிப்போர் சூழ்நிலை காரணமாக அது தொடர்ந்து நீடித்தது. தோல்வியுற்ற சியாங்கே பார்மோசாத் தீவிற்குப் பின்வாங்கி அங்கு தமது தேசிய சீன அரசை நிறுவினார். தமது அரசுதான் சீனா முழுமைக்குமான உண்மையான அதிகாரப்பூர்வமான அரசு என்று கூறினார். அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் சியாங்கின் அரசைத்தான் தொடர்ந்து சீன அரசாக அங்கீகரித்தன. ஐ.நா. சபையிலும் சீனாவிற்கு உரிய இடத்தில் தேசிய சீனாவே தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக் கொண்டது சீனா முழுவதையும் உண்மையில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த கம்யூனிஸ்ட் அரசுக்கு அங்கீகாரம் அளிக்கமறுத்தது. இவ்வாறு "இரு சீனாக்கள்" தோன்றின. சுமார் இருபதாண்டு காலத்திற்கு கம்யூனிஸ்ட் சீனாவிற்கு உலக அரசியலில் உரிய இடம் கிடைக்காதவாறு பார்த்துக் கொண்டிருப்பது அமெரிக்காவின் அதிக முக்கிய கொள்கையாயிற்று. இதனை ரஷியா கடுமையாக எதிர்த்தது. தேசிய சீனப்பிரதிநிதி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமர்ந்திருக்கும் வரை கூட்டத்தில் கலந்து கொள்ளமாட்டேன் எனப் புறக்கணித்தது.

### கொரியச் சிக்கல்

இரண்டாம் உலகப்போருக்குப்பின் கொரியா ஜப்பானிய மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வல்லரசுகளின் படைக்கட்டுப்பாட்டின் கீழ் தற்காலிகமாக வைக்கப்பட்டது. 38வது அட்சரேகைக்கு வடக்கில் உள்ள பகுதியில் ரஷிய ஆதிக்கமும், தெற்கில் உள்ள பகுதியில் அமெரிக்க ஆதிக்கமும் ஏற்பட்டது. கெடுபிடிப்போர் சூழ்நிலை காரணமாக அங்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு கொரியா முழுமைக்குமான சுதந்திர அரசை நிறுவ இயலாது போயிற்று. விரைவில் அமெரிக்கா தென்கொரியாவில் ஒரு சுதந்திர அரசை நிறுவியது. உடனே ரஷியாவும் வடகொரியாவும் ஒரு கம்யூனிஸ்ட் அரசை நிறுவியது. இவ்வாறு இரண்டாகப் பிளவுபட்டது.

இந்நிலையில் 1950 ஜுனில் வடகொரியா மீது படையெடுத்தது. இப்பிரச்சனை ஐ.நா. சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது ரஷியா ஐ.நா. பாதுகாப்புக் குழுக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தபடியால்,

(குறிப்புக்கான இடம்)

வடகொரியா ஆக்கிரமிப்பை அகற்ற ஐ.நா. படையனுப்ப ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது முதன் முறையாக ஐ.நா. கொள்கை முறைப்படி படையனுப்பி ஆக்கிரமிப்பை அகற்ற முற்பட்டது ஐ.நா. படையமைப்பிற்கு மேற்கத்திய நாடுகள் பல படை அனுப்பின. அமெரிக்கத் தளபதி மக்ஆர்தர் ஐ.நா. படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஐ.நா. படைகள் பெரும் சிரமத்துடன் வடகொரியாவைத் தோற்கடித்தது. 38—வது அட்சரேகைக்கு வடக்கில் பின்வாங்குமாறு செய்தன. தொடர்ந்து வட கொரியாவினுள்ளும் நுழைந்து போர் புரிந்தன. உடனே சீனா வடகொரியாவிற்குப் படைக்கலன்களையும் படை வீரர்களையும் கொடுத்துதவியது. அதனால் ஐ.நா. படை முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. தளபதி மக்ஆர்தர் போரை விரைவில் வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்றால் சீனாவினுள் புகுந்து தாக்குதல் தொடக்க வேண்டும் என்று கருதினார். அவ்விதம் செய்தால் அது உலகப் போராக மாறிவிடும் என அஞ்சப்பட்டது. உடனே அமெரிக்க அதிபர் ட்ருமன் தளபதி மக்ஆர்தரை பதவி நீக்கம் செய்தார்.

இதற்கிடையில் ஐ.நா. பொதுச் சபையில் கொரியப் போர் நிறுத்தத்திற்கான இந்தியா கொண்டுவந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் போர் நிறுத்தக் கோட்பாட்டைக் கண்காணிக்க இந்தியப் படைகள் அனுப்பப்பட்டன. கொரியப்போர் நின்றது. ஆனால் கொரியப் பிரச்சனை தீரவில்லை. இன்னமும் இரு கொரியாக்கள் நீடிக்கின்றன.

### 7.1.8. தென் கிழக்காசியாவில் மற்றும் தூரக்கிழக்கில் கெடுபிடிப்போர்

#### 1. வியட்நாம் போர்

தென்கிழக்காசியாவில் உள்ள இந்தோ—சீனா கெடுபிடி போர்க்களமாக மாறியது. உலகப் போருக்குப்பின் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றபோது தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். அந்த தேசிய விடுதலை வீரர்களுக்கு ஹோசி—மின் என்ற கம்யூனிஸ்ட் தலைவர் தலைமை வகித்தார். பிரெஞ்சுக்காரர்களால் தேசியவாதிகளை முறியடிக்க இயலவில்லை. அதன் காரணமாக இந்தோ சீனப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண 1954இல் ஜெனிவாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் ரஷியா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய வல்லரசுகளும் பிறநாடுகளும் கலந்து கொண்டன. அம்மாநாட்டில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

(அ) இந்தோசீனாவிலிருந்து பிரான்ஸ் வெளியேறி அப்பகுதிக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும்.

(ஆ) அங்கு லாவோஸ் வியட்நாம், கம்போடியா என்ற மூன்று சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

(இ) இதில் லாவோஸ் கம்போடியா ஆகிய இரு நாடுகளும் ஒரு நடுநிலை நாடுகளாகக் கருதப்பட வேண்டும்.

(ஈ) வியட்நாம் 17வது அட்சரேகையை எல்லையாகக் கொண்டு இரு பகுதிகளாகத் தற்காலிகமாகப் பிரிக்கப்பட வேண்டும். வட வியட்நாமில் ஹோசியின் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசும் தென் வியட்நாமில் ப்வோடாய் என்பார் தலைமையில் ஒரு சுதந்திர அரசும் நிறுவப்பட வேண்டும். இருவருடங்களுக்குப்பின் அங்கு சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்பட்டு வியட்நாம் முழுமைக்கான அரசு உருவாக்கப்பட வேண்டும்.

இதில் கடைசியாக குறிப்பிட்ட நிபந்தனை நிறைவேற்றப்பட முடியாமல் போய்விட்டது. வியட்நாம் இருநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கம்யூனிஸ்ட்டுகள் வியட்நாமை வன்முறை மூலம் ஒன்றுபடுத்த விரும்பி தென்வியட்நாமில் "வியட்காங்" என்ற இயக்கத்தை உருவாக்கினர். அவ்வியக்கத்தினர் தென்வியட்நாம் அரசிற்கெதிராக உள்நாட்டுப்போரில் ஈடுபட்டனர் இதற்கு வடவியட்நாம் கம்யூனிஸ்டுகள் பேருதவி அளித்தனர். இப்போரில் தென்வியட்நாம் பல தோல்விகளைத் தழுவியது.

இந்நிலையில் உலகில் கம்யூனிசம் பரவுவதை தடுப்பதற்காக அமெரிக்கா தென்வியட்நாம் அரசிற்கு (தின்—தியம்) உதவி புரிய விரைந்தது. தொடக்கத்தில் வெறும் ஆலோசகர்களையும் படைக்கருவிகளையும் கொடுத்துதவிய அமெரிக்கா நாளடைவில் தனது படைவீரர்களையே அனுப்பத் தொடங்கியது. 1969இல் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டனர் அப்படியும் வியட்காங்குகளின் முன்னேற்றத்தைத் தடுக்க இயலாத வட வியட்நாம் மீது விமானங்கள் மூலம் குண்டுகள் வீசியது. உண்மையில் வியட்நாம் போர் கம்யூனிஸ்ட், அமெரிக்கா மோதலாகவே இருந்தது. தேசிய உணர்வால் உந்தப்பட்ட விடுதலை வீரர்களை ஏகாதிபத்திய கூலிப்படைகள் வென்றதாகச் சரித்திரமில்லை வியட்நாமில் சர்வசக்தி வாய்ந்த வல்லரசான அமெரிக்கா இரண்டு மில்லியன் மக்களைக் கொண்டிருந்த வியட்காங்குகளிடம் தோல்வியுற நேர்ந்தது. அந்த தோல்வியை ஒப்புக்கொண்டு கௌரவமாக அப்போர்த் தொல்லையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அமெரிக்கா விரும்பியது. 1969—ல் பாரிசில் அமைதிக்காக பேச்சுவார்த்தை தொடங்கியது. 1973—இல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது அமெரிக்கா பெரும் இழுக்குடன்

தன்படைகளைத் திரும்ப வரவழைத்துக் கொண்டது. 1975—இல் கம்யூனிஸ்டுகள் வியட்நாம் முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் வெற்றி பெற்றனர்.

## 2. தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம்

## (South East Asian Treaty Organization, SEATO)

தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்தை நிறுத்தி சுதந்திர நாடுகளுக்குப் படை உதவி அளிக்கும் நோக்குடன் தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதில் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று தென்கிழக்கு சுய நாடுகளே சேர்ந்தன. இந்தியா, பர்மா, இந்தோனேஷியா போன்ற பிற தென்கிழக்கு ஆசிய நாடுகள் இதில் சேரவில்லை. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் நேட்டோ பாணியில் அமைந்த இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் அதனைப்போல வலுவாகவும் உறுதியாகவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. இந்திய உபகண்டத்தில் கெடுபிடிப்போர்

இந்த ஒப்பந்தம் மூலம் எந்த அளவிற்கு கம்யூனிசம் பரவுவது தடுக்கப்பட்டது என்பது சர்ச்சைக்குரியது. ஆனால் இவ்வொப்பந்தத்தில் பாகிஸ்தான் சேர்ந்ததன் மூலம் கெடுபிடிப்போர் இந்திய உபகண்டத்தினுள் கொண்டு வரப்பட்டது. பாகிஸ்தான் அவ்வொப்பந்தப்படி பெற்ற படை உதவிகலைக் கொண்டு கம்யூனிசத்தை எதிர்க்கவில்லை மாறாக இந்தியாவிற்கெதிராக 1962—இல் போர்தொடுத்தது முடிந்துபோன காஷ்மீர் பிரச்சனைக்கு உயிரூட்டி அதனை ஐ.நா. சபையில் கிளப்பியது. தங்கள் ஒப்பந்தக் கூட்டாளியான பாகிஸ்தானை அமெரிக்கா அங்கு ஆதரித்தது. இதனால் இந்திய—பாகிஸ்தான் உறவு சீர்கெட்டது.

1971—இல் பங்களாதேஷ் பிரச்சனை காரணமாக மூண்ட இந்திய பாகிஸ்தான் போரின்போது அமெரிக்கா தனது ராணுவ ஒப்பந்த நாட்டிற்கு உதவிபுரிய விரைந்தது. இச்சமயத்தில் ரஷியா இந்தியாவிற்கு ஆதரவளித்தது.

### மத்திய கிழக்கில் கெடுபிடிப்போர்

### 1) மத்தியகிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் அல்லது பாக்தாகத் ஒப்பந்தம்

எண்ணெய் வளமிக்க மத்திய கிழக்கிலிருந்து இரண்டாம் உலகப்போருக்குப் பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் வெளியேறியபின்

அங்கு ஏற்பட்ட ஆதிக்க வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா அங்கு நுழைந்தது. 1955—இல் மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதில் ஈரான் பாகிஸ்தான், பிரிட்டன் ஆகிய நாடுகள் சேர்ந்திருந்தன. இது பாக்தாத் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்பட்டது. 1959இல் ஈராக் அதிலிருந்து விலகி விட்டது. எனவே இது தொடக்க முதலே வலுவற்றிருந்தது. அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர் 1957—இல் மத்திய கிழக்கிற்கென ஒரு கொள்கையை வெளியிட்டார். மத்திய கிழக்கு நாடுகளுக்கு கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பினால் ஆபத்து ஏற்படும் போது அமெரிக்கா, படை மற்றும் பொருளாதார உதவி அளிக்கத் தயார் என்று அறிவித்தார்.

## 2) சூயஸ்கால்வாய் தகராறு

1956—இல் அமெரிக்காவும் பிரிட்டனும் எகிப்தில் அஸ்வான் அணைகட்டுவதற்கு நிதிஉதவி அளிக்க மறுத்தபோது நாஸர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். அதனால் பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இஸ்ரேல் உதவியுடன் எகிப்து மீது படையெடுத்த போது ரஷியா அந்நாட்டின் உதவிக்கு விரைந்தது. அதனால் வல்லரசுகள் அங்கு பின்வாங்க நேர்ந்தது.

## 3) அரபு — இஸ்ரேல் போர்கள்

மத்தியகிழக்கில் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சிக்கல் அரபு இஸ்ரேல் தகராறுகளாகும். கெடுபிடிப்போர் அங்கும் சிக்கலை அதிகரித்தது. இஸ்ரேல்நாட்டிற்கு அமெரிக்கா உதவியளிக்கும்போது அரபு நாடுகளுக்கு ரஷியா ஆயுத உதவி அளிக்கிறது: அதனால் அங்கு அத்தகராறுக்கு நிரந்தரத் தீர்வு காண இயலாமல் இருக்கிறது.

## மீண்டும் ஐரோப்பாவில் கெடுபிடிப்போர்

ஹங்கேரிச் சிக்கல்: வார்சா ஒப்பந்தத்தில் இணைந்திருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடான ஹங்கேரியில் 1956 இல் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அந்நாட்டுப் பிரதமரான இம்ரேநாகி கம்யூனிஸ்ட் கொள்கைகள் தன்நாட்டு நலன்களுக்கு, உகந்ததாக இல்லை என்று எண்ணினார். அதனால் அரசியல், பொருளியல் கொள்கைகளைச் சற்றுத் தளர்த்தி, ரஷ்யப் பிடியிலிருந்து விடுபட்டு மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ள முயன்றார் ஹங்கேரியின் இச்செய்கை இரும்புத்திரையைக் கிழித்துவிடும் என்றஞ்சிய ரஷ்யா அம்முயற்சியை முளையிலே கிள்ளி எறிய முனைந்தது. வார்சா ஒப்பந்தப்படி அங்கு நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யப் படைகள் இம்ரேநாகி அரசிற்கு எதிராகக் கிளம்பியது. அதன் விளைவாக இம்ரே நாகி பதவி

விலக்கப்பட்டு காடர் என்பார் பிரதமராக்கப்பட்டார். நாகி தேசத்துரோகி எனச் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனை எதிர்த்த ஹங்கேரி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ரஷிய டாங்குகள் எதிர்ப்பு அனைத்தையும் நசுக்கிவிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரி தேசியவாதிகள் மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக ஓடி வந்தனர். அமெரிக்காவும் மேற்குநாடுகளும் ஹங்கேரியில் ரஷ்யப் படைத்தலையீட்டை எதிர்த்து ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தன. ரஷ்யா ரத்து அதிகாரம் அத்தீர்மானத்தை முறியடித்தது.

அதுபோல் 1969—இல் செக்கோஸ்லாகியாவில் பிரதமர் அலெக்சாண்டர் டுப்செக் இதுபோல் கம்யூனிசக் கொள்கையைத் தளர்த்த முயன்ற போதும் ரஷ்யப் படைகள் தலையிட்டு தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

## A—2 நிகழ்ச்சி

1958—இல் ரஷ்யப் பிரதமரான குருஷேவ் சமாதான சகவாழ்வுக்கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார். 1959—இல் அவர் அமெரிக்காவிற்கு வருகை புரிந்து ஐசன்ஹோவரைச் சந்தித்துப் பேசினார். அதன் பயனாக சர்வதேச சிக்கல்களுக்கு தீர்வுகாணும் பொருட்டு 1960—இல் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு ஒன்றை கூட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று விட்டது. 1960—மே மாதம் அமெரிக்க யு—2 வேவுவிமானம் ரஷ்யா மீது பறந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது அதன் விமானி பிரான்சிஸ் பவர்ஸ் என்பவர் உயிருடன் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து அமெரிக்கா ரஷ்யாவின் படைநிலைகளை எவ்வாறு ஒற்றறிருந்து (spy) வருகிறது என்பது பற்றிய விரிவான தகவல் பெறப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பின் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு தொடங்கியபோது குருஷேவ் யு—2 நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டு அதற்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவார் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக்கோரினார் அதற்கு அவர் இணங்காததால் மாநாடு பன்னாட்டுச் சிக்கல்கள் எதனையும் பரிசீலிக்காமலே பயனின்றிக் கலைந்தது.

**ஆப்பிரிக்காவில் கெடுபிடிப்போர்:** வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிக்கு இருண்ட கண்டமும் தப்பவில்லை 1960—இல் பெல்ஜியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற காங்கோவில் வல்லரசுகள்

தலையிட்டன அந்நாட்டில் உள்நாட்டு குழப்பம் ஏற்பட்டது. உடனே தனது நலன்களைப் பாதுகாப்பதற்கென்று பெல்ஜியம் தனது படைகளை அனுப்பியது. இதன் ஆதரவாக காங்கோ பிரதமரான லுமும்பா தம் நாட்டிலுள்ள அந்நியப்படைகளை வெளியேற்றக்கோரி ஐ.நா. சபையில் புகார் செய்தார். அக்கோரிக்கையை ரஷ்யா தீவிரமாக ஆதரித்தது. இதற்கிடையில் காங்கோவில் அரசியலில் குழப்பம் அதிகரித்தது. அதிபர் கசவபு லுமும்பாவை பதவியிலிருந்து நீக்கியிருப்பதாக அறிவித்தார். அது செல்லாது என்று கோரி லுமும்பா தொடர்ந்துதான் பிரதமராயிருப்பதாகக் கூறினார். அவருக்கு உதவி செய்ய ரஷ்யா விரைந்தது இந்நிலையில் தளபதி மொபடு என்பார் ஆட்சியைக் கைப்பற்றினார். அவருக்கு மேற்கு வல்லரசுகள் ஆதரவு இருப்பதாகக் கருதப்பட்டது. இவ்வாறு காங்கோ உள்நாட்டுப் போரில் ஆளுக்கொருகட்சியை ஆதரித்து வல்லரசுகள் தலையிடத் தொடங்கின அது காங்கோ குழப்பத்தை அதிகரித்தது. அக்குழப்பத்தில் லுமும்பா கொல்லப்பட்டார். இறுதியில் அங்கு அமைதியை நிலைநாட்ட ஐ.நா. படை அனுப்பப்பட்டது.

## லத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போர்

நீண்ட காலமாகவே லத்தீன் அமெரிக்கா, அமெரிக்கச் செல்வாக்கு மண்டலத்தினுள் இருந்தது. 1917—ல் அமெரிக்க நாடுகள் ரியோடி ஜெனிரோ என்ற பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டன. இது ரியோ ஒப்பந்தமாகும். 1943இல் பொகாடோ நகரில் நடைபெற்ற 9—வது அமெரிக்க நாடுகளின் மாநாடு, "அமெரிக்க நாடுகளின் கழகத்தை" (Organization of American States) ஏற்படுத்தியது. அக்கண்டத்தில் கம்யூனிசம் பரவாது தடுப்பதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருந்தது. 1954—ல் காரகாஸ் நகரில் கூடிய அமெரிக்க நாடுகளின் கழகம் தங்கள் பகுதியில் கம்யூனிசம் ஏற்படாது தடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தது. எனவே கெடுபிடிப்போர் காலத்தில் அமெரிக்காவின் கம்யூனிச எதிர்ப்புப் போராட்டத்திற்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் முழு ஒத்துழைப்பு அளித்தன.

அவ்வப்போது கம்யூனிசக் கருத்துக்கள் அரசியலில் தலைதூக்கியபோது அமெரிக்கா முன்னெச்சரிக்கையுடன் அதனை முளையிலேயே கிள்ளியெறிய முற்பட்டது. 1945—இல் குவாடிமாலாவின் கம்யூனிசத்திற்கு ஆதரவான அரசு நிறுவப்பட்ட போது அதனைக் கவிழ்க்க அமெரிக்கா திரைமறைவு சதி வேலைகளைச் செய்தது. இறுதியில் அவ்வரசு கவிழ்க்கப்பட்டது. 1959—இல் கியூபாவில் ஏற்பட்ட புரட்சியில் பதவியைப் பிடித்த பிடல் காஸ்ட்ரோ கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியபோது அவரது அரசைக் கவிழ்க்க அமெரிக்கா

முயன்றது. 1965—இல் சொமினிகன் குடியரசில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அமெரிக்கா படையனுப்பியது. 1970—இல் சிலிநாட்டின் அதிபரான சால்வடார் அல்லாண்டே கம்யூனிஸ்ட் கோட்பாடுகளைக் கடைபிடித்தார். அவருக்கு விரோதமாக அமெரிக்க ஒற்றர் படைப்பிரிவு சதிவேலைகளை நடத்தியது. அதன்விளைவாக 1974—இல் அவர் கொல்லப்பட்டார். கியூபா தவிர பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆதரவு அரசுகள் நிறுவப்படுவதை அமெரிக்கா வெற்றி கரமாக தடுத்து வருகிறது. அண்மையில் 1983—ல் சின்னஞ் சிறு காபிரியன் தீவு நாடான கிரானடாவில் கம்யூனிச ஆதரவு அரசு நிறுவப்பட்ட போது அமெரிக்கா நாடுகளின் உதவியுடன் வன்முறையில் அவ்வரசை அகற்றியது குறிப்பிடத்தக்கது.

## கியூபா நெருக்கடி

1959—இல் கியூபா அதிபரான காஸ்ட்ரோ தம் நாட்டுப் பொருளாதார நிலையைச் சீரமைக்க கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். 1950—இல் முதலீடு நிறுவனங்களைத் தேசிய மயமாக்கினார். இதில் அமெரிக்க முதலாளிகள் பலர் பாதிக்கப்பட்டனர். அதனால் அமெரிக்கா கியூபா உறவு சீர்கேடடைந்தது. காஸ்ட்ரோவின் ஆட்சியை வன்முறையில் கவிழ்க்க அமெரிக்கா திரைமறைவு சதிவேலைகளைத் தொடங்கியது. அமெரிக்காவிற்கு தப்பியோடி வந்த கியூபானிய அகதிகளுக்கு படையுதவி அளித்தது. அமெரிக்க உதவியுடன் கியூபாவில் உள்நாட்டுப் போரை தொடங்கச் செய்த முயற்சி (பிக் வளைகுடா நிகழ்ச்சி 1964) தோல்வியில் முடிந்தது.

இந்நிகழ்ச்சி கியூபாவை ரஷ்யப் பாதுகாப்பில் புகலிடம் தேடுமாறு செய்தது. லத்தீன் அமெரிக்காவில் காலூன்ற பலகாலமாக முயன்ற ரஷ்யாவிற்கு இது ஒரு நல்லவாய்ப்பானது. அந்நாட்டிற்கு ஏராளமான படைக்கலன்களை அனுப்பியது. மேலும் ஏவுகணைத் தளங்களை ரஷ்யா ரகசியமாக நிறுவி வந்தது. அமெரிக்கா இதனை அறிந்ததும் அதிர்ச்சியுற்று தன் நாட்டிற்கு வெகு அருகில் ரஷ்யப்படைத்தளங்கள் நிறுவப்பட அனுமதிப்பது தனது பாதுகாப்பிற்கு ஆபத்து எனக் கருதியது. அப்போது அதிபராக இருந்த ஜான்கென்னடி எவ்வகையிலும் இத்தளங்கலை நிறுவமுடியாதபடி செய்ய உறுதி பூண்டார். எனவே ஏவுகணைக் கருவிகளை கொண்டு வரும் ரஷ்யக் கப்பல்களைத் தடுப்பதற்கு கியூபா மீது கடல் முற்றுகை விதித்து ஆணை பிறப்பித்தார். இதன்படி கியூபாவிற்கு வரும் அனைத்துக் கப்பல்களும் சோதிக்கப்படும் அதில் ஏவுகணைக் கருவிகள் இருந்தால் திருப்பி அனுப்பப்படும், இல்லையேல் மூழ்கடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. 'கடல்

வெளிகளில் சுதந்திரம் வேண்டும்' என்று கூறிய உட்ரோ வில்சனின் அமெரிக்கா இப்போது அதனை மீறியது. தங்களது பாதுகாப்பிற்கு ஆபத்து என்ற நிலை வந்ததும் சர்வதேச நியதிகளை வல்லரசுகள் எவ்வாறு மீறுகின்றன என்பதற்கு இது தகுந்ததோர் எடுத்துக்காட்டு அமெரிக்காவின் கடல் முற்றுகை ஆணை ரஷ்யாவிற்கு நேரடி அறைகூவலாக இருந்தது. எளிதில் அந்த சமயத்தில் ஒன்பது ரஷ்யக் கப்பல்கள் ஏவுகணைக் கருவிகளை கியூபாவிற்கு சுமந்து வந்து கொண்டிருந்தன. கெடுபிடிப்போரில் இப்போது இரு வல்லரசுகளும் நேரடியாக மோதிக் கொள்ளும் சூழ்நிலை தோன்றியது. இது அப்போரின் உச்சகட்டமாகக் கருதப்படுகிறது. எந்த நிமிடத்திலும் வல்லரசுகளிடம் மோதல் ஏற்பட்டு அணு ஆயுதப்போர் மூண்டுவிடும் அபாயம் தோன்றியது.

ஆனால் நல்ல வேளையாக அமெரிக்க உறுதியினைக் கண்ட ரஷ்யப் பிரதமர் குருஷேவ் சற்றுப் பின்வாங்கினார். அந்த ஒன்பது ரஷ்யக் கப்பல்களும் வேறிடங்களுக்குத் தானாகத் திரும்பிச் சென்றன. உலகம் நிம்மதிப் பெருமூச்சுவிட்டது. அதனைத் தொடர்ந்து கியூபாவை தாக்க மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் அங்குள்ள ஏவுகணைகளை அகற்றி விடுவதாக குருஷேவ் அறிவித்தார். அத்தகைய உறுதிமொழியை அமெரிக்கா அளித்ததும் ஏவுகணைத் தளங்களும் அகற்றப்பட்டன. கியூபா நெருக்கடி தீர்ந்தது. ஆனால் கியூபா, ரஷ்யா ஆதரவாளராகப் பன்னாட்டரசியலில் பங்கு பெறத் தொடங்கியது.

### 7.1.10 கெடுபிடிப்போரின் தணிவு

கியூபா நெருக்கடி தீர்ந்தபின் கெடுபிடிப்போரின் கடுமை தொடங்கியது. அதற்கு முதற்காரணம் ரஷ்யப் பிரதமர் குருஷேவின் "சமாதான சகவாழ்வுக் கொள்கையாகும். அவரது நல்லெண்ண பயணங்கள் இரும்புத்திரையை அகற்றி விட்டது என்றே கூறலாம். இரண்டாவதாக வல்லரசுகளின் படைக்கலன் பெருக்கமும் தயார் நிலையும் போரின் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தின.

கொடிய அணி ஆயுதங்கள் மக்கள் இனத்தையும் பண்பாட்டையும் அடியோடு அழித்துவிடும் என்ற அச்சம் வல்லரசுகளின் ஒரு மூலையில் இன்னமும் உயிருடனிருந்த மனிதாபிமான உணர்வுகளைச் சிந்தையில் தட்டியெழுப்பியது. இருதரப்பாருக்கும் முழுமையான அழிவினைத் தரவல்ல கொடிய போரினை தொடங்க இருவல்லரசுகளுமே தயங்கின. மூன்றாவதாக பதட்ட நிலையைத் தணிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் 1961—இல் மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் நேரடித் தொலைபேசித் தொடர்பு (Hot line) நிறுவப்பட்டது. நான்காவதாக,

(குறிப்புக்கான இடம்)

படைக்குறைப்பில் முதன்முறையாக ஒரு முன்னேற்றமான முடிவை ஒருமனதாக எடுத்தனர். 1963ல் அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் (Test Ban Treaty) கையெழுத்தானது. நான்காவதாக வல்லரசுகளின் முகாம்களுக்குள் பூசல்கள் ஏற்பட்டன. பிரான்சின் அதிபரான டிகால் பன்னாட்டுறவுகளில் கண்மூடித்தனமாக அமெரிக்காவைப் பின்பற்றுவதை வெறுத்தார். அத்துடன் அது ஐரோப்பிய விவகாரங்களில் அளவிற்குமீறி தலையிடுவதாக எண்ணினார். நேட்டோ இனித் தேவையில்லை என்றும் நம்பினார். அதன் காரணமாக 1966—இல் அவர் நேட்டோ படைப்பிரிவிலிருந்து பிரஞ்சு படைகளை விலக்கிக் கொண்டார். மறு ஆண்டில் நேட்டோவின் தலைமையகம் பாரிசிலிருந்து பிரஸ்ஸல்சுக்கு மாற்றப்பட்டது. அதுபோல் ரஷ்ய கம்யூனிச முகாமிலும் பிளவுகள் ஏற்பட்டன. மாசேதுங்கின் சீனா மாஸ்கோவின் தலைமையைப் புறக்கணித்தது. போல்ஸ் வீக் கொள்கைகளுக்கு புது விளக்கம் கொடுத்தது, ரஷ்யாவின் போக்கைக் கண்டித்தது. எல்லாவற்றிலும் மேலாக இரு நாடுகளுக்குமிடையில் எல்லைத் தகராறு ஏற்பட்டு மோதல் ஏற்படும் நிலை தோன்றியது. இந்த ரஷ்ய சீனப் பிளவு உலகக் கம்யூனிச இயக்கத்தையே இரண்டாகப் பிளந்துவிட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியா கூட ரஷ்ய தலைமையைப் புறக்கணிக்கத் துணிந்தது. ஐந்தாவதாக குருஷேவ் தொடங்கி வைத்த நல்லெண்ணப் பயணங்கள் தொடர்ந்து நடைபெற்றன. 1967இல் ரஷ்ய பிரதமர் கோசிஜின் அமெரிக்காவிற்கு வருகை புரிந்தார். மறுஆண்டில் ரஷ்யத்தலைவர் பிரஷ்னேவ் அமெரிக்கா வந்தார். இந்த நல்லெண்ணப் பயணங்கள் பகைமையைக் குறைத்துப் பரஸ்பரப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க வகை செய்தன. ஆறாவது படைக்குறைப்பு பற்றி வல்லரசுகளிடையே கருத்தொற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாக 1966இல் அணு ஆயுதப் பரவல்தடை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. 1972இல் பயங்கர அணு ஆயுதங்களின் உற்பத்தியைத் தடைசெய்யும் ஒப்பந்தம் (Strategic Arms Limitation Treaty I:SALT-I) கையெழுத்தானது.

1978—ல் இது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. (SALT-I) ஏழாவதாக ஐ.நா. சபை கெடுபிடிப்போரின் கடுமையைத் தணிப்பதில் பெரும்பங்கு பெற்றிருந்தது. ஐ.நா. சபையில் நடைபெற்ற விவாதங்கள் ஒருவர் கருத்தையும் நிலையையும் மற்றவர் புரிந்துகொள்ள வகை செய்தது. போர் நிறுத்த தீர்மானங்களை நிறைவேற்றி பிராந்தியப் போர்கள் பெரும் போராக மாறாதபடி பார்த்துக்கொண்டது வல்லரசுகளின் அத்து மீறிய செயல்களைத் துணிந்து கண்டித்தது இந்தக் கண்டனம் தார்மீக விளைவுகளை உண்டு பண்ணியது என்பதை மறுக்க முடியாது. 1956—இல் ரஷ்யா ஹங்கேரியில் தலையிட்டதையும் அதே ஆண்டில் பிரிட்டனும்,

(குறிப்புக்கான இடம்)

பிரான்சும் எகிப்தின் மீது தாக்குதல் தொடத்ததையும் ஐ.நா. சபைக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாக கூட்டுச்சேரா நாடுகளின் இயக்கத்தினர் வளர்ச்சி வல்லரசுகளின் இருதுருவ அரசியல் வேறுபாடுகளுக்கு எதிராக அமைந்தது. 1961—இல் 26 நாடுகளைக் கொண்ட அவ்வியக்கம் தற்போது 103 நாடுகளைக் கொண்ட வலியதொரு அணியாக வளர்ச்சி பெற்றுள்ளது. இது வல்லரசுகளின் ராணுவக் கூட்டுகளுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. ராணுவக் கூட்டுகளில் சேர்ந்த நாடுகள் கூட அதிலிருந்து விலகி கூட்டுகளின் முக்கியத்துவத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது.

**திறனாய்வு**

கெடுபிடிப்போர் நின்றுவிட்டதா என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் கெடுபிடிப்போரின் கடுமையும், அதனால் உண்டான பதட்ட நிலையும் வெகுவாகத் தணிந்து உள்ளன என்பதில் இருவிதக் கருத்துக்கள் இருக்க முடியாது. இரும்புத்திரை, மூங்கில் திரைகளெல்லாம் விலகி விட்டன. சமாதான சகவாழ்வுக் கோட்பாடு வலுப்பெற்று வருகிறது. சோவியத் யூனியன் வீழ்ச்சியுற்று மறைந்ததோடு பெருமளவு கெடுபிடிப்போரும் மறைந்து விட்டது.

வியட்னாமிலிருந்து அமெரிக்கா பின்வாங்கியதும், சோவியத் யூனியனின் குலைவும், போஸ்னியா தொடர்பான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதும், ஜெர்மானிய ஐக்கியமும், ஐரோப்பிய ஒற்றுமையும், தென் ஆப்பிரிக்க விடுதலையும் இன்றும் இதுபோன்ற பல 20—ஆம் நூற்றாண்டின் இறுதி நிகழ்ச்சிகள் கெடுபிடிப்போரை மிகவும் தளர்த்தியுள்ளன.

## 7.1.11. படைக்குறைப்பு

இன்றைய உலகில் நாடுகளிடையே காணப்படும் தலையாய பிரச்சனைகளுள் படைக்குறைப்பு சம்பந்தப்பட்டவைகள் மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. குறிப்பாக இரு உலகப் போர்களினால் ஏற்பட்ட சேதங்களும், அணு ஆயுதப்போர் ஒன்று தோன்றினால் அதனால் நேரவிருக்கும் அழிவுகளை பற்றிய அச்சங்களும், நாடுகளைப் படைக்குறைப்பு முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியிருக்கின்றன. போர்களை நாடுகள் பெரும்பாலும் தவிர்க்க விரும்பிய போதிலும், போர்கள் நாடுகளின் வரலாற்றில் தவிர்க்க இயலாத அம்சமாகவே காணப்பட்டு வந்துள்ளது. எனினும் இப்போர்களை குறைக்குமுகமாக நாடுகள் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் பல முயற்சிகளை மேற்கொண்டன. இத்தகைய முயற்சிகளுள் திஹேக் அகதிகள் மாநாடு (1899—1907), சர்வதேச சங்கம் (1919) மற்றும் ஐக்கிய நாடுகள் சபை (1945) ஆகியவற்றைக் குறிப்பாகக் கூறலாம். உலகில் பண்பாடு வளர வளர மனிதத் தன்மையும்

(குறிப்புக்கான இடம்)

அதிகரிக்கலாயிற்று. பின்பு இரு உலகப் போர்களில் ஏற்பட்ட சேதங்களைக் கண்ணுற்ற அந்நாளைய தலைவர்கள் மனித குலத்தை அழிவுகளினின்று காப்பதற்கென பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றில் ஒன்றே, இப்படைக்குறைப்பு ஆகும்.

இவ்வுலகில் குறிப்பிடத்தக்க வகையில் படைக்குறைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. 20—ஆம் நூற்றாண்டில் தான் என்றால் அது மிகையாகாது. அதுவும் அணு ஆயுதபோரின் அபாயங்கள் பெருகிவரும் இக்காலக் கட்டத்தில் படைக்குறைப்பின் அவசியம் மிகுந்து காணப்படுகிறது. இத்திசையில் நாடுகள் தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொண்டு வந்த பொழுதிலும் அதில் முழுவதும் வெற்றி அடைந்து விட்டதாகக் கருத முடியாது. இப்பிரச்சனையைச் சமாளிக்கத் தலைப்படுகையில் அவைகள் பல பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. இருப்பினும் படைக்குறைப்பு முயற்சிகளைக் கைவிடுவதற்கும் அவைகள் தயாராகவில்லை இத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்று விளங்கும் படைக்குறைப்பின் பொருள் மற்றும் அவசியம் பற்றியும், இதுகாறும் இம்முயற்சிகளில் நாடுகள் அடைந்துள்ள வெற்றி தோல்விகள் குறித்தும், இது சம்பந்தமாக நாடுகள் சந்திக்க வேண்டியுள்ள மற்றும் சந்தித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சனைகள் பற்றியும் ஈண்டுக் காண்போம்.

படைக்குறைப்பு என்றால் என்ன? படைக்குறைப்பு என்றால் ஒரு சில அல்லது எல்லாவிதமான ஆயுதங்களைக் குறைப்பது அல்லது முற்றிலும் அழிந்து விடுவது எனப் பொருள் கொள்ளலாம். குறிப்பாக வல்லரசுகள் தங்களின் படைகலத்தை ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் பெருக்கிக்கொள்வதில்லை என்று தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தங்களைக் குறிப்பதாகவும் இச்சொல் விளங்குகிறது. இத்தகைய ஒப்பந்தங்களில் எத்தகைய ஆயுதங்களை எந்த அளவிற்குக் குறைப்பது என்பது பற்றியும், எத்தகைய ஆயுதங்களை நாடுகள் அழிப்பது என்பது பற்றியும் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கும். மேலும் சிலவகையான ஆயுதங்களை ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கச் சம்மதிப்பதையும் இது குறிக்கும் சார்லஸ் ஸ்லீசர் என்பவர் கூறுகையில், “படைக் குறைப்பின் உடனடி இலக்கு என்னவென்றால் வல்லரசுகளிடையேவது படைபலத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அவைகள் வைத்துக் கொள்வதில்லை என்பதில் உடன்பாடு காண்பதே ஆகும்” என்று குறிப்பிட்டுள்ளார். வல்லரசுகளிடையே இத்தகைய உடன்பாடுகள் ஏற்படுமேயானால் மற்றொரு உலகப்போர் ஏற்படுவது தவிர்க்கப்படும் என்பது பலரின் கருத்தாகும்.

படைக்குறைப்பு என்பதும், ஆயுதக் கட்டுப்பாடு (Arms-control) என்பதும் வேறுபட்ட பொருளுடையவையாகும். ஆயுதக் கட்டுப்பாடு

(குறிப்புக்கான இடம்)

என்பது நாடுகள் தங்கள் படைபலத்தை பெருக்கிக் கொள்வதில் ஒரு வரையறையை தங்களிடையே ஏற்படுத்திக் கொள்வதாகும். படைக்குறைப்பு என்பது நாடுகள் தங்களிடையே ஒரு சில ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதை அல்லது அவைகளை அழித்து விடுவதைக் குறிக்கும், வருமுன் காப்பதாக ஆயுதக்கட்டுப்பாடு விளங்கும் வேளையில் படைக்குறைப்பு வந்தபின் காப்பதைக் குறிப்பாக இருக்கிறது. படைக்குறைப்பு முயற்சிகளில் அதிகம் வெற்றி அடைய இயலாமல் போவதால் நாடுகள் ஆயுதக் கட்டுப்பாட்டைக் கொணர விழைகின்றன. இத்தகைய முயற்சிகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் என்ன? இதற்கு நாம் பல காரணங்களைக் கூற முடியும். முதலாவதாக தங்களுடைய படைபலத்தைப் பெருக்கும் போட்டியில் ஈடுபடும்பொழுது அதற்கென ஏராளமான தொகை செலவிட வேண்டியுள்ளது படைப்பலப் போட்டிக்கு (Arms-race) முடிவென்பது இருக்காது. ஒருநாடு மற்றொரு நாட்டைவிட தன்னிடம் அதிக ஆயுதங்கள் இருக்க வேண்டும் என்று எண்ணும் பொழுது படைக்குவிப்பில் ஈடுபடுகிறது. இப்போட்டிக்கு எல்லை என்பது கிடையாததால் இதற்கென நாடுகள் தன்னுடைய படைபலம் அதிகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதால் அதுவும், படைக்குவிப்பு முயற்சிகளில் ஈடுபடுகிறது. இப்போட்டிக்கு எல்லை என்பது கிடையாததால் இதற்கென நாடுகள் தொடர்ந்து ஏராளமாகச் செலவிட நேரிடுகிறது. தற்கால அணு ஆயுத உலகில் நாடுகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் எவ்வளவு அணு ஆயுதங்களைக் கொண்டிருந்தாலும் அதனால் மிகையான பயன் ஏதும் கிட்டிவிடாது உதாரணமாக அமெரிக்கா, ரஷ்யா, போன்ற நாடுகள் ஒவ்வொன்றும் ஐந்நூற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வைத்திருக்கின்றன. இவற்றில் சுமார் இருபது ஏவுகணைகளைக் கொண்டு இவ்வுலகத்தையே அழித்து விடமுடியும். எனவே, மீதமுள்ள ஆயுதங்கள் அனைத்தும் இருந்தும் பயன்பற்றதாகவே உள்ளது. எனினும் ஒவ்வொரு ஏவுகணையைத் தயாரிப்பதற்கும் இவைகள் பலகோடி ரூபாய்களை செலவிட வேண்டியுள்ளது. இதனால் வளர்ச்சிப் பணிகளுக்கென அதிகமான நிதி ஒதுக்க முடியாமல் போய்விடுகிறது. இத்தகைய ஆயுதங்களுக்காகச் செலவிடப்படும் தொகையினால் யாதொரு பயனும்கிட்டாமல் போகின்றது. இதனை நாடுகள் உணரத் தலைப்படவே, ஆயுதக் குறைப்பு முயற்சிகளில் ஈடுபடலாயின. மேலும் நவீன ஆயுதங்களான அணு ஆயுதங்களைக் கொண்டு பிறநாடுகளை அதிக பட்சம் அச்சுறுத்த முடியுமேயொழிய, அவற்றிற்கெதிராகப் பயன்படுத்துவது மிகவும் கடினமே, இவ்வாறியிருக்கும் பட்சத்தில் இத்தகைய ஆயுதங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் எவ்வளவு வைத்திருந்தாலும், அதனால் பயன் ஏதும் கிட்டாது. மேலும்

நறிப்புக்கான இடம்)

இத்தகைய ஆயுதங்கள் அளவுக்கதிகமாகப் பெருகிக் கொண்டே போகுமானால் அதன் காரணமாகவே ஒரு போர் தோன்றக் கூடும் எனப் பலரும் கருதிவருகின்றார்கள். அத்துடன் 1960—70க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த அணு ஆயுதத் தொழில் நுட்பம் வேறு சில நாடுகளிடையேயும் பரவத் தொடங்கியது. இது மென்மேலும் பல நாடுகளிடையே பரவுமேயானால் போருக்கான வாய்ப்புக்களும் அதிகரிக்கும் என வல்லரசுகள் எண்ணின. இத்தகைய காரணங்களினால் படைக்குறைப்பின் அவசியத்தை அவைகள் உணரத் தலைப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் வல்லரசுகளிடையே கெடுபிடிப்போர் தீவிரமடைந்தால் படைக் குறிப்பு முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. எனினும் 1952—ஆம் ஆண்டைய குறைப்பின் அவசித்தை வல்லரசுகள் உணரத் தலைப்பட்டன. 1962க்குப் பிறகு கெடுபிடிப்போர் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டதன் காரணமாகச் சில முக்கியமான படைக்குறைப்பு சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

### 7.1.12. முக்கியப் படைக் குறிப்பு முயற்சிகள்

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் குறிப்பிடத்தக்க வகையில் படைக்குறைப்பு முயற்சிகள் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் முக்கியமானது அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமிடையே 1817ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரஷ்—பேகட் (Rush-Bagot Agreement) ஒப்பந்தாமாகும். இந்த ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையேயான கப்பற்படையின் ஒப்புவலிமையை (Relative Strength) நிர்ணயித்தது.

இதனை அடுத்து 1831 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கம் படைக்குறைப்பு பற்றி விவாதிக்க ஒரு பன்னாட்டு மகாநாட்டைக் கூட்ட முயற்சிகள் மேற்கொண்டது. எனினும், அதனால் பயன் ஏதும் கிட்டாமல் போயிற்று. இதனைத் தொடர்ந்து 1870ஆம் ஆண்டு பிரங்கோ—பிரஷ்யன் (Franco-Prussian) யுத்தத்திற்குச் சிறிது காலம் முன்பு பிரான்சின் தூண்டுதலால் உந்தப்பட்டு படைக்குறைப்புச் சம்பந்தமாக ரஷ்யாவுடன் பிரிட்டன் பேச்சவார்த்தைகள் மேற்கொண்டது அதிலும் எத்தகைய வெற்றியும் காணப்படவில்லை.

பின்னர் 1899லும் 1907லும் உலக நாடுகள் திஹேக் மாநாட்டில் கூட படைக்குறைப்பு சம்பந்தமாக விவாதித்தன. இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்பதில் நாடுகள் கருத்தொருமைப்பாடு

(குறிப்புக்கான இடம

கொண்டிருந்த பொழுதிலும், அது குறித்து தீர்மானம் மேற்கொண்டதைத் தவிர வேறொன்றும் அவைகளால் செய்ய இயலவில்லை.

முதல் உலகப்போருக்கு பின்பு 1919 ஆம் ஆண்டு சர்வதேச சங்கம் நிர்மானிக்கப்பட்டதை அடுத்த படைக்குறைப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன. சர்வதேச சங்கச்சாசனத்தின் விதி 8 "உலகில் அமைதி காப்பதற்கு நாடுகள் தங்கள் படையை ஓரளவிற்குக் குறைத்துக் கொள்ள வேண்டும்" என வலியுறுத்தியது மேலும் படைக்குறைப்பு பற்றி ஆராய 1925ஆம் ஆண்டு ஒரு குழுவையும் நிர்ணயித்தது. அதனைத் தொடர்ந்து ஜெனிவாவில் படைக்குறைப்பு மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. (1932) இக்கூட்டத்தில் விஷவாயு மற்றும் இராசயன வாயு ஆகியவற்றைப் போர்களில் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கென ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. நாடுகள் இவ்விசயத்தில் கருத்தொருமைப்பாடு கொண்டிருந்ததால், அதிக உடன்பாடு கண்டறியப்பட்டது. ஆனால், பிற விஷயங்களில் எத்தகைய முடிவும் கண்டறியப்படவில்லை. 60 நாடுகள் பங்கேற்றிருந்த இம்மாநாட்டில் 337 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாடும் இப்படைக் குறைப்பு பிரச்சனையைத் தன்நாட்டின் பாதுகாப்போடு இணைத்துப் பார்த்ததன் பயனாக, ஒவ்வொன்றும் தனக்குச் சாதகமான ஆலோசனைகளை வழங்கின. எனவே, இம்மாநாடு தோல்வியடைந்தது. எனினும் விஷவாயுக்கள் போர்களில் பயன்படுத்துவதை தடை செய்யவும் சர்வதேசச் சங்கத்தின் கீழ் ஒரு நிலையான "படைக்குறைப்புக் குழு" நிறுவுவதற்கு நாடுகள் ஒத்துக் கொண்டன.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்றிருந்த போதிலும் உடன்படிக்கைகள் எதிலும் கையொப்பமிடாமல் போனதே ஆகும். அமெரிக்காவின் செனட் சபை அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் அங்கத்தினராவதைத் தடுத்து விட்டதால் அச்சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் எதிலும் அமெரிக்கா பங்கேற்பதற்கு வாய்ப்பின்றிப் போயிற்று எனினும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சர்வதேச சங்கத்திற்கு வெளியே படைக்குறைப்புபற்றி விவாதிக்க 1922 ஆம் ஆண்டு வாஷிங்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜப்பான் மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் பங்கேற்றிருந்தன.

தங்களுடைய கப்பற்படையின் வலுவைக் குறிப்பிட்ட அளவு குறைத்துக் கொள்வதற்கும் அந்நாடுகள் ஒத்துக்கொண்டன. அத்துடன் அமெரிக்காவும் பிரிட்டனும் சம அளவில் கப்பற்படைகளை வைத்துக்கொள்வது எனவும் ஜப்பான், அமெரிக்கா அல்லது பிரிட்டனின் கப்பற்படையில் 16 சதவிகிதத்திற்கும் மிகைப்படாத அளவிற்குப் படைகளை

(குறிப்புக்கான இடம்)

கொள்ளலாம் என்றும் அதேபோல் பிரான்சும் இத்தாலியும் 35 சதவிகிதம் வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இந்த ஒப்பந்தம் கப்பற்படையில் காணப்பட்ட முக்கியக் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைத்ததேயன்றி நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்ற பிறவகையான கப்பல்களின் குறைப்பு பற்றி எதுவும் கூறவில்லை.

இதனை அடுத்து 1930—ஆம் ஆண்டு லண்டனில் ஒரு படைக்குறைப்பு மாநாடு கூட்டப்பட்டது. இதில் பங்கேற்றிருந்த அமெரிக்கா பிரிட்டன் பிரான்சு மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் தங்களின் கப்பல் படையை மேலும் குறைக்க ஒத்துக் கொண்டன. எனினும், உலகில் காணப்படும் அமைதிச் சூழ்நிலைக்குப் பங்கேற்கப்படும் பொழுதோ அல்லது அதற்கான சூழ்நிலைகளை உருவானாலோ, அந்நாடுகள் தங்கள் பலத்தை எவ்விதக் கட்டுப்பாடுமின்றிப் பெருக்கிக் கொள்வதற்கும் அதில் வகை செய்யப்பட்டிருந்தது இதன் காரணமாக இவ்வொப்பந்தம் சில ஆண்டுகளுக்குப் பிறகு தூக்கி எறியப்பட்டது. 1930க்கும் 40க்கும் இடைப்பட்ட காலத்தில் நாடுகள் தங்கள் ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டேயிருந்தது. எனவே, இக்காலகட்டத்தில் படைக்குறைப்பு முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

### 7.1.13. இரண்டாம் உலகப் போருக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட படைக்குறைப்பு முயற்சிகள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாடுகளிடையே படைக்குறைப்புபற்றி நம்பிக்கை ஏற்படும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. எனவே, போர் முடிந்தவுடன் ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை அதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

1946ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14—ஆம் நாள் பன்னாட்டு கட்டுப்பாட்டுக் குழு (Atomic Energy Control Commission) ஒன்று ஏற்படுத்த தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அத்தருணத்தில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகளே அணு ஆதார நுட்பங்களை அறிந்திருந்தன. இதனைத் தொடர்ந்து பன்னாட்டு அணுசக்தி வளர்ச்சிக் கழகம் (International Atomic Energy Development Authority) ஒன்று ஏற்படுத்தி, ஒவ்வொரு நாட்டிலும் செயல்படுகின்ற அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்களைப் பார்வையிட்டு, அவற்றை அதன் கட்டுக்குள் வைத்திருக்குமாறு செய்வதற்கென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அமைப்பு மேற்கொள்ளும் முடிவுகளுக்கெதிராக எந்த ஒரு வல்லரசும் தன் மறுப்பாணையை உபயோகிக்கக் கூடாது என்று முன் மொழியப்பட்டது. இதுவே பாருத் திட்டம் (Baruch Plan) எனப்படுகிறது. இதை அமெரிக்கா

முன் மொழிந்தது. இத்தருணத்தில் தான் (அதாவது 1946—47க்கும் இடைப்பட்ட காலத்தில்) கெடுபிடிப்போர் ஆரம்பமாயிற்று. எனவே மேலை நாடுகளின் இத்தகைய ஆலோசனைகளைச் சோவியத் யூனியன் ஐயத்துடன் நோக்கலாயிற்று. ஆங்கிலோ—சாக்ஸன் அரசாங்கங்கள் தன்னுடைய அணு ஆராய்ச்சியைக் கட்டுப்படுத்தியது. ஆனால் சோவியத்யூனியன் அணு ஆயுதங்களைக் கண்டறியும் முயற்சியில் அது ஈடுபட்டிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகையினால் IAWDA (Atomic Energy Control Commission) தன் முயற்சிகளைத் தளர்த்தவில்லை. சாதாரண ஆயுதங்களைக் குறைப்பது பற்றி ஆராய அது மற்றுமொரு குழுவை ஏற்படுத்தியது. இதிலும் வல்லரசுகளிடையே கருத்தொருமைப்பாடு காணப்பட்டதால் எத்தகைய உடன்பாடும் கண்டறியப்படவில்லை. அத்தருணத்தில் சோவியத் யூனியனும் தன்னுடைய முதல் அணுகுண்டை வெற்றிகரமாக பரிசோதித்தது. (23 செப்டம்பர் 1949). 1952—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மனித குலத்திற்கு அழிவைத் தரக்கூடிய ஆயுதங்களின் உற்பத்தியைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென சோவியத் யூனியன் அறிவித்தது. இத்தகைய அறிவிப்புகள் அனைத்தும் கெடுபிடிப் போரின் காரணமான அறிவிப்புகளாக நின்றன. படைக் குறைப்பு முயற்சிகளும் கெடுபிடிப் போருக்கு இரையாயின. இருவல்லரசுகளும் ஒன்றுக்கொன்று எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டன. இவ்வேளையில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவர் ‘அமெரிக்கா மனிதகுல அழிவை ஏற்படுத்தும் எத்தகைய ஆயுதங்களையும் பயன்படுத்தாது’ என அறிவித்தார். எனினும், சோவியத் யூனியன் அத்தகைய அறிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

பின்னர் “இனிமேல் வரவிருக்கும் எல்லா படைக்குறைப்பு மாநாடுகளிலும் சீனா, இந்தியா மற்றும் செக்கோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளைப் பங்கேற்க அழைக்க வேண்டும்” என சோவியத்யூனியன் கூறியது (ஏப்ரல் 1954) இதனை அமெரிக்கா ஏற்கவில்லை. பின்பு “நாடுகள் மேற்கொள்ளும் அணு ஆராய்ச்சி முழுவதும் பார்வையிடப்பட வேண்டும்” என்ற தீர்மானத்தை INDIA விடம் அமெரிக்கா சமர்ப்பித்தது. இதனை ரஷ்யா மறுத்துவிட்டது. இவ்வாறு வல்லரசுகளிடையே உடன்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போகவே பிற நாடுகள் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டன.

பிரிட்டனும் பிரான்சும் இணைந்து 1954 ஜூன் 11—ஆம் நாள் ஒரு திட்டத்தை அறிவித்தன. அதுவே பிரான்சு—பிரிட்டிஷ் திட்டம் (France-British plan) எனப்படுகிறது. அணு ஆயுதங்களை ஆக்கிரமிப்பு முயற்சிகளில் நாடுகள் ஈடுபடுவதைத் தவிர்க்க இத்திட்டம் முயன்றது.

(குறிப்புக்கான இடம்)

ஆயினும் 'ஆக்கிரமிப்பு' (aggression) என்றால் என்ன என்று தெளிவாக இத்திட்டம் கூறவில்லை எனக்கூறி, இதை ஏற்க சோவியத் யூனியன் மறுத்து விட்டது.

மீண்டும் 1955 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சோவியத் அணுசக்தி நிலையங்களை அமெரிக்காவும், அமெரிக்காவின் அணுசக்தி நிலையங்களைச் சோவியத் யூனியனும் விமானம் மூலம் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என அமெரிக்கா அறிவித்தது. இதனைச் சோவியத் யூனியன் ஏற்கவில்லை.

பின்னர் 1956—ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாதாரணப் படைகளின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம் எனச் சோவியத் யூனியன் அறிவித்தது. இதை அமெரிக்கா ஏற்க மறுத்துவிட்டது. அதே ஆண்டு, "அணு ஆயுதச் சோதனைகளை ஓராண்டிற்கு நிறுத்திவைக்க வேண்டுமென" அமெரிக்கா வலியுறுத்தியது. அமெரிக்கர்கள் அப்பொழுதுதான் பல அணு ஆயுதச் சோதனைகளை முடித்திருக்கிறார்கள். அடுத்த கட்டச் சோதனைகளை அவர்கள் துவக்குவதற்கு இன்னும் ஓரிரு வருடங்கள் ஆகலாம் அத்துடன் நாங்கள் அப்பொழுதுதான் சில சோதனைகளை மேற்கொள்ள முனைந்துள்ளோம். இச்சோதனைகளை நிறைவேற்றவிடாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே அமெரிக்கா இத்தகைய அறிவிப்புகளை மேற்கொள்கிறது எனக் கூறி சோவியத் யூனியன் அத்திட்டத்தை ஏற்க மறுத்தது.

இவ்வாறு வல்லரசுகள் ஒன்றையொன்று சந்தேகித்து வந்த கெடுபிடிப்போர் உச்சகட்டத்திலிருந்தாலும் படைக்குறைப்பு பற்றி எந்தவிதமான தீர்மானங்களும் இக்காலகட்டத்தில் (1948—62) மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அடுத்த கியூபா பிரச்சனையின் போது (1963) வல்லரசுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளவேண்டிய சூழ்நிலை எழுந்தது. அத்தருணத்தில் உலகில் ஒரு போர் தோன்றிவிடும் என்ற அச்சம் இவ்வுலகில் காணப்பட்டது. அவ்வாறு ஒரு போர் தோன்றினால், அதில் அணு ஆயுதங்கள் கண்டிப்பாகப் பயன்படுத்தப்படும் என்பதையும் அதனால் மனித குலமே அழிந்துவிடும் என்பதையும் எல்லோரும் நன்குணர்ந்திருந்தனர். எனினும், பல தலைவர்களின் நன்முயற்சியால் வல்லரசுகளிடையே ஒரு போர் தோன்றுவது தவிர்க்கப்பட்டது. அதுகாறும் வல்லரசுகளைத் திணறடித்துக் கொண்டிருந்த பிரச்சனை ஒருவழியாகச் சமாளிக்கப்பட்டது. பிரச்சனையின் போது இரு வல்லரசுகளுமே அணு ஆயுதங்களின் தீமைகளை உணரத் தலைப்பட்டன சுருங்கக் கூறின் இப்பிரச்சனை அவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. அதன் பின்னர் இவ்விரு நாடுகளுமே படைக்குறைப்பு முயற்சிகளைத் தீவிரப்படுத்தின. அதன் விளைவாக அதே ஆண்டே (1963) ஒரு சில படைக்குறைப்பு

பிரச்சனைகளில் உடன்பாடு கண்டனர். அதன் பின்னர் அது குறித்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதுவே 1963—ஆம் ஆண்டைய "அணு ஆயுதச் சோதனைத் தடை" ஒப்பந்தமாகும். இதுவே இரண்டாம் உலகப் போருக்கு பிற்பட்ட காலத்தில் இவ்வல்லரசுகளிடையே முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

### 7.1.14. அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் (The Nuclear Test Ban Treaty, 1963)

1963—ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் தேதி, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டன. இவ்வொப்பந்தம் நாடுகள் விண்வெளியிலும் நீருக்கடியிலும் அணு ஆயுதச் சோதனைகள் மேற்கொள்வதை தடை செய்தது. திறந்த வெளியிலும் நீருக்கடியிலும் இத்தகைய சோதனைகளை நாடுகள் மேற்கொண்டதால், சுற்றுப்புற சூழ்நிலைகளில் வாழ்ந்து வரும் உயிரினங்களுக்கு ஏராளமான தீங்குகள் நேரிட்டன. இதனைத் தடுக்கும் முகமாகவே இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், நிலத்திற்கடியில் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதை இது தடைசெய்யவில்லை. இவ்வொப்பந்தத்தில் பங்கேற்குமாறு பிற நாடுகளும் அழைக்கப்பட்டன. அதற்கேற்ப பிரான்சு, ஜெர்மனி மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இதில் கையொப்பமிட்டன. எனினும் சீனா இதில் சேர மறுத்துவிட்டது. இவ்வொப்பந்தம் பெரிய அளவில் எதையும் சாதித்திடாத போதிலும் வல்லரசுகளைச் சரியான திசையில் திருப்பிய வகையில் அதிக முக்கியத்துவம் பெற்றது.

### 7.1.15. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (Nuclear Non-Proliferation Treaty 1968)

1963ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தில் வல்லரசுகள் கையொப்பமிட்டவுடன் மேலும் சில பிரச்சனைகளுக்கு முடிவுகாணத் தீவிரமாக முனைந்தன. 1950—ல் ஓரிரு நாடுகளிடம் மட்டும் காணப்பட்ட அணு ஆயுதத் தொழில் நுட்பம் வேறு சில நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது. அணு ஆயுதங்கள் உலகில் மேலும் பரவுமானால் அதனால் அபாயம் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகும், என்பதில் இவ்விரு வல்லரசுகளும் கருத்தொருமைப்பாடு கொண்டிருந்தன, எனவே இதனைத் தடுக்குமுகமாக 1968—ஆம் ஆண்டு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டனர். இதன்மூலம் அணு ஆயுதங்கள் பற்றிய நுட்பங்களை அறிந்த நாடுகள் அவற்றைப் பெற்றிராத நாடுகளுக்கு

(குறிப்புக்கான இடம்)

நுட்பங்களை வழங்குவது தடை செய்யப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் மற்றும் பல பசிபிக் நாடுகளும் வேறு சில சிறிய நாடுகளும் கையொப்பமிட்டன. இந்தியா, சீனா, இஸ்ரேல், ஜப்பான், எகிப்து மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் இதில் கையொப்பமிட மறுத்து விட்டன. குறிப்பாக இந்நாடுகள் அணு ஆயுத நுட்பத்தைப் பெற்றுவிடக் கூடாது என வல்லரசுகள் கருதியதால் இந்நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடாமல் போனதில் வியப்பொன்றுமில்லை. இந்தியா போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாகக் காணப்படுகிறது என்று குற்றம் சாட்டினர். ஏனெனில் இவ்வொப்பந்தம் பிற நாடுகள் அணு நுட்பத்தை அறிவதைத் தடை செய்ய முயன்றனவேயன்றி, ஏற்கனவே அந்நுணுக்கங்களைப் பெற்றிருக்கும் நாடுகளை எவ்விதக் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகவில்லை. அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் அனைத்தும் அதனைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் முன்வந்தால் தாங்களும் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடத் தயாராக உள்ளோம் என இந்நாடுகள் சுட்டிக்காட்டி வருகின்றன. இவ்வொப்பந்தத்தில் பிரான்சும் சேரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது எது எப்படியாயினும், இவ்வொப்பந்தம், இதுகாறும் சண்டையிட்டுக் கொண்டிருந்த வல்லரசுகளை ஓரளவு நெருங்கி வர வழி, வகை செய்தது என்றால் அது மிகையாகாது.

### 7.1.16. சால்ட் I&II (SALT I&II)

மேற்கொண்ட ஒப்பந்தத்தை தொடர்ந்து வல்லரசுகள் மேலும் ஒரு சில படைக் குறைப்பு முயற்சிகளை மேற்கொண்டு 'சால்ட் (Strategic Arms Limitation Treaty) ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

சால்ட் I—1973 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் ஹேல்டசிங்கியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் இவ்விருநாடுகளிடையே காணப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ஏவுகணை எதிர் தாக்கிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

சால்ட் I ஐத் தொடர்ந்து II ற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. 1978—ஆம் ஆண்டு இது குறித்து வல்லரசுகள் ஓர் உடன்பாட்டிற்கு வந்தன. இதற்கிடையில் உலக அரசியலில் ஏற்பட்ட பல மாற்றங்களின் விளைவாக இவ்வொப்பந்தம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானத்தில் ரஷ்யர்களின் தலையீட்டைக் கண்டனம் செய்யும் வகையில் அமெரிக்க செனட் இவ்வொப்பந்தத்தை இதுகாறும் அங்கீகரிக்கவில்லை.

இதன்பிறகு 1977—ம் ஆண்டு கார்ட்டர் அமெரிக்காவின் தலைவரானவுடன் NALT (Naval Arnaments Limitation Traty) சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளை துவக்கினார். குறிப்பாக, இந்தியப் பெருங்கடலை அமைதிப் பிரதேசமாக அறிவிப்பது குறித்து பேச்சு வார்த்தைகள், மேற்கொள்ளப்பட்டன. இதிலும் எந்தவிதமான வெற்றியும் காணப்படவில்லை.

1977—1985ற்கு இடைப்பட்ட காலத்தில் வல்லரசுகளிடையே மீண்டும் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தால், அவைகளால் எந்தவிதப் படைக்குறைப்பு ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள இயலவில்லை ஆப்கானிஸ்தான், கம்போடியா மற்றும் போலந்துப் பிரச்சனைகள் இவற்றின் குறுக்கே நிற்கின்றன. இதற்கிடையில் அமெரிக்கா நியூட்ரான் குண்டுகளை தயாரித்து வெற்றிகரமாப் பரிசோதித்துள்ளது. இதன் விளைவாக சோவியத் யூனியனும் புதிய அணு ஆயுதங்களைக் கண்டறியத் தலைப்படக்கூடும், இதனால் இவ்வல்லரசுகள் மீண்டும் படைக்குவிப்பு முயற்சிகளில் பாடுபடுவதற்கான வாய்ப்புகளும் தோன்றக்கூடும் இருப்பினும் 1987 ஆம் ஆண்டு இறுதியில் இவ்விரு நாடுகளும் IRC ஒப்பந்தம் மேற்கொண்டதும், சோவியத் யூனியனின் உள்நாட்டு விவகாரங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

### 7.1.17. படைக்குறைப்பு முயற்சிகளின் நாடுகள் எதிர்நோக்கி வரும் பிரச்சனைகள்

1) எல்லாப் படைக் குறைப்பு மாநாடுகளிலும் ஒவ்வொரு நாடும் எந்த விகிதத்தில் தங்களது படைகளைக் குறைத்துக் கொள்வது என்பது பற்றிய பிரச்சனை காணப்படுகிறது. இது குறித்து விவாதங்களில், நாடுகள் தங்களுடைய பாதுகாப்புக் கருதி ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் படைக்குறைப்பிற்கு ஒப்புக்கொள்வதில்லை. இந்தக் ‘குறிப்பிட்ட அளவு’ பிற நாடுகளுக்கு ஏற்புடையதாக இல்லை.

2) இதில் கருத்தொருமைப்பாடு அடையும் பட்சத்தில் எந்தெந்த ஆயுதங்களை எந்தெந்த அளவிற்குக் குறைத்துக் கொள்வது என்பது அடுத்து பிரச்சனையாக விளங்குகிறது.

3) மூன்றாவது நாடுகளிடையே படைக் குறைப்பு என்றால் என்ன என்பது குறித்து உடன்பாடு காணப்படவில்லை.

(குறிப்புக்கான இடம்)

படைக்குறைப்பு என்றால் ஆயுதங்களைக் குறைத்து உற்பத்தி செய்வதாக அல்லது சில வகையான ஆயுதங்களை உற்பத்தி செய்யாமல் தடுப்பதா அல்லது ஏற்கனவே இருக்கும் சில வகையான ஆயுதங்களை அழித்து விடுவதா என்பதுபற்றி சரியான விளக்கம் தரப்படவில்லை.

4) நான்காவதாக, படைக்குறைப்பு செய்வதால் உண்மையாகவே உலகில் அமைதி நிலவுகிறதா என்பது பற்றி நாடுகள் ஐயப்படுகின்றன. ஒரு சில ஆயுதங்களை நாடுகள் குறைத்துக்கொள்ள ஒத்துக்கொண்டாலும் அதனால் ஏற்படும் இழப்பை வேறுசில நவீன ஆயுதங்களைத் தயாரிப்பதன் மூலம் ஈடுசெய்ய முனைகின்றன. இவ்வாறிருக்கும் பட்சத்தில் நாடுகள் படைக்குறைப்பு பற்றி அதிக நாட்டம் செலுத்தாமலிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

எனினும், படைக்குறைப்பானது நாடுகளிடையே தன்னம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையிலும் அது உலக அமைதி காக்க உதவும் ஒரு முக்கியமான கருவி என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆயுதங்கள் பெருகப் பெருக சண்டையிடுவதற்கென ஆயுதங்கள் தயாரிப்பது போல் ஆயுதங்கள் இருப்பதனாலேயே சண்டைகள் மூளுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கக் கூடும். அத்தகைய வரையறையற்ற ஆயுதக் குவிப்பு சில சூழ்நிலைகளில் பல நாடுகளைச் சங்கடத்திற்குள்ளாகக்கூடும். படைக்குறைப்பு ஒன்று தான் உலக அமைதிக்கு ஒரே வழி என்று கூறமுடியாவிடினும், அதற்கு இதுவும் ஒரு முக்கியமான அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

### படைக்குறைப்பினால் விளையும் பயன்கள்

படைக்குறைப்பு மேற்கொள்வதால் மூன்று நேரடிப் பயன்கள் ஏற்பட கூடும். அவைகள் பின்வருமாறு:

1) ஆயுதங்களுக்காகச்செலவிடப்படும்தொகையைக் கட்டுப்படுத்த முடியுமாதலால் அதனை நாடுகள் தறங்களது வளர்ச்சிப் பணிக்குச் செலவிட முடியும்.
2) ஆயுதங்கள்குறைவதனால் போருக்கான வாய்ப்புக்களும் குறைக்கூடும்.
3) அப்படியே ஒரு போர்தோன்றினாலும் அதனால் விளையக்கூடிய சேதங்கள் குறைந்து காணப்படும். அத்துடன் இதன் விளைவாகச் சுற்றுப்புறச் சூழலின் சமநிலை (Ecological Balance ) பாதுகாக்கப்படுதல், இது குறித்த உயர்மட்ட ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்கள் அதிகரித்தல் போன்ற பல மறைமுகமான பயன்களும் ஏற்படக்கூடும்.

முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக்

ஆ) கூட்டுச்சேராமையின் பொருள் கூறு.

ஆ) கெடுபிடிப்போர் என்பதை விளக்கு.

இ) அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் பற்றி விளக்கு.

ஈ) அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் பகுப்பாய்க.

(குறிப்புக்கான இடம்)

**படைக்குறைப்பு முயற்சிகள் வெற்றிபெறுவதற்குத் தேவையான அம்சங்கள்**

ஒரு சிறந்த பன்னாட்டுச் சூழ்நிலை உள்நாட்டு ஆதரவு மற்றும் யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் அமையும் பேச்சு வார்த்தைகள் மற்றும் அதற்கான ஆதாரங்கள் ஆகியன படைக்குறைப்பு முயற்சிகளை வெற்றி பெறச் செய்யும் சில காரணிகளாகும். வல்லரசுகள் ஒன்றையொன்று மீண்டும் சந்தேகிக்கத் தொடங்கியருப்பதால், தற்காலத்தில் ஒரு சிறந்த பன்னாட்டுச் சூழ்நிலை காணப்படவில்லை, அதே போல் 'சால்ட் I' ஒப்பந்தம் அமெரிக்க, சோவியத் மக்களிடம் பெற்ற வரவேற்பை சால்ட் II பெற்றிருக்கவில்லை: அத்துடன் 'சால்ட் II – ன் போது மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் குழப்பம் விளைவிப்பதாகவும் மிகவும் அதிகமான நுணுக்கங்களை உடையதாகவும் விளங்கியதும் அது இதுவரை ஏற்கப்படாததற்கு ஒரு காரணமாகும். அத்துடன் படைக்குறைப்பு மூலம் அனைவரும் எதிர்பார்க்கும் வேளையில் நாடுகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் வரமறுப்பதும் அதன் தற்காலத் தோல்விக்கு ஒரு காரணமாகும். எனவே அதிக எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமான ஒன்றாகும். அத்துடன் படைக்குறைப்புப் பற்றிய பிரச்சனைகளை வேறு சில பிரச்சனைகளுடன் இணைத்துப் பேசுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

இக்கால கட்டத்தில் படைக்குறைப்பு முயற்சிகளில் காணப்படும் மந்தநிலை அதற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு இடைக்காலத்தடையாகும். இத்தருணத்தில் நாடுகள், அதிலும் கறிப்பாக வல்லரசுகள் படிப்படியாக உலகில் நம்பிக்கை வளர்க்கம் விதத்தில் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். குறிப்பிடத் தகுந்த வகையில் எத்தகைய ஒப்பந்தங்களும் சமீப காலத்தில் மேற்கொள்ளப்படவில்லையாதலால், படைக்குறைப்பு என்ற கொள்கையை மறந்துவிட்டது எனக் கருதாமல், நாடுகள் மிகவும் நிதானமாகச் செயல்பட வேண்டியது விரும்பத்தக்கதாகும். அப்படிச் செயல்பட உலக நாடுகள் முயலுமேயானால், வருங்காலத்தில் படைக்குறைப்பு முயற்சிகள் ஓரளவு சிறந்த வெற்றிகளை அடையக் கூடும் என்பதில் ஐயமில்லை. சோவியத் யூனியன் உடைந்து சிதறியதால் இன்று அணு ஆயுதங்கள் ரக்ஷியா, உக்ரேன் போன்ற கடியருசுகளிடம் உள்ளன. இக்குடியரசுகள் தம் எதிர்காலத்திற்காக மேலை நாட்டுப் பொருளாதார உதவியை எதிர்பார்பதால் மேலை நாடுகள் கூறும் ஆயுதக் கட்டுப்பாட்டினை ஏற்பது சாத்தியமே.

(குறிப்புக்கான இடம்)

### 7.1.18. தொகுப்புரை:

கெடுபிடிப் போரின் தோற்றம், தன்மை, மற்றும் பிரச்சனைகள் பற்றியும் தென்கிழக்காசியாவிலும் துாரகிழககிலும் நிகழ்ந்த கெடுபிடி போர் பற்றியும் மத்திய கிழக்குப் பாதுாகாப்பு ஒப்பந்தம் பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளன. மேலும் இவ்வுலகில் படைக்குறைப்பு முயற்சிகளும் படை குறைப்பினால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும் அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் பற்றியும் மிகவும் புரிந்து கொள்ளும்படி எளிதாக கூறப்பட்டுள்ளது. இன்று ரஷ்யாவின் சிதைவுக்கு முக்கிய காரணம் என்பதும் கண்டறிப்பட்டுள்ளன. மேலும் பல ஒப்பந்தங்கள் மூலம் மூன்றாம் உலகப் போர் தவிர்கப்பட்டது என உண்மையாகும். ஜெர்மானிய ஐக்கியமும், ஐரோப்பிய ஒற்றுமை, தென்ஆப்பிரிக்க விடுதலையும் கெடுபிடிப் போரை மிகவும் தளர்த்தியுள்ளன.

### 7.1.19. முக்கியவார்த்தைகள்:

| | | |
|---|---|---|
| கூட்டுச்சேராமை | — | நடுநிலை |
| கெடுபிடிப்போர் | — | ஆதிக்கப் போட்டி |
| சால்ட் | — | படை குறைப்பு ஒப்பந்தம். |

### 6.1.20. இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்:

Roy – International Relations Since 1919

(World Press)

### 7.1.21. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண். 1: பதில் எண். 7.1.1

கேள்வி எண். 2: பதில் எண். 7.1.2

கேள்வி எண். 3: பதில் எண். 7.1.3

கேள்வி எண். 4: பதில் எண். 7.1.4

கேள்வி எண். 5: பதில் எண். 7.1.5

### 7.1.22. மாதிரிவினாக்கள்:

1. கூட்டுச் சேராமை என்றால் என்ன? அக்கொள்கையின் பண்புகளை விளக்குக.

2. படைகுறைப்பு என்றால் என்ன? அதில் காணப்படும் பிரச்சனைகளை பகுப்பாய்க.

# அலகு—8

## ஆயுத போட்டி – அணுசக்தி பற்றிய பிரச்சனைகள் — காலனி ஆதிக்க முறை – குடியேற்ற நாட்டின் இன்றைய நிலை

**முன்னுரை:**

உலகப்போருக்கான காரணங்களுள் படைப்பெருக்கம் முக்கியமானதொன்றாகும். மனித தொழில் நுட்ப அறிவாற்றலும் அறிவியல் ஆய்வுகளும், மனித இன மேம்பாட்bw;fhd புதிய கண்டுபிடிப்புகளில் ஆக்க சக்தி பயன்படுத்த ஏற்படுவதோடு மனித இன அழிவையும் விரைப்படுத்தப்படுகிறது. ஐ.நாவின் சாசனம் 11—வது பிரிவு படைகுறைப்பு மற்றும் ஆயுதக்கட்டுபாடு பற்றி கூறுகிறது. படைகுறைப்பு, படைக்கட்டுபாடு முயற்சிகள் தொடர்ந்து பலமுறை மேற்கொள்ளப்பட்டு வந்தபொழுதிலும் ஆயுத போட்டியை இன்றுவரை கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் குடியேற்ற நாட்டின் இன்றைய முறையைப்பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்:**

ஆயுதப் போட்டியின் தன்மையும் மற்றும் காரணங்களை கற்றறிதல்.
ஆயுத வியாபாரமும் மற்றும் அதன் விளைவுகளை தெரிந்து கொள்ளுதல்.
காலனி ஆதிக்கமுறை மற்றும் குடியேற்றக் கோட்பாடு பற்றி பகுப்பாய்வு செய்தல்
காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சியினை தெரிந்து கொள்ளுதல்.

அலகின்வடிவமைப்பு

ஆயுதப்போட்டியின் தன்மையும் காரணங்களும்
தொழில் நுட்பம் சார்ந்த காரணிகள்
ஆளும்வர்க்கம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த காரணிகள்
ஆயுதப் போட்டியும் மூன்றாம் உலகநாடுகளும்
ஆயுத வியாபாரமும் அதன் விளைவுகளும்
அணுசக்தி பற்றிய பிரச்சனைகள்
ஆதிக்க ஆட்சியின் பொருள் விளக்கம்
ஆதிக்க ஆட்சியும் தேசீயமும்
பொறுப்பாண்மைக் கோட்பாடு
குடியேற்ற கோட்பாட்டின் இன்றைய நிலை
காலனி ஆதிக்க வீழ்ச்சி
தொகுப்புரை (Summary)

(குறிப்புக்கான இடம்)

**முக்கிய வார்த்தைகள்** (Key Words)

**முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனை கேள்விக்கானப் பதில்கள்** (Check your progress Questions)

**இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள்** (Books for further studing)

**மாதிரி வினாக்கள் :** (Questions)

## 8.1. ஆயுதப்போட்டி: தன்மையும், காரணங்களும்

ஆண்டு தோறும் உலகநாடுகள் பலவும் ஆயுதங்களுக்காக கோடிக் கணக்கான பணத்தை செலவழித்து வருகின்றன. படைக்குறைப்பு, படைக்கட்டுப்பாட்டு முயற்சிகள் தொடர்ந்து பலமுறை மேற்கொள்ளப்பட்டு வந்தபொழுதிலும், ஆயுதப்பெருக்கத்தை இதுவரை முழுமையாக கட்டுப்படுத்த இயலவில்லை. ஒரு புள்ளி விவர அறிக்கையின்படி நாளொன்றுக்கு 1000 கோடி ரூபாய்க்கும் மேலான தொகை ஆயுதங்களுக்காக செலவிடப்பட்டு வருகிறது. 1975ஆம் ஆண்டைய ஒரு அறிக்கையின்படி அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முறையே 11000, 4000 ஏவுகணைகளில் பயன்படுத்தக்கூடிய அணுக்கருவியை கொண்டிருந்தன. 1980ஆம் ஆண்டுகளில் இதுமுறையே 14000, 8,000 ஆக அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. மேலும் இவ்விரு நாடுகளும், ஒவ்வொன்றும் 2000ற்கும் மேற்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும் தங்கள் வசம் குவித்து வைத்திருக்கின்றன. இத்தகைய ஆயுதங்களின் ஒரு சிறு அளவே இவ்வுலகம் முழுவதையும் அழிக்கப் போதுமானதாகக் கருதப்படுகின்ற போதிலும், அமெரிக்காவும் சோவியத் யூனியனும் தொடர்ந்து அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகின்றன. இதுதவிர மற்ற பிற ஆயுதங்களும் ஏராளமான எண்ணிக்கையில் பெருக்கப்பட்டு வருகின்றன. 1900ஆம் ஆண்டு ஆண்டொன்றிக்கு 10 மில்லியன் டாலர்களாக இருந்த உலக இராணுவச் செலவு, 1948ஆம் ஆண்டு வாக்கில் 65 மில்லியன் டாலர்களாகவும் 1980ஆம் ஆண்டுகளில் 220 மில்லியன் டாலர்களாகவும் உயர்த்தப்பட்டு இருக்கிறது. (ஒரு மில்லியன் டாலர் என்பது சுமார் 1000 கோடி ரூபாய்களுக்குச் சமமான தொகையாகும்). இந்த புள்ளி அறிக்கையின் அடிப்படையில் நோக்கினால் ஆயுதப் பெருக்கத்திற்கு சமீப காலங்களில் ஒரு முடிவு ஏற்படுத்தி விடமுடியாது என்பதைக் குறிப்பதாகவே உள்ளது. அத்துடன் ஆயுதங்களை அதிகப்படியாகத் தயாரிக்கும் நாடுகளின் எண்ணிக்கை தினந்தோறும் வளர்ந்து வருகிறது. 30 ஆண்டுகளுக்கு

முன்னர் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, கனடா மற்றும் ஸ்வீடன் போன்ற ஐந்து நாடுகள் மட்டும் அதிகமான ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டு ஆயுத ஏற்றுமதி செய்து வந்தன. ஆனால் தற்பொழுது அந்த எண்ணிக்கை 30ற்கும் மேலாக அதிகரித்து உள்ளது. இத்தகைய ஆயுதத் தயாரிப்புகளிலும், ஆயுதத் தொழிற்சாலைகளிலும் ஏறத்தாழ 5,00,000 விஞ்ஞானிகளும், பொறியியல் வல்லுநர்களும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அதிவேகமாக வளர்ந்து வரும் ஆராய்ச்சியின் காரணமாக ஆயுதங்களின் தன்மையும், அவைகளின் அழிக்கும் சக்தியும் பெருகிவருகின்றது.

ஆயுதங்களுக்கென அதிகமான தொகை செலவழிக்கப்படும் போக்கு உலகில் இருந்து வருவதால் ஆயுதப் போட்டியைக் குறைப்பது அவசியமாகவே உள்ளது. ஒரு நாடு தன் பாதுகாப்பிற்கு குந்தகமோ அல்லது அச்சுறுத்தலோ உருவாகின்ற வேலையில் தன்னுடைய ஆயுத வலிமையைப் பெருக்கி கொள்ளும் வகையில் அதிகமான இராணுவச் செலவு மேற்கொள்கிறது. ஒரு நாடு தன்னுடைய இராணுவச் செலவுகளை அதிகரிக்கும் பொழுது அதனால் பாதிக்கப்படக்கூடிய நாடுகளும் தங்களுடைய இராணுவச் செலவுகளை அதிகரிக்கின்றன. இத்தகைய சூழ்நிலைகளில், சிறப்பாக இயங்கக்கூடிய பன்னாட்டு அமைப்புகளாலும், தீவிரமான படைக்குறைப்பு முயற்சிகளாலும் தான் ஆயுதக்குறைப்பையும், கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட முடியும். துரதிஷ்டவசமாக அத்தகைய அமைப்புகள் சரிவர இயங்க முடியாததின் காரணமாக படைப் பெருக்கம் அதிகரித்து வருகின்றது. இத்தகைய ஆயுதப்பெருக்கம் இவ்வுலகில் பல போர்கள் வருவதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்து வந்துள்ளது. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களுக்கு முந்திய காலக்கட்டங்களில் அளவிட முடியாத ஆயுதப் பெருக்கம் ஏற்பட்டது அப்போர்கள் வருவதற்கு ஒரு காரணமாயிற்று என்பது வரலாற்று உண்மை. அதேபோன்று கெடுபிடி போர்காலங்களிலும் வல்லரசுகள் தங்களிடையேயான வலிமைச் சமநிலையைக் காத்துக்கொள்ள படைப் பெருக்கத்தில் ஈடுபட்டிருந்தன. இதன் விளைவாக அவர்களிடையே ஆயுதப்போட்டி ஏற்பட்டு உலகில் பதட்ட நிலை அதிகரித்தது. வலிமையில் சமநிலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, இத்தகைய போக்கு ஒரு ‘அச்சச் சமநிலையை, தோற்றுவித்தது. கெடுபிடிபோர் காலங்களில், உலக இராணுவச் செலவுகளில் 75 சதவிகிதம், நெட்டோ (NATO) மற்றும் வார்சா ஒப்பந்த நாடுகள் மேற்கொண்ட ஆயுதப் போட்டியின் காரணமாக ஏற்பட்டது என்றால் மிகையாகாது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில், கெடுபிடிபோர்

(குறிப்புக்கான இடம்)

துணிந்து வல்லரசுகளிடையே நல்லுறவுகள் வளர்ந்து வரும் இக்காலத்தில், துரதிர்ஷ்டவசமாக வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளின் இராணுவச்செலவுகள் மிகவும் அதிகரித்து வருகின்றது அதிலும் குறிப்பாக இத்தகைய போக்கினை, மத்திய கிழக்கு நாடுகளிடையேயும், தெற்காசிய நாடுகளிடையேயும் நாம் காண முடியும்.

ஆயுதப் போட்டிக்கு பொதுவாக இரண்டு காரணிகள் காணப்படுகின்றன. அவைகளுள் வளர்ந்துவரும் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் முதலாவதாகக் காணப்படுகிறது. இரண்டாவதாக நாட்டின் ஆளும்வர்க்கமும் பொருளாதாரக் காரணிகளும் காணப்படுகின்றன.

### 8.1.1. தொழில் நுட்பம் சார்ந்த காரணிகள்

பொதுவாக நாடுகளிடையே ஆயுதப் போட்டி ஏற்படுவதற்குக் காரணம் அவைகள் ஒவ்வொன்றும் மற்றொன்றை காட்டிலும் சக்தி வாய்ந்த நவீனமான ஆயுதங்களை தன்வசம் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணுவதே ஆகும். இத்தகைய செயல்களில் ஒரு நாடு ஈடுபடும் போது அதன் எதிர் நாடுகளும் இதே போன்ற செயல்களில் ஈடுபட்டு தங்களுடைய வலிமையையும் அதிகரித்து கொள்ளும் வகையில் செயல்படுகின்றன. இத்தகைய எதிர்ச் செயல்கள், உணர்ச்சி பூர்வமாக அமைவதால், ஆயுதப் பெருக்கம் தேவைக்கேற்ற வகையில் அமையாமல் அளவிற்கதிகமான வலிமையை அடையும் வகையில் நடத்தப்படுகின்றன. இம்மாதிரியான செயல் — எதிர்ச்செயல் சூழ்நிலைகள் ஆயுதப்போட்டி ஏற்படுவதற்கு அடிப்படையான காரணங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இந்த மாதிரியான சூழ்நிலைகளில் ஒரு நாடு மற்றொன்றை விட ஒருபடி மேலே இருப்பதையே விரும்புவதால், இப்போட்டி முடிவற்றதாகி விடுகிறது. இப்போட்டி தொடர்ந்து நிகழ்வதற்கு மாறிவரும் தொழில் நுட்பங்களும், அவைகள் தொடர்ந்து நவீனமயப்படுத்தப்பட்டு வருவதும் ஒரு காரணமாகும். இதனால் நாடுகள் ஒவ்வொன்றும் தங்களது தொழில்நுட்ப அறிவை தொடர்ந்து வளர்த்துக் கொள்ளும் வகையில் கோடிக்கணக்கான ரூபாய்களை ஆராய்ச்சிகளுக்கென்று செலவிட்டு வருகின்றன. நிகழ்காலத்தில் மற்றொரு நாடு எத்தகைய ஆயுதங்களை வெளிக்கொணர இருக்கிறது எதிர்காலத்தில் எத்தகைய சக்தி உடைய ஆயுதங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கில் கொண்டு ஒவ்வொரு நாடும் அதற்கேற்ற வகையில் திட்டங்கள் தீட்டி செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம், தன் எதிரி நாட்டின் வலிமை எக்காலத்திலும் குறைந்தபட்சம் தன் வலிமையை விட அதிகரித்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் புதிய புதிய ஆயுதங்களை தயார் செய்து வருகின்றன. ஒவ்வொரு புதிய முயற்சியிலும் அவைகள் வெற்றி கொள்ளும்

வேளையில் அவ்வெற்றியே அவைகளை மேலும் மேலும் அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுத்துகின்றன. எனவே ஆயுதங்கள் நவீனப்படுத்தப்படும் வகையில் தொடர்ந்த ஆராய்ச்சியும், அதன் விளைவாக புதிய ஆயுதங்களும் கண்டறியப்பட்ட வண்ணம் இருப்பதால் ஆயுதப்போட்டியும் தொடர்ந்து ஏற்படுகிறது.

## ஆளும் வர்க்கம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த காரணிகள்

இந்நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டு உலகப்போர்களும், அதன் பின்னர் வெகுகாலம் காணப்பட்ட கெடுபிடிபோரும் இராணுவத்திற்கும் அது சார்ந்த அமைப்புகளுக்கும் அவற்றில் பணிபுரியும் ஆளும் வர்க்கத்திற்கும் ஒரு புதிய செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன. உலகெங்கிலும் இராணுவம் சார்ந்த அமைப்புகள் மிகுந்த அளவில் காணப்படுகின்றன. இத்தகைய அமைப்புகள் தொடர்ந்து நீடிக்க வேண்டுமாயின் போர்களோ அல்லது போர் தயார் நிலையில் நாடுகள் ஈடுபடுவதோ அவசியமான ஒன்றாகும். எனவே இவைகள் தங்களுக்கேற்ற சூழ்நலைகளை உருவாக்குகின்றன அல்லது அது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. சட்ட மன்றங்களில் நிதி மசோதாக்கள் தாக்கல் செய்யப்படும் பொழுது, நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பய உணர்வுகளை ஏற்படுத்தி தங்களுக்கு அதிகத்தொகை ஒதுக்கப்படும் வகையில் செயல்படுகின்றன. இராணுவத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி அளவு குறைக்கப்படும் வேளைகளில் நாட்டின் பாதுகாப்பிற்கு அதிகபங்கம் ஏற்படக்கூடும் என்ற கருத்தை வலியுறுத்தி தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகின்றன. இத்தகைய வழிகளின் மூலம் போர்க்காலங்களில் மட்டுமின்றி சாதாரணமாக அமைதி நிலவி வரும் வேளைகளில் கூட இராணுவ அமைப்புகள் தங்களது செல்வாக்கினை தொடர்ந்து காத்துக்கொள்கின்றன. ஆயுதத் தொழிற்சாலைகளும், ஆராய்ச்சிகூடங்களும் எப்பொழுதும் மூடப்படாமல் இடைவிடாது இயங்கிக் கொண்டிருப்பதையே தங்கள் குறிக்கோளாக இவ்வமைப்புகள் கொண்டிருக்கின்றன. அத்துடன் ஒரு நாட்டின் ஆட்சியாளர்களும், வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டே தீர்மானங்கள் மேற்கொள்வதால், ஆயுதத் தொழிற்சாலைகள் தொடர்ந்து ஓய்வின்றி இயங்கி வருகின்றன. தொழில் வளர்ச்சி மிக்க நாடுகளில் ஆயுதத் தொழிற்சாலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு மற்றுமொரு காரணம், ஆயுத வியாபாரம் ஆகும். இதன் மூலம் இந்நாடுகள் பெருத்த இலாபத்தை ஈட்டி வருகின்றன. இதுபோன்ற காரணங்களை ஆளும் வர்க்கம் சுட்டிக்காட்டி, இராணுவச் செலவுகள் அதிகரிக்கப்படும் பொழுது அதனால் கிடைக்கும் இலாபமும்

(குறிப்புக்கான இடம்)

அதிகரிக்கும் என்ற கருத்துக்களை முன் வைத்து தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

## 8.1.2. ஆயுதப் போட்டியும் மூன்றாம் உலக நாடுகளும்

வளர்ச்சியுற்ற நாடுகள் தங்கள் பாதுகாப்புப் பற்றிய பய உணர்ச்சியினாலும் வியாபார நோக்கினாலும் தத்தம் ஆயுத உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வரும் அதே வேளையில், வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளும், அத்தியாவசியத் தேவைகளுக்கென உள்ள வளங்களை இராணுவச் செலவுக்கென திருப்பிவிட்டு அவைகளும் இத்தகைய படைபெருக்கப் போட்டிகளில் ஈடுபட்டுவருகின்றன. இந்த மூன்றாம் உலக நாடுகளில் காணப்பட்டு வரும் ஆயுதப் போட்டி கட்டுப்படுத்த முடியாத அளவில் வளர்ந்து வருகின்றது. தொடக்கத்தில் இந்நாடுகள் நவீன ஆயுதங்களை இறக்குமதி செய்து பின்னர் சிறிது காலம் கழித்து, சம்பந்தப்பட்ட நாடுகளின் அனுமதியுடன் அத்தகைய ஆயுதங்களை தாங்களே தயாரிக்க முனைகின்றன. ஒவ்வொரு பிராந்தியத்திலும் நுழைக்கப்படும் ஒரு புதிய, சக்தி கூடிய ஆயுதம், அப்பகுதியில் காணப்படும் நாடுகளிடையே ஒரு ஆயுதப்போட்டியைத் தொடங்கி வைக்கிறது. ஒரு ஆயுதத்திற்கு இணையான மாற்று ஆயுதம் தேடும் முயற்சியில் நாடுகள் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு நாளும் ஆயுதங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருவதால் இத்தகைய போட்டிகள் முடிவின்றிக் காணப்படுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் ஸ்திரமற்ற நிலைமையையும் பதட்டமிக்க சூழ்நிலைகளையும் வளர்ந்த தொழில் வளமிக்க நாடுகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி தத்தம் ஆயுத வியாபாரம் பெருகும் வகையில் செயல்படுகின்றன. இத்தகைய போக்குகளின் காரணமாக அவைகள் ஆயுதப் போட்டியில் கூட்டாளிகளாகச் செயல்படும் தன்மையும் அதிகரித்து வருகிறது. தங்களுடைய ஆயுத வியாபார கூட்டாளிகளை சரிக்கட்ட வளர்ந்து விட்ட நாடுகள் இராணுவ உதவி, மான்யம் (Military aid) போன்ற கொள்கைகளையும் அது சம்பந்தமான திட்டங்களையும் மேற்கொள்கின்றன. தன்னுடைய எதிரியை விட தன் சக்தி அதிகமாக இருந்தால்போதும் என்ற எண்ணங்கள் மேலோங்கி நிற்கும் மூன்றாம் உலக நாடுகளிடையே தங்களுக்குச் சாதகமிக்க ஆயுதச் சந்தையை உருவாக்கிக் கொள்வதில் வளர்ந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றும் போட்டியிடுகின்றன. இத்தகைய செயல் எதிர்ச்சொல் (ஹஷஞ்கூச்நூசுக்ஹஷஞ்கூச்நூ) காரணிகள் மூன்றாம் உலக நாடுகளிடையே ஆயுதப் போட்டி தொடர்ந்து ஏற்படுவதற்கு வாய்ப்பளித்து வருகிறது.

(குறிப்புக்கான இடம்)

### 8.1.3. ஆயுத வியாபாரமும் அதன் விளைவுகளும்

ஆயுதப் போட்டி அதிகரித்து வருவதன் காரணமாக, பன்னாட்டு அரங்கில் அச்சம் தரும் வகையில் ஆயுத வியாபாரங்களும் பெருகி வருகின்றன. அதிலும் குறிப்பாக அணு ஆயுதம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் அதிகரித்து வருவது உலகில் பதட்ட நிலையை ஏற்படுத்தி வருகிறது எனலாம். கடந்த 30 ஆண்டு காலத்தில் இருவல்லரசுகளும் பிற தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளும், சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு கணக்கற்ற வகையில் வழங்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக அமெரிக்கா, சோவியத்யூனியன், இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய நான்கு நாடுகளும் மொத்த உலக இராணுவ வியாபாரத்தில் 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட அளவில் ஈடுபட்டுள்ளன. இத்தகைய அபாயகரமான வியாபாரத்தின் காரணமாக உலகில் பதட்ட நிலை தொடர்ந்து காணப்பட்டு வருகிறது. எனினும் மூன்றாம் உலக நாடுகளிடையே ஆயுத குவிப்பும் இதுகாறும் கட்டுப்படுத்தப்பட முடியவில்லை. 1972ஆம் ஆண்டு 240 மில்லியன் டாலர் அளவில் இருந்த உலக ஆயுத வியாபாரம், 1976ல் 2300 மில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்தது. 1980 வாக்கில் இந்த வியாபாரத்தின் அளவு சுமார் 30 மில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டது. (1 மில்லியன் டாலர் — சுமார் 1000 கோடி ரூபாய்கள்). சமீப காலங்களில் பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இத்தாலி, ஸ்வீடன் போன்ற நாடுகள் கூட இத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஆயுத ஏற்றுமதி செய்யும் நாடுகள் பல காரணங்கள் கருதி ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அரசியல், இராணுவ மற்றும் பொருளாதாரக் காரணிகள் அதன் பின்னே காணப்படுகின்றன. அமெரிக்காவும் சோவியத்யூனியனும் பெரும்பாலும் அரசியல், இராணுவக் காரணிகளில் ஆயுத வியாபாரத்தை நடத்திவரும் வேளையில் இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் பொதுவாக பொருளாதாரக் காரணிகளால் உந்தப்பட்டு ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. கெடுபிடி காலக்கட்டத்தில் வல்லரசுகள் ஆதரவாளர்களையும் நண்பர்களையும் சம்பாதிக்கும் நோக்கில் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தன. அவைகளை ஆதரித்த நாடுகளுக்கு ஆயுதங்களை எளியமுறையில் குறைந்த விலையில் வழங்கின. தங்களை ஆதரிக்கத்தவறிய நாடுகளுக்கு 'ஆயுத மறுப்பு' செய்யப்பட்டது. ஆனால் ஒரு வல்லரசு ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு ஆயுத மறுப்பு செய்தபொழுது, மற்றொரு வல்லரசு அந்நாட்டின் நட்பை பெறும் நோக்கில் தாராளமாக ஆயுதங்கள் வழங்க முன்வந்தது. உலகின் பல பிராந்தியங்களிலும் பதட்ட நிலை காணப்படுவதால் இவ்வல்லரசுகளின்

(குறிப்புக்கான இடம்)

ஆயுத வியாபாரமும் அமோகமாக வளர்ந்து வருகிறது. ஒரு பதட்டமான சூழ்நிலை அதிகரிக்கும் வேளைகளில் ஆயுத வியாபாரமும் அதிகரிப்பதால் இவ்வல்லரசுகள் அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் தயங்குவதில்லை. வல்லரசுகளின் தலையீடு அதிகமாகும் வேளையில், சம்பந்தப்பட்ட மூன்றாம் உலக நாடுகளின் தகராறுகளுக்கும் விடிவு ஏற்படுவது கடினமாகிவிடுகிறது. வல்லரசுகள், சுயநலம் கருதி, தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் பல திட்டங்களையும், கருத்துக்களையும் உருவாக்கிச் செயல்படுகின்றன இதனை உணராத மூன்றாம் உலக நாடுகளும், வல்லரசுகளின் அரசியலில் சிக்கி தேவையற்ற இராணுவச் செலவுகளை மேற்கொண்டு ஆயுத ஏற்றமதியாளர்களுக்கு ஏராளமான இலாபத்தை ஈட்டித் தருகின்றன.

இத்தகைய ஆயுத ஏற்றுமதி, பெரும்பாலும், சம்பந்தப்பட்ட பிராந்தியங்களில் காணப்பட்டு வரும் வலிமை சமநிலையை பாதிப்பதால், அங்கெல்லாம் பய உணர்வுகளும், ஸ்திரமற்ற நிலையும் உருவாக ஏதுவாகிறது. ஒரு நாடு நவீன ஆயுதங்களை இறக்குமதி செய்யும் பொழுது, அதன் அண்டை நாடுகளும் அதனை சமன் செய்யும் வகையில் தாங்களும் அத்தகைய ஆயுதங்களை இறக்குமதி செய்ய தொடங்குகின்றன. இதன் காரணமாக அங்கு ஆயுதப்போட்டி உருவாகின்றது. வளர்ச்சிப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி, ஆயுத இறக்குமதிக்குப் பெரியளவில் திரும்பப்பெறப்படுகிறது. அவற்றின் எல்லைகளில் அமைதியற்ற சூழ்நிலை காணப்படுவதும் அவைகள் பலவற்றில் உள்நாட்டுப் பிரச்சனைகள் தொடர்ந்து காணப்பட்டு வருவதும் வல்லரசு அரசியலில் குறுக்கிடுவதற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தருகின்றன. புதிய புதிய ஆயுதங்கள் திணிக்கப்பட்டு வரும் மூன்றாம் உலக நாடுகளிடையே தான், இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில், எண்ணற்ற போர்கள் நடைபெற்று வருவதை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இப்போர்களில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட அளவு வளர்ந்துவிட்ட நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகள் ஆகும். வியாபாரத்தை பெருக்க ஆயுதப்போட்டியைத் துவக்குகின்ற வல்லரசுகள், பின்னர் 'ஆயுதச் சமநிலை' ஏற்படுத்தும் நோக்கில் தொடர்ந்து ஆயுத வியாபாரத்தை நடத்தி வருகின்றன. ஆயுதச் சமநிலைப்படுத்தும் முயற்சிகள், போரைத் தடுப்பதற்குப் பதிலாக, அதனை ஏற்படுத்தி வருகின்றன. பல போர்களின் அடிப்படைக் காரணமாக இந்த ஆயுதப்பெருக்கம் காணப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளின் விவகாரங்களில் குறுக்கிடுவதற்கு ஏற்றவகையில் வல்லரசுகள் ஆயுத வியாபாரத்தை பயன்படுத்தி வருகின்றன. ஆயுத

வியாபாரத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகவும் ஆதரவாகவும் செயல்படவைக்க வல்லரசுகள் தொடர்ந்து முயன்று வருகின்றன. இத்தகைய கட்டுப்பாடற்ற ஆயுத வியாபாரங்கள் நடைபெறும் வரையில் உலகில் நிரந்தர அமைதி ஏற்படுத்தப்படுவது இயலாத ஒன்றாகும்.

### 8.1.4. அணுசக்தி பற்றிய பிரச்சனைகள்

இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் உலகெங்கிலும், அதிலும் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் எரிசக்தியின் (நுநெசபல) தேவை மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. அதேவேளையில் சக்தியை உருவாக்குவதில் நிலக்கரியின் பங்கு குறைவுபட்டும், எண்ணெய் மற்றும் வாயுக்களின் பங்கு இக்காலகட்டத்தில் உயர்ந்தும் வருகின்றது. இரண்டாம் உலகப்போர் முடிந்த வேளைகளில் எண்ணெயின் விலை மிகவும் குறைந்து காணப்பட்டதால் அதனையே பெரும்பாலான நாடுகள் தங்கள் எரிசக்தியின் மூலப்பொருளாகப் பயன்படுத்தி வந்தன. மாற்று வழிகள் கண்டறியப்படுவது அவசியமற்றதாக விளங்கியது. ஆனால் அடுத்த 20 ஆண்டுகளில் எண்ணெயின் தேவை பன்மடங்காக அதிகரிக்கலாயிற்று. வளர்ந்து வரும் நாடுகளும் தங்களைத் தொழில்மயப்படுத்திக்கொள்ள பல தீவிர முயற்சிகள் மேற்கொள்ளவே எண்ணெயின் தேவை பெருகலாயிற்று. உலகின் எண்ணெய் வளம் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படினும், தேவைகள் மென்மேலும் பெருகும் வேளையில், எவ்வளவு காலம் அது நீடித்திருக்கும் என்பது ஒரு வினாவாக எழுந்தது எந்த ஒரு இயற்கைவளமும் கணக்கற்ற ஆண்டுகள் நீடித்திருக்க முடியாது என்ற சூழ்நிலையில், எண்ணெய் வளமும் ஒரு காலக்கட்டத்தில் தீர்ந்து போகக்கூடும் என்ற கருத்து மேலோங்கலாயிற்று. அத்துடன் நாளுக்கு நாள் எண்ணெயின் தேவையும் அதிகரித்து வந்தது நாடுகளை மாற்று வழியை நாடத் தூண்டின. நவீன உலகில், நாடுகளின் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சிகளும் அரசியலில் நிலைத்தன்மையும் பெரும்பாலும் எரிசக்தி அளவைச் சார்ந்து காணப்படுவது என்றால் மிகையாகாது.

இத்தகைய சிந்தனைகள் வளர்ந்து வந்த வேளையில், 1973ம் ஆண்டு உலக நாடுகள் ஒரு 'எண்ணெய் சிக்கலை' சந்திக்க நேரிட்டது. அவ்வாண்டில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் எண்ணெய்க் கட்டுப்பாட்டை உருவாக்கி அதன் மூலம் சில அரசியல் இலாபங்களை அடைய முயன்றன. இதன் காரணமாக உலக நாடுகள் பலவற்றின் பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்குள்ளாயிற்று. எண்ணெயின் விலை உயர்த்தப்பட்ட அதேகாலங்களில், நிலக்கரி மற்றும் வாயுக்களின் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது. இத்தகைய புதிய சூழ்நிலைகள் வளர்ந்து

(குறிப்புக்கான இடம்)

வரும் நாடுகளை அணுசக்தியை நடத்த தூண்டின. வளர்ந்த தொழில் நுட்பச் சிறப்புப்பெற்றுள்ள மேலை நாடுகள் பல ஏற்கனவே அணுசக்தியை தங்கள் நாடுகளில் பயன்படுத்தி வந்தது இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. எனவே 1970 ஆம் ஆண்டுகளில் அணுசக்தி ஆராய்ச்சிகளும், அணுமின் சக்தி நிலையங்கள் ஏற்படுத்துவது குறித்த ஒப்பந்தங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. வளர்ந்த மேலை நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு அணுமின்சக்தி அமைப்புகள் உருவாக்கிக் கொடுக்க முன்வந்தன. அதனால் அணுசக்தி சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவலாயிற்று.

அணுசக்தி நுட்பம் இரண்டு வகைகளில் பயன்படுத்தப்படலாம் ஒன்று, மின்சக்தி தயாரிப்பது போன்ற முன்னேற்றம் விளைவிக்க வல்ல அமைதி வழியாகும். மற்றொன்று, அணு ஆயுதங்கள் தயாரிப்பது போன்ற ஆபத்தான பாதையாகும், துரதிரஷ்டவசமாக, இரண்டு வழிகளுக்குமுள்ள இடைவெளி மிகவும் குறுகிய ஒன்றாகும். எனவே, அணுமின் சக்தி தயாரிக்க உதவும் தொழில் நுட்பத்திலிருந்து அணு ஆயுதங்களை தயாரிக்கும் நுட்பத்தைப் பெறுவது மிகவும் எளிதான ஒன்றாகும். இதனால் உலகின் பல பகுதிகளிலும் அணு ஆயுதம் பரவும் அபாயகரமான போக்கு தற்காலத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. இதுவரை, ஐந்து நாடுகள் அணு ஆயுதங்களை தயாரித்து உள்ளன. அமெரிக்கா, சோவியத்யூனியன், இங்கிலாந்து, பிரான்சு, சீனா ஆகியவை அவ்வைந்து நாடுகளாகும். இது தவிர மற்றும் சில நாடுகளும் அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. உலகெங்கிலும் அணு ஆயுதம் பரவுகின்ற வேளையில் ஒரு அணு ஆயுதப்போர் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகுந்து காணப்படும். திட்டமிட்ட அணு ஆயுதப்போர் வராது போனாலும், தற்செயலான காரியங்களாலும், அணு விபத்துக்களின் மூலமாகவும் ஒரு அணு ஆயுதப்போர் வரக்கூடும். அத்தகைய போர் ஒன்று ஏற்படும் வேளையில் மனித குலமே அழிந்து போய்விடும் என்பது திண்ணம்.

இதனைத் தடுக்கும் வகையில் வல்லரசுகள் 1968–ஆம் ஆண்டு 'அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம்' மேற்கொண்டன. இதன் மூலம் அணுசக்தி பற்றிய நுட்பங்களை பரிமாற்றிக் கொள்ள ஏற்றுமதி செய்யும் நாடுகள் இறக்குமதி செய்யும் நாடுகளின் மீது ஏராளமான கட்டுப்பாடுகளை விதித்தன. இத்தகைய கட்டுப்பாடுகள், இந்தியா, எகிப்து, பிரான்சு, சீனா, பிரேசில் போன்ற நாடுகளுக்கு ஏற்புடையதாக இல்லாததால், அவைகள் இவ்வொப்பந்தத்தை ஏற்க மறுத்தன. அணு ஆயுதங்கள் இவ்வுலகைவிட்டே நீக்கப்படவேண்டும் என்பதில் இந்நாடுகளுக்கும்

பொதுவான விருப்பம் இருப்பினும் அவ்வொப்பந்தத்தின் மூலம் வல்லரசுகள் தங்களுக்கு மட்டும் சாதகமான சூழ்நிலையை உருவாக்க நினைத்ததால் இந்நாடுகள் அதனை புறக்கணித்தன. அதிலும் நாடுகளின் இறையான்மையைக் கட்டுப்படுத்துவதாக அந்த ஒப்பந்தம் அமைந்ததும் அதற்கு எதிர்ப்பினை ஏற்படுத்தியது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பல இதில் பங்கேற்க மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கதாகும். பிறநாடுகளின் அணுசக்தி ஆராய்ச்சிகளை கட்டுப்படுத்த விழையும் வல்லரசுகள் தங்களின் அணு ஆராய்ச்சியையும், அணு ஆயுதங்களையும் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிகள் எதுவும் எடுக்காதது அவற்றின் மீது சந்தேக உணர்வை ஏற்படுத்தி வருகிறது. இந்த உலகம் முழுவதையும் அழிக்க நூறு ஏவுகணைகளே போதும் என்ற நிலையில், வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கில் ஏவுகணைகளை வைத்துள்ளன.

அணு ஆயுதங்கள் அழிவைத்தரும் என்ற சூழ்நிலையிலும் வல்லரசுகளும் பிறநாடுகளும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து வருகின்றன. அணு ஆயுதங்களில் முடக்கப்படும் பணத்தை நாடுகளின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிட்டால் எல்லோருக்கும் மிகவும் பலன் கிடைக்கும். இல்லாவிடில் நாளடைவில், ராணுவச் செலவுகள் மிகவும் அதிகரித்து உலகம் ஒரு அபாயகரமான பாதையில் போக நேரிடும். அணு ஆயுதங்களில் முடக்கப்படும் பணம் வீணாண ஒன்றே என்று கருத வேண்டும் ஏனென்றால், அவ்வாறு தயாரிக்கப்பட்ட அணு ஆயுதங்களைப் போரில் பயன்படுத்த முடியாது. அப்படிப் பயன்படுத்தினால் யாருக்கும் வெற்றி கிட்டாது. உதாரணம் ஒரு அணு ஆயுதப் போர் இவ்வுலகம் முழுவதையும் அழித்துவிடக்கூடும். எனவே மனிதகுலம் நலம் கருதி அணு ஆயுதங்கள் அறவே அழிக்கப்படுவதும், அதுபற்றிய நுட்பம் பரவுவது தவிர்க்கப்படுவதும் இன்றியமையாதது ஆகும்.

**பகுதி அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் ( PTBT)**

1945—ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட அணு ஆயுதத்தின் விளைவாக உலக நாடுகள் படைப்பல போட்டியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சியில் இறங்கின. 1945—ஆம் ஆண்டு முதல் 1963—ஆம் ஆண்டு வரை எடுக்கப்பட்ட உலக நாடுகளின் முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதில் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட முற்சியின் விளைவாக பகுதி நேர அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் 1963—ஆம் ஆண்டு ஏற்பட்டது. அப்பொழுது இந்த ஒப்பந்தத்தில் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன்

(குறிப்புக்கான இடம்)

கையெழுத்திட்டன. இவ்வொப்பந்தம் உறுப்பு நாடுகள் விண்வெளியில் அணுஆயுதச் சோதனைகள் மேற்கொள்வதை தடை செய்தது.

இவ்வொப்பந்தத்தில் பங்கேற்குமாறு பிற நாடுகளும் அழைக்கப்பட்டன. இவ்வொப்பந்தத்தின் முக்கிய சரத்துக்கள் பின்வருமாறு:

இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் அணு ஆயுதச் சோதனையை தங்கள் எல்லைக்குள் எங்கும் செய்வதில்லை என்றும் மற்றும் தடைக்கும் உறுதியளித்தன. அதேபோல் மற்ற நாடுகள் அணு ஆயுதச் சோதனைச் செய்வதற்குக் காரணமாகவோ, உறுதுணையாகவோ இருக்க மாட்டோம் என்று உறுதி அளித்தன. ஆனால், இவ்வொப்பந்தம் பூமிக்கடியில் அணு அயுதச் சோதனை செய்வதைத் தடைசெய்யவில்லை. இப்பகுதி அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் 1963—ஆம் ஆண்டு அக்டோபர் 10ந்தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

இவ்வொப்பந்தம் உலக நாடுகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் இல்லாமல் எதிர்காலத்தில் பல அணு ஆயுதச் சோதனைத் தடை மற்றும் படைக்குறைப்பு ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்கு வழி வகை செய்தது. 1987—ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் எண்ணிக்கை 116—ஆக உயர்ந்தது. இதில் இந்தியாவும் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கதாகும். பன்னாட்டு உறவில் இவ்வொப்பந்தம் முக்கிய உரைகல்லாகும் என்று நேரு அவர்களால் புகழப்பட்டது.

## அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (Nuclear Non-Proliferation Treaty, 1968)

இந்த ஒப்பந்த வரைவு அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனால் 1968—ஆம் ஆண்டு மார்ச் 11—ஆம் நாள் ஐ.நா. பொதுச்சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. விரிவான விவாதத்திற்கு பின் ஐ.நா. பொதுச்சபையால் 1968—ஆம் அண்டு ஜூன் 12ம் நாள் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டனர். இவ்வொப்பந்தம் ஒரே நேரத்தில் லண்டன், மாங்கோ மற்றும் வாசஷிங்டன் நரங்களில் கையெழுத்திடப்பட்டு மார்ச் 5ம் தேதி 1970 முதல் நடைமுறைக்கு வந்தது. ஜனவரி 1, 1987—ஆம் ஆண்டு இவ்வொப்பந்தத்தில் 136 நாடுகள் கையெழுத்திட்டன. இவ்வொப்பந்தம் ஒரு முகவுரை மற்றும் 11 விதிகளைக் கொண்டதாகும். இவ்வொபந்தத்தின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1. இவ்வொப்பந்தப்படி, அணு ஆயுத நாடுகள் தங்களுடைய ஆயு ஆயுதங்களை அல்லது அணு ஆயுத வெடிப் பொருள்களை மற்ற

(குறிப்புக்கான இடம்)

நாடுகளுக்கு நேராகவோ அல்லது மறைமுகமாகவோ விற்பதில்லை என்பது இதன் முக்கிய கூறாகும்.

2. அணு ஆயுதம் இல்லாத நாடுகள் பிற நாடகளில் இருந்து அணு அயுதம் அல்லது அணு ஆயுதக் கருவிகள் அல்லது அணு ஆயுத வெடி பொருள்களைப் பெறுவதில்லை என்று உறுதியளித்தனர்.
3. இவ்வொப்பந்நம், உறுப்பு நாடுகள் அணு ஆயுதங்களை வளர்ச்சி, ஆய்வு, உற்பத்தி மற்றும் அமைதி பணிக்கு பயன்படுத்துவதைத் தடை செய்யல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியா போன்ற நாடுகள் இந்த ஒப்பந்தம் ஒரு தலைபட்சமாக் காணப்படுகிறது என்று குற்றம் சாட்டினர். ஏனெனில் இவ்வொப்பந்தம் பிற நாடுகள் அணு நுட்பத்தை அறிவதைத் தடை செய்ய முயன்றனவேயன்றி, ஏற்கனவே அந்த நுணுக்கங்களைப் பெற்றிருக்கும் நாடுகளை எவ்விதக் கட்ப்பாட்டிற்கும் உள்ளாக்கவில்லை என்பது குறையாகும். இருப்பினும், இவ்வொப்பந்தம் இதுவரை சண்டையிட்டுக் கொண்டிருந்த வல்லரசுகளை ஓரளவு நெருங்கி வர வழிவகை செய்தது என்றால் அது மிகையாகாது.

## அமைதி நிலைக்குரிய அணு ஆயுதச் சோதனை (PNE)

உலகத்தில் எப்பொழுது முதல் ஆணு ஆயுத சோதனை செய்யப்பட்டதோ, அப்பபொழுதே இச்சோதனை உற்பத்திப் பணிக்கு பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது எனலாம். 1949—ஆம் ஆண்டு சோவியத் ரக்ஷ்யா முதல் அணு அயுதச் சோதனை செய்த பொழுது, அப்போதைய சோவியத் ரக்ஷ்யாவின் வெளித்துறை அமைச்சர் இச்சோதனை மலைகளை அகற்றுவதற்கும், கால்வாய்களை அமைப்பதற்கும் மற்றும் ரோடுகள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும் என்று கூறினார். இருந்தபோதிலும், உலக நாடுகள் இக்கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. 1953—ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன் கோவர் (Eisenhover) ஐ.நா. சபையில் அமைதிக்கு அணு ஆயுதம்' என்ற தலைப்பில் உரையாற்றிய பிறகு இக்கொள்கை மேலும் உலக நாடுகளிடையே முக்கியத்துவம் பெற ஆரம்பித்தன. அணு அயுதச் சோதனையை உற்பத்தி மற்றும் அமைதிக்குப் பயன்படுத்துவதற்கான முயற்சியாக 1955—ஆம் ஆண்டு முதல் 1971—ஆம் ஆண்டு வரை நான்கு மாநாடுகள் ஜெனிவாவில் நடத்தப்பட்டன. (1955, 1958. 1964, மற்றும் 1971), இம்மாநாடுகளின் முக்கிய விவாதம் அணு அயுதச் சோதனையை எவ்வாறு நாட்டின் உற்பத்தி மற்றும் அமைதிக் காரியங்களில் பயன்படுத்தவது பற்றியதாகும். இதன் தொடர்பாக, ஐ.நா.சபையின் 1949—ம் ஆண்டு ஜனவரி, 1ந்தேதி,

(குறிப்புக்கான இடம்)

சோவியத் ரக்ஷ்யாவின் தூதுவர் அணு ஆயுதச் சோதனை மலைகளை அகற்றுவதற்கும், பாலைவனங்களில் விவசாயம் செய்வதற்கும் மற்றும் காடுகளை அழிப்பதற்கும் பயன்படுகிறது என்று கூறினார்.

1958—ஆம் ஆண்டு அணு ஆயுதச் சோனையை அமைதிப் பணிக்கு பயன்படுத்துவது பற்றிய விக்ஷயமாக இரண்டாவது மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் அமெரிக்க விஞ்ஞானிகள் அணு ஆயுதச் சோதயையை எவ்வாறு அமைதிப் பணிக்குப் பயன்படத்தலாம் என்பதை கோடிட்டுக் காட்டினார்கள். இக்கொள்கையை மேலும் வலுப்படுத்துவதற்காக 1964 மற்றும் 1971—ஆம் ஆண்டு மாநாடுகள் நடைபெற்றன. இம்மாநாடுகள், அணு அயுதச் சோதனையை மனிதகுல நல்வாழிவிற்குப் பயன்படுத்துவ்தென்று தீர்மானித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## முழு அளவிலான அணு ஆயுத தடை ஒப்பந்தம்

அணு ஆயுதங்கள் பற்றிய முந்தைய PTBT, NPT ஆகிய ஒப்பந்தங்கள் திருப்தி அளிக்கத் தவறியதால் புதிய ஒரு ஒப்பந்தத்தின் தேவை உணரப்பட்டது. இது 1991—ல் இருந்தே உணரப்பட்டாலும் 1993 டிசம்பர் 16—ஆம் தேதிதான் இதற்கான பேச்சு வார்த்தை ஆயத்தங்களுக்கான தீர்மானம் ஐ.நா.வால் ஏற்கப்பட்டது. அமெரிக்கா முதல் நாடாகக் இதில் தையெழுத்திட்ட போதிலும் அமெரிக்க செனட் இதற்கு ஒப்புதலளிக்க மறுத்தது. இந்தியா இவ்வொப்பந்தத்தை ஏற்கவில்லை. 1998—ல் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே தத்தம் அணு ஆயுதங்களை வெடித்து சோதனையைத் தானாக முன்வந்து நிறுத்திவிட்டதாகக் கூறினர்.

CTBT எனும் ஒப்பந்தம் எந்த ஒரு நாடும் அணு வெடியை ஆயுதங்களுக்காகவோ அல்லது வேறெதற்குமோ பயன்படுத்துவதிலிருந்து தடை செய்கிறது. இதற்காக CTBTO எனும் அமைப்பை நிறுவியுள்ளது. இதில் பன்னாடுகளின் மாநாடு செயற்குழு, செயல்நுட்பக் காரியாலயம் ஆகியன அடங்கும். ஆயுதப் பரிசோசதனை போன்றவற்றில் ஐ.நா. விற்கு இக்குழு உதவி செய்கிறது.

## காலனி ஆதிக்க முறை

### 8.1.5. காலனி ஆதிக்கமுறையும் குடியேற்ற கோட்பாடும்

வெள்ளையரின் கட்டுப்பாடு (WhiteMan's Burden) என்ற கருத்தை எடுத்தியம்பி தற்கால ஆதிக்க ஆட்சி முறையையும் குடியேற்றக் கோட்பாட்டையும் சிலர் ஆதரிக்கினறனர். பின்தங்கிய நாடுகளை முன்னேற்றுவது வளம் பெற்ற நாடுகளின் கடமை என்று இவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு மேற்கத்திய நாடுகள் பின்தங்கிய நாடுகளைப் பண்பாடுடையதாய் மாற்றவும், அந்நாட்டு மக்களைப் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யவும், இவர்களின் தொழிலின் மதிப்பைக் கற்றுக் கொடுக்கவும், சட்டம், ஒழுங்கு ஆகிய கோட்பாட்டின் சிறப்பினை அம்மக்களுக்கு உணர்த்தவும், ஆதிக்க ஆட்சிமுறை மற்றும் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தனர். இக்கோட்பாட்டினை ஆதரிப்பவர்கள் சுதந்திர அரசுகள் தோன்றியமைக்கும், 20ம் நூற்றாண்டின் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சிக்கும் முன்விளைவாக இக்கோட்பாட்டினைஎடுத்தியம்புகின்றனர். பேரரசு நிறுவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் மேலும் பெரிய பேரரசுகளை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் இக்கோட்பாட்டினைப் பின்பற்றனர் என்று அக்கோட்பாட்டை எதிர்த்தவிமரிசகர்கள் பறையாற்றினர் எவ்வாறிறெனினும் ஆதிக்க ஆட்சிமுறையும், குடியேற்றக் கோட்பாடும் தேசீயக் கொள்கையை நிறைவேற்றும் வழிமுறையாக பல்லாண்டு காலம் உலக அரங்கில் கடைபிடிக்கப்பட்டன.

### 8.1.6. ஆதிக்க ஆட்சியின் பொருள் விளக்கம்

ஆதிக்க ஆட்சியை விவரிக்கவும் கண்டிக்கவும், ஆதரிக்கவும் முடியும் ஆனால், பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன அளவில் ஆதிக்க ஆட்சிக்குப் பொருள் விளக்கம் அளிக்க இயலாது பல்வேறானோர் பல்வேறான அளவில் இதற்குப் பொருள் விளக்கம் அளித்துள்ளனர். ஒரு பேரரசை உருவாக்கி, அமைத்துப் பாதுகாக்கும் கொள்ளை ஆதிக்க ஆட்சிக் கொள்கையாகும். பல்வேறான தேசீய அமைப்புகளைக் கொண்ட பெரிய அளவிலான ஒரு அரசை அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் அதிகாரத்தின் கீழ் அமைத்தல் ஆதிக்கம் ஆட்சி என்று மாரிட்ஸ் ஜீலியஸ் பான் (Moritz Julius Boon) என்பவர் கூறுகின்றார்.

(குறிப்புக்கான இடம்)

அரசாங்க அல்லது அரசியல் தந்திர நடவடிக்கைகளை, நிலப்பகுதிகளையும் காப்பாட்சிப் பகுதிகளையும் மற்றும் பிற வர்க்கத்தினர் அல்லது மக்கள் வாழும் பகுதிகளையும் தங்கள் தொழில், வாணிபம் முதலீட்டு வாய்ப்பு போன்றவற்றை வளர்க்க அல்லது அடைய பயன்படுத்துவது ஆதிக்க ஆட்சியாகும் என்று சார்லஸ் ஏ பியர்ட் (Charles A Beard) என்பவர் கூறுகின்றனர்.

ஐரோப்பியர் அல்லாத வேற்றுநாட்டுக் குடிமக்கள் மீது வேறுபாட்டுத் தன்மை படைத்த ஐரோப்பிய நாட்டினர் ஆதிக்கம் செலுத்துதல் ஆதிக்க ஆட்சியாகும் என்று பார்க்கர் மூன் (Parker T.Moon) என்பவர் கூறுகின்றனர்.

பான் என்பவரின் விளக்கத்தில் சிறிய அளவிலான ஆதிக்க ஆட்சிக்கு இடமில்லாத அலவில், பெரிய அளவிலான அரசு அமைப்பிற்கே முக்கியத்துவம் வழங்கியுள்ளார். பியர்ட் என்பார் ஆதிக்க ஆட்சியில் பொருளாதார செயல் நோக்கத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துள்ளார். மேலும் அவர் நேரடி அரசாங்க நடவடிக்கையை ஆதிக்க ஆட்சியிலிருந்து பிரிக்க இயலாது என்கிறார். முன் தனது பொருள் விளக்கத்தில் வர்க்க பேதத்திற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். ஆனால் மார்க்கந்தோ பொருளாதார செயல் நோக்க நிலைக்கும், அளவின் தன்மைக்கும் வர்க்க பேதத்திற்க்கும் தனது பொருள் விளக்கத்தில் இடம் அளிக்கவில்லை. ஒரு அரசின் அதிகாரத்தை அந்நாட்டின் எல்லைக்கு அப்பால் பரப்புதல் ஆதிக்க ஆட்சி என்று மார்ந்தோ கூறுகின்றார். லெனின் பொதுவுடைமை தத்துவத்தில் மரபார்ந்த கருத்தின் அடிப்படையில் ஆதிக்க ஆட்சி பொருளாதார அடிப்படையில் மட்டும் ஏற்படுவது அல்ல: உலக அரங்கின் முதலாளித்துவக் கொள்கையின் புரட்சியில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாகும் ஒன்று என்று கூறுகின்றனர்.

இப்பொருள் விளக்கங்களுக்கிடையே ஒரு இசைவைத் தோற்றுவிப்பது ஒன்றாகும். ஆனால், இப்பொருள் விளக்கங்களில் இருந்து எண்ணற்ற பயன்தரும் காரியங்களை உயர்த்துணரலாம். பல தீய காரியங்களை மறைக்கும் ஒரு மதமாக ஆதிக்க ஆட்சி காணப்படுகின்றது. ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளும் நீதிக்குப்புறம்பான நடவடிக்கைகள் ஆதிக்க ஆட்சி நடவடிக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன. மேலும் ஆதிக்க ஆட்சி நடவடிக்கை என்பது ஆக்கிரமிப்புப் போரையும் குறிக்கும் ஆதிக்க ஆட்சி, ஆட்சிப்பகுதியில்

வாழும் மக்களின் நலனில் அக்கறை கொண்டும் அல்லது அக்கறை கொள்ளாமலும் செயல்படலாம். முன்னேற்றம் ஏற்படுத்தும் அல்லது சுரண்டி வாழும் ஆட்சியாகவும் ஆதிக்க ஆட்சி அமையலாம். சில நேரங்களில் சுயாட்சி அரசாங்க ஆற்றலை ஆதிக்க ஆட்சி வளர்க்கும்: அல்லது அவ்வெண்ண உணர்வுகளை அடக்கி ஆளும். கடைசியாக பொருளாதார ரீதியாக இலாபகரமாக ஆதிக்க ஆட்சி நிகழலாம் அல்லது நஷ்டத்தை கொண்டுவரலாம். ஆதிக்க ஆட்சி ஒருபகுதியில் வாழும் மக்களை இன்னொரு பகுதியில் வாழும் மக்கள் மற்றும் அரசாங்க அமைப்பின் கீழ் கொணர்ந்து அவர்களுக்கிடையே ஒரு சார்பு நிலையைத் தோற்றுவிக்கின்றது.

### 8.1.7. குடியேற்றக் கோட்பாட்டின் பொருள் விளக்கம்

"நன்குணர்ந்த நிலையில் கூறுமிடத்து குடியேற்ற கோட்பாடு என்பது தேசியம் தேவைக்கு அதிகப்பட்ட அளவில் இயற்கையாக இன்னொரு இடத்தை அடைவது தாங்கள் குடியேறிய புதிய இயற்கை மற்றும் சமூக சூழ்நிலையில் குடியேறியவர்கள் தங்கள் பண்பாட்டை பதிய வைப்பார்கள்" -- ஜெ.ஏ. ஹாப்ஸன்.

ஹாபிஸன் மனதில் கொண்ட குடியேற்றக் கோட்பாட்டில் நிலவிய பெற்றோர் குழந்தைகள் உறவை பிற்காலத்தில் தோன்றிய எழுத்தாளர்களும் வலியுறுத்தினர். "சச்சரவுகள் அதிகமில்லாத அளவில் தற்செயலான முறையில் ஐரோப்பியர்களுடைய விருப்பங்களுக்குக் கட்டுப்படுகின்ற யாரும் குடியேறாத பகுதிகளை தங்களுடைய வாழ்விற்காக ஆக்கிரமித்தல் குடியேற்றக் கோட்பாடு என்று விண்ஸ்லோ (Winslow) என்பவர் கூறியுள்ளார்.

ஆதிக்க ஆட்சி, குடியேற்றம் போன்றவைகளைப் பற்றி தெளிவான பொருள் விளக்கங்கள் அளிக்க முடியாது அல்லது இரண்டையும் ஒன்றிலிருந்து இன்னொன்றைத் திட்டவட்டமாக பிரிக்க இயலாதது குறிப்பிடத்தக்கது. இரண்டு பதங்களும் பொதுவாக மேல்நிலையாளர் மற்றும் கீழ் நிலையாளர் ஆகியோரிடையே நிலவும் உறவை குறிக்கிறது. இன்று இவ்விரண்டு பதங்களும் ஒன்றிலிருந்து மற்றொன்றைவிட ஒரு பெரிய அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

(குறிப்புக்கான இடம்)

## ஆதிக்க ஆட்சியும் தேசியமும்

ஆதிக்க ஆட்சியும் தேசீயமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஹோன்ஸ்கான் என்பார் கூறுகின்றார். தேசீயம் ஆரம்பித்த நடவடிக்கைகளின் இந்திய வளர்ச்சிப்படியாக ஆதிக்க ஆட்சியைக் கூறுகின்றனர். அரசியல் ரீதியில் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஒரு அரசு அமைப்பின் கீழ் ஒரு நாட்டு மக்களை ஒன்றுசேர்க்க தேசீயம் முயற்சிக்கின்றது. அம்முயற்சி வெற்றி பெற்றால், நிலப்பகுதிகளை அதிகரிக்கும் போராட்டம் தொடர்கிறது. பிறகு, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் அல்லது பிரிவினரின் தேசீயத்தை ஆதிக்க ஆட்சியும், தேசீயமும் ஒன்றோடொன்று பிணைந்து காணப்படுகிறது.

## ஆதிக்க ஆட்சியின் செயல் நோக்கங்கள்

மதிப்பிட இயலாத அளவிலான பலன்களை, கட்டுப்படுத்தும் நாடு ஆதிக்க ஆட்சியில் அடைவதால் ஆதிக்க ஆட்சிக் கோட்பாட்டை சில நேரங்களில் நாடுகள் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளன, பன்னாட்டுச் சமூகத்தில் மதிப்பிட முடியாத இப்பலன்கள், அந்தஸ்தை நிலைநாட்டி அடையாளச் சின்னங்களாக ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்நிலையில் ஆதிக்க ஆட்சியை நிறுவதில் ஏற்பட்ட பகைமைகள், நாடுகளிடையே போட்டிகளையும் சச்சரவுகளையும் தோற்றுவித்தன. இப்போட்டிகளும் சச்சரவுகளும் முக்கியமாக பன்னாட்டுப் பொருளாதாரத்தில் பிரதிபலித்தது. போரில் ஈடுபடும் தேசீயத்தை ஆதிக்க ஆட்சிப்போட்டி வளர்த்தது. கடந்த மூன்று நூற்றாண்டில் நடந்தேறிய பெரும்பாலான போர்களின் முக்கிய காரணமாக ஆதிக்க ஆட்சிப் போட்டியே அமைந்தது.

சில நேரங்களில் பொருளாதார அடிப்படையிலும், சில நேரங்களில் இராணுவ அல்லது உலவார்ந்த அடிப்படையிலும், சில நேரங்களில் மாறுபாடு படைத்த பல அடிப்படைகளிலும் ஆதிக்க ஆட்சி செயல்பட்டது. தற்காப்பு இதனுடைய குறிக்கோளாக அமைகிறது. இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் பின்தங்கிய பகுதிகளும், பின்தங்கிய மக்களுமாகும். ஆதிக்க ஆட்சி அதிகாரத்தினால் உருவாக்கப்பட்ட ஆளுகை முற்றிலும் அடக்கி ஆளும் குணநலன் கொண்ட அல்லது விழிப்புணர்வு கொண்ட மனிதாபிமான குணநலன் படைத்ததாய்க் காணப்படுகிறது.

(குறிப்புக்கான இடம்)

## நவீன ஆதிக்க ஆட்சி

நவீன ஆதிக்க ஆட்சியின் தூண்டுதல் 1870ஆம் ஆண்டு துவங்கியது இங்கிலாந்து தொழில் ரீதியிலான தனது எதிரிகளின் போட்டியை உணர ஆரம்பித்தது. உற்பத்தி செய்யும் நாடுகள் பாதுகாப்பிற்காக தாங்கள் சந்தைகளில் காப்புவரியை அதிக அளவில் விதித்தனர். மேலும், கடுமையாக வெளிச் சந்தைகளுக்கான போட்டியில் இறங்கினர். உலகவாணிபத்திற்கும் பிற பகுதிகளை அபகரிப்பதற்கும் உகந்த வசதிகளை கப்பல்களம் இரயில்வேக்களும் உருவாக்கிக் கொடுத்தன. தொழில் கூடங்கள் நிறைந்த நகரங்களும் தாதுப்பொருட்களும், உணவுப்பொருட்களும் தேவைப்பட்டது. மிகையான மூலதனம் தேங்கிய நாடுகள், அம்மூலதனத்தை முதலீடு செய்ய பின்தங்கிய நாடுகளை நாடலாயின. மேற்கூறிய காரணங்களினால், பழைய முற்போக்கு எண்ணங்கொண்ட தனியார் நலக்கொள்கையின் மேல் நவீன பொருளாதார தேசீய தத்துவம் வெற்றி கண்டது. ஆதிக்க ஆட்சியை எதிர்த்த கட்டுப்பாடற்ற வியாபாரத்தை பின்பற்றிய ஐரோப்பா ஆதிக்க ஆட்சி நாடாக மாற்றப்பட்டது.

பல வழிகளில் ஆதிக்க ஆட்சி கட்டுப்பாடு நிலைநிறுத்தப்பட்டது. முழு அளவிலான இராணுவ ஆக்கிரமிப்பின் வாயிலாக சில நேரங்களில் ஆதிக்க ஆட்சி நிறுவப்பட்டது. சமநிலையற்ற இரு அரசுகளிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் சில நேரங்களில் ஆதிக்க ஆட்சி நிறுவப்பட்டது. இம்முறைகளைத் தவிர்த்து இன்னும் சில வழிமுறைகளையும் கபடம் நிறைந்த ஆதிக்க ஆட்சியாளர்கள் பின்பற்றினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகள் வலிமையினால் அச்சுறுத்தல், பொருளாதார ஊடுருவலினால் சீர்குலைத்தல் வெளி அரசைச் சார்ந்த நண்பர்களை உருவாக்கி நாட்டை ஆள்பவரின் மதிப்பைக் குறைத்தல் போன்றவையாகும். சில நேரங்களில் போரில் கைப்பற்றிய திறமையாக குடியேற்றப் பகுதிகள் அமைந்தன. சில நேரங்களில் குடியேற்றப் பகுதிகள் ஒருவரால் இன்னொருவருக்கு விலைக்கு அளிக்கப்பட்டன. மேலும், பொதுவாக்கெடுப்பின் மூலம் தாங்கள் இன்னொரு அரசின் ஆளுகையின் கீழ் செயல்பட சில அரசுகள் இசைவு அளித்தன.

மேற்கூரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஐரோப்பிய அரசுகள் உலகில் காணப்பட்ட பல பிற்பட்டடப் பகுதிகளைப் பிரித்தாண்டன. அதே நேரத்தில் சூட்சுமமான சில வழி முறைகளைப் பின்பற்றி ஐரோப்பிய அரசுகள் சிறிது பின்தங்கிய பகுதிகளில் தங்கள் நலனை முன்னேற்ற முனைந்தன. பல

(குறிப்புக்கான இடம்)

ஐரோப்பிய அரசுகள் கூட்டுக் குத்தகைப் பகுதிகளை சீனாவில் பெற்றன. பெர்சியாவை தங்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியாக பிரிட்டனும், ரஷ்யாவும் தங்களுக்குள் பிரித்துக்கொண்டன. துருக்கியில் பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் தங்கள் ஆதிக்கப்பகுதிகளை ஏற்படுத்திக் கொண்டன. ஆப்பிரிக்காவில் சிலபகுதிகளில் முதலில் ஐரோப்பிய ஆதிக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் அப்பகுதிகள் ஐரோப்பிய அரசுகளுடன் இணைக்கப்பட்டன.

### அந்நாட்டு மக்கள் மீது ஆதிக்க ஆட்சி ஏற்படுத்திய விளைவுகள்

1920ஆம் ஆண்டின் மத்திய காலம் வரை, உலகிலுள்ள பாதி நிலப்பகுதியும், உலகின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியும் குடியேற்ற அந்தஸ்து படைத்தவையாக நிகழ்ந்தன. குடியேற்றப் பகுதியில் இருந்து பெறும் இலாபம் அப்பகுதியில் வாழும் மக்களின் உழைப்பை சார்ந்தே அமைந்தது. எனவே குடியேற்றப் பகுதியில் வாழும் மக்களை வைத்து நிலத்தை உழவும், தங்கத்தைத் தோண்டியெடுக்கவும் ரப்பரை திரட்டவும், தந்தத்தை வேட்டையாடிப் பெறவும் உகந்த முறைகளைக் கண்டுபிடிப்பதற்காக, ஆதிக்க ஆட்சிக் கொள்கையைப் பின்பற்றிய அரசுகள் கடினமான முயற்சியை மேற்கொண்டன. அடிமைத்தனம், கட்டாய உழைப்பு அதிகமான அளவில் வரிவிதிப்பு, நிலப்பறிமுதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி அந்நாட்டு மக்களைக் கொண்டு பணிகளை நடத்திவைக்கும் முறையில் ஆதிக்க ஆட்சியாளர்கள் வெற்றி கண்டனர். சில நேரங்களில் அப்பகுதியில் வாழும் மக்கள் தங்கள் விளைச்சலில் ஒரு பகுதியை ஆதிக்க ஆட்சியாளர்களுக்கு செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். சில நேரங்களில் குடிசைவரி அல்லது தலைவரி விதிக்கப்பட்டது சில நேரங்களில் குடியேற்றப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களின் தலைவர்களுக்கு பரிசுகள் அளிக்கப்பட்டன. சில நேரங்களில் தொழிலாளிகள் வெகு தொலைவிலுள்ள அந்நிய இடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டனர். பல வகையான தண்டனைகள் வழங்கப்பட்டன. அவை சவுக்கடி, முடமாக்கல், மரண தண்டனை, மனைவியிடம் இருந்து பிரித்தல், சொத்து பறிமுதல் போன்றவையாகும். இவ்வாறான அடிப்படைகளில் இயங்கிய, ஆதிக்க ஆட்சி போர்களையும், பஞ்சாயத்தையும், வர்க்க மற்றும் பொருளாதார சுரண்டலையும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் தோற்றுவித்தது.

ஆதிக்க ஆட்சியாளர்கள் பணம் திரட்டும் நோக்கத்தோடு குடியேற்ற நாடுகளில் வாழும் மக்களை ஒழுக்கங்கெட்ட செயல்களில் ஈடுபடச் செய்தனர். தூரக்கிழக்கு நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே சூதாட்டம் ஒப்பியம் என்ற போதைப்பொருளைப் பயன்படுத்தும் பழக்கம் ஆகியவற்றை

ஊக்குவித்து, பிரிட்டன் நாட்டினர் கொள்கை இலாபம் பெற்றனர். எல்லா இடங்களிலும் வெள்ளையருக்கு நன்மை ஏற்படுகின்ற அளவில், குடிமக்களிடையே கருத்து வேறுபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

எவ்வாறெனினும் குடியேற்றக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஆதிக்க ஆட்சியாளர்கள் முதல் உலகப்போருக்கு முன், நங்களைச் சார்ந்து வாழும் மக்களின் முன்னேற்றத்திற்கு சில நல்ல காரியங்களைப் புரிந்தனர். பல ஆதிக்க ஆட்சியாளர்கள் பொதுக்கல்விக் கூடங்களை குடியேற்றப் பகுதியில் நிறுவியதோடு தங்களுடைய கிறிஸ்துவ மிஷினரிகளை அப்பகுதிகளுக்கு அனுப்பிச் சேவை செய்தனர். ஏறக்குறைய என்பது சதமான கல்விப் பணிகள் மிஷினரிகளால் செய்து முடிக்கப்பட்டன. சில ஆதிக்க ஆட்சியாளர்கள் குடியேற்றப்பகுதி அரசாங்க அமைப்புகளில், அப்பகுதியில் வாழும் மக்களை ஈடுபடுத்தினர்.

### 8.1.8. பொறுப்பாண்மைக் கோட்பாடு (The Prinicple of Trusteeship)

ஆதிக்க ஆட்சி அல்லது குடியேற்றக் கோட்பாடு சுரண்டலையும் அதிகாரத் துர்பிரயோகத்தையும் எடுத்துக் கூறும் ஒரு கதையாக அமைந்துவிடக்கூடாது 16ம் நூற்றாண்டில் இருந்து உலக நாகரீகம் பெருமளவில் வளர்ந்துள்ளது அக்கால கட்டத்தில் எவ்வித கட்டுப்பாடுமற்ற நிலையில் சட்டம், கொள்கை அல்லது ஒழுங்குணர்வு கோட்பாடுகள் முதலிய எதுவுமின்றி இயங்கி வந்த அமெரிக்க, ஆசிய மற்றும் ஆப்பிரிக்கப்பகுதிகளில் ஐரோப்பிய அரசுகள் தங்கள் கட்டுப்பாட்டைச் செலுத்த ஆரம்பித்தன. நீண்ட காலத்திற்கு முன்னேற்றம் மெதுவாகத் தான் இருந்தது. விழிப்புணர்ச்சி கொண்ட ஒரு சிலரே பிறநாடுகளில் வாழும் நசுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்களுக்காக குரலை எழுப்பினர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் மனிதாபிமான எண்ணங்கள் ஒன்று திரட்டப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட ஆரம்பித்தன. அடிமை வியாபாரத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட சட்டமானது இவ்வெண்ணங்களினால் ஏற்பட்ட முதல் உய்த்துணரக்கூடிய விளைவாகும். 1837—ஆம் ஆண்டு ஒரு பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழு பொறுப்பாண்மைக் கோட்பாட்டை வலியுறுத்தியது ஏறக்குறைய எல்லா பிரிட்டிஷ் தலைவர்களும் குடியேற்றப் பகுதிகளின் சுயாட்சி நிர்ணயம் பற்றி கவலையுற்றிருந்தனர். சொத்துரிமை குடியேற்ற நாட்டு மக்களின் உழைப்பு, தொழிலாளர் இறக்குமதி, வெளிநாட்டு முதலீடு, கல்வி, மராமத்து, சுய அரசாங்கம் நிறுவும் நடவடிக்கைகள் போன்ற பல காரியங்களின் வாயிலாகப் பெறும்பான்மைக் கோட்பாட்டைக் குடியேற்றப் பகுதிகளில் செயல்படுத்த

(குறிப்புக்கான இடம்)

ஆதிக்க ஆட்சியாளர்கள் முனைந்தனர். கட்டாயமாகப் பணிகளில் ஈடுபடும் வழிமுறைகளைக் குடியேற்றப் பகுதிகளில் செயல்படுத்தாமல் நல்லமுறையில் பணியாற்றும் சூழ்நிலையை குடியேற்ற பகுதிகளில் உருவாக்கி, உயர்ந்த ஊதியங்களை தொழிலாளர்களுக்கு வழங்கினர். பயங்கரமான முறையில் தொழிலாளர்களை சீனா போன்ற நாடுகளில் திரட்டி குடியேற்றப் பகுதிகளில் இறக்குமதி செய்யும் முறையை மாற்றியமைக்கின்ற அளவில் சில உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. சில இடங்களில் அரசாங்கம், குடியேற்றப் பகுதிகளில் வாழும் மக்களை நிர்வாகத்தின் கீழ்மட்ட பணிகளில் அமர்த்தி அம்மக்களுக்கு நிர்வாகப் பயிற்சி அளித்தது. கியூபா, பிலிப்பைன்ஸ் ஆகிய பகுதிகள் ஸ்பெயினிடமிருந்து பிரிக்கப்பட்ட பிறகு, அப்பகுதிகளைச் சார்ந்த மக்களுக்கு சுய அரசாங்கப் பயிற்சி அளிப்பதை தனது கொள்கையாக கொண்டு அமெரிக்கா செயல்பட்டது. இவ்வாறான, பல பணிகளை ஆதிக்க ஆட்சியாளர்கள் மேற்கொண்ட போதிலும், அவர்களுடைய சேவை போதுமான அளவில் பிறரைக் கவலவில்லை.

பேரிய ஆதிக்க ஆட்சி அதிகாரம் படைத்த நாடுகளில் வாழும் மக்களின் சக்தி வாய்ந்த எதிர்ப்புகளை எதிர்த்துப் போராட வேண்டிய நிலை ஆதிக்க ஆட்சிக்கு ஏற்பட்டது. பல்வேறான ஆதிக்க ஆட்சி எதிர்ப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டு அச்சங்கங்கள் பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் அந்நாட்டு கொள்கைகளில் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தன. செய்தித்தாள்கள் ஆதிக்க ஆட்சிக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பியதோடு குடியேற்றப் பகுதிகளில் நிலவிய சீர்கேடுகளைக் கண்டித்தன. பிரிட்டனைச் சார்ந்த பத்திரிக்கைகள் ஆதிக்க ஆட்சியை வன்மையாகக் கண்டித்தன. 1910ஆம் ஆண்டிற்குப் பிறகு குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நன்முறையில் நடத்தப்பட்டதற்குரிய முழுப் பொறுப்பையும் பிரிட்டனைச் சார்ந்த பத்திரிக்கைகளுக்கே உரியதாகும். இந்த அளவில் அப்பத்திரிக்கைகள் யாவராலும் பாராட்டப்பட்டன. ஆனால் தேசீய சீர்திருத்தங்கள் குடியேற்றப் பகுதிகளின் செயல்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்னரே, இம்மாற்றங்களுக்குரிய எண்ணங்களுக்குப் பன்னாட்டுப் பொறுப்பாண்மை வித்திட்டது. பின் தங்கிய பகுதிகளை முன்னேறிய நாடுகளின் பொறுப்பாண்மையின் கீழ் கொண்டு வருதல் அப்பகுதி மக்களின் நலனை முன்னேற்றுவதோடு, உலகிற்கே நன்மை பயக்கும் என்று 1885ஆம் ஆண்டு பெர்லினில் நடந்தேறிய மாநாடும் 1890ஆம் ஆண்டு பிரஸ்ஸெல்ஸில் நடந்தேரிய மாநாடும் வலியுறுத்தின. பிற்பட்ட நாடுகளின் மேல் பிற நாடுகளின் ஆட்சிக் கட்டளையை நிறுவும் முறை (Mandate System) 1919 ஆம் ஆண்டு பாரிஸில் கூடிய சமாதானம்

மாநாட்டிற்கு பிறகு உருவாயிற்று. இது பன்னாட்டுப் பொறுப்பாண்மை செயல்பட ஆரம்பித்ததை உணர்த்துகின்ற அளவில் அமைந்தது. இம்முறை அன்று சர்வதேசச் சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டது. ஆட்சிக் கட்டளை நிறுவும் முறை தனது செயல்பாட்டை இழந்தபின், பொறுப்பாண்மை முறை (Trusteeship System) உருவாக்கப்பட்டு, அம்முறை ஐக்கிய நாட்டுச்சபையில் நிர்வகிக்கப்பட்டது. இம்முறைகள் பெருமளவில் ஆதிக்க ஆட்சியால் ஏற்படும் சீர்கேடுகளை மாற்றியுள்ளன.

## 8.1.9. குடியேற்றக் கோட்பாட்டின் இன்றைய நிலை

ஆதிக்க ஆட்சி அல்லது குடியேற்றக் கோட்பாடு இரண்டாம் உலக போருக்குப்பின் சிறப்புற்ற நிலையில் காணப்பட்டாலும் பண்டைய கோட்பாடு என்று இன்று அதை ஒதுக்கி வைக்க முடியாது. குடியேற்றக் கோட்பாட்டின் எதிர்ப்பாளர்கள் ஐக்கிய நாட்டுச் சபை செயல்பட ஆரம்பித்தபிறகு வலுவான ஒரு சக்தியாக உருப்பெற்றுள்ளனர். எனவே, இங்கு குடியேற்றக் கோட்பாட்டை வளர்க்க இயலாத நிலையில் அக்கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் அக்கோட்பாட்டைப் பாதுகாக்கும் நிலையில் உள்ளனர். 1955—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பதிமூன்று புதிய அங்கத்தினர்கள் ஐக்கிய நாட்டுச் சபையில் சேர்க்கப்பட்ட பிறகு, குடியேற்றக் கோட்பாடு எதிர்ப்பாளர்களின் கை ஓங்கியுள்ளது. எனவே இன்று குடியேற்ற நாடுகளின் பிரச்சனைகள் நிச்சயமாக ஐக்கிய நாட்டுச் சபையின் கவனத்தைத் தொடர்ந்து ஈர்க்கும் என்று நம்பலாம். குடியேற்றக் கோட்பாடு மேற்கத்திய ஆதிக்க ஆட்சியைக் குறிப்பதாக ஆசியப் பகுதியில் ஒரு எண்ணம் நிலவுகிறது. எனவே, அப்பகுதி மக்கள் குடியேற்றக் கோட்பாட்டை வெறுக்கின்றனர். அவ்வெறுப்புணர்ச்சியை மிகைப்படுத்தும் நடவடிக்கைகள் இன்று சோவியத் ரஷ்யா மேற்கொண்டுள்ளது. ஆனால் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள் தற்கால ஆதிக்க ஆட்சி பொதுவுடைமைவாதிகளால் உருவாக்கப்பட்ட ஒன்று என்று கூறுகின்றனர்.

5. ஆயுத போட்டி என்றால் என்ன? 8.1.
6. ஆயுத வியாபாரத்தினை ஆய்க? 8.1.3.
7. அணுசக்தி பிரச்சனை பகுப்பாய்வு? 8.1.4.
8. காலணி ஆதிக்க முறையினை விவரி? 8.1.5.
9. பொறுப்பாண்மைக் கோட்பாடு பற்றிக் கூறுக? 8.1.8.

## 8.1.9. ஆதிக்க ஆட்சியின் பின்னடைவு

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஆதிக்க ஆட்சியில் ஏற்பட்ட பின்னடைதல்களும், ஐக்கிய நாட்டுச் சபையின் பொறுப்பாண்மைக் குழு

(குறிப்புக்கான இடம்)

மேற்கண்ட, பணிகளும் ஆதிக்க ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிகளைப் பெருமளவில் குறைத்ததோடு, ஆதிக்க ஆட்சி முறையில் பின்பற்றப்படும் வரி முறைகளின் பயங்கரத் தன்மையையும் குறைத்துள்ளது. ஆனால் இன்றும் சார்ந்து வாழும் மக்கள் பல இடங்களிலும் ஆதிக்க ஆட்சியாளர்களால் பெருமளவில் துன்புறுத்தப்படுகின்றனர். இது, இப்பிரச்சனையை முற்றுப்பெற வைக்காமல், சிக்கல் மிகுந்த ஒன்றாக தோற்றுவித்துள்ளது. ஐக்கிய நாட்டு சபை தைரியமாக பன்னாட்டு பெரும்பாண்மைக் கோட்பாட்டைச் செயல்படுத்துவதன் மூலமாகவும், உலக நாடுகளின் தாராளமான மற்றும் மனிதாபிமான உதவிகளோடும், சார்ந்து வாழும் நிலையிலுள்ள மக்களின் இன்றையைப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

படை குறைப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு முயற்சிகள் தொடர்ந்து பலமுறை மேற்கொள்ளப்பட்டு வந்தபொழுதிலும் ஆயுத போட்டியை இன்றுவரை கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் இராணுவ ஆக்கிரமிப்பின் வாயிலாக ஆதிக்க ஆட்சி நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஆதிக்க ஆட்சி சிதைவுற்றது.

### 8.1.10.காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சி

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஆசியா கண்டம் பல மாறுதல்களைக் கொண்டுள்ளது. அப்போரின் பயனாக அதன் பல பகுதிகளில், அதிகார முறைகளில் பல மாற்றங்கள் தோன்றின. இது தவிர போரின் விளைவாக ஆசியா வேறு பல மாறுதல்களையும் கண்டது. இம்மாற்றங்களின் காரணமாக இக்கண்டம் உலக அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றள்ளது. ஆசியாக் கண்டத்தின் பல பகுதிகளிலும் சமுதாய மற்றும் அரசியல் புரட்சிகள் தோன்றின. அந்நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருந்த விலங்குகள் உடைத்தெறியப்பட்டன. ஏகாதிபத்திய அரசாங்கங்கள் விரட்டியடிக்கப்பட்டன. ஆசியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையில் ஏராளமான புதிய நாடுகளும் புதிய தலைமைகளும் தோன்றின. தேசிய உணர்வு ஓர் புறம் வளர்ந்து கொண்டிருந்த அதே தருணத்தில் பொது உடைமைத் தத்துவமும், முதலாளித்துவமும் ஆசியாவில் புகுத்த முயன்ற பொழுது, அந்நாடுகள் பல புதிய அனுபவங்களைப் பெற்றன.

பொதுவாக ஆசியாவின் தலைவர்களுள் பலர் மேலை நாடுகளில் பயின்றிருந்தமையால் அவர்களிடையே முற்போக்குக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றிருந்தன. எனவே அவர்கள் தங்கள் சமுதாயம் மற்றும் அரசியலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாய்

இருந்தனர். அவர்களிடையே தீவிரமான நாட்டுப்பற்று காணப்பட்டது. நாட்டின் நலனைப் பேணிப் பாதுகாப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். நாட்டிற்கு புத்துயிர் அளிக்க முயன்ற பொழுது, அவர்கள் பல தடைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதே தருணத்தில் தங்களுடைய குறிக்கோள்களுக்கும் அவற்றைச் செயல்படுத்தும் பொழுது அவர்கள் கண்ட வெற்றிக்குமிடையே ஏராளமான இடைவெளியிருப்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். இந்த இடைவெளி பெரும்பாலான காரியங்களில் மனக்கசப்பையும், கவலையையும், ஓர் நிலையற்ற தன்மையினையும் பல முரண்பாடுகளையும் அவர்களிடத்தே தோற்றுவித்தது. இருப்பினும், தாங்கள் எண்ணிய குறிக்கோள்களை அடைவதற்கு அவர்கள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளும், அவர்களிடையே காணப்பட்ட தளராத மன உறுதியும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆசியாவின் சில பகுதிகளைப் பற்றி நாம் இங்கு ஆராய்வோம்.

### சீனா

தூரக்கிழக்கில் பகுதிகளில் காணப்படும் மிக முக்கியமான நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளுடன் இணைந்து போரிட்டு வெற்றி அடைந்த போதிலும், அங்கு பல உள்நாட்டு பிரச்சனைகள் காணப்பட்டன. அத்தருணத்தில் சீனா பிளவுகள் பல நிறைந்த நாடாக இருந்தது. போரில் ஈடுபட்டதன் விளைவாக அதன் பெருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது சீனாவில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த சியாங்—கே—ஷேக்கின் தேசீய அரசாங்கத்தினால், அமெரிக்காவின் ஆதரவுடன், முக்கியமான பல நகரங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிந்ததெனினும், மா—சே—துங்கின் தலைமையின் கீழான சீனப்பொதுவுடைமையாளர்களின் சவால்களை அதனால் சிறிது காலமே சமாளிக்க முடிந்தது. தேசிய அரசாங்கத்திற்கும் பொதுவுடைமையாளர்களுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதற்கு அமெரிக்கா எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியுறவே 1946—ஆம் ஆண்டில் அங்கு உள்நாட்டுப்போர் தோன்றியது. ஏற்கனவே சீனாவின் பெரும்பாலான பகுதிகளைத் தன் வசம் வைத்திருந்த பொதுவுடைமையாளர்கள், மஞ்சூரியாவையும், வடசீனாவையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். 1948—ஆம் ஆண்டின் இறுதியில், ராணுவ வலிமைச் சமநிலை மாவோவிற்குச் சாதகமாக மாறியது. 1949—ஆம் ஆண்டு பொதுவுடைமையாளர்கள் வெற்றி பெறவே சியாங்—கே—ஷேக் தைவானுக்குச் சென்று அங்கு தன் ஆட்சியை அமைத்தார்.

(குறிப்புக்கான இடம்)

1949—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பொதுவுடைமையாளர்கள் பீகிங்கில் புதிய ஆட்சியைத் தோற்றுவித்தனர். மா—சே—துங்கின் கீழ் நிறுவப்பட்ட புதிய "சீனா மக்கள் குடியரசு" உலகிலுள்ள அனைத்துப் பொதுவுடைமை நாடுகளுடன் அரசியல் உறவுகளை ஏற்படுத்தியது. 1950—ஆம் ஆண்டு சீனா "நட்பு, கூட்டுறவு, மற்றும் பரஸ்பர உதவி" ஆகியவற்றிற்காகச் சோவியத் யூனியனுடன் 30 ஆண்டு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது. இவ்வாறு சீனா, சோவியத் யூனியனுடன் இணைந்தது. ஆசியாவிலும் மற்றும் பிற கண்டங்களிலும் ஒரு பெரும் தாக்கத்தை (impact) உண்டுபண்ணியது. பிற ஆசிய நாடுகள் சமுதாயப் புரட்சிகள் பற்றியும் சமதர்ம நாடுகளுடன் உறவுகள் வைத்துக்கொள்வது பற்றியும் சிந்திக்க தலைப்பட்டன. சீனாவில் பொதுவுடைமைக் கட்சி அடைந்த வெற்றி ஆசியாவின் பிற பகுதிகளில் காணப்பட்ட பொதுவுடைமையாளர்களைச் சீனப் பொதுவுடைமையாளர்கள் கையாண்ட முறைகளைப் பின்பற்ற ஊக்குவித்தது. இதன் விளைவாக பர்மா, இந்தோனேசியா, இந்தோ சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியாவின் ஒரு சில பகுதிகள் ஆகியவற்றில் பொதுவுடைமைத் தத்துவம் வளரலாயிற்று.

## உலக விவகாரங்களில் சீனாவின் பங்கு

1950ஆம் ஆண்டு, பொதுவுடைமை நாடான வடகொரியா, தென் கொரியாவைத் தாக்கியது. வடகொரியாவைச் சீனாவும் சோவியத் யூனியனும் ஆதரித்தன. தென்கொரியாவை அமெரிக்காவும் முதலாளித்துவ நாடுகளும் இதர சில நாடுடகளும் ஆதரித்தன. ரஷ்யா அப்பொழுது ஐ.நா. சபை நடவடிக்கைகளில் பங்கேற்கத் தவறியதால், வடகொரியாவின் மீது ஐ.நா.வின் படைகள் போர்தொடுக்க வழிவகுக்கப்பட்டது. ஐ.நா.வின் படைகள் "யாலு" நதியை கடந்த பொழுது அப்போர் சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையேயான நேரடிப் போராக மாறியது. சீனப்பொதுவுடைமைத் தத்துவம் பரவுவதைத் தடுப்பதற்காகத் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அமெரிக்கா ஒரு புதிய தத்துவம் பரவுவதைத் தடுப்பதற்காகத் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அமெரிக்கா ஒரு புதிய வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றத் தலைப்பட்டது. 1951க்கும் 1954ற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜப்பான், பிலிப்பைன்ஸ், தென்கொரியா மற்றும் பார்மோசா (தைவான்) ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா இராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. இது தவிர அமெரிக்கா ஐக்கிய நாடுகள், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய

நாடுகள் ஒன்றிணைந்து தங்களுடைய பல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கெனக் கூட்டாக "தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பை" (SEATO) நிறுவின.

ஐ.நா. சபையில் சீனாவின் நுழைவைத் தடுப்பதென அமெரிக்க ஐக்கிய நாடுகள் தீர்மானித்தது. சீனாவின் புதிய பொதுவுடைமை அரசிற்கு அங்கீகாரம் அளிப்பதற்குக் கூட அமெரிக்கா மறுத்தது அத்துடன் பல பொருளாதாரத் தடைகள் மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் துணை கொண்டு உலக அரங்கில் சீனாவைத் தனிமைப்படுத்த அமெரிக்கா முயன்றது.

இந்தோ சீனப் பகுதியில் பிரான்சிற்கும் பொதுவுடைமைக் கட்சி ஆதரவு பெற்ற ஹோ—சி—மின் (Ho-chimin) கீழான வியட்நாமிற்கும் தகராறு மூண்டபொழுது அமெரிக்காவும், சீனாவும் முறையே இவ்விரு நாடுகளையும் ஆதரித்தன. 1954—ஆம் ஆண்டு நடந்த ஜெனீவா கருத்தரங்கின் பயனாக இந்தோ—சீனப் பிரச்சனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இத்தருணத்தில் சியாங் கேஷேக் வசமிருந்த ஃபார்மோசாவை விடுவிக்கும் வகையில் சீனா தேசிய அரசிற்குச் சொந்தமான பிற தீவுகளின் மீது குண்டு வீசியது. அமெரிக்கத் தலையீட்டின் காரணமாகச் சீனாவின் முயற்சி தோல்வியடைந்தது.

1955ஆம் ஆண்டு வரலாற்றுப் புகழ்மிக்க "பாண்டுங்" (Bandung) மாநாடு இந்தோனேசியாவில் நடத்தப்பெற்றது. அம்மாநாடு ஆசிய நாடுகளிடையே காணப்பட்ட பதட்ட நிலையை குறைக்கவும் அவைகளிடையே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கவும் வழிவகைகள் செய்தது. பல ஆசிய நாடுகளை இணைத்து செயல்படத் தூண்டிய இம்மாநாட்டில் சீனா, இந்தியா போன்ற நாடுகளின் தலைமை அமைச்சர்களான சூ—யென்லாய் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோர் முக்கிய பங்கேற்றிருந்தனர். எனினும் 1957—ஆம் ஆண்டிற்குள் 'பாண்டுங்' மாநாட்டில் தோன்றிய இந்நலெண்ண உணர்வுகள் செத்து மடிந்தன. சீன நில ஆக்கிரமிப்புக் கொள்கையைத் தொடங்கியதை ஒட்டி அது 1959, 1962—ஆம் ஆண்டுகளில் இந்தியாவைத் தாக்கியது. அக்காலக்கட்டத்தில் சீன—சோவியத் உறவுகளும் நலிவுறலாயின. ஃபார்மோசா மற்றும் இந்தியாவிற்கு எதிரான போர் ஆகியவற்றில் சோவியத்யூனியன் சீனாவை ஆதரிக்கத் தவறியதால் அதனைச் சீனா சந்தேகக் கண்களுடன் நோக்கலாயிற்று. இவ்விரு நாடுகளுக்குமிடையே

(குறிப்புக்கான இடம்)

பொதுவுடைமை கோட்பாட்டின் தத்துவம் பற்றி விளக்கம் குறித்து பல மாறுபட்ட கருத்துக்கள் தோன்றலாயின. ஒன்றையொன்று புதிய ஏகாதிபத்தியவாதிகள் என்றும், பிவிவனிஸ்ட் என்றும் சாடிக்கொள்ளத் தொடங்கின. 1963—ஆம் ஆண்டு சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் அணு ஆயுத பரிசோதனைத்தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பொழுது சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்குமிடையேயான பிளவு மேலும் விரிவடைந்ததுடன் அவைகளிடையே அடிக்கடி எல்லைத்தகராறுகளும் தோன்ற ஆரம்பித்தன.

1960—ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியாவிலுள்ள வளர்ந்து வரும் நாடுகள் மீது சீனா தன் கவனத்தைத் திருப்பிற்று. ஆனால் இம்முயற்சியில் அதனால் குறிப்பிடத்தகுந்த வெற்றி ஏதும் அடைய இயலவில்லை. இவ்வாறு பன்னாட்டு விவகாரங்களில், சில ஏமாற்றங்களை அடைந்த பொழுது, 1964ஆம் ஆண்டு அது அணுகுண்டை வெடித்ததன் மூலம், இழந்த தன்கௌரவத்தை ஓரளவு மீட்டுக் கொண்டது. அங்கு நடந்த கலாச்சார புரட்சியும் கட்சிக்குள்ளாகவே நடைபெற்ற அதிகாரப்போட்டியின் விளைவாகத் தோன்றிய புதிய தலைமையும் சீனாவை ஓர் புதிய வல்லரசாக மாற்ற முனைந்தது மீண்டும் 1969—ஆம் ஆண்டு சீனா புதிதாகத் தோன்றிய நாடுகளுடன் உறவுவைத்துக் கொள்ள முயன்றது. உலகின் வலிமைச் சமநிலை முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகச் சீனா அமெரிக்கா மீது கொண்டிருந்த கடினமான மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அது அமெரிக்காவுடன் நெருங்கி ஒத்துழைக்க விருப்பம் காட்டியது. சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு அமெரிக்க குடியரசுத்தலைவர் நிக்சனுக்கு ஓர் அழைப்பு அனுப்பப்பட்டது. நிக்சனின் சீன விஜயம் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிற நிகழ்ச்சிகள் ஆகியன இவ்விரு நாடுகளிடையேயான உறவுகளைச் சீர்படுத்த உதவின. இப்புதிய நட்பின் காரணமாகச் சீனா ஐ.நா. சபையின் அங்கத்தினராக ஆக்கப்பட்டது. தனது குத்தகைப் பகுதியாக கிட்டத்தட்ட 100 ஆண்டுகள் ஹாங்காங் பணிய வைத்து அங்கு மக்களாட்சி முறையும், தாராளமயமான பொருளாதார முறையும் செழிக்கச் செய்த பிரிட்டன், குத்தகைக்காலம் முடிந்து 1997ல் சீனாவுக்கே ஹாங்காங் பகுதியை திருப்பி அளித்துவிட்டது. அப்பகுதியில் மக்களாட்சியை பாதுகாப்பதாக சீனாவும் உறுதியளித்துள்ளது.

**ஜப்பான்**

ஆசியாவிலேயே, ஜப்பான் மட்டும் தான் மேலை நாடுகளின் நுணுக்கங்களைப் பின்பற்றியதோடு, அவைகளின் வலிமையையும்

சோதிக்கத் துணிந்தது. அதிர்ஷ்டவசமாகத் தன்னுடைய கலாச்சாரங்களை அது காப்பாற்றிக் கொண்டது மட்டுமல்லாமல், மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றித் தன்னை நவீனப்படுத்திக் கொள்ளவும் செய்தது. ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் தன் பங்காகச் சீனாவையும் (1894) ரஷ்யாவையும் (1904) தாக்கியது. இவ்விரு தாக்குதல்களிலும் அது வெற்றி கண்டது. 1937 மற்றும் 1941—ஆம் ஆண்டுகளில் ஜப்பானுக்கும் சீனாவிற்குமிடையே இருபெரும் போர்கள் தோன்றின. தன் ஏகாதிபத்திய வேட்கையைத் தணித்துக் கொள்வதற்காகப் பசிபிக் பகுதியில் அது அமெரிக்காவிற்கும், தென் கிழக்கு ஆசியப்பகுதிகளில் ஐரோப்பிய அரசுகளுக்கும் சவால் விடுத்தது.

இரண்டாம் உலகப் போரின் போது ஆசியாவின் பெரும்பகுதி ஜப்பான் வசமிருந்தது. 1945—ஆம் ஆண்டு, ஹிரோசிமாவிலும் நாகசாகியிலும் இரு அணுகுண்டுகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, ஜப்பானின் மனப்பாங்கு மாறியது. ஜப்பான் பெருத்த அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொழுது, அது அமெரிக்க தளபதி மக் ஆர்தரிடம் சரணாகதி அடைந்தது. தோற்கடிக்கப்பட்ட ஜப்பான் அமெரிக்கத் துருப்புகளின் ஆணைகளுக்கு அடி பணிந்தது. அமெரிக்கப்படையின் தலைமையின் கீழ் ஜப்பான் ஜனநாயகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதன் ராணுவ வலிமையும் குறைக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் ஆசியா கண்டத்தின் பிற நாடுகளில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களும், குழப்பங்களும் மற்றும் தகராறுகளும் ஜப்பானைப் பாதிக்காவண்ணம் காக்கப்பட்டது. ஜப்பானும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு போரினால் தனக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்தவுடன் ஆசியாவிலேயே தொழில் நுட்பத் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்த நாடாகவும் உள்ளது.

ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்குமிடையேயான உறவுகள் எப்பொழுதும் முழுமையானதாகவோ, சுமூகமானதாகவோ இருந்ததாகக் கூறமுடியாது. ஜப்பானை எப்போழுதும் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் எண்ணம் தற்பொழுது ஜப்பானில் ஆட்சேபிக்கப்படுகிறது. ஜப்பான் தன்னை வலிமை கொள்வதைத் தடுக்க அமெரிக்கா விழைவதும் அதனுடைய இராணுவ வலிமையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளும் ஜப்பானியரிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளன.

முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக்.
அ) ஆயுத போட்டி என்பதை கூறு.
ஆ) ஆயுத வியாபாரத்தை ஆய்க.
இ) அணுசக்தி பிரச்சனை பகுப்பாய்வு செய்க.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஜப்பான் தன்னுடைய பாதுகாப்பிற்கு அமெரிக்காவையே நம்பியிருந்தது. ஜப்பான் அமெரிக்காவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை அங்கு காணப்பட்ட இடதுசாரி அணியினர் மிகத் தீவிரமாக எதிர்த்தனர். உள்நாட்டில் இவ்வொப்பந்தத்திற்கு எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஜப்பான் வல்லரசுகளுடன் சேர்ந்து அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. தன்னிடம் இருக்கக் கூடிய வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்தியதன் மூலம் ஆசியாவில் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் நாடுகளில் ஜப்பான் முதலிடத்தை வகிக்கின்றது. ஆரம்பகாலங்களில் அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையையே தன் கொள்கையாக ஜப்பான் பின்பற்றி வந்தமையால், சீனப் பொதுவுடைமை அரசிற்கு அது அங்கீகாரம் வழங்க மறுத்தது. எனினும் சீனாவுடன் ஓரளவுவர்த்தகத் தொடர்புகளை ஜப்பான் கொண்டிருந்தது. 1969—ஆம் ஆண்டிற்குப் பிறகு ஜப்பான் தன்னிச்சையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. தன் பொருளாதாரம், தொழில் நுட்ப மேன்மை ஆகியவற்றின் துணை கொண்டு உலகில் தனக்கென ஓர் சிறப்பான இடத்தைப் பிடிப்பதைத் தவிர வேறு எண்ணங்கள் அதற்கு தற்பொழுது இருப்பதாகக் கூறமுடியாது.

### 8.1.11: தொகுப்புரை

படைகுறைப்பு மற்றும ஆயுத் கட்டுப்பாடு முயற்சிகள் தொடர்ந்து பலமுறை மேுற்கொள்ளப்பட்டு வந்தபொழுதிலும் ஆயுத போட்டியை இன்றுவரை கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் இராணுவ ஆக்கிரமிப்பின் வாயிலாக ஆதிக்க ஆட்சி நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஆதிக்க ஆட்சி சிதவுற்றது.

### 8.1.12. முக்கிய வார்த்தைகள்:

ஆயுதப்போட்டி – பதட்ட நிலை உண்டு பண்ணுதல்

அனுசக்தி — ஆயுதம் தயாரிப்பு

ஆதிக்க ஆட்சி — சிறிய நாடுகளை பெரிய நாடுகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

### 6.1.13. இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்:

Bilgrani S.J.R.; International Organisations Cvikas; 1977

(குறிப்புக்கான இடம்)

### 6.1.14. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கான பதில்கள்

கேள்வி எண். 1: பதில் எண். 8.1

கேள்வி எண். 2: பதில் எண். 8.1.3

கேள்வி எண். 3: பதில் எண். 8.1.4

கேள்வி எண். 4: பதில் எண். 8.1.5

கேள்வி எண். 5: பதில் எண். 8.1.8

### 6.1.15. மாதிரிவினாக்கள்:

1. ஆயுதப் போட்டி ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்க.
2. ஆதிக்க ஆட்சியின் செயல்நோக்கங்கள் யாவை?
3. காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சியினை பகுப்பாய்க?

# அலகு—9

## ஆப்பிரிக்காவின் எழுச்சி—ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள்—லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதயம்

### முன்னுரை

ஆப்பிரிக்கா ஒரு இருண்ட கண்டம் என்ற கூற்று தற்காலத்தில் மிகவும் மாறிவிட்டது. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்து உலக அரசியலில் அவைகளது தாக்கம் மிகவும் அதிகரித்து வருகிறது. அந்நாடுகளிடையே பல பிரச்சனைகள், பல வேறுபாடுகள் காணப்படினும், அவைகளிடையே ஒரு விதமான ஒற்றுமையும் காணப்படுகிறது. இந்நாடுகள் இரண்டாம் உலகப்போருக்கப் பிற்பட்ட காலத்தில் விடுதலை அடைந்தன, அதுவரை ஏகாதிபத்திய ஆட்சிகளினால் சுரண்டப்பட்டு வந்த இந்நாடுகள் குறுகிய காலத்திற்குள் புத்துயிர் பெற்றன. அங்கு எழுந்த கூக்குரல்கள் ஏகாதிபத்திய ஆட்சி மற்றும் காலனி ஆதிக்கத்திற்குச் சவால் விடுத்தன. அவைகளின் சவால்களை ஆதிக்க நாடுகள் சந்திக்க முடியாமல் போகவே இந்நாடுகள் தன்னாட்சி பெற்றன.

### நோக்கங்கள்:

காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சிபற்றி கற்றறிதல்

ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகளை புரிந்து கொள்ளுதல்.

லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதயம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.

### அலகு வடிவமைப்பு:

ஆப்பிரிக்காவின் எழுச்சி

ஆப்பிரிக்காவில் தேசியம்

ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை

ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள்

காலனி ஆதிக்க முறையின் வீழ்ச்சி

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key Words)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for further studing)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

மாதிரி வினாக்கள்: (Questions)

## 9.1. ஆப்பிரிக்காவில் தேசியம்

இக்காலகட்டத்தில் ஆசியாவில் எழுந்த தேசிய உணர்வு, ஆப்பிரிக்காவில் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த ஆசிய நாடுகளும் ஆப்பிரிக்க நாடுகளும் பொதுவான ஒரு வரலாற்றை கொண்டிருக்கின்றது. மேலும் இவ்விரு கண்டங்களிலுள்ள மக்கள் தொகை, உலக மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவுள்ளதாக இருக்கிறது. இதுகாறும் பன்னாட்டு அரசியலில் எத்தகைய ஒரு குறிப்பிடத்தகுந்த பங்கையும் ஏற்றிராத இந்நாடுகள், திடீரென்று உலக அரசியலில் நுழையவே, அங்கு பல மாற்றங்கள் ஏற்படலாயின.

எனினும் 1945—ஆம் ஆண்டு வாக்கிலும் கூட, அங்கு குறிப்பிடத்தக்க வகையில் தேசிய உணர்வு காணப்பட்டதாகக் கூறமுடியாது. ஆயினும் பெரும்பாலான ஆசியநாடுகள், புத்துணர்வு பெற்றபோது, ஆப்பிரிக்காவிலும் ஒரு சில மாற்றங்கள் ஏற்படலாயின. 1945ஆம் ஆண்டு மான்செஸ்டரில் கூட்டப்பட்ட ஐந்தாவது ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாட்டில் விடுதலை வேட்கையின் குரல் முதன்முதலாக எழத்தொடங்கியது. டியுபய்ஸ், பட்மோர், என்க்ருமா, கென்யாட்டா, அவோலோவோ போன்ற தலைவர்கள் சுதந்திரத்திற்க்காகக் குரல் கொடுத்தனர். இத்தகைய கூக்குரல்களை ஆதிக்க அரசாங்கங்கள் பெரிதும் மதிக்காவிடினும் சிறிது காலம் கழித்து அதுகுறித்து பெரிதும் கவலை கொள்ளலாயின. 1945ஆம் ஆண்டு தொட்டு அங்கு வளரத் தலைப்பட்ட தேசிய உணர்வு விசுவரூபம் எடுத்தது. அதன் விளைவாக அடுத்த 25 ஆண்டு காலத்திற்குள் பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. இவ்வாறு இந்நாடுகள் விடுதலை பெற்றதற்கு நான்கு முக்கிய காரணங்கள் காணப்படுகின்றன.

முதலாவதாக, இந்தியாவும் பாகிஸ்தானும் 1947—ஆம் ஆண்டு விடுதலை பெற்றதை அடுத்து பல இனத்தினரைத் தன்னகத்தே கொண்ட காமன்வெல்த்—அமைப்பு (Muliracial Commonwealth) ஒன்று உருவாகின. இந்திய விடுதலைப் போராட்டமும் பிரெஞ்சுக் காலனியாக விளங்கிய இந்தோ—சீனப் பகுதிகளில் இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு ஏற்பட்ட மாற்றங்களும், 1949—ஆம் ஆண்டு சீனாவின் மக்கள் குடியரசு நிறுவப்பட்டதும், அதனை அடுத்த 1955—ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாண்டுங் மகாநாடும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளிடையே ஒரு உறவுப்பாலத்தை ஏற்படுத்தியது.

(குறிப்புக்கான இடம்)

இரண்டாவதாக இக்காலக்கட்டத்தில் தோன்றிய கெடுபிடிப்போரும் இந்நாடுகளின் விடுதலையைத் தீவிரப்படுத்தின. ஆப்பிரிக்காவில் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் பெரும்பாலானவை மேலை நாடுகளின் அணியில் காணப்பட்டன. இம் மேலை நாடுகளின் தலைவராக அமெரிக்கா காணப்பட்டதால், சோவியத் யூனியன், அந்நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தை தொடர்ந்து கண்டனம் செய்து வந்தது. அத்துடன் ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கு சோவியத் யூனியன் மிகுந்த ஊக்கம் அளித்து வந்தது. இத்தகைய சோவியத் சவால்களைச் சமாளிக்கும் வண்ணம் அமெரிக்காவும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு விடுதலை அளிக்குமாறு தன்னுடைய நண்பர்களைத் தூண்டியது.

மூன்றாவதாக, ஒரு சில ஆப்பிரிக்க நாடுகளின் மனப்பாங்கு இக்காலகட்டத்தில் வளர்ச்சி அடைந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். அங்கு 1945—ஆம் ஆண்டு வாக்கில் காலனி ஆதிக்கமும் ஒரு மந்த நிலையை அடைந்தது. நகரங்களில் வாழ்ந்து வந்த கல்வியறிவு பெற்ற மக்களிடையே விடுதலை வேட்கை வளரத்தொடங்கியது. அதுவரை பெற்று வந்த அவமானங்களுக்கு ஒரு முடிவு காண அவர்கள் விரும்பினார்கள். அத்தகைய முயற்சிகளில் ஈடுபட முயன்ற பொழுது, அவர்கள் பல தடைகளைச் சந்திக்க நேரிட்டது. எனவே அவர்கள் தேசியத் தலைவர்களின் அறைகூவல்களுக்குச் செவிசாய்த்தனர். அந்நாட்டில் வாழ்ந்து வந்த குடியானவர்களும் அக்காலக்கட்டத்தில் பெரும் துன்பங்களை ஏற்றிருந்தால் அவர்களுடைய நிலங்களை நிலச் சுவான்தார்கள் அபகரித்துக் கொண்டதும், இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட பண வீக்கமும், அதனை தொடர்ந்து அவர்கள் அதுகாறும் பெற்றுவந்த கூலி (Wages) குறைய நேரிட்டதும் தங்களைத் தேசிய இயக்கத்தில் இணைத்துக்கொள்ள அவர்களைத் தூண்டியது.

நான்காவதாக, ஆதிக்க ஆட்சியாளர்கள் எழுந்து வந்த தேசிய உணர்வை அடக்குமுறை கொண்டு ஒழிக்கத் தலைப்பட்டதும் தேசிய உணர்வு அதிகரித்ததற்குக் காரணமாகும். விழிப்புணர்வு வளர, வளர அடக்கு முறையைக் கண்டு அஞ்சுவது நீங்கியது. இதன்காரமாக, பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகள் விடுதலைப் பாதையை நோக்கி, நடைபோட்டன.

### 9.1.1. ஆப்பிரிக்க நாடுகளின் முக்கிய பிரிவுகள்

ஆப்பரிக்காவில் அதிகாரம் மிக்க இரு அணியினர் காணப்பட்டனர். அவற்றுள் ஒன்று கேசபிளாங்கா (Casablanca) அணி, மற்றொன்று மன்றோவியா (Manrovia) அணி, முதல் அணியில் கானா, கினியா, மாலி, மொராக்கோ போன்ற நாடுகள் காணப்பட்டன. இவ்வணியினர் தங்களை உண்மையான தேசியவாதிகள் என்றும், முற்போக்கான கொள்கைகளை உடையவர்கள் என்றும், ஆப்பிரிக்கா ஒற்றுமையில் நாட்டம் கொண்டவர்கள் என்றும் சமதர்மவாதிகள் என்றும், காலனி ஆதிக்க எதிர்ப்பாளர்கள் என்றும் வர்ணித்துக் கொண்டனர்.

மான்றோவியா அணியில் சுமார் 20 நாடுகள் காணப்பட்டன. "ஒரு சில காரணங்களுக்காகப் பல சுதந்திரமான நாடுகள் மேற்கொண்டிருக்கும் உடன்பாட்டின் விளைவுதான் இந்த அணி" என்று இவர்கள் கூறினார்கள், இதில் காணப்பட்ட நாடுகள் தங்களிடையே பொருளாதார மற்றும் கலாச்சாரத் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதற்காகவும், வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் இத்தகைய போராட்டங்களுடன் தன்னை இணைத்துக்கொள்ள முயன்ற வேலையில், மன்றோவியா அணி தேசிய விடுதலை மற்றும் உள்நாட்டு வளர்ச்சி ஆகிய பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது.

### 9.1.2. ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை

முதன் முதலாக பிரிட்டன் தன் கீழிருந்து ஆப்பிரிக்க நாடுகளை விடுவிக்க முன் வந்தது. முதலில் ஆங்கிலோ எகிப்தியன் சூடானையும், பிரிட்டிஷ் மேற்கு ஆப்பிரிக்காவையும் அது விடுவித்தது. 1956—ஆம் ஆண்டு சூடான் விடுதலை அடைந்தது. பின்னர் கோல்டுகோஸ்ட் விடுதலை பெற்றது. பின்னர் 1960—ஆம் ஆண்டு நைஜீரியா விடுதலை அடைந்தது.

எனினும் கிழக்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவிலும் ஆட்சி நடத்தி வந்த வெள்ளை அரசாங்கங்கள் தங்கள் கீழிருந்த நாடுகளின் விடுதலை குறித்துச் சிறிய தயக்கம் காட்டின. இதன் விளைவாகக் கென்யா மற்றும் ரொடீஷியா போன்ற நாடுகள் சில பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது. அங்கு குடியேறியிருந்த வெள்ளைச் சிறுபான்மையினர் தங்களைக் கருப்புப் பெரும்பான்மையருக்கு இணையாக நடத்தக்கூடாதென்று கோரிக்கை விடுத்தனர். கருப்பினத்தவர் தங்களைக் கட்டுப்படுத்துவதை வெள்ளைச் சிறுபான்மையினர் பெரிதும் வெறுத்தனர். இதனால் இவர்கள்

(குறிப்புக்கான இடம்)

வெள்ளையர்கள் மற்றும் கறுப்பர்கள் இணைந்த ஒரு கூட்டாச்சி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக்கூறி வந்தனர். இத்தகைய கோரிக்கைகளுக்கு, மத்திய ஆப்பிரிக்கா தவிர்த்த பிற இடங்களில் பலத்த எதிர்ப்புக் காணப்பட்டது. கென்யாவில் 1952—ஆம் ஆண்டு ஏற்பட்ட மாவ்மாவ் கலகமும், உகாண்டாவில் தோன்றிய புரட்சிகளும் வெள்ளையர்களின் ஆட்சிகளை ஆட்டம் காணச்செய்தது. எனினும் பிரிட்டனின் முயற்சியால் ரொடீஷியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்த ஒரு கூட்டாச்சி ஏற்படுத்தப்பட்டது. இதனை முறிப்பதற்குத் தேசியவாதிகள் 1963—ஆம் ஆண்டு வரை காத்திருக்க நேரிட்டது.

1945க்கும் 1954க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆப்பிரிக்காவில் தன் கீழிருக்கும் நாடுகளுக்கு விடுதலை வழங்குவது குறித்து பிரான்சு எத்தகைய முயற்சிகளையம் மேற்கொள்ளவில்லை. மாறாக, அங்கு தோன்றிய குழப்பங்களை அடக்க முயன்றது. பிரான்சின் கீழிருந்த அல்ஜீரியாவில் 1945ஆம் ஆண்டும் 1947ஆம் ஆண்டு மடகாஸ்கரிலும், 1949ஆம் ஆண்டு ஐவரி கோஸ்ட்டிலும், 1953 ஆம் ஆண்டு டுனிசியாவிலும் பல கலசங்கள் ஏற்பட்டன. முதலில் இக்குழப்பங்கள் பொருட்படுத்தாத பிரான்சு 1954 ஆம் ஆண்டைய ஜெனீவா ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்நாடுகளுக்கு விடுதலை வழங்குவது குறித்து யோசிக்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப்போரில் இத்தாலி தோல்வி அடைந்ததால், தன் கீழிருந்த ஆப்பிரிக்க நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கேற்ற வலுவை அது பெற்றிருக்கவில்லை. எனவே 1951—ஆம் ஆண்டு லிபியா சுதந்திரம் பெற்றது. 1960ஆம் ஆண்டு சோமாலியா விடுதலை அடைந்தது. இவ்வாறாக இத்தாலி மற்றும் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக பெல்ஜியத்தின் ஆப்பிரிக்க நாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்படலாயின.

### 9.1.3. ஆப்பிரிக்கா – முழுமை இயக்கம் (Pan Africanism)

கானா விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து ஆப்பிரிக்க நாடுகளில் தேசியம் ஆப்பிரிக்க முழுமைக்குமான ஒரு தேசிய இயக்கமாக மாறியது. இந்த ஆப்பிரிக்க முழுமை இயக்கத்திற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் டாக்டர் என்கிருமா (Dr. Nkruma) என்பவர் ஆவார். இந்த இயக்கம், ஆப்பிரிக்க தேசியத்தின் இயக்கம் என்றும் ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிரான இயக்கம் என்றும், நிறவெறிக்கொள்கைகளுக்கெதிரான இயக்கம் என்றும் கூறப்பட்டது. இந்த மார்க்சீய சமதர்மத்தைத் தன் கொள்கையாக ஏற்றிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. 1958ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்ற ஆப்பிரிக்க நாடுகளின் மகாநாடு ஒன்று கானாவின் தலைநகரான

அக்ராவில் (Accra) கூட்டப்பட்டது. அங்கு கூடிய எட்டு நாடுகள், ஆப்பிரிக்க விடுதலை இயக்கத்தின் சார்பாக பன்னாட்டு அரங்கில் (ஐ.நா. சபை உள்பட) இணைந்து செயல்படுவது எனத் தீர்மானம் மேற்கொண்டனர். இந்த இயக்கத்தின் பயனாக ஆப்பிரிக்கா நாடுகள் அரபு நாடுகளின் நட்பையும் சம்பாதித்தன.

### 9.1.4. ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள்

1. காங்கோ (Congo)

பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த காங்கோ 1960 ஆம் ஆண்டு விடுதலைப் பெற்றது. அது ஆறு மாகாணங்களைக் கொண்டிருக்கிறது. அங்கு 1960ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் நடத்தப்பட்ட தேர்தல்களில் வெற்றி அடைந்த பேட்ரிஸ்லுமும்பா அந்நாட்டில் முதல் தலைமை அமைச்சரானார். சிறிது காலத்தில் அங்கு அவருக்கு எதிர்ப்புகள் தோன்றின. கடாங்கா மாகாணத்தின் தலைவரான மாய்ஸ்ட்ஸாம்பே பிரிவினைக் கொடியை உயர்த்தினார். அதன் விளைவாக அங்கு உள்நாட்டுக் குழப்பம் தோன்றியது. இப்பிரச்சனை ஐ.நா.வின் பாதுகாப்புச் சபைக்கு சென்ற பொழுது ஐ.நா. வின் படை ஒன்றை காங்கோவிற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது அத்தருணத்தில் காங்கோக் குடியரசின் தலைவர் ஜோசப்கஸாவுபு, தலைமை அமைச்சர் லுமும்பாவைப் பதவியை விட்டு நீக்கியதுடன் எல்லியோ (Elieo) என்பவரைத் தலைமை அமைச்சராக நியமித்தார். லுமும்பா தன் பதவியைத் திரும்பவும் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட பொழுது அவர் ட்ஸாம்பேயின் ஆட்களால் கொலை செய்யப்பட்டார்.

இத்தருணத்தில் லுமும்பாவின் சாவிற்கு ஐ.நா.வின் காரியதரிசியான டாக்—ஹாம்மர் ஜோல்டே காரணம் என்று சோவியத் யூனியன் குற்றம் சாட்டியது. எனவே அவர் தன் பதவியைத் துறக்க வேண்டுமென வற்புறுத்தியது. எனினும் டாக் ஹாம்மர் ஜோல்டு தன்பணியைச் செய்யும் வண்ணம் காங்கோவிற்குச் சென்றார். அவ்வேளையில், தெற்கு ரொடீஷியாவிலிருந்த பிரிட்டிஷ் தலைமை அமைச்சரை சந்திக்கச் சென்றார். ஆனால் செல்லும் வழியில் அவர் சென்ற விமானம் விபத்திற்குள்ளாகவே அவர் இறக்க நேரிட்டது. இதன் விளைவாக காங்கோவில் பல பிரச்சனைகள் தோன்றின. பிரச்சனைகள் மிகுந்து காணப்பட்ட காங்கோவில் அமைதி திரும்புவதற்குப் பல ஆண்டுகள் ஆயிற்று. பிரிவினை வாதத்தைத் தூண்டிய ட்ஸாம்பே நாட்டின் தலைமை அமைச்சரானார் (1964). அதற்கடுத்த ஆண்டு தளபதி மொபுட்டு ஒரு

(குறிப்புக்கான இடம்) புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் ஜனாதிபதி கஸாவுபு தன் பதவியை இழந்தார்.

## 2.தெற்கு ரொடீஷியா (ஜிம்பாவே) (Zimbabwe)

1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரோடீஷியாவின் தலைமை அமைச்சராக இருந்து வந்த இயன் ஸ்மித் "தன் நாடு ஒரு சுதந்திர நாடு" என்று தன்னிலையாக அறிவித்தார். வெள்ளை ஆதிக்கத்தின் தனித்தலைவராக இயன்ஸ்மித் எழுந்தார். இத்தகைய அறிவிப்புகளை மேற்கொள்ளாதிருக்குமாறு இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்ஸன் பலமுறை கேட்டுக்கொண்டதையும் அவர் பொருட்படுத்தவில்லை. கருப்பின் தேசியவாதிகளிடையே ஒற்றுமை குன்றியிருந்தம் வெள்ளைச் சிறுபான்மையினருக்குச் சாதகமாக அமைந்தது. கருப்பினத்தவரிடையே இரு பெரும் பிரிவுகள் காணப்பட்டன. அதில் ஒன்று சிதோல் என்பவரின் தலைமையின் கீழான 'ஜிம்பாப்வே ஆப்பிரிக்கத் தேசிய ஐக்கியம்' (ZACDU) ஆகும். மற்றொன்று ஜோசுவா என்கோமோ என்பவரின் கீழ் இயங்கிவந்த 'ஜிம்பாப்வே ஆப்பிரிக்க மக்கள் ஐக்கியம்' (ZAPU) ஆகும்.

இவ்விரு அணிகளின் தலைவர்களையும் இயன் ஸ்மித் மிகுந்த கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். இதன் விளைவாக கருப்பினத்தவரின் ஆட்சி ஏற்படுத்தப்படுவது சிறிது காலத்திற்குத் தடைப்பட்டது. அத்தருணத்தில் ஐ.நா.வின் பொதுச்சபை ரொடீஷியா மீது பொருளாதாரத் தடைகள் ஏற்படுத்தும் விதமாக ஒரு தீர்மானத்தை மேற்கொண்டது. எனினும் இப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியவில்லை. பல ஆண்டு காலப் போரட்டங்களுக்குப் பிறகு, இயன் ஸ்மித் கருப்புப் பெரும்பான்மையினரின் ஆட்சி ஏற்படும் வகையில் பதவி இறங்கினார். 1980—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் மூலம் பிஷப் முசோரேவா பதவியிலமர்த்தப்பட்டார். பின்னர் பிரிட்டனிடமிருந்து அந்நாடு முழுவிடுதலை அடைந்தவுடன் புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன் விளைவாக, இராபர்ட் முகாபே தலைமை அமைச்சரானார். இவ்வாறு விடுதலை பெற்ற அந்நாடு ஜிம்பாப்வே என்ற பெயரில் ஐ.நா.வின் 153—வது அங்கத்தினராகியது.

## 3. அங்கோலா (Angola)

அங்கோலா போர்ச்சுக்கல் நாட்டின் ஒரு காலனியாகும். 1975—ஆம் ஆண்டு போர்ச்சுக்கல்லில் ஒரு இராணுவப்புரட்சி ஏற்பட்டது. ஆட்சிப் பொறுப்பேற்ற புதிய அரசாங்கம் அங்கோலாவிற்கு சுதந்திரம்

வழங்கத் தீர்மானித்தது. 1975ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11—ஆம் நாள் அங்கோலா விடுதலை அடைந்தது. எனினும் அங்கு உள்நாட்டுக் குழப்பம் தோன்றியது. அங்கு காணப்படும் 'PMLA' அணியினரும் (Popular Movements for the Liberation of Angola), 'NPLA' அணிக்குச் சோவியத் யூனியன், கியூபா போன்ற நாடுகளின் ஆதரவும் 'NPLA' அணிக்குச் சீனாவின் ஆதரவும் காணப்பட்டது. தற்பொழுது சோவியத் யூனியன் மற்றும் கியூபாவின் ஆதரவு பெற்ற அரசாங்கம் அங்கு ஆட்சி நடத்தி வருகிறது.

## 4. நமிபியா (Namibia)

தென்மேற்கு ஆப்பிரிக்கா என வழங்கிவந்த நமிபியா ஜெர்மனியின் முன்னாளய காலனியாகும். முதல் உலகப்போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்படவே அதன் கீழிருந்த தென்மேற்கு ஆப்பிரிக்கா சர்வதேச சங்கத்தின் பொறுப்பாண்மைப் பகுதியாக்கப்பட்டது. அத்துடன் அதனை மேற்பார்வை செய்யும் பொறுப்பு தென் ஆப்பிரிக்காவிடம் விடப்பட்டது. (1920) பின்பு ஐ.நா.சபை இந்நாட்டை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரியபொழுது தென் ஆப்பிரிக்கா அவ்வாறு செய்ய மறுத்து விட்டது. எனவே, ஐ.நா. சபை தன்னிச்சையாகத் தென் ஆப்பிரிக்காவிற்குக் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பாண்மையை நீக்கியது. அத்துடன் தென் மேற்கு ஆப்பிரிக்காவின் பெயரையும் நமிபியா என மாற்றி அப்பகுதியை நிர்வகிப்பதற்கென்று ஒரு குழுவையும் ஏற்படுத்தியது. இதனை தென் ஆப்பிரிக்கா ஏற்க மறுத்துவிட்டது. அத்துடன் அது தன்னுடைய விருப்பப்படி பல திட்டங்களை அங்கு செயல்படுத்தி வருகிறது.

இதற்கிடையில் அந்நாட்டு மக்கள் 'SWAPO' (South West African People's Organisation) என்ற அமைப்பை நிறுவி, அதன் விடுதலைக்காகத் தொடர்ந்து போரிட்டு 1990—ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுதந்திர நாடாக மாறிற்று.

## 5. அல்ஜீரியா (Algeria)

1830—ஆம் ஆண்டு பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த அல்ஜீரியா 1848—ஆம் ஆண்டு தன் சுதந்திரத்தை முழுமையாக இழந்தது. பிற நாடுகள் போன்றே இயங்கும் தேசிய சக்திகள் இணைந்து ஆதிக்க ஆட்சிக்கெதிராகப் புரட்சிகள் மேற்கொண்டனர். அப்துல்காதர் மொக்ரனாய் என்பவரும் லல்லா பாத்மா என்பவரும் விடுதலை

(குறிப்புக்கான இடம்)

இயக்கத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். ஆரம்பகாலங்களில் ஏற்பட்ட கலகங்கள் அனைத்தையும் பிரெஞ்சு அரசாங்கம் முறியடித்தது.

1951—ஆம் ஆண்டு பல வகையான விடுதலை இயக்கங்கள் ஒன்றாக தேசிய விடுதலை முன்னணி (NLF-National Liberation Front) என்ற பெயரில் இணைந்து செயல்படத் தொடங்கின. இப்படையும் பிரெஞ்சுப் படையும் அடிக்கடி மோதிக் கொண்டன. 1958—ஆம் ஆண்டு தி—கால் பதவிக்கு வந்தவுடன் அல்ஜீரியாவிற்கு சுதந்திரம் வழங்கினார் அல்ஜீரியக் குடியரசின் முதல் அரசாங்கத்தைப் பெர்ஹட் அப்பாஸ் என்பவர் நிறுவினார். எனினும் தற்போது இங்கு ஒரு புரட்சிக் குழு ஆட்சியை நடத்தி வருகிறது.

## 6. கானா (Ghana)

.1960—ஆம் ஆண்டு ஜீலை மாதம் முதல் நாள் கானா விடுதலை பெற்றது. அதனுடைய பழைய பெயர் "கோல்டு கோஸ்ட்" என்பதாகும். இந்நாட்டின் தலைவரான டாக்டர் என்க்ருமா சிறந்த தேசியவாதி ஆவார். ஆப்பிரிக்கா நாடுகளின் ஒற்றுமைக்காகப் பெரிதும் பாடுபட்டார். எனினும் 1966ஆம் ஆண்டு அவர் மக்களின் அடிப்படை உரிமைகளைத் தடை செய்யவே அங்கு அவருக்கு எதிர்ப்பு வளர்ந்தது. அவர் 1966—ஆம் ஆண்டு சீனாவிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது, ஜெனரல் ஜோசப் அன்கிரா என்பவர் இராணுவப்புரட்சி மூலம் தன் ஆட்சியை ஏற்படுத்தினார். மீண்டும் 1969—ஆம் ஆண்டு அங்கு குடியாட்சி நிறுவப்பட்டது. டாக்டர் கோஃபி புஸியா அந்நாட்டடின் தலைமை அமைச்சரானார். அதைத் தொடர்ந்து அங்கு மேலும் இரு புரட்சிகள் ஏற்பட்டு ஆட்சிகள் மாற்றி அமைக்கப்பட்டன. (1972, 1978) பின்னர் 1979—ஆம் ஆண்டு தேர்தல்கள் நடத்தப்பெற்று மீண்டும் குடியாட்சி நிறுவப்பட்டது.

## 7. உகாண்டா (Uganda)

நெடுங்காலமாகப் பிரிட்டனின் பாதுகாப்பில் இருந்து வந்த உகாண்டா 1963—ஆம் ஆண்டு விடுதலை அடைந்தது. கபாகா புகாண்ட என்பவர் அதன் தலைவராகவும் மில்டன் ஒபேட்டே அதன் தலைமையும் ஆனார்கள். இவர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் காணப்பட்டது. சிறிது காலம் கழித்து ஓபேட்டேயின் கை ஓங்கவே, கபாகா இங்கிலாந்திற்குத் தப்பி ஓடினார். பின்னர் 1971 ஆம் ஆண்டு இடி அமின் என்பவர் ஒரு இராணுவப்புரட்சி மூலம் தன் ஆட்சியை நிறுவினார்.

(குறிப்புக்கான இடம்)

கடும் கொடுங்கோலராகவிருந்த இடி அமின் தன் எட்டாண்டு கால ஆட்சியில் சுமார் மூன்று மில்லியன் மக்களைக் கொன்று குவித்தார். பின்னர் 1979 ஆம் ஆண்டு உள்நாட்டு கொரில்லாப்படையினர் டான்சானிய நாட்டுப் படையின் உதவியுடன் அவரது ஆட்சியைத் தூக்கி எறிந்தனர். அதன் பிறகு அங்கு லுலூ என்பவர் பதவியேற்றார். தற்பொழுது அங்கு ஆட்சி நடத்தி வருபவர் காட்ஃப்ரே புய்சியா என்பவர் ஆவார்.

### பொதுவான பிரச்சனைகள்

காங்கோப் பிரச்சனையும் அல்ஜீரியாப் பிரச்சனையும் ஒரு முடிவுக்கு வந்த பின்னர் கேசபிளாங்கோ அணியும் மான்றோவியன் அணியும் ஒன்றாக இணைந்து, 'ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு' (Organisation of the African Unity) என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர் (1963). இத்தருணத்தில் பன்னாட்டு விவகாரங்களில் அவர்கள் பல தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது இந்த புதிய அமைப்பில் இணைந்த இவ்விரு அணியினரும் தங்கள் பழைய கொள்கைகளையும், செயல்முறைகளையும் மறந்து விடவில்லை. இதனால் பல பிரச்சனைகள் எழுந்தன. இப்பிரச்சனைகளைச் சமாளிக்குமுகமாக 'ஆப்பிரிக்க விடுதலைக்குழு' (African Liberation Committee-ALC) என்ற அமைப்பை ஏற்படுத்தினர். இதன் பயனாக 1960க்குப் பிறகு பல ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை அடைந்தன. அத்துடன் அவைகள் பன்னாட்டு விவகாரங்களிலும் முக்கியப் பங்கேற்றன. அங்கு தற்பொழுது 50க்கும் அதிகப்பட்ட சுதந்திரமான நாடுகள் காணப்படுகின்றன. அங்கும் ஜனநாயகப் பரிசோதனைகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் அவர்கள் வெற்றி அடைவார்களா, அடைய மாட்டார்களா என்பதைத் தற்பொழுது நிர்ணயிப்பது கடினமே.

தற்பொழுது, அங்குள்ள பல நாடுகளில், 'ஜனநாயகம் காக்கப்பட வேண்டும்' என்ற போர்வையில் இராணுவ ஆட்சிகள் நிறுவப்பட்டுள்ளன. அதில் மொராக்கோ, எத்தியோப்பியா, லிபியா, டோங்கா, ஈகுடேரியல், கினியா, மத்திய ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கவை.

இப்பிரச்சனைகளுக்கெல்லாம் இருகாரணங்களை அடிப்படையாகக் கூறலாம். ஒன்று அங்கு காணப்படும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமை மற்றொன்று அந்நாடுகளின் பின்தங்கிய பொருளாதாரம். அங்கு முக்கியப் பங்கேற்றிருக்கும் தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகம்

(குறிப்புக்கான இடம்)

காணப்படுகின்றன. ஆயினும், பன்னாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் இந்நாடுகளில் பெரும்பாலானவை கூட்டுச் சேராவியக்கத்தில் சேர்ந்துள்ளன. எனினும் இங்கும் வல்லரசுகளின் தலையீடும் அவ்வப்போது காணப்பட்டு வருகின்றது. தற்காலத்தில் கியூபா சோவியத்யூனியனின் ஆதரவுடன் அங்கு தன் செல்வாக்கை நிலைநாட்ட முயன்று வருகிறது. அந்த வேளையில் சீனாவும் தனக்கு ஆதரவு திரட்ட முனைந்து வருகிறது. இவ்வேளையில் இந்த ஆப்பிரிக்க நாடுகள் மிகவும் ஒற்றுமையுடனும், மிகவும் கவனத்துடனும் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

### 9.1.5. லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதயம்

அமெரிக்கக் கண்டத்தில் ஒரு பகுதியாக விளங்கும் லத்தீன் அமெரிக்கா உலக அரசியலில் ஒரு முக்கிய பங்கேற்று விளங்குகிறது. வெகு காலமாக ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்த இப்பகுதி, சைமன் பொலிவர் மற்றும் ஜோஸ் தி—சான்மார்டின் போன்ற தலைவர்களின் அயராத உழைப்பின் பயனாக விடுதலை அடைந்தது. இந்த லத்தீன் அமெரிக்கப் பகுதி தன்னகத்தே 25 குடியரசு நாடுகளைக் கொண்டிருக்கிறது. இதன் மக்கள் தொகை சுமார் 30 கோடியாக இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் இதன் மக்கள் தொகை சுமார் 30 கோடியாக இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் இதன் மக்கள் தொகை மிகவும் அதிகரித்து வருகிறது. இப்பகுதியிலுள்ள நாடுகளிடையே ஏராளமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இப்பகுதியில் அமெரிக்கர்கள், இந்தியர்கள், ஐரோப்பியர்கள், ஆப்பிரிக்கர்கள், கிழக்கு இந்தியர்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்ற பலதரப்பட்ட இனத்தவரும் வசித்து வருகின்றார்கள். ஒவ்வொரு இனத்தவரும் ஒரு சில பகுதிகளில் அதிகமாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. உதாரணமாக சிலியிலும் உருகுவேயிலும் சுமார் 98 சதவிகிதம் வெள்ளை இனத்தவர் வசித்து வருகிறார்கள். பிரேசில், கௌடிமாலா, மெக்ஸிகோ போன்ற நாடுகளில் இந்திய அமெரிக்கர்கள், ஐரோப்பிய அமெரிக்கர்கள் மற்றும் நீக்ரோக்கள் போன்ற இனத்தினர் அதிகம் காணப்படுகின்றனர். கயானா, டிரினிடாட் போன்ற பகுதிகளில் கிழக்கிந்தியர்களும், ஜப்பானிய, அமெரிக்கர்களும் அதிகமாக காணப்படுகின்றனர்.

மேலும் இங்கு காணப்படும் நாடுகளின் அளவு, மக்கள் பரப்பு இயற்கை வளங்கள், பொருளாதார மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவற்றிலும் மிகுந்த வேறுபாடுகள் இருந்து வருகிறது. உலகில் மிகவும் சிறிய நாடுகளில் ஒன்றான எல்சால்வடார் நாடும் பரப்பளவில் உலகில் ஐந்தாவதாக இருக்கும் பிரேசிலும் இங்குதான் உள்ளன.

உருகுவே நாட்டில் மிகுந்த செல்வச் செழிப்பு காணப்படுகிறது. ஆனால் அதே வேளையில் அதன் அண்டை நாடான பெருகுவேயில் வறுமை தாண்டவமாடுகிறது. அர்ஜெண்டினாவில் சுமார் 90 சதவிகித மக்கள் கல்வி அறிவு பெற்று விளங்குகையில் அங்கு காணப்படும் மற்றொரு நாடான ஹெய்டியில் சுமார் 10 சதவிகித மக்களே படிப்பறிவு பெற்றிருக்கின்றனர்.

இது தவிர, அங்குள்ள அரசியல் சூழ்நிலைகளில் ஒரு நிரந்தரமான பதட்டநிலை காணப்படுகிறது. இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சிகள் மாற்றி அமைக்கப்படுவது அக்கண்டத்தில் அன்றாட நிகழ்ச்சியாக இருக்கிறது. அங்கு யார் யார், ஆட்சியிலிருப்பார்கள், அவர்கள் எவ்வளவு காலத்திற்கு ஆட்சிபுரிவார்கள் போன்ற வினாவிற்கு நாம் விடையளிப்பது மிகவும் கடினமான ஒன்றாகும். இவ்வாறு அங்கு காணப்படும் அரசியல் பதட்ட நிலைக்கு அந்நாடுகளின் பின்தங்கிய பொருளாதாரம் ஒரு முக்கியக் காரணமாகும். ஒரு சில நாடுகள் செல்வத்தைக் குவித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் வேறு சில நாடுகள் வறுமையில் வாடிவருகின்றன வளமான நாடுகளிலும் செல்வம் சிலரிடத்திலேயே குவிந்து காணப்படுகிறது. உதாரணமாக பொலிவியா நாட்டில் சுமார் 2 சதவிகித மக்கள் நாட்டின் 70 சதவிகித செல்வத்தை தங்களிடம் கொண்டுள்ளனர். இவ்வாறு அதிகமான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளைத் திணறவைக்கும் மற்றுமொரு பிரச்சனை ஜனத்தொகைப் பெருக்கம் ஆகும். நகர்புறங்களில் மக்கள்தொகை பெருகிவருவதுடன் வேலையில்லாப் பிரச்சனையும் தீவிரமடைந்து வருகிறது. இதன் விளைவாக அந்நாடுகளின் அரசியலில் லஞ்ச ஊழலும் மலிந்து வருகிறது.

லத்தீன் அமெரிக்க நாடுகளை அவற்றின் புவி அமைப்பின்படி இருபகுதிகளாகப் பிரிக்கலாம். மத்திய அமெரிக்க நாடுகளான கௌடிமாலா, எல்சால்வடார், ஹோண்டுரஸ், நிகாராகுவா, காஸ்டாரிகா, பனாமா ஆகிய நாடுகளும் கிபீய நாடுகளான க்யூபா, ஹைடி, டொமினா, டிரினிடாட் போன்ற நாடுகளும், வட அமெரிக்க நாடுகளான மெக்ஸிகோவும் இதர பிற பதினொரு சிறுதீவுகளும் இணைந்தவை ஒரு பிரிவாகக் கருதப்படுகிறது. கொலம்பியா, ஈகுவேடர், கயானா, பெரு, பொலிவியா, பிரேசில், பராகுவே, உருகுவே, அர்ஜென்டினா, மற்றம் சிலி போன்ற நாடுகள் மற்றொரு பிரிவாகக் கருதப்படுகிறது.

இந்நாடுகளனைத்தும் நெருங்காலமாக ஏகாதிபத்திய ஆட்சிகளின் கீழிருந்தன. 1776—ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில்

(குறிப்புக்கான இடம்)

ஆங்கிலேய ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்ததை அடுத்து இந்நாடுகள் அனைத்திலும் சிறிது சிறிதாக காலனி ஆதிக்கமும் நீங்கலாயிற்று. இப்பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய நாடுகளில் குறிப்பிடத்தகுந்தவைகள் பிரிட்டன், ஸ்பெயின், மற்றும் பிரான்சு போன்ற நாடுகள் ஆகும். 19—ஆம் நூற்றாண்டிற்குள் பெரும்பாலும் சுதந்திரம் அடைந்த இந்நாடுகளில் அரசியல் விழிப்புணர்ச்சி அவ்வளவு சிறப்பாகக் காணப்படவில்லை. அதன் விளைவாக அங்கு ஏற்பட்ட ஒரு அரசியல் பதட்ட நிலையின் காரணமாக அரசாங்கங்கள் மாறிய வண்ணமிருந்தன. பல நாடுகளில் இராணுவ ஆட்சிகள் ஏற்பட்டன. இச்சூழ்நிலைகளுக்கு அந்நாடுகளின் பின்தங்கிய பொருளாதாரமும் ஒரு முக்கியக் காரணமாகும்.

இக்காரணங்களினால் இப்பகுதியிலுள்ள நாடுகளில், அந்நியர்களின் தலையீடு அதிகரிக்கக்கூடும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் கருதலாயிற்று. இயற்கையிலேயே வளம் மிகுந்த நாடான அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ஒரு சிறப்பான அரசியல் சூழ்நிலையும் அமையப் பெற்றது. அக்காலக் கட்டத்தில் அமெரிக்கா உலக அரசியலிலிருந்து தனித்திருக்கும் கொள்கையைப் (policy of isolation) பின்பற்றி வந்தது. அக்காலத்தில் உலக அரசியல் என்பது பொதுவாக ஐரோப்பியக் கண்டத்தின் அரசியலைக் குறிப்பதாகவே விளங்கியது. அக்காலத்தைய வல்லரசுகளான பிரான்சு, பிரிட்டன், ஹாலந்து, ஸ்பெயின், போன்ற அனைத்து நாடுகளும் ஐரோப்பிய நாடுகளாக இருந்தமையால் அக்கண்டமே ஒரு போர்க்களமாகக் காணப்பட்டு வந்தது. அத்துடன் இந்நாடுகள் அனைத்தும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததால் அவைகளிடையே போட்டி மனப்பான்மை மிகவும் அதிகரித்து காணப்பட்டது. இதன் விளைவாக அமெரிக்கக் கண்டமும் ஒரு போர்களமாக மாறிவிடக் கூடாது என அமெரிக்க ஐக்கிய நாடுகள் எண்ணலாயிற்று. புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகள் மேன்மையுற வேண்டுமெனில், அதற்கான முயற்சிகளைச் சிறப்புற மேற்கொள்வதற்கேற்ற அமைதியான சூழ்நிலை காணப்பட வேண்டியதின் அவசியத்தை அமெரிக்கா நன்கு உணர்ந்திருந்தது. எனவே இப்பகுதிகளில் அமைதி காப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அது தலைப்பட்டது.

அமெரிக்காவின் முன் காணப்பட்ட தலையாய பிரச்சனைகளுள் அமெரிக்கக் கண்டத்தில் எங்ஙனம் அந்நிய ஆதிக்கம் ஏற்படாமல் தடுப்பது என்ற பிரச்சனை குறிப்பிடத்தக்கதாகும். இது குறித்து அமெரிக்கா அக்கண்டத்தின் பிறநாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டது

(குறிப்புக்கான இடம்)

அதன் விளைவாக அமெரிக்க நாடுகளிடையே ஒற்றுமை காப்பதற்கென ஒரு அமைப்பு நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் அமெரிக்க கண்டத்திலிருக்கும் அனைத்து நாடுகளுக்கும் அங்கத்துவம் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய அமைப்பு அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தனிப்பட்ட முயற்சியினாலே தோன்றிய ஒன்று எனக் கூறலாம் இவ்வமைப்பில் சேருவதன் மூலம் நாடுகள் பொருளாதாரம் மற்றும் இராணுவ உதவியைப் பெற முடியும் என்றும், அதற்கேற்ற வழிவகைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கண்டறியும் என்றும் அமெரிக்கர்கள் அறிவித்தனார். பெரும்பாலும் அனைத்து நாடுகளுமே பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்டிருந்ததால் அவைகள் இவ்வமைப்பில் சேர்ந்து பயன்பெற விழைந்தன. அத்துடன் பல நாடுகளில் இராணுவ ஆட்சிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், சில நாடுகளில் தொடர்ந்து அரசியல் பதட்டநிலைக் காணப்பட்டதாலும் அந்நாட்டின் ஆட்சியாளர்கள் இவ்வமைப்பில், இணைவதன் மூலம் பெறவிருந்த இராணுவ உதவிகளைக் கொண்டு தங்களது ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொள்ள முனைந்தனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பொறுத்தமட்டில், இந்நாடுகளை அந்நிய ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றி அங்கு அமைதிச் சூழ்நிலை திகழச் செய்வதே மிகவும் முக்கியமாகக் காணப்பட்டது. இதில் ஓரளவு சுயநல நோக்கமும் காணப்பட்டது. தன் கண்டத்திலும், தன் எல்லை நாடுகளிலும் வல்லரசுகள் குறுக்கீடு அதிகரிக்குமேயானால், தன் முன்னேற்றம் தடைப்படும் என்பதனையும் தனக்குப் பல பிரச்சனைகள் தோன்றும் என்பதனையும் அதன் விளைவாக அதன் பாதுகாப்பிற்குப் பங்கம் நேரிடவும் கூடும் என்பதனையும் அமெரிக்கா நன்குணர்ந்திருந்தது. இப்பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டுமெனில் அமெரிக்கக் கண்டம் முழுமையுமே தன் கட்டுப்பாட்டின் கீழ் கொணர வேண்டும் என அமெரிக்கா எண்ணியது. இக்காரியத்தைச் சாதிக்கும் வகையில் அதன் பொருளாதாரமும் சிறப்புற அமைந்திருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இம்முயற்சியில் அமெரிக்கா ஒரு சிறப்பான வெற்றியைப் பெற்றதென்றே சொல்லவேண்டும். "லத்தீன் அமெரிக்க நாடுகளில் தன் பொருளாதார வலிமையின் துணை கொண்டு அமெரிக்கா அங்கு தன்னுடைய ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டியுள்ளது என்று சொல்லும் அளவிற்கு அப்பகுதிகளில் அமெரிக்காவின் செல்வாக்கு பரவியிருந்தது.

முன்னேற்றத்தை த அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்
அ) ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனை பற்றி விளக்கு.
ஆ) லத்தீன் அமெரிக்க நாடுகளின் உதயம் விவரி.

## 9.1.6. ரியோ ஒப்பந்தம் (The Rio Treaty)

கெடுபிடிப்போர் அரசியல் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளும், பிற அமெரிக்க நாடுகளும் தங்களிடையே ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டன. அதுதான் ரியோ ஒப்பந்தம் (The Rio Treaty) எனப்படுவதாகும். இதை

(குறிப்புக்கான இடம்)

ஒரு இராணுவ ஒப்பந்தம் என்று கொள்ளலாம். இவ்வொப்பந்தத்தின் மூலம் அமெரிக்கக் கண்டநாடுகள் ஏற்படுத்திக் கொண்டன. அதன் மூலம் பிற கண்டங்களைச் சார்ந்த அரசுகளுக்கு இராணுவத் தளவசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுப்பதில்லை என்றும், பிற அரசுகளின் கட்டுப்பாடுகளை ஏற்பதில்லை என்றும் முடிவெடுத்தன. தங்களுடைய பிரச்சனைகளைத் தங்களுக்குள்ளேயே பேச்சு வார்த்தைகள் நடத்தி அவற்றிற்குத் தீர்வு காண முனைந்தன. இது தவிர அந்நிய அரசுகள், இவ்வமைப்பில் இணைந்துள்ள நாடுகள் யாதொன்றையாவது ஆக்கிரமிக்க முனைந்தால் இவ்வமைப்பு நாடுகள் அனைத்தும் அத்தகைய பாதிப்பை எதிர்நோக்கியிருக்கும் நாட்டிற்கு எல்லா வகையான உதவிகளையும் செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டது. இத்தகையதோர் ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அயல்நாட்டுக் கொள்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இவ்வொப்பந்தம் இன்றளவும் நீடித்து நிற்பது அதன் சிறப்பை உணர்த்துவதாக உள்ளது. எனினும் தற்காலத்தில் இவ்வமைப்பில் ஒரு சிறிதளவு விரிசல் கண்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கா 1776–ஆம் ஆண்டு விடுதலைப் பெற்றதற்குப் பிற்பட்ட 200 ஆண்டு காலத்தில் அக்கண்டத்தில் அந்நிய ஊடுருவல்கள் இல்லாமல் இருந்தது அங்கே அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தந்தது. இச்சூழ்நிலையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் நன்கு பயன்படுத்திக்கொண்டு தன்னைப் பல வழிகளிலும் முன்னேற்றிக் கொண்டது. உலக அரசியலில் இன்று முதன்மையான வல்லரசுகளுள் அமெரிக்காவும் ஒன்றாகத் திகழ்கிறதென்றால், அதன் வளர்ச்சிக் காலத்தில் எத்தகைய இடையூறும் ஏற்படாமலிருந்ததும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். உதாரணமாக, இந்தியாவை எடுத்துக் கொள்வோமேயானால் அதன் முதல் 25 ஆண்டு கால சுதந்திர வாழ்க்கையில் மூன்று போர்களைச் சந்திக்க நேர்ந்தது. அதன் விளைவாக நாட்டின் வளர்ச்சி பணிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த நிதிகள் இராணுவச் செலவிற்கென திருப்பிவிடப்படவே முன்னேற்றம் தடைப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சிகள் எதுவும் அமெரிக்காவில் ஏற்படாததால் அந்நாடு தன் முழு கவனத்தையும் ஆக்கப்பணிகளில் செலுத்தி அதில் பெரும், வெற்றியும் கண்டது. எனவே இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் உலக அரசியலில் அமெரிக்கா தீவிரமாக நுழைந்த பொழுது தன் உள்நாட்டுப் பிரச்சனை குறித்து அது எவ்விதக் கவலையையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமிருக்கவில்லை.

(குறிப்புக்கான இடம்)

இக்காலகட்டத்தில் (1800—1950) அமெரிக்காவின் வலிமை அளவிடமுடியாத வகையில் முன்னேறிய வேளையில், பிற லத்தீன் அமெரிக்க நாடுகள் குறிப்பிடத்தகுந்த முறையில் யாதொரு முன்னேற்றத்தையும் பெற்றதாகக் கொள்ள முடியாது. அங்கு வறுமை தாண்டவமாடாவிடினும், செல்வம் கொழித்ததாகக் கூறமுடியாது. ஆரம்பகாலத்தில் காணப்பட்ட அரசியல் பதட்டநிலை ஒரு சிறிதளவு குலைந்துவிடினும் அதற்கான மூல காரணிகள் முற்றிலும் முறிக்கப்படவில்லை. 20—ஆம் நூற்றாண்டில் அதிலும் குறிப்பாக இரண்டாம் உலகப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் இச்சூழ்நிலை மீண்டும் தோன்றியுள்ளது. இந்நாடுகளில் (கியூபா தவிர) தோன்றியுள்ள இப்புதிய சூழ்நிலைக்கு வல்லரசுகளுக்கிடையே இக்காலகட்டத்தில் ஏற்பட்ட கெடுபிடிப்போர் ஒரு முக்கியமான காரணமாகக் கொள்ள முடியாது. அந்நாடுகளில் புரட்சிக் கருத்துக்கள் வேரூன்றி வருவதாக சில அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அந்நாடுகளில் வறுமை இன்னும் முற்றிலும் அகற்றப்படாமலிருப்பதால், மக்கள் ஆட்சியாளர்களை அகற்ற முயன்ற வண்ணம் இருக்கின்றனர். அத்தகைய முயற்சிகளை அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் அடக்குமுறை கொண்டு கட்டுப்படுத்த முனைந்து வருகிறார்கள். இத்தகைய ஆட்சியாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சொல்கேட்டு நடக்க விருப்பம் தெரிவித்து வருவதால், அத்தகைய ஆட்சியாளர்களுக்கு அமெரிக்காவும் முழு உதவிகளைச் செய்து வருகிறது. அதன் பயனாக அவ்வாட்சியாளர்களும் தொடர்ந்து பதவியில் நீடித்திருக்க முடிகிறது. ஏல்சால்வடார் போன்ற நாடுகளில் தற்போது நடந்துவரும் மக்கள் இயக்கங்களையும் அந்நாடுகளின் ஆட்சியாளர்கள் அடக்குமுறை கொண்டு ஒடுக்க விழைவதும், அத்தகைய முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருவதையும் இங்கு உதாரணமாகக் கொள்ளலாம். ஒரு சில நாடுகளின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் கருத்துக்களுக்கு மாறாக செயல்பட முனைந்தபொழுது அவர்கள் இராணுவப் புரட்சிகளின் மூலம் பதவியிறக்கப்பட்டிருக்கின்றனர் அல்லது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். சிலி நாட்டின் அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டதை இங்கு உதாரணமாகக் கூறலாம். எனவே இந்நாடுகளின் ஆட்சியாளர்களுள் பெரும்பாலானவர்கள் தங்களது பதவியைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு அமெரிக்கத் தொடர்பை அதிகரித்து வருகின்றனர். மேலும், மக்களுடைய பிரச்சனைகளை இவர்கள் தீர்க்க முயல மறுப்பதால் இவர்களுக்கு மக்களிடையேயும் செல்வாக்கில்லை. எனவே, தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள இவர்கள் அமெரிக்காவையே நம்பி உள்ளனர். அமெரிக்கர்களும் ஆட்சியாளர்களுடைய ஆதரவு இருந்தால் போதும் என்று எண்ணி,

(குறிப்புக்கான இடம்)

அவர்களின் பாதுகாப்பிற்கு வழி செய்து வருகின்றனர். இதனால் லத்தீன் அமெரிக்க மக்களிடையே சிறிதளவு அமெரிக்க விரோத மனப்பான்மை காணப்படுகிறது எனலாம். இத்தகைய அச்சுறுத்தல்களை மீற தன்னிச்சையான ஒரு கொள்கையைப் பின்பற்றி வரும் ஒரே நாடு காஸ்ட்ரோவின் (Castro) தலைமையின் கீழான கியூபா ஆகும். இத்தகைய சுதந்திரத்தைப் பெற கியூபா பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது.

இக்கண்டத்தின் அரசியல் நிலையைப் பொறுத்த வரையில் நாம் சற்று விரிவாகக் காண வேண்டிய அம்சங்கள் நான்கு ஆகும்.

அவையாவன:

1. பெரோனிஸம்
2. கியூபா பிரச்சனை
3. கூட்டுச் சேரா வியக்கமும் லத்தீன் அமெரிக்க நாடுகளும்
4. பாக்லாந்து பிரச்சனை

### 9.1.7. பெரோனிஸம் (Peronism)

1949—ஆம் ஆண்டு ஜெனரல் ஜீவன் என்பவர் அர்சென்டினாவில் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினார். இதன் விளைவாக அங்கு பெரோனிஸம் வளர்ந்தது. இரண்டாம் உலகப்போருக்கு மிக முக்கியமான காரணிகளான பாசிஸ மற்றும் நாசிஸக் கொள்கைகளும் இந்த பெரோனிஸத்திற்கும் மிகுந்த ஒற்றுமைகள் காணப்பட்டன. பாசிஸக் கோட்பாட்டிற்கு இரண்டாம் உலகப் போரில் சாவுமணி அடிக்கப்பட்ட போதிலும் பன்னாட்டு அரங்கிலும் அது ஓரளவு தன் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம் ஜனநாயக நாடுகள் அடங்கிய அமெரிக்கக் கண்டத்தில் இப் பாசிஸக் கொள்கைகள் பெரோனிஸத்தின் வடிவில் புகுந்த பொழுது பலர் அதிர்ச்சி அடைந்தனர். ஒரு இராணுவப் புரட்சியின் மூலம் அவருடைய ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், அங்கு பெரோனிஸமும் தன் செல்வாக்கைச் சிறிது சிறிதாக இழந்தது. எனினும், அதன் செல்வாக்கு அடியோடு களைந்தெறியப்பட்டு விட்டதாகக் கூறமுடியாது. தற்காலத்தில் இப்பாசிஸ சக்திகள் அங்கு மட்டுமின்றி, ஒரு சில நாடுகள் தவிர்த்த பிற நாடுகளில், அவ்வப்பொழுது தலையெடுத்து வருவதை யாரும் மறுக்க முடியாது.

### 9.1.8. கியூபா பிரச்சனை

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கியூபாவில் 1952—இல் பாடிஸ்டோ (Batista) என்பவர் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். இவருடைய ஆட்சி ஒரு கொடுங்கோலாட்சியாக விளங்கியது. இதனால் மக்களுக்குப் பெருத்த தொல்லைகள் ஏற்பட்டது. அத்தருணத்தில் ஃபிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) என்ற வழக்கறிஞர் தன்னுடன் இருநூறு நபர்களைச் சேர்த்துக்கொண்டு மான்கடா கோட்டையைத் தாக்கினார். இம்முயற்சியில் தோல்வியுறவே, அவர்கள் அனைவரும்கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஒரு சிறிது காலம் கழித்து காஸ்ட்ரோ விடுதலை பெற்றார். பின்னர், அவர் மெக்ஸிகோ நாட்டிற்குச் சென்று, 82 பேர் அடங்கிய 'ஊடுருவல் படையை' உருவாக்கினார். அப்படையின் துணையுடன் பாடிஸ்டா அரசாங்கத்திற்கெதிராக மீண்டுமொருமுறை தாக்குதல் புரிந்தார். இம்முறையும் தோல்வியுறவே அவர் தலைமறைவானார். எனினும் அவரது விடாமுயற்சியால் பாடிஸ்டா அரசாங்கம் 1959—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் தேதி கவிழ்க்கப்பட்டது. ஃபிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைமை அமைச்சரானார். பாஸ்டிடாவின் கொடுங்கோலாட்சி நீக்கப்பட்டால் போதும் என்று மக்கள் விரும்பியதால், காஸ்ட்ரோவின் அரசாங்கத்தை அவர்கள் ஏற்றனர். அதன் முதல் முயற்சியாக 1960—ஆம். ஆண்டு கியூபாவில் இருந்த வெளி நாட்டவரின் சொத்துக்களை தேச உடைமை ஆக்கினார். காஸ்ட்ரோவின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்கா பலத்த கண்டனம் தெரிவித்தது. அவர் இக் கூக்குரல்களைச் சிறிதும் சட்டை செய்யாமல், அங்கு மேலும் சில சமதர்மக் கொள்கைகளைச் செயலாக்க முனைந்தார். இவ்வாறு அமெரிக்காவை உதாசீனம் செய்துவிட்டு அவர் தன்னிச்சையாகச் செயல்படத் தலைப்பட்டது அமெரிக்காவை ஆத்திரத்தை உண்டுபண்ணியது. எனவே, காஸ்ட்ரோவின் ஆட்சியைக் கவிழ்க்கும் வகையில் உள்நாட்டுக் குழப்பக்காரர்களுக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. காஸ்ட்ரோ அப்பிரச்சனைகளைத் தன்னுடைய இராணுவத்தின் துணைகொண்டு திறமையாகச் சமாளித்தார். இத்தருணத்தில் அமெரிக்கா, பிற லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கியூபாவுடனான தொடர்புகளை நீக்கிவிட வற்புறுத்தவே, கியூபா தனித்து விடப்பட்டது பின்னர், பிற லத்தீன் அமெரிக்க நாடுகளை ஆதரவுடன் அமெரிக்கா, கியூபாவை அமெரிக்கா நாடுகளின் அமைப்பிலிருந்து புறம் தள்ளியது. அத்துடன், அதுகாறும் தான் கியூபாவுடன் மேற்கொண்டிருந்த சீனிவர்த்தகத்தை நிறுத்திவிடுவதெனவும் அமெரிக்கா முடிவெடுத்தது. உலகிலேயே அதிகமான சீனி உற்பத்தி செய்யும் கியூபாவின் பொருளாதாரம் அதன்

(குறிப்புக்கான இடம்)

சீனி ஏற்றுமதியை நம்பியே இருந்தது. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட சீனி முழுவதையும் அதுவரை அமெரிக்கர்களே வாங்கிவந்தமையால் கியூபாவிற்கு யாதொரு பிரச்சனையும் ஏற்படவில்லை. ஆனால், திடீரென்று 1962 ஆம் ஆண்டு கியூபாவுடனான சீனி வர்த்தகத்தை முழுமையாக நிறுத்திவிட அமெரிக்கா முடிவெடுக்கவே, கியூபாவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அக்கட்டத்தில் காஸ்ட்ரோவின் ஆட்சி ஒரு சிறிது ஆட்டம் கண்டது என்று கூடச் சொல்லலாம். அத்தருணத்தில் கியூபாவில் உற்பத்தி செய்யப்படும் சீனி முழுவதையும் தான் வாங்கிக் கொள்வதாகச் சோவியத் யூனியன் அறிவித்தது. அவ்வேளையில் கெடுபிடிப்போர் மிகவும் உச்ச நிலையில் இருந்ததை நாம் இங்கு மனதில் கொள்ள வேண்டும். சோவியத் யூனியனின் நட்புக்கரத்தை காஸ்ட்ரோ சிறிதளவும் தாமதிக்காமல் பற்றிக் கொண்டார். அத்துடன் ரஷ்யர்களின் உதவியுடன் தன் நாட்டை நவீனப்படுத்தவும் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தவும் முனைந்தார். ரஷ்யர்களும் தங்களுக்கு அமெரிக்கக் கண்டத்தில் ஒரு சிறந்த ஊன்றுகோலாக கிடைத்ததை எண்ணி மிகவும் மகிழ்ந்தனர். இவ்வாய்ப்பை நழுவ விட அவர்கள் விரும்பவில்லை. எனவே கியூபாவில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி முழுவதையும் சோவியத் யூனியன் இறக்குமதி செய்தது. அத்துடன் கியூபாவின் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து இராணுவ உதவிகளையும் செய்தது. சோவியத் யூனியனின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்கா பலத்த கண்டனம் தெரிவித்தது. ரஷ்யர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கருதாமல், கியூபாவின் நிலையுடன் தங்களது நிலைமையும் அமெரிக்கக் கண்டத்தில் வலுப்படுத்தத் தலைப்பட்டனர். அதன் விளைவாகக் கியூபாவில் தங்களுடைய ஏவுகணை தளங்களை (Missile Base) நிறுவ முனைந்து ஏவுகணைகளைக் கப்பலில் ஏற்றிச் சென்றனர். தங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஆபத்தினை நன்குணர்ந்த அமெரிக்கர்கள் சோவியத் யூனியனின் இம்முயற்சியை எவ்வாறேனும் தடுக்க உறுதி பூண்டனர். அதன் தொடர்பாகத் தங்களது போர்க்கப்பல்களைப் பசிபிக் கடலுக்கு அனுப்பி ஏவுகணைகளைத் தாங்கி வந்த சோவியத் யூனியனின் கப்பல்களை வழிமறித்தனர். இவ்வாறு இப்பிரச்சனையில் வல்லரசுகள் இரண்டும் முதன்முறையாக நேருக்குநேர் மோதிக்கொண்டன. சோவியத்யூனியன் கப்பல்கள் ஏவுகணைகளைக் கியூபாவிற்கு கொண்டு செல்ல முயன்றால் நிச்சயமாக அது போரில் முடியும் என்றும் அமெரிக்கா அறிவித்தது. இவ்விரு வல்லரசுகளும் சிறிது காலம் இடையறாத சொற்போர் நிகழ்த்தி வந்தன. எந்த நிமிடத்திலும் மற்றுமொரு உலகப்போர் தோன்றக்கூடும் என்ற அச்சம் இவ்வுலகை ஆட்கொண்டிருந்தது. வல்லரசுகளிடையே ஒரு போர் ஏற்படுமேயானால் இவ்வுலகம்

அழிந்துவிடும் என்பதை யாவரும் நன்குணர்ந்திருந்தினர். ஆனால் அதிருஷ்டவசமாமக, சோவியத் யூனியன் சிலமாதம் கழித்து பின்வாங்கிவிடவே, இப்பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்தது எனினும் தங்களுடைய இப்பிரச்சனையில் ஏற்பட்ட நெருக்கடியின் தீவிரத்தை இரு வல்லரசுகளும் நன்குணர்ந்தன அத்துடன் ஒரு அணு ஆயுதப் போரினால் ஏற்படக் கூடிய சேதங்களைக் குறித்தும் இவ்வல்லரசுகள் உணரத் தலைப்பட்டனர் இக்கியூபாப் பிரச்சனைக்குப் பின்னர் தான் வல்லரசுகளிடையேயான கெடுபிடிப்போர் ஓரளவு குறையத் தலைப்பட்டது எனலாம் இதன் பின்னர், கியூபாவில் காஸ்ட்ரோ தன்னுடைய ஆட்சியை நன்கு நிலைநிறுத்தினார். இன்றும் அவரே தொடர்ந்து ஆட்சியில் நீடித்து வருகிறார். கியூபா—ரஷ்யா நட்பு மிகவும் அதிகரித்துள்ள அதே வேளையில் கியூப அமெரிக்கா உறவுகளைச் சரிபடுத்தவும் காஸ்ட்ரோ முனைந்து வருகிறார்.

### 9.1.9. லத்தீன் அமெரிக்க நாடுகளும் கூட்டுச் சேரா இயக்கமும்

கூட்டுச் சேரா இயக்கத்தில் பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் விளைவாக இருநாடுகளுக்கும் ஆசியா ஆப்பிரிக்கா நாடுகளுக்குமிடையே ஒரு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. 1973—ஆம் ஆண்டு அல்ஜியர்ஸில் கூட்டப்பட்ட நான்காவது கூட்டுச்சேரா இயக்கத்தின் உச்சி மாநாட்டிலும், அதனை அடுத்த 1976—ஆம் ஆண்டு நடைபெற்ற கொழும்பு மகாநாட்டிலும் ஃபிடல் காஸ்ட்ரோ பெரும்பங்காற்றினார். இதனை அடுத்த இவ்வியக்கத்தின் ஆறாவது மகாநாடு 1979—ஆம் ஆண்டு ஹானாவில் (கியூபா) கூட்டப்பட்டது. இம் மகாநாட்டின் தலைவரான ஃபிடல் காஸ்ட்ரோ தன் அறிக்கையைச் சற்று சோவியத்யூனியன் சார்புடையதாக விளங்குமாறு தீட்டியிருந்தார். இதனால் சில மேலை நாடுகள் கூட்டுச் சேராவியக்கம் சோவியத் சார்புடையதாக மாறி வருகிறது என்று கண்டனம் தெரிவித்தனர். உண்மை எதுவாயினும், காஸ்ட்ரோ நிச்சயமாக சோவியத் சார்புடையவர் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். இவ்வியக்கத்தில் இந்நாடுகள் பங்கேற்றிருப்பதால் அவைகள் மற்றொரு பிரச்சனையையும் சந்திக்க நேர்ந்துள்ளது. இக்கூட்டுச்சேரா இயக்கத்தில் சேர்ந்துள்ள நாடுகளில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளில் பெரும்பாலானவை (லத்தீன் அமெரிக்க நாடுகள் உள்பட) பின்தங்கிய பொருளாதார நிலையைக் கொண்டிருக்கின்ற 'தெற்கு' நாடுகள் ஆகும். இத்தெற்கு நாடுகளுக்கும் வளர்ந்த 'வடக்கு' நாடுகளுக்குமிடையே தற்காலத்தில் ஒரு சில பிரச்சனைகள் தோன்றியுள்ளன. இவ்வடக்கு நாடுகளில் அமெரிக்காவும்

(குறிப்புக்கான இடம்)

அடங்கியுள்ளதால் வடக்கு தெற்கு பிரச்சனைகளில் இந்நாடுகளும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மிகுந்த கருத்து வேறுபாடுகள் கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் இந்நாடுகள் அமெரிக்காவின் போக்கை இவ்விஷயம் குறித்து எதிர்க்க வேண்டிய சூழ்நிலை எழுமாதலால் இந்நாடுகளும் அமெரிக்காவிற்குமிடையே கருத்து வேறுபாடுகள் மிகவும் அதிகமாகலாம்.

முன்னேற்றத்தை அறிவதற்க்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்
அ)ரியோ ஒப்பந்தம் பற்றி கூறு
ஆ)கியூபா பிரச்சனை பற்றி விவரி.
இ)லத்தின் அமெரிக்க நாடுகளும் கூட்டுச் சேரா இயக்கம் பற்றி விளக்குக.
ஈ) ஃபாக்லாந்து பிரச்சனையை தொகுத்து எழுதுக.

### 9.1.10. ஃபாக்லாந்து பிரச்சனை

ஃபாக்லாந்து தீவின் உரிமை குறித்து பிரிட்டனுக்கும் அர்ஜென்டினாவுக்குமிடையே எழுந்த பிரச்சனையில் அமெரிக்கர்கள் பிரிட்டனுக்கு தங்களது ஆதரவைத் தந்தனர். அமெரிக்கக் கண்டத்தைச் சார்ந்த நாடான அர்ஜென்டைனாவை விடுத்து அமெரிக்கா பிரிட்டனை ஆதரித்து சில லத்தீன் அமெரிக்க நாடுகளிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கா, அர்ஜென்டைனா உறவு நலிவடைந்து வரும் அதே வேளையில் அர்ஜன்டைனா—சோவியத் உறவுகள் வளர்ந்து வருகின்றன. இப்பிரச்சனையில் அமெரிக்காவில் சரிவர கவனித்து செயல்படாவிடில் வருங்காலத்தில் தாங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது கொண்டிருக்கும் செல்வாக்கை இழக்க நேரிடும்.

அது தவிர இந்நாடுகள் தற்காலத்தில் தங்கள் நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவின் குறியீட்டை வெறுக்கின்றன. இத்தகைய வெறுப்புகள் அதிகமாகும் பட்சத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இக்கண்டத்தின் பிற நாடுகளின் மீது கொண்டிருக்கும் பிடி மேலும் நழுவக்கூடும். அச்சந்தர்ப்பத்தைச் சோவியத் யூனியன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி லத்தீன் அமெரிக்காவில் மிகுந்த நண்பர்களையோ அல்லது ஆதரவாளர்களையோ பெற விழையக்கூடும். இதன் விளைவாக அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் பிரச்சனைகள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. லத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்காவிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்பதைப் பொறுத்தும் வருங்கால நிகழ்ச்சிகள் அமையும், உலகநாடுகள் அனைத்தையும் பாதித்துவரும் எண்ணெய் பிரச்சனை லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத்தையும் சீர்குலைந்துள்ளது. அந்நாடுகளின் பொருளாதார மேன்மைக்கென ஏற்படுத்தப்பட்ட லத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக நிறுவனமும் (Latin American Free Trade Association) பெரியதொரு வெற்றியை அடைந்துவிட்டதாக கூற முடியாது. எனவே, இத்தகைய சூழ்நிலைகளில், வருங்காலங்களில் பன்னாட்டு அரசியலில் லத்தீன் அமெரிக்காவின் பங்கு எத்தகையதாக இருக்கும் என்பதைக் கணிப்பது சிறிது கடினமே ஆகும்.

**9.1.11. தொகுப்புரை:**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி இருண்ட கண்டமாகவே கருதப்பட்டது. உலகின் மற்ற வாழ் மக்களுக்கு ஆப்பிரிக்காவினைப் பற்றி அதிகம் தெரிந்து இருக்க வாய்ப்பு இல்லை. மதகுருமார்கள் வணிகம், தொழில் இவற்றை பெருக்குவதற்கு ஐரோப்பியர்கள் போட்டி போட்டு ஆப்பிரிக்காவை கைப்பற்றினார்கள். முதல் உலகப்போருக்குப் பிறகு ஆப்பிரிக்கா மக்களாட்சி நாடுகளிடம் அதிக தொடர்பு கொண்டாடி ஆப்பிரிக்காவில் தேசீய இயக்கங்கள் தோன்றி ஒவ்வொரு நாடாக விடுதலை பெற்றன.

**9.1.12. முக்கியவார்த்தைகள்**

அரசியல் அதிகாரம் — பிறருடைய மனதையும் செயலையும் கட்டுப்படுத்துதல்.

கெடுபிடிப்போர் — ஆதிக்கப் போட்டி

**9.1.13. இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்:**

Morgentau, M.J. Politics Amongnations (Scientific, 1979)

**9.1.14. முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கான பதில்கள்**

கேள்வி எண். 1: பதில் எண். 9.1.1

கேள்வி எண். 2: பதில் எண். 9.1.2

கேள்வி எண். 3: பதில் எண். 9.1.3

கேள்வி எண். 4: பதில் எண். 9.1.4

கேள்வி எண். 5: பதில் எண். 9.1.5

**9.1.15 மாதிரிவினாக்கள்:**

1) ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சி பற்றி கூறு?

2) லத்தின் அமெரிக்க நாடுகளின் உதயம் பற்றி விவரி?

(குறிப்புக்கான இடம்)

# அலகு —10

## மனித உரிமைகள் — தாராளமயமாக்கம் — உலகமயமாக்கம் — தனியார்மயமாக்கம் — சுற்றுச் சூழல் — பயங்கரவாதம்.

**முன்னுரை:**

இவ்வுலகில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை, பன்னாட்டுச்சட்டம் மற்றும் தற்கால பன்னாட்டுச்சட்டத்தில் மனித உரிமைகளின் முக்கிய பங்கு. 2—ம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட தாரளமயமாக்கம், உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, கணினி மயமான செய்தி, தொழில் நுட்ப பரவல் போன்ற முக்கிய கருத்துக்கள் இவ்வலகில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**நோக்கங்கள்:**

மனித உரிமைகள்

தாரானமயமகாக்கம்

உலகமயமாக்கம்

தனியார்மயமாக்கம்

**அலகின் வடிவமைப்பு**

மனித உரிமைகள்

பன்னாட்டு மனிதாபிமான சட்டங்கள்

பன்னாட்டு சட்டங்களின் வளர்ச்சி

தாரளமயமாக்கம், உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம்

சுற்றுச் சூழல்

பயங்கரவாதம்

மக்களாட்சின் விரிவு

தொகுப்புரை (Summary)

முக்கிய வார்த்தைகள் (Key Words)

இந்த அலகு தொடர்பாக மேலும் படிக்க வேண்டிய நூல்கள் (Books for further studing)

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச்சோதனைக் கேள்விக்கானப் பதில்கள் (Check your progress Questions)

மாதிரி வினாக்கள்: (Questions)

## 10.1. மனித உரிமைகள் (Human Rights)

1948ல்—ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் மேற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபை உலக மனித உரிமைகள் பிரகடனத்தை இயற்றிப் பறை சாற்றியது. இதன் பொருளாதாரா, சமூகக் குழு மனித உரிமைகள் கமிக்ஷனின் உறுப்பினர்களை பல்வேறு பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் நியமித்தது. உலகின் எப்பகுதியிலும் ஏற்படக்கூடும் மனித உரிமை மீறலை இது கண்காணிக்கிறது. ஆறு மனித உரிமை ஒப்பந்தக் குழுக்கள் மூலமாக இக்கண்காணிப்பு நடைபெறுகிறது. இந்தியாவில் 1993—ல் இயற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தேசிய மனித உரிமை கமிக்ஷனைத் தோற்றுவித்தது. மாநில அளவிலும் இது போன்ற கமிக்ஷன் பல மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை சுதந்திரமாகச் செயல்படுவது நடைமுறையில் சாத்தியமாக இல்லை. ஏனெனில் அவற்றிக்கு அதிகார வலிமையும் நுற்றுக்கணக்கான உரிமை மீறலை ஆராய்ந்து விசாரிக்கத் தேவையான ஆள்கடட்டும் இல்லை. இதற்காக இக்கமிக்ஷன்கள் அரசு நிர்வாகத்தையும் போலீஸையும் நம்பியே செயல்பட வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்படும் தாமதம் ஒரு புறமிருக்க, வழக்குகளில் உரிமை மீறல் உள்ளது என்று கமிக்ஷன் கருதினாலும் கூட இது பரிந்துரை மட்டுமே செய்ய முடியுமே தவிர தண்டிக்கும் அதிகாரமில்லை. நீதி மன்ற நடவடிக்கைகள் மூலம் உரிமை மீறல் இல்லை என்றும் தீர்ப்பு வரலாம்.

எனினும் அண்மைக்காலமாக பொதுமக்களிடையேயும், அரசாங்கத்தின்பாலும், மக்களின் அனைத்துத் தரப்பினருக்கும், அனைத்து நிலைகளிலும் மனித உரிமைகளைப் பேண வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. முக்கியமாக குழந்தைத் தொழிலாளி, கொத்தடிமை முறை, சட்டவிரோதமாக சிறைப்படுத்துதல், அரசியல் கொலைகள், சாதி, சமய ரீதியான வன்முறைகள், சமுதாய, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள், பெண்கள், மதச்சிறுபான்மையினர், சில கடுமையான சட்டங்கள் ஆகியன ஆகியன மனித உரிமை மீறல் காணப்படும் விசக்ஷங்களாகக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் இந்திய அரசியலமைப்பை ஆக்கிய சான்றோர்கள் இது போன்ற துறைகள் அனைத்திலுமே எந்த ஒரு தனியான எச்சரிக்கை அமைப்பையும் ஏற்படுத்தாமலேயே மனித உரிமைகளையும், மாண்பினையம் உறுதிப்படுத்த வழி வகுத்துள்ளனர். அடிப்படை உரிமைகள் தனிமனித உரிமைகளை மீறல்களிடமிருந்து உடனடியாகக் காப்பாற்றிக் கொள்ள வகை

(குறிப்புக்கான இடம்)

செய்கிறது. அரசுக்கு வழிகாட்டு நெறிகள் பொதுவான உரிமை மீறல்களிலிருந்து அத்தகைய மீறல்கள் பாதிக்கத் கூடிய இனங்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும், வழிமுறைகளையும் வலியுறுத்துகிறது. எப்படியாயினும் மனித உரிமைக்குச் சிறந்த பாதுகாவலன் மனிதனே. இறுதியாக பிளேட்டோ, பர்க், மில், காந்தியடிகள் போன்ற சான்றோர்கள் கூறியது போல மனித மாண்புகளில் பற்றும், துணிச்சலும், கல்வி அறிவுமே உரிமைகளுக்கான சாதனங்களாகும்.

## 10.2. பன்னாட்டு மனிதாபிமான சட்டங்கள் ஒரு கண்ணோட்டம்

இன்றைய சுதந்தர உலகில் மனித உரிமைகளெனும் கருத்து ஒரு உயிரோட்டமுடைய கருத்தாக எழுச்சி பெற்றுள்ளது. மனித உரிமைகள் எனும் சிந்தனை ஒரு இலட்சியமாக உருவெடுத்துள்ளது. இக்கருத்தானது கடந்த காலங்களில் படிப்படியாக வளர்ந்து இன்று உருப்பெற்றுள்ளது. இங்கிலாந்தின் மகாசாசனம், உரிமைகளின் பட்டியல், அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் (1776)அமெரிக்க அரசியலமைப்பில் பொதிந்துள்ள உரிமைகளின் பட்டியல் (1791), பிரான்சின் மனித உரிமைகளின் பிரகடனம் போன்றவை மிக முக்கியமான வளர்ச்சிக் கட்டங்களாகும். இரு உலகப் போர்களின் கொடுமைகள் முடிவுக்கு வருமாறு 1945, ஜுன் 26—ல் சான்பிரான்ஸிஸ்கோவில் கூடிய பன்னாடுகளின் பரதிநிதிகள் ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகளின் சாசனமானது மனித உரிமைகளின் அடிப்படையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து வந்த ஐரோப்பிய மனித உரிமைக்கூட்டு ஒப்பந்தம் நவம்பர் 1950—ல் கையெழுத்திடப்பட்டு 1953—ல் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் ஐரோப்பியக் கழகமும், ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றமும் 1956—ல் நிறுவப்பட்டன. அதே வருடத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை பொருளாதார, சமூக, கலாச்சார, உரிமைகள், சிவில் அரசியல் உரிமைகள், இன அடிப்படையில் பாராட்டப்படும் எல்லாவிதமான வேற்றுமைகளையும் பன்னாட்டு ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்டது. இத்தகைய ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் யாவும் சேர்ந்து மனித உரிமைச் சட்டங்களாகக் கருதப்படுகின்றன. இவையே உலகில் மனித உரிமை காப்பதில் ஈடுபடுவோருக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. இம்மனித உரிமைச் சட்டங்களின் குறிக்கோள் என்னவென்றால் ஒவ்வொரு தனிமனிதனின் சிவில், அரசியல், கலாச்சார, பொருளாதார, சமூக உரிமைகளையம், சுதந்திரத்தையும் பாதுகாத்த, சமுதாயத்தில் அவைகளுக்கான உரிய இடத்தை அளிப்பதேயாகும். பெரும்பாலான

நாடுகளில் மனித உரிமைச்சட்டங்கள் அந்த நாடுகளின் அரசியலமைப்பில் இடம்பெற்று சட்டங்களாக, வழிமுறைகளாக விளங்குகின்றன. பலநாடுகளும், மனித உரிமை என்பது உள்நாட்டுப் பிரச்சனையாகக் கருத வேண்டுமே ஒழிய பன்னாட்டுச் சட்டத்தின் கிழ் மூளும் தீர்க்கக் கூடியதாக எண்ணக் கூடாதென்று கருத்து கொண்டுள்ளன. மனித உரிமை வழக்குகள் ஒரு நாட்டின் எல்லர் நீதிமன்றங்ளிலும் எடுத்துக் கொள்ளப்படுவதால், பாதுகாவலர்களும் (போலீஸ்), ராணுவப் படையைச் சேர்ந்தவர்களும் மனிதாபிமான சட்டங்களை அறிந்து கொள்வதும் அவற்றை மீறாமல் இருப்பதும் அவசியமாகின்றது.

தற்கால பன்னாட்டுச் சட்டத்தில் மனித உரிமைகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. பன்னாட்டளவில் மனித உரிமைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் இரண்டாம் உலகப்போருக்குப் பின்புதான் சூடுபிடித்தன. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதன் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று மனித உரிமைகளும், சுதந்திரமும் இன, மொழி, மத, பால் வேறுபாடின்றி எல்லோருக்கும் உரியதென்ற எண்ணத்தைப் பன்னாட்டளவில் வளர்த்தல் ஆகும், (Articles 55 & 56) இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை பலவேறு ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் ஆகிய்வற்றை மனித உரிமைச் சட்டங்களாக ஏற்றிருந்தாலும் இவையெல்லாம் எடுத்தில் மட்டுமே உள்ளன என்றும், நிஜத்தில் மனித உரிமை மீறல்களும், தவறாகப் பய்படுத்துதலும் எங்கும் நடக்கின்றன என்றும் பொதுவான எண்ணம் நிலவுகிறது. ஐக்கிய நாடுகள் சபை உலகெங்கம் அமைதி காக்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அதற்கான நடவடிக்கைகளை எடுத்த வருகின்றது. ஆனால் மனித உரிமைகளை இழந்து அமைதியை அடைய முடியாது. ஐ.நா. சபை எடுத்துவரும் அமைதி காக்கும் நடவடிக்கைகள் மனித உரிமையை மேம்படுத்துவதற்காகவே.

மனித உரிமை தொடர்பான சட்டங்கள், ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் ஆகியவற்றை காவலர்களும், ராணுவப் படையைச் சேர்ந்தோரும் அறிந்திருப்பது மிக அவசியமாயென்கிறது. அப்பொழுது தான் அவர்கள் பன்னாட்டுத் தரத்திற்தேற்றவாறு தமது பணியினை செவ்வனே ஆற்ற முடியும்.

ஹேக் சட்டங்கள், ஜெனீவா சட்டங்கள் எனக் கூறப்படும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்கள் நாடுகளுக்கிடையே ஏற்படும் போர்க்காலங்களில் அமல்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஹேக் சட்டங்கள் போர்க்கால

(குறிப்புக்கான இடம்)

நடவடிக்கைகள், அனுமதிக்கப்பட்ட போர் முறைகள், வழிகள் இவற்றை வரையறுக்கின்றன. ஜெனீவா சட்டங்கள் போர்க்கைதிகள் சம்பந்தமானவை. இந்தியாவும் இச்சட்டங்களை ஏற்று கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்றாகும்.

## பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களின் வளர்ச்சியும் அமல்படுத்தலும்— 10.3

ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட காலத்திலிருந்த பன்னாட்டு சமுதாயத்தினால் ஏற்கப்பட்ட பற்பல சட்டங்களும், உலக நாடுகள் மனித உரிமைகளை வார்க்கவும் காக்கவும் கட்டாயத்படுத்துவதாக அமைந்துள்ளன. மனித உரிமைகளின் குறிக்கோள்களை பன்னாட்டு அமைதி, காப்பு, ஆயுதக் குறைப்பு, உலகின் அனைத்து வளங்களையும் சமமாகப் பிரித்தல் போன்றவற்றால் அடையலாம். இத்தகைய அடிப்படையான குறிக்கோள்களை ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கு வளர்ந்து வருவது திருப்தியளிக்கிறது. 1859—ல் ஹென்றி ட்யூனச்ட் எனபவர் கவனிப்பாரற்று மருத்துவ உதவியின்றி இறக்கும் தருவாயிலிருந்த பல படைவீரர்களைக் கண்டு மனவேதனை கொண்டு இவை எதிர்காலத்தில் நிகழா வண்ணம் தடுக்க தன் மனதில் தோன்றிய எண்ணங்களைப் புத்தக வடிவில் வெளியிட்டார் அவரது எண்ணங்களுக்கு சுவிட்சர்லாந்திலும் ஐரோப்பாவிலும் நல்ல வரவேற்பு கிடைத்தது.

1) ஒவ்வொரு நாட்டிலும் தேசிய அளவில் போர்க்காலங்களில் காயமுறும் ராணுவ வீரர்களுக்கு தகுந்த மருத்துவ உதவியளிக்க வகை செய்யும் சங்கங்கள் நிறுவப்பட வேண்டும். இவை ராணுவ மருத்துவக் குழுக்களுக்கு உதவியாக அமையும். இத்தகைய சங்கங்களே பிற்காலத்தில் செஞ்சிலுவை சங்கங்களாயின.

2) சண்டைக்காலங்களில் உதவவும், காயமுற்ற ராணுவ வீரர்களின் தேவைகளைக் கவனிக்கவும், பன்னாட்டளவில் ஒரு குழு நடுநிலை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட வேண்டும். 1863—ல் ஏற்படுத்தப்பட்ட அக்குழுவே பின்னால் பன்னாட்டு செஞ்சிலுவைக் குழுவானது.

3) காயமுற்ற வீரர்களை நடத்த வேண்டிய முறைகளைப் பன்னாட்டளவில் ஒரு கூட்டு ஒப்பந்தமாக வடிக்க சுவிட்சர்லாந்து அரசை வலியுறுத்தியது. இவ்வெண்ணத்தின் வடிவாக 1864—ல் சுவிட்சர்லாந்து அரசு ராஜீய உறவுக்கான கூட்டத்தைக் கூட்டியது.

இதில் 16 நாடுகள் பங்கேற்றன. இதன் விளைவாக போர்க்காலத்தில் காயமும் வீரர்களின் துயரைக் குறைக்கும் ஒரு கூட்டு ஒப்பந்தம் உருவாகியது. இதுவே பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்களுக்கு ஆரம்பமாக விளங்கியது.

பன்னாட்டு மனிதாபிமான சட்டங்கள் இரு பிரிவுகளாக ஏற்பட்டன

1) ஹேக் சட்டம்
2) ஜெனீவா சட்டம்

ஹேக் சட்டம் போர் நடவடிக்கைகளையும், அனுமதிக்கப்பட்ட போர்வழி முறைகறையும் வகுக்கிறது. ஜெனிவா சட்டம் 1949—ல் ஏற்பட்ட 4 கூட்டு ஒப்பந்தங்களையும். 1977—ல் ஏற்பட்ட இரு உப அறிக்கைகளையும் உள்ளடக்கியது.

ஜெனிவா ஒப்பந்தம் முக்கியமாக போரினால் பாதிக்கப்பட்வர்களைப் பற்றியதாகும்.

## 10.4. தாராளமயமாக்கம்— உலகமயமாக்கம் — தனியார்மயமாக்கம் — தற்போதைய தலைதூக்கும் பிரச்சனைகள்

தாராளமயம், உலகமயல், தனியார்மயம் ஆகியன இன்று அரசியல், பொருளாதாரம், பன்னாட்டு உறவு ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கக்கூடிய கருத்தக்களாகும். 20—ம் நுற்றாண்டின் இறுதியில் இக்கருத்துக்கள் பெரிதும் எழுச்சிபெற்றன. சோவியத் யூனியனின் சிதைவு, முதலாளித்துவ தாராள பொருளாதாரக் கொள்கையின் வலிமையை உறுப்படுத்தியது. உலகெங்கும் அது மேலும் மேலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும், வேகமாகப் பரவதாகவும் அமைந்தது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியும், கணினி மயமான செய்தி தொழில் நுட்ப பரவலும் இதற்கு மேலும் ஊக்குவிக்கப்படுகின்றன. உலகச் சந்தை எனும் அடிப்படையில் உலக நாடுகளனைத்தும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், சுகாதாரமான சில விதிகளுக்கு உட்பட்டு போட்டியிட்டு தத்தம் மக்களின் நிலையை மேம்படுத்திக் கொள்ளுதல் அவசியம் எனும் நிலை தோன்றியுள்ளது. எந்த ஒரு நாடும் தனது தனிப் பொருளாதாரம் என்பதை பிறநாடுகளின் தணையின்றித் தானே நிர்ணயித்துவிட முடியாது என்பது நாம் அறிந்ததே. ஒன்றை ஒன்று சார்ந்த பன்னாட்டுப் பொருளாதாரக் காரணிகளானவை கழுத்தறுக்கும் போட்டா . போடடிகளையம், தன்மக்களையோ அல்லது

அயல்நாட்டு மக்களையோ மந்தைகளாகவும், சந்தைகளாகவும் பாவிக்கும் நிலையையும் தோற்றுவித்தன. அரசியல் ஆதாயம், அரசியல் குறுக்கீடு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்ருந்த தனிநபர் பொருளாதார சுதந்திரமும், தனியார் துறையும் சில நாடுகளே பெற்றிருந்த பொருளாதார ஏகபோகமும், மறு ஆய்வுக்கு உள்ளாயின. அந்நிலை ஏற்படுவதற்கு, வளர்ந்துவரும் மூன்றாம் உலக நாடுகள் பெரிதும் உதவின. படிப்படியாக ஒரு நாடும் மக்களும் நலவாழ்வு பெற பொருளாதார வலிமை அவசியம் என்பதும், இவ்வலிமை அதிக, தரமான உற்பத்தி, அதிக வாணிகம் ஆகியவற்றினால் மட்டுமே சாத்தியம் என்பதும் அதை அடைய வேண்டுமானால் பொருளாதாரத்தில் தேவையற்ற அரசியல் குறுக்கீடு குறைந்து, குறுகிய நோக்கங்கள் அகன்று தாராளமயமும் தனியார் துறையும் ஒருங்கிணைந்த உலகப் பொருளாதாரமும் தேவை என்பதும் உணரப்பட்டன. இதன் விளைவாக முன்னேறிய மேலைநாட்டு தாராளமய பொருளாதாரம் மற்ற நாடுகளுக்கும் பரவி வருகின்றது.

இந்தியாவில் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது மன்மோகன்சிங் எனும் நிதியமைச்சர் இத்தகைய பொருளாராக் கொள்கையைப் புகுத்தினார். தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் இதே கொள்கையைப் பின்பற்றி இந்தியாவின் பொருளாதார வலிமையை மேம்படுத்த முயற்சி செய்கின்றன. ரக்ஷியா, சீனா ஆகிய நாடுகள் கூட தமது பொதுவுடமைக் கோட்பாட்டிலிருந்து அகன்று இக்கொள்கையைப் பின்பற்றி வருகின்றன. சிறுநாடுகளான தெய்வான், கொரியா போன்றவை கூட உலகச் சந்தையில் இன்று கௌரவமாகன இடத்தைப் பிடித்துள்ளன. இதன் அடிப்படைகளை உலக வங்கி உலகமயமாதலின் ஒப்பந்தம் போன்ற அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. ஒவ்வோரு நாடும் தனது தேவை, திறமை, வளம் அகியவற்றின் அடிப்படையிலும் கலாச்சாரத்தை ஒட்டியும் இத்தாரளமயக் கொள்கையை பின்பற்றி வருகின்றன.

### 10.5. சுற்றுச் சூழல்

சுற்றுச்சூழல் என்பது வாழும் உயிர்கள் ஒவ்வொன்றுக்கும் பிரதானமானது. தனக்குத் தேவையான சுற்றுச் சூழல் கெடும் பொழுது உயிர் இழக்கிறது அல்லது துன்புறுகின்றது. குறுகிய சுயநலம் காரணமாக மனிதன் ஈடுபடும் பல பொருளாதார நடவடிக்கைகள், வாழும் வகைள் சுற்றுச்சூழலை நிச்சயமாக பாதிக்கின்றன. நாளடைவில் இப்பாதிப்பு அதிகமானால் மனித இனத்துக்கே பேராபத்து விளையக் கூடும் என்பது உலக அளவில் இன்று ஆதிக்கம் செலுத்தக் கூடிய அச்சமாக விளங்குகிறது. இப்பாதிப்பை நீக்கவும் அல்லது குறைக்கவும் உலக

நாடுகளிடையே இதற்கான ஒருங்கிணைந்த நடடிவக்கைகளை ஊக்குவிக்கவும், ஐ.நா. சபையானது பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் பல ஒப்பந்தங்களையும் ஏற்படுத்தி ஒரு நாடு தனது நடவடிக்கைகளால், முக்கியமாக, பெருளாதார நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதை ஒரு வரம்பிற்குள் வைத்திருத்தல் வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. இதை மீறுவோர் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. ஆக உலகமயமாக்கலில் சுற்றுச்சூழல் என்பதும் முக்கியமான ஒரு அம்சமாகும்.

பிராணவாயு குறைவு, விசவாயுக்கள் பரவுதல், காடுகளின் அழிவு, நீர்நிலைகளை மாசுபடுத்தல் அல்லது குறைத்தல், அசுத்தங்களையும் குப்பைகளையும் பாதுகாப்பற்ற முறையில் வைத்திருத்தல், போதைப் பொட்களைப் பயன்படுத்தல், அணுவிசை மற்றும் இரசாயனக் கசிவு, நுண்ணியிர் நோய்க்கிருமிகள் பரவுதல், சுகாதாரமின்மை, வறுமை, விவசாயத்திலும் உணவுப் பொருட்களிலும் கேடு தரும் இரசாயனங்களைப் பயன்படுத்துதல் போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்கள் இன்று மனித வாழ்வின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளன. ஒவ்வொரு மனிதனும் தான் ஈடுபடும் ஒவ்வொரு செயலும் சுற்றுசூழ்நிலை எவ்வாறு பாதிக்கக் கூடும் என்று உணர்ந்து அறிவோடு நடக்கும்விதமாக இன்ற அரசும், தொழிற்சாலைகளும், கல்விக் கூடங்களும் இச்சுற்றுச் சூழல் எனும் கருத்தை மையமாக வைத்து இயங்கத் தொடங்கியுள்ளன.

## 10.6. பயங்கரவாதம்

பொருளாதாரம் உலகமய்மாகிறதோ இல்லையோ பயங்கரவாதமென்பது உலக நாடுகளையே ஆட்டிப்படைத்து அச்சுறுத்தும் ஒரு சக்தியாக விளங்குகிறது. உலக ஒற்றுமையையும், அமைதியையும், முன்னேற்றத்தையும் கலைத்து மனித கலாத்சாரத்தை அழிக்கக்கூடிய ஒரு சக்தியாக பயங்கரவாதம் தலைதுக்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது இடம் அல்லது நபர்தான் இப்பயங்கரவாதத்திற்குக் காரணம் என்று கூற முடிந்த காலத்தில் அப்பயங்கரவாத்தின் முறைகளை அறிந்து அதை வெற்றி கொள்வது எளிதாயிருந்தது. ஆனால் இன்று பயங்கரவாதத்தின் ஊடுறுவலையும் அதன் முறைகளையும் அறிந்து செயல்படுவதென்பது மிகக் கடினமாக உள்ளது. குறுகிய சுயநல அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும், மத அடிப்படையிலும் செயல்படுவதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் எல்லையின்றி நடத்தும் மனித குலத்திற்கு எதிரான இப்பயங்கரவாதத்தை கூண்டோடு அழிக்க உலக நாடுகளைனைத்தும் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்த

(குறிப்புக்கான இடம்)

நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது மேலும், மேலும் உணரப்பட்டு வருகிறது நாடுகளை . பிரிப்பதற்காக ஒரு காலத்தில் கையாளப்பட்ட பயங்கரவாதம் இன்று நாடுகளை சேர்க்கும் காரணியாக மாறிவிட்டது. இதுவே பயங்கரவாதத்தின் முடிவுக்கு நல்ல அறிகுறியாகும்.

## 10.7. மக்களாட்சியின் விரிவு

முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விகள்

அ)மனித உரிமைகள் பற்றி விளக்குக.

ஆ)தாராளமய மாக்கல், உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் பற்றி கூறு.

இ)சுற்றுச் சூழல் பற்றி கூறு.

ஈ)பயங்கரவாதம் பற்றி விவரி

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் சுதந்திரம் பெற்ற ஆசிய ஆப்பிரிக்க காலனிகளும், அதன்பிறகு அந்நியரது தளையிலிருந்து முற்றிலுமாகத் தம்மை விடுவித்துக் கொண்ட நாடுகளும் முற்றிலுமாகவோ அல்லது பெயரளவிலோ மக்களாட்சி முறையை மேற்கொண்டன. பொதுவுடமை நாடுகள் கூட தம்மை மக்களாட்சிகள் என்று கூறிக் கொண்டன. சோவியத் யூனியனின் வீழிச்சிக்குப் பிறகு உலக அரசியலில் ஏற்பட்ட திருப்பங்கள் காரணமாகவும் எதேச்சதிகாரத்திற்கு எதிரான சந்தனையும், உலகமயமான பொருளாதாராம் என்ற போக்கும் தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டு விடுவோம் என்ற அச்சமும் முன்னேறிய நாடுகளைப் போல் நாமும் முன்னேற வேண்டுமென்ற ஆர்வமும் தகவல் தொழில்நுட்பத்தின் பரவலும் மற்றும் இன்னோரன்ன காரணங்களும் மக்களாட்சி முறையிலான வாழ்க்கை உலகில் அநேகமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறையான உருவெடுத்துள்ளது. தனிநபர் உரிமைகளின் எழுச்சியையும், மனித உரிமைகளின் மாண்பினையம் பாதுகாக்கக்கூடிய பன்னாட்டு நிறுவனங்களும் ஒப்பந்தங்களும், சட்டங்களும் இந்த மக்களாட்சி பரவலுக்க பெரிதும் துணை செய்துள்ளது.

## 10.8. முக்கிய வார்த்தைகள்

1. மனித உரிமைகள் — மனித சுதந்திரத்தை பாதுகாத்தல்
2. பன்னாட்டுச் சட்டம் — உலக நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளுக்க தீர்வ ஏற்படுத்தக் கூடியது.
3. தாராளமயமாக்கம் — புதிய பொருளாதாரக் கொள்கையை புகுத்தல்.
4. பயங்கரவாதம் — உலகை அச்சுறுத்தும் சக்தி

## 10.9. இந்த அலகு தொடர்பாக படிக்க வேண்டிய நூல்கள்:

K.P. Mishra and R.S. Beal, International Relation theory, New Delhi, Vikahs 1980.

## முன்னேற்றத்தை அறிவதற்கான தன்னறிவுச் சோதனைக் கேள்விக்கான பதிகள்: 10.10

| | | | |
|---|---|---|---|
| கேள்வி எண் | : | 1 | பதில் எண் : 10.1 |
| கேள்வி எண் | : | 2 | பதில் எண் : 10.2 |
| கேள்வி எண் | : | 3 | பதில் எண் : 10.3 |
| கேள்வி எண் | : | 4 | பதில் எண் : 10.4 |

## 10.11. மாதிரி வினாக்கள்

1) மனித உரிமை என்றால் என்ன?
2) பன்னாட்டு சட்டத்தில் வளர்ச்சியினை விவரி?
3) உலக அளவில்தற்பொழுது தலைதூக்கும் பிரச்சனைகளை கூர்ந்தாய்வு செய்க
4) சுற்றுச் சூழல் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக?